வெண்ணிலா சந்திராவின்

# நெஞ்சுக்குள் நீந்திடும் தாரகை



நூல் குறிப்பு

| | |
|---|---|
| ◆ நூல் தலைப்பு | நெஞ்சுக்குள் நீந்திடும் தாரகை! |
| ◆ ஆசிரியர் | வெண்ணிலா சந்திரா |
| ◆ மொழி | தமிழ் |
| ◆ முதற் பதிப்பு | ஜூலை, 2015 |
| ◆ உரிமை | ஆசிரியருக்கு |
| ◆ தாளின் தன்மை | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| ◆ நூலின் அளவு | 1 × 8 கிரவுன் |
| ◆ அச்சு எழுத்து | 11 புள்ளிகள் |
| ◆ மொத்தப் பக்கங்கள் | 476 |
| ◆ பைண்டிங் | சாதா அட்டை |

**விலை: ரூ. 220.00**

வெளியிடுவோர் **அன்பு இல்லம்**
கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
செல்: 9003145746

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
செல்: 8939427929

அச்சிட்டோர்: மஞ்சு ஆப்செட், சென்னை - 5.

# நெஞ்சுக்குள் நீந்திடும் தாரகை!

## முன்னுரை

எனதன்பு வாசகர்களே...!

நீங்கள் கொடுத்த தொடர் ஆதரவின் பேரிலும், 'அன்பு இல்லம்' பதிப்பகத்தாரின் உதவியோடும் எனது ஆறாவது கதையான 'நெஞ்சுக்குள் நீந்திடும் தாரகை' யின் வழியாக மீண்டும் உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

கட்டாயத்தினால் நடந்த திருமணம் என்றாலும், காதலும் புரிதலும் இருந்தால் வாழ்வை ஒற்றுமை யாக வெல்லலாம் என்பதற்கு உதாரணமாய்ச் சேரனும், அகல்விழியும் இக்கதையில் வலம் வருகிறார்கள்.

கதையைப் பற்றிய உங்களின் மேலான கருத்துக் களையும், விமர்சனங்களையும் vennila.chandra@yahoo.in என்ற மின்ன்ஞ்சல் முகவரியில் என்னுடன் பகிர்ந்து கொள்ளத் தயங்காதீர்கள்.

அன்புடன்,

**வெண்ணிலா சந்திரா**

# நெஞ்சுக்குள் நீந்திடும் தாரகை!

## 1

அதிகாலை நேரம், கோபுரத்தின் மணி யோசையில் கலகலத்தது சென்னையின் முக்கியப் பகுதியில் அமைந்திருந்த அப் பெருமாள் கோவில்.

கோவில் ஸ்பீக்கரில் பெருமாளை எழுப்பத் திருப் பாவை ஓடிக் கொண்டிருக்க, பெருமாளுக்கு அலங்காரம் மிக விசேஷமாக நடந்து கொண்டிருந்தது.

சன்னதியை ஒட்டி அமைத்திருந்த மண மேடையில், தங்கள் முன்னே சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்த அக்னியைச் சாட்சியாகக் கொண்டு, ஐயர் சொன்ன

மந்திரங்களை வெகு சிரத்தையாகக் கேட்டுக் கொண்டும், அவர் செய்யச் சொன்ன சடங்குகளைச் செய்து கொண்டும் இருந்தனர் மணமக்கள்.

பெண் வீட்டார் கொடுத்த முஹூர்த்த உடையை மணமகனிடம் கொடுத்த ஐயர், "இதைப் போய் உடுத்திண்டு வாங்கோ மாப்பிள்ளை..." என்றவர், மற்றொரு தட்டைத் தலை குனிந்து அமர்ந்திருந்த மணமகளான அகல்விழியிடம் கொடுத்து, "இந்தாம்மா கொழந்த... நீ இதை உடுத்திண்டு சீக்கிரமே வா... முஹூர்த்தத்துக்கு நாழியாயிடுத்து...!" என்றவர், பெற்றவர்கள் செய்ய வேண்டிய சில சம்பிரதாயங்களைச் செய்யச் சொன்னார்.

இரு பக்கப் பெற்றோர்களும், தங்கள் பிள்ளைகளின் வாழ்வு நன்றாக அமைய வேண்டுமென வேண்டுதலுடன் ஐயர் சொன்னதைச் செய்து கொண்டிருந்தனர்.

பத்து நிமிடங்கள் கழித்து, "மாப்பிள்ளை, பெண்ணைச் சீக்கிரம் அழைச்சுண்டு வாங்கோ... மணப் பெண்ணோட தோப்பனார் எங்கே...? சீக்கிரம் வரச் சொல்லுங்கோ... மாங்கல்ய தாரணம் பண்ணணுமே...!" என்ற ஐயரின் கட்டளையின் பேரில் மாப்பிள்ளை அறையிலிருந்து பட்டு வேஷ்டியைக் கட்டிக் கொண்டு, வெளியே வந்த மாப்பிள்ளையின் முகத்தை முதலில் யாரும் கவனிக்கவில்லை.

மாப்பிள்ளை மணமேடையில் வந்து அமர்ந்ததும் தான், மாப்பிள்ளை வீட்டாரில் ஒருவர், "ஹே... ஹே... யாருடா நீ...? எங்க என் மகன்...." என்றவர், அங்கே



அமர்ந்திருந்த மணமகனை நெருங்க, அப்போதுதான் சுற்றியிருந்தவர்கள் அமர்ந்திருந்தவனைக் கவனித்தனர்.

"ஹே... யாரப்பா நீ...?"

"தம்பி! யார் நீங்க...?"

"எங்க மாப்பிள்ளை...?" எனப் பரபரப்பாகக் கேட்ட பல குரல்களை அடக்கியது மணவறையில் அமர்ந்திருந்த இளஞ்சேரனின் ஒற்றைப் பார்வை.

அவனது முகத்தை அப்போதுதான் தெளிவாகக் கண்ட பார்வையாளர்கள், 'இவரா...?' என்ற அதிர்ச்சியுடன் அமைதி காக்க, மணமகளின் தந்தையான நாராயணன்,

"ஹே... நீயா...? நீ எதுக்குடா இங்க வந்த...? எங்களை நிம்மதியாவே இருக்க விடமாட்டியா, நீ...?" என வேறு ஏதோ பேசும் முன்னர், அவரின் அருகில் நின்றிருந்த ஒருவன் அவரின் கையைப் பற்றினான்.

கோவில் பெரியது என்றாலும், திருமணத்திற்கு என்று வெகு சிலரை மட்டுமே அழைத்திருந்தனர் மணமக்களின் பெற்றோர்.

அதனால் ஆங்காங்கே நின்றிருந்த மனிதர்களை, வெள்ளை உடையணிந்த அடியாட்களைப் போன்றவர்கள் அவர்கள் அருகில் நின்று, கையில் கத்தியுடன் மிரட்டவும் அதன் பின் ஒருவர் கூட வாயைத் திறக்கவில்லை.

நடப்பதை ஒரு நடுக்கத்துடன் பார்த்திருந்த ஐயரை நோக்கி, "சீக்கிரம் மணப்பெண்ணைக் கூப்பிடச் சொல்

லுங்க சாமி... முஹூர்த்தத்துக்கு நேரமாச்சுன்னு சொன்னீங்களே...!" இளஞ்சேரனின் அதிகாரக் குரலைத் தொடர்ந்து, மணமகளும் அவளது அறையிலிருந்து வெளி வந்தாள்...

அரக்கு நிறத்தில் மடிசார் அணிந்து, அதற்குத் தோதான அளவான அணிமணிகள் அணிந்து, தங்கச் சிலை போல் வந்த அகல்யாவின் விழிகள், அந்த இடத்திலிருந்த வித்தியாசத்தை உணர்ந்து ஆராய்ந்தன.

இத்தனை நேரம் திருமணத்திற்குரிய பரபரப்பும், சத்தமுமாக இருந்த அந்த இடம், இப்போது மௌனக் காட்சியளிக்க, அதைக் கண்டவாறு புருவத்தில் விழுந்த முடிச்சுடன் வந்த அகல்விழி, மணமேடையில் அமர்ந்திருந்தவனைக் கண்டு, தன் சிறிய விழியை அகன்று விரித்து, "நீ... நீயா...?" என அதிர்ந்து நிற்க...

அவள் அதிர்ந்து நின்ற வேளையில் ஒரு பெண்மணி அவள் கையைப் பிடித்து நடத்தி வந்து, இளஞ்சேரனிடம் அமர வைக்கும் வரை, அவளின் திகைப்பிலிருந்து அவள் வெளி வரவில்லை.

"சீக்கிரம் மாங்கல்ய மந்திரம் சொல்லுங்க ஐயரே!" இளஞ்சேரன் ஐயரைத் துரிதப்படுத்த, அந்தக் குரலில் தன்னிலை மீண்டவள், "ச்சே..." என அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழ முற்பட...

அவள் கையைத் தன் இரும்புப் பிடியில் பிடித்து நிறுத்திய சேரன், "அகல்... என்னை விட்டு நீ எங்கேயும் போக முடியாது... அங்க பாரு..." என அவன் காட்டிய திசையில் பார்த்த அகல்விழி அதிர்ந்தாள்.



அங்கே அவள் அன்னை நளினியும், தந்தை நாராயணனும் ஒரு அடியாளின் கத்தி முனையில் இருக்க, அவளின் தங்கை ஸ்ரீ வள்ளி, இன்னொரு முரடனின் பிடியில் நின்றிருந்தாள்.

தன்னைப் பெற்றவர்களை இந்நிலையில் கண்டவள், விரைவாக அவர்களைக் காப்பாற்றும் பொருட்டு அந்த இடத்தை விட்டு அவள் எழச் செய்த முயற்சியை இளஞ்சேரன் தடுத்தான்...

"உனக்குச் சொன்னா புரியாதா...? நீ இங்கிருந்து எங்கேயும் போக முடியாது, அகல்... நீ இன்னும் சில நொடியில் என்னோட மனைவியாகப் போற... அதை யார் நினைச்சாலும் தடுக்க முடியாது..." என்றவனை அசட்டை செய்து அவள் எழ முயற்சிக்க...

"ஸ்ஸ்... அம்மா..." என்ற ஸ்ரீவள்ளியின் குரலில் மீண்டு, அவளைத் திரும்பிப் பார்த்தாள் அகல்விழி.

அங்கே ஸ்ரீவள்ளி கன்னத்தைப் பிடித்துக் கொண்டு நின்றிருக்க, அவள் அருகில் நின்றிருந்த அந்த முரடன், ஸ்ரீயின் பட்டுக் கன்னத்தில் அவன் கை தாரையைப் பதித்திருந்தான்...

"ஹய்யோ ஸ்ரீ...." தங்கைக்காக அவள் துடித்த அதே நேரத்தில் பெற்றவர்களும் துடித்துப் போனார்கள்.

"ஸ்ரீ குட்டி..." என அவர்களின் வேதனைக் குரல் சேரனை ஒரு சதவீதம் கூட அசைக்கவில்லை...

அங்கே நின்றிருந்த கூட்டத்தில் ஒருவன், "என்ன இது... இப்படி அராஜகம் பண்றீங்க... நான் இப்போவே போலீஸ்க்குச் சொல்றேன்..." அவன் கைப்பேசியை எடுக்க, அது எடுத்த வேகத்தில் சுக்குநூறாக உடைக்கப் பட்டது.

கூடவே அவன் கன்னமும் பழுத்தது.

அங்கே நடந்து கொண்டிருப்பதை அலட்சியம் செய்த இளஞ்சேரன், ஐயரை நோக்கி ஒரு கட்டளைப் பார்வை வீச, அவனின் மௌனக் கட்டளைக்குப் பயந்து, அவர் வாய் குழறலுடன் மந்திரத்தை உச்சரிக்க, அடுத்த கணம் தன்னருகில் அமர்ந்திருந்த அகல்விழியின் கழுத்தில் பொன் மஞ்சள் தாலியை அணிவித்து, அவளைத் தன் மனைவியாக்கிக் கொண்டான் இளஞ் சேரன்.

நடப்பது, எதுவோ கனவு போல் அனைவரும் திக்பிரமை பிடித்தது போல் பார்த்திருக்க, சேரனோ தாலியைக் கட்டி முடித்த கையோடு அகல்விழியின் நெற்றியில் திலகமிட்டு, அவளை முழுதாகத் தன் மனைவி யாக்கியிருந்தான்.

தன் மார்பினில் தொங்கிய பொன் மஞ்சள் தாலி, குனிந்திருந்த அகல்விழியின் விழியில் பட்டு, அதனூடே அவள் விழிகள் கண்ணீரையும் உற்பத்தி செய்தது.

இனி தன் வாழ்வில், சாகும் வரை யாரைப் பார்க்கக் கூடாது என அகல்விழி நினைத்திருந்தாளோ... எது நடந்து விடக் கூடாது என அவளும், அவளின்



பெற்றோர்களும் பயந்தார்களோ... இப்போது அதுவே நடந்து விட்டதை நினைத்து, அவர்கள் நெஞ்சம் அடித்துக் கொண்டது.

மகளின் அமர்ந்திருந்த நிலையைக் கண்டு பதறியவராய், "ஹய்யோ... கடவுளே! என் பொண்ணு வாழ்க்கை இப்படி உன் கண்ணு முன்னாடியே சீரழிஞ் சுடுச்சே... ஆண்டவா...! நோக்குக் கண்ணில்லையா...? உன் சன்னிதானத்தில் வெச்சு என் பொண்ணுக்கு இப்படி ஒரு கொடுமை நடக்கவா நான் தினம் தினம் உன்னை வேண்டிண்டேன்...? இந்த அராஜகத்தைக் கேட்க இங்கே யாரும் இல்லையா...?" என நளினி, தன் நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறித் துடிக்க...

"அடப்பாவி, சண்டாளா... என் பொண்ணு வாழ்க்கையைப் படு குழியில தள்ளிட்டியே... நீயெல் லாம் நல்லா இருக்க மாட்டேடா... நல்லாவே இருக்க மாட்டே... பாவி... பாவி... படுபாவி..." தான் பத்து மாதம் வேதனையைச் சுமந்து பெற்ற பிள்ளையின் வாழ்க்கை தன் முன்னாலே கருகிப் போனதை நினைத்துப் பதறியது அத்தாய்க்கு.

மனைவி போல் கதற முடியாத நிலையில் மௌனமாகக் கண்ணீர் சிந்திய நாராயணன், அப்படியே தூணில் சாய்ந்து மடிந்து அமர்ந்தார்.

தந்தை கீழே விழுந்த கணம், தன்னைப் பிடித்திருந்த சேரனின் கையை உதறத் துடிக்க, அவள் இப்போது தன் மனைவியானதால், சேரனின் பிடி சற்றுத் தளர்ந்தது.

அவன் விட்ட நொடி கையை உதறிக் கொண்டு எழுந்து வந்த அகல்விழி, "அப்பா... அப்பா... என்னாச் சுப்பா...? எழுந்துக்கோங்கப்பா... அப்பா...!"

நாராயணனை எழுப்ப, அவரோ நிலை குத்திய பார்வையுடன் அமர்ந்திருந்தார்.

"அப்பா...! அப்பா...!" அகல் செய்த எந்த உலுக் கலும் வேலைக்காகாமல் போக, இளஞ்சேரன் அவளை நெருங்கி, அவள் தோள் தொட, அதைக் கூட உணர முடியாமல், தன் தந்தையை நிகழ் உலகத்திற்குக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாள் அவள்.

"அப்பா...! எழுந்திருங்கோப்பா....! அப்பா...!" தான் பெற்ற இரண்டு மகவுகளும் செய்த உலுக்கல்கள் எதுவுமே அவரைப் பாதிக்கவில்லை.

அவர் உயிர் இன்னமும் உடலுக்குள் இருந்தாலும், உணர்வுகள் அனைத்தும் மரத்த நிலையில் சாய்ந் திருந்தார்.

தன் கண் முன்னே தன் பெண்ணின் .வாழ்க்கை பறிபோனதைத் தடுக்க வழியில்லாத் தன் கையாலாகத் தனத்தை எண்ணி, உள்ளுக்குள் குற்றவுணர்வு கொண் டார்.

ஆனால், இங்கே பிள்ளைகளோ தங்களின் தொடு கைக்கு எந்தப் பதிலும் இல்லாமல் தந்தை சிலையென அமர்ந்திருந்ததில், இவர்கள் உயிர் உள்ளுக்குள் உருகிக் கொண்டிருந்தது.



சில நேரம் வரை இங்கே நடப்பவற்றைப் பொறு மையுடன் பார்த்திருந்த இளஞ்சேரன், அதற்கு மேல் பொறுக்க முடியாமல் "ப்ச்... ஹே அகல்... உன் அப்பாவுக்கு ஒண்ணுமில்லை... சாதாரண அதிர்ச்சி தான்...!" தன் புது மனைவியிடம் சமாதானம் எனப் பெயர் பண்ணியவன், தன் எதிரில் நின்றிருந்தவனைக் கண்டு,

"ஜீவா.. அவரை ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போகச் சொல்லு... அப்புறம், நாங்க இங்கிருந்து போற வரை யாரையும் இங்கிருந்து ஒரு இஞ்ச் கூட நகராமல் பார்த்துக்கோ... சதீஷ், பார்த்துக்கோ..." என்ற கட்ட ளையை அவனது ஆட்களிடம் விடுத்தவன்,

அருகிலிருந்த நண்பனிடமும் கண்ணைக் காட்டி விட்டுக் கீழே அமர்ந்திருந்த அகல்விழியின் கையைப் பிடித்து எழுப்பித் தன்னுடன் இழுத்துச் செல்ல...

"ஹே... விடுடா...! என்னை விடுடா...! ஐயோ அப்பா...! அப்பா...! விடுடா என்னை...!" அகல் தன் பலம் கொண்ட மட்டும் அவனைத் தாக்க, அது எதுவும் அவனைப் பாதிக்கவில்லை.

ஒரு சில முயற்சிகளுக்குப் பின்னால் அகல்விழி அவனுடன் செல்ல மறுத்துத் தரையில் கால்களை ஊன்றிக் கீழே அமர, அவனின் இழுப்பு அங்கே செல்லுபடியாகவில்லை.

"ப்ச்... உன்னைக் காயப்படுத்த வேண்டாம்னு நினைச்சா... என்னை மிருகமாக்காதே அகல்...!

மரியாதையா என்னோட வந்துடு...!” அவன் மிரட்டலுக்கு அகலிடம் எந்தப் பிரதிபலிப்பும் இல்லை.

கீழே அமர்ந்திருந்தவளை வேகமாக இழுத்து மேல் எழுப்பி, அவளைத் தரதரவென அழைத்து வந்து அவனது காரில் தள்ளியவன், அவளின் அருகிலே தானும் அமர்ந்து கொள்ள, “ம்ம்.... சீக்கிரம்...” ட்ரைவரை நோக்கி உறும, அடுத்த நொடி அந்தக் கார் அவனது வீட்டை நோக்கிப் பயணித்தது.

வரும் வழியிலும் அகல் கதவைத் திறக்க எடுத்த முயற்சியில் கோபத்தின் உச்சிக்குச் சென்ற சேரன், அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அடி வைக்க, “அம்மா...!” என்ற அலறலுடன் மயக்கத்தில் அவனின் மீதே சரிந்தாள், அகல்விழி.

அவள் தன் மீது சரிந்ததும்தான் இத்தனை நேரம் கொதித்த சேரனின் மனம், குளிர் நீர் பட்டது போல் மிதமான சூட்டுக்கு வந்தது. அது மிதமான சூடு மட்டுமே...!

மனதிற்குள் சேரன் அகல்விழியையும், அவள் குடும்பத்தாரையும் திட்டிக் கொண்டிருந்தான்.

‘எவ்வளவு தைரியம் இருந்தா எனக்கே தெரியாம திருட்டுக் கல்யாணம் பண்ணணும்னு நினைப்பாங்க...?

‘நான் என்ன சிம்பப் பையனா...?

‘இவளும் வேறொருத்தனைக் கல்யாணம் பண்ண ‘ஈ’ன்னு இளிச்சுக்கிட்டு வந்து நிக்கிறா...!



‘அதான்டி உங்க எல்லாருக்கும் இப்படி ஒரு தண்டனையைக் கொடுத்தேன்...

‘இனி யாராலும் உன்னை எங்கிட்டருந்து பிரிக்க முடியாது...!’ மனதில் கறுவியவாறு தன் மடி மீது சாய்ந்திருந்தவளின் முகத்தை, ஏதோ சாதித்து விட்ட திருப்தியில் பார்த்தான்.

சென்னை மாநகரத்தை விட்டுச் சற்றுத் தள்ளி யிருந்த அந்தப் பெரிய வீட்டுக் கேட்டிலிருந்தே அந்த வீட்டின் செழிப்புத் தெரிந்தது.

அவனின் கார் அந்த வீட்டின் போர்டிகோவில் நிற்க, அத்தனை நேரம் மயக்கத்தில் இருந்தவளின் கன்னத்தைத் தட்டி எழுப்ப, மிகவும் சிரமப்பட்டுக் கண்ணைத் திறந்த அகல்விழிக்கு, முதலில் சில நொடிகள், தான் எங்கிருக்கி றோம் என்பது புரியவேயில்லை.

தன் கண் முன்னே இறுக்கமான முகத்துடனும், தீனமான பார்வையுடனும் அமர்ந்திருந்த உருவத்தைக் கண்டதும், “ச்சீ...” என்ற சொல்லுடன் தீச் சுட்டாற்போல் அவன் மடியிலிருந்து எழுந்தாள்.

அத்தனை நேரம் மிதமான சூட்டிலிருந்த சேரனின் கோபம், “சீ...” என்ற சொல்லில் மீண்டும் கொதிநிலையை அடைந்தது.

தன்னை விட்டு விலகியவளின் கையைப் பற்றித் தன்னிடம் இழுத்தவன், அவள் தாடையைப் பற்றி, “சீயா...

என்னைப் பார்த்துச் சீன்னு முகம் சுழிக்கிறியா...!" என்று ஆங்காரமாகச் சொன்னவன், அவளின் உதடு நோக்கிக் குனிய, அவனின் செயலை உணர்ந்து வாயையும், கண் ணையும் இறுக மூடிய அகல்விழி, அவள் கைகளை அவன் நெஞ்சில் வைத்துத் தள்ளி அவனை விட்டு விலக முயன்றாள்.

ஆனால், அதெல்லாம் சேரனின் பலத்தில் தவிடு பொடியானது.

அகல்விழியின் எண்ணங்கள் முழுவதும் "ஹய்யோ! இவனை எப்படியாவது தடுத்து விடு...!" என உடலுக்குக் கட்டளையிட, அது முடியாமல் போனதில், அவள் விழி யோரத்தில் கண்ணீர்கூடக் கசிந்தது.

அவ்வளவுதான்...

அவள் கண்ணில் கண்ணீரைக் கண்டதும் அந்தக் கல் நெஞ்சக்காரனின் பிடி தளர்ந்தது.

உடலில் அவன் தொட்ட இடமெல்லாம் எரிந்த போதுதான், அவன் தன்னை விடுவித்து விட்டான் என்பதே அவளுக்குப் புரிந்து, தன் கண்ணைத் திறந்தாள்.

"ஏன்டி... ஏன் இப்படி என்னை மிருகமாக்குற...? உன்னை... ச்சே... நம்ம கல்யாணம் எப்படி எல்லாம் நடக்கணும்னு நினைச்சேன் தெரியுமா...?

"கடைசியில என்னை தேர்ட் ரேட்ட் ரவுடி மாதிரி நடந்துக்க வெச் சிட்டியே...!" சேரனின் குரலில் விரக்தி தெரிந்தது.



அவன் சொன்ன விதத்தில் கோபம் கொண்ட அகல்விழி, "இல்லைன்னா மட்டும்... நீ என்ன உத்தம புருஷனா...? பல பேரோட வாழ்க்கையை அழிச்சு வாழற நீயெல்லாம்... சீ...!" அவள் வார்த்தைகளை விஷ அம்பாக அவன் மீது செலுத்த, சேரன் அதற்கெல்லாம் அசையவே யில்லை.

"நான் நல்லவன் இல்லைதான்டி... ஆனா உத்தம புருஷன்தான்... அதுவும் இப்போ உன்னோட உத்தம புருஷன்... வீணா பேசாம காரை விட்டு இறங்கு... நல்ல நேரம் போறதுக்குள்ள நம்ம வீட்டுக்குள்ள வலது காலை வெச்சு உள்ள வந்துடு...!" என்றவன், காரைத் திறந்து வெளியே வர, அவளோ அந்தக் காரை விட்டு நான் இறங்க மாட்டேன் என்ற உறுதியோடு அமர்ந்திருந்தாள்.

அவள் புறம் வந்தவன், கதவைத் திறந்து விட்டு, "இறங்கு அகல்...!" என்ற சொல்லுக்கு, அவளிடம் பிரதி பலிப்பு இல்லவேயில்லை.

"ப்ச்... எனக்குப் பொறுமை ரொம்ப ரொம்பக் கம்மின்னு உனக்கு நல்லாவே தெரியும் அகல்...! அதைச் சோதிக்காம ஒழுங்கா இறங்கு...!" அவன் ஆணையிட...

அவளோ... நீ எவ்வளவு வேண்டுமானாலும் கத்திக் கொள், நான் இப்படித்தான் இருப்பேன் என்ற உறுதியோடு இருக்க....

சேரன், "நீ சொன்னதைக் கேட்க மாட்ட...?" என்ற சொல்லுடன் அவளின் வலது கையைப் பிடித்திழுக்க, அவள் தடுமாறிக் காரை விட்டுக் கீழே விழுந்தாள்.

"ஹய்யோ தம்பி... பாத்துப்பா...." கையில் ஆரத்தித் தட்டுடன் ஐம்பது வயதில் ஒரு பெண்மணி பதற, சேரன் கீழே விழுந்தவளைத் தோள் தொட்டுத் தூக்கி,

"ஏன் அகல் இப்படிச் செய்யுற...? கஷ்டமா இருக்குடி...!" வேதனையுடன் சொல்ல, அதையெல்லாம் அவள் கண்டு கொள்ளவேயில்லை.

விழுந்ததில் அவள் முகம் மட்டுமே வலியில் சுருங்க, குரல் வலிக்காகக் கூட வெளியே வரவில்லை....

அவளை எழுப்பித் தன் தோளோடு இறுக்கி நிறுத்தியவன், "இப்போ எடுங்க ஷெண்பா...!" எனவும், ஷெண்பா ஆரத்தியை மணமக்களை நோக்கிச் சுற்றினார்.

சுற்றி முடித்ததும் ஷெண்பா, "வலது காலை எடுத்து வெச்சு உள்ளே போங்க...!" என்று விட்டு, ஆரத்தியைக் கரைக்க வெளியே சென்று விட, சேரன், தன்னோடே இறுக்கிய மனைவியுடன் நடக்க முற்பட, அகல்விழியோ ஆணி அடித்தாற்போல் நின்ற இடத்தை விட்டு ஒரு அடி நகர்வேனா என்ற ரீதியில் நின்றிருந்தாள்.

சேரனின் முகத்தில் ஒரு சலிப்புத் தெரிய... "ப்ச்... அகல்... உன்னைக் கோவில்ல இருந்து தூக்கிட்டு வந்த என்னால, வீட்டு வாசல்ல இருந்து இழுத்துட்டுப் போக ரொம்ப நேரமாகாது... திரும்பத் திரும்பச் சொல்றேன்... என்னை மிருகமாக்காதே...! ஒழுங்கா உள்ளே வா...!" அவன் பொறுமையாகவே சொல்ல...

அவளுக்கு அது தெரிந்துதான் இருந்தது... ஆனால் பாவம், அந்தச் சின்னப் பெண்ணுக்கு... எப்படியாவது



அவனிடம் தன் எதிர்ப்பைக் காட்ட வேண்டுமென உள்ளுக்குள் எழுந்த வேகத்துடன் செயல்பட்டாள்.

அவள் கல்லாக நின்றிருக்க, "ச்சே...! உள்ளே வாடி..." எனக் கையைப் பிடித்து இழுத்து வந்தவன், அவள் எதிர்ப்பு அதிகமாக அதிகமாக, அவள் தரையில் சரிந்து,

"நான் வர மாட்டேன்...! என்னை விடுடா...! நான் வரமாட்டேன்...! விடுடா பாவி...!" அவனை அடித்தாள். அவன் கையைக் கீறினாள்... கிள்ளினாள்.

என்னென்னவோ செய்து அவனிடமிருந்து தன் கையை உருவிக் கொள்ள எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியே.

அவளை ஒரு வழியாக அவனின் வீட்டிற்குள் கொண்டு போக வந்த சேரன், கதவை அடைத்து உள் தாழ் போட்டுக் கொண்டான்.

அவன், அவளை இழுத்து வந்தபோதே வீட்டுத் தோட்டக்காரனிலிருந்து, சமையல்காரன் வரை அனைவரும் அந்த வீட்டை விட்டு வெளியேறி இருந்தனர், ஷெண்பா உள்பட.

அவன் இழுத்து வந்ததிலிருந்து தரையில் ஒருக்களித்துப் படுத்திருந்த அகல்விழி, தன் இயலாமையை நினைத்து அந்த மார்பிள் தரையில் அவள் கையை ஓங்கி ஓங்கி அடிக்க, பெண்ணின் திருமணத்திற்காக அவள் அன்னை ஆசை ஆசையாக அணிவித்திருந்த கண்ணாடி வளையல்கள் ஒடிந்து,

அவளின் மென்கரங்களை இரத்தக் காயப்படுத்திக் கொண் டிருந்தன.

அவள் கையில் இரத்தத்தைக் கண்டவன், "ஹே... ஹே... பைத்தியக்காரி... உனக்கென்ன பைத்தியமாடி...!" அவளை நெருங்கித் தரையில் ஓங்கி ஓங்கி அடித்த அவளின் கரங்களைத் தன் கரத்தில் அடக்கினான்.

"ஏன்டி... ஏன்...? எதுக்குடி இப்படி உன்னையும் காயப்படுத்தி, என்னையும் காயப்படுத்த வைக்கிற...? உனக்கு, நான் உன்னை எவ்வளவு விரும்புறேன்னு புரியலையா...? என்னைப் புரிஞ்சுக்கோயேன் அகல்...!" சேரனின் குரல் கலங்கியிருந்தது.

"ச்சே...! வாயை மூடுடா... உன்னால என்னோட வாழ்க்கையே நாசமாப் போய்டுத்து...! ஐயோ, ஐயோ...!" எனத் தலையில் அடித்துக் கொள்ள...

"ஹே... நிறுத்துடி... இனி என் வாழ்க்கைதான் உன் வாழ்க்கை.. இனிமேல் நீ விரும்பினாலும், இல்லைன் னாலும் நீ என்னோடதான் வாழ்ந்தாகணும்.... இதோ, அதுக்கு இதுதான் சாட்சி...!" என அவள் கழுத்தில் தொங்கிய மஞ்சள் நாணை எடுத்து அவள் முன்னே காட்ட, அதை அவனிடமிருந்து பிடுங்கியவள், அதைத் தன் கழுத்திலிருந்து கழட்ட முற்பட, அவ்வளவுதான்...

சேரனின் இளகிய மனம் வேங்கையாக மாறியது.

அவள் கன்னத்தில் இடியென விழுந்த அவன் கரங்களின் வலிமையில், அகல்விழி மீண்டும் தன் விழிகளை மயக்கத்தினால் மூடினாள்.



"ச்சே...! என்னை இப்படிக் காயப்படுத்த வைக்கி றாளே...!" எனத் தலையில் அடித்துக் கொண்ட சேரனும் தரையில் அமர்ந்து அவளின் தலையைத் தன் மடியில் வைத்துக் கொண்டு, உருக்குலைந்திருந்த அவளின் உருவத்தைக் கண்களில் நிரப்பினான்... கண்ணீரோடு...!

## 2

உடல் ஏதோ பஞ்சுப் பொதிக்குள் புதைந்தது போல் சுகமாக இருக்க, தலை மட்டும் மிகவும் பாரமாக இருப்பதை உணர்ந்த அகல்விழி, தன் கண்களை மிகவும் சிரமப் பட்டுத் திறந்தாள்.

அவள் எப்போதும் கண் விழித்ததும் கண் முன்னே அழகாகச் சிரிக்கும் கிருஷ்ணரின் படம் தெரியாமல், ஏதோ அழகுப் பொருள் இருப்பதை உணர்ந்து சட்டென எழுந்தவள், அந்த அறையைச் சுற்றிப் பார்வையிட, பணத்தின் மொத்தச் செழுமையும் கொட்டிக் கிடந்த அவ் வறை, அவளை இம்மியும் அசைக்கவில்லை.

அதன் பிறகுதான் அவளுக்கு அன்று காலை நடந்தது நினைவடுக்கிலிருந்து வெளி வந்தது.

சட்டெனப் படுக்கையை விட்டு எழுந்தவளை எதிர் நோக்கினான் சேரன்.

"ஹே மாமி...! என்ன, அதுக்குள்ள எழுந்துட்டியா? ஹப்பா... கும்பகர்ணி... இவ்வளவு நேரமா தூங்குவ...? ஓஹோ... ஓ.கே... ஓ.கே... காலையில் நடக்க இருந்த

கல்யாணத்துக்கு நேத்து நைட் ஃபுல்லா தூங்காம கனவுலகத்தில் மிதந்துக்கிட்டு இருந்திருப்பல்ல... ரைட்... ரைட்..." சேரனின் குரல் நக்கலாக வெளி வந்தது.

"ச்சே...!" என முகத்தைத் திருப்பிக் கொண்ட அகல்விழி, அவ்விடத்தை விட்டு நகர முற்பட...

"ஹப்பா...! செம சூடு மாமி...!" என்றவன், அவள் திரும்பி அவனை முறைக்க,

"காபியைச் சொன்னேன்...!" எனக் கையில் வைத் திருந்த கோப்பையை உயர்த்திக் காட்ட, அவளோ அவனைத் தீயாய் முறைத்துக் கொண்டு முன்னேறி நடந்தாள்.

"இப்போ எங்கம்மா போகப் போற...? காலைல நீ வாங்கின அடிக்கே எழுந்துக்க மதியமாயிடுச்சு...! இப்போவும் வாங்கணும்னா சொல்லு... ஆனா அடி யில்ல... வேற...!" என்றவன், அவள் அருகில் நிதானமாக நடந்து வந்தவன், கையிலிருந்த கோப்பையை மேசை யின் மேல் வைத்து விட்டு, அவள் கையைப் பற்றி இழுத்து, மறு கையால் அவள் இடுப்பை அழுந்தப் பற்றி னான்.

அவன் அழுத்தியதும்தான், தன் உடை மாற்றி யிருப்பதை உணர்ந்து, அவள் அதிர்ச்சியாகப் பார்க்க...

"என்ன, இப்படிக் கண்ணைத் திறந்து பார்க்கிற...? அந்த மடிசார் புடவை ரொம்பவும் கசங்கி இருந்ததா... தூங்கும் போது உனக்குத் தொந்தரவா இருக்கக் கூடா துன்னு நான்தான் கழட்டினேன்...!" என்றவன்,



"ஹே... உனக்கு அதிர்ஷ்ட மச்சம் இருக்குடி... அதுவும் இங்க..." அவன் அவளின் பின் புற முதுகைத் தொட்டுக் காண்பிக்க, அவன் கைப்பட்ட இடத்தில் பற்றிக் கொண்டது அகல்விழிக்கு.

"ச்சே! கையை எடுடா...!" அவனை உதறித் தள்ளி விட்டு, அவள் அவ்வறையின் கதவை நோக்கிச் சென்று, அந்தக் கதவின் லாக்கை இழுக்க, அதுவோ திறப்பேனா என்றது.

என்னென்னவோ செய்து அந்தக் கதவைத் திறக்க முயன்றவள், ஒரு கட்டத்தில் அதை ஓங்கி ஓங்கிக் குத்த ஆரம்பித்து, அதுவும் முடியாமல் தரையில் மடிந்து அமர்ந்து அழ ஆரம்பித்து விட்டாள்.

"என்னை ஏன்டா இப்படிச் சித்ரவதை செய்யற...! நான் இங்கிருந்து போகணும்... எனக்கு என் அப்பா அம்மாவைப் பார்க்கணும்... என்னை விடுடா... நானும் என் குடும்பமும் இந்த ஊரை விட்டே போயிடுறோம்... ப்ளீஸ்... ப்ளீஸ், என்னை விட்டுடுங்கோ இளா...!" முதலில் கோபமாக ஆரம்பித்தவள், முடிவில் கையெடுத்துக் கும்பிடவும், அந்தக் கல் நெஞ்சக்காரனின் காதல் மனம் கரைந்தது.

வேகமாக அவளை நெருங்கி வந்தவன், "இதோ... இதோ... இதுக்காகத்தான்... இதுக்காகத்தான்... என்னை இந்த ஊரே சேரன்னு சொல்லிக் கூப்பிடும் போது, நீ மட்டும் ஸ்பெஷலா இளான்னு சொல்றியே... அதுக்குத் தான்...!" அவன் கண்களில் காதலோடு சொல்ல...

அகல்விழியின் விழிகளோ, 'கேவலம், ஒரு அழைப் பிற்காகவா என் வாழ்க்கையை நாசமாக்கினாய்?' என்ற கேள்வியைத் தொக்கி நின்றது.

"என்ன பாக்குற... வெறும் பேருக்காக உன்னைக் கல்யாணம் பண்ணிக்க நினைக்கலை... நான் உன்னைக் காதலிக்கிறேன்... நீயும் என்னை லவ் பண்றேன்னு எனக்குத் தெரியும்... ஆனா அதை ஒத்துக்க மறுக்கிற...!" அவன் முடிப்பதற்குள்...

"ச்சே... என்ன உளறல்... நான் உன்னைக் காதலிக் கிறேனா...? குட் ஜோக்...!" அகலின் இதழ்கள் கிண்டலாக வளைந்தன.

"ஹ்ம்... உளறல்தான்... இப்போ உனக்கு உளற லாத் தெரியுற விஷயத்தைக் கூடிய சீக்கிரம் நிரூபிச்சுக் காட்டுறேன்..." அவன் சவாலாகச் சொல்ல...

"இதோ பாரு... உன்னோட சவாலை இருந்து பாக்குறதுக்கு எல்லாம் எனக்கு நேரமில்லை...!" அலட்சிய மாகச் சொன்னவள், கண்ணில் வழிந்த கண்ணீரைக் கையால் துடைத்தவாறு, "நான் இங்கிருந்து போகணும்.... கதவைத் திறந்து விடு...!" என்க....

சேரனின் மனதில், "ஷ்ஷ்ஷ்... ஊர்ல இருக்கறவன் எல்லாரும் என்னைப் பார்த்துப் பயப்படுறான்... ஆனா இவ சுண்டெலி மாதிரியிருந்துட்டு என்னைப் படுத்தற பாடிருக்கே...!" அலுத்துக் கொண்டவன்...

"இதோ பாரு அகல்... இதுதான் கடைசி முறை... இனிமேல் திரும்பத் திரும்பச் சொல்ல மாட்டேன்... நல்லா



கேட்டுக்கோ... இதுதான் உன் வீடு... நீதான் என் னோட பொண்டாட்டி... இனிமேல் உனக்கு நான்தான் எல்லாமே... என்ன, புரிஞ்சுதா?" என்றவன், மேசை மேலிருந்த காபியை எடுத்துக் குளியலறை சிங்க்கில் கொட்டியவன், மூடியிருந்த கதவைத் திறந்து விட்டு, "வா... போய்ச் சாப்பிடலாம்... நேத்திலிருந்து சரியாச் சாப்பிடல...!" என்றவன், அவளைத் தோள் தொட்டு அழைத்துச் செல்ல...

அவளோ, "சீ...! என்னை விடு...! எனக்கு உன் சாப்பாடும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம். உன்னோட பாவச் சாப்பாட்டை விட, நான் பட்டினியா கிடந்து சாவேன்...!" என்றவள், அவ்வறையில் சுவரோரம் தரையில் சரிந்தமர்ந்தாள்.

அவனோ தோளைக் குலுக்கிக் கொண்டு, "ரொம்ப சந்தோஷம்... நீ செத்தாலும் என்னோட பொண்டாட்டியா என்னோட வீட்ல இருந்து சாவு...!" என்றவன், அறையை வெளிப் பக்கமாகப் பூட்டி விட்டே கீழே வந்தான்.

கீழே சாப்பாட்டு மேசையருகில் ஷெண்பா காத் திருக்க, அவனோ, "எனக்குச் சாப்பாடு வேண்டாம், ஷெண்பா... அவளுக்கும் வேண்டாமாம்... யாரும் மேலே போகக் கூடாது... அவளைத் தனியா விட்டுடுங்க... நான் வெளியே போய்ட்டு வரேன்..." என்றவன், காரை எடுத்துக் கொண்டு அவன் வீட்டை விட்டுப் பயணித்தவன் மனதில், என்னவென விவரிக்க முடியாதவாறு எண்ணங்களும், உணர்வுகளும் போட்டி போட்டுக் கொண்டன.

எண்ணங்களின் முடிவில், ‘உன் வாயால என்னோட காதலை ஒத்துக்க வைக்கல... நான் இளஞ்சேரன் இல்லடி...!’ உள்ளுக்குள் சூளுரைத்துக் கொண்டவன், நேராக அவனது அலுவலகத்திற்குக் காரை விட்டான்.

இளஞ்சேரன்... சேரன் & குரூப்சின் எம்.டி.

கிட்டத்தட்ட நான்கு தலைமுறைகளாக நடந்து வரும் நிதி நிறுவனத்தை, இப்போது பல்வேறு புதுமைகளுடன் நடத்தி வருகிறான் சேரன். இது குடும்பத் தொழில் என்பதால், இதை முக்கியத் தொழிலாகவும், அவனது முயற்சியாக ராயபுரத்தில் மீன் வளர்ப்புப் பண்ணையும், அதைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் பாக்டரியும், மேலும் நகரத்தின் முக்கிய இடத்தில் சில பல காம்ப்ளெக்சையும் நிர்வகித்து வருவதுடன், ரியல் எஸ்டேட் தொழிலையும் நடத்தி வருகிறான்.

இவன் செய்யும் தொழில் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்படாமல் இருப்பதற்குக் காரணம், ஒன்றில் நஷ்டம் கண்டால்... மற்றொன்றில் லாபம் பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணமும், கூடவே அவனின் ஆர்வமும் மட்டுமே காரணம்.

அவனின் தொழிலுக்கு மறைமுகமாக அரசியல் மற்றும் அதிகாரப் பலமும், நேரடி அடியாள் பலமும் அவசியம் மற்றும் அத்தியாவசியம்... தொழிலில் அவனுக்கென்று ஒரு தனி முத்திரையும் பதித்து வைத்திருக்கிறான். அதனாலே ஊரில் இளஞ்சேரனுக்குச் செல்வாக்கும் அதிகம்.



ராயபுரத்தில் அவனது அலுவலக வளாகத்திற்குள் காரை விட்டவன், விடுவிடுவென அவனது அலுவலக அறைக்குச் செல்ல, அடுத்த இரண்டு நிமிடத்தில் அங்கே வேலை செய்யும் அனைவரின் முகத்திலும் ஒரு பரபரப்புக் காணப்பட்டது.

இத்தனை பேரைச் சேரன் ஒற்றைப் பார்வையில் அடக்கி வைத்திருக்கிறான் என்றால், அது சாதாரண விஷயமல்ல. அவன் அணிந்திருக்கும் உடையே அவனின் தனித் தன்மையைப் பறைசாற்றும்.

நீல நிற ஜீன்சும்... வெள்ளை முழுக்கைச் சட்டையை, முழங்கை வரை மடித்து விட்டுப் பாக்கெட்டில் எப்போதும் குடியிருக்கும் ஏவியேட்டர் சன் கிளாசும், கையில் ஆடம்பரமில்லாமல் குடியிருக்கும் டாமி ஹில்பிகர் வாட்ச்சும் அவனின் கம்பீரத்தை மேலும் சற்று உயர்த்திக் காட்டும்.

ஆண்களில் சராசரி உயரத்தை விடவும், சற்றே நெடியவன். மாநிறத்திற்குச் சற்றே அதிகம், கறுப்பு என்ற நிறத்திற்குச் சற்றே வெளுத்தவன்... நேர் பார்வையும், கூர் நாசியும், எப்போதும் இறுக்கத்துடன் கூடிய மென் புன்னகையைச் சூடியிருக்கும் இதழ்களும் என... இளஞ் சேரன், அரசனின் வம்சா வளி என்று கூடச் சொல்லலாம். ஏனெனில் அவனும் அரசனைப் போலவே ஆளுமை கொண்டவன்.

அவனது அலுவலறைக்குள் நுழைந்த நொடி, மேனேஜர் சில கோப்புகளுடன் அவன் முன்னர் வந்து

நிற்க... கடகடவென அதைப் படித்துப் பார்த்துக் கையெழுத்திட்டவன், "அந்த வேளச்சேரி ப்ராஜெக்ட் என்னாச்சு...? ஜீவாகிட்ட டெண்டர் கொட்டேஷன் கேட்டிருந்தேனே.... ரெடி பண்ணிட்டானா...? எங்க அவன்? நான் வந்து இவ்வளவு நேரமாச்சு... இன்னும் ஆளையே காணோம்...!" என்றவன், வாய்க்குள் சில வார்த்தைகளை முணுமுணுத்தவாறு அவனின் கைப்பேசியை எடுக்க...

எதிரில் பவ்யமாக நின்றிருந்த மேனேஜர், "சார்... ஜீவா குளோபல் ஹாஸ்பிடல்ல இருக்காரு..." என்க...

"ஏன், அங்க எதுக்கு...? ஓஹோ... என் மாமனாரை அட்மிட் பண்ணியிருக்கானில்ல... ஓ.கே. கிரி... நான் ஹாஸ்பிடல் போயிட்டு வந்துடுறேன்... நீங்க அந்த டெண்டரைக் கம்பெனிக்கு அனுப்பி வச்சிடுங்க...!" என்றவன், தன் சீட்டை விட்டு எழுந்து வந்த வேகத்திலே அங்கிருந்து கிளம்பி மருத்துவ மனையை அடைந்தான்.

போனில் ஜீவாவைப் பிடித்து அவனிடம் விசாரித்து விட்டு, அவசர சிகிச்சைப் பிரிவுக்கு வந்தவன், அங்கே கூடவே அவன் நண்பன் சதீஷும் இருக்கவே,

"என்ன ஜீவா... என்ன பிரச்சனையாம்... என் மாமனாருக்கு...!" என்றவாறு வந்த சேரனுக்கு,

"மைல்ட் ஹார்ட் அட்டாக் சேரா...!" அவனுக்கு சதீஷ் பதில் சொல்ல, சற்று வருத்தமாகத் தானிருந்தது.

ஆனால், மருத்துவ மனை வராண்டாவில் அவனைப் பார்த்ததும், நளினி வெகுண்டு எழுந்தார்.



நளினி அவனை நோக்கி வருவது புரிந்ததும்... சதீஷும், ஜீவாவும் வேகமாகச் சென்று அவரைத் தடுத்துப் பிடிக்க, ஸ்ரீவள்ளியும் நளினியை ஒரு பக்கம் பிடித்துக் கொண்டாள்.

அவரோ, "பாவி...! பாவி...! என் வீட்டுச் சந்தோஷத்தை எல்லாம் அடியோடு பறிச்சுட்டு இப்போ குசலம் விசாரிக்க வந்திருக்கியா...? நீயெல்லாம் நல்லாயிருப்பியா...?" அவர் மனம் ஆறமாட்டாமல் அவரின் கோபத்தை வார்த்தைகளாக வெளியிட...

"ப்ச்... அத்தை... பொறுமை! பொறுமை...!" அவன் வெகு சாதாரணமாகச் சொல்ல,

"சீ.... என்னை அத்தைன்னு சொல்லிக் கூப்பிடாதே... யாரு யாருக்கு அத்தை... ஏன்டா... ஏன்... நானும் என் குடும்பமும் உனக்கு என்ன பாவம் செஞ்சோம்...? ஏன் இப்படி எங்க சந்தோஷத்தை எல்லாம் பறிச்ச...? ஏன்டா... ஏன்...?

"உன்னாலதான்டா இப்போ என் புருஷனும் உயிருக்குப் போராடிட்டு இருக்கார். ஹய்யோ... என் பொண்ணு... ஆசை ஆசையா அழகு பார்த்து வளர்த்த என் மகளைக் காப்பாத்த முடியலையேன்னு அந்த மனுஷன் புலம்பற புலம்பலைக் கேட்க முடியலையே...!" நளினி விடாமல் புலம்பிக் கொண்டிருக்க....

"ப்ச்... மன்னி... இப்போ எதுக்குக் கத்திக் கூப்பாடு போடுறேள்... இப்போ என்ன, உங்க மக ஒண்ணும் இல்லாதவனுக்கா வாழ்க்கைப் பட்டிருக்கா...! புடிச்சதும்

புடிச்சா நல்லா புளியங்கொம்பாத்தானே புடிச்சிருக்கா...! உங்க பொண்ணுக்கு நல்ல பக்குவம் சொல்லித்தான் மன்னி வளர்த்திருக்கேள்...

"ஆனா பாருங்கோ... எங்களுக்குத்தான் இந்தச் சூட்சுமம் ஏதும் தெரியாம, எங்க பிள்ளைகளை நல்லதுகளா வளர்த்துட்டோம்..." நாராயணனின் பெரிய தங்கையும், நளினியின் மூத்த நாத்தனாருமான தேவிகா, நாக்கில் நரம்பில்லாமல் பேச, நளினிக்கோ அந்த வார்த்தைகளை எல்லாம் கேட்டுக் கொண்டு நிற்க முடியவில்லை.

தேவிகாவைத் தொடர்ந்து, "ஆனா எப்படி மன்னி... ஒருத்தனை மனசுல வெச்சுண்டு... இன்னொருத்தனுக்குக் கழுத்தை நீட்ட உங்க மகளுக்கு மனசு வந்தது...? நல்ல வேளை... என் ஆத்துக்காரர் இந்தக் கல்யாணத்துக்கு வரலை... வந்திருந்தா என் பக்கத்து வீட்ல என்னோட மானமில்ல போயிருக்கும்...!" இந்த வார்த்தைகளை உதிர்த்தது நாராயணனின் சின்னத் தங்கை சுபா.

அந்த வார்த்தைகளைக் காதில் கேட்டுக் கண்ணில் கண்ணீர் சிந்திய நளினி, சேரனை நோக்கி, "பார்த்தியா...! என் பொண்ணுக்கு என்ன பேர் கிடைச்சிருக்குன்னு பார்த்தியா...! பார்வையால் கூட யாரும் அவளைத் தீண்டக் கூடாதுன்னு மானத்தோட வாழ்ந்த என் பொண்ணுக்கு ஊர் சூட்டும் பேரைக் கேட்டியா...?

"என் மகளைத் தாசிக்குச் சமமாப் பேசுறா...! இதையெல்லாம் கேட்டுண்டு நான் இன்னமும் உயிரோட



இருக்கேன்... ஹய்யோ..." தலையில் அடித்துக் கொண்டு அழுத நளினியை,

"அம்மா...! அழாதேம்மா...!" என அணைத்துக் கண்ணீர் சிந்தினாள் ஸ்ரீவள்ளி.

தனது இரண்டாம் மகளைப் பார்த்ததும்.... நளினியின் கவலை இன்னமும் அதிகமானது.

"ஹய்யோ... ஸ்ரீ... இனி உன்னோட வாழ்க்கையை எப்படி நானும் அப்பாவும் காப்பாத்தப் போறோம்... இந்த மாதிரிப் பேச்சிலிருந்து எப்படி நாம தப்பிக்கிறது...?" நளினிக்கு அடுத்த கவலை மனதில் புகுந்தது.

இதற்கு மேல் இங்கு நின்றால் சரியாகாது என நினைத்த சதீஷ், "சேரா...! வாடா, இங்கிருந்து போகலாம்... அவங்க இப்போ ரொம்ப டிஸ்டர்ப்டா இருக்காங்க... நாம அப்புறமா வரலாம்... வா...!" அவனை அழைக்க, அவனும் அதுவே சரியென அங்கிருந்து கிளம்பினான்.

போகும்போது மறக்காமல் மருத்துவ மனை பில்லைக் கட்டி விட்டு ஜீவாவிடம் பார்த்துக் கொள்ளுமாறு கட்டளையுடனே சென்றனர்.

காரில் வரும் வழியில், "ஏன் சதீஷ்... நான் தப்பு பண்ணிட்டேனா...?" கேள்வி கேட்டவனுக்குச் சதீஷால் பதில் சொல்ல முடியவில்லை.

என்ன சொல்வான் அவன்...? அவன் நண்பன் செய்தது தப்புத் தானென்றாலும், இதைத் தவிர்த்து அவனுக்கும் வேறு வழியில்லையே...

நேற்றைய தினம் அவன் புலம்பிய புலம்பல் கொஞ்சமா நஞ்சமா...?

அவன் யோசனையில் இருக்க, சதீஷுக்குப் பதிலாக அவனே பதிலையும் சொன்னான். "தப்புதானில்ல... இந்த விஷயத்தை இன்னும் கொஞ்சம் பொறுமையா ஹாண்டில் பண்ணியிருக்கணுமோ...?" என்றவன்...

"பட்... எனக்கு வேற சாய்ஸ் இல்லையே சதீஷ்...! நான் மட்டும் கொஞ்சம் லேட் பண்ணியிருந்தா, இந்நேரம் அகல் வேற ஒருத்தனுக்கு மனைவியாகியிருப்பா... என்னால அவளை வேற ஒருத்தனோட மனைவியாப் பார்க்கவே முடியாது சதீஷ்... இன்னைக்குக் காலையில அவளை மாலையும், கழுத்துமா இன்னொருத்தன் பக்கத்தில் பார்த்ததுமே, என்னோட மனசு என்னமா துடிச்சது தெரியுமா...! அதான் என்ன செய்யிறதுன்னே எனக்குத் தெரியல...!" அவன் ஆற்றாமையுடன் சொல்ல...

சதீஷ் அவன் தோளில் கை வைத்து, "சேரா...! நடந்தது எதையும் மாத்த முடியாதுடா...! ஆனா... இனிமேல் நடக்கப் போறதை நாம சரி பண்ணலாம்... அது உன்னால முடியும்... இப்போ நீ இவங்க எல்லாரையும் சரி செய்யறதை விட ,அகல்விழிக்குப் புரிய வைக்க முயற்சி பண்ணு... அவங்கதான் இதுல ரொம்பவும் பாதிக்கப் பட்டிருக்காங்க...!" அவன் சமாதானமாகச் சொல்ல...

"எங்க சத்தி... அவ நான் பேசுறதைக் கூடக் கேட்கத் தயாராயில்ல.... காலையில இருந்து என் கிட்ட எவ்வளவு அடி வாங்கிட்டா தெரியுமா...? அவளை நான் காயப் படுத்தணும்னு ஒரு நாள் கூட நினைச்சதில்லை சத்தி...! ஆனா இன்னிக்கி..." அவன் கவலையாகச் சொல்ல...



"சேரா...! முதல்ல அவங்க கிட்ட உன்னோட கோபத்தைக் கொறைச்சுக்கோடா... அவங்க நிலையில் இருந்து கொஞ்சம் யோசிச்சுப் பாரு... அவங்களுக்கு நடந்த விஷயம் எவ்வளவு பெரிய அதிர்ச்சி... அதிலிருந்து மீள அவங்களுக்குக் கொஞ்சம் டைம் கொடு சேரா...! நிச்சயம் ஒரு நாள் உன்னைப் புரிஞ்சுப்பாங்க..." முடிந்த வரை சதீஷும் அவனுக்குப் புரிய வைக்க முயன்றான்.

ஏனென்றால், இதுவரை இளஞ்சேரன் யாரிடமும் அட்வைஸ் கேட்கவும் மாட்டான், கொடுக்கவும் மாட்டான்.

பிறந்து சில மணி நேரத்திலேயே தாயை இழந்து, அவனது பதின் வயதில் தந்தையையும் இழந்து, ஒற்றை ஆளாக அந்த இரண்டும் கெட்ட வயதில் தடம் மாறாமல் படிப்பிலும், தொழிலிலும் காலூன்றி, பல சறுக்கல்களைச் சந்தித்து, இன்று சாதனைப் படிகளைத் தொட்டிருக்கிறான்.

அதனால் அவனின் அனுபவமே அவனுக்குப் பாடம். இன்று அவன் செய்த வேலையும், எங்கே இன்று விட்டால் தன் காதலி இன்னொருவனின் மனைவியாகி விடுவாளோ என்ற பயத்திலே யாரிடமும் கலந்தாலோசிக் காமல் இப்படி ஒரு அதிரடிச் சம்பவத்தை நடத்தியிருக் கிறான்.

அதனால், சதீஷ், அவனுக்குத் தேவையானதை மட்டும் எடுத்துரைக்க, அதைக் காதில் வாங்கிக்

கொண்டவன் மனத்திலும் அதுதான் ஓடிக் கொண்டிருந்தது.

சதீஷை அவன் வீட்டில் விட்டு விட்டு வந்த சேரன், வீட்டிற்குள் நுழையும்போது மணி இரவு எட்டாகியிருந்தது.

எப்போதும் போல் இன்றும் அவன் வீடு எந்த அரவமுமின்றி அமைதியாகியிருக்க, ஷெண்பா மட்டும் டைனிங் டேபிளில் கன்னத்தில் கை வைத்து அமர்ந்திருந்தார்.

அவர் அருகில் சென்றவன், "என்ன ஷெண்பா... சோகமா இருக்கீங்க?" என்றதும், அவன் குரல் கேட்டதும் அடித்துப் பிடித்து எழுந்த ஷெண்பா,

"அது வந்து தம்பி... மேல ரூம்ல... கொஞ்ச நேரம் முன்னாடி ஒரே சத்தமா இருந்தது... பாப்பா ரொம்ப கோபமா இருக்கும் போல... நீங்க போய்ப் பார்க்க வேண்டாம்னு சொன்னதால நான் பார்க்கல தம்பி...!" அவர் கவலையாகச் சொல்ல...

"விடுங்க... அவளை நான் பார்த்துக்கிறேன்... நீங்க ராத்திரிக்குச் சமைச்சுட்டீங்களா ஷெண்பா...?"

"ஹா... ஹான்... சமைச்சுட்டேன் தம்பி... எல்லாம் ரெடி..."

"சைவம்தானே ஷெண்பா..."

"ஆமா தம்பி... எல்லாம் சுத்தபத்தமாத்தான் சமைச்சிருக்கேன்... பாத்திரம் கூட எல்லாமே புதுசு...!" ஷெண்பா பவ்வியமாகச் சொல்ல...



"ம்ம்... சரி. எல்லாம் எடுத்து வைங்க... நான் மாமியை அழைச்சுட்டு வரேன்...!" என மாடிப் படியை நோக்கி நடக்கத் திரும்பியவன், அந்த மாமி என்ற வார்த்தையில் குழம்பிய ஷெண்பாவின் முகத்தைப் பார்த்துப் புன்னகை வீசியவன், "என் பொண்டாட்டியோட செல்லப் பேர்தான் மாமி..." என்க, அந்த மாமியென்ற வார்த்தையில் ஷெண்பாவுக்குமே சிரிப்பு வந்தது.

மேலே அவனது அறையில் முன்னின்று கதவைத் திறக்கும் முன், நீண்ட நெடிய மூச்சை இழுத்து விட்ட சேரன், 'உப்ஸ்... முடிஞ்சவரை அமைதியாப் பேசு சேரா!' என உள்ளுக்குள் பேசிக் கொண்டவாறு கதவைத் திறக்க, அங்கே அறையில் மூலையில் அகல்விழி நின்ற கோலத்தைப் பார்த்த சேரன், அதிர்ந்து போனான்.

## 3

சேரன் கதவை அடைத்து விட்டுச் சென்றதும், வெகு நேரம் வரை தன் நிலையை எண்ணிக் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தவள், அன்று முழுவதும் நடந்த களேபரத்தில் உருவான மனவுளைச்சலாலும், சரியான உணவில்லாததாலும் மீண்டும் உறக்கம் என்ற மயக்கத்தினுள் சென்றாள்.

வெறும் தரையில் படுத்திருந்த அகல்யாவிற்கு, அறையின் ஏ.சி. குளிரில் அந்த மார்பிள் தரை பனிப் படுக்கையாக மாற, உடல் நடுங்க ஆரம்பித்தது.

உடல் நடுங்கத் துவங்கவும், தூக்கம் கலைந்து எழுந்தவளுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது.

ஒரு நாள் முழுவதும் உண்ணாமல் இருந்தவளுக்கு, இன்று சேரனுடன் இட்ட சண்டையில் உடல் வலுவிற்குக் கெஞ்ச, மெல்லப் படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்தாள்.

அந்த அறையைச் சுற்றிப் பார்வையைச் செலுத்தியவள், அந்த அறையில் சேரனின் வாசனையே அதிகமிருந்தது.

அந்த அறையின் அகலத்தையும், நீளத்தையும் அளந்து கொண்டிருந்தவளுக்கு, அங்கே சுவரில் மாட்டப் பட்டிருந்த சேரனின் படம் அவளைக் கோபத்தின் உச்சத்தைத் தொட வைத்தது.

'என்னோட வாழ்க்கையை அழிச்சுட்டியேடா...! என்னோட நிம்மதியைப் பறிச்ச உன்னை இனிமேல் ஒரு நிமிஷம்கூட நிம்மதியா இருக்க விட மாட்டேன்...! பொண்டாட்டி பொண்டாட்டின்னு என்னை உரிமை கொண்டாடுறயில்ல.... இனிமேல்தான் இந்தப் பொண்டாட்டியோட சுயரூபத்தைப் பார்க்கப் போற...!' எனச் சுவரில் மாட்டியிருந்த படத்தை எடுத்துக் கீழே விசிறியடித்தவளுக்கு, அப்போதும் கோபம் குறையவில்லை.

அறையில் உடைக்கக் கூடிய பொருட்களையெல்லாம் போட்டு உடைத்தவள் கண்ணில் பட்டது ஒரு கண்ணாடித் துண்டு.

அதைக் கையில் வைத்துக் கொண்டு, அதன் கூர் முனைகளை அவள் தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டிருந்த நேரம்தான் சேரன் உள்ளே நுழைந்தான்.



அவள் கையில் கண்ணாடித் துண்டைப் பார்த்ததும் பதறிக் கொண்டு அவளருகில் வந்தவன், "ஹே, ஹே... என்னடி பண்ற...? பைத்தியக்காரி... அதைக் கீழே போடு...! போடுன்னு சொல்றேனில்ல...!" அவள் கையில் வைத்திருந்ததை அவன் பிடுங்க முற்பட...

"டேய்... விடுடா... விடு...!" அவனிடம் அவள் போராடிக் கொண்டிருக்க, ஒரு கட்டத்தில் அவனின் வலிமையை வெல்ல முடியாமல், அகல்விழியின் பிடி தளர ஆரம்பிக்கவும், அந்த இடைவெளியில் அவள் கையிலிருந்த கண்ணாடித் துண்டை மெதுவாக அவன் உருவ முயன்ற சமயம், அவள் அதில் அழுத்தம் கொடுக்க, அவள் கை அந்தக் கண்ணாடித் துண்டால் பதம் பார்க்கப் பட்டது.

கையில் வழிந்த ரத்தத்தைப் பார்த்த அகல்விழிக்கு, "ஹய்யோ இரத்தம்...!" எனக் கண்களிலிருந்து தண்ணீர் பெருக்கெடுக்க,

"கையில் கண்ணாடித் துண்டை வெச்சு விளையாடிட்டு இருந்தா இரத்தம் வராம... பாயசமா வரும்...? அறிவு கெட்டவளே...! ஏன்டி இப்படிப் பண்ற...? லூசு, லூசு...!" என்றவன், அவளை ஒரு கையால் பிடித்துக் கொண்டு அறை ஓரத்தில் அமைந்திருந்த மேசை டிராயரில் முதலுதவிப் பெட்டியை எடுத்துக் காயத்தைச் சுத்தம் செய்யத் துவங்க...

அவளோ, "ஹய்யோ வலிக்குது...! வலிக்காம மெதுவா செய்யேன்டா...!" வலியில் சேரனை அவள் திட்ட,

காயத்திற்கு மருந்திட்டுக் கொண்டிருந்தவன் அவளை முறைத்து,

"ஹே... உன்னை விட ஏழு வயசுக்குப் பெரியவன்டி நான்... மரியாதையாப் பேசு...!" அவனை மிரட்ட...

"உனக்கெல்லாம் என்ன..டா மரியாதை...? என்னைக் கட்டாயக் கல்யாணம் பண்ணிட்டு உனக்கு மரியாதை வேற கேக்குதா...? அப்படித்தான் சொல்வேன்டா...! டா... டா...!" அகல்விழி அவளின் கோபத்தை அறையில் இருக்கும் பொருட்களின் மீது காட்டியவள், அதனால் அவன் கோபம் கொண்டு டென்ஷனாவான் என்ற நிம்மதியில் அவனை மேலும் கோபப்படுத்த எண்ணினாள்.

ஆனால் அவனோ, அவள் சொன்னதைக் கண்டு கொள்ளாமல், அவள் காயத்தை டெட்டால் வைத்துச் சுத்தம் செய்ய, அதில் ஏற்பட்ட எரிச்சலில் "ஆஆ... வலிக்குது! ஊஊ...!" அவள் கத்திய கத்தலில், கீழிருந்த ஷெண்பா அடித்துப் பிடித்து ஓடி வந்தார்.

"என்ன தம்பி... என்னாச்சு...?" என்றவர், அறையின் கோலத்தைப் பார்த்தவர், அதிர, "என்ன பாப்பா இது...?" அகல்விழியை நோக்கிக் கேட்ட ஷெண்பாவிற்குச் சற்றுக் கோபம் துளிர்த்தது.

என்னதான் சேரன் அவளைக் கட்டாயத் திருமணம் செய்து கொண்டிருந்தாலும், அவளைக் காதலித்துத்தான் மணமுடித்திருந்தான் என்ற ஒன்றே அவரைச் சமாதானப் படுத்தியது.



காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதைப் போல், அவர் சிறு வயதிலிருந்து வளர்த்த பையன் தப்பே செய்திருந்தாலும், இப்படியா ஒரு பெண் அவனை இத்தனை பாடுபடுத்துவது...?

காலையிலிருந்து இவள் செய்யும் ஆர்ப்பாட்டங்களைப் பொறுக்க முடியாமல், ஷெண்பா அவளிடம் சற்றுக் கோபம் காட்ட... அவளுக்கு மருந்திட்டுக் கொண்டிருந்த சேரன் தலையை நிமிர்த்தி, "ஷெண்பா...! வேலுவைக் கூப்பிட்டு இதையெல்லாம் சுத்தம் செய்யச் சொல்லுங்க... நான் இவளைக் கூட்டிட்டுப் பக்கத்து ரூம் போய்டுறேன்... சாப்பாட்டை அங்கே கொண்டு வாங்க!" என்றவன், அவளை ஒரு கையால் பிடித்துக் கொண்டு பக்கத்து அறைக்கு வந்தவன், அவள் கையிலிருந்து நிற்காமல் வடிந்த ரத்தத்தைத் துடைத்து மருந்திட, அவள் "ஷ்... ஷ்..." என வலியால் பல்லைக் கடித்தாள்.

"இப்படித் துடிக்கிறவ எதுக்குடி தற்கொலை பண்ணிக்கப் போன...?" அவன் கோபமாகக் கேட்க... அவளோ பேந்தப் பேந்த முழித்தாள்.

"என்னது... தற்கொலையா...? யாரு...?" அவள் குழப்பமாகக் கேட்டு வைக்க...

"யாரா...? நீதான்... வேற யாரு...?"

"ஹான்... நானா...? நான் எதுக்குடா தற்கொலை பண்ணிக்கணும்...?"

"அதைத்தான் நானும் கேட்கிறேன்... நீ எதுக்குத் தற்கொலை பண்ணிக்கணும்...?" அவன் கோபமாகக் கேட்க, அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது.

"ச்சே... லூசு, லூசு... அந்தக் கண்ணாடியை நான் தற்கொலை பண்ணிக்க எடுக்கலைடா... உன்னைக் கொல்றதுக்கு எடுத்தேன்..." அவள் சொன்ன நொடியில், சேரன் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்.

அவன் ஆர்ப்பாட்டமாகச் சிரிக்கவும், அவனை ஒரு மாதிரிப் பார்த்துக் கொண்டிருந்த அகல்விழியை, "நீ... நீ என்னைக் கொல்லப் போறியா...?" என்றவன்...

"மாமி... ஆனாலும் உனக்குக் குருட்டுத் தைரியம்டி! பார்க்க எலிக் குஞ்சு கணக்கா இருந்துட்டு, என்னைக் கொல்லப் போறியா...! தயிர் சாதம்... தயிர் சாதம்... வேற ஏதாவது வழி யோசி...!" என்றவன், அவளின் கைக் காயத்திற்கு மருந்திட்டுக் கட்டுப் போட்டிருந்தான்.

அவள் சொன்னதைக் கேட்டுக் கொண்டே ஷெண்பா வும் கையில் உணவுடன் அறைக்குள் நுழைந்தவர், "இதோ பாரு பாப்பா...! ஒழுங்கா அடம் பண்ணாம சாப்பிடு...! தம்பியைக் கோபப்படுத்தாதே...!" என்ற எச்சரிக்கையுடன் வெளியேற...

அவர் பேசிய பேச்சிற்கும் சேர்த்துச் சேரனைத்தான் அகல்விழி முறைத்தாள்.

"நீ என்னமோ ரொம்பத் தியாகம் பண்ணின மாதிரி அவா பேசிட்டுப் போறா... பாருடா, பாரு... இதை எல்லாத்தையும் அந்தப் பெருமாள் பார்த்துண்டுதான் இருக்கான்... நோக்குக் கூடிய சீக்கிரமே இதுக்குண்டான தண்டனை கிடைக்கும்...!" என்றவளை...



"பத்தினி சாபம் பலிச்சிடும் மாமி...! எனக்கு ஏதாவது ஒண்ணுன்னா அது உன்னையும்தான்டி பாதிக்கும்... சரி. அதை விடு... இப்போ வாய் பேசாம ஒழுங்காச் சாப்பிடு..."

"நேக்கு ஒண்ணும் இந்தப் பாவப்பட்ட சாப்பாடு வேண்டாம்..." அவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள...

"ஹே... இது அந்தச் சாப்பாடில்லை... தயிர், சேமியா... உனக்கு அதுதானே பிடிக்கும்...!" அவன் அவளிடம் ஸ்பூனை நீட்ட...

"ஹய்யோ... க்ரஹச்சாரம்... மாமிசம் செஞ்ச பாத்திரத்தில நான் சாப்பிட மாட்டேன்... அதையெல்லாம் நீயே கொட்டிக்கோ... நேக்கு ஒண்ணும் வேண்டாம்...."

"மாமி...! இதெல்லாம் புதுப் பாத்திரம்தான்...! உனக்காக நான் ஷெண்பாவைக் குளிக்கச் சொல்லி சமைக்கச் சொன்னேன்... எல்லாம் சுத்தமாத்தானிருக்கு! பேசாமச் சாப்பிடு...!" சேரனுக்கு அவளின் இந்த வெகுளித் தனம்தான் அவனை ஈர்த்த ஒன்று.

இதற்கு முன்னர் அவன் பார்த்தது எல்லாமே அவளின் கோபத்தின் வெளிப்பாடு... அவளை மீறி நடந்த விஷயங்களை... அவளால் தடுக்க முடியவில்லையே என்ற இயலாமை.

இதோ... இப்போது பார்க்கிறானே... இதுதான் அகல்விழி.

குழந்தைத்தனமான அவளின் பேச்சுதான் இளஞ் சேரனை அவளின் காலடியில் விழ வைத்தது... அதுவும்...

அவள் பேசும் ஐயங்கார் பாஷையே தனி அழகுதான். அதற்கே அவளிடம் பல மணி நேரம் பேசிக் கொண் டிருக்கத் தோன்றும் அவனுக்கு... ஆனால், அவள் அவனிடம் பேசினால்தானே...!

அதுவும் அவளின் பேருக்குச் சற்றும் பொருத்த மில்லாமல், சிறிய கண்கள் அவள் திட்டும் போது விரிந்து, அவள் மூக்கு நுனி விடைத்து, கன்னங்களும், கண்களும் சிவக்கும் அழகிற்காகவே அவளைப் பலமுறை கோபப் படுத்தத் தோன்றும் அவனுக்கு.

இப்போதும் அவளின் கோபத்தை ரசித்துக் கொண் டிருந்தவன், அவள் மூக்கு நுனிச் சிவப்பை ரசிக்க, அந்த அழகு அவனை ஈர்த்தது.

ஈர்த்த அழகு அவனை அழைக்க, அவளின் மூக்கு நுனியில் இதழொற்றி அவன் நிமிர, அவ்வளவுதான்... அகல்விழி தன் விழிகளை விரித்துப் பத்ரகாளியாக உரு வெடுத்தாள்.

இத்தனை நேரம் தண்ணீர் தெளித்து மட்டுப் பட்டிருந்த அவளின் கோபம் பொங்கி எழ, கண்களில் கண்ணீர் உற்பத்தியானது. ஆனால், அது கோபமாக இல்லாமல், இயலாமையின் வெளிப்பாடாக வார்த்தை வடிவில் வெளி வந்தது...

"என்னை ஏன் இப்படிச் செஞ்சீங்க...? உங்களுக்கு நான் என்ன பாவம் செஞ்சேன்னு என்னை இப்படிப் பழி வாங்கிட்டேள்... சொல்லுங்கோ... சொல்லுங்கோ!" அவன் சட்டையைப் பிடித்து உலுக்க...



அவளின் இந்தப் பரிமாணத்தில், சேரன் சற்று ஒடிந்துதான் போனான்.

அவள் சட்டையைப் பிடித்திருந்த கையை இவன் பிடித்து, "மாமி...! எனக்கு வேற வழி தெரியலடி...! என்னோட காதலை அடைய இதைத் தவிர என்னால வேற யோசிக்க முடியலை... உன் அப்பாகிட்ட வந்து பொண்ணைக் கேட்டா, அவர் என்னைக் கேவலமாப் பேசித் துரத்தி விடறாரு...! உன்கிட்ட வந்து என்னோட காதலைச் சொன்னா, நீ என்னமோ என்னைக் கொலை காரன் மாதிரி பேசுற...

"அப்புறம் நான் என்ன செய்வேன்... எனக்கு நீ வேணும்... உன்னை அடைய எனக்கு இதைத் தவிர வேற வழியில்ல...! தயவு செஞ்சு புரிஞ்சுக்கோ...! இதுக்குமேல என்னால விளக்கம் கொடுக்க முடியாது அகல்... பேசாமச் சாப்பிடு...!" என்றவன், மீண்டும் அவளின் வாயருகில் ஸ்பூனைக் கொண்டு உதட்டில் வைத்து அழுத்த...

அவளோ, "த்தூஊ...." எனத் துப்பினாள்.

இப்போது உண்மையாகவே சேரனுக்குக் கடுங் கோபம் வந்தது, அவனும் எவ்வளவுதான் பொறுமையாக இருப்பான்...? அவன் இதுவரை இவ்வளவு மென்மை யாகக் கையாண்டதே பெரிய விஷயம்.

"அடிச்சுப் பல்லைப் பேத்துடுவேன், அகல்... ஒழுங் காச் சாப்பிடு...!" கோபத்தில் அவன் வார்த்தைகளை

விட... அகலின் கண்களில் பொலபொலவெனக் கண்ணீர் கொட்ட ஆரம்பித்தது.

மிரண்ட பார்வையை அவனை நோக்கிச் செலுத்தியவளின் முகத்தை அவனின் நெஞ்சில் சாய்த்துக் கொள்ள, அதில் திமிறி அவனிடமிருந்து விடுபட்டவள், மீண்டும் அந்த அறையின் ஓரத்திற்குச் சென்று அமர்ந்து கொண்டாள்.

அவளின் செய்கையில் உள்ளுக்குள் சிரிப்பெழுந்தாலும், அதை அடக்கிக் கொண்டு, அவளுக்கு வைத்திருந்த தயிர் சேமியாவை ரசித்து ருசித்துச் சாப்பிட்டவன், "டேஸ்ட் நல்லாத்தானிருக்கு...! ஆனால், பால் வாசம்தான்... உவ்வே...!" அவன் சொன்னதும் சட்டெனத் திரும்பிப் பார்த்தவள்,

"கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை...!" சத்தமாகவே சொல்லி விட்டு, அவள் சுவரில் சாய்ந்து கண் மூடிக் கொள்ள...

அவனும் சென்று உடை மாற்றி வந்தவன், அலுவலகக் கோப்பு ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்து, கண் மூடியிருந்தவளின் அழகைக் கண்களால் பருகிக் கொண்டிருக்க, கண் மூடியிருந்தாலும் அவனின் பார்வை உடலை என்னவோ செய்யச் சட்டெனக் கண் விழித்தவள், அவன் தன்னையே விழுங்கும் பார்வையைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு,

"என்ன இங்க பார்வை...? கண்ணை நோண்டிடுவேன்...!" அவள் இரண்டு விரலை நீட்டி மடக்கிச் சொல்ல,



இந்த முறை அவனுக்குக் கட்டுப்படுத்த முடியாமல் சிரிப்புப் பீறிட்டது.

அவனின் சிரிப்பில் உள்ளுக்குள் கொதி நிலையடைந்தவள், "சிரிடா... சிரி...! நோக்கு என்னைக் கண்டா சிரிப்பாத்தான் வரும்...!" என்றவள், தலை குனிந்து கொள்ள,

சற்று நேர அமைதிக்குப் பின், "நேக்கு என் தோப்பனாரைப் பார்க்கணும் போலிருக்கு... ப்ளீஸ்... என்னை அழைச்சுண்டு போயேன்...!" அவள் கெஞ்சலான பார்வையோடு அவனிடம் கேட்க...

அந்தப் பார்வை அவனை உண்மையாகவே அசைத்துப் பார்த்தது.

அதுவும்... இப்போது அவள் தந்தையிருக்கும் நிலை தெரிந்தால்... அவ்வளவுதான். அவள் உடலில் அப்பப்போ தென்படும் அந்நியச்சி முழுநேரப் பணியில் அமர்ந்திடுவாள் என்ற உண்மையும் உறைக்க, நாளை அவளே நேரில் அவள் தந்தையைப் பார்த்துக் கொள்ளட்டும் என்ற எண்ணம் எழ, கட்டிலிலிருந்து எழுந்து அவளருகே வந்தவன், கலைந்திருந்த அவளின் முடியை ஒதுக்கி அவள் காதினோரம் அடக்கியவன், வழிந்த கண்ணீரைத் தன் கரங்களால் துடைத்து,

"கூட்டிட்டுப் போறேன்... ஆனால், அவங்களைப் பார்த்ததும் என் கிட்டே திரும்ப வந்துடணும்... இன்னிக்குக் காலையில மாதிரி அடம் பிடிக்க மாட்டேன்னு எனக்குச்

சத்தியம் பண்ணிக் கொடு..." அவள் முன்னே கை நீட்டி அவன் கேட்க...

அவளின் மனதில், இவன் கேட்ட விஷயத்தில் உடன்பாடு இல்லை யென்றாலும், எங்கே மறுத்து விட்டால் பெற்றோரைச் சந்திக்க முடியாமல் போகுமோ என்று பயமெழ, கூடவே தந்தை நிச்சயம் தன்னைப் பார்த்தால் மீண்டும் இவனிடம் விட்டு வைக்க மாட்டார் என்ற நம்பிக்கை உள்ளுக்குள் பிறக்க, "சரி..." எனத் தலையை வேகமாக ஆட்ட...

"இந்தத் தலையாட்டல் எல்லாம் வேலைக்காகாது! உன் பெருமாளை நினைச்சுட்டுக் கையில் அடிச்சுச் சத்தியம் பண்ணு...!" அவன் உறுதியாகக் கேட்க...

அகலின் மனதிற்குள், 'பெருமாளே! என்னை மன்னிச்சிடுப்பா...!' என்ற வேண்டுதலை வைத்து விட்டு, அவனின் கையைப் பட்டும் படாமலும் ஒற்றியெடுக்க, அவள் செய்த யோசனையும் முகம் காட்டிய பாவமும் சேரனுக்கு அவள் எண்ணத்தை அப்பட்டமாகப் பறை சாற்ற,

'பொய்ச் சத்தியமா பண்ற...!' மனதினுள் அவளைச் செல்லமாகத் திட்டினான்.

"அப்போ சரி. நாளைக்குக் காலையில கூட்டிட்டுப் போறேன்..." எனவும்...

"ஹான்... காத்தாலயா... நேக்கு இப்பவே அப்பாவைப் பார்க்கணும்...!"



"இப்போ மணி எத்தனைன்னு தெரியுமா...?"

அவன் கேட்டதற்குத் தலையை இடமும் வலமுமாக ஆட்ட, கையிலிருந்த வாட்ச்சைக் காட்டி, "பத்தரை... இப்போ போய்ப் பார்க்க முடியாது... காலையில கூட்டிட்டுப் போறேன்...!" எனவும்...

"ம்ஹூம்... நேக்கு..." அவள் பிடிவாதத்தைத் துவங்க, அவனின் ஒற்றைப் பார்வையில் அடங்கினாள்.

சேரன் சென்று இன்டர்காமில் ஷெண்பாவிடம் உணவை எடுத்து வருமாறு பணிக்க, அடுத்த ஐந்தாவது நிமிடம், ஷெண்பா உணவுத் தட்டுடன் அறையில் ஆஜரானார்.

தட்டை எடுத்துக் கொண்டு அவளருகில் சம்மணமிட்டு அமர்ந்தவன், "சாப்பிடு...!" எனவும்,

"வேண்டாம்..." எனத் தலையாட்ட...

"ஓ.கே. ஃபைன்...! நீ உன்னோட அப்பா, அம்மாவைப் பார்க்கிறதைப் பத்தியும் மறந்துடு...!" எனவும்,

"சரிஈஈஈஈஈ... சாப்பிடறேன்..." என்றவள், "அதுக்கு முன்னாடி நான் குளிக்கணும்...!" என முகத்தை வேறு புறம் திரும்பிச் சொல்ல...

"ஓஹோ... ஆச்சாரம்... ஓ.கே... ஓ.கே... போய்க் குளி...!" என்றவன், குளியலறைக்குள் சென்று கீசரைப் போட்டு விட்டு வந்தவன், அறையை விட்டு வெளியே

வந்து சற்று முன்னர் அகல்விழி அலங்கோலமாக்கிய அவனது அறைக்குச் சென்று, அவளுக்குத் தேவையான உடையை எடுத்து வந்து அவளிடம் கொடுக்க, அதைக் கையில் வாங்கியவள், அதில் அவளுக்குத் தேவையான அனைத்தும் இருக்க, அவளோ கோபமாக அவனைப் பார்த்தாள்.

"சும்மா சும்மா என்னைப் பார்த்து முறைக்காத மாமி...! நீதான் என்னோட பொண்டாட்டின்னு முடிவான துக்கு அப்புறம் உன்னைப் பத்தி 'எல்லாத்தையும்' தெரிஞ்சு வைக்கிறது என்னோட கடமைதானே...!" என்றவன், கண்களில் நறும்போடு சொல்ல...

அவளோ முறைப்பைக் கை விடாமல் நிற்க, "இப்போ நீ குளிக்கப் போறியா...? இல்ல, நான் குளிக்க வைக்கவா?" என்றவனை நோக்கிப் பல்லைக் கடித்தவள்,

'இருடா இரு... உனக்கு இது எல்லாத்துக்கும் சேர்த்து வைக்கிறேன் ஆப்பு...!' மனதில் கறுவியவாறு குளியலறைக்குள் சென்றவளை,

"மாமி... கையில தண்ணி படாமக் குளி..." என எச்சரிக்கையோடு அனுப்ப,

"எல்லாம் நேக்குத் தெரியும்... நீங்க உங்க வேலையைப் பாருங்கோ...!" என்றவள், கதவைப் படாரென்று சாற்ற, மூடிய கதவையே வெறித்துப் பார்த்தான் இளஞ்சேரன்.

சற்று நேரத்தில் குளித்து வந்தவளை, கையில் உணவுப் பாத்திரத்துடன் வரவேற்றான்.



முகத்தில் அப்பிய எரிச்சலுடன், "ஒரு நாள் சாப்பிடலைன்னா நான் என்ன செத்தா போய்டுவேன்? எதுக்கு இப்படிக் கையில பாத்திரத்தை வெச்சுண்டு துரத்துறேள்... அங்க என் வீட்டுல என் அப்பா, அம்மா, ஸ்ரீ குட்டி எல்லாரும் சாப்பிட்டாளா இல்லையான்னு தெரியல...! நான் மட்டும் இங்க வயிறு நிறையக் கொட்டிக் கணுமா...?"

"உன் வீட்ல எல்லாரும் சாப்பிட்டாச்சு... நீ சாப்பிடு...."

"உங்களுக்கு எப்படித் தெரியும்...?" அவள் கேட்கவும், அவனின் போனை எடுத்துக் காட்டி,

"அங்க என் ஆள் இருக்கான்...! அவன் சொன்னான்..." என்க...

"ச்சே...! இதெல்லாம் ஒரு பொழப்பா...! அடுத்தவா வீட்டை எட்டிப் பாக்குறது... கொடுங்கோ... நானே சாப் பிட்டுக்கிறேன்...!" என்றவள், இருந்த கோரப் பசியில், தயிர் சேமியா வைத்திருந்த கிண்ணம் நொடியில் காணாமல் போனது.

சாப்பிட்டு முடித்ததும், இன்னும் அவள் வயிற்றுப் பசியில் கால் வாசி கூடக் குறையவில்லை.

ஆனால், அவனிடம் மீண்டும், 'எனக்கு இன்னும் உணவு தா...!' எனக் கேட்க வெட்கப்பட்டுக் கிண்ணத்தை அவள் கீழே வைக்க...

அதை வாங்கியவன் இன்னொரு கிண்ணத்தை அவளின் கையில் திணித்தான்.

ஆனால், அதை அப்படியே உண்டு விட்டால், அவள் ரோஷக்காரி அகல்விழி அல்லவே...!

"எனக்கு ஒண்ணும் வேண்டாம்...!" அவள் பிகு செய்ய...

"பரவாயில்ல... சாப்பிடு மாமி...!" அவன் கெஞ்சுவது போல் சொல்ல...

"ஹான்... நீ கேட்டுக்கிறதால சாப்பிடுறேன்...' என்ற அறிக்கையோடு அந்தக் கிண்ணத்தையும் உண்டு முடித்தாள்.

அவள் உண்டு முடித்த பாத்திரங்களை அவனே கீழே கொண்டு வந்து வைக்க, அவன் மேலிருந்து கையில் தட்டுடன் நடந்து வருவதைப் பார்த்த ஷெண்பா, "ஹய்யோ... தம்பி... இதையெல்லாம் நீங்க எதுக்கு...? என்னைக் கூப்பிட்டிருக்கலாம்ல...!" அவன் கையிலிருந்த வற்றை அவர் பறித்துக் கொள்ள...

"பரவால்ல ஷெண்பா...! இதெல்லாம் புதுசா இருந்தாலும்... எனக்குப் பிடிச்சிருக்கு...!" அவன் இதழ் களில் புன்னகையை ரசித்த அப் பெரியவர்,

"தம்பி... உங்களை இப்படிப் பாக்கறதுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு...! ஆனா அந்தப் பாப்பாதான் கொஞ்சம் அடம் பிடிக்குது!" ஷெண்பா முகச் சுழிப்போடு சொல்ல...

"ஹா... ஹா... பிடிக்காதவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா... அவ என்ன சிரிச்சுக்கிட்டா இருப்பா...?" என்றவனைக் கண்டு அதிர்ந்தவர்...



"என்ன தம்பி சொல்றீங்க...? அந்தப் பொண்ணுக்கு உங்களைப் பிடிக்காதா...?"

"அப்படியில்ல... அவளோட உள் மனசுக்கு என்னைப் பிடிக்கும்! ஆனா வெளியில அதைப் புரிஞ்சுக் காம இருக்கா...! அவ சின்னக் குழந்தை ஷெண்பா...! குழந்தைகளுக்குப் புரியாததை நாமதான் சொல்லிப் புரிய வைக்கணும்... நான் அவளுக்குச் சீக்கிரம் என்னைப் புரிய வச்சிடுவேன்...!" அவன் முகத்தில் தென்பட்ட நம்பிக்கை யில், ஷெண்பாவின் மனதில் நிம்மதி குடி கொண்டது.

"சீக்கிரம் பாப்பா உங்களைப் புரிஞ்சுக்கிட்டு ஏத்துக்கணும் தம்பி... நம்ம பெரியம்மா போனதிலிருந்து இந்த வீடே களையிழந்திருச்சு... இத்தனை வருஷத் துக்கு அப்புறம் இந்த வீட்டுக்கு வந்திருக்கிற மகராசியால் திரும்பவும் இந்த வீடு பழைய நிலைமைக்கு வரணும்! சீக்கிரம் இந்த வீட்டுல குழந்தைகளோட சிரிப்புச் சத்தம் கேட்கணும்...!" ஷெண்பாவின் வார்த்தைகள் உண்மை யான உணர்வோடு வெளி வர, சேரனுமே அந்த நாளை மனதில் எண்ணி மகிழ்ந்தவாறு மாடியேறினான்.

மேலே அறைக்கு வந்தவனுக்கு, இன்னொரு சவாலுடன் காத்திருந்தாள் மனையாள்.

அறைக்குள் நுழைந்த நொடி, அவன் கண்கள் அந்த அறையின் மூலையைத்தான் ஆராய்ந்தன.

அவன் பார்வையைப் பொய்யாக்காமல், அங்கே தான் அகல்விழி கையைக் கட்டிக் கொண்டு அமர்ந் திருந்தாள்.

'ஹய்யோ... ஒரு நாளைக்கே இந்தப் பாடு படுத்துறாளே...!' என்று உள்ளுக்குள் சலித்தவாறு, "இப்போ என்ன மாமி... தூங்கலையா...?" அவளருகில் ஒரு காலை மடக்கி, அவள் முன்னே மண்டியிட்டு அமர்ந்தவாறு கேட்க...

"நோக்கு என்ன... நான் தூங்குறேன், இல்ல... சிவராத்திரி இருக்கேன்... உன் வேலையைப் பார்த்துட்டுப் போடா...!" முகத்தைச் சுருக்கிச் சொன்னவள்...

அவள் சொன்ன 'சிவராத்திரி', அவன் காதில் 'முதல் ராத்திரி' என்ற உச்சரிப்பைக் கொடுக்க,

"என்னது... முத ராத்திரியா...? ஓஹோ! கிரேட்... மாமி, நீ ஒத்துக்க மாட்டேன்னு நினைச்சேன்... நீயே சொன்ன பிறகு எனக்கு என்ன அப்ஜெக்ஷன்...?" கண்ணடித்துச் சொன்னவன், அவளை வாரியணைக்கக் கையைத் தூக்கிக் கொண்டு வர...

"ஹே.. ஹே... மேல கைய வெச்ச, கொன்னுடு வேன்...!" என அவள் முதுகுக்குப் பின்னால் வைத்திருந்த ஃபோர்க் ஸ்பூனைக் காட்டிச் சொல்ல,

அவள் பாதுகாப்புணர்வைக் கண்டு, சேரனுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.

அவன் அமர்ந்திருந்த நிலையில் தடுமாறித் தரையில் சரிந்தவாறு அவன் விழுந்து விழுந்து சிரிக்க...

அவனின் சிரிப்பைக் கண்டு இவளுக்குக் கோபம் கொப்புளித்தது.



அவள் எவ்வளவு சீரியசாக மிரட்டிக் கொண்டி ருக்கிறாள். ஆனால், இவனோ இந்த ஃபோர்க்கைக் கண்டு பயப்படாமல், விழுந்து விழுந்து சிரித்தால், அவளின் வீரதீரச் செயலை அவன் அவமதித்தது போலல்லவா ஆயிற்று...!

அவன் சிரிப்பை அடக்கும் வழி தெரியாமல், அவன் சிரிப்பில் கோபமும் சேர்ந்து வர, கையில் வைத்திருந்த ஃபோர்க்கை அவன் நெஞ்சை நோக்கி அவள் குத்த வர, நொடியில் சுதாரித்தவன், தனது இடக்கையைக் கொண்டு அவன் நெஞ்சை மறைக்க, அதற்குள் அந்த ஃபோர்க்கின் நுனி முள் அவனின் இடது கையைக் கிழித்தது...

"ஷ்ஷ்... ம்மா..." என்றவனுக்கு, உதட்டில் புன்னகை மறைந்து, வலி தெரிந்தது.

அவன் கையிலிருந்து இரத்தம் வழியத் துவங்கவும், கையில் வைத்திருந்த ஸ்பூனைத் தூக்கி வீசியவள், அவனின் முகத்தைப் பயத்துடன் பார்க்க, அவனோ வேதனையில் துடித்துக் கொண்டிருந்தான்.

இதுவரை அகல்விழி அவளின் தங்கையைக் கூட விளையாட்டாக அடித்ததில்லை. ஆனால், இன்று அவள் கையால் ஒருவன் அடி வாங்கியிருக்க, அதுவும் அவனை இரத்தம் வரும் அளவிற்கு அவள் காயப்படுத்தி யிருக்கிறாளென்றால், அதை எப்படி அவளால் தாங்கிக் கொள்ள முடியும்...?

"அச்சோ...! இரத்தம்...!" எனக் கையை உதறிக் கொண்டு பதறிய அகல்விழியை முறைத்த சேரன்,

"என்னடி... குத்துறதும் குத்திட்டு அச்சோ இரத்த மாம்...! இது இரத்தமில்லாம தக்காளிச் சட்னியா...?" முகத்தில் எரிச்சல் வண்டி வண்டியாக வழிந்தது அவன் முகத்தில்.

காலையிலிருந்து எத்தனை இரத்தக் காயங்களைச் சந்தித்து விட்டான் அவன்...!

"சாரி இளா...! ஐயாம் வெரி சாரி...! நீங்க ஏன் சிரிச்சீங்க...? நான் எவ்வளவு கோபமாப் பேசிண்டு இருந்தேன்... அதான் எனக்கு ரொம்பக் கோபமா வந்துடுச்சு... இருங்கோ... மருந்து எடுத்துண்டு வரேன்...!" அவளுக்குப் போட்ட மருந்தை அவன் கட்டிலருகில் வைத்திருக்க, அதை எடுக்க ஓடிய அவளைக் கண்ணெடுக் காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

'ச்சே... எவ்வளவு இளகின மனசுடி உனக்கு...! உன்னை இன்னிக்கு எவ்வளவு கஷ்டப்படுத்திட்டேன்...! சாரி மாமி...!' மனதிற்குள் அவளிடம் மன்னிப்புக் கேட் டவன், வெளியில் முகத்தை இறுக்கமாகவே வைத் திருந்தான்.

மருந்தை எடுத்து வந்தவள், அவன் முன்னே அமர்ந்து அவன் கைகளைத் தன்னதில் பற்றிக் கொண்டு, அதை அவனின் காயத்தில் தடவத் துவங்கும் முன், பஞ்சை அவன் காயத்தில் வைக்காமலே ஷ்... ஷ்... எனப் பக்கத்தில் கொண்டு செல்வதும், பின் நகர்த்துவதுமாக அவள் செய்த செயலைக் கண்களில் ரசித்துக் கொண்டி ருந்தான் கணவன்.



ஒரு கட்டத்திற்கு மேல், அவளின் செய்கை அவனுக்குச் சிரிப்பை வரவழைக்க, அவன் கைகளிலே முழுக் கவனத்தை வைத்திருந்தவள், அவன் உடல் குலுங்கச் சிரிக்க ஆரம்பித்ததும் நிமிர்ந்து பார்த்தவள், அங்கே அவன் சிரிப்பை உதட்டுக்குள் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பதைக் கண்டு கடுப்பானவள், பஞ்சைத் தூக்கி அவன் மீதே வீசி விட்டு, "எக்கேடோ கெட் டொழிங்கோ...!" என மீண்டும் அம் மூலையில் முடங்கி னாள்.

அவனோ சிரிப்பைக் கட்டுப்படுத்திக் காயத்திற்கு மருந்திட்டு, முதலுதவிப் பெட்டியை அதனிடத்தில் வைத்து விட்டு வந்தவன், "வா, மாமி... தூங் கலாம்...!" என்க...

"என்னாது...?" என்ற அவளின் குரலின் அதிர்வு அவனை,

"எதுக்கு இப்படி ஒரு ரியாக்ஷன் தர...? வா, படுக்க லாம்...! மணி பன்னிரண்டாச்சு...!" என்றவாறு திரும்ப,

"இத பாருங்கோ... நான் எங்கேயும் வர மாட் டேன்... நான் இங்கேயே தானிருப்பேன்... இதுக்கு மேல் என்னைத் தொல்லை பண்ணாதீங்க...!" திட்டவட்டமாகச் சொல்ல...

ஒரு பெருமூச்சை வெளியிட்டவன், "என்னமோ பண்ணு... நான் ஏ.சி. இல்லாம தூங்க மாட்டேன்... நடுராத்திரியில மார்பிள் தரை ஐஸ் பெட் மாதிரியிருக்கும். இப்போவே சொல்லிட்டேன்...!" ஒரு எச்சரிக்கையை

விடுத்து விட்டு, அவன் கட்டிலில் படுத்த நொடியிலிருந்து அவனுக்கு இன்று நடந்த அனைத்துச் சம்பவங்களும் மனதில் வலம் வந்தன.

அதுவும் அவளை வேறொருவருடன் மணக் கோலத்தில் பார்த்ததிலிருந்து, அவன் மனது பட்ட பாட்டை அவனே அறிவான்.

அந்த உணர்வை இப்போது நினைத்தாலும் உள் ளுக்குள் வலியெடுக்க, அவனை மீறி, அகல்விழியை நோக்கி அந்த வார்த்தையை விட்டான்.

"ஹே மாமி...! இன்னைக்குக் காலைல மட்டும் நான் உன்னைக் கல்யாணம் பண்ணாம இருந்திருந்தா இப்போ... இந்த நேரம் அந்தத் தயிர் சாதத்தோட..." அவன் முடிக்கவில்லை,

"சீ... நிறுத்துங்கோ...!" என்றவள், காதுகளை அடைத்துக் கொண்டு, காலைக் குறுக்கி அமர்ந்து கொண் டவள் கண்களில் நிற்காமல் கண்ணீர் வழிந்தது.

அவளை அப்படியொரு நிலையில் பார்த்ததும்தான், தான் தவறி விட்ட வார்த்தைகளின் வீரியம் புரிய, அடுத்த நொடி கட்டிலை விட்டு எழுந்தவன், அவளை நோக்கிச் சென்றான்.

அவள் அருகில் அமர்ந்து, அவள் கையைப் பற்றிக் கொண்டு, "அகல்... ஐயாம்... ஐயாம் சாரி...! நான் தெரி யாம அப்படிச் சொல்லிட்டேன்...!" அவன் மன்னிப்புக் கேட்டதெல்லாம் அவளைப் பாதிக்கவில்லை.



அவன் சொன்ன வார்த்தையிலே, அவள் மனம் அனலில் பட்ட புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்தது.

தனது மன்னிப்புக்கு அவளிடம் பிரதிபலிப்பு இல் லாமல் போக, "ஐயாம் சாரி மாமி...!" அவள் தலையை நெஞ்சோடு அணைத்துக் கொள்ள முற்பட்டவன் நெஞ்சில் கை வைத்துத் தன் பலம் கொண்ட மட்டும் தள்ளி விட் டாள்.

"ஏன்... ஏன்... நான் உங்களுக்கு என்ன பாவம் செஞ்சேன்...? என்னை ஏன் இப்படி விடாமப் பழி வாங்குறேள்...? எனக்கு உங்களைப் பார்த்தாலே அருவருப்பா இருக்கு...! உங்களால எப்படி என்னைப் பார்த்து இப்படியெல்லாம் பேச முடியறது...?" அவன் சொன்ன வார்த்தையின் வீரியம் அவள் நெஞ்சைத் தாக்கியது.

ஆனால், சேரன் செய்தது தப்பென்றாலும், அதை இவள் நிற்க வைத்துக் கேள்விக் கேட்பதில் அவனின் ஈகோ தட்டி யெழுப்பப்பட, "நான் சொன்னதில் என்னடி தப்பு? இன்னைக்கு இன்னொருத்தனுக்குப் பொண்டாட்டி யாக நினைச்சவதானே நீ...!"

"ஆமா... பொண்டாட்டியாக இருந்தேன்... ஆனால், இப்போ அவன் எனக்குப் புருஷனா இல்லை... நீ... காத்தால அத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணி என் கழுத்துல இந்தத் தாலியை வலுக்கட்டாயமாக் கட்டினவன் நீ தானே...! அப்புறம் எப்படி உன்னால என்னைப் பார்த்து அந்த வார்த்தையைச் சொல்ல முடிஞ்சுது...?"

"இப்படி பேசுறவ ஏன்டி காலையில நான் கட்டின தாலியைக் கழட்டப் போன...?"

"ஹான்... நீ அந்தத் தாலியைக் காட்டி, நான் உனக்கு அடிமை மாதிரிப் பேசிட்டு இருந்தே... அதனால தான்..."

"ஓஹோ... அப்போ நீ எனக்கு மனைவின்னு ஒத்துக்கிறியா...? என் மேல உள்ள காதல் உனக்குப் புரிஞ்சுடுச்சா...?" அவள் சொன்ன வார்த்தைகளில் அவனுக்குச் சாதகமான வார்த்தைகளை அவன் தேடிப் பிடித்துக் கேட்க,

"சை... எனக்கு உன் மேல காதலுமில்ல.... ஒரு மண்ணாங்கட்டியுமில்ல... அது எனக்கு வரவும் வராது! இதோ பாரு... நானெல்லாம் உன்னை மாதிரித் தான் தோன்றித் தனமா வளர்ந்தவளில்ல... நேக்குன்னு சில ப்ரின்சிபிள்ஸ் இருக்கு... அப்படிப்பட்ட குடும்பத்தி லிருந்துதான் நான் வந்திருக்கேன்...

"என்னோட அம்மா இந்தத் தாலிக்குன்னு சில மரியாதையைச் சொல்லிக் கொடுத்திருக்கா...! அதனால தான் நான் இன்னமும் உன்னை மதிச்சுப் பேசிக்கிட்டி ருக்கேன்...

"இன்னைக்கு நடக்கவிருந்த கல்யாணம்... எல்லாம் உன்னாலதான்...! நீ அன்னிக்கு வீட்டுக்கு வந்து செஞ்ச வேலையாலதான் அப்பா எனக்கு அவசர அவசரமா மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் முடிக்க நினைச்சார்...



இந்தக் கல்யாணம் முழுக்க முழுக்க என்னோட தோப் பனார் விருப்பம்தான்...

"இன்னிக்கு, அனந்துக்குப் பதிலா அப்பா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லியிருந்தா நான் உன்னைப் பண்ணியிருப்பேன்... என் அப்பா சொல்லியிருந்தா, நான் எந்தக் கழுதையைக் கூடக் கட்டிண்டு இருந்திருப்பேன்...!"

இந்த வார்த்தைகளை அவள் சொன்னவுடன், சேரனின் மனதில் சில பல யோசனைகள் படையெடுக்க, அதை எப்படிச் செயலாற்றவென அவன் நினைத்திருந்த வேளையில், அகல்விழி நிறுத்தாமல் பேசிக் கொண்டே போனாள்.

அவன் மட்டும் அதைக் கூர்ந்து கவனித்திருந்தால், பின்னால் வரப்போகும் பல பிரச்சனைகளை அவன் தடுத்திருக்க முடியும்.

அகல்விழி, "என்னைப் பொறுத்தவரை என்னோட உலகமே என்னோட குடும்பம்தான்... ஆனால், சத்தியமா நேக்கு உன் மேல் இந்தக் காதல் கண்ராவி எல்லாம் வரவே வராது...

"ஏன்னா, நீ ஒரு கொலைகாரன்... உன்னோட ஆதாயத்துக்காக நீ யாரை வேணா என்ன வேணா செய்யத் துணிஞ்சவன்...! எனக்கு உன்னைப் பார்த்தாலே ஆத்திரம் ஆத்திரமா வருது... உன்னை மாதிரி ஒருத்தன் கூட நான் வாழறதை விடச் சாகுறதே மேல்...!

“ஆனா நான் சாக மாட்டேன்... ஏன்னா, நான் என்னோட குடும்பத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகள் நிறையா யிருக்கு...! நான் பெரிய வேலைக்குப் போக ணும்.. ஸ்ரீ குட்டியை நல்லபடியாப் படிக்க வைக்கணும்... சின்ன வயசுல இருந்து எங்களுக்காகவும், அவா தங்கச்சிகளுக்காகவும் கஷ்டப்பட்ட என் அப்பாவை வீட்ல உக்கார வெச்சு ராஜா மாதிரிப் பார்த்துக்கணும்...

“அம்மாவை என் அத்தைமார்களுக்கு வேலை செய்ய விடாமல் அவாளை என் அம்மாவுக்குச் சேவகம் செய்ய வைக்கணும்...! என் மனசுல நிறையக் கனவுகள் இருக்கு...! இதையெல்லாம் நான் செஞ்சுண்டு அப்புறம் தான் நிம்மதியாச் சாவேன்...!” அவள் பேசி முடித்துக் கொண்டு மூச்சிற்காக இடைவெளி விட, யோசனையில் இருந்த சேரன்,

“யுரேகா...!” என மனதில் சொல்லிக் கொண்டு அவளைப் பார்க்க,

அவளோ, “நீ என்ன லூசா...!” போன்றதொரு ரியாக்‌ஷனைக் காட்டினாள்.

அவள் கொடுத்த பார்வையில், “சரி.. சரி... நீ சொன்னதெல்லாம் சரிதான்... இப்போ பேசாமத் தூங்கு!” என்று விட்டு, அவன் மீண்டும் படுக்கையில் படுத்துக் கொள்ள, அவன் மனதில்,

‘அனந்துக்குப் பதிலா அப்பா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லியிருந்தா நான் உன்னைக் கூடப்



பண்ணியிருப்பேன்...’ என அவள் சொன்ன வரியே மீண்டும் மீண்டும் வலம் வந்தது.

‘அப்போ.. அவளோட அப்பா சொன்னா எதா இருந்தாலும் செய்வாளா...? அப்போ, அவ அப்பா என்னோட சந்தோஷமா இருக்கச் சொன்னா, இவள் சந்தோஷமா இருப்பாளா...?’ மனச்சாட்சி கேட்ட கேள்வி யில்...

‘அடப் பைத்தியமே...! அவள் அப்பா சொன்னா செய்வாதான்...! ஆனா அது உன் மேல உள்ள காதலால நிச்சயம் இருக்காது.... அப்பாவுக்காகன்னு கடமை மட்டும் தானிருக்கும்... காதல் வேற... கடமை வேற...!’ மனச்சாட்சி குரல் கொடுக்க...

‘நீ சொல்றது எனக்குப் புரியாமல் இல்லை... ஆனா இப்போ வரைக்கும் என்னைப் பார்த்தாலே எரிச்சல் பார்வையில் பார்க்கிறவ கிட்ட எப்படி என்னால என்னோட காதலைப் புரிய வைக்க முடியும்...? எனக்கு மத்தவங்க மாதிரி நடிக்கத் தெரியாதே...! என்னால எப்படி என் இயல்பை மீறி அவளோட கவனத்தை என் பக்கம் திருப்ப முடியும்...?’ மனச்சாட்சியிடம் கேட்க...

‘இந்த உலகத்துல யாரும் எல்லாத் தகுதிகளோடும் காதலிக்கிறதில்லை...! அவனவனோட காதலைக் காப்பாத் திக்கிறது அவனவனோட திறமை...!’ மனச்சாட்சி இவ னுக்குக் குட்டு வைக்க,

‘அதுக்குத்தான் இந்த வழியை ஒரு கருவியா நான் பயன்படுத்திக்கிறேன்...!’ உள்ளுக்குள் பட்டி மன்றம்

நடத்தியவன், ஒரு முடிவை எடுத்துக் கொண்டு கண் அயர்ந்தான்.

நடு இரவில் அவன் போர்த்தியிருந்த போர்வையை யாரோ உருவ, ஆழ்ந்த உறக்கத்திலிருந்தவன் திடுக்கிட்டு எழுந்து கொள்ள, எதிரில் அவனின் போர்வையை மிகவும் சிரமப்பட்டு இழுத்துக் கொண்டிருந்தாள், அகல்விழி.

"ஹே மாமி... என்னடி பண்ற...?" என்றவன் படுக்கையை விட்டு எழுந்தமர,

"நேக்குக் குளிருது... உங்க போர்வையைக் கொடுங்கோ...!" அப்பாவியாகச் சொன்னவள், மீண்டும் அதை அவனிடம் பறிக்கும் முயற்சியிலே இருந்தாள்.

இவள் இப்படிக் குழந்தைத் தனமாகச் செய்தால், அவனும்தான் என்ன செய்வான்...? அவளின் வெகுளித் தனத்தை நினைத்து வாய் விட்டுச் சிரிக்க, "சும்மா சும்மா சிரிச்சு என்னோட எரிச்சலைக் கிளப்பாதேள்...! இப்போ இதைத் தர முடியுமா, முடியதா...?" கட் அன்ட் ரைட்டாகக் கேட்க, அவனோ எழுந்து அந்தப் போர்வையை எடுத்து அவள் கையில் கொடுத்தான்.

அதை வாங்கிக் கொண்டு மீண்டும் அந்த மூலைக்குச் செல்ல எத்தனித்தவள், நின்று திரும்பி, "நான் வேற ரூமுக்குப் போகணும்... இந்த வீட்ல இந்த ரெண்டு ரூம் தவிர வேற இல்லையா...?"

அவனோ உதட்டில் பூத்த புன்னகையுடன், "எதுக்கு...?" என வினவ...



"ஹான்... ம்ம்... அது... அது... தரை ரொம்பக் குளிருது..." அப்போது வீராப்பாகப் பேசிய அகல்விழி இவளேதானா எனச் சந்தேகமாகப் பார்த்த சேரனின் கேலிப் பார்வையைத் தாங்க முடியாமல், அவள் மீண்டும் அந்த மூலைக்கே செல்ல...

"ப்ச்... நீ எங்கேயும் போக வேண்டாம்... இங்க வா...! இந்த பெட்லயே படுத்துக்கோ...!" அவன் வழி சொல்ல...

"ஹுக்கும்... அது எதுக்கு...? அதெல்லாம் முடியாது... நேக்கு வேற ரூம் கொடுங்கோ... இல்ல, நீங்க இந்த ரூமை விட்டுப் போங்கோ...!"

"அதெல்லாம் முடியாது... நீ இங்க படு...!"

"முடியாது, முடியாது..." அவள் தலையாட்டி மறுக்க,

"நீ இப்படியெல்லாம் சொன்னா கேட்க மாட்ட...!" என்றவன், இரண்டே எட்டில் அவளை நெருங்கி அவளைக் கையில் ஏந்தியவன், அவளைப் படுக்கையில் போட்டவனிடம்,

"ஐயோ...! என்ன பண்றேள்...! என்னை விடுங்கோ! விடுங்கோன்னு சொல்றேனில்ல...!" அவள் திமிறி விடுபட முயற்சிக்கவும், அவள் மேலே காலைப் போட்டு அடக்கி,

"இதோ பாரு... இப்போ வரைக்கும் எனக்கு உன்னை ரேப் பண்ணணும்னு சுத்தமா ஐடியா இல்லை. நீயே இந்த ஐடியாவைக் கொடுக்காதே...!" ஒரு மிரட்டல்

போட, அவ்வளவுதான்... அகல்விழி கப்சிப் என அடங்கினாள்.

தூக்கம் வரவில்லை எனினும், அவன் ஏதாவது செய்து விடுவானோ எனப் பயந்து கண்களை இறுக மூடியவள், சற்று நேரத்தில் உறங்கியும் விட, சேரனுக்குத் தான் அந்த நிமிடங்கள் அனைத்தும் அவஸ்தையாகக் கழிந்தன.

முதல் முறை அவன் அருகில் ஒரு பெண், அதுவும் அவன் உயிருக்கு உயிராகக் காதலிக்கும் புது மனைவி யின் அருகாமையில் அவனின் உடலுக்குள் பல மாற்றங்களை விளைவிக்க, அந்த மாற்றத்தை முழுதாக அனுபவித்தவாறு, தாங்கள் இருவரும் இதே படுக்கை யில் கணவன் மனைவியாக வாழும் நாள் வெகு விரைவில் வர வேண்டுமென்ற வேண்டுதலுடன் கண் உறங்கினான்.

## 4

**வி**டியற் காலையில் ஆழ்ந்த உறக் கத்திலிருந்த சேரனின் காதுகளில், "ஏங்க... ஏங்க..." என்ற மெல்லிய குரல் ஒலிக்க, அந்தக் குரல் அவனை அசைக்கவில்லை.

"ப்ச்..." எனத் திரும்பிப் படுத்துக் கொண்ட சேரனுக்கு,

"ஏங்க இளா... கொஞ்சம் எழுந்திருங்கோளேன்...!" என்ற குரல் மீண்டும் ஒலிக்க, அவனோ அடித்துப் போட்டாற்போல நன்கு உறங்கிக் கொண்டிருந்தான்.



சற்று நேரத்திற்கெல்லாம் கால் கொலுசின் ஓசை தன்னை நோக்கி நடந்து வர, அதைத் தொடர்ந்து தன் முகத்தில் ஏதோ குளிர் நீர் பட, சேரன் அடித்துப் பிடித்து எழுந்து கொள்ள, கால் கொலுசின் ஓசை வேக வேக மாகத் தன்னை விட்டு ஓடிச் செல்வது போலிருந்தது அவனுக்கு.

திடுக்கிட்டு எழுந்த இளஞ்சேரன், "ச்சே... இது என்னது...? ஏதாவது கனவா...?" அவன் கண்ணைத் தேய்த்துக் கொண்டு யோசித்திருந்த வேளையில், அவன் முகத்தில் நீர்த் துளிகள் இருப்பது தெரியவே... "தண்ணியா... மழை வந்து வீடு ஒழுகுதா...?" பெரிய சந்தேகம் வந்தது சேரனுக்கு.

அவன் யோசித்த வேளையில், "ஏங்கோ... இதோ... இங்க பாருங்கோ... இங்கே... உங்க எதுத்தாப்புல..." என்ற குரல் வந்த திசையில் திரும்பியவனுக்குக் குளியலறைக் கதவிடுக்கில் தலையை மட்டும் நீட்டிக் கொண்டிருந்தாள், அகல்விழி.

"ஹே மாமி... நீயா என்னை எழுப்பின...!"

"ஹான்... ஆமா... நான் எத்தனை முறை உங் களைக் கூப்பிட்டேன்... நீங்க என்ன கும்பகர்ணன் மாதிரி இப்படித் தூங்கிண்டு இருக்கேள்...?" நேற்று அவன் மனதில் நினைத்ததை இன்று அவள் வாயால் சொல்ல.

"சொல்லுவடி... சொல்லுவ... ஆமா... நீ அங்க நின்னு என்ன பண்ணிட்டு இருக்க...? இது கண்ணாமூச்சி

விளையாடுற நேரமா...?" என்றவன், சுவர்க் கடிகாரத்தைப் பார்க்க, அதுவோ நேரம் ஆறரை எனக் காட்டியது...

"ப்ச்... உங்களோட யாரு கண்ணாமூச்சி விளையாடுவா...! நேக்கு வேறேதும் வேலையில்லையா...?" என்றவள், அவனை ஏதோ வேலையில்லாதவனைப் போல் சொன்ன விதத்தில், அவனுக்கு அவளை முறைப்பதைத் தவிர வேற எதையும் செய்ய முடியவில்லை.

அவளோ அதை யெல்லாம் சற்றும் கண்டு கொள்ளாமல், "நீங்க இன்னைக்கு என்னை அப்பா, அம்மாவாண்ட கூட்டிண்டு போறேன்னு சொன்னேளே...! அதான் ரெடியாகலாம்னு...." அவள் இழுக்க, அவனோ அவளை முறைத்துப் பார்த்தான்.

"சும்மா சும்மா முறைக்காதேள்... நான் குளிச்சாச்சு... மாத்துடை எடுத்துக் கொடுங்கோ... பக்கத்தறைல தானே இருக்கு..." அவள் சொல்லவும், சேரனின் இதழ்கள் குவிந்து விசில் அடித்தன.

"மாமி... காலங்காத்தால இப்படி ஒரு தரிசனமா...? ச்சே... நான் மட்டும் கொஞ்சம் முன்னாடி எழுந்திருந்தா...! ஜஸ்ட் மிஸ்ட் இட் சேரா...!" என்றவன், எழுந்து ஒரு மாதிரிப் புன்னகையுடன் குளியலறை நோக்கி வர...

"சீச்சீ... கிரஹச்சாரம்... எனக்கு இப்போ ட்ரெஸ் எடுத்துட்டு வருவேளா மாட்டேளா...?" கோபம் கலந்திருந்தது அவள் குரலில்.



"முடியாது...!" என்றவன், ஸ்டைலாக நிற்க...

"ரொம்ப சந்தோஷம்... நான் இங்கேயே இருக்கேன்..." என்றவள், பட்டெனக் கதவை அடைத்து விட்டாள்.

'விடாக்கண்டி... மனுஷனோட ஃபீலிங்ஸ் தெரியாம இப்போ யாரு இவ்ளோ எக்ஸ்பிளனேஷன் தரச் சொன்னது...' மனதிற்குள் சலித்துக் கொண்டவன், அதிகாலையில் இப்படி ஒரு தருணத்தை அவன் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை.

ஆனால், அவள் இந்தளவுக்கு அவனுடன் சாதாரணமாக இருப்பதே அவன் மனதிற்கு நிம்மதியாக இருக்க, அந்த சந்தோஷத்தைச் சற்றும் அனுபவிக்க விடாமல், மனச்சாட்சி தலை தூக்கி,

'டேய்... அவ இப்போ ஒண்ணும் ஆசை ஆசையா உன்னை எழுப்பலை... இப்போ அவ அம்மா அப்பாவைப் பார்க்கப் போறா... அங்க போனா உன் கிட்டத் திரும்ப வர்றது சந்தேகம்தான்... அவளை அங்கே கூட்டிட்டுப் போறதுக்கு முன்னாடி நல்லா யோசிச்சுக்கோ...!' மனது அட்வைஸ் கொடுக்க, சேரன் அப்படியே யோசித்தவாறு அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

"இளா... நேக்கு இங்க குளிர்றது... ட்ரெஸ் எடுத்துத் தருவேளா, மாட்டேளா...?" அகல்விழி அழும் குரலில் கேட்க, தன் யோசனையிலிருந்து கலைந்தவன்,

"இரு, எடுத்துட்டு வரேன்...!" என்றவனுக்கு,

"சுடிதார் வேண்டாம்... புடவை இருந்தா எடுத்துண்டு வாங்கோ... கல்யாணத்துக்குப் பிறகு சுடிதார் போடக் கூடாதுன்னு அம்மா சொல்லியிருக்கா..." அவள் சொல்லவும்,

'செல்ல மாமி...!' மனதில் கொஞ்சிக் கொண்டு, அவளுக்குத் தேவையான உடைகளை எடுத்து வந்து, குளியலறைக் கதவைத் தட்ட, அதை வெறும் அரை அங்குலம் திறந்தவள், தனது இடது கையை நீட்டி, "கொடுங்கோ...!" எனவும்,

அவனுக்கோ நீர்த் துளிகள் பட்ட, அவளது வெளிர்க்கரங்கள் அவனை முத்தமிடத் தூண்டின.

அவன் இன்னமும் உடையைத் தராமல் தாமதிக்கவும், "ப்ச்... கொடுங்கோ...!" எனக் கையைக் காற்றில் உலாவ விட்டவளின் கையைப் பிடித்துப் பட்டென முத்தம் வைத்து விட்டான்.

"ஹய்யோ...! ச்சே ச்சே...! நீங்க ஏன் இப்படியெல்லாம் பண்றேள்...? என் டிரெஸ்ஸைக் கொடுங்கோ!" தலையை வெளிப் பக்கமாக நீட்டி, அவன் கையில் வைத்திருந்த உடைகளைப் பிடுங்கிக் கதவை "டங்" கென அடைத்தாள்.

'உப்ஸ்... இவ இப்படியிருந்தா ரொம்பக் கஷ்டம்...!' ஒரு பெருமூச்சை விட்டவன், அவனுமே பக்கத்தறைக்குச் சென்று குளித்து ரெடியாகிக் கீழே வர, அங்கே அவனுக்கு முன்னதாகவே அகல்விழி கிளம்பத் தயாரானாள்.



அவன் மாடிப் படிகளில் இறங்க இறங்கவே, "போலாமா... போலாமா...?" என்ற அகல்விழியின் குரலில் அத்தனை அவசரம்.

அவளின் அவசரத்தில் சேரனின் மனது உண்மையாகவே வலித்தது.

'தன்னை விட்டுப் போக இவள் இத்தனை அவசரம் காட்டுகிறாளே...! நானோ இவளே எனது மொத்த வாழ்க்கையென நினைத்துக் கொண்டிருக்கிறேன்...'

வெறுமை படிந்த முகத்துடன் கீழிறங்கி வந்தவனை, "தம்பி... டிபன்... ரெடி... சாப்பிட்டுப் போறீங்களா....?" ஷெண்பா கேட்கவும்,

"ஹ்ம்... சரி, எடுத்து வைங்க...!" சொல்லி விட்டு அவன் டைனிங் டேபிள் நோக்கி நகர, அகல்விழியோ திடுக்கிட்டு,

"எங்காத்துக்குப் போய்ச் சாப்பிட்டுக்கலாம்... வாங்கோ போவோம்...!" என்றாள்.

இங்கே சாப்பிடுவதென்றால் அவள் பெற்றோர்களைச் சந்திப்பதில் அரை மணி நேரம் தாமதமாகுமல்லவா...!

இந்த முறை சேரனுக்குக் கோபம் வந்தது.

"இதோ பார் அகல்...! நான்தான் கூட்டிட்டுப் போறேன்னு சொல்றேனில்லை... சொன்னா, சொன்னதைச் செய்வேன்... ஆனா அதுக்கு நீ, நான் சொல்றதைச்

செஞ்சா நீ கேட்டது நடக்கும்... இல்லைன்னா இங்கேயே இரு...! நீ யாரையும் பார்க்க வேண்டாம்...!" அவன் சொன்ன நொடி, அவள் சேரில் அமர்ந்திருந்தாள்.

ஷெண்பா இருவருக்கும் தட்டு எடுத்து வைக்க, அகல்விழி கண்களை மூ ஏதோ ஸ்லோகத்தை உச்சரித்தவாறு உணவுண்ணத் தயாரானாள்.

இதோ... இதைப் போன்று அவளின் சிறு சிறு செய்கைகள்தான் சேரனை அவள் காலடியில் கிடக்கத் தூண்டுகின்றன. அவள் செய்யும் ஒவ்வொரு செயலிலும், அவள் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும், அவன் காதலில் விழுகிறான்.

அவளால் மட்டுமே அவனுக்கு இன்பத்தைக் கொடுக்க முடியுமென அவன் உள்ளம் திடமாக நம்பியது.

அவளையே வைத்த கண் மாற்றாமல் பார்த்துக் கொண்டிருந்த சேரனை ஷெண்பா, "தம்பி, உங்களுக்குப் பூரி வைக்கவா...?" எனவும், அவன் நினைவு கலைந்தது.

"என்ன... என்ன ஷெண்பா...?"

"இல்ல, உங்களுக்குப் பூரி வைக்கவான்னு கேட்டேன்..."

"ம்ம்...! வைங்க..." என்றவன், பக்கத்தில் அகல்விழியின் தட்டில் சூடான வெண்பொங்கல் இருப்பதைப் பார்த்தவன், "இல்ல, இல்ல, வேண்டாம்... எனக்கு அது வேணும்...." என அருகில் இருப்பவளின் தட்டைக் காட்ட, ஷெண்பா சந்தேகமாக அவனைப் பார்த்து,



"தம்பி... அது வெண்பொங்கல்... உங்களுக்குப் பிடிக்காதே... அதுவும் நீங்க சொன்னீங்கன்னு பாப்பாக்கு நெய் நிறையா விட்டுச் செஞ்சிருக்கேன்!" அவர் சொல்லவும்...

"இல்ல... பரவால்ல... நான் அதையே சாப்பிடுறேன்...!" எனவும், ஷெண்பா உதட்டில் பூத்த புன்னகையுடன் அவனுக்கு அதை வைத்தார்.

தட்டில் வைத்ததும் தட்டில் வழுக்கிக் கொண்டு போன பொங்கலைப் பார்த்ததும், அவன் முகம் சற்றுச் சுழிந்தாலும், பக்கத்தில் அவனின் மனையாள், பொங்கலைத் தேங்காய்ச் சட்னியில் துவட்டிச் சாப்பிடும் அழகில் மயங்கி, அதை ஒரு வாய் அள்ளி வாயில் போட்டான்.

பிடிக்கவில்லைதான்...

நெய் வாசம் அவனுக்கு உள்ளுக்குள் புரட்டிக் கொண்டு வந்தது. ஆனால், மனைவிக்காக அதை உண்ண நினைத்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவன் தட்டில் கருமிளகு ஒவ்வொன்றாகப் படையெடுக்க, அதை வைத்தவளின் முகத்தை நிமிர்ந்து பார்க்க, அவளோ முகத்தைக் குறும்பாக வைத்து, "நேக்கு மிளகு பிடிக்காது... அங்க ஆத்துல ஸ்ரீ தட்டுல வச்சிடுவேன்.... இங்க வேற தட்டு இல்லையா... அதான்...!" எனவும்,

"மாமி! என் செல்லச் சுண்டெலிடி... நீ!" என்றவன், இடது கையால் அவளின் கன்னத்தைப் பிடித்துக் கிள்ள...

"ஹாஆஆ...! வலிக்கிறது! விடுங்கோ...!" என்றவள், அவன் கையை எடுத்ததும்,

"இத பாருங்கோ... இப்படிச் சும்மா சும்மா என் மேல கை வைக்கிறது... அப்புறம் முத்தம் வைக்கிற வேலையெல்லாம் வேண்டாம்.... சொல்லிட்டேன்...!" என மிரட்ட, அருகிலிருந்த ஷெண்பாவே அவள் சொன்ன விதத்தில் சிரித்து விட்டார்.

சேரனின் முகத்தில் டன் டன்னாக அசடு வழிந்தது.

இப்போது இவனது இந்த முகத்தைத் தொழில் வட்டார மக்கள் மட்டும் பார்த்தார்கள் என்றால், நிச்சயம் இது சென்னையின் முக்கியப் பெரும்புள்ளி இளஞ்சேரன் என்று நம்பவே மாட்டார்கள்... அவன் உயிர் நண்பன் சதீஷ் உட்பட.

அவர் மனதில், 'நேத்து இந்தப் பிள்ளை ஆடின ஆட்டமென்ன...! இன்னிக்கி அஞ்சு வயசுப் பாப்பா மாதிரி பேசுறது என்ன...! தம்பி சொன்னாப்புல, இது குழந்தை தான்...! தம்பிக்கும் பாப்பா முகத்தைப் பார்த்தாலே மூஞ்சி பிரகாசமாகிடுது...! ஆண்டவா...! சீக்கிரமே இந்தப் பாப்பா தம்பியைப் புரிஞ்சுக்கணும்...!' உண்மையான வேண்டு தலை ஆண்டவனிடம் வைத்தார்.

சாப்பிட்டு முடித்தவுடன் கையைக் கழுவி வந்தவள், "போலாமா...? சாப்பிட்டாச்சு...!" சேலைத் தலைப்பில் கையைத் துடைத்துக் கொண்டு வந்தவளின் இடுப்பைப் பற்றித் தன் புறம் இழுத்து, அவள் துடைத்த விதத்தில் அவளின் சேலையில் கையைத் துடைத்த சேரன்,



"போலாம்...!" என்றவனின் குரல் கிசுகிசுப்பாக ஒலித்தது.

அவனுக்கு... அவள் தந்தை, அன்னையைப் பார்த்ததும் எப்படி இவளைச் சமாளித்துத் தன்னுடன் மீண்டும் அழைத்து வரப் போகிறோம் என்ற மலைப்பு இருக்கவே, அவளின் அருகாமையை இப்போது அனுபவிக்க நினைத்தான்.

இப்போது தனது செயலுக்கு அவளிடம் எதிர்ப் பில்லாமல் போகவும், அவளை இறுக அணைத்தான்.

ஆனால், அவளின் எண்ணமோ, 'நீ என்ன வேணாலும் பண்ணிக்கோ... நான் இன்னும் கொஞ்ச நேரத்துல என்னைப் பெத்தவா கிட்டப் போய்டுவேன்...!' என அவன் செய்கையில் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றிருந்தாள்.

சற்று நேரம் கழித்து, "நாம போவோமா....?" அகல்விழி கேட்கவும், சேரன் விழியில் வலியுடன் அவளை அழைத்துக் கொண்டு காருக்குச் சென்றான்.

காருக்குள் சென்று கார் வீட்டை விட்டு வெளியே வந்ததும் சேரன் அவனது கைப்பேசியில் சில எண்களை அழுத்திக் காதில் மாட்டியிருந்த ப்ளூ டூத் ஹெட் செட்டில், "ஜீவா... நான் இப்போ அங்கேதான் வந்துட்டு இருக் கேன்...!" எனவும்...

அந்தப் பக்கமிருந்த ஜீவா, "சார்... நானும் இப்போ தான் ஹாஸ்பிடல் வந்தேன்... ஆனா, இங்க ரிசப்ஷன்ல

அவங்க நேத்து ராத்திரியே டிஸ்சார்ஜ் ஆகிட்டதாச் சொல் றாங்க..."

"வாட்...? எப்படி...?" என்றவன், காரை ஓரமாக நிறுத்தி விட்டுக் காரின் கதவைத் திறந்து வெளியே வந்தவன், போனில் ஏதோ டென்ஷனாகப் பேச, அகல்விழியோ அதை யெல்லாம் சுத்தமாகக் கண்டு கொள்ளாமல், தன் சொந்தத்தைப் பார்க்கும் ஆவலில் வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

போனில் பேசிவிட்டு வந்தவன் முகம் கடுமையாக இருக்க, அந்தக் கடுமையை நேற்றுக் காலை அவனிடம் கண்டவள், அவன் ஏதோ டென்ஷனாக இருக்கிறான் எனத் தெரிந்து, மீண்டும் வேடிக்கை பார்க்கத் துவங்கினாள்.

வண்டி நேராக அவளின் வீட்டுக்குச் சென்றது.

சென்னையில் நடுத்தர மக்கள் வசிக்கும் பகுதியில், அழகாக அம்சமாக அமைந்திருந்தது அகல்விழியின் வீடு.

கார் நின்ற வேகத்தில் பாய்ந்து கீழே இறங்கியவள், தன் வீட்டுக் கேட்டில் கை வைத்துத் தள்ள, அதுவோ திறப்பேனா என்றது.

கையை உள்ளே விட்டு, உள்தாழ்ப்பாளை அவள் திறக்க முயல, அதற்குள் அவளை நெருங்கியவன், "அகல்... கேட் பூட்டியிருக்கு...!" என்க, அப்போதுதான் அவள் அதைக் கவனித்தாள்.

"ஹான்.... ஆமா... பூட்டியிருக்கு... ஒரு வேளை அம்மா கோவிலுக்குப் போயிருப்பாளோ...? ஆனாலும் அப்பா வீட்டில் இருப்பாளே...!" யோசித்தவள்,



"இருங்கோ... நான் பக்கத்தாத்துல கேட்டுண்டு வரேன்..." விரைந்து அங்கே ஓடியவள், "சுதாத்தை...! சுதாத்தை...!" என்றதும், சுதா என்பவர் வெளியே வந்து,

"வாடிம்மா... வா... என்ன இங்கல்லாம் வந்திருக்க..." அவர் குரல் நக்கலாக வர...

அகல்விழி இருந்த நிலையில், அதையெல்லாம் கண்டு கொள்ளாமல், "அத்தை... எங்க வீடு பூட்டுப் போட் டிருக்கே...! அப்பா அம்மா இல்லையா...? எங்காவது வெளிய போயிருக்காளா...? சாவி கொடுத்துட்டுப் போனாளா, இல்லையா...?"

"ஆமாடி ஆமா... இப்போ வந்து கேளு... பாவம், அந்த மனுஷன் நேத்து நெஞ்சு வலில படுத்துட்டு இருந்தபோது வந்து கேட்கலை... இப்போ என்னடி நோக்கு அக்கறை...?" சுதா சொல்ல...

"என்னது... நெஞ்சு வலியா...? அப்பாக்கு நெஞ்சு வலியா...? என்னாண்ட யாருமே சொல்லலையே...?" அகல்விழியின் குரல் உடைந்து அழத் தயாரானது. அதற்குள் சேரன் அவளை நெருங்கியிருந்தான்.

அவனைப் பார்த்ததும், "ச்சே... காலங்காத்தால இவா முகத்தைப் பார்க்க வேண்டிதா இருக்கு... இதோ பாரு அகல்... உன் வீட்ல எல்லாரும் எங்க போனான்னு நேக்குத் தெரியாது. என்னாண்ட சாவியெல்லாம் இல்லை. நீ முதல்ல இங்கிருந்து கிளம்பு... என் ஆத்துக்காரர் பார்த்தா எனக்குத்தான் அடி விழும்...!" என்றவர், பட்டெனக் கதவைச் சாத்தி விட்டார்.

இந்தச் சுதாதான்.... ஒவ்வொரு வாரம் வெள்ளிக் கிழமை இவளிடம் ஒரு கிலோ மல்லிகைப் பூவைக் கொடுத்து, "பெருமாளுக்குச் சாத்தணும்டி குழந்தை...! நேக்கு ஆத்துல முதுகொடிய வேலையிருக்கு...! இந்தப் பூவைக் கொஞ்சம் தொடுத்துத் தரியா...?" என்பார்.

இவளும், "பெருமாளுக்குத்தானே அத்தை...! ரெண்டே மணி நேரத்துல பூச் சரத்தோட வரேன்...!" என மாங்கு மாங்கெனக் கட்டிக் கொடுப்பாள்.

ஆனால், இப்போது அகல்விழிக்கு அந்த எண்ணமெல்லாம் இல்லை... தன் தந்தைக்கு நெஞ்சு வலி வந்திருப்பது கூடத் தனக்குத் தெரியாமல் இருந் திருக்கிறோமே என்ற எண்ணம் மட்டுமே ஆக்கிரமித்திருக்க, தன்னைத் தோள் தொட்டு அழைத்து வந்தவனைக் கூட அவள் உணரவில்லை.

அவளைக் காரில் ஏற்றியவன், மறுபக்கம் வந்து மீண்டும் காரை எடுக்க, காரின் உலுக்கலில் சுயநினைவு வந்தவள், அவனிடம் திரும்பி, "உங்க போன் தரேளா...? ப்ளீஸ்..." கெஞ்சும் குரலில் கேட்க, அதைக் கையில் வாங்கிய நொடி, அவளது அப்பா, தங்கை, அம்மா என மூன்று பேரின் எண்ணுக்கும் அழைக்க, மூன்றுமே சொல்லி வைத்தாற் போல் அணைக்கப்பட்டிருந்தன.

அகல்விழிக்குச் சோர்ந்து போனது. "ச்சே...!" இயலாமையில் கண்கள் கரிக்க, திடீரெனச் சேரனிடம் திரும்பி, "உங்களுக்கு என்னோட அத்தை வீடு



தெரியுமா...? அங்க என்னை அழச்சுண்டு போறேளா...?" எனவும், நேற்று அவள் அத்தைமார் பேசிய பேச்சுக்கள் இன்னமும் அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன.

'தன்னாலேயே அவர்களின் பேச்சைக் கேட்க முடியவில்லை... இவள் எப்படி அதைத் தாங்குவாள்...?' என்ற எண்ணத்துடன், "அங்கெல்லாம் வேண்டாம் மாமி!" அவன் மறுப்புச் சொன்ன நொடி,

"நேக்குத் தெரியும்... நீங்க என்னை அங்கெல்லாம் அழைச்சுட்டுப் போக மாட்டேள்... உங்களாலதான் இப்போ நான் இப்படி ஒரு நிலைமையில இருக்கேன்... என் அப்பாவுக்கு நெஞ்சு வலியாம்...! நெஞ்சு வலின்னா தெரியுமா...?

"ஹார்ட் அட்டாக்... அது யாரால...? உங்களால தான்... செய்யறதையும் செஞ்சுட்டு... இப்போ உங்களுக் குச் சந்தோஷமா...? சுயநலவாதி...! தான் நல்லா இருந்தாப் போதும்னு எண்ணம்... உங்களால் இன்னும் நான் எத்தனை படணுமோ...?" என்றவள், தலையில் அடித்துக் கொண்டு அழத் துவங்க... காரை ஓரமாக நிறுத்தியவன்,

"மாமி...! கொஞ்ச நேரம் அமைதியா இரு...!" அவன் சொன்னது எதுவும் அவளை அசைக்கவில்லை.

"அப்படி என் கழுத்துல கட்டாயமாத் தாலியைக் கட்டிண்டு எதைச் சாதிச்சேள்...? ச்சே...! நோக்கு பொம்பள சுகம்தான் வேணுமா? எவளாவது தாசியைத் தேட

வேண்டி... ஹா... அம்மாஆ ஆ...!" என்றவள், கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு மிரண்ட பார்வையை அவனை நோக்கி வீசியவளிடம் ஒரு விரல் நீட்டி,

"இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசின... அடி பிச்சிடுவேன்...!" என உறுமியவன்...

"உனக்கு என்னடி... உங்க அத்தை வீட்டுக்குத் தானே போகணும்... போ... போய் வாங்கிட்டு வா...!" என்றவன், அடுத்து ஒரு வார்த்தை பேசாமல் வண்டியை அவளின் முதல் அத்தை தேவிகாவின் வீட்டில் நிறுத்தி னான்.

காரை நிறுத்தி விட்டு அவன் காருக்குள்ளேயே இருக்க, அவள்தான் இறங்கி அவள் அத்தை வீட்டு வாசல் மணியை அடித்தாள்.

கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த தேவிகா, "என்னடிம்மா... இங்க வந்திருக்க... ஒரு நாள்ல உன்னை இழுத்துட்டுப் போனவன் நீ ஒண்ணுக்கும் லாயக்கு இல்லைன்னு பத்தி விட்டுட்டானா...?" தேவிகா இகழ்ச்சியாகக் கேட்க, அவர் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த சேரனின் விரல் அழுத்தத்தில், அவனின் ஸ்டியரிங் மட்டும் தேவிகாவின் கழுத்தாக இருந்திருந்தால், இந்நேரம் அவர் உயிரை விட்டிருந்திருப்பார்.

ஆனால், அகல்விழியோ அவள் குத்தல் பேச்சைப் புரிந்து கொள்ளாமல், "அதெல்லாம் இல்ல அத்தை...! அவர்தான் என்னை அழைச்சுண்டு வந்தார்... நான் அப்பா அம்மாவைத் தேடி ஆத்துக்குப் போனேன்... அவா அங்க இல்லை... வீடு பூட்டியிருக்கு... அவா எங்க போறேன்னு உங்களாண்ட ஏதாவது தகவல் சொன் னாளா...?" அத்தைக்கு ஏதேனும் தகவல் தெரிய வேண் டுமே என்ற வேண்டுதல், அகல்விழியின் கண்களில் பிரதி பலித்தது.



ஆனால் அவருக்கோ அந்தச் சின்னப் பெண்ணின் வேதனையைப் பார்க்கச் சுகமாக இருந்திருக்கும் போலும்...

"ஆமாடி... எல்லாம் இப்போ வந்து கேளு... அதெல்லாம் என்னாண்ட ஒண்ணும் சொல்லலை... இப்படிப்பட்ட புள்ளையைப் பெத்துட்டு அவா என்ன சந்தோஷமாவா இருப்பா...? இந்நேரத்துக்கு எங்காவது நாண்டுண்டு செத்துப் போயிருப்பா...!" தேவிகா, நாரா யணன் செய்த எல்லாவற்றையும் மறந்து நாக்கில் நரம்பில்லாமல் பேச...

"ஹய்யோ அத்தை...! ப்ளீஸ் அத்தை... அப்படி யெல்லாம் பேசாதீங்கோ...!" வேதனையில் காதுகளை அடைத்துக் கொண்டாள் அகல்விழி.

அதற்கு மேல் சேரனால் பொறுக்க முடியவில்லை. காரை விட்டு எழுந்து வந்தவன், தேவிகாவை நோக்கி விரல் நீட்டி, "போதும்... இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசின... அப்புறம் பொம்பளைன்னு கூடப் பார்க்க மாட்டேன்...!" என்றவன், அழுது கொண்டிருந்த அகலின் கையைப் பிடித்து இழுத்து வந்து காரினுள் தள்ளியவன், மீண்டும் பயணத்தைத் துவக்கினான்.

சற்று நேரத்திற்கெல்லாம் தன்னைச் சமாளித்துக் கொண்ட அகல்விழி, பின், "சுபா அத்தை வீட்டுக்கு...!" என்றவளை,

"இனி ஒரு வீட்டுக்கும் கிடையாது.... பேசாம வாயை முடிக்கிட்டு வா...!" அதட்டல் போட்ட சேரனின் உள்ளம் உலைக்கலமாகக் கொதித்துக் கொண்டிருந்தது.

நேற்று நடந்த சம்பவத்தில் அகல்விழியின் மீது ஒரு சதவீதம் கூடத் தவறில்லை எனினும்... இந்த உலகம் அவளைத்தானே பேசுகிறது....

பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்பது, நம் நாட்டில் மட்டுமே நடக்கும் கொடுமை...!

இதெல்லாம் தன்னால்தான் என்ற ஆற்றாமையும் அவனைக் கொதிநிலையை அடையச் செய்தது.

அதே எண்ணத்துடன் அவன் வீடிருக்கும் திருப்பத்தில் அவன் காரை நுழைக்க, "ஹா... நான் இங்க வர மாட்டேன்... நான் அப்பாவைப் பார்க்கணும்... என்னை இறக்கி விடுங்கோ... நான் இங்க வர மாட்டேன்... இறக்கி விடுங்கோ.. விடுங்கோ...!" என்றவள், கதவைத் திறக்க முயல,

சென்ட்ரல் லாக் செய்திருந்த கதவை அவளால் அசைக்கக் கூட முடியவில்லை.

சேரனும் இவள் செய்த ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க ஒரு கையால் ஸ்டியரிங்கையும், மறு கையால் அவளையும் பிடித்திருந்தான்.



ஆனால், அவளோ எப்படியாவது அவனைத் தடுக்க வேண்டுமென்ற உந்துதலில், ஸ்டியரிங் வீலை ஒடித்துத் திருப்ப, நொடி நேரத்தில் நடந்த இந்த நிகழ்வில், சேரனின் கையிலிருந்து வண்டி தடுமாறி அவர்கள் வீட்டுக் காம்பவுண்டில் 'டங்'கென்ற சத்தத்துடன் இடித்து நின்றது.

## 5

படுக்கையில் மயக்கத்தில் படுத்திருந்தவளருகில் அமர்ந்திருந்த சேரனுக்கு மனம் முழுவதும் ரணமாக வலித்தது.

'இவளைப் பூவை விட மென்மையாகப் பார்த்துக் கொள்ள வேண்டுமென நினைத்தேனே...! ஆனால், நேற்றிலிருந்து அவன் கையாலே எத்தனை எத்தனை அடிகள்...! வேதனைகள்...! எல்லாம் என்னால் தான்... ச்சே...! இவளின் விஷயத்தில் மட்டும் நான் ஏன் இவ்வளவு அரக்கனாக நடந்து கொள்கிறேன்...!' என்ற ஆற்றாமையில் அவன் தன் தலையில் சரமாரியாக அடித்துக் கொள்ள,

"ஐயோ... தம்பி... என்னது இது... கொஞ்சம் அமைதியா இருங்க...!" ஷெண்பா அவன் கைகளைப் பிடித்துத் தடுக்க...

அகல்விழிக்குச் சிகிச்சையளித்துக் கொண்டிருந்த மருத்துவரும், "மிஸ்டர் சேரன்... நீங்க கொஞ்சம் அமைதியாக இருங்க... ஏன் இவ்வளவு டென்ஷன்...? இப்போ அகல்விழிக்கு ஒண்ணுமில்லை... அதிர்ச்சியினாலதான்

மயக்கமாகிட்டாங்க... யூ ப்ளீஸ் காம் டவுன்...!" மருத்துவர் அவனுக்குச் சமாதானம் சொன்னது அவன் மூளைக்குப் புரிந்தாலும், மனது ஏற்றுக் கொள்ள மறுத்தது.

ஆனால், இயல்பாகவே அவன் மனதை மறைத்துப் பழகியிருந்ததால், நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டவன், "நீங்க பார்த்துக்கோங்க ஷெண்பா...!" என்றவன், அவ்வறையை விட்டு வெளியே வர,

அவன் பின்னாலே வந்த மருத்துவரும், "சேரன், உங்க வைஃப்க்கு ஒண்ணுமில்ல... வெறும் மயக்கம் தான்... இன்னும் கொஞ்ச நேரத்துல எழுந்துடுவாங்க... அவங்க ரொம்ப வீக்கா இருக்காங்க... உடம்புல ஒரு சத்துமில்ல... வைட்டமின் டேப்லெட்ஸ் கொடுத்திருக்கேன்... நல்ல ஹெல்த்தி ஃபுட்ஸ் கொடுங்க...!" எனவும்,

சேரன், "ஆமா... எப்ப பாரு அந்தத் தயிர் சாதத்தைச் சாப்பிட்டா அதுல என்ன சத்திருக்கும்...?" வாய்க்குள் முணுமுணுக்க, மருத்துவருக்கே சிரிப்பு வந்து விட்டது.

"நல்லா பார்த்துக்கோங்க சேரன்...! ஏதாவதுன்னா என்னைக் கான்டாக்ட் பண்ணுங்க...!" என்றவர், விடைபெற, அவனும் தலையைக் கோதியவாறு ஹால் சோபாவில் அமர்ந்து, தலையைப் பின்னால் சாய்த்துக் கொண்டான்.

கடந்த சில நாட்களில்தான் அவன் வாழ்வில் எத்தனை மாற்றம்...! நினைத்தபோது அவனுக்கு



வியப்பாகவும், மனதிற்குச் சந்தோஷமளிப்பதாகவும் தான் இருந்தது.

பழைய நினைவுகளில் மூழ்கி இருந்தவனைக் கலைத்தான் சதீஷ்.

"சேரா...! என்னடா, என்னாச்சு...? அவசரமா வீட்டுக்கு வரச் சொன்ன..." சதீஷ் படபடப்புடன் கேட்க...

"வா, சதீஷ்... உக்காரு... ஏதாவது குடிக்கிறியா...?" என்றவன், "ஷெண்பா...!" என அழைக்க, அப்போதுதான் அவர், மேலே அகல்விழியுடன் இருப்பது தெரிந்தது.

"ஷெண்பா, மேல மாமியோட இருக்காங்க மச்சி... இரு, நான் வேலுவைக் கூப்பிடுறேன்..." என்ற சேரனை...

"டேய்... என்ன விஷயம்னு சொல்லு... எதுக்கு என்னை இப்போ அவசரமா வரச் சொன்ன...? நான் முக்கியமான வேலையை விட்டுட்டு வந்திருக்கேன்!" சதீஷ் கடுப்புடன் கேட்க...

"ஹ்ம்... மாமியோட பேரன்ட்சைக் காணோம் சத்தி!" என்றவன், கடகடவென நடந்ததைச் சொல்லி முடித்த நொடி, தடதடவெனக் கால் கொலுசொலி கேட்க, அதைத் தொடர்ந்து ஷெண்பா, "பாப்பா... நில்லு பாப்பா... மெதுவா போ...!" என அவருடைய பெரிய உடம்பைத் தூக்கிக் கொண்டு அகல்விழியின் பின்னால் ஓடி வருவது தெரிந்தது.

அவளைப் பார்த்ததும், "ஸ்ஸ... ஆரம்பிச்சுட்டா மச்சி...!" என்றவன், ஒரு பெருமூச்சை வெளியிடக் கீழிறங்கி வருபவளைப் பிடிக்கக் காத்திருந்தான்.

அவள் வந்ததும் அவளைப் பிடித்துத் தன்னோடே அணைத்தவாறு சோபாவின் அருகில் அமரச் செய்ய, "ஹான்... என்னை விடுங்கோ... நான் அப்பாவைத் தேடணும், விடுங்கோ...!" என்று அலற...

ஒரு கட்டத்திற்கு மேல் குழந்தை போல் இளாவின் மார்பில் சாய்ந்து, "அப்பா... அப்பா... என்னை இங்க தனியா விட்டுண்டு எங்க போனேள்...? நேக்கு உங்க எல்லாரையும் பார்க்கணும் போலிருக்குப்பா...! ஸ்ரீ குட்டி! நீயாவது என்னாண்ட சொல்லிட்டுப் போயிருக்கப் பிடாதா? அம்மா...! உங்களுக்குக் கூட என்னைப் பத்தி மறந்துடுத்தா...?" கண்ணீர் சிந்தியவளைத் தலை கோதித் தன்னுடன் அழுத்திக் கொண்ட சேரனுக்குமே தொண்டை அடைத்தது.

வெகு நேரம் கண்ணீர் சிந்தியவள், மீண்டும் அவனிடமிருந்து திமிர முற்பட, "ஏன் மாமி இப்படி என்னைப் படுத்துற...? கொஞ்ச நேரம் அமைதியா இரு, ப்ளீஸ்..." சேரன் போட்ட அதட்டலுக்குப் பயந்து, அவள் அவனிடமிருந்து ஒதுங்கி அமர்ந்து கொண்டாள். அம்மாவிடம் பயந்த குழந்தை போல் அவனைப் பார்த்து,

"நேக்கு அப்பாவைப் பார்க்கணும்...!" என்றவள் குரல் தேம்பித் தேம்பி வந்தது.

இந்தக் குழந்தைக் குரலை மீறி அவனால் என்ன செய்ய முடியும்...?

"பார்க்கலாம்டா... நான் எல்லா இடத்துலேயும் தேடச் சொல்லி ஆள் அனுப்பியிருக்கேன். நீ அழாம சமர்த்தா



இரு...! உனக்கு நான் தயிர் சேமியா செஞ்சு தரச் சொல்றேன்...!" அவன் பொறுமையாகச் சொல்ல,

"ஹான்... சரி... எனக்கு நேத்து மாதிரி வேண்டாம்... அதுல ஃப்ரூட்ஸ் இல்லாம நல்லாவே இல்ல... காஷும் சரியாவே நெய்யில வறுக்கலை... எனக்கு நல்லா செஞ்சு தரச் சொல்லுங்கோ...!"

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு அவனிடம் பக்குவம் சொல்ல... அருகில் இருந்த சதீஷுக்கும், ஷெண்பாவுக்கும் அடக்க மாட்டாமல் சிரிப்பு வந்தது.

ஆனால், அகல்விழியோ பக்குவம் சொல்லி விட்டு, "உங்க ஆளுங்க கண்டுபிடிச்சிருவாளா...? நேக்கு என்னமோ சந்தேகமா இருக்கு... நம்ம போலீசாண்ட சொல்லிடலாமா...? அவா சீக்கிரமா கண்டு பிடிச்சிடுவா...!" அவள் தீவிரமாகச் சொல்லவும்...

"ஹான் சரி... சொல்லு..." என்ற சேரனிடம்,

"சொல்றதுன்னா எப்படிச் சொல்றது... என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைச்சுண்டு போங்கோ...! நேக்கு அங்கெல்லாம் போய்ப் பழக்கமில்லை...!" அகல்விழி சற்றே மிரட்சியுடன் சொல்ல...

"நீ ஏன் ஸ்டேஷன் போற... இங்கேயே சொல்லு..."

"இங்கேயா... யாராண்ட...? உங்காளண்டையா...? நீங்க போலீசா...? இல்லையே...! ரவுடின்னு இல்ல ஊர்ல பேசிக்கிறா...!" கன்னத்தில் தட்டி அகல்விழி சொல்ல,

இப்போது சதீஷால் தன் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

சோபாவில் புரண்டு புரண்டு அவன் சிரிக்க, சத்தம் வந்த திசையில் திரும்பிப் பார்த்த அகல்விழி, "யாரு இவரு... பார்க்க செக்யூரிட்டி ஆபீசர் மாதிரி இருக்காரு...!" அவள் சொல்லி முடித்த நொடி, சேரன் விழுந்து விழுந்து சிரிக்கத் துவங்கி விட்டான்.

இப்போது முறைப்பது சதீஷின் முறையானது.

ஒரு கட்டத்தில் இருவரும் மாறி மாறிச் சிரிக்க, ஷெண்பாவும் வாயில் கையை வைத்துச் சிரிப்பை அடக்கப் பெரும்பாடு பட, அகல்விழிக்குத்தான் கடுப்பாகிப் போனது.

"ப்ச்... நிறுத்துங்கோ...! இப்போ எதுக்கு எல்லாரும் கெக்கே பிக்கேன்னு இளிச்சுண்டு இருக்கேள்...? நான் எவ்வளவு கவலையா இருக்கேன்...!" அவள் சொல்லவும், இப்போது மூவரும் தங்கள் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டனர்.

அவள் தலையைப் பிடித்து ஆட்டி விட்ட சேரன், "என் செல்ல மாமி...! இவன் செக்யூரிட்டி இல்ல... இவன் தான் நார்த் சென்னை டிவிஷன் ஏ.சி... ஏ.சி.ன்னா ஏர் கூலர் இல்லை... அசிஸ்டண்ட் கமிஷனர் ஆஃப் போலிஸ்..." அவன் சொன்ன நொடியில்,

"என்னது போலீசாஆஆ...!" அரையடி தள்ளியிருந்த அகல்விழி, இப்போது இளஞ்சேரனின் மடியில் அமராத குறையாக அமர்ந்திருந்தாள்.



நமது ஊரில் மட்டும்தான் இன்னமும் போலீஸ் என்றதும், மக்களுக்கு மனதில் பாதுகாப்பு உணர்வு வருவதற்குப் பதில் பயம் வருகிறது.

அவளின் செயலில் சதீஷிற்கே என்னவோ போலானது.

அதை உணர்ந்து கொண்ட சேரனோ, "ஹே மாமி... எதுக்கு இந்தப் பம்மு பம்முற... இவன் போலீஸ்தான்... பேய் இல்லை...!"

அவன் சொன்னதும், "க்கும்... நான் ஒண்ணும் பம்மலையாக்கும்..." கெத்தாகச் சொல்லி விட்டு,

அந்த சதீஷை உற்று நோக்கியவள், "ஹான்... நேத்து... நேத்து நீங்களும்தானே அங்கே இருந்தேள்!" என யோசித்தவாறே சொன்னவள்...

"எஸ்... ஆமா... ஆமா... நேத்து நீங்களும்தானே கோவில்ல இருந்தேள்...!" உறுதியாகச் சொன்னவள்...

"உங்களுக்கெல்லாம் மனச்சாட்சியே இல்லையா...? இந்த ரவுடி என்னைக் கட்டாயக் கல்யாணம் பண்ணிண்ட போது, நீங்க சும்மா நின்னு வேடிக்கைதானே பார்த்துட்டு இருந்தேள்...! ஹா... அப்போ நீங்களும் இவனோட கூட்டா...? எல்லாம் பிளான் பண்ணித்தான் செஞ்சுருக்கேளா...?

"இப்படி எல்லாருமா சேர்ந்து என்னோட வாழ்க்கையவே அழிச்சுட்டேளே...! உங்களால இப்போ என்னைப் பெத்தவாளும் எங்கேயோ கண் காணா

இடத்துக்குப் போயிட்டா... நான் இனி அவாளை எப்படிக் கண்டு பிடிப்பேன்...? இதுல உங்களை நம்பி நான் என் பெத்தவாளைக் கண்டுபிடிக்கிற பொறுப்பைக் கொடுத்தா அவ்வளவுதான்...! நீங்களே அவாளை ஆளை வெச்சுக் கொன்னுடுவேள்...!" மனதில் உள்ளதையெல்லாம் கொட்டி விட்டாள்.

'ஏற்கெனவே ஒரு குடும்பத்தையே கொன்னவன் தானே நீ...!' என்பதை மனதிற்குள் நினைத்துக் கொண்டு,

"வேண்டாம். நீங்க யாரும் கண்டு பிடிக்க வேண்டாம். நானே என்னவாளைக் கண்டு பிடிச்சுக் கிறேன்!" அவள் அங்கிருந்து வாசல் நோக்கிச் செல்ல, வெளியே இரண்டு குண்டர்கள் அவள் வழியை மறித்துக் கொண்டு நின்றனர்.

பின்னால் திரும்பி நின்று அவனைப் பார்த்த அகல்விழி, "ஓஹோ... இனி இது வேறயா...?" என்றவாறு தலையில் அடித்துக் கொண்டு மீண்டும் சோபாவில் வந்து அமர்ந்து கொண்டாள். தன் நிலையை நினைத்து அவளால் கண்ணீர் மட்டுமே வடிக்க முடிந்தது.

சேரனுக்கு அவளின் நிலை மனதைச் சுட்டது தான்... அதற்காக அவளை விட்டால்... இவன் தினம் தினம் இவளின் நினைவில் உயிரை விட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

தான் உயிருள்ளவரை, அகல்விழியின் அருகா மைக்கு அவனின் உடலும் உள்ளமும் ஏங்கியது.



நாராயணன் மட்டும் அகல்விழிக்கு அவசரக் கல்யாணம் ஏற்பாடு செய்யவில்லை எனில், நிச்சயம் சேரன் இப்படியொரு அதிரடி வேலையைச் செய்திருக்க மாட்டான் என்பது அவனது உயிர் நண்பனும், போலீசு மான சதீஷ் அறிந்துதான் இருந்தான்.

சேரனின் சிறு வயதிலே தாயை இழந்ததால், அவனுக்குத் தாயின் அன்பு சுத்தமாகக் கிடைக்கவில்லை.

கூடப் பிறந்த பிறப்புகள் எதுவுமில்லாமல் போக, யாரிடமும் ஒட்டுதல் இல்லாமலே வளர்ந்து விட்டான்.

அவனின் உலகம் அவனும், அவனின் தந்தையும் மட்டுமே....!

சேரனின் தந்தை முத்துக்குமரனுக்குத் தன் உடல் நிலையைப் பற்றி முன்னரே தெரிந்திருக்கும் போல... அதனாலே சிறு வயதிலிருந்தே தன் மகனைத் தனது தொழிலில் ஈடுபடுத்தி, அதன் முக்கியத்துவத்தை அவ னுக்கு உணர்த்தியிருந்தார்.

அதனாலே அவன் தந்தையின் இழப்புக்குப் பின் தொழிலை முன்னேற்றப் பாதையில் செலுத்த வேண்டு மென்ற ஒரே குறிக்கோளை மனதில் கொண்டு... குதிரைக்குக் கடிவாளம் கட்டியது போல் ஒரே திசையில் சென்று கொண்டிருந்தவனைக் கலைத்தது அகல்விழியின் ஓர விழிப் பார்வை.

தொழிலுக்குப் பின் சேரன் மிகத் தீவிரமாக இருந்தது அகல்விழியின் மேல் கொண்ட காதலில் தான்.

அதனால்தானோ என்னவோ சதீஷ் இவனின் அந்தத் திடீர்ச் செயலுக்கு ஒத்துழைத்தான்.

இப்போது அவனுக்குமே அகல்விழியின் கண்ணீரைக் கண்டு கஷ்டமாகத் தானிருந்தது.

அதனாலே, "இத பாருங்க சிஸ்டர்... நான் எப்படியாவது உங்க பேரண்ட்சைக் கண்டு பிடிச்சிடுவேன்... அவங்க நேத்து ராத்திரிதான் ஹாஸ்பிடலில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகியிருக்காங்க... இப்போ மத்தியானம் ஒரு மணி... இடைப்பட்ட இந்தப் பதினைந்து மணி நேரத்துக்குள்ள அவங்க எங்கேயும் தூரமாகப் போயிருக்க வாய்ப்பில்லை... சீக்கிரமே கண்டு பிடிச்சிடலாம்... என்னைத் தயவு செஞ்சு நம்புங்க!" சதீஷ் உறுதியாகச் சொன்னதும், அழுது கொண்டிருந்தவள் நிமிர்ந்து,

"நிஜமா கண்டு பிடிச்சிருவேளா...?" அவள் சந்தேகமாகக் கேட்கவும்...

"நிச்சயம் கண்டு பிடிச்சிடுவேன்...!" அவன் குரலில் உறுதி தெரியவும்...

"ஹான்... ஓ.கே... எவ்வளவு சீக்கிரம் முடியுதோ அவ்வளவு சீக்கிரம் கண்டு பிடிங்கோ... நேக்கு அப்பாவைப் பார்க்கணும் போலிருக்கு... அம்மா மடில படுத்துக்கணும் போலிருக்கு...! ப்ளீஸ்..." அவள் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்கவும், சதீஷுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தன.

சதீஷே இப்படியென்றால் அவளை உயிருக்கு உயிராக நேசித்தவனின் நிலை....!



சதீஷ் உறுதி கொடுத்து விட்டுச் சேரனிடம் ஒரு தலையசைப்புடன் விடைபெற... அவன் சென்றதும், சோஃபாவிலிருந்து எழுந்த அகல்விழி மௌனமாக மாடியேறினாள்.

சேரனும் சற்று நேரம் வரை அவளையே நினைத்துக் கொண்டிருந்து விட்டு, ஷெண்பாவிடம் அவளைப் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லித் தனது வேலையைப் பார்க்க அலுவலகத்திற்குக் கிளம்பி விட்டான்.

மாலை வீடு வருகையில், வழக்கம் போல் வீடு அமைதிக் கோலம் பூண்டிருந்தது.

நேற்று ஷெண்பா சொன்னதிலிருந்து அவனுக்கும் தனது வீட்டை எப்போதடா கலகலவெனப் பார்ப்போம் என்ற ஏக்கத்துடனே வீட்டிற்குள் நுழைந்தான்.

இதுவரை கனவில் கூட எண்ணிப் பார்க்காத பல விஷயங்கள், அகல்விழியைப் பார்த்ததிலிருந்து அவன் மனதில் படையெடுக்க ஆரம்பித்தன.

வரப்போகும் அந்த இனிமையான நாளின் நினைவுகளுடன் மாடியேறியவன், அங்கே அகல்விழி அவனது அறையின் கப்போர்டில் துணிகளை எல்லாம் கீழே போட்டுப் பரப்பி, அதிலிருந்து ஒன்றை உருவித் தன் மேல் வைத்துப் பார்த்துத் தலையாட்டி, "ஹா... இது ஓ.கே..." என அவளுக்குள் பேசிக் கொண்டு, அந்தத் துணியை அங்கிருந்த ஒரு பிளாஸ்டிக் கூடையில் போட்டுக் கொண்டிருந்தாள்.

இதே போலத் துணியை எடுப்பதும், அது அவளுக்குப் பிடிக்கவில்லை என்றால் தூக்கி மீண்டும் கப்போர்டில் வீசுவதும், வீசிய வேகத்தில் அது மீண்டும் அவள் காலுக்கடியில் விழுவதைத் தலையில் தட்டிக் கொண்டு குனிந்து எடுப்பதுமாக... அவள் செய்த செயல்களைக் கதவின் ஓரத்தில் நின்று ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் சேரன்.

ஒரு வழியாக அவள் அத்துணிகளை எல்லாம் அந்தப் பிளாஸ்டிக் கூடையில் நிரப்பி, அதைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு நிமிரவும், அங்கே அய்யனார் சிலை போல் நின்று கொண்டிருந்த சேரனைப் பார்த்துத் தடுமாறி, நிரப்பிய கூடையைத் தொப்பெனக் கீழே அவள் கால் மீதே போட்டுக் கொண்டாள்.

“ஹா... அம்மா...!” என ஒற்றைக் காலில் அவள் பரத நாட்டியம் ஆடிக் கொண்டிருக்கவும், அதற்குள் அவளை நெருங்கியவன்,

“ஹே... பார்த்து... பார்த்து... என்னடி உனக்கு அப்படி அவசரம்...?” சேரன் அவனது வழக்கமான வசைமாரியுடனே அவளை ஒரு கையால் பிடித்துக் கொண்டான்.

அவன் திட்டியதில் கோபம் கொண்ட அகல்விழி, “க்கும்... விடுங்கோ...!” என்றவள், ஒரு காலை நொண்டி நொண்டி நகர்ந்து மீண்டும் அந்தக் கூடையை எடுக்க, அவள் கையைப் பிடித்து நிறுத்தி,



“இப்போ இதையெல்லாம் மூட்டை கட்டிக்கிட்டு எங்க மாமி போற...?”

“அது எதுக்கு உங்களுக்கு...? கவலைப்படாதேள்...! எப்படியும் நான் இங்கிருந்து போக மாட்டேன்... அதான் போக முடியாதபடி வெளியே எனக்குக் காவலுக்கு ஆள் நிறுத்திண்டு தானே போயிருக்கேள்...”

அவனுக்குப் பதிலைக் கொடுத்து விட்டு மீண்டும் அக் கூடையை எடுக்க...

“ச்சே... தள்ளுடி சுண்டெலி...! உன்னால உன்னையவே தூக்க முடியாது... இதுல எப்படி இதைத் தூக்குவ... தள்ளு...!” அவன் சொன்னதும், அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

“ஏன்... என்னால என்னைய தூக்க முடியாதா...? என்னை என்ன அவ்வளவு லேசுப்பட்ட ஆளுன்னு நினைச்சுட்டேளா...! அதெல்லாம் நான் தூக்குவேனே...!” வீராப்பாகச் சொன்னவளிடம்...

“ஓஹோ... அப்படியா... எங்க, தூக்கு பார்ப்போம்...!” அவன் மார்புக்குக் குறுக்கே கையைக் கட்டிக் கொண்டு அவளைப் பார்த்து நிற்க, அப்போதுதான் அவன் சொன்னதை முழுதாக உள் வாங்கினாள்.

அது புரிந்ததும், “ஹி ஹி... என்னை அசடாக்கிட்டேளா... ச்சே... போங்கோ...”

குழந்தையின் குரலில் சொன்னவள் முகத்தில் டன் டன்னாக அசடு வழிந்தது.

அவளின் அசடு முகத்தைக் கண்டு மனமார ரசித்தவனுக்கு, வெட்கத்தால் சிவந்த அவள் கன்னத்தில் ஒரு முத்தம் வைக்கத் தோன்றியது.

ஆனால், அதைச் செய்தால் இப்போதுள்ள நிலைமை மிக மோசமாகி விடும் என்று உணர்ந்தவன், "ஆமா.... இப்போ இதையெல்லாம் எங்க எடுத்துட்டுப் போகணும்...?" அவன் அதைத் தூக்கப் போக...

"பக்கத்து ரூம்..." என்றதும்,

அவன் நின்று அவள் புறம் திரும்பி, "பக்கத்து ரூமுக்கு எதுக்கு...? இதுதானே உன்னோட ரூம்....!" என்க,

"ம்ஹும்... இது உங்க ரூம்..."

"என் ரூமில்ல... நம்ம ரூம்...!" அவன் அழுத்தமாகச் சொல்லவும்...

"அச்சோ...! இதென்ன உங்களோட ஒரே தலை வேதனையாப் போயிடுத்து... இதப் பாருங்கோ... நான் இந்த வீட்டுல இருக்கணும்னா நான் பக்கத்து ரூம்ல தனியாத்தான் இருப்பேன்... இதுக்கு மேலேயும் நீங்க பிடிவாதம் பிடிச்சேள்... அப்புறம் பாருங்கோ... இந்த மாடில இருந்து குதிச்சுத் தற்கொலை பண்ணிப்பேன்...!"

அவள் முகத்தில் அத்தனை தீவிரத்துடன் சொன்னதும், அவள் முகத்தையே சற்று நேரம் உற்றுப் பார்த்தவன் பின் கீழே இருந்த கூடையைத் தூக்கிக் கொண்டு பக்கத்தறையில் வைத்து விட்டு, அவள் முகத்தைக் கூடப் பார்க்காமல் வெளியேறி விட்டான்.



## 6

அவள் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட சேரனின் உள்ளம், சுடு நீரைத் தொட்டதைப் போல் ரணமாக வலித்தது.

அவளையே உயிராக நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் சேரனுக்குத் தன்னால் அவள் உயிரை விட்டு விடுவேன் என்றால், அந்த வார்த்தைகள் அவனுக்கு எத்தனை பெரிய வலியைக் கொடுத்திருக்கும்?

ஆனாலும் இதனால் அவளிடமிருந்து அவன் விலகியிருக்க நினைக்கவில்லை. அது அவனால் முடியாத ஒன்றும் கூட...!

அவனுக்கு அவள் குழந்தையல்லவா...!

எப்போது அவளின் பேச்சைக் கேட்டானோ... அப்போது அவள், அவனுக்குக் குழந்தை என்ற ஸ்தானத்தை எட்டியிருந்தாள்.

என்று அவளை அவன் முதன் முதலில் பார்த்தானோ... அன்றிலிருந்து அகல்விழி காதலி என்ற ஸ்தானத்தில் முதல் அடியை வைத்திருந்தாள்.

இப்போது அவள் கழுத்தில் தாலியைக் கட்டி விட்டாலும், அவளை மனைவி என்ற இடத்தில் வைப்பதை விட, இப்போதும் அவனுக்கு அவள் குழந்தையாகவே தெரிந்தாள்.

அதற்குச் சான்றாக அவள் சிதறி விட்டுச் சென்ற உடைகள் அவன் கண் முன்னிருந்து சிரிக்க, கீழே

குனிந்து அதில் ஒன்றை எடுத்துத் தனது நெஞ்சில் போட்டவாறு கட்டிலில் விழுந்தான்.

அவளைச் சந்தித்த அந்த முதல் நாளும் அவன் கண் முன்னே படமானது.

அன்று ஒரு மழை நாள்...

இளஞ்சேரன் அவனது நிதி நிறுவனத்தில் ஒரு முக்கியத் திட்டத்தை நிறைவேற்றத் தமிழ் நாடெங்கிலும் இருக்கும் அவனது அனைத்து நிதி நிறுவனத்தின் கிளை மேலாளர்களைச் சந்திக்க ஒரு கூட்டத்தைக் கிண்டியில் உள்ள ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தான்.

மழை சின்னச் சின்னத் தூறலாக விழுந்து கொண்டிருக்க, அதைச் சற்றும் ரசிக்க மனமில்லாமல், காதில் மாட்டியிருந்த ப்ளூடூத் ஹெட்போன் வழியாக யாரிடமோ பேசியவாறு வந்து கொண்டிருந்த சேரனின் கார் சக்கரம், ஒரு திருப்பத்தில் பெரிய சத்தத்தோடு நின்றது.

என்னவென்று கீழிறங்கி வந்து பார்த்தவனுக்கு, வலது புறச் சக்கரம் பஞ்சராகியிருப்பதைக் கண்டதும் அவனுக்குக் கோபம், எரிச்சல் என எல்லா உணர்வுகளும் ஒரு நொடியில் வந்து போனது.

“ஷிட்....!” சக்கரத்தைக் காலால் உதைத்தவனுக்கு, மனதில், “ச்சே... மீட்டிங்குக்கு நேரமாச்சே...!” என்ற டென்ஷனே அதிகமிருந்தாலும், உடனே அவனது பி.ஏ. ஜீவாவிற்கு அழைத்து விவரம் கூறியவன், தான் இன்னும்



ஒரு அரை மணி நேரத்தில் வந்து விடுவதாக அறிவித்து விட்டு, மீண்டும் அவனது வீட்டு டிரைவர் வேலுவிற்கு அழைத்தான்.

வேலு போனை எடுத்த நொடி, இவன் பேசும் முன் முந்திக் கொண்டு, “ஐயா... சொல்லுங்கய்யா...” என்ற பவ்யத்தோடு பதில் கொடுத்தவனுக்கு,

“இங்க நான் கிண்டில... செல்லம்மாள் காலேஜ் பக்கத்துல இருக்கேன்... என்னோட கார் டயர் பஞ்சராகிடுச்சு...” அவன் முடிக்கும் முன்னே...

“ஐயா... ஒரு அஞ்சே நிமிஷம்... நீங்க கார்ல உட்காருங்கய்யா... நான் உடனே இன்னொரு காரை எடுத்துக்கிட்டு ஓடியாறேன்...!” என விசுவாசமாக உரைத்த வேலுவிடம்...

“நீலாங்கரைல இருந்து கிண்டிக்கு அஞ்சு நிமிஷத்துல வரதுக்கு உங்கப்பன் என்ன ஃப்ளைட் வாங்கி விட்டிருக்கானா...? சும்மா இந்த லூஸ் டாக் விடாம, நான் சொல்றதைச் செய்... இங்க இருந்து ஹோட்டல் பக்கம் தான்.. நான் ஏதாவது ஆட்டோல போய்க்கிறேன்... நீ பஸ்ல வந்து காருக்கு ஸ்டெப்னி மாத்தி காரை ஹோட்டல்ல விட்டுடு... ஸ்பேர் கீ ஷெண்பாகிட்ட இருக்கும்... வாங்கிக்கோ...” எனவும்...

“சரிங்கய்யா... தோ வந்துறேனுங்க...!” என்ற வேலுவிற்குப் பதிலாக ஒரு, “ம்ம்...”மைக் கொடுத்து விட்டு, அங்கே ஏதேனும் ஆட்டோ வருகிறதா எனப் பார்த்தான்.

அது மதிய வேளை. அதுவும் சின்னச் சின்னத் தூறல் மெல்ல மெல்லப் பெரிய மழையாக வரத் துவங்க, அதுவும் கல்லூரி வளாகம் இருக்கும் இடமாக இருக்கவே, போக்குவரத்து அதிகம் காணப்படவில்லை.

வந்த ஒன்றிரண்டு ஆட்டோவும் உள்ளே ஆட்களுடன் இருக்கவே, அவன் கையசைப்புக்கு நிற்காமல் போனது.

அவனருகில் மழைக்கு ஒதுங்கியிருந்த அந்த குல்பி ஐஸ் வண்டிக்காரன், "இன்னா சார்... வண்டி பஞ்சராயினுச்சா... ஆட்டோக்கு வெயிட் பண்ணிக் கினிக்கீறியா... இப்போ உச்சி வேள சார்... வண்டிக எல்லாம் சோத்துக்குப் போயிருக்கும்... அதோ கொஞ்ச தூரத்துல மெயின் ரோடு தெரிது பாரு... அங்க போனியாக்கா ஆட்டோ, பஸ் எல்லாம் கெடைக்கும்...!" குல்பிக்காரன் அவன் அவசரம் புரிந்து சொல்ல...

நிலைமையைச் சலித்தவாறு, அவன் காட்டிய திசையில் பார்க்க, தூரத்தில் பஸ் நிறுத்தம் இருப்பது தெரிந்தது.

சரி... பஸ்ஸிலாவது போகலாமென நினைத்தவன், கீழே குனிந்து காருக்குள் இருந்த அவனது லேப்டாப் பேக்கையும், கைப்பேசியையும் எடுத்து நிமிர்ந்த போது, அவன் காதில் ஒலித்தது அக்குரல்.

"அண்ணா...! நேக்கு மலாய் குல்பி...! ஹே சுந்தரி! நோக்கு என்னடி... சேமியா குல்பியா...?" எனவும், அந்தச் சுந்தரி என்பவள்,



"ச்சே... ச்சே... எனக்கு ஒண்ணும் வேண்டாம்... இந்த மழையில குல்பியா... அய்யே...!" அந்தச் சுந்தரி முகத்தைச் சுழிக்க...

மீண்டும் அந்தக் குரலுக்குச் சொந்தக்காரி, "ஹே... வேண்டாம்னா வேண்டாம்னு சொல்லுடி... அதுக்கு ஏன் நோக்கு முகம் இப்படிப் போறது... போடி... அண்ணா... நேக்கு ஒண்ணில்ல... ரெண்டு கொடுங்கோ... இவளுக்கு எதுவும் வேண்டாம்... இவளுக்கு என் வாயைப் பார்த்து வயிறு வலிக்கட்டும்...!" என்றவளை நிமிர்ந்து பார்க்க முற்பட்டான் சேரன்.

அவனை அந்தக் குரல் ஏதோவொரு விதத்தில் வசீகரித்தது... கீச்சு கீச்சு என்றில்லாமல், குழந்தையின் சாயலைத் தாங்கியிருந்த அக்குரலுக்குச் சொந்தக்காரியின் முகத்தைப் பார்க்க அவனது கண்கள் பரபரத்தன.

அவனின் நேரம், அந்த இரு பெண்களும் இவனுக்கு முதுகு காட்டி நின்று, இருவரும் குடையைக் கொண்டு அவர்களின் முகத்தை மறைத்திருந்தனர்.

பிங்க் நிறக் குடை வைத்திருந்தவள் கை நீட்டிப் பணத்தைக் கொடுக்க, பணத்தைப் பெற்றுக் கொண்ட அந்த வண்டிக்காரன், அவளுக்கு இரண்டு குல்பியைக் கொடுக்க, அவளோ ஒரு கையால் குடையைப் பிடிக்கவும் முடியாமல் குல்பியை இரண்டு கையால் வாங்க முற்பட, அவள் பக்கத்தில் இருந்தவள்,

"ஐயோ... குடையை என் கிட்டக் கொடு...!" என்ற சுந்தரி, அவளின் குடையைப் பிடுங்கி மடித்தாள்.

அவள் மடித்த வேகத்தில் நீர்த் திவலைகள் பறந்து அந்த குல்பி பெண்ணின் முகத்தில் பட, மழைச் சாரலுக்கு நடுவில் முகத்தில் தெறித்த நீரைச் சிலிர்ப்போடு எதிர் கொண்டாள் அவனின் தேவதை.

உண்மையாகவே அவனுக்கு அவள் தேவதை யாகத்தான் தெரிந்தாள்.

குறுகிய நெற்றியின் முன்னே வழிந்த துண்டு முடிகள், நீர் பட்டு அவள் முகத்தோடு ஒட்டியிருக்க, குறும்பு கூத்தாடிய அக்கருவிழிகள் அவளின் நீண்ட முகத்திற்குச் சிறிதாகத் தெரிந்தன.

அவளின் மூக்கு நுனியில் அமர்ந்திருந்த நீர்த் துளிகள், அவள் அணிந்திருந்த ஒற்றைக் கல் மூக்குத்தி யுடன் போட்டி போட்டுக் கொண்டிருக்க, அந்த ஊதா நிற சில்க் காட்டன் சுடிதார், அவளின் நிறத்தை மேலும் எடுப்பாகக் காட்டியது.

பக்கத்தில் இருந்த சுந்தரிப் பெண்ணைப் பார்க்கும் போது, இருபது இருபத்தோரு வயதிருக்கும் எனக் கணிக்க முடிந்த சேரனின் உள் மனதால், ஏனோ குல்பி பெண்ணை அந்த வயதிற்குக் கணிக்க முடியவில்லை.

காரணம், அவள் பார்ப்பதற்கு ஏதோ ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் பள்ளி மாணவியைப் போல், மிகவும் சிறு பெண்ணாகத் தெரிந்தாள்.

இதற்கு முன்னர் பல பெண்களைப் பார்த்திருந் தாலும், இதுவரை சேரனை இந்த அளவிற்கு ரசிக்க வைத்தது இந்தக் குல்பி பெண்தான்...!



ஆனால், அவளோ இங்கே தன்னை ஒருவன் வைத்த கண் வாங்காமல் ரசித்துக் கொண்டிருப்பதை அறியாமல், அந்தச் சுந்தரியுடன் நடை போட்டுக் கொண் டிருந்தாள்.

சேரனின் கால்களும் அவனை அறியாமலே அவர்களின் பின்னால் தொடர்ந்தன.

மழைச் சாரலுக்கு நடுவில் அந்தக் குல்பி பெண், தனது இரு கைகளிலும் அந்த நீண்ட குல்பியை வைத்து மாறி மாறிச் சப்பிக் கொண்டு வருவது, பின்னால் வந்து கொண்டிருந்த சேரனுக்குத் தெரிந்தது.

அவள் சப்பிச் சாப்பிடும் அழகை அவள் முகத்தில் காண வேண்டுமென்ற உந்துதல் உண்டாக, அப்போது தான் யாரோ தலையில் நங்கெனக் குட்டியது போல் அவனுக்கு உறைத்தது.

'ச்சே... இதென்ன டீனேஜ் பையன் மாதிரி... ஷிட்...' அவன் தலையைக் குலுக்கிக் கொண்டவன், அவர்களைத் தொடர்வதை ஒரு நிமிடம் நிறுத்தினான்.

அந்தக் குல்பி பெண், "ஹே சுந்தரி... நன்னா யிருக்குடி... இந்தா... இந்த ஒண்ணை நீ வச்சுக்கோ...!" அவள் நீட்டியதைத் தலையாட்டி மறுத்த சுந்தரி,

"எனக்கு வேண்டாம், அகல்... நீ சாப்பிடு... ஹய்யோ... கீழே சிந்தாமச் சாப்பிடுடி... இவ்விட நோக்கு, கையெல்லாம்... அய்யே..." சுந்தரி மீண்டும் முகத்தைச் சுழித்திருப்பாள் போல்.

"ஷ்... போடி...! உன்னாண்ட கேட்டேன் பாரு...!" என்றவள், மீண்டும் தன் வேலையைத் துவங்கி விட்டாள்.

தனது உள் மனம் போட்ட அதட்டலில் தயங்கி நின்ற சேரன், இந்தக் குரலைக் கேட்ட பின் அவனால் முடிய வில்லை.

அவனை அறியாமலே மீண்டும் அவனின் கால்கள் அவர்களைப் பின் தொடர ஆரம்பித்தன.

ஒரு வழியாக அவர்களைத் தொடர்ந்தவாறே பேருந்து நிறுத்தம் வந்து நின்றனர்... சேரனும் அவர்கள் அருகில் சற்று இடைவெளி விட்டு நின்றான்.

அந்த நேரத்திற்கெல்லாம் குல்பி பெண் அவளின் கையிலிருந்த குல்பியைச் சாப்பிட்டு முடித்திருக்க, அருகிலிருந்த சுந்தரி, "கையைக் கழுவு, அகல்... கையெல் லாம் பண்ணி வெச்சிருக்க...!" அதட்டல் போட்டவள், தன் தோள் பையிலிருந்து தண்ணீர் பாட்டிலை எடுக்க,

"நீ சரியான ஹா... லூசுக்கு மலையாளத்தில் ப்ராந்துதானே...! ஹா அதுதான்... நீ சரியான ப்ராந்து சுந்தரி... அதான் இங்கேயே மழை கொட்டோ... கொட் டுன்னு கொட்டுதே... இதிலேயே நான் கை அலம்பிப் பேன்..." என்றவள், நிழல் குடையிலிருந்து வடிந்து கொண்டிருந்த தண்ணீரில் அவள் கையை வைத்துத் தண்ணீரைத் தட்ட,

அவள் விளையாடிய விதத்தில் மழை நீர் தெறித்துச் சேரனின் கண்ணில் பட்டது.



திடீரெனப் பட்ட நீரால் சேரன், "ஷ்... ஆ..." எனச் சற்றே உரக்கக் கத்தி விட்டான்.

அந்தச் சத்தத்தில் திரும்பிய இரு பெண்களும் அவன் பக்கம் திரும்ப, கண்ணைத் தேய்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்த குல்பி பெண்,

"அச்சோ.... கண்ணுல பட்டுடுத்தா...? ஐயம் சாரி சார்... தெரியாமப் பட்டுடுத்து...!" என்றவள், அவனை நெருங்கித் தான் அணிந்திருந்த துப்பட்டாவை எடுத்து அவன் கண்ணில் ஒற்றப் போக... அதற்குள் சுதாரித்த சுந்தரி,

"ஹே... ஹே... என்னடி பண்ற...?" அவள் கையைப் பிடித்துத் தடுத்தாள்.

அதற்குள் கண்ணைச் சரி செய்து கொண்டு நிமிர்ந்த சேரன், மிக அருகில் பார்த்த தனது குல்பி பெண்ணைக் கண்ணெடுக்காமல் பார்த்துக் கொண்டி ருந்தான்.

அதை உணர வேண்டியவள் உணராமல், "சார்... ஆர் யூ ஆல் ரைட்... சாரி... தெரியாம..." என்க, அவளுக்குப் பதிலைக் கூடச் சொல்லத் தோன்றாமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான் சேரன்.

சுந்தரிக்கு அவனின் பார்வை மாற்றம் புரிய, "ஹே... லூசு... வா போவோம்...!" என்றவள், கையைப் பிடித்து இழுத்து வந்து, தாங்கள் முதலில் நின்றிருந்த இடத்தை விட்டுச் சற்றுத் தள்ளியே நின்றனர்.

அதற்குள் சுந்தரி அவள் காதில் ஏதோ சொல்ல, குல்பி பெண் அவள் பின்னந் தலையில் அவளே அடித்து முகத்தைச் சுருக்கி, சுந்தரிப் பெண்ணிடம் சாரி சொல்வது சேரனுக்குப் புரிந்தது.

சேரனும் உதட்டில் பூத்த புன்னகையுடன், அவர்கள் முக பாவனையைப் பார்த்துப் புரிந்து கொண்டான்.

அப்போது பார்த்து ஒரு பஸ் வர, சேரன் அது எங்கே போகிறதென்று பார்த்து, அதுதான் போக வேண்டிய பேருந்து என்பதால், அதில் மூவருமே ஏறினர்.

சுந்தரி மீண்டும் குல்பி பெண்ணிடம் காதில் ஏதோ சொல்லிச் சேரனைப் பார்த்து முறைக்க, குல்பியும் அவனைத் திரும்பிப் பார்த்து உதட்டைச் சுழித்துத் தோள் பட்டையில் இடித்துக் கொண்டு பஸ்ஸினுள் ஏறினாள்.

பேருந்தில் ஆண்கள் இருக்கையின் பக்கம் ஒரே ஒரு இடமிருக்க, சேரன் அங்கே அமர்ந்து கொண்டான்.

அவனைத் தொடர்ந்து சென்ற குல்பி பெண்ணின் பையிலிருந்து எதுவோ அவனது காலுக்கடியில் விழவே, அதைக் குனிந்து பார்த்தவன், அது குல்பி பெண்ணின் கல்லூரி அடையாள அட்டையாக இருந்தது.

அதை உடனே கையில் எடுத்தவன், அவளின் புகைப்படத்திற்குக் கீழே என். அகல்விழி, III பி.காம். (சி.எஸ்.) என்றிருக்கவே, மனதிற்குள் 'அகல்விழி...' என உச்சரித்துப் பார்த்த நிமிடமெல்லாம் அவனின் கையிலிருந்து அந்த அட்டை பறிக்கப்பட்டது.



நிமிர்ந்து பார்த்தவன், அங்கே குல்பி பெண் கோபத்தோடு நிற்பதும், பின் மீண்டும் ஒரு தோள் இடிப்புடன் அங்கிருந்து நகர்ந்து முன்னே சென்றதும் தெரிய...

அவர்கள் அந்தப் பஸ்ஸை விட்டு இறங்கும் வரையில் அவனின் பார்வை வேறெங்கும் திரும்பவில்லை.

அவர்கள் இறங்கியதும்தான் அவனுக்கு மற்ற உலகமே புரிந்தது... கூடவே அவர்கள் இறங்கிய இடத்தையும் குறித்துக் கொண்டான்.

அன்று அவளைப் பார்த்து விட்டுச் சென்றவன், அந்த நாள் நடந்த கிளை மேலாளர்களின் மீட்டிங்கில் அவனது 'குறைந்த வட்டியில் நிறைந்த கடன் திட்டம்' பெரும் வரவேற்பைப் பெற, அன்று முதல் அவனுக்கு அவள் லக்கி சார்ம் ஆகிப் போனாள்.

அவளை முதலில் சந்தித்த நாளை மனதில் எண்ணிக் கொண்டிருந்தவனுக்கு, நேற்று அவளின் அருகாமையில் உணர்ந்த அந்த நிம்மதியான உறக்கம் இன்றும் வேண்டுமென மனம் சண்டித்தனம் செய்ய, அவனின் சொல் பேச்சுக் கேளாமலே அவனின் கால்கள் பக்கத்தறையை நோக்கிச் சென்றன.

சென்று விட்டானே ஒழிய, அவனுக்குக் கதவைத் தட்டும் தைரியம் வரவில்லை.

தானே உள்ளே சென்று விடலாம் என லாக்கைத் திறக்க முயற்சிக்க, அது உள்ளே பூட்டப்பட்டிருந்தது.

'ம்ம்... இதில் எல்லாம் நல்ல விவரம்டி மாமி நீ...!' ஒரு பெருமூச்சைப் பூட்டியிருந்த கதவைப் பார்த்து விட்டான்.

வெளியில் எவனாவது அவன் முன்னே எகிறிப் பேசினாலே அவனின் கன்னம் கன்றும் அளவிற்கு அடிக்க முடிந்த அவனால், இங்கே இவளிடம் அப்படி நடந்து கொள்ள முடியவில்லை.

அதையும் மீறி அவன் அவளைக் காயப்படுத்தி யிருக்கிறான் என்றால், அதற்குக் காரணம் ஒன்று மட்டுமே...!

அவனுக்கு அவள் தேவைப்பட்டாள்... எதையாவது செய்து அவளைத் தன்னுடன் இருத்திக் கொள்ள வேண்டுமென்ற ஒரே எண்ணம் மட்டுமே...!

எங்கே தன்னைப் பார்த்தால் மீண்டும் வேதாளம் முருங்கை மரமேறி விடுமோ என்ற பயத்தில், வந்த வழியாகவே தன்னறைக்குச் சென்று படுக்கையில் குப்புற விழுந்து, அவளின் நினைவில் மூழ்கினான்.

காலையில் கண் விழித்தபோது, அவன் காதுகளில் ஒலித்தது அவன் மனையாளின் குரல்...

ஓம் ஸ்ரீ ஹரியே நம
ஓம் ஸ்ரீ கேசவாய நம
ஓம் ஸ்ரீ பத்மநாபாய நம
ஓம் ஸ்ரீ வாமனாய நம
ஓம் ஸ்ரீ வேத கர்ப்பாய நம



ஓம் ஸ்ரீ மதுசூதனாய நம
ஓம் ஸ்ரீ வாம தேவாய நம
ஓம் ஸ்ரீ வரஹாய நம
ஓம் ஸ்ரீ புண்டரிகாட்க்ஷாய நம
ஓம் ஸ்ரீ ஜனார்த்தனாய நம
ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய நம
ஓம் ஸ்ரீ தராய நம

பிறந்ததிலிருந்து இந்த வீட்டில்தான் வசிக்கிறான்... ஆனால், இதுவரையிலும் இப்படி ஒரு விழிப்பை அவன் உணர்ந்ததே யில்லை.

இதற்குப் பின்னரும் அவனால் அவளைப் பார்க்காமல் இருக்க முடியாதென்ற எண்ணத்துடன், எழுந்து அவளின் அறைக்குச் செல்ல, அங்கே கதவு ஒருக்களித்துத் திறந்திருந்தது.

திறந்த கதவு வழியாக எட்டிப் பார்த்தவன், அங்கே ஒரு வெள்ளைத் தாளில் சிவப்பு வண்ணம் கொண்டு கிருஷ்ணரின் "ஓம்" என்ற எழுத்து பெரியதாக எழுதப்பட்டுச் சுவரில் ஒட்டியிருக்க, அந்தப் படத்தை நோக்கிக் கண்ணை மூடி அகல்விழி ஸ்லோகம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவளின் இந்தப் பரிமாணத்தைப் பார்த்த பின்னரும் கூட, அவனின் மனது மீண்டும் மீண்டும் அவளிடம் தலை குப்புற விழவே, அவளையே கண் எடுக்காமல் ரசித்துப் பார்த்தான்.

கடவுளைச் சேவித்து விட்டுத் திரும்பியவள், அங்கே அறை வாயிலில் கைகளைக் கட்டிக் கொண்டு கலைந்த

தலையுடன் நேற்று அணிந்த கசங்கிய ஆடையுடன் நின்றிருந்த சேரனைக் கண்டு முகம் சுழித்து, "அய்யே... இன்னும் நீங்க குளிக்கலையா...?" எனவும்...

அவன் இல்லை என்றவாறு தலையசைத்து, உள்ளே வரக் கால் எடுத்து வைக்க...

அவளோ, "ஹய்யோ... ஸ்டாப்! ஸ்டாப்...! உள்ளே வராதேள்...! அப்படியே அங்கேயே நில்லுங்கோ...! அறைக்குள்ளே வராதேள்...! இப்போதான் இந்த ரூமைப் பெருக்கி மெழுகினேன்...!" அவள் கை காட்டித் தடுத்ததைச் சற்றும் பொருட்படுத்தாமல் அவன் உள்ளே வர...

"ஹய்யோ... பெருமாளே... அபச்சாரம்! அபச்சாரம்! நான் இப்போதான் முதுகொடிய எல்லாத்தையும் க்ளீன் பண்ணினேன்...!" தலையிலடித்துக் கொண்டவள்,

"இப்போ எதுக்கு இங்கே வரேள்...? இது என்னோட அறை... இப்படித்தான் அடுத்தவா அறையில் பெர்மிஷன் இல்லாம வருவேளா...?" கோபம் வந்தது அவளுக்கு.

அவனோ, "நேத்து நீயும்தான் என்னோட ரூமுக்குள்ள பெர்மிஷன் இல்லாம வந்த...! அதுக்கு நான் ஏதாவது சொன்னேனா?" என்றவன், முன்னேறி அவளை நெருங்கியிருந்தான்.

அவன் நெருங்க நெருங்க... எங்கே அவன் தன்னைத் தொட்டு விடுவானோ என்ற பயத்தில், அவள் பின்னால் நகர்ந்து செல்ல, ஒரு கட்டத்தில் அவள் சுவரில் மோதி நிற்க, அவனும் அவளை நெருங்கிச் சுவரில் இரு



கைகளை முட்டுக் கொடுத்து அவளைச் சிறை செய்திருந்தான்.

அதிகாலையில், பனியில் பூத்த அல்லி மலராக மனைவி காட்சியளித்தால், அவனும்தான் என்ன செய்வான், பாவம்...!

அல்லியை, அள்ளி அணைக்கத் தோன்றிய உணர்வைக் கட்டுப்படுத்த முடியாமல் அவளை நெருங்கியவன், அவள் மேலிருந்து அவளுக்கே உரித்தான அந்த வாசனையில் கண் மூடி மயங்கி நிற்க, அவளோ ஏதாவதொரு கேப் கிடைத்தால் அவனிடமிருந்து நழுவி ஓடி விடலாமே என்ற எண்ணத்தில் அந்த கேப்பிற்காக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தவள், சட்டெனக் கீழே குனிய, அதற்குள் அவளை முத்தம் வைக்க நெருங்கியவனின் வயிற்றில் அவள் முகம் பட, அந்த ஸ்பரிசத்தில் கண் விழித்தான்.

அவளின் செய்கையைக் கண்டு புன்னகைத்தவன், "ஹா ஹா... நீ சுண்டெலின்னு அடிக்கடி நிரூபிக்கிற மாமி...!" என்றவனின் முகம் பார்க்க அவளுக்கும் சற்றுக் கூச்சமாகத் தானிருந்தது.

அவன் சொல்வதற்கு ஏற்பத்தானே அவளும் சுண்டெலிபோல் அவனிடமிருந்து ஓடச் சந்து பொந்துகளைத் தேடியிருக்கிறாள்.

"சீ...! நகருங்கோ...!" என்றவளின் சொல் பேச்சு கேட்காமல் அப்படியே நின்றிருந்தவனை, "ப்ளீஸ்...

தள்ளிப் போங்கோ... நேக்குப் பசிக்கிறது...!" எனவும், மனமே யில்லாமல் அவன் விலக...

விட்டது தொல்லை என்று அங்கிருந்து ஓடிப் போனாள்.

அவன் சென்றதும், அந்த அறையைச் சுற்றிப் பார்த்தவன், ஒரே இரவில் அந்த அறை ஒரு பெண்ணின் கைவண்ணத்தில் இப்படி மாறுமா என்று அவன் சற்றும் எதிர் பார்க்கவில்லை.

கூடவே சுவரில் மாட்டப்பட்டிருந்த அந்த "ஓம்" படத்தில் அவளின் பக்தி தெரிய, தன்னறைக்குள் சென்று ஜீவாவிற்கு அழைத்தான்.

அவனும் குளித்துக் கிளம்பிக் கீழே வரவும், அவள் கன்னத்தில் கை வைத்து அமர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தவன், "ஹே மாமி...!" என்று அவளருகில் அமர,

"ப்ச்... இதென்ன எப்ப பாரு உராஞ்சிட்டு... தள்ளிப் போங்கோ...!" அவள் போட்ட அதட்டல் எல்லாம் அவனிடம் வேலைக்கே ஆகவில்லை.

"ஏன்டி... புதுசா கல்யாணமானவன்டி நான்...! உனக்குத்தான் இந்த வயசுக்கு உண்டான எந்த ஃபீலிங்சும் இல்லைன்னா... எனக்கும் இருக்கக் கூடாதா...? எனக்கு உன்னைப் பார்த்தாலே உள்ளுக்குள்ள கெமிக்கல் ரியாக்‌ஷன்ஸ் நடக்குது...!"

அவன் குரலில் காதலைக் கலந்து சொல்ல...



"ஆமா ஆமா... நன்னா நடக்கும்... நடக்காதா பின்னே... என் மனசை நோகடிச்சிட்டு இல்ல என்னை அடைஞ்சிருக்கேளே... உங்களுக்கு எல்லாம் நன்னா நடக்கும்...!" என்றவள், அவ்விடத்தை விட்டு எழ, அவள் கைப் பிடித்துத் தடுத்தவன், அதே வேகத்தில் அவளைத் தன் புறம் இழுக்க, சற்று நொடிகள் முன்னர் அவனின் அருகில் அமர்ந்திருந்தவள், இப்போது அவனின் மடியில் அமர்ந்திருந்திருக்க, அவளின் கழுத்துப் பகுதி அவனின் முகத்திற்கு நேராக இருந்தது.

காலையிலிருந்து அவளின் அழகு அவனைப் படுத்தி எடுக்க, இப்போது இவள் பேசிய வார்த்தைகளும் அவனை உசுப்பேற்றி விட்டிருந்தன.

"அச்சோ...! என்ன பண்றேள்...? விடுங்கோ...! விடுங்கோ என்னை...!" அவள் பேசிய பேச்சுகள் எல்லாம் அவனை ஒன்றுமே செய்யவில்லை.

அவன், அவள் கழுத்தில் முகம் புதைத்து, அவளின் வாசம் பிடிக்க, "ஹய்யோ! விடுங்கோ...! நடு வீட்டில வெச்சுண்டு இப்படித்தான் அசிங்கமா நடந்துப்பேளா?" என்றவள், தன் முழுப் பலம் கொண்டு அவனைத் தள்ளி விட்டு எழுந்து கொள்ள... அவள் சொன்ன வாக்கியத்திலிருந்து தனக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டவன்,

"அப்போ இது நம்ம ரூமா இருந்தா பரவால்லையா...?" அவன் கண்களில் மையலுடன் கேட்க...

"ஹ்ம்... இங்கன்றதால இத்தோட விடுறேன்... இதுவே அறைக்குள்ள இந்த மாதிரி நடந்துக்கிட்டு இருந் தேன்னா உங்க கன்னம் பழுத்திருக்கும்...!" அவள் கோபத்தோடு சொல்ல...

அவள் கோபத்தில் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, "அடங்கப்பா...! ஏண்டெலிக்கு எப்படிச் சுருக் சுருக்குன்னு கோபம் வருது... எட்டி விட்டன்னா சுருண்டு விழுவ... நீயெல்லாம் என்னை அடிக்கப் போறியா...? குல்பி ஐஸ் சைஸ்ல இருந்துட்டு என்னடி பேச்சுப் பேசுற...? இதையெல்லாம் கேட்கணும்னு இருக்கு...!" என்றவனைக் கலைத்தது ஜீவாவின் குரல்.

"ஜீவா... வா, வா... உள்ள வா...!" என்றவன், அவன் பின்னோடு வந்திருந்த சில வேலையாட்களைக் காட்டி,

"சார்... இவங்கதான் நீங்க கேட்ட கார்பெண்டர்ஸ்..." எனவும்...

ஜீவாவிடம், "மேல என் ரூமுக்குப் பக்கத்து ரூம் தான்.. அதைக் காட்டு..." என்றவன் ஷெண்பாவை அழைக்க...

அவன் அழைத்தவுடன், சமைலறையிலிருந்து, "சொல்லுங்க தம்பி..." என்றவாறு வெளியே வந்தவரிடம்,

"ஷெண்பா... இவங்க கிட்ட பூஜையறையைக் காட்டுங்க..." எனவும்,

"இதோ தம்பி... வாப்பா...!" வந்தவரைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றார்.



இதையெல்லாம் பார்த்தவாறு டைனிங் டேபிளில் அமர்ந்திருந்த மனைவியிடம் நெருங்கியவன், "மாமி...! பசிக்குது... எனக்கு டிபன் எடுத்து வை...!" என்க...

"என்னால முடியாது... ஏன் உங்களுக்குக் கையில்லையா...?" என்றவள், அங்கிருந்து எழப் போக...

அவள் கையைப் பிடித்துத் தடுத்தவன், "ப்ளீஸ் மாமி...!" கெஞ்சல் குரலில் அவன் சொன்னதும் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

எப்போதும் இறுக்கமாகவே இருக்கும் தி க்ரேட் இளஞ்சேரன், தன்னிடம் ப்ளீஸ் போட்டதும் அகல்விழிக்கு உள்ளுக்குள் சந்தோஷம் பெருக்கெடுக்க, மௌனமாகவே அவனுக்குத் தட்டெடுத்து வைத்து... ஷெண்பா செய்து வைத்திருந்த கிச்சடியை அவனுக்குப் பரிமாறினாள்.

மனைவி கையால் முதல் முதல் பரிமாறிய உணவின் சுவையை விட, அது பரிமாறப்பட்ட நபரின் மேலிருந்த காதலின் விளைவால் உணவை ஆசையாகக் கையிலெடுத்தான் இளஞ்சேரன்.

அவன் ஒரு வாய் கிச்சடியை வாயில் போட்டு விழுங்கியதும், "என்னவாளைப் பத்தி ஏதாவது தகவல் கிடைச்சதா...?" தயங்கியவாறே கேட்ட அகல்விழியின் குரலில், பெற்றவர்களைப் பற்றிய தவிப்பு மிதமிஞ்சி யிருந்தது.

அவள் கேட்டதும் இரண்டாவதாக, வாய் வரை எடுத்துச் சென்ற உணவை நிறுத்தி, "என்னாவாள்ன்னா யாரு...?" என்றான் சேரன்... அதன் அர்த்தம் தெரிந்தே.

"அப்பா... அம்மா... அப்புறம் ஸ்ரீகுட்டி..." என்றாள் உடனே.

"அப்போ நானு..." நிறுத்தி நிதானமாக அவளின் பார்வையை நேருக்கு நேர் எதிர் கொண்டு கேட்டான் சேரன்.

"நீ... ங்க..." அவன் தனக்கு என்ன வேண்டும்...

கணவனா...! காதலனா...! இல்லை, தன் உணர்வு களைக் கொன்று தன்னை அவன் வசமாக்கிய எதிரியா...? அவளுக்குச் சொல்லத் தெரியவில்லை.

"நீங்க தெரியலை...!" அவனுக்கு விடையைச் சொல்லி விட்டு அங்கிருந்து நகரப் போனாள்.

"அப்போ நான் உனக்கு ஒண்ணுமேயில்லையா...?" அவன் கேட்டதற்கு ஒரு நொடி நின்று,

"அப்படின்னுதான் நினைக்கிறேன்..." என்றவள், அங்கிருந்து சென்றே விட்டாள்.

அதற்குப் பின்னர் ஒரு பருக்கை உணவாவது உள்ளே சென்றிருக்குமா...? தட்டைத் தன்னருகிலிருந்து தள்ளி விட்டவனுக்கு, உள்ளுக்குள் கோபம் கொந் தளித்துக் கொண்டிருந்தது.

'இவளுக்கு நான் என்ன பாவம் செய்தேன் என்று என்னை இப்படி வெறுக்கிறாள்...?' உள்ளம் கேட்ட கேள்விக்கு விடையை அவனின் உள்ளம் கவர்ந்தவளே அறிவாள்.



மேலே சென்ற அகல்விழி, அங்கே அவளது அறைக் கதவில் ஆட்கள் ஏதோ செய்து கொண்டி ருக்கவும், "ஹே ஹே! என்ன செஞ்சுண்டு இருக்கேள்...? இது என்னோட ரூம்...!" என்றாள் கோபமாக.

ஜீவா, "மேம்... சார்தான் இந்தக் கதவிலிருக்கிற தாழ்ப்பாளை எல்லாம் கழட்டச் சொன்னாங்க..." அவன் பொறுமையாகச் சொல்ல...

"என்னது...! உங்க சாருக்கு என்ன கிறுக்குப் பிடிச்சுடுத்தா...? ச்சே... ஹே... நிறுத்துங்கோ! நிறுத் துங்கோ...!" அவள் கத்திய கத்தலில், மேலே வந்த சேரனிடம், "இதெல்லாம் உங்க வேலையா...? இப்போ எதுக்குத் தாழ்ப்பாளை எடுக்கச் சொல்லியிருக்கேள்...?" கோபமாகக் கேட்டவளை அங்கே சுற்றியிருந்த அனை வரும் வேடிக்கை பார்க்க...

"ஜீவா.. வேலை முடிஞ்சுதா...?"

"தோ முடிஞ்சுது சார்...!" ஜீவா சொன்னதும்,

"அப்போ இவங்களைக் கிளம்பச் சொல்லு... நீ ஆபீஸ் போ... நான் வந்துடுவேன்..." என்ற கட்டளை யுடன், தன்னிடம் கேள்வி கேட்டு முறைத்துக் கொண்டி ருந்த மனைவியின் கை பற்றித் தனது அறைக்குள் இழுத்துச் சென்றான்.

"ப்ச்... விடுங்கோ... இப்போ எதுக்கு என்னை இங்க கூட்டிண்டு வந்தேள்...? நான் இனிமேல் உங்க ரூமுக் குள்ள வர மாட்டேன்..."

"ஷ்... ஷு... எதுக்கு சும்மா சும்மா கத்திக்கிட்டு இருக்க அகல்...?"

"ஹா... நீங்க செய்யுறது எல்லாத்துக்கும் நான் ஈஈன்னு பல்லக் காட்டிண்டு சிரிக்கணுமோ...? நன்னாயிருக்கே நீங்க பேசுறது...! இப்போ எதுக்கு ஆளை விட்டுத் தாழ்ப்பாளைக் கழட்டச் சொல்லியிருக்கேள்? ச்சே... உங்களோட நேக்கு ஒரே வேதனையாப் போயிடுத்து. ஏன்தான் அந்தப் பெருமாள் உங்களை என் கண்ணுல காட்டினானோ...?" தலையிலடித்துக் கொண்டு பேசியவளைக் கண்டு, சேரனுக்குக் கோபம் உச்சாணிக் கொம்புக்குச் செல்ல...

"இதுக்குத்தான்டி... இதுக்குத்தான்..." அவள் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த தாலியை எடுத்துக் காட்டிச் சொன்னவன்... அவளின் முகத்தை அருகில் இழுத்துக் கோபத்தில் துடித்துக் கொண்டிருந்த அவளின் இதழைத் தனதாக்கினான்.

அவனின் இந்தத் திடீர் செயலை எதிர்பார்க்கா தவள், அவன் தன்னைக் கையகப்படுத்தியதை உணர்ந்த தும், அவனிடமிருந்து விடுபட அவள் எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியைத் தழுவ, கோபத்தில் அவன் முதுகில் ஓங்கி ஓங்கிக் குத்தினாள்.

இந்தச் சில்வண்டின் குத்தலெல்லாம் அவனைப் பாதிக்கவேயில்லை... அவள் இதழ்களில் இருந்து ஏதோ பழரசம் எடுப்பவன் போல் அவளைத் தன்னுள் அடக்கி னான்.



அவன் வெகு சாவகாசமாக, அவளின் இதழைச் சுவைத்து விட்டு, அவள் முகத்தை மட்டும் தன்னிடமிருந்து பிரிக்க, அங்கே அவள் கண்களில் கண்ணீர் இன்னும் ஒரு நொடியில் விழுந்து விடுவேன் என்ற எச்சரிக்கையை விடுத்தது.

அதில் அவனின் கைகள் சற்றே தளர, அந்த இடைவெளியில் அவனிடமிருந்து விலகியவள், தான் அணிந்திருந்த சுடிதார் துப்பட்டாவின் நுனியை எடுத்துத் தன் இதழ்களை அழுந்த அழுந்தத் துடைத்தாள்.

அப்போதும் அவள் மேல் பட்ட அழுக்கு சுத்தமான தாகத் தெரியவில்லை அவளுக்கு.

பக்கத்திலிருந்த குளியலறைக்குச் சென்று பைப் பைத் திறந்து நீரை அள்ளித் தன் முகத்தில் அடித்துக் கொண்டாள்.

இப்போது கொஞ்சமே கொஞ்சம் சுத்தமானதாக அவளுக்குப் பட்டது போலும்...

ஆனால், கண்ணில் வழிந்த கண்ணீர் மட்டும் நிற்கவே யில்லை.

இதையெல்லாம் கண்ணில் வலியுடன் பார்த்துக் கொண்டிருந்த சேரனுக்கு, இப்படிச் செய்யும் இவளை இப்போது தனதாக்கிக் கொள்ள வேண்டுமென்ற வெறியே உள்ளுக்குள் கிளம்பியது.

முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அவனுக்கு இப்போது தேவை அதுவல்லவே...! தன்னையும், தன் காதலையும் அவளிடம் நிரூபிக்கும் முன்னர், அவளை அடக்கி ஆள்வதில் அவனுக்குத் துளி கூட விருப்பமில்லை.

ஆனால், இவள் பேசும் குத்தல் பேச்சும், நடந்து கொள்ளும் முறையும்தான் அவனை ஒவ்வொரு முறையும் வெறியனாக்குகிறது.

அவள் முகத்தைக் கழுவிக் கொண்டு வெளியே வந்த போது, மூக்குப் புடைக்க, கன்னங்கள் சிவக்க, கண்கள் கொதிக்க நின்றிருந்த அகல்விழியை, இப்போதும் அவனுக்குப் பிடித்துத்தான் இருந்தது.

அந்தப் பிடித்தம் அவனுள் இருந்த கோபத்தை விலக்கி, முகத்தில் கனிவைக் கொண்டு வர, அவளையே பார்த்து நின்றான்.

அவளுக்கோ அழுததில் அவள் மூக்கிலிருந்து தண்ணீர் வர, அதைப் புறங்கையால் துடைக்க, அவள் செய்த விதத்தில் சேரன் விழுந்து விழுந்து சிரித்தான்.

அவன் சிரித்ததில் கோபம் வரவே, “சிரிங்கோ...! நன்னாச் சிரிங்கோ...! நீங்க ஜெயிச்சுட்டேளோல்லியோ... அதான்... உங்களுக்குச் சிரிப்பா வர்றது...” அழுகையினூடே சொன்னவள், அவ்வறையை விட்டுத் தனதறைக்குச் சென்றாள்.

‘உனக்குச் சீக்கிரம் என்னைப் புரிய வைக்கிறேன் மாமி...!’ மனதினுள் அவளுடன் பேசியவன், தன் அலுவலைக் கவனிக்கச் சென்று விட்டான்.



# 7

இதே தினுசில் தான் அடுத்து வந்த நாளும் சென்றது.

ஆனால் முந்தைய நாளை விடச் சற்று மோசமாக...

சேரன் அவ்வறையின் தாழ்ப்பாளை எடுக்கச் சொன்னதின் அர்த்தம், அன்றைய இரவுதான் அவளுக்குப் புரிந்தது.

காலையில் அவனிடம் சண்டையிட்டு வந்தவள், நேராகத் தனது அறைக்கு வந்து முடங்கிக் கொண்டாள்.

ஷெண்பா உணவுண்ண அழைத்தபோதும் கூட அவள் வெளியே வரவில்லை.

அலுவலகத்திலிருந்து வந்தவனிடம், ஷெண்பா முறையிட, அவளுக்கும் தனக்குமான உணவை மேலே எடுத்து வரச் சொல்லி விட்டு, அவன் தனதறைக்குச் சென்று உடை மாற்றி வருவதற்குள், ஷெண்பா அனைத்தையும் தயாராக வைத்திருந்தார்.

உணவுத் தட்டை எடுத்துக் கொண்டு, அகல்விழி இருந்த அறைக்குள் நுழைந்தவனை முறைத்தவள், முகத்தைத் திருப்பிக் கொண்டு வேறு பக்கம் அமர, அவனோ வெகு சாவகாசமாக அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து, உள்ளிருந்த டி.வி.யை உயிர்ப்பித்துப் பார்க்க ஆரம்பித்து விட்டான்.

அவன் போட்ட ஆங்கில சேனல்கள் அனைத்தும், அகல்விழியைக் கோபப்படுத்த, “ஐயோ... இதைப் போய்

உங்க ரூம்ல பாக்கப்பிடாதா... இங்க ஏன் கத்த வெச்சு என் பிராணனை வாங்குறேள்...?" அவள் காதை மூடிக் கொண்டு கத்தல் போட, அவனோ டி.வி.யின் ஓசையை மேலும் கூட்டினான்.

கோபம் கொண்ட அகல்விழி, அமர்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து டி.வி.யை அணைத்து விட்டு, "இப்போ எதுக்கு இங்க வந்தேள்? வெளிய போங்கோ! நான்தான் சொல்லியிருக்கேனில்ல... இனிமேல் நான் உங்க ரூமுக்கு வர மாட்டேன்... அதே போல நீங்களும் என் ரூமுக்கு வரப்பிடாதாக்கும்... சொல்லிட்டேன்..."

அவள் சொன்னதை எல்லாம் காதிலே வாங்காமல், செல்போனை உயிர்ப்பித்துப் பாடலை ஒலிக்க விட, "பெருமாளே....!" எனத் தலையில் கை வைத்து அமர்ந்து கொண்டாள்.

அவனும் பாடலை மிகவும் ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"இப்போ உங்களுக்கு என்ன வேணும்...?" சலிப்புடன் அவள் கேட்டதற்குச் சாப்பாட்டுத் தட்டைக் காட்ட, "கொண்டாங்கோ... கொட்டிக்கிறேன்..." என்றவள்,

ஷெண்பா கொடுத்த உணவை அள்ளி அள்ளி வாயில் போட்டுக் கொள்ள, அவனும் அவளுடனே உணவை முடித்து எழுந்தான்.

அவன் வெளியே சென்றதும், மூச்சை வெளியே நன்றாக இழுத்து விட்டவள்... மனதில், 'போய்த்



தொலைங்கோ....' முனகி விட்டு மீண்டும் படுக்கையில் ஓர் ஓரத்தில் கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்து கொண்டாள்.

சற்று நேரம் பொறுத்துக் கையில் தலையணை, போர்வையுடன் உள்ளே நுழைந்தவனைக் கண்டு, 'அட ராமா... இது விடாது கறுப்பு போலவே...' மனதில் சலித்தவளின் குரலைக் கேட்டுக் கொண்ட சேரன்,

"ஹா ஹா... பறந்தாலும் விட மாட்டேன்... பிறர் கையில் தர மாட்டேன்... அன்று நான் உன்னிடம் கைதியானேன்... இன்று நான் உன்னையே கைது செய்வேன்..." என்ற பாடலை முணுமுணுத்தவாறு அங்கிருந்த பெரிய சோபாவில் தலையணையைப் போட்டுக் கண்ணை மூடிக் கொண்டான்.

'ஆமா... இந்த சிட்சுவேஷன் சாங்குக்கு எல்லாம் ஒரு குறைச்சலும் இல்லை...' மனதிலே பொருமி விட்டு, அவன் செய்கைக்கு அவள் கோபமாகப் பேசத் துவங்கு முன்னர்,

"இதோ பாரு... நீ அமைதியா இருந்தா நான் இங்கேயே சோஃபாலயே இருப்பேன். ஏதாவது பேசிக் கூச்சல் போட்ட, அடுத்த நிமிஷம் அங்க... அந்த பெட்ல உன்னைக் கட்டிப் பிடிச்சிட்டுத் தான் தூங்குவேன்... எப்படி வசதி...?" அவன் நிதானமாகக் கேட்டுப் புருவத்தை உயர்த்தவும்,

அகல்விழி காலை நீட்டிப் போர்வையைத் தலை வரை மூடிப் படுத்துக் கொண்டாள்.

அவளின் செய்கையைக் கண்டு, “என் கிட்டே யேவா...?” எனச் சிரித்தவன்,

‘ஹ்ம்... எனக்கும் உனக்குப் ப்ரைவசி கொடுக் கணும்னுதான் ஆசை மாமி... பட் வாட் டு டூ.... நேத்து ஒரு நாள் அனுபவிச்ச உன்னோட ஸ்பரிசத்தைத் தினமும் அனுபவிக்கணும்னு மனசு கேக்குது... அதைக் கேட்டா என்ன நீ மொத்தி எடுத்துடுவ... அட்லீஸ்ட் உன்னைப் பாத்துட்டாவது இருக்கலாம்னுதான் இந்த ஐடியா... சாரி ஃபார் ட்ரப்ளிங் யூ மை டியர்... பட் ஐ நீட் யுவர் ஸ்மெல்...’ மனதில் நினைத்துக் கொண்டவன், அவளைப் பார்த்தவாறே அன்றைய இரவைக் கழித்தான்.

இதே போலத்தான் அடுத்து வந்த நாட்களும் நகர்ந்தன.

அகல்விழி முதலிலாவது சற்று சகஜமாக இருந்தாள். ஆனால், அன்று சேரனுடன் சண்டை யிட்டதிலிருந்து அவனிடம் சண்டை போடக் கூட வாயைத் திறக்கவில்லை.

சேரனுக்கு அவளின் மௌனம்தான் பெரும் வேதனையாக இருந்தது.

தன்னைத் திட்டவாவது அவள் ஏதாவது வாயைத் திறப்பாள் எனத் தானாக வலியச் சென்று அவளிடம் வம்பு வளர்த்தாலும், அவள் மௌனத்தையே பதிலாகக் கொடுத்தாள். ஒரு கட்டத்திற்கு மேல் அவள் முகம் இறுக்கம் தெரியவே, அவனும் அவளைத் தொந்தரவு செய்யவில்லை.



அவனுக்கு அவள் தேவைதான்... ஆனால், அதற்கு முன்னர் அவளின் காதல் அவனுக்குத் தேவைப்பட்டது... கல்யாணம்தான் அவசர கதியில் நடந்தேறியது... காத லாவது ஒரு புரிதலோட துவங்கட்டுமே என அவளை யோசிக்க விட்டு விட்டான்.

அன்று காலையிலும் அவளின் அறையிலே உணவை முடித்துக் கொண்டவன், அவளிடமிருந்து பதில் வராது எனத் தெரிந்தே விடை பெற்றுச் சென்றான்.

ஏனோ இன்று அவள் அறையை விட்டு வெளி யேறும் முன் அவனை எதுவோ தடுத்தது.

வெளியே செல்லத் திரும்பிய கால்களைப் பின் நகர்த்தி, அகல்விழியை நோக்கி நடை போட்டவன், அவளின் எதிரில் நின்றான்.

தலை குனிந்து படுக்கையில் அமர்ந்திருந்தவளின் அருகில் அமர்ந்தவன், “அகல்... ஐ நீட் டூ ஹக் யூ...” என்றவன், அவளை இறுக்கமாக அணைத்துக் கொள் ளவும், அவனிடமிருந்து விடுபட அவள் துள்ள, சேரனின் கைகள் இறுகி, “ப்ளீஸ் மாமி...” அவன் குரலில் இருந்த மென்மையோ, இல்லை கெஞ்சலோ அகல் விழியைத் தளர்த்தியது.

அவளிடமிருந்து எந்த எதிர்ப்பும் இல்லை என்றதும், மேலும் சில நொடிகள் தன் அணைப்பை நீட்டித்து நிமிர்ந்தவன், அவள் நெற்றியில் இதழொற்றி, “நான் வரேன்டா...” என அவளின் கண்களைப் பார்த்துச் சொல்லவும், அந்தப் பார்வையின் தாக்கத்தில் மயங்கிய

அகல்விழியின் தலை தானாக ஆடி, அவனுக்கு விடை கொடுத்தது.

அவன் சென்ற பின்னர் கூட, பின்காலை வரை அந்த அறையையே அளந்து கொண்டிருந்தவளின் நினைவைக் கலைத்தது ஷெண்பாவின் குரல்.

"பாப்பா..." என அழைத்தவருக்குப் பதில் போல் அவரின் புறம் திரும்பி நின்றவளிடம், "இந்தா பாப்பா...! உனக்கு ஏதோ கடுதாசி வந்திருக்கு..." மூச்சு வாங்க மாடி ஏறி வந்தவர், அதை அவளிடம் கொடுத்து விட்டுச் செல்ல, அதைக் கையில் வாங்கிய அகல்விழிக்குப் புருவங்கள் முடிச்சிட்டன.

'தனக்கு யார் கடிதம் அனுப்பியிருப்பார்கள்...? அதுவும் இந்த வீட்டின் முகவரிக்கு...' என்ற யோசனை யுடனே அக்கடிதத்தைப் பார்த்தவளுக்கு, முடிச்சிட்ட புருவம் ஆச்சரியத்தில் விரிந்தது.

அந்தக் கடிதத்தில் பதிந்திருந்த கையெழுத்து அவளுக்கு மிகவும் பரிச்சயமானதாக இருக்க, அதை ஆர்வத்துடனே பிரித்தாள்.

"அச்சும்மா..." என அதில் எழுதியிருந்த முதல் வாக்கியத்தைப் பார்த்ததும், அகல்விழியின் கண்களி லிருந்து கண்ணீர் சரமாகப் பொழியத் துவங்கியது.

"அப்பா..." என்றவாறு அக்கடிதத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டவள், தன் தந்தையையே கட்டி யணைத்துக் கதறி அழுவது போல் உருவகம் செய்து கொண்டு அழுது தீர்த்தாள்.



பிறந்தது முதல் ஒரு நாள் ஒரு இரவு கூடப் பிரிந்திடாத தன் குடும்பத்தினரை முழுதாக ஒரு வாரம் பிரிந்திருக்கிறாள், அதுவும் அவர்கள் எங்கே, எப்படி இருக்கிறார்கள் என எந்த விபரமும் அறியாமல்...

தன்னால் தான் தனது தந்தைக்கு உடல்நிலை குன்றிப் போனது என எதிர் வீட்டுச் சுபா மாமியின் வாயால் கேட்ட பின், அவளுள் இருந்த குற்றவுணர்வு இத்தனை நாட்கள் தனியாக இருந்து யோசித்ததில், அவளின் உள்ளத்தைக் குத்திக் குத்தியே நெஞ்சைப் புண்ணாக்கி இருந்தது.

'எதனால் தங்களுக்கு இப்படி ஒரு நிலை வர வேண்டும்...? தான் ஏன் இந்தச் சேரனைச் சந்திக்க வேண்டும்? எதற்காகத் தன் வாழ்க்கை இப்படித் தன்னை மீறியே தலை கீழாக வேண்டும்...?' என அவளே அவளின் நிலையை ஆராய்ந்து பார்த்ததில், அவளுக்குச் சரியான விடை கிடைக்கவில்லை.

'இனிமேல் தான் என்ன செய்ய வேண்டும்...?' என உள்ளம் கேட்ட கேள்விக்கு விடையை யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் அவள் கையில் கிட்டியது இக் கடிதம்.

உடனே கண்ணைத் துடைத்துக் கொண்டு, அக் கடிதத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்.

அதை அவள் தந்தை சொல்ல, அவளின் தங்கை எழுதியிருக்க வேண்டும்.

ஏனெனில் அக்கடிதத்தை எழுதியது அவளின் தங்கை ஸ்ரீவள்ளி.

பார்வையை மங்கலாக்கிய கண்ணீரைத் துடைத்து விட்டு, அதைப் படிக்க ஆரம்பித்தாள்.

"அச்சும்மா...

'நன்னாயிருக்கியாடா குழந்தை...?

'நீ நன்னா இருக்கணும்னு தான்டா தினமும் அந்தப் பெருமாளை வேண்டிண்டு இருந்தேன்... ஆனா அந்தக் கடவுளுக்கு என்னுடைய வேண்டுதல் எட்டலையோ...! இல்லை, நோக்கு இதுதான் தலை எழுத்துன்னு அமைச் சுன்னுட்டானோ என்னவோ...

'நீ அன்னிக்கிக் கதறி அழுதப்போ அப்பாவால உன்னைக் காப்பாத்த முடியலைடா அச்சும்மா...! இப்போவும் உன்னைக் காப்பாத்த முடியாம கையா லாகாத்தனமா அப்பா ஓடி வந்துட்டேன்... அப்பா மேல நோக்குக் கோபம் இருக்கும்டா... ஆனா என்ன செய்ய... நோக்குப் பின்னாடி இன்னொருத்தி இருக்காளோன்னோ... அவளையாவது எந்த அவப் பெயரும் இல்லாம இன் னொருத்தன் கையில பிடிச்சுக் கொடுக்கணுமோன்னோ...!

'அதுக்குத்தான்டா நான் இன்னமும் உயிரைக் கையில பிடிச்சுண்டு வாழ்ந்துண்டு இருக்கேன்...

'இனி இது தான்டா உன்னோட வாழ்க்கை... முடிஞ்ச மட்டும் நீ அவனோட சேர்ந்து வாழப் பாரு... இல்லை, எது உன் இஷ்டமோ அதைச் செய்... ஆனா எங்களைத்



தேட வேண்டாம்..." என்று அக் கடிதம் இருக்க, படிக்க ஆரம்பிக்கும்போது எத்தனை எதிர்பார்ப்புடன் ஆரம்பித் தாளோ, அந்த எதிர்பார்ப்புகள் எதுவும் முடிவில் இல்லை.

'அப்பா என்ன சொல்ல வருகிறார்...?'

'இனிமேல் அவருக்குத் தான் வேண்டாமா...? அதனால்தான் என்னை இங்கே இவனிடம் விட்டு விட்டு அவர்கள் அனைவரும் சென்று விட்டார்களா...?

'அப்போ நான் உங்களுக்கு வேண்டாமாப்பா...? நான் என்ன தவறு செஞ்சேன்னு என்னை இப்படி அனாதையா விட்டுட்டுப் போயிட்டேள்? நேக்கு எதுக்கு இவ்ளோ பெரிய தண்டனை அப்பா...? ஐயோ...! நீங்க யாருமில்லாம நான் எப்படிப்பா... என்னால இருக்க முடியாதேப்பா... ப்ளீஸ்ப்பா... என்னையும் உங்களோட சேர்த்துக்கோங்கோ...! எனக்கு நீங்க வேணும்...! ப்ளீஸ்ப்பா... ப்ளீஸ்ம்மா... ஐயோ! ஸ்ரீ... நோக்கு கூட நான் வேண்டாமாடி...?'

தன் கண் முன்னே இல்லாத பெற்றோரிடம் கத்திக் கதறி அழுது கொண்டிருந்தாள்.

அவள் அழும் சத்தம், கீழே இருந்த ஷெண்பாவின் காதுகளுக்கு வந்தடைய, அவருக்கு உள்ளுக்குள் பயம் வந்தது.

உடனே சேரனுக்கு அழைத்து விபரத்தைக் கூற, அடுத்த நொடி அவன் அலுவலகத்தை விட்டுக் கிளம்பி, அரை மணி நேரத்தில் வீட்டை வந்தடைந்தான்.

அவன் வீடு வந்து சேரும் போதே வீடே அமைதிக் கோலம் பூண்டிருக்க, அவன் வந்ததை அறிந்து கொண்டு முன்னறைக்கு வந்த ஷெண்பாவிடம் பார்வையாலே விசாரிக்க, "பாப்பா பேர்ல ஏதோ லெட்டர் வந்ததுன்னு வாட்ச்மேன் கொடுத்தார் தம்பி... அதைக் கொண்டு வந்து பாப்பா கிட்ட கொடுத்தேன்... கொஞ்ச நேரத்துல ரூம்ல ஏதோ சத்தம்... என்னன்னு மேலே போனேன்.... பாப்பா அறை மூடியிருந்தது... அப்புறம் ரொம்ப நேரம் சத்தம் போட்டு அழுதுட்டு இருந்துச்சு தம்பி... அது போட்ட சத்தத்துல எனக்கே பயம் வந்துடுச்சுங்க... நீங்க வேணா வேலுவைக் கேட்டுப் பாருங்க..."

அவர், இப்போது வீடு அமைதியாக இருப்பதில் எங்கே அவன் தன்னைச் சந்தேகப்பட்டு விடுவானோ என அவர் சாட்சியை அழைக்க, அவனோ, "சரி, நான் பார்த்துக்கிறேன்... அவ ஏதாவது சாப்பிட்டாளா...?" கேட்டதற்கு இல்லை என்றவர்,

"நீங்க போங்க தம்பி... நான் கொஞ்ச நேரத்துல சாப்பாடு எடுத்துட்டு வரேன்..." என அனுப்பி வைத்தார்.

அவன் மேலே வந்து அறைக்குள் நுழைய, அவளோ அந்த அறையின் மூலையில் காலைக் குறுக்கிக் கையைத் தலைக்குக் கொடுத்துப் படுத் திருந்தாள்.

அவள் இருந்த நிலையில் பதறி அவளின் அருகில் சென்றவன், அவள் தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டவன், "அகல்... என்னாச்சு...? ஏன்



இப்படிப் படுத்திருக்க... முதல்ல எந்திரி... ஏதாவது சாப்பிடு..." அவன் கேட்ட, பேசிய எந்த வார்த்தைக்கும் அவளிடம் பிரதிபலிப்பு இல்லை.

"மாமி... மாமி..." அவள் கன்னத்தைத் தட்டவும், தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு விழித்தாள்.

"அடிப்பாவி...! நீ ஏதோ கதறி அழுதுக்கிட்டு இருக்கேன்னு ஷெண்பா சொன்னதும், ட்வெண்டி க்ரோர்ஸ் டீலிங்கை அப்படியே விட்டு விட்டு அடிச்சுப் பிடிச்சு ஓடி வந்தா... நீ இங்க கும்பகர்ணி மாதிரி குப்புறப் படுத்துத் தூங்கிட்டு இருக்க...! எதுக்குடி... அழுதியாமா...?" அவனுக்கு அவள் அழுதிருக்கிறாள் என்பது அவளின் வீங்கிய கண்களைப் பார்த்ததுமே புரிந்தது.

ஆனால், அவளிடம் பரிவாகப் பேசினால் தன்னையே ஏய்ப்பாள் எனப் புரிந்தே அவன் அதட்டினான்... கூடவே அவள் இப்போதாவது ஏதேனும் தன்னிடம் சண்டை போட வேண்டுமே என்ற காரணமும் உள்ளுக்குள் பொதிந்திருந்தது.

அவன் நினைத்ததைப் போலவே, "ஹான்... அப்போ அங்க ஆபீஸ்லயே இருக்க வேண்டிதுதானே... எதுக்கு இப்போ இங்க வந்து என்னைப் பிராண்டுறேள்...?"

அவள் வாய் விட்டுக் கேட்டதும் அவனுக்கு உள் ளுக்குள் பிறந்த நிம்மதிக்கு அளவேயில்லை.

கடந்த நான்கைந்து நாட்களாக அவள் போட்டிருந்த வாய்ப் பூட்டு உடைந்து, அவனிடம் சண்டைக்கு நிற்கவும்,

அவளிடம் வம்பு வளர்க்க உள்ளுக்குள் அவனுக்கு உற்சாகம் உடைப்பெடுத்தது.

"என்ன செய்ய... அந்த ட்வென்டி க்ரோர்ஸ் செய்ய முடியாத வேலையெல்லாம் என்னோட வைப் உன்னால மட்டும்தானே செய்ய முடியும்... அதான் அந்த மீட்டிங்கை அம்போன்னு விட்டுட்டு வந்துட்டேன்..." அவன் பேசிக் கொண்டிருக்கும் வேளையில், தன் மடியிலிருந்து எழுந்தவளைப் பார்த்தவாறு அவன் பேச...

"ஆமா... ஆமா... இந்த வசனத்துக்கு ஒரு குறைச்சலும் இருந்ததில்லை!" என்றவள், எழுந்து சென்று குளியலறைக்குள் சென்று முகம் கழுவி வந்தவள், அந்த அறையிலிருந்த நிலைக் கண்ணாடியில் கலைந்திருந்த தன் முடியைத் திருத்தி, ஒதுங்கியிருந்த தன் நெற்றிப் பொட்டைச் சரி செய்தவள், "நேக்குப் பசிக்கிறது... கீழே போலாமா...?" அவள் கண்ணாடியைப் பார்த்தவாறே அவனிடம் கேள்வியைத் தொடுத்தாள்.

சேரனுக்கு இவள் செய்யும் அனைத்துச் செயல்களும் வியப்பாகவும், அதே சமயம் அவனின் அனுபவம், 'இவ ஏதோ பிளான் போடற மாதிரியே இருக்கே... எதுக்கும் கொஞ்சம் ஜாக்கிரதையா இரு சேரா! மாமியை நம்பிடாதே...!' மனதிற்குள் சொன்னவன், அவள் சொன்னதற்கு ஒப்புதல் அளித்து அவளுடன் இணைந்தே கீழே வந்தான்.

கணவனும், மனைவியும் இணைந்து மாடிப் படிகளில் இருந்து கீழே வருவதைப் பார்த்த ஷெண்பா வின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.



அவர்களையே அசைவற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவரை நெருங்கிய அகல்விழி, "என்ன... எங்களையே இப்படி 'ஆ'ன்னு பார்த்துண்டு இருக்கேள்... சாப்பாடு எடுத்து வைங்கோ..." அவள் குரலில் இருந்தது கட்டளையா இல்லை அதட்டலா என்பது புரியவில்லை... ஆனால், அவள் இப்போது அந்த வீட்டின் எஜமானியல்லவா...!

அதனால் ஷெண்பா அவள் சொன்ன சொல்லுக்குக் கட்டுப்பட்டு, உணவு மேஜையில் பாத்திரத்தை அடுக்கினார்.

அடுக்கிய பாத்திரத்தைத் திறந்தவள், "ஓஹோ... முருங்கைச் சாம்பாரா... நேக்கு ரொம்பப் பிடிக்கும்...!" என்றவள், தன் தட்டை நிரப்பிய வேகத்தில் உண்ணவும் ஆரம்பிக்க, சேரன் அவள் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் பார்வைக் குறுகுறுப்பில் நிமிர்ந்து பார்த்தவள், "என்ன... என் வாயையே முறைச்சு முறைச்சுப் பாக்குறேள்... சாதத்தைத் தட்டுல எடுத்து வெச்சுச் சாப்பிடுங்கோ...!" அவள் அதட்டவும், ஷெண்பா அவன் அருகில் வந்தார்.

தம்பதியாக உணவு மேஜைக்கு வரவும், உள்ளுக்குள் குளிர்ந்து போன ஷெண்பா, அகல்விழியே அவள் கணவனுக்குப் பரிமாறுவாள் என ஒதுங்கி நிற்க, அவள் இப்படிச் சொல்லவும், அவன் அருகில் வந்தவர், "தம்பிக்கு இதெல்லாம் பழக்கமில்லை பாப்பா... நான் பரிமாறுறேன்.. நீ சாப்பிடு பாப்பா...!" எனவும்...

"ஏன்... அவர் இதெல்லாம் பழகிக்க மாட்டாராமா...?" ஷெண்பாவைப் பார்த்துச் சொன்னவள், சேரனின் புறம் திரும்பி, "உங்க வயித்துக்குச் சாப்பிட இன்னொருத்தர் வந்து பரிமாறணுமாக்கும்!" தாடையைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டவள், "இருங்கோ..." என்றவள், எழுந்து சென்று கை கழுவி வந்து, அவன் அருகில் நின்று அவன் தட்டில் உணவள்ளி வைத்தாள்.

அவன் உண்ண ஆரம்பிக்கவும், அவளும் அவளின் இருக்கைக்குச் சென்று தன்னதைச் சாப்பிட, ஷெண்பா அவளின் செய்கையில் சிரித்து விட்டு, அவள் பார்த்துக் கொள்வாள் என்ற நம்பிக்கையுடன் அங்கிருந்து அகன்றார்.

பாதி உணவில் அவன் தட்டைப் பார்த்து, அவள் பரிமாறவும், சேரனுக்கு இவளின் செயலில் குழப்பம் அதிகம் தென்பட்டது.

தான் வரும் முன்னர் வரை, கண்கள் சிவக்க, முகம் வீங்கும் வரை அழுது கொண்டிருந்தவள், இப்போது அப்படியே தலை கீழாக நடந்து கொள்வதென்ன...?

இவளின் மாற்றத்திற்கான இரகசியம் என்னவோ...?

'ஷெண்பா ஏதோ லெட்டர் வந்ததுன்னு சொன்னாங்க... அதைப் படிச்சதுக்கு அப்புறம் தான் இவ அழுதிருக்கணும்... நம ரூம் போகும் போது அவ பக்கத்துல லெட்டர் எதுவுமில்லையே...!' அவன் யோசனையுடன் இருக்கவே...



"ப்ச்... சாப்பிடும்போது அதென்ன யோசனை... மீதி சாதத்துக்குத் தயிர் வைக்கவா, வேண்டாமா...?" மீண்டும் அகல்விழியின் அதட்டலில் மீண்டவன்,

"ஐயோ! வேண்டாம்... எனக்கு இந்தப் பால், தயிர் எந்த மில்க் ப்ராடக்ட்சும் பிடிக்காது... ஐ ஹேட் வெஜிடேரியன்..." என்றவன், தட்டிலே கையைக் கழுவிக் கொண்டு எழுந்தான்.

"ச்சே... ச்சே... இதென்ன பழக்கம்... தட்டுலயே கையை அலம்புறது... அதான் அங்கே சிங்க் இருக்கே... அங்க போய் அலம்ப மாட்டேளா...?" கோபம் தொக்கி நின்றது அகல்விழியின் குரலில்.

"ஹய்யோ...! ஏன்டி படுத்துற... இதெல்லாம் எனக்குப் பிறந்ததுல இருந்தே பழக்கம்... நீ திடீர்னு வந்து அதைச் செய்யாதே... இதைச் செய்யாதேன்னா எப்படி...?" அவனும் அதே கோபத்துடன் சொல்ல...

"இதென்ன வம்பா இருக்கு... அப்போ நேக்கும் இதே மாதிரிதானே இருக்கும்... பிறந்ததுல இருந்து என்னோட பெத்தவாளைப் பிரிஞ்சு நான் ஒரு நிமிஷம் கூட இருந்ததில்ல... ஆனா நீங்க... காதல், கத்தரிக்காய்னு பினாத்தி, என்னோட வாழ்க்கையைக் கெடுத்து, உங்களோட சுயநலத்துக்காக என்னை அவங்களை விட்டுப் பிரிச்சு வச்சிருக்கேளே... அப்போ அது மட்டும் நியாயமா...?" முதலில் நக்கலாக ஆரம்பித்தவள், பின்னர் ஆதங்கமாக முடித்தாள்.

அவள் பேசி முடித்த பின்னர்தான் அவளின் இந்த நடவடிக்கைக்குக் காரணம் புரிந்தது.

'மாமிக்கு அவ பேரன்ட்ஸ் ஞாபகம் வந்திருக்கு போல... அதான் அந்த அழுகை அழுதிருக்கா... அதுக்காக என்னை எல்லாம் ட்விஸ்ட் பண்ணி கார்னர் பண்றியே ராட்சசி...' மனதில் நினைத்துப் புலம்பியவன், வெளியே அவளைச் சமாளிக்கும் பொருட்டு,

"இதோ பாரு அகல்... நான் இப்போ மாற முடியாதுன்னு எதுவும் சொல்லவே யில்லையே...! கொஞ்சம் கொஞ்சமா உனக்கு ஏத்த மாதிரி நான் என்னை மாத்திப்பேன்... அது என்னால நிச்சயம் முடியும்... ஐ கேன் டு எனிதிங் ஃபார் யூ... ஏன்னா நான் உன்னை அவ்ளோ காதலிக்கிறேன்... நீயும் என்னைச் சீக்கிரம் புரிஞ்சுப்ப! எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு...

"அப்புறம் இன்னொரு விஷயம்... நீ இதைச் சுயநலம்னு நினைச்சாலும் ஐ டோன்ட் மைன்ட்... இனிமேல் இதுதான் உன்னோட வாழ்க்கை... நீ இப்போ நாராயணன் மகள் இல்லை... இளஞ்சேரனின் மனைவி. அதை மனசுல வெச்சுட்டு நடந்துக்கோ... இப்படி அடிக்கடி அழுது உன்னை நீயே பலவீனப்படுத்திக்காதே... அட்லீஸ்ட், என்னோட சண்டை போடவாவது உனக்கு எனர்ஜி வேணுமில்ல..." கண்ணடித்துச் சொல்லி விட்டு, அவள் கன்னத்தில் தட்டி விட்டுச் சென்றான்.

அவன் பேசிய வார்த்தைகளில் அவனின் காதலின் மேலிருந்த நம்பிக்கை, அகல்விழிக்கு அவனின் தலைக் கனமாகத் தோன்றியது.



'எத்தனை திமிர் இருந்தா இப்படிப் பேசிண்டு போவான்... உன்னை என்ன பண்றேன் பாரு...! இளஞ்சேரன்னா... அவனுக்கென்ன தலையில நாலு கொம்பா மொளைச்சுண்டு இருக்கு... இருடா இரு...! நோக்கு இதுக்கெல்லாம் சேர்த்து ஆண்டவன் பெருசா செய்வான்...' மனதிற்குள் அவனைக் கறுவியவள், தனது அறைக்குச் சென்று முடங்கினாள்.

# 8

**மா**லைக் கதிர்கள் மறைந்து, இருள் கவ்விய அவ்வேளையில், கருந்திரையைக் கிழித்துக் கொண்டு வெளிச்சம் தந்த நிலவின் நிழலோடு மனையாளின் வரிவடிவைக் கண்ணுக்குள் பொத்தி வைத்துக் கொண்டிருந்தான், இளஞ்சேரன்.

மதியம் மனைவி அழுததற்கும், தன்னிடம் கோபம் கொண்டு சண்டையிட்டதற்கும் காரணமறியாமல் மனம் தவித்தான்..

அந்த லெட்டர்... அது அவன் கண்ணில் படாமல் கண்ணாமூச்சி ஆடியது.

'அதை யார் அனுப்பியிருக்கக் கூடும்... அதுவும் இந்த வீட்டு முகவரிக்கு... ஒருவேளை அவள் அன்னை...' என யோசித்த மனதை அடக்கினான்.

'ச்சே... ச்சே... அமைதியா இரு சேரா... அவளுக்கு மட்டும் அது தெரிந்தது... இதையும் ஏன் மறைத்தாய் என

உன் சிண்டைப் பிடித்துக் கொண்டு சண்டைக்கு நிற்பாள்...' மனம் குட்ட அமைதியானான்.

ஆனால், அவன் மட்டும் இரண்டு நாட்கள் முன்னர் நடந்த சம்பவத்தை அவளுடன் பகிர்ந்து கொண்டிருந்தால், பின்னால் வரப் போகும் பல பிரச்சனைகளைச் சமாளித்திருக்கக் கூடும்.

ஆனால், இதுதான் விதியின் சதியோ...!

விதியின் சதியறியாமல் சேரனின் மனது, அவள் தனது அன்பையும், காதலையும் புரிந்து கொள்ளாமல் இருக்கிறாளே என வெதும்பிக் கொண்டிருந்தது.

ஏனோ அவனுக்கு, அவள் இப்போதைக்குத் தன்னுடன் இருப்பதே நிம்மதி என உள்ளம் சந்தோஷமடைந்தது.

ஆனால் பாவம், சந்தோஷமான மணவாழ்க்கைக்கு அது மட்டும் போதுமா என உள்ளம் கேட்ட கேள்விக்கு விடை தெரியாமல், அக்கேள்வியை சாய்சில் விட்டு விட்டு, மனைவியின் பிறை முகத்தைத் தான் இரண்டாம் தரம் சந்தித்த தருணத்தை மனதில் அசை போட்டான் சேரன்.

அன்று அவனின் நிதி நிறுவன அலுவலகத்தில், ஜீவாவுடன் ஏதோ முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டிருந்தான் சேரன்.

"என்ன ஜீவா இது... இந்த அமௌண்ட் நாம டூ மந்த்ஸ் முன்னாடியே கலெக்ட் பண்ணியிருக்க வேண்டியது... இன்னமும் வசூல் பண்ணாம என்ன செஞ்சுட்டு இருக்கீங்க... மத்தவங்களுக்குத்தான் இதோட இம்பார்டன்ஸ் தெரியாது.. பட் உனக்குமா...?



"நம்ம தொழில்ல கொடுக்கல் வாங்கல் எல்லாம் முறையா நடந்தாத்தான் ரோலிங் பண்ண முடியும்... இவ்ளோ பெரிய அமௌன்ட் வெளியில் மாட்டிக்கிட்டா அதை டிபென்ட் பண்ணிச் செய்ய வேண்டிய மத்த வேலை எல்லாம் தேங்கிடும்னு உனக்கு நான் சொல்லித் தான் தெரியணுமா...?" கோபமாகப் பொரிந்து கொண்டிருந்தான் சேரன்.

"இல்ல சார்... நான் ரெண்டு தடவை வார்னிங் அனுப்பினேன்... பட் அந்த கிளையன்ட் ரொம்ப ஆட்டம் காட்டுறான்... எனக்கு இன்னும் ஒரு டூ டேஸ் டைம் கொடுங்க...!" ஜீவா சொல்லிக் கொண்டிருக்க...

"உனக்கு டூ டேஸ்தான் டைம்... இது வரைக்கும் ரூல்ஸ் படி கேட்டாச்சு... இதுக்கு மேலேயும் அந்தச் சேட்டு ரொம்ப ஆட்டம் காட்டினான்னா, நம்ம பாலுவையும், காளியையும் அனுப்பி, ரெண்டு தட்டுத் தட்டச் சொல்லு... அப்பவும் அவன் நம்ம வழிக்கு வரலைன்னா, அவன் ப்ளெட்ஜ் பண்ணியிருக்கற அவன் வீட்டை சீஸ் பண்ணிடுங்க... அவன் என்ன, ஒண்ணுமில்லாதவனா...!

"அவ்ளோ பெரிய நகைக்கடை ஓனருக்கு இந்த அமௌன்ட் கொடுக்க முடியலைன்னு சொன்னா... அதைக் கேட்டுக்கிட்டு தலையாட்ட நான் என்ன சிம்பப் பையனா...!"

அவன் முகத்தில் தீவிரத்துடன் சொல்லிக் கொண் டிருந்த அனைத்தும் வெளியே தெள்ளத் தெளிவாகக் கேட்டது.

இவர்கள் நடுவே நடந்த காரசாரமான விவாதத்தின் போது, அவர்களுக்குக் குடிக்கத் தேநீர் எடுத்து வந்த பியூன், போகும் போது கதவைச் சரியாக மூடாமல் போயிருந்தான்.

அதன் விளைவால் இவர்களுக்குள் நடந்த இந்தக் குறிப்பட்ட உரையாடல், வெளியே இருந்த அவளுக்கு எந்தத் தடையுமின்றிக் காதுகளில் சென்றடைந்தது.

ஜீவாவுடன் பேசியவாறு கீழே குனிந்து ஏதோ முக்கிய கோப்பைப் பார்த்திருந்த சேரன், அதை முடித்து நிமிர்ந்த போது அவன் கண்ணில் எதேச்சையாகப் பட் டாள் அவள்.

அவளைப் பார்த்த நொடி அந்த மழை நாளின் இன்பம் அவன் முகத்தில் தானாக ஒட்டிக் கொள்ள, அன்றுக்குப் பின் தினமும் இரவில் தன்னை இம்சை செய்யும் தனது மனம் கவர்ந்தவளின் தோழியைத் தனது அலுவலகத்தில் சந்தித்ததும், சேரனின் உற்சாகத்தை அளவிட முடியவில்லை.

அன்று அவளைச் சந்தித்த பின், அவளின் பக்கம் சாய்ந்த மனதை, அது ஏதோ ஈர்ப்பு என அடக்கி வைத்திருந்தான்.

ஆனால், தினமும் இரவில், தனது நித்திரையைக் கலைத்து, தன் கண் விழிக்குள் நடனமாடும் அம்



மங்கையின் நினைவை அவனால் என்ன செய்தும் ஒதுக்கித் தள்ளவே முடியவில்லை.

'இது என்னடா இது...! கண்டதும் காதலா...! நீ என்ன டீன் ஏஜ் பையனா...?' அவன் தலையைக் குலுக்கி மனதைச் சமன் நிலைக்குக் கொண்டு வர முயன்றாலும், அது தோல்வியைத் தழுவியது.

அப்போது தான் அவன் எப்போதும் செய்யும் சுய அலசலில் ஈடுபட்டவன், தனக்கு வந்திருப்பது வெறும் ஈர்ப்பல்ல என்பதும் புரிந்தது.

தன்னைப் பாதிக்கும் அந்தச் சிறு விழியாளின் புறம் சாய்ந்த மனதிற்குக் காதலென்று பெயர் சூட்டினான்.

தனக்குள் இருப்பது காதல்தான் என முடிவெடுத்த பின், அவனின் கற்பனைக் கோட்டை வானளந்து ஓங்கி நின்றது.

இந்த ஒரு வார இடைவெளியில், அவளை உருகி உருகிக் காதலித்து, உற்றார் உறவினர் முன் அவள் கழுத்தில் சுபமாங்கல்யத்தைப் பூட்டி, ஆஸ்திக்கு ஒன்று அவளின் சாயலிலும், ஆசைக்கு ஒன்றாகத் தன் சாய லிலும் பிள்ளைகள் பெற்று, அவர்களுக்கும் திருமணம் முடித்து, நூற்றுக் கிழவர்களாகி விட்டனர் சேரனும், அகல் விழியும்.

தன் அன்னை, தந்தை மறைவிற்குப் பின், தனக் கென்று அவன் ஒரு சொந்தத்தைப் போல் உணர்ந்தது இவளிடம் மட்டுமே என்பது தெள்ளத் தெளிவாக விளங்கிய

பின், அவளை நெருங்கத் துடித்த மனதைக் கடிவாள மிட்டுக் கட்டினான்.

நீர் பட்ட அவள் பட்டுக் கன்னங்களும், குழந்தை யின் குரலில் கொஞ்சிப் பேசும் அவளின் குரலும், விளை யாட்டுத் தனத்தை மொத்தக் குத்தகைக்கு எடுத்திருக்கும் அவளின் சின்னக் கரு விழிகளும் அவனைச் சுழற்றிப் போட்டன.

இந்த ஒரு வாரத்தில் அவளின் பெயரைக் குறைந்தது பத்தாயிரம் முறையாவது மனதில் உச்சரித்துப் பார்த்திருப்பான்.

அவளின் பெயரையும், தனது பெயரையும் சேர்த்துப் பார்த்து எத்தனை எத்தனை முறை மகிழ்ந் திருக்கிறான்.

அவளின் பெயரை எப்படி எப்படியோ சுருக்கிப் பார்த்துச் சுருக்க முடியாமல் நீண்ட அவளின் பெயரில் சோகம் கொண்டு, அவளுக்கு அப்போதைக்குக் 'குல்பி' என்ற செல்லப் பெயரை வைத்து மனதில் பலமுறை கொஞ்சியிருக்கிறான்.

அவள் நித்திரைக் கனவில் படுத்தும் பாட்டைப் பொறுக்க முடியாமல், அவன் மனதின் கட்டுப்பாட்டையும் மீறி ஒரு நாள் அவளின் கல்லூரி வளாகத்திற்குச் சென் றிருந்தான்.

வெறும் முகத்தை மட்டும் பார்த்திருந்தாலே தன்னவளை எப்படியாவது கண்டு பிடிக்கக் கூடிய திறன்



படைத்த சேரனுக்கு, அவளின் பெயர், கல்லூரி மற்றும் படிக்கும் பிரிவு முதல் தெரிந்த பின், அவளைக் கண்டு பிடிப்பது அவ்வளவு சிரமம் என்று தோன்றவில்லை.

கல்லூரிக்கு வந்து விட்டானே ஒழிய, அவளை என்ன சொல்லி எப்படி விசாரிப்பது எனப் புரியவில்லை.

ஒரு ஆடவன்... கல்லூரியில் படிக்கும் பெண்ணைப் பற்றி விசாரிக்க அவளின் கல்லூரிக்கு வந்தான் என்றால், அதில் அப்பெண்ணுக்கு ஏற்படும் சிக்கல்களைப் புரிந்து கொண்டு சேரன் தயங்கி நிற்க, கல்லூரியின் செக்யூரிட்டி, அவன் வெகு நேரம் அங்கு நிற்பதைக் கண்டு விசாரிக்க வந்தார்.

அவன் வந்திருந்த அந்த உயர்தரக் காரும், அவன் உடுப்பு உடுத்தியிருக்கும் விதமும் அந்தக் காவல்கார ருக்குத் தானாகவே அவனின் மீது மரியாதையை வர வழைத்தது.

"என்ன சார்... யாரையாவது பார்க்கணுமா...?" அவர் கேட்க...

தன்னவளின் நினைவில் இருந்தவன் தலை, ஆமாமெனத் தானாக ஆடியது.

அவன் தலையாட்டலைப் பெற்றுக் கொண்டவர், "ஓஹோ... டீச்சர்களா இல்லை ஸ்டூடென்ட்ஸா சார்...?"

"ஸ்டூடன்ட்...." என உடனடிப் பதில் கொடுத்தவனுக்கு,

"பிள்ளைகளுக்கு இப்போ செமஸ்டர் விடுமுறை சார்... எப்படியும் லீவ் முடியப் பத்துப் பதினஞ்சு நாள்

ஆகும்..." செக்யூரிட்டி சொல்ல, மனதில் படிந்த ஏமாற் றத்துடன் அங்கிருந்து கிளம்பினான்.

அதன் பிறகு அவன் அவளைத் தேட முயற்சிக்க வில்லை.

அன்று அவளைத் தான் கண்டதும்... அவளின் மீது தனக்கு வந்த காதலும் விதியின் செயல் என்றால், அதே விதியே மீண்டும் அவளைத் தன்னிடம் கொண்டு வந்து சேர்க்கும் என விதியின் மீது நம்பிக்கை வைத்துத் தனது அன்றாட வாழ்க்கையில் மூழ்கினான்.

அவன் மனதில் உள்ள காதலை, இதுவரை யாரிடமும் அவன் பகிர்ந்து கொண்டதில்லை.

அவனுக்குத் தனது சொந்த விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளப் பெரிதாக எந்த உறவும் இல்லாமல் இருந்தாலும், அவனின் உற்ற நண்பன் சதீஷிடமும், தனது பி.ஏ. என்றாலும் தன்னிடம் தோழமையாகப் பழகித் தன் நலன் காணும் ஜீவாவிடம் கூடத் தனது மனதைப் பகிரவில்லை.

அதற்கு எந்தப் பெரிய காரணமுமில்லை.

அவளின் காதலைப் பெற்ற பின்னரே... அதை மற்றவர்களுக்குப் பறை சாற்ற வேண்டுமென்ற ஒற்றை எண்ணம்தான்.

அன்று விதியின் கையில் விட்ட தனது வாழ்க்கை யைத் தான் வைத்த நம்பிக்கையைப் பொய்யாக்காமல் இன்று தன்னவளை, அவளின் தோழி சுந்தரியின் வடிவில்



தன் முன்னே நிறுத்தியிருக்கும், கடவுளாகப் பாவிக்கும் தனது தாய் தந்தைக்கு நன்றி சொன்னவன், உடனே அவளை நோக்கி எழுந்து நடந்தான்.

தன்னுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே, இடையில் எழுந்து செல்லும் இந்தப் புதிய சேரனை அதிசயமாக நோக்கியவாறு, அவனின் பின்னே ஜீவாவும் சென்றான்.

ஏற்கெனவே சேரனின் அந்த அடாவடிப் பேச்சில் நடுங்கிக் கொண்டிருந்த சுந்தரிக்குத் தன் முன்னால் வேக நடையிட்டு வந்தவனை அடையாளம் கண்டு கொண்டதில், அதில் வேறு உள்ளுக்குள் உதறல் எடுத்தது.

அவளுக்கும், சேரனைப் பார்த்த நொடியில் அந்த முதல் சந்திப்பு நினைவு வந்தது.

அன்று தோழியிடம் இவனைப் பற்றிச் சொன்னதும், கூடவே ஞாபகம் வந்தது.

"அச்சோ அகல்... ஆயாள் பார்க்க ஏதோ பொறுக்கி மாதிரி இருக்கான்... அவட நோக்கு அவனிண்ட முழியும், இளிப்பும்... அவனிடத்தில் போய்..." சுந்தரி பேசிய பேச்சு நல்ல வேளையாக அந்த மழை நாளில் சேரனின் காதில் கேட்கவில்லை.

கேட்டிருந்தாலும் ஒன்றும் செய்திருக்க மாட்டான்.

ஏனெனில் அன்றுதான் அவன் அவனாகவே யில்லையே...!

முற்றிலும் தன்னிலை மறந்து, குல்பியின் மீது காதல் வயப்பட்டிருந்தவன், இவர்கள் உரையாடலைக் கேட்கத் தவறி விட்டான்.

ஆனால் சுந்தரிக்கோ, அவன் உள்ளறையில் பேசிக் கொண்டிருந்த அந்த மிரட்டல் பேச்சே உடலில் நடுக்கத்தைக் கொடுக்க, இப்போது அவன் தன்னை நோக்கி வேக நடையிட்டு வந்து கொண்டிருக்கவும், நடுக்கம் உதறலாக மாறியது.

அங்கு அமர்ந்திருக்க முடியாமல், அவள் கால்கள் அங்கிருந்து செல்லத் துடிக்க, ஜீவாவிற்கோ அந்தப் பெண்ணின் முகத்தில் தெரிந்த பயம் பாவமாக இருந்தது... கூடவே தனது முதலாளியின் இந்த வித்தியாசமான செயலும் வியக்க வைத்தது.

அன்றைய அப் பெண்களின் உரையாடல் இன்னமும் சேரனின் மனதில் ரீங்காரமிட, அமர்ந்திருந்தவளின் பெயரை அவன் மறக்கவில்லை.

"ஹாய் சுந்தரி... எப்படி இருக்கீங்க...?" என்றான், அவளை நெருங்கி.

ஏற்கெனவே நடுக்கத்தில் இருந்தவள், அவன் தனது பெயரை வேறு சொல்லவும், அவளுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

அதை அவனுக்கு முன்னரே ஜீவா உணர்ந்து கொண்டு, அங்கே அந்த அறையிலே இருந்த ஃபில் டாப் தண்ணீர் குழாயைத் திறந்து, டம்ளரில் தண்ணீர் பிடித்து



அவளிடம் கொடுக்க, நன்றியுடன் ஜீவாவைப் பார்த்தவள், அதை மறுக்காமல் வாங்கித் தொண்டையில் சரித்துக் கொண்டாள்.

அவளின் செய்கையில் அவள் டென்ஷனாக இருக்கிறாள் என்பது சேரனுக்கும் நன்கு புரிந்தது.

"சுந்தரி... ஜஸ்ட் ரிலாக்ஸ்.. எனக்கு உங்க மூலமாக ஒரு விஷயம் தெரியணும்.. கேன் யூ ஹெல்ப் மீ..." அவன் கனிவாகக் கேட்டாலும்,

அவனின் முந்தைய பேச்சும், தான் இப்போது அவனின் அலுவலகத்திற்கு வந்திருக்கும் காரணமும் சுந்தரியின் உடல் நடுக்கத்தை என்ன செய்தும் ஒதுக்க முடியவில்லை.

அவள் தவிப்பாக இருப்பது புரிந்ததும், இந்த நிலையில் அவளிடம் ஏதும் கேட்டாலும் பயனில்லை என்பதை உணர, "ஓ.கே. விடுங்க... எதுக்கு இங்க ஆபீஸ் வந்திருக்கீங்க... ஏதாவது ஹெல்ப் வேணுமா....?" அவன் கேட்க...

தந்தியடித்த உதடுகளைச் சரி செய்து, "இல்ல... ஒண்ணுமில்லை... சு... சும்மாதான்..." என்றவள், அமர்ந்திருந்த அந்த இடத்தை விட்டு எழுந்து, "நான் போறேன்..." என்றவள், நொடியில் அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

சேரனுக்கே அவளின் இந்தப் பயம் எதற்கு என்று புரியவில்லை.

தன்னைப் பார்த்தால் அவ்வளவு கொடூரமாகவா இருக்கிறது...? ஒரு முறை தனது அலுவலக அறைக்

கண்ணாடிக் கதவில் தன் உருவத்தைப் பார்த்தவன், தன்னுள் சிரித்துக் கொண்டு ரிசப்ஷனில், "அந்தப் பெண் எதுக்கு வந்தாங்க...? யாரைப் பார்க்கணும்னு சொன்னாங்க...?" அவன் விசாரிக்க...

"தெரியலை சார்... பத்து நிமிஷம் முன்னாடி வந்தாங்க... கிரி சாரைப் பார்க்கணும்னு சொல்லி... அவர் பேங்க் போயிருக்கார்னு சொல்லி, நான்தான் வெயிட் பண்ணச் சொன்னேன்..." ரிசப்ஷனில் அப்பெண் சொல்லவும்,

ஒரு "ம்ம்...." வுடன் தனது வேலையைப் பார்க்கத் தனதறைக்குச் சென்றவன், ஏதோ உள்ளுணர்வு உந்த, தனது அறைக் கண்ணாடி ஜன்னல் திரைச்சீலையை விலக்கிப் பார்க்க, கீழே அந்த சுந்தரிப் பெண் தனது அலுவலக வாயிலைக் கடப்பதும், அவளை நோக்கி இன்னொரு பெண் வருவதும் தெரிய, அந்த இன்னொரு பெண்ணை உற்றுப் பார்த்தவன், "ஹே... குல்பி..." எனக் கூக்குரலிட, அவன் சத்தத்தில் உள்ளே வந்த ஜீவாவை நோக்கி,

"ஜீவா... இப்போ போனாளே அந்தப் பெண்... சீக்கிரம் போய் அவளைப் பிடி... கோ... கோ... ஃபாஸ்ட்... ஃபாஸ்ட்..." என்றவன் சொன்னதை உள் வாங்கவே ஜீவாவிற்குச் சில நொடிகள் பிடித்தன.

ஆனால், இவனின் அவசரத்திற்குக் குல்பி பெண் ஒத்துழைக்கவில்லை... அவளும் சுந்தரியும் அங்கு வந்த ஒரு ஆட்டோவை வழிமறித்து, அதில் ஏறிச் சென்றே விட்டனர்.



அவள் போவதையே பார்த்தவன், "ச்சே..." எனத் தனது சேரைச் சுழல விட்டான்.

இதையெல்லாம் பார்த்த ஜீவாவுக்குத்தான் மனம் சஞ்சலமடைந்தது.

இதுவரை பெண்கள் மீது கவனம் செலுத்தாத தனது முதலாளி, தன் இருக்கையை விட்டு வந்தது முதல் அதிசயம் என்றால், அவனின் இயல்புக்கு மீறி அவன் உற்சாகமாகச் சொன்ன குல்பியும், அதன் பின் அவனடைந்த கோபமும் - விளக்கம் தெரியவில்லை எனினும் - ஜீவாவின் கண் முன்னே அந்த சுந்தரிப் பெண் நிழலாடத்தான் செய்தாள்.

அன்றைய நாளில் வெகு தூரத்தில் இருந்த பார்வை தன்னவளை.... இப்போது இந்த நொடி தனக்கு மிக அருகில் மனைவி என்ற உரிமையுடன் பார்க்க, அன்று போல் இன்றும் கள்ளம் கபடமின்றித் தூக்கத்தின் பிடியில் இருக்கும் தன் மனையாளைக் கண்களால் தழுவிக் கொண்டு தூங்க முயன்று, அதில் வெற்றியும் பெற்றான் சேரன்.

அடுத்த நாள் காலை வழமையாகத் துவங்க, இந்த ஒரு வாரத்தைப் போல் அல்லாமல், மிக விரைவிலே கண் விழித்த அகல்விழிக்குத் தன் முன்னால் கண்ணுறங்கிக் கொண்டிருந்த கணவனின் மேல் வெறுப்பு அதிகமிருந்தாலும், நேற்று அவள் எடுத்த முடிவிலும் சற்றுத் திடமாகத்தான் இருந்தாள்.

அவள் தந்தை அனுப்பிய கடிதத்தைப் படித்ததும், இதற்கு எல்லாம் காரணம் அந்தச் சேரன்தான் என உள்ளம் அவனின் மீது பழி சுமத்திக் குற்றவாளியாக்க, அவனை இங்கிருந்து கொண்டே பழி வாங்க வேண்டு மென உள்ளுக்குள் உறுதி பூண்டாள்.

சேரனை முதல் முதலாகச் சந்தித்த போதிலிருந்தே அவளுக்குள் அவனைப் பற்றிய எந்த ஒரு நல்ல எண்ணமும் விளையவில்லை.

தோழி சுந்தரியின் குடும்பத்தில் நடந்த கோரச் சம்பவத்திற்குக் காரணமான சேரனின் மீது வெறும் பகையை மட்டுமே வளர்த்திருந்தாள்.

அந்தப் பகையை மேலும் வன்மமாக்கும் வண்ணம் நடந்தது அவளின் கட்டாயத் திருமணம்.

அதைத் தொடர்ந்து பெற்றோர் பிரிவினை அவளைத் தன்னிலை இழக்கச் செய்தது.

தன்னைக் காதல் காதல் என உயிரை வாங்கும் அவனைக் கத்தியின்றி இரத்தமின்றிக் குதறி எடுக்க முடிவு செய்தாள்.

அகல்விழி வளர்ந்த சூழ்நிலைக்கும், அவள் மனதின் குழந்தைத் தனத்திற்கும் இந்தப் பழியுணர்ச்சி சற்றும் பொருந்தாத ஒன்றுதான்.

ஆனால், எப்படியாவது தான் பட்ட துன்பத்தை, அவனும் பட வேண்டுமென உள்ளம் உந்தியது.



அது எப்படி, என்ன செய்வது என்று அவளுக்குப் புரியவில்லை.

அவள் என்ன பரம்பரை வில்லியா...? திட்டமிட்டுப் பழிவாங்க...!

என்ன செய்தேனும், தனக்கு அவன் அளித்த இந்நிலையை அவனும் அனுபவிக்க வேண்டுமென உள்ளம் முடிவெடுத்தது.

அந்த முடிவில், அன்று அவனுக்கு என்ன தொல்லை கொடுத்து, எப்படி அவனுக்குத் தலை வேதனை வர வைக்கலாம் எனக் கன்னத்தில் கை வைத்து யோசிக்கத் துவங்கினாள்.

யோசனையின் இறுதியில் மனம், "யுரேகா...!" எனத் துள்ளி எழ, "மவனே... இன்னிக்கி நீ மாட்டினேடா...!" என உற்சாகமாகப் படுக்கையை விட்டு எழுந்து சென்றாள்.

ஆனால், பாவம்! அப்போது அவளுக்குப் புரிய வில்லை... அவனுக்குக் கொடுக்கப் போகும் துன்பம் தன்னையும் தாக்குமென்று...!

## 9

கடந்த ஒரு வாரம் போல் இல்லாமல், இன்றைய பொழுதைத் தனது வழமையாகத் துவக்கினாள் அகல்விழி.

எதிரில் உறங்கிக் கொண்டிருந்த சேரனை அரைப் பைசாவுக்குக் கூட மதிக்காமல் எழுந்து குளித்து வந்தவள்,

ஒரு வார காலமாகத் தனது பெருமாளைத் துதிக்காமல் தனது சோகத்தில் ஆழ்ந்திருந்தவள், இன்று காலை எடுத்த முடிவின்படி, சேரனைத் தொல்லை செய்யத் தனக்கு நல்ல நல்ல ஐடியாவைக் கொடுக்குமாறு வேண்டுதலுடன், மெல்லிய குரலில் பெருமாளின் துதி பாடிக் கொண்டிருந்தாள்.

மிக மெல்லிய குரல் என்றாலும், அதில் உறக்கம் கலைந்து கண் விழித்த சேரன், தன் எதிரில் கண் மூடிக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் மனைவியைக் கண் நிறைய நோக்கிக் கொண்டிருந்தான்.

கடவுளைச் சேவித்து விட்டுத் திரும்பியவள், தலையில் முடிந்திருந்த டவலைக் கலைத்துத் தன் கூந்தலைத் துவட்டியவாறு ஜன்னல் அருகே சென்று, அந்த வீட்டின் தோட்டத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்.

அவளின் செய்கையை ஒரு ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந்த சேரனுக்கு, அவளிடம் பேசும் ஆர்வம் தூண்டவே, எழுந்து அவளின் அருகில் சென்றான்.

அவனின் காலடியோசையில் திரும்பியவள், அவன் தன்னை நோக்கி வருவது புரிந்ததும், ஜன்னலை விட்டு நகர்ந்து சென்றாள்.

அவள் செல்வதைத் தடுக்க எண்ணி, அவளின் இடது கையைப் பற்றி நிறுத்தியவனிடம், "ச்சீ... ச்சீ...! கையை எடுங்கோ...!" அவள் ஏதோ அசிங்கம் பட்டது போல் முகத்தைச் சுருக்கிச் சொன்ன விதத்தில், உண்மையாகவே சேரனின் மனம் நொறுங்கிப் போனது.



அவள் முகம் காட்டிய பாவம், அவனின் மனதை வதைக்க... தொட்ட கையை உடனே விடுவித்தவன்... அவள் தன்னை விட்டு நகர்ந்து செல்லவும், அவனது ஈகோ இப்போது தட்டி எழுப்பப்படவே... மீண்டும் அவள் கைப்பற்றி நிறுத்தினான்.

"என்னைச் சீன்னு சொல்ற வாயை என்ன வெல்லாமோ செய்யணும்னு தோணுது..." என்றதைச் சத்தமாக அவளுக்குக் கேட்குமாறு சொன்னவன், 'ஆனால், ஏற்கெனவே ஒரு தப்பு பண்ணிட்டு நான் படற குற்றவுணர்வு போதும்...' என்பதை மனதினுள் சொல்லிக் கொண்டான்...

அதை மனதிற்குள் சொல்லிக் கொள்ளக் காரணம், ஏற்கெனவே தான் அவளுக்குப் பெரிய தவறு செய்து விட்டதாக அவள் தன்னை மனதிற்குள் வில்லனாகப் பாவித்திருக்க, இப்போது தான் குற்றவுணர்வில் குட்டுப் பட்டிருப்பதைத் தெரிந்தால், தன்னை அதைச் சொல்லியே வெறுப்பேற்றுவாள் எனத் தெரிந்தே மறைத்தான்.

அவளின் கைப் பற்றி அருகில் இழுத்தவனிடம், அகல்விழி வலுக்கட்டாயமாகச் சூடிய அந்தக் கடின முகமூடி செல்லுபடியாகவில்லை.

"ஹய்யோ... என்னை விடுங்கோ... நான் இப்போ தான் பெருமாளைச் சேவிச்சு முடிச்சேன்... குளிக்காம கொள்ளாம இது என்ன இது... என்ன விடுங்கோ...!" அவளின் வழக்கமான குயில் குரலில் சொன்னவளின் கொஞ்சல் அவனுக்குப் பிடிக்கவே,

மெல்லிய சிரிப்புடன், 'அப்போ குளிச்சிட்டுத் தொட்டா பரவாயில்லையா...?' என வழக்கம் போல் மனம் கேட்ட கேள்வியை மறைத்து, "போ..." என்ற தலையசைப்புடன் அவளை விட, விட்டால் போதுமென்று கீழே ஓடி வந்தாள்.

கீழே வந்தவள், ஹால் சோபாவில் அமர்ந்து கொண்டு தன்னைத் தானே திட்டவும் செய்தாள்.

'என்ன பண்ணிண்டு இருக்க அச்சு... அவன் கையைப் பிடிக்கும்போது அவன் கன்னம் பழுக்கும்படி அடிக்க வேண்டாமோ...! அவன் உன்னை எத்தனை அடி அடிச்சான்... அவனைக் குறைஞ்சது ஒரு அறை யாவது நீ அறையணும்... அதுதான் உனக்கு இப் போதைய டார்கெட்... என்ன, புரியுதோன்னோ...?" மனது அவளுக்குள் கேள்வி கேட்டு, அந்தக் கேள்விக் கான முடிவையும் எடுத்துக் கொண்டது.

'எஸ் பாஸ்...!' என்ற உறுதியுடன், அவனைத் தான் அடிக்கப் போகும் தருணத்தை எப்படி உருவாக்க என்ற தீவிர யோசனையில் இறங்கிய வேளை, ஷெண்பா அவளின் அருகில் வந்தார்.

"பாப்பா...! பாப்பா...!" அவரின் அழைப்புக்குத் தன் யோசனை விலகாமலே,

"என்ன...?" என்பது போன்ற பார்வையை அவரை நோக்கி வீச,

"நீ என்ன பாப்பா காலையில் குடிப்ப... காபியா, டீயா...?"



"ஹான்... இங்க ஃபில்டர் காபி கிடைக்குமா...?" யோசனையுடன் கேட்க...

"ஃபில்டர் காபியா... இன்னிக்கி வேணா நீ சாதா காபி குடிக்கிறியா பாப்பா... நாளைக்கு அந்த மெஷினை வாங்கியாந்துறேன்... இங்க தம்பி பால், டீ, காப்பி எது வுமே குடிக்காதா... அதான் வாங்கி வைக்கலை...!" அவர் காரணத்தோடு சொல்ல...

"ஹ்ம்... சரி... கொஞ்சம் சுகர் கம்மி..." பக்குவம் சொல்லி அவரை அனுப்பி வைத்தவள், மீண்டும் தன் தலையைத் தட்டி யோசனையில் ஆழ்ந்தாள்.

இங்க நடப்பவை யாவையும் அறையில் தயாராகிக் கொண்டிருந்த சேரன் கேட்டுக் கொண்டுதான் இருந்தான்.

அவனுக்கு அவன் மனையாளின் வெகுளித் தனத்தில் தொலைந்து போகச் சொல்லி மனம் கெஞ்சியது.

ஆனால், எங்கே... அது நடக்கத் தான் இன்னும் பல நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலையை எண்ணி ஒரு பெருமூச்சு விட்டவன், ஒரு ட்ராக்ஸ், டீ-ஷர்ட்டை மாட்டிக் கொண்டு, கையில் டென்னிஸ் பேட்டுடன் கீழே வந்தான்.

அவன் கீழே வரவும், ஷெண்பா அவள் கையில் காபியைக் கொடுக்கவும் சரியாக இருக்க, அதை வாங்கிக் கொண்டவள், "ஹய்யோ! இது என்னது...? பிளாஸ்டிக் கப்ல கொடுக்கிறேள்... உங்க ஆத்துல ஒரு பித்தளை டவரா செட் கூட இல்லையா? என்ன அகமோ...!" ஒரு குறையுடன் சொன்னவள், அதை வாங்கி ஒரு மிடறு

விழுங்கவே, ஷெண்பாவைப் பார்த்து, "என்னதானிருந் தாலும் ஃபில்ட்டர் காபி மாதிரி வராது...!" என்ற சொல் லுடன் அதை அனுபவித்துக் குடித்து முடிக்க...

அவள் செய்வது யாவையும் ஒரு சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த சேரன் அவளருகில் வந்து, டென்னிஸ் பேட்டால் அவள் தலையில் வலிக்காமல் தட்ட, "ஹா..." எனத் திரும்பிய அகல்விழி,

"நோக்கு கொஞ்சமாச்சும் அறிவிருக்கா...? இப்படியா வளர்ற பிள்ளை தலையில் அடிப்பேள்...?" கோபமாகப் பொரிய, அவள் சொன்ன விதத்தில் அங்கிருந்த ஒன்றிரண்டு வேலையாட்கள் அவர்களைப் பார்த்துச் சிரிக்கவே, ஷெண்பா வந்த சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு சிரித்த மக்களை நோக்கி,

"எல்லாரும் உள்ள போங்க...!" என்ற கட்டளையுடன் ஷெண்பாவும் உள்ளே சென்று விட்டார்.

அவர்கள் அனைவரும் சென்றவுடன் அவள் அருகில் அமர்ந்தவன், "ஏன்டி... என் இமேஜை இப்படி டேமேஜ் பண்ற...? என் பேரைச் சொன்னாலே ஊர்ல பல பேர் பயப்படறான்... ஆனா, நீ இருக்கியே..." அவன் அலுப்பாகச் சொல்ல...

"ஆமாமா... பெரிய இமேஜ்... ரவுடி இமேஜ்... எப்பவும் ஒருத்தரைப் பார்த்தா மனசுக்குள்ள மரியாதை தான் வரணும்... உங்களைப் பார்த்து ஒருத்தன் பயப்பட்றான்னா அதில் நீங்க பெருமைப் படப்பிடாது... வேதனைதான் படணும்... அடுத்தவா பயத்துல வாழற



வாழ்க்கை எல்லாம் ஒரு வாழ்க்கையா...?" அவள் பட்டெனச் சொல்லி விட்டு அவ்விடத்தை விட்டு நகர, யாரோ வெந்நீரைத் தன் முகத்தில் அடித்தது போல் சேரனுக்கு முகம் சிவந்து போனது.

அதே கோபத்துடன் அங்கிருந்து வெளி வந்தவனை எதிர்நோக்கி வந்த வேலு, கையில் வைத்திருந்த பேப்பர், டீ கப்பை அப்படியே குப்பைக் கூடையில் போட்டு விட்டு அவனருகில் வந்தவன், "இதோங்கய்யா... வண்டியை எடுத்துறேன்..." என்று விழுந்து அடித்து ஓடி வர, அவனின் செய்கை சேரனுக்கு மேலும் கோபத்தைக் கூட்டியது.

"இப்போ எதுக்கு டீ கப்பைக் கீழே போட்ட...? அதை முழுசா குடிக்க வேண்டியதுதானே...!" அவன் கோபத்துடன் கத்த,

"இ... ல்லைங்க... நீங்க... கார்..."

அவன் போட்ட சத்தத்தில், வேலுவின் பற்கள் தந்தியடித்தன.

வேலுவின் வார்த்தைத் தடுமாற்றம் அகல்விழியின் கூற்றை உறுதிப்படுத்த, "ச்சே..." என்ற சொல்லுடன் கார் கதவைத் திறந்து, வேகத்துடன் மூடியவன், அங்கிருந்து சீற்றமாகக் கிளம்பினான்.

தனது வீடிருக்கும் அதே தெருவில் அமைந்த டென்னிஸ் கிளப்பில் சதீஷுடன் விளையாடியபோது, அவன் விளாசிய பந்துகளில் அவனின் கோபமும் வேகமும் தெரிந்தது.

அவன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் சதீஷ் திணறியவன், “சேரா... ஐ நீட் அ பிரேக்....” என்ற சொல்லுடன் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து கொள்ள, முகத்தில் வியர்வை வழியச் சேரனும் இன்னொரு இருக்கையில் அமர்ந்து கொண்டு வேக மூச்சுகளை வெளியிட்டான்.

அவனிடம் தண்ணீர் பாட்டிலை நீட்டிய சதீஷுக்கு அவன் கோபமாக இருப்பது தெரியவே, “மச்சி... ஆர் யூ ஆல்ரைட்...?” அவன் தோளில் கை வைத்துக் கேட்டான்.

அவன் கேட்டதுதான் சமயமென்று, “சத்தி... உனக்கு என்னைப் பார்த்தாப் பயம் வருதாடா...?” கோபமாகக் கேட்க...

“என்னது...?” சதீஷ் குழப்பமாகக் கேட்க,

“உனக்கு என்னைப் பார்த்தா பயம் வருதான்னு கேட்டேன்...”

அவன் திரும்பவும் விளக்க, சதீஷோ இன்னமும் அதே குழம்பிய பார்வையைப் பார்த்து வைக்க...

அவன் பார்வையில் சலிப்புடன் திரும்பியவன், அங்கே டென்னிஸ் பந்துகளைப் பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு பதினைந்து வயதுச் சிறுவனை அழைத்தான்.

“டேய்... இங்க வாடா...” அவனது அழைப்பில் இருந்த ஆளுமையும், குரலில் இருந்த இறுக்கமும், அதே சமயம் திடீரென இவன் தன்னை அழைப்பதில் அந்தப் பையனுக்குச் சற்றே பயம் உண்டானது.



அவன் முகத்தில் கலவரத்துடன் அவனைப் பார்க்க, சதீஷ் பக்கம் திரும்பியவன், “இங்க பாருடா... அந்தப் பையன் கூட என்னைப் பார்த்துப் பயப்படறான்... நானா அவனைப் பயப்படச் சொன்னேன்... நான் இப்போ அவனைக் கூப்பிடத்தானே செஞ்சேன்...” அதே கோபத்துடனும், தன்னைப் பார்த்து மனைவி இப்படிச் சொல்லி விட்டாளே என்ற ஆதங்கத்துடனும் சொல்ல...

அவன் பார்வையில் உற்ற நண்பனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

“டேய்... நீ இப்படி மிரட்டற மாதிரிக் கூப்பிட்டா அந்தப் பையன் பயப்படத்தானே செய்வான்... கொஞ்சம் சாஃப்டா கூப்பிட்டுப் பாரு... அவன் வருவான்...” என்ற சொல்லுடன், சதீஷ் திரும்பி அந்தப் பையனிடம், “தம்பி... இங்க கொஞ்சம் வாயேன்...” எனவும், இப்போது அவன் சதீஷின் அருகில் வந்து நின்றான்.

வந்து நின்றவனை முறைத்துப் பார்த்த சேரனிடம், அவன் மறந்தும் திரும்பிப் பார்க்கவில்லை.

வந்த பையனின் கையில் காலியான தண்ணீர் பாட்டிலை நீட்டி, “இதைக் கொஞ்சம் ஃபில் பண்ணிக் கொண்டு வா, ப்ளீஸ்...!” அவன் கன்னத்தைத் தட்டிக் கேட்க, பாட்டிலை வாங்கிக் கொண்டு அவன் சிட்டாகப் பறந்தான்.

போன அவனையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த நண்பனின் தோளில் தட்டியவன், “என்னடா... என்னாச்சு...?” சதீஷ் கேட்க, அவனிடம்

காலை அகல்விழி சொன்னதைச் சொல்ல, அதைக் கேட்ட சதீஷ், "யா... ஷி இஸ் ரைட்..." எனச் சிரித்த நண்பனை முறைத்தான்.

"எதுக்குடா என்னை முறைக்கிற...? அவங்க சொல்றதுல என்ன தப்பு...? எப்போ பாரு பாக்குறவங்க எல்லார் கிட்டயும் இப்படிப் பொரிஞ்சா யாருதான் பயப்பட மாட்டாங்க... உன்னோட பிஸினெஸ் புத்தியை எல்லார் கிட்டயும் காட்டாதே... யார் யார் கிட்ட எப்படி எப்படி நடந்துக்கணுமோ, அப்படி நடந்தா பயம் விலகித் தானா மரியாதை வரும்...!" நண்பன் விளக்கமாகச் சொல்ல...

"டேய், நான் என்ன அவ்வளவு கொடுமைக் காரனா...? அவள் என்னை அந்த ரேஞ்சுக்குத் தான்டா ட்ரீட் பண்றா... அடிக்கடி என்னை ரவுடி ரவுடின்னு சொல்றா... நான் என்னைக்குடா ரவுடித்தனம் பண்ணி னேன்...?"

"அதான் அவ்ளோ அதிரடியா அவங்களை மேரேஜ் பண்ணினியே... அது ஒண்ணு போதாது, உனக்கு ரவுடி இமேஜ் கொடுக்க! அன்னைக்கு உன்னோட பாடிகார்ட்ஸ் செஞ்ச வேலையை ஒரு போலீசா நான் ஆதரிச் சிருக்கேன்னு என் டிபார்ட்மென்ட்டுக்குத் தெரிஞ்சது... இப்போவே என் சீட்டைக் கிழிச்சு அனுப்பிடுவாங்க... நல்ல வேளை அன்னைக்கு நான் யூனிஃபார்ம்ல இல்ல... அதை எல்லாம் உனக்காகவும், உன் காதலுக்காகவும் தான்டா பொறுத்துக்கிட்டேன்...!" அன்று நடந்த நிகழ்வை அவன் நினைவுபடுத்த...



"விடு மச்சி... அவங்க வேலையை விட்டுத் தூக்கினா என் கிட்ட வந்துடு... உனக்கு என்னோட பாடிகார்ட்ஸ் லேயே ஹையர் பொசிஷன்ல வேலையைப் போட்டுத் தரேன்..." அவன் சிரிக்காமல் சொல்ல...

"பேசுடா பேசு... இப்போ என்கிட்ட பேசுறதை மத்தவங்க கிட்டப் பேசு... யாருக்கும் உன் மேல பயம் வராது..." அவன் நண்பனுக்கு எடுத்துக்காட்டுடன் சொல்ல...

"அதுதான் இப்போ என் அருமைப் பொண்டாட்டி யால எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாப் போய்க்கிட்டு இருக்கே... சீக்கிரம் என்னை மாத்திடுவாள்னு நினைக் கிறேன்..."

அவன் குரலில் இருந்த கனிவை சதீஷ் சிறிது நாளாகத்தான் உணர்கிறான்.

இதற்கு முன்னால் அவன் பார்த்த நண்பனுக்கும், இப்போது பார்க்கும் நண்பனுக்கும்தான் எத்தனை வித்தியாசம்...!

சிறு வயது முதல் அவன் தந்தைக்கு ஒற்றை மகனாக இருந்தவன், அவனே அந்த வீட்டிற்கு ராஜாவாக இருந்தான்.

தன் பிள்ளைக்குத் தாயில்லை என்ற குறை ஒரு நாளும் வந்து விடக் கூடாதென்பதற்காக, அவன் கேட் டதைக் கேட்ட நிமிடம் நிறைவேற்றும் தந்தையார், சேரனுக்கு எப்போதும் ஒரு தோழனைப் போன்றவரே...!

சிறு வயது முதல் அவனை எதற்கும் தடுத்த தில்லை.

அவன் படிப்பு, அவன் தொழில், அவன் உடுத்தும் உடை முதல், அணியும் செருப்பு வரையிலும் அவனின் விருப்பம் மட்டுமே எப்போதும் ஓங்கி நிற்கும்.

அவனது பதின் பருவத்தில் ஒரு நாள் பள்ளித் தோழனின் பிறந்த நாள் பார்ட்டியில் நண்பர்களின் வற்புறுத்தலால் ஒருமுறை மது அருந்தி விட, அவன் வீட்டுக்கு வந்த சமயம் அவனின் நடையில் இருந்த தள்ளாடலைக் கண்டு கொண்ட மணிவண்ணன், "என்ன மகனே! தண்ணி அடிச்சிருக்கியா...? என்கிட்ட கேட்டிருந்தா நானே வீட்ல பார் வெச்சுக் கொடுத்திருப்பேனே...!" எனச் சிரிக்கவும், சேரனுக்கு உள்ளுக்குள் குற்றவுணர்வு வரவே, அதில் தலை குனிந்து கொண்டான்.

"எதுக்கு மகனே தலை குனியுற...? களவும் கற்று மறன்னு சொல்வாங்க... இன்னிக்கி நீ கத்துக்கிட்ட... எப்போ மறக்கப் போறேன்னு நீதான் முடிவு செய்யணும்... நீ இப்படிக் குடிச்சுட்டு தள்ளாடிட்டு வரும்போது எத்தனை பேர் உன் முகத்தைப் பார்த்து மூஞ்சி சுழிச்சிருப்பாங்க தெரியுமா...? இந்த மாதிரி அடுத்தவங்க முன்னாடி நீ கேவலப்படணுமான்னு யோசிச்சு நடந்துக்கோ...!" அத்துடன் விட்டு விட்டார்.

அன்றிலிருந்து அவன் குடியை மறந்தவன்தான், அதன் பிறகு அவன் மறந்தும் மதுவின் பக்கம் சென்ற தில்லை.



அவனின் தந்தை சொன்னார் என்பதைத் தாண்டி யும், மணிவண்ணன் சொன்னது போலவே, இந்தச் சிறு வயதில் தன் தள்ளாடலைக் கண்டு முகத்தைச் சுழித்த மக்களை அவனும் கண்டு கொண்டுதான் வந்தான்.

அந்த முகச் சுழிப்பு அவனுக்குப் பிடிக்கவில்லை... மது அருந்தினால் இப்படி ஒரு முகச்சுழிப்பு வருமெனில், அது தனக்குத் தேவையில்லை என்று உதறித் தள்ளி னான்.

அவனை ஒரு விஷயம் செய்யச் சொல்லி யாராலும் கட்டுப்படுத்த முடியாது. அதே சமயம் இதைச் செய்யக் கூடாதென யாராலும் தடுக்கவும் முடியாது.

அவன் செய்யும் செயல்கள், எடுக்கும் முடிவுகள் அனைத்தும் அவன் விருப்பமே.

அதே சமயம், வாழ்க்கை நெறி அறிந்து செயல்படுபவன். அதனாலே அவனால் குறுகிய காலத்தில், தொழில் துறையில் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதிக்க முடிந்தது.

இப்படியிருக்கும் அவனை ஒரு பெண் பாதித்து, அவளுக்காக அவன் எந்த எல்லையை வேண்டுமா னாலும் தொட நினைக்கிறான் என்றால், அதில் அவனின் காதலின் தீவிரத்தைச் சதீஷால் உணர முடிந்தது.

சதீஷ் அவனது யோசனையில் இருக்க, "டேய்... சத்தி... என்னடா யோசனை... இங்க பாரு... நான் அந்தப் பையன் கிட்ட ஃப்ரெண்டாகிட்டேன்...!" அவன் கையில் இருந்த தண்ணீர் பாட்டிலைக் காட்டிச் சொல்ல...

அவனின் செய்கையில் சிரித்துக் கொண்டு "வெரி குட்... நல்ல முன்னேற்றம்... சரி, வா. கிளம்பலாம்..." எனவும், இருவரும் அங்கிருந்து கிளம்பினர்.

வீட்டை விட்டுப் போகும் முன்னர் இருந்த மன நிலைக்கும், இப்போது இருக்கும் மன நிலைக்கும் இருந்த வேறுபாட்டை உணர்ந்து கொண்டு, வீட்டை வந்தடைந்தவனை வரவேற்றது கமகமவென நாசியைத் துளைத்த மீன் வறுவல் வாசனை.

பல நாட்கள் கழித்து அவன் நாசியைத் தழுவும், அவனது பிடித்தமான உணவின் வாசனையை முகர்ந்த படியே உள்ளே நுழைந்தபோதுதான் அவனுக்கு அகல் விழியின் நினைவு வந்தது.

"ஹய்யோ மாமி...!" என்று அலறியவன், "ஷெண்பா ஷெண்பா..." கூக்குரலிட, அவன் குரலுக்கு அடித்துப் பிடித்து வெளிப்பட்ட ஷெண்பாவிடம், "ரிலாக்ஸ்! ரிலாக்ஸ்! மெதுவா வாங்க...!" என்றவன் சொல்லுக்குக் கட்டுப் படாமல், அவரின் கால்கள் வழக்கம் போல் வேகத்தைத் தான் கூட்டின.

அவர் வந்து நின்றதும், "என்ன ஷெண்பா... மீன் வாசனை அடிக்குது... நான்தான் நான்-வெஜ் எதுவும் செய்ய வேண்டாம்னு சொன்னேனே... மாமிக்கு இந்த வாசனை கூடப் பிடிக்காது..."

மனைவி என்ன ஆட்டம் ஆடப் போறாளோ என்ற கலக்கத்துடன் உள்ளுக்குள் இருந்தாலும், அதை மறைத்து அவன் சொல்ல...



"ஹய்யோ தம்பி... நானா செய்யல... நான் என்னிக் காவது உங்க பேச்சை மீறியிருக்கேனா...? பாப்பா தான் உங்களுக்குப் பிடிச்சதைச் செய்யச் சொல்லுச்சு! அப்பவும் நான் மாட்டேன்னு தான் சொன்னேன்... பாப்பா தான் அடம்பிடிச்சு செய்யச் சொல்லுச்சு...!" ஷெண்பா பதறலாகச் சொல்ல...

"என்னது... அவ செய்யச் சொன்னாளா...? இருக்காதே...!" அவன் யோசனையாகத் தனக்குள் முனக...

"ஹய்யோ தம்பி... சத்தியமா பாப்பாதான் செய்யச் சொல்லுச்சு... நீங்க வேணா அவங்களைக் கேளுங்க..." ஷெண்பா எங்கே அவன் தன்னைத் தவறாக நினைத்து விடுவானோ என்ற மன்றாடலுடன் சொல்லவே...

"சரி சரி... நீங்க போங்க..." என்றவன், மேலே அவளின் ரூமுக்குச் செல்ல விழைந்தவன், காலையிலே தான் குளிக்காததுக்கு அந்தக் குதி குதித்தவள் இப்போது இந்த வியர்வை நாற்றத்துடன் அவளருகில் சென்றால் தன்னை அடித்துத் துரத்தி விடுவாள் என மனம் எச்சரிக்கை விட, தனதறைக்குச் சென்று குளிக்கச் சென்றான்.

குளிக்கும் தறுவாயில் அவன் மனம் ஷெண்பா சொன்னதையே அசை போட்டுக் கொண்டிருந்தது.

'அவளா நான்-வெஜ் செய்யச் சொன்னா...! குளிக்காததுக்கே காலையில அந்தக் கத்துக் கத்தினா...! அவ எப்படி...?' யோசித்தவன்,

'ஓஹோ... ஒருவேளை நேத்து எனக்கு வெஜ் பிடிக்காதுன்னு சொன்னதுக்கு எனக்காகச் செய்யச் சொல்லியிருப்பாளோ... ஓஹோ... மை ஸ்வீட் பொண் டாட்டி... யூ ஆர் வெரி ஸ்வீட்... ஐ லவ் யூ சோ மச்..." தானே ஒன்றை அனுமானித்துத் தனக்காக அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காததைச் செய்ய முனைந்திருக்கிறாள் என்றால், அது தான் அவளை ஏதோவொரு விதத்தில் பாதித்திருக்கிறோம் என நினைத்துக் கொண்டான்.

இதை நினைத்தபோது அவன் மனது உற்சாகமாகக் கும்மாளமிட்டது.

அதே உற்சாகத்துடன் குளித்து முடித்து அலுவலகம் செல்லக் கிளம்பி வந்தவன், அவள் அறைக்குள் செல்ல,

அங்கே அவள் இருப்பதற்கு எந்த அடையாளமும் இல்லாமல் இருந்தது.

புருவ முடிச்சுகளுடன் அவளைத் தேடிக் கீழே வந்தவனை வரவேற்றது கமகமக்கும் மீன் வறுவலும், கோழிக் குழம்பும்.

செய்தவை எல்லாவற்றையும் டேபிளில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்த ஷெண்பாவிடம், "மாமி எங்கே?" என விசாரிக்க...

"பாப்பா... பின்னாடி தோட்டத்தில் இருக்கு தம்பி...! கூப்பிடவா...?"

"அவ சாப்பிட்டாளா...?"



"இல்லை தம்பி... இன்னிக்கி பாப்பா ஏதோ கார்த்திகை விரதமாம்... பச்ச தண்ணி பல்லுல படக் கூடாதாம்...!"

"விரதமா...? காலைல அந்த ஃபில்டர் காபியைக் குறை சொல்லிக் குடிக்கும்போது மேடம் விரதமில்லை யாமா...? அவ இருக்கிறதே சிட்டுக்குருவி மாதிரி... இதுல விரதமாம் விரதம்... அவளைக் கூப்பிடுங்க..."

"இதோ தம்பி..." என்றவர், நொடியில் அவளை அழைத்துக் கொண்டு வரவே, வந்த அவளோ மூக்கைச் சுடிதார் துப்பட்டாவால் தலையைச் சுற்றி முகமூடியைப் போன்று கட்டிக் கொண்டவாறு வர, அவளைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தான்.

"ஹே மாமி... என்னது இது...?" சிரிப்பினூடே அவன் கேட்க...

அவள் சிறிய விழியை விரித்து, முறைப்பது அவனுக்கு நன்றாகவே விளங்கியது.

"என்னடி இது... தீவிரவாதி மாதிரி... கழட்டு அதை..." அவன் சொன்னதற்குத் தலையை மறுப்பாக ஆட்டி,

"நான் போறேன்...." என்று அவள் நகர, அவள் கையைப் பிடித்துத் தடுத்தவன்,

"ஹே... சாப்பிட்டுப் போ..." என்க...

"ம்ஹும்... நான் இன்னைக்கு விரதம்... நீங்க சாப் பிடுங்கோ..."

அவள் மறுப்பு எதையும் காதில் வாங்காமல், அவன் அவளை இழுத்துத் தன்னருகில் அமர வைத்து,

“ஷெண்பா… இவளுக்கு வெஜ் சமைச்சிருக் கீங்களா…?” எனவும்…

“இல்லையே தம்பி.. பாப்பாதான் ஒண்ணும் வேண்டாம்னு சொல்லிடுச்சு…” ஷெண்பா சங்கடமாகச் சொல்ல…

“சரி.. வெறும் ரைஸ்ல தயிரும், நெய்யும் போட்டு எடுத்துட்டு வாங்க…” என்றவன், அது வரவே, அருகில் இருந்தவளின் முகம் பற்றி அவள் துப்பட்டாவைக் கழட்டியவன், “சாப்பிடு…” என்ற சொல்லுடன் தனது தட்டில் இருந்தவற்றை அவன் வெளுத்து வாங்கத் துவங்கினான்.

வெகு நாட்கள் கழித்து அவன் தனக்குப் பிடித்த உணவு உண்ணவும், அருகில் இருந்தவளின் மீது அதிகம் கவனம் வைத்திருக்கவில்லை.

இங்கே அகல்விழியோ வெகு சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்தியவள், ஒரு கட்டத்திற்கு மேல் பொறுக்க முடியாமல் போக, வாயைக் கைகளால் பொத்திக் கொண்டு வாஷ் பேசின் அருகில் சென்று, “உவ்வே… உவ்வே…” என்ற பெரிய சத்தத்துடன் வாந்தி எடுக்க ஆரம்பித்தாள்.

அவள் வாந்தி எடுக்கவும் அவள் பின்னே சென்ற ஷெண்பா அவள் தலையைப் பிடிக்க வரவே, “ஹய்யோ…



என்னைத் தொடாதேள்…!” என்று அவரை விலக்கி வைக்க, அவரைத் தொடர்ந்து பாதி உணவில் அவள் பின்னே வந்த சேரனையும் விலக்கி வைத்தாள்.

ஒரு வழியாகத் தன்னைச் சுத்தம் செய்து விட்டு மீண்டும் தனதிருக்கைக்கு வந்து அமர்ந்தவள், “நீங்க சாப்பிடுங்கோ… ஐயாம் சாரி… நேக்கு இந்த வாசனை எல்லாம் பழக்கமில்லை… அதான்…” அவள் சங்கடமாகச் சொல்ல…

“ஆர் யூ ஷ்யூர்… உனக்குப் பிடிக்கலைன்னா எனக்கு வேண்டாம்…!” அவன் தட்டைத் தள்ளி வைக்க…

“ஹய்யோ… நேக்கு நோ ப்ராப்ளம்… நீங்க சாப்பிடுங்கோ…” தட்டை அவள் கையிலே படாதவாறு அவனிடம் நகர்த்தி வைத்தாள்.

அவன் மீண்டும் இரண்டு வாய் எடுத்து வைத்த பின், திரும்பவும் வாஷ் பேசினுக்கு ஓடியவளைக் கண்டு அவனுக்கு வருத்தமாக இருந்தது.

வருத்தமாக இருந்தவனை… வற்புறுத்தி மீண்டும் உண்ண வைத்தவள், மூன்றாம் முறையும் அவள் இதையே தொடர, “ச்சே… எனக்குச் சாப்பாடே வேண் டாம்….” என்றவன் தட்டை நகர்த்தி வைத்தான்.

யாருக்குத்தான் அந்தத் தருணத்தில் உணவு உள்ளே செல்லும்.

அதுவும் அவள் தொடர்ந்து வாந்தி எடுக்கவே, அங்கே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவனுக்கு

உணவு உள்ளே செல்ல மறுத்துத் தட்டை ஒதுக்கித் தள்ள வைத்தது.

"ஹப்பாடி... உங்களுக்கு வேண்டாமா... இது... இது... இதுதான் எனக்கு வேணும்..." உற்சாகமாகச் சொன்னவளை வியப்பாகப் பார்த்து,

"அடிப்பாவி... இதுதான் உன் பிளானா... க்ராதகி..." சேரனின் குரலில் அத்தனை கோபம்.

எப்போதும் அவன் விரும்பி உண்ணும் வஞ்சரை மீன் வறுவலும், நாட்டுக் கோழிக் குழம்பும் இன்று அவனைப் பார்த்துக் கேலியாகச் சிரிப்பது போலிருந்தது.

"எனக்குச் சாப்பாடே வேண்டாம்...!" என்றவன், கையை உதறிக் கொண்டு... கார் சாவியையும் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, அவன் உணவை மறுத்துச் சென்றதில் அப்படி ஒரு அலாதித் திருப்தி.

இனிமேல் பெயருக்குக் கூட, அவன் தானிருக்கும் சமயம் அசைவ உணவைப் பற்றிப் பேசக் கூடாது என்பதில் அவள் மிகத் தெளிவாக இருந்தாள்.

அவளின் நியாய மனம், அவனை இப்படிப் பசியோடு அனுப்பியதில் உள்ளே குட்டத்தான் செய்தது.

ஆனால், இன்னொரு மனமோ, 'ஒரு நாள் சாப்பிடலைன்னா துரை ஒண்ணும் ஒரு சுத்து இளைச்சிட



மாட்டார்... நீ வாயை மூடிண்டு சும்மா இரு....' என நியாயம் பேசிய மனதின் தலையில் குட்டி உள்ளே அமுக்கியது.

"டேய் பனை மரம்... உன்னைத் தினமும் இப்படித் தான் நான் படுத்தி எடுக்கப் போறேன்... எத்தனை பேர் வாழ்க்கையை அழிச்சிருப்ப... அன்னிக்கி சுந்தரி என்ன அழுகை அழுதா... என்னோட அப்பா அம்மா உன்னாண்ட எவ்ளோ கெஞ்சியிருப்பா... அவா எல்லோரோட கண்ணீருக்கும் நீ பதில் சொல்லியே தீரணும்... இல்லை, நான் சொல்ல வைப்பேன்...!" என அவள் உள்ளுக்குள் சபதம் எடுத்துக் கொண்டாள்.

பாவம்.. இவளிட்ட சபதத்தில் கண்ணீர் அவன் சிந்துவானா, அல்லது இவள் சிந்தப் போகிறாளா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## 10

**கா**லையில் அவனை விரட்டி விட்டதும், அகல்விழி அவள் அறையில் அமர்ந்து கொண்டு, தனது அடுத்த திட்டத்தை வெகு சிரத்தையாகத் தீட்டிக் கொண்டிருந்தாள்.

அவனை ஒரு முறை படுத்தி எடுத்ததிலே தனக்குள் இப்படி ஒரு திருப்தி ஊற்றெடுக்கிறதெனில், அதை ஏன் தினமும் செய்யக் கூடாது என மனது கேள்வி கேட்க...

'ஹே சூப்பர் மனச்சாட்சி... கண்டிப்பா உன் ஆசையை நான் நிறைவேத்துறேன்...' என மனச்

சாட்சியிடம் மார்தட்டி உடனடி உடன்படிக்கையில் ஈடு பட்டாள்.

ஆபீஸ் வந்த சேரனுக்குக் கோபம்... கோபம்... கோபம் மட்டுமே...!

தனக்கு கேட் கதவைத் திறந்து விட்டு சல்யூட் அடித்த கூர்க்கா முதல் மேனேஜர் கிரி வரை காரணமேயில்லாமல் பொரித்தெடுத்து விட்டான்.

அவன் சிடு சிடுவென முகத்தை வைத்துக் கொண்டு, தன் முன்னால் வந்து நிற்பவரைப் பாரபட்ச மின்றிக் காய்ந்து எடுத்துக் கொண்டிருந்தான்.

வங்கி வரை சென்று வந்த ஜீவாவின் காதில், ஆபீஸ் ஊழியர்கள் பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

"இன்னைக்கு என்ன... சார் இவ்வளவு கடுப்பா இருக்காரு...? ஏதாவது பிரச்சனையோ...? நாம ஏதாவது தப்பு பண்ணிட்டோமா...?" என ஒரு பெண் கேட்டுக் கொண்டிருக்க...

"சார் வரும்போதே ரொம்பச் சிடுசிடுன்னு இருந்தார் காயு... வீட்ல ஏதாவது பிரச்சனையா இருக்கும்..." என்ற இன்னொருத்திக்கு...

"இருக்கும் இருக்கும்...! புதுசா கல்யாணமான வரில்ல...!" என இன்னொருத்தி கிண்டல் சிரிப்புடன் சொல்ல...



இவர்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டு வந்த ஜீவா, "ஹலோ லேடீஸ்... வேலை எதுவும் பார்க்கும் ஐடியா இருக்கா இல்லையா...? இந்த மாதிரி காஸிப் எல்லாம் லஞ்ச் இன்டர்வல்ல தாராளமாப் பேசலாமே...!" எனவும்,

"சாரி சார்...." என்ற பெண்கள் கூட்டம் அங்கிருந்து கலைந்தது.

அவர்கள் பேசிய விஷயத்தின் சாராம்சம் புரிந்து, தனது அதிகாரியைப் பார்க்கச் சேரனின் அறையில் அனுமதி பெற வேண்டிக் கதவைத் தட்ட, "ஹ் இஸ் திஸ்...?" என காரமாக வந்த கேள்வியில்,

"சார்... நான் ஜீவா..." என்றதும்...

"யா... உள்ளே வா...." என்றவனின் குரலைத் தொடர்ந்து உள்ளே வந்த ஜீவா, அவன் முன்னால் பாங்க் விவரங்களை அடுக்க, "ஓ.கே... நான் அப்புறம் பார்க்குறேன்... நீ கிளம்பு..." என்றவன், மீண்டும் கணினித் திரையில் கண்ணைப் பதித்தான்.

அவன் சொன்ன பிறகும் ஜீவா அங்கேயே நிற்பதை உணர்ந்து, "என்ன... நான் இங்க எதுவும் பாலே டான்ஸ் ஆடிக்கிட்டு இருக்கேனா...? என் மூஞ்சியையே பார்த்துக் கிட்டு இருக்க..." சேரன் பொரிய...

"சார்... காலையில் பிரேக்ஃபாஸ்ட் சாப்பிட்டீங் களா...?" ஜீவா கேட்டதும்,

"ஏன்... சாப்பிடலைன்னா... நீ எனக்குச் சமைச்சு எடுத்துட்டு வரதா உத்தேசமா?" கோபமாகக் கேட்டவனை,

"சாரி சார்... எக்ஸ்க்யூஸ் மீ..." என்றவன், அறையை விட்டு வெளியேறி, அடுத்த பதினைந்து நிமிடத்தில் திரும்பக் கையில் பார்சலுடன் உள்ளே வந்தான்.

"எங்க போன...?" சூடாக வந்தது கேள்வி சேரனிடமிருந்து...

"சார்... டிபன் வாங்கிட்டு வந்திருக்கேன்... வந்து சாப்பிடுங்க..." அவன் அங்கிருந்த சிறு மேஜையில் வாங்கி வந்தவைகளைப் பரப்பி வைக்கத் துவங்கினான்.

"உனக்கு எதுக்கு இந்த அதிகப்பிரசங்கித்தனம் ஜீவா... இதுதான் உன் வேலையா...? இதுக்குத்தான் இங்க நீ சம்பளம் வாங்குறியா...?" அவன் திட்டுவதையும் கேட்டுக் கொண்டு,

"சாரி... சார்..." என்ற சொல்லுடன், தான் செய்ய வேண்டிய வேலையை அவன் செய்து கொண்டு தானிருந்தான்.

"சார் ப்ளீஸ்..." ஜீவா கெஞ்சலாக அழைக்க...

அந்தக் கெஞ்சலுக்கு அவன் உள்மனம் கட்டுப் பட்டது.

முகத்தை உர்ரென வைத்துக் கொண்டு மேஜையின் அருகில் வந்தவன், ஜீவா வாங்கி வந்த இட்லிகளை முதல் மூன்றை, மூன்றே நொடியில் உள்ளே தள்ளினான்.

அவனுக்குத் தண்ணீர் எடுத்து வைத்த ஜீவா, அவன் அருகிலே நிற்க, "நீ சாப்பிட்டியா...?" கேட்க...



"அதெல்லாம்... காலையிலேயே முடிச்சுட்டேன்..." அவன் சிரிப்புடனே சொல்ல, சேரனுக்கும் அந்தச் சிரிப்புத் தொற்றிக் கொண்டது.

"ரொம்பப் படுத்துறா ஜீவா..." சேரன் பாவமாகச் சொன்ன விதத்தில், ஜீவாவின் சிரிப்புப் பெரிதானது.

"ஹா... ஹா... இன்னிக்கி என்ன சார் பண்ணினாங்க...?" சேரன் கேட்டதும், காலை தன்னை உண்ண விடாமல் அவள் செய்த வேலையை விவரிக்க,

"சார்... உங்க பிஸினஸ் மூளையை விட மேடம் மூளை ரொம்பச் சிறப்பாச் செயல்பட்டிருக்கு..." அவன் கேலியாகச் சொன்னாலும், "சீக்கிரம் உங்களைப் புரிஞ்சுப்பாங்க சார்... வருத்தப் படாதீங்க..." அவன் ஆறுதலாகச் சொல்ல, தலையாட்டி அதை ஆமோதித்த சேரனுக்கும் மனதில் அதே வேண்டுதலே இருந்தது.

ஜீவா வாங்கி வந்த ஐந்து இட்லிகளை உள்ளே தள்ளியதும்தான், சேரனுக்குக் கண்கள் வெளிச்சமாகத் தெரிவது போலிருந்தது.

சின்ன வயதிலிருந்து பசியென்றாலே என்ன வென்று தெரியாமல் வளர்ந்தவன், அவன் நினைத்த நேரம் நினைத்த உணவை உண்டு பழக்கப்பட்டவன் இளஞ்சேரன்.

எத்தனை வேலை இருந்தாலும் தன் வயிற்றுக்கு மட்டும் எப்போதும் வஞ்சனையே வைக்க மாட்டான். எத்தனை பெரிய மீட்டிங் இருந்தாலும் கையில் ஏதேனும் பானத்துடனே அதைத் தொடர்வான்.

அவன் வயிற்றுக்கு ஈயவில்லை எனில் தான் இந்த அதிகப்படியான கோபமும்... எரிச்சலும்...!

அதை அவனிடம் வேலைக்குச் சேர்ந்த சிறிது நாட்களிலே ஜீவாவும் தெரிந்து கொண்டான்.

காலை உணவைப் பதினொரு மணியளவில் முடித்துக் கொண்ட சேரன், மதியம் வரை அவனது நிதி நிறுவனத்தில் வேலைகளை முடித்துக் கொண்டு, ஒரு வாரமாகச் செல்லாத சேரன் ஸீ ஃபுட்ஸ் & எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் சென்றான்.

இந்நிறுவனம்தான் சேரனின் முதல் முற்றுத் தனி முயற்சி.

முதலில் ஆரம்பித்த போது தொழில் தெரியாமல் நிறையச் சறுக்கல்களைப் பார்த்து, சறுக்கலில் இருந்து கற்றுத் தேர்ந்து அவன் எடுத்து வைக்கும் அனைத்துப் படிகளும் வெற்றிப் படிக்கட்டுகளே...

இங்கேதான் கடலில் பிடித்து வரப்பட்ட மீன்களை ஐ.க்யூ.எஃப். (இன்டிவிஜுவல் குயிக் ஃப்ரோசென்) முறைப்படி பதப்படுத்தி, அதை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வேலை நடந்து வருகிறது.

மீன்களைப் பதப்படுத்த ஒரு பகுதி, அதைத் தரம் பிரிக்க ஒரு பகுதி மற்றும் பேக்கிங் செய்ய ஒரு பகுதி, என மூன்று பிரிவுகள் அடங்கிய அந்த ஃபாக்டரியை, முழுக்க முழுக்கச் சேரன்தான் நிர்வகித்து வருகிறான்.



கிட்டத்தட்ட இருநூறு முதல் முந்நூறு தொழிலாளர் களுடன், கோடியில் மதிப்புள்ள மெஷின்களின் உதவி யோடு ஓங்கி வளர்ந்து நிற்கிறது சேரன் சீ ஃபுட்ஸ்.

அவனது பாக்டரிக்குள் நுழைந்ததும் நைலான் கோட்டுக்குள் தன்னை அடக்கிக் கொண்டவன், கால்களில் அவன் அணிந்திருந்த ஜெஸ்சி ஜோர்டான் ஷுவைக் கழட்டி வைத்து, முழங்கால் வரையிலான வேறு பூட்ஸை மாட்டிக் கைகளில் கிளவ்ஸ், மற்றும் முகத்திற்கு ஒரு முகமூடியுடன் பாக்டரியை மேற்பார்வையிடச் சென்றான்.

அவனைத் தொடர்ந்து... ஜீவாவும் அவனைப் பின்பற்றினான்.

"ஜீவா... இன்னிக்கு ஷிப் பண்ண வேண்டிய கூட்ஸ் எல்லாம் தயார்தானே...?" எனக் கேட்டவனுக்கு,

"பேக்கிங் நடந்துக்கிட்டு இருக்கு சார்... இன்னும் 2 ஹவர்ஸ்ல ஷிப்ல ஏத்திடலாம்..." ஜீவா பதிலளிக்க...

"வாட் ஈஸ் திஸ் ஜீவா... இந்த நேரத்திற்கெல்லாம் பேக்கிங் முடிச்சிருக்க வேண்டாமா...? ஏன் இவ்ளோ டிலே...?" அவன் கேட்டுக் கொண்டு வந்த நேரத்தில், ஒரு பெரிய சத்தத்துடன் மெஷின்கள் அனைத்தும் நிற்க, சத்தம் வந்த திசைக்குச் சென்றான்.

ஆட்கள் அனைவரும் அங்கே கூடியிருக்க, அவர்களை விலக்கிச் சென்றவன், "என்னாச்சு...?" எனக் கேட்டவனுக்கு,

"தெரியலை சார்... திடீர்னு நின்னுடுச்சு..." கையைப் பிசைந்த சூப்பர்வைசரிடம்,

"சீக்கிரம் மெக்கானிக்கைக் கூப்பிடுங்க..." என்ற ஏவலை விடுக்க...

வந்த மெக்கானிக், "சார்... கன்வேயர் பெல்ட்ல ப்ராப்ளம் சார்... சரி பண்ணக் கொஞ்ச நேரம் எடுக்கும்..." பிரச்சனையை விளக்கினான்.

"சரி சரி. சீக்கிரமாகட்டும்... ஈவ்னிங் ஒரு டெலிவரி இருக்கு... குய்க் குய்க்..." என்றவன், ஜீவாவை முறைத்து, "நான் ஒரு வாரம் வரலைன்னா இப்படித்தான் இருக்குமில்ல..." கோபமாக உறுமியவனுக்கு, மெஷின் சரியாகும்வரை இருப்புக் கொள்ளவில்லை.

அடுத்த ஒன்றரை மணி நேரத்தில் மெஷின் சரி செய்யப்பட, பேக்கிங் விறுவிறுப்பாக நடந்தேறியது.

அனைத்துப் பொருட்களும் கன்டெய்னர் லாரியில் அடுக்கப்பட்டு, ஸ்டாக் செக் லிஸ்ட் எடுத்து, ஷிப்பில் ஏற்றும் வரையில் சேரன் உடனிருந்து மேற்பார்வையிட்டது மட்டுமில்லாமல், களத்தில் இறங்கியும் வேலையைப் பார்த்தான்.

எல்லா வேலைகளும் முடித்து அவன் நெட்டி முறித்தபோது, மணி எட்டே முக்கால் எனக் காட்டியது.

பேக்டரியை விட்டு வெளியே வந்தவன், அணிந் திருந்த உடையைக் கழட்டி அதன் இடத்தில் வைத்த



போது, அவனின் மனைவியின் ஞாபகம் வந்தது... கூடவே உதட்டில் விரிந்த சிரிப்பும் ஒட்டிக் கொண்டது.

அவனது திடீர்ச் சிரிப்பைக் கண்ட ஜீவா, "என்ன சார் சிரிக்கிறீங்க...?"

"இல்ல.. காலையில என்னை ஒரு வாய் வஞ்சரை மீனைச் சாப்பிட விடாம வாந்தி யெடுத்தா என் பொண்டாட்டி... ஆனா ஒரு மீன் பேக்டரியவே நான் நடத்திக்கிட்டு இருக்கிறது தெரிஞ்சா... ஹ்ம்... இன்னிக்கு மட்டும் உடம்புல இந்த ஸ்மெல்லோட நுழைஞ்சேன்... அவளோட ரியாக்ஷன் என்னவா இருக்கும்னு யோசிச் சேன்... சிரிப்பு வந்துடுச்சு..." அவன் சொல்லவும், ஜீவா வும் சிரித்துக் கொண்டு,

"நீங்க வேணா என் வீட்டுக்கு வந்து குளிச்சு ட்ரெஸ் சேஞ்ச் பண்ணிக்கோங்க சார்..." எனவும்...

தலையாட்டி மறுத்தவன், "இல்லை, வேண்டாம் ஜீவா... இன்னிக்கு மாமியோட ரியாக்ஷன் பார்க்கணும்... இது ஒண்ணும் ஒரு நாள்ல முடியறது இல்லையே... அவளுக்கும் என்னோட தொழில் எல்லாமே தெரிஞ் சாகணும்..." என்றவன், ஒன்பதரை மணியளவில் வீட்டை அடைந்தான்.

ஜீவாவிடம் சொல்லி விட்டு வந்தானே ஒழிய... அவனது காதல் மனது தன்னவளைச் சிரமப்படுத்த விரும்பவில்லை.

வெளியே கார் நிறுத்தும் இடத்தில் அமர்ந்திருந்த வேலுவை அழைத்து, ஷெண்பாவை அழைக்குமாறு

பணித்து, அவன் அங்கே சிட் அவுட்டிலே நின்று கொண் டான். அடுத்த ஐந்து நிமிடத்தில், அவர் அவன் முன்னே நின்றார்.

"ஷெண்பா... மாமி தூங்கிட்டாளா...?"

"இல்ல தம்பி... டி.வி. சத்தம் கேட்குது... பாப்பா இன்னும் தூங்கலைன்னு நினைக்கிறேன்..." எனவும்...

"சாப்பிட்டாளா...?"

"ஆச்சு தம்பி... எட்டு மணிக்கே சாப்பிட்டு மேலே போய்டுச்சு...."

"ஓஹோ... சரி... என்னோட ரூமிலிருந்து எனக்கு வேற ட்ரெஸ் எடுத்து வர்றீங்களா...? பாக்டரி போனேன்... மேலே ஒரே வாசம்... மாமி இருந்தா சாமி ஆடிடுவா...!" அவன் சிரித்தவாறே சொல்ல...

"இதோ எடுத்தாறேன் தம்பி...!" என்றவர், அவனுக் குத் தேவையான உடையை எடுத்துக் கொண்டு வர, அதை வாங்கிக் கொண்டவன், அவனது வீட்டில் வெளி யாட்கள் பயன்படுத்தும் குளியலறையை நோக்கிப் போக...

பதறிய ஷெண்பா, "ஐயோ தம்பி... அங்க எங்க போறீங்க... கீழ இருக்கற ரூம்லயே குளிச்சுக்கலா மில்ல..." என்க...

"இல்ல... ஒண்ணும் பிரச்சனையில்ல..." என்றவன், அங்கிருந்து போனதும் வேலுவும், ஷெண்பாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.



வேலு, "ஐயா இப்படியெல்லாம் இருந்து நான் பார்த்ததேயில்லம்மா..." வியப்பாகக் கூற,

"எல்லாம் பாப்பா மேல இருக்கற அன்புதான் வேலு...!" என்றவர் மனதினுள், 'ஆனாலும் அந்தப் பாப்பா... தம்பியைக் கொஞ்சம் புரிஞ்சுக்க முயற்சி பண்ணலாம்... எப்போ பாரு தம்பியை ஏதாவது பேசிக் கோபப்படுத்துது. காலைல புள்ளைய ஒரு வாய் சாப்பிடக் கூட விடலையே...!' ஆதங்கத்தோடு நினைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் வெளியே வந்தவன், மேலே தனதறைக்கு வந்தும் கூடத் திருப்தியடையாமல் இருக்க, மீண்டும் தன்னறையில் இன்னொரு குளியலைப் போட்டு வந்தவன், ஷெண்பா எடுத்து வைத்திருந்த உணவை முடித்துக் கொண்டு, அகல்விழியின் அறைக் குள் வந்தபோது, நேரம் பத்தைக் கடந்து அரை மணி நேரம் சென்றிருந்தது.

அறையில் அகல்விழி கட்டிலில் சாய்ந்தமர்ந்தவாறு நித்திரா தேவியின் மடியில் சாய்ந்திருந்தாள்.

அவளின் தூங்கும் முகத்தை ரசித்தவாறு உள்ளே வந்தவன், அவளைப் போல் ஓயாமல் வளவளத்துக் கொண்டிருந்த டி.வி.யை அணைத்து விட்டு, அவளின் அருகில் வந்து, சாய்ந்து படுத்திருந்தவளைச் சரியாகச் சரித்துப் படுக்க வைத்து, கால் வரை இருந்த போர் வையை இழுத்துப் போர்த்தி விட்டவன், கலைந்திருந்த அவளின் கூந்தலை ஒதுக்கியவனுக்கு, அவளின் பிறை

நெற்றி அழைப்பு விடுக்க, அதில் கவர்ந்தவன், தன் மென் இதழ்களைக் கொண்டு இதழொற்றியவன், அவளையே பார்த்தவாறு அமர்ந்திருந்தான்.

சற்று நேரத்தில் புரண்டு படுத்தவளின் கழுத்தடியில் அவனது வலது கை மாட்டிக் கொள்ள, முதலில் அவளை விலக்கி விட்டு எடுக்க நினைத்தவன், அந்நினைப்பைக் கை விட்டு அவளருகிலே வசதியாகப் படுத்துக் கொண்டான்.

சில நாட்கள் இல்லாத அவளின் அருகாமையை உணர்ந்த மனது, இன்று காலை நடந்த சம்பவத்தை யெல்லாம் மறந்து நிம்மதியான உறக்கத்தில் ஆழ்ந்தான்.

காலையில் கண் விழித்த அகல்விழியின் மூக்கு அருகில், ஆண் வாசனையை உணரத் திடுக்கிட்டு விழித் தவள், கண் எதிரே மெத்து மெத்தென்று இருக்கும் தலையணைக்குப் பதில் முரட்டு ஸ்பரிசம் உணர்ந்து, எழ முற்பட்டவளின் முயற்சி தடைப்பட்டது.

தனது இடுப்பைச் சுற்றிப் படர்ந்திருந்த சேரனின் கைகளை விலக்க அவள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியைத் தழுவ, சேரனின் கைகளில் பட் பட்டென ஓங்கி நாலு அடிகளைப் பாரபட்சமின்றி வழங்கினாள்.

அவளின் அடியில், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவன் திடுக்கிட்டு விழிக்க, தன் எதிரில் ருத்ரமா தேவியாக உருமாறியிருக்கும் மனைவியை முதலில் கண்டு குழம்பியவன், அடுத்து, "ஹே ராட்சஸி... ஏன்டி



மனுஷனைத் தூங்க விடாம இந்த அடி அடிக்கிற...?" கோபமாகக் கேட்க,

"உன்னை யாரு இங்க வந்து படுக்கச் சொன்னது...? கையை எடு... எடு..." அவன் கையைப் பிடித்துத் தள்ளி விட...

"நீதானே நேத்து நைட் என் கையைப் பிடிச்சு இழுத்துப் படுக்க வச்ச..." எனவும்...

"என்னது... நானா... பொய் சொல்லாதேள்... நான் அந்த மாதிரி எல்லாம் செய்திருக்க மாட்டேன்..." அவள் உறுதியாகச் சொல்ல...

"நிஜமா... நீதான் மாமி என் கையைப் பிடிச்சு இழுத்த..." எனவும், அகல்விழியின் கண்கள் குளமாகி, உதடு துடித்து அழுகைக்குத் தயாரானது.

"ஹே... இப்போ எதுக்கு அழற...?"

"நான்.... நானா கையைப் பிடிச்சு இழுத்தேன்... நான் அந்த மாதிரிப் பொண்ணில்ல..." அவள் இப்படிச் சொன்னதும்தான்... அவளின் அழுகைக்கு அர்த்தம் புரிந்தது.

"அடியே லூசு மாமி... நீ எந்த மாதிரி பொண்ணுன்னு எனக்குத் தெரியாதா...? உன் புருஷன் கையை நீ பிடிச்சு இழுக்காம வேற யாரு இழுப்பாங்க... என் கையைப் பிடிச்சு இழுக்க உனக்கு மட்டும்தான் ஃபுல் ரைட்ஸ் இருக்கு... ஆல்சோ, இதுக்கு எல்லாம் போய் யாராவது அழுவாங்களா...? டாம்ல தண்ணியிருக்குன்னு

சும்மா சும்மா திறந்து விடக் கூடாது.. தேவையானபோது திறந்து விட்டாதான் அந்தத் தண்ணிக்கு, அதாவது கண்ணீருக்கு வேல்யூ இருக்கும்...!" அவள் கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டவாறு அவன் சொல்ல...

அவன் சொன்னதின் சாராம்சம் புரிந்தாலும், அவன் கடைசியில் அவளைக் கிண்டலடிப்பது போலச் சொன்னதும், சேரனின் மகாராணிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

"கையை எடுங்கோ... முதல்ல இங்க இருந்து போங்கோ... இனி மேல் என் படுக்கைக்கு வந்தேள்... அப்புறம்... அப்புறம்..." என யோசித்தவளிடம்...

"வந்தா என்ன செய்வ...? ம்ம்..." அவள் கூந்தலை ஒதுக்கி விட்டு அவன் கேட்க...

"ஹான்... ஏதாவது செய்வேன்... முதல்ல இங்கிருந்து போங்கோ... போங்கோன்னா..." என அவனைப் பிடித்துத் தள்ளி விட...

"ராட்சசி..." என்ற சொல்லுடன் சிரிப்புடனே அங்கிருந்து சென்றான்.

சேரனுக்கு அவளுடன் இப்படி வம்பிழுப்பது மிகவும் பிடித்திருந்தது.

'இந்தச் சின்னச் சின்னச் சண்டைகளே போதும்... அவளைத் தன்னுடன் நெருக்கத்தில் வைத்துக் கொள்ள...' என்ற எண்ணிய மனதிற்கும் தினமும் இந்த வகையில் தீனி போட்டான்.



இதே போல அவளை மெல்ல மெல்லத் தன்னைப் புரிய வைத்து, அவளுக்குத் தன் காதலை உணர வைத்து விடலாம் என அவன் எண்ணியிருக்க...

அகல்விழியோ அவனின் நினைப்பைக் கூட மனதளவில் உள்ளே விடாமல், பெரிய இரும்பு கேட் போட்டுப் பூட்டியிருந்தாள்.

அவளைப் பொறுத்தவரை சேரன் ஒரு ரவுடி, கொலைகாரன். இப்போது தன்னைத் தன் பெற்றோரிடமிருந்து பிரித்து வைத்திருக்கும் கொடுமைக்காரன்.

ஆக அவளின் மனதில் அவனைப் பற்றிய எந்த ஒரு நல்ல எண்ணமும், இதுவரை இருந்ததில்லை. அதற்கான சூழ்நிலையும் அமைந்ததில்லை.

இதையேதும் அறியாச் சேரன்... அவளிடம் வெகு விரைவில் தன்னை உணர்த்தி விடலாம் என மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறான்.

இனிமையாகப் புலர்ந்த அக்காலை வேளையில், குளித்துத் தயாராகி உணவை முடித்துக் கொண்டு சேரன் வெளியே கிளம்பும் முன், அவனது அலுவலக அறையில் ஏதோ பேப்பர்ஸ் எடுத்துக் கொண்டிருந்தவனை, அறையின் வாயிலில் நின்று கொண்டு,

"நான் வெளியே போகணும்..." என்ற எந்த முன்னுரையும் இல்லாமல் அகல்விழி துவங்க...

அவன் ஏதோ வேலையில் இருந்தவன், இவள் சொன்னதைக் காதிலே வாங்கவில்லை.

அதை உணர்ந்து தொண்டையைச் செருமிக் கொண்டவள், "ஹலோ... க்கும்... ஹலோ..." என்க...

இந்தக் குரல் காதில் கேட்டாலும், அவன் திரும்பவில்லை. 'அதென்ன ஹலோ ஹலோ... அழகா இளான்னு கூப்பிட வேண்டியது தானே...' அவன் மனது அந்த அழைப்பிற்கு ஏங்கியது.

மீண்டும் ஒரு தொண்டைச் செருமலுடன், "இ...ளா..." என இழுக்க,

அந்த அழைப்பில் உதயமான புன்னகையுடன், "எஸ் பேபி..." எனத் திரும்பியவனை நோக்கி,

"படுபாவி... நல்லா கேட்டுண்டு வேணும்னுதான் திரும்பலையா..." என முனகியவள், "நான் வெளியே போகணும்..." என உரக்கச் சொல்ல...

"வெளியேவா... போ..." என்றவன், கையில் வைத்திருந்த ஃபைலுடன் அவள் அருகில் வர,

"எங்க போக... அதான் நீங்க என்னை ஹவுஸ் அரெஸ்ட் பண்ணியிருக்கேளே... எப்படிப் போக முடியும்...? அதுவும் அந்த ரெண்டு தடியன்களை மீறி..." சொன்னதும்தான் சேரனுக்கு அவளின் 'வெளியே' புரிந்தது.

"ஓஹோ... நீ அந்த வெளியே சொன்னியா...? ஓ.கே. ஓகே... எங்கே போகணும்...?"

"ம்ம்... ஷாப்பிங்... ஷாப்பிங்.... ஹான்... டி... தி. நகர் போகணும்..." அவள் குரலில் இருந்த தடுமாற்றம் அவனை உறுத்தியது.



ஆனாலும் அவளுக்குத் தோதான பதிலைக் கொடுக்க எண்ணியவன், "ஷாப்பிங்தானே... நானே ஈவனிங் வந்து உன்னைக் கூட்டிட்டுப் போறேன்..." என்று முடிக்க...

"இல்ல... நான் மட்டும் தனியா..." எனத் தொடங்கியவளைத் தடுத்து,

"வந்தா என்னோட வா... இல்லைன்னா எங்கேயும் கிடையாது..." என்று முடித்துக் கொண்டு, தன் வேலையில் இறங்கினான்.

சற்று நேரம் வரை அங்கே நின்று பார்த்தவளைக் கண்டு கொள்ளாமல் இருக்க, "ச்சே... சேடிஸ்ட்..." அவள் திட்டி விட்டுச் செல்ல, அதைச் சற்றும் காதில் போட்டுக் கொள்ளவில்லை சேரன்.

ஹால் சோபாவில் அமர்ந்திருந்த அகல்விழியின் கையில், அவள் தந்தையின் கடிதமும், அதன் உறையும் இருந்தன.

அது கூரியர் உறையில் அனுப்பப்பட்டிருக்க, அனுப்புனர் பெயரில் அவள் தந்தை நாராயணன் பெயர், மற்றும் சென்னை என்பது மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது.

சென்னையின் பின்கோட் கூட குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் அதை வைத்துக் கொண்டு அவர்களைக் கண்டுபிடித்து விட எண்ணினாள்.

தனது பெற்றோர் சென்னையில்தான் வசிக்கிறார்கள் என்பது உறுதியாகி யிருந்தாலும், அது

எங்கிருந்து அனுப்பப்பட்டது என்பதை அறிந்து கொள் ளவே அவள் வெளியே செல்ல நினைத்தது.

ஆனால், அவள் நினைப்பில் சேரன் ஒரு லாரி மண்ணை அள்ளிப் போடவும், தன் இயலாமையில் அகல்விழியின் கண்கள் கண்ணீரைப் பொழிய ஆரம் பித்தன.

வேலையை முடித்துக் கொண்டு வெளியே வந்த சேரனின் கண்களில், அவளின் வாடிய உருவம் கண்ணில் பட... அதை உணர்ந்து அவள் அருகில் வந்தவன், குனிந் திருந்த அவள் முகத்தை நிமிர்த்தி, "என்ன... எதுக்கு இப்போ இந்த அழுகை...?" அடிக்கடி கண்ணைக் கரித்துக் கொண்டு நிற்கும் மனைவியைக் கண்டு அவனுக்குச் சற்றே கோபம் வந்தது.

அவன் கையைத் தட்டி விட்டவள், "என்னை எதுக்கு இப்படிச் சித்ரவதை பண்றேள்... நேக்கு என்னோட அப்பாவைப் பார்க்கணும்... அன்னிக்கி என்னமோ அவாளைக் கண்டு பிடிச்சிடுவேன்னு பெருசாப் பேசி னேள்... இப்போ வரைக்கும் அவால்லாம் எங்க இருக்கா, என்ன செய்யறான்னு கண்டு பிடிச்சிருப்பேளா...?" அவள் சூடாகக் கேட்க...

"ஆள் விட்டுத் தேடச் சொல்லியிருக்கேன்... தேடிக் கிட்டு இருக்காங்க... சீக்கிரம் கண்டு பிடிச்சிடலாம்..." அவளுக்குச் சமாதானமான பதில் சொல்ல எண்ணி அவன் சொல்ல...

"கிழிச்சேள்... நீங்க எப்படியும் கண்டு பிடிக்க மாட்டேள்... நேக்கு அது நன்னாத் தெரிஞ்சுடுத்து... உங்களுக்கு நான்தான் வேணும்... அவா எப்படிப் போனா உங்களுக்கு என்ன...? எனக்கென்னவோ நீங்கதான் அவாளை ஏதோ செய்திருப்பேள்னு தோணறது.... நீங்க செய்யக் கூடியவர் தானே... ஆனா ஒண்ணை மட்டும் நல்லாப் புரிஞ்சுக்கோங்கோ... அவாளுக்கு மட்டும் ஏதாவது ஆயிடுத்து... நான் நிஜமா உயிரோடவே இருக்க மாட்டேன்..."



கோபம், ஆற்றாமை, இயலாமை என எல்லாம் கலந்து சொன்னவள், அங்கிருந்து விடுவிடுவெனச் சென்று விட... போகும் அவளையே வேதனையுடன் பார்த்திருந் தான் இளஞ்சேரன்.

"ப்ளீஸ் மாமி... என்னைக் கொஞ்சமாச்சும் புரிஞ் சுக்க முயற்சி பண்ணேன்...!" அவன் மனது வேதனை யில் அரற்றியவை, பாவம்! அகல்விழியின் காதுகளை எட்டவேயில்லை.

## 11

அன்றைய உரையாடலுக்குப் பின் அகல்விழி மற்றும் சேரனின் பேச்சு என்பது சற்றுக் குறைந்துதான் போனது.

சேரனுக்குமே அவளை எந்த வகையில் அணுகித் தன்னை நிரூபிப்பது என்பது புரியாத புதிராகவே இருக்க, சிறிது காலம் விட்டுப் பிடிக்கலாம் என மனம் அறிவுரை செய்யவே, மனதின் கட்டளைக்கு அடி பணிந்து, அவளை அவள் வழியில் விட்டு விட்டான்.

முன்னர் போல் அவளைக் கேலி, கிண்டல் செய்ய வில்லை எனினும், அவளின் தேவைகள் உணர்ந்து நடந்து கொண்டான்.

அகல்விழியிடம் புதிதாக அவன் எந்த மாற்றத்தை யும் கண்டு கொள்ளவில்லை... அதனாலே இந்த ஒதுக்கம் அவளுக்குச் சில மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கையில், அவளிடமிருந்து விலகியே இருந்தான்.

இரவில் அவளை ரசித்தவாறே கண்ணுறங்குவதை அவனது வழமையாக நடத்தி வந்தான்.

அதற்கு அவளிடமிருந்து எந்த எதிர்ப்பும் இருக்க வில்லை. ஒருவேளை இவனிடம் எதிர்த்தாலும் பயன் இல்லை என்ற ரீதியில் இருந்தாளோ என்னவோ...! அவன் அறியான்.

அன்று சேரன், அவனது அலுவலக அறையில் ஏதோ மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தான்.

வெகு நேரம் யாரோ தன்னை உற்று நோக்குவது போல் அவன் உள்ளுணர்வு உறுத்தவே, தலையை உயர்த்தியவன், எதிரில் அகல்விழி தயக்கமாக நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

வெகு நாட்கள் கழித்து அகல்விழி, தன்னைத் தேடி வந்திருக்கிறாள் என்பதை உணர்ந்த நொடியில், செய்து கொண்டிருந்த முக்கியமான வேலையைக் கூடப் பின்னுக்குத் தள்ளி விட, கையில் இருந்த கோப்புகள் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு, அகல்விழியின் அருகில் வந்தான்.



"ஹே மாமி... என்ன இங்கயே தயங்கி நின்னுட்ட.. உள்ளே வா..." அவன் அழைப்பிற்கு இணங்கி உள்ளே வந்தாளோ அல்லது அவளின் தேவைக்காக உள்ளே வந்தாளோ, அவள் வருவதே போதும் எனச் சேரனின் மனது துள்ளிக் குதிக்க, அவளை உற்சாகத்துடன் வரவேற்றான்.

"உட்காரு அகல்...!" அவன் ஒரு இருக்கையைக் காட்டி உபசரிக்க, அவளும் முகத்தில் எந்த மாறுதலையும் காட்டாமல் இருக்கையில் அமர்ந்தாள்.

அவனும் அவள் அருகில் மற்றொரு இருக்கையை இழுத்துப் போட்டு அவள் கைகளைப் பற்றிக் கொண்டு, "என்னடா..." குரலில் அன்பைத் தேக்கி அவள் கன்னத்தை இதமாகத் தடவி அவன் கேட்க, அவளோ, அவன் கைக்குள் அடங்கியிருந்த அவளது கைகளை விலக்கிக் கொண்டவள், கன்னத்தை வருடிய அவன் கைகளையும் ஒதுக்கினாள்.

அவளின் அச்செயல் சேரனை வருத்தினாலும், இது அவனுக்குப் புதிதில்லையே.

ஒரு பெருமூச்சுடன் மன வருத்தத்தை ஒதுக்கித் தள்ளியவன், "என்ன மேடம்... ரொம்ப நாளுக்குப் பிறகு என்னைத் தேடி வந்திருக்கீங்க...?" அவன் வரவழைத்த புன்னகையுடன் கேட்க...

அவன் கேட்டதைக் காதில் வாங்காதவள் போல், "நான் உங்க கம்ப்யூட்டரை யூஸ் பண்ணிக்கலாமா...?"

அவள் அனுமதியாகக் கேட்டதும், அவனுக்குச் சப்பென் றானது.

அவன் மனது என்ன எதிர்பார்த்தது...?

இந்த நீண்ட நாள் இடைவெளியில் அவள் தன் காதலைப் புரிந்து கொண்டு, தன்னிடம் காதல் சொல்ல வந்திருக்கிறாள் என அவன் மனம் எண்ணியது போலும்.

அவன் எதிர்பார்த்தது அவள் வாய் மொழியாக வராமல் இருந்தமையால் வந்த சோர்வு, அவன் முகத்தில் தெரிந்தாலும், அதை அகல்விழி சற்றும் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

அவள் இருந்த மனநிலையில் சேரனின் முகச் சோர்வு எதுவும் அவளைத் தாக்கியிருக்கவும் வாய்ப் பில்லை.

அவள் அனுமதிக்காகக் காத்திருப்பது புரிந்ததும், "ம்ம்... பண்ணிக்கோ..." என்றவன், அமர்ந்திருந்த இடத்தை விட்டு நகர்ந்து, அந்த அறையை விட்டே வெளி யேறினான்.

வெகு நேரம் தோட்டத்தில் நடை பயின்று கொண் டிருந்தவன் மனதில் பல எண்ணங்கள் புயல் காற்று போல் சுழன்றன.

தன்னை அவள் ஏன் இந்தளவு வெறுக்கிறாள் என்பது மிகப் பெரிய கேள்வியாக அவனைத் தாக்கி நின்றது.



இத்தனை நாள் அவன் யோசிக்க மறந்தது என்று சொல்வதை விட, அவனுக்கு யோசிக்கப் பிடிக்காமல் ஒதுக்கி வைத்திருந்த பல விஷயங்கள் இந்த நொடி அவன் மனதைத் தாக்கின.

தான் அவளைக் காதலிக்கிறோம் என்பது அவளுக்குத் தெரியாத புது விஷயமல்ல.

திருமணத்திற்கு முன்னதாகவே தன் காதல் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்த பின்னும், தன்னை மறுத்து இன்னொருவனைத் திருமணம் செய்து கொள்ளத் தயாராகி யிருக்கிறாள்.

அதுவும், அந்த நாள் அவள் முகத்தில் இருந்த புன்னகையும், பூரிப்பும், உண்மையாக இருந்தது.

அந்தப் புன்னகை அன்னையின் வற்புறுத்தலாலோ அல்லது தந்தையின் மிரட்டலாலோ நிச்சயம் வந்திருக் காது என்பது வரை சேரன் அறியாத பருவப் பைய னில்லை.

அப்படியானால் தன்னை அவள் இம்மியளவும் விரும்பவில்லை என்பது உறுதியே...!

'அப்போது நாம்தான் அவளைக் கட்டாயப் படுத்தியிருக்கிறோமோ...?'

இந்த எண்ணம் வந்த நொடியில், அவனின் நெஞ்சம் உள்ளுக்குள் அழுத்தியது.

'அவளுக்கு நிஜமாகவே தன்னைப் பிடிக்க வில்லையா...?' மனம் கேள்வி கேட்டது.

ஆனால், அதற்குப் பதில்தான் அவனிடமில்லை.

தோட்டத்தில் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து கொண்டவன், மனதைத் தாக்கிய பல கேள்விகளுக்கு விடை காண, யோசனையில் ஆழ்ந்திருந்தவனை ஷெண்பாவின் குரல் கலைத்தது.

"தம்பி... தம்பி..." அவரின் குரலில் மீண்டு வந்தவன்,

"சொ... சொல்லுங்க ஷெண்பா..." நொடியில் தன்னை மீட்டுக் கொண்டவன், குரலைச் சரி செய்தான்.

"உங்களுக்கு உள்ள போன் வந்திருக்கு தம்பி... ஜீவா தம்பிதான் பேசுச்சு... உங்க போனுக்குப் போட்டுச் சாம்... நீங்க எடுக்கலைன்னு வீட்டு நம்பருக்குப் போட்டி ருக்கு..." ஷெண்பா விளக்கம் சொல்ல...

"நீங்க போங்க, நான் வரேன்..." என்றவன், ஷெண்பா சென்றதும் சில நொடிகளைத் தன்னைச் சரி செய்து கொள்ள எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

அவன் ஜீவாவிடம் பேசி முடித்து, அவனது அலுவலக அறைக்குள் நுழைய, அங்கே அகல்விழி இருக்கவில்லை.

அவன் முகத்தில் ஒரு விரக்திப் புன்னகை ஒட்டிக் கொண்டது... கூடவே, 'மடையா... அவளுக்கு உன் மேல் காதலே இல்லை எனும்போது எதற்கடா இந்த வீண் எதிர்பார்ப்புகள்...?" என மூளை மனதைக் குட்ட, அதை மனதுதான் ஏற்றுக் கொள்ள மறுத்தது.



'இல்ல இல்ல... அகல் இப்போ என் மேல கோபமா இருக்கா... அவளுக்குக் கொஞ்சம் யோசிக்க அவகாசம் கொடுக்கணும்... அதுதான் சரி...' மனம் மூளைக்கு அறிவுரை கூற, மூளையோ, "இப்படியே அவகாசம் கொடுத்துக் கொடுத்து நீயும் வாழாதே! அவளையும் வாழ விடாதே...!" மூளை ஆற்றாமையுடன் சொல்லி விட்டு அமைதி காத்தது.

இப்படித் தன் மனதை அழுத்தும் எண்ணங்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டு, அப்போது அகல்விழிக்காக ஒதுக்கி வைத்திருந்த கோப்பினைக் கையில் எடுத்து அதில் மூழ்கினான்.

வேலை முதுகை உடைக்கும்படி அதிகமாகத் தானிருந்தது.

ஆனால், எங்கே முதுகு வலிக்குப் பயந்து செய்து கொண்டிருக்கும் வேலையை ஒதுக்கி வைத்தால், மனதில் வலி சேர்ந்து கொள்ளுமோ என்ற பயத்துடன், தானே கண்ணுறங்கும் வரை வேலையைச் செய்து கொண்டிருந் தவன் முன் காலையில்தான் கண்ணயர்ந்தான்.

அதிகாலையில் வழக்கமான நேரத்திற்குச் சதீஷிட மிருந்து அழைப்பு வரவே, முந்தைய இரவின் மனச் சோர்வு, உடல் சோர்வு இரண்டையும் புறம் தள்ளி வைத்து, அன்றைய பொழுதைத் துவக்கினான்.

எப்போதும் போல் இன்று ஏனோ அவனுக்கு அகல்விழியின் பின்னால் செல்ல விருப்பம் இருக்க வில்லை.

அவனுக்குமே தான் இப்போது இருக்கும் நிலையை ஆராயச் சற்று அவகாசம் தேவைப்பட்டதோ என்னவோ, சதீஷுடன் காலை விளையாட்டை முடித்துக் கொண்டவன், எப்போதையும் விட இன்று வெகு விரைவிலே அலுவலகத் திற்குக் கிளம்பிச் சென்றான்.

என்ன தான் மனைவியை அவகாசம் என்ற பெயரில் இப்போதைக்கு, ‘அவளுக்குத் தனிமை’ என ஒதுக்கி வைத்தாலும், இதே போல் ஒவ்வொரு நாளும் ஒதுக்கி வைக்க முடியுமா என்பதில் சேரனுக்குச் சந்தேகம் இருக்கத்தான் செய்தது.

தனக்குள் ஒரு வேலியைப் போட்டுக் கொண்டு, தானுண்டு தன் வேலையுண்டு என இருந்தவனின் மனம், முதல் முறையாக அகல்விழியைக் கண்டதும்தான் தடுமாறியது.

தடுமாறிய நொடியே... இடறி விழுந்த இதயம் அவளிடம் சரணடைந்து, அவளைத் தன்னுடன் இருத்திக் கொள்ள ஆசைப்பட்டது.

அவள் தனது பெற்றோரை அதிகம் தேடுகிறாள் என்பது, அவன் நன்கு அறிந்த உண்மையே...!

அதே சமயம் தன் மனைவி வேண்டுவதை நிறை வேற்ற முடியா நிலையில் இருந்தான் இளஞ்சேரன்.



இன்று இல்லையெனினும் வரப்போகும் நாட்களில் அவளிடம் தன்னை எப்படியாவது புரிய வைத்து விட வேண்டுமென்ற முடிவுடன், தனது அலுவலகம் கிளம்பிச் சென்றவனுக்கு, சற்று நேரத்திலே ஷெண்பாவிடமிருந்து அழைப்பு வந்தது.

“சொல்லுங்க ஷெண்பா...”

“தம்பி... பாப்பாக்கு கொஞ்ச நேரம் முன்னாடி ஏதோ போன் வந்தது... நான்தான் முதல்ல எடுத்துப் பேசினேன்... ஏதோ பொண்ணுதான் பேசுச்சு... பாப்பா வும் ஏதோ பேசிட்டுத் திடீர்னு அழுது கிட்டே மேல போயிடிச்சு தம்பி... நான் என் வேலை யெல்லாம் முடிச்சிட்டுப் பாப்பாவைச் சாப்பிடக் கூப்பிட மேல போனேன்... ரூம்ல பாப்பாவைக் காணோம் தம்பி... வீடு முழுசும் தேடிட்டேன்...”

அவர் பேச ஆரம்பித்த போதே அவரின் பதட்டம் புரிந்திருந்த சேரனுக்கு, அவர் முடிக்கையில் அமர்ந் திருந்த இடத்தை விட்டு எழுந்திருந்தான்.

“நான் உடனே வரேன்...” என்ற பதிலுடன் அலுவலகத்தை விட்டுக் கிளம்பியும் இருந்தான்.

அவன் போகும் போது அவன் முகத்தில் தெரிந்த படபடப்பைக் கண்டு கொண்ட ஜீவா, அவனை ஏதோ கேட்க வரும் முன் சேரன் அவனைக் கடந்திருந்தான்.

விஷயம் ஏதோ விபரீதம் எனப் புரிந்தவனாய்ச் சேரனுடன் செல்ல அவன் எத்தனித்த வேளையில்,

சேரனின் கார் அலுவலக வளாகத்தை விட்டு வெளியேறி யிருந்தது.

இருபது நிமிடத்தில் வீடு வந்து சேர்ந்திருந்த சேரனின் எண்ணம் முழுவதும், அவனின் அகல்விழியே அகம் புகுந்திருந்தாள்.

காரைப் போர்டிகோவில் நிறுத்தி விட்டுப் புயலெனக் காரை விட்டு இறங்கிய சேரன், நேரே சென்றது, தான் காவலுக்கு வைத்திருந்த அந்த இருவரின் முன்னர்தான்.

இவனின் அவசர நடையில் கட்டுமஸ்தான உடல் வைத்திருந்த அந்த இருவரும் சற்று மிரண்டுதான் போயினர்.

அவர்கள் மிரட்சியைக் கண்டு பாவம் பார்க்க வில்லை சேரன்.

அவர்கள் ஏதோ பேச வாயைத் திறக்கும் முன்னர், அவர்கள் கன்னத்தில் தன் அடியை இடியென இறக்கி யவன், அவர்களை உறுத்து விழித்து விட்டு, மறு வார்த்தை பேசாமல் வீட்டினுள்ளே சென்றிருந்தான்.

அவர்களுக்குக் கொடுத்த அந்த அடியிலே ஷெண்பாவின் உடல் ஒரு நிமிடம் நடுங்கி அடங்கியது.

காவலுக்கு வைத்திருந்தவர்களுக்கு இந்த அடி யென்றால்... அவளைத் தன் பொறுப்பில் விட்டு வைத்து, அப்பொறுப்பை நிறைவேற்றாத தனக்கு என்ன தண்டனையோ என ஷெண்பாவின் உடல் ஒரு நிமிடம் உதறித்தான் போனது.



ஆனால், சேரனுக்கு ஷெண்பாவைப் பற்றிச் சிந்திக்கவெல்லாம் நேரம் இருக்கவில்லை.

உள்ளே வந்தவன், நேராக மேலே சென்று, அகல்விழி இருந்த அறை முழுவதும் தேடினான். அங்கே அவள் இருப்பதற்கு எந்த அறிகுறியும் தெரியவில்லை.

அங்கே தொடர்ந்து வீடு முழுவதுமிருந்த இண்டு இடுக்குகள் அனைத்திலும் மனைவியின் தடத்தை ஆராய்ந்து பார்த்தவனுக்கு, அவள் இருப்பதற்கான எந்த அடையாளமும் தென்படாமல் போக...

சேரனின் மனம்தான் மீண்டும் தன் காதலில் தோற்று விட்டதாக எண்ணிப் புழுங்கியது.

அவளைத் தன்னுடன் வைத்தாவது அவளிடம் தன் காதலைப் புரிய வைத்து விட வேண்டுமென்றுதான் அவளைக் கட்டாயமாகத் திருமணம் செய்து கொண்டான்.

ஆனால், திருமணமான நாளிலிருந்து அவன், அவனைப் புரிய வைக்க எடுத்த அனைத்து முயற்சிகளி லேயும் தோற்றுப் போனதை நினைத்து, அவன் வேதனை யடைந்தான்தான்.

ஆனால், இன்று அவளை முழுதாக இழக்க நேரிடும் என அவன் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை.

தொழிலில் பல சாதனைகள் அடைந்த தன்னால், வாழ்க்கையில், தன் காதலில் தோற்று விட்டதாக உணர்ந் தான்.

அவள் பெற்றோருடன் இருக்கும்போது கூட அவள் கல்லூரி செல்ல அவளுக்கு யாரேனும் துணை வேண்டுமே...! அவளை ஒரு முறை கூடச் சேரன் தனியாகச் சந்தித்ததில்லை. ஒன்று, அவள் தோழி சுந்தரி அவளுடன் இருப்பாள்... இல்லையெனில் அவள் தங்கை ஸ்ரீ வள்ளியுடன் வெளி வருவாள்.

'இன்று ஒரு நாள் அவளைத் தவிர்த்தது தவறோ...?'

'தான் அவளுடன் இருந்திருக்க வேண்டுமோ...?'

'நேற்று அவளின் முகமே சரியில்லையே... நான் தான் அவளைப் பாதுகாக்கும் கடமையிலிருந்து தவறி விட்டேன்... என்னால்தான் அவள் இங்கிருந்து தனியே கிளம்பி விட்டாள்...' என அவள் காணாமல் போனதற்குத் தன்னையே குற்றம் சாட்டிக் கொண்டான்.

'ஹய்யோ... குட்டிம்மா! உனக்குத் தனியா எங்க யும் போகத் தெரியாதேடி...! எங்க போன...? என்கிட்டே வந்துடும்மா. ப்ளீஸ்டா...' அவன் மனம் விடாமல் அரற்றிக் கொண்டிருக்க, கால்களும், கண்களும் அவளைத் தேடும் பணியில் மும்முரமாக ஈடுபட்டன.

தேடிக் கொண்டே அவன் வீட்டின் பின்புறம் வந்தவனுக்கு, அப்போதுதான் அந்த மாற்றம் தெரிந்தது.

அது அவன் தாத்தா காலத்து வீடு என்பதால், அந்தக் காலத்தில் வேலைக்காரர்களுக்கு என இன்னொரு மாற்று வழியைப் பின்பக்கமாக உபயோகித்திருந்தனர்.

சேரனின் அன்னை வந்த பிறகுதான், எதற்கு இந்த வேறுபாடு என அந்தச் சின்ன கேட்டைப் பூட்டியிருந்தார்.



அதனால் வீட்டின் பின்பகுதியில் ஆள் நடமாட்டம் அவ்வளவு அதிகமாக இருக்காது.

ஷெண்பா அடிக்கடி தோட்டக்காரனை விட்டுப் பின் பகுதியில் சுத்தப்படுத்தி வைப்பார்... சேரன் கூட அதிகமாக அந்தப் பகுதிக்கு வந்திருக்கவில்லை.

அகல்விழியைத் தேடி வந்தவனுக்கு, அந்தக் கேட்டில் இருந்த அவளின் ஆடையின் சிறு கிழிசல் துண்டுகள் கண்களுக்குப் புலப்படவே, அதன் அருகில் சென்றான்.

கிழிந்திருந்த அந்த உடையைக் கையில் எடுத்துப் பார்த்தவனுக்கு, அது அகல்விழியின் உடைதான் என உறுதியானது. முதலில் வேதனையில் உழன்று கொண் டிருந்த அவன் மனம், அகல்விழி தன்னிடமிருந்து தப்பித்துப் போயிருக்கிறாள் என்ற உண்மை புரியவே, வேதனை கோபமாக மாறி, கோபம் இயலாமையாக உரு வெடுத்து, இயலாமை சுய்பச்சாதாபத்தில் மூழ்கியது.

தன்னிடமிருந்து இந்த வழியில் தப்பிக்கும் அளவிற்கு அவள் தன்னை வெறுத்திருக்கிறாள் என்பதை அவனால் துளியும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அந்த எண்ணம் அவனை முற்றிலும் உடையச் செய்ய, அப்படியே கீழே மண் தரையில் பொத்தென அமர்ந்தவன், கண்கள் மங்கலாகி, கன்னங்கள் ஈரமாகி, இரண்டு சொட்டுக் கண்ணீரை உற்பத்தி செய்தது.

அதற்கு மேல் என்ன என்று யோசிக்கும் திறன் அவனுக்கு முற்றிலும் மழுங்கடிக்கப்பட்டிருந்தது.

தன் கால்களைக் கட்டிக் கொண்டு, பூட்டப்பட்டிருந்த அந்த கேட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு, விருந்தாக அமைந்தது அவனின் அகம் புகுந்தவளின் வருகை.

## 12

தன்னவளின் உருவத்தைத் தன் கண்ணுக்குள் நிரப்பிக் கொண்டவனுக்கு, ஐம்புலன்களும் அப்போதைக்கு வேலை நிறுத்தம் செய்தன.

கடந்த ஒரு மணி நேரமாக அவன் மனம் தவித்த தவிப்பிற்குச் சற்று இளைப்பாறும் வண்ணம், அகல்விழியின் உருவத்தைப் பார்த்தவாறு அசையாமல் அமர்ந்திருந்தான்.

சேரன் பின் தோட்டத்திற்கு வந்து வெகு நேரமானதால், வேலைக்காரர்களும், ஷெண்பாவும், அலுவலகத்திலிருந்து சேரனின் பின்னோடு வந்திருந்த ஜீவா என அனைவரும் அவனைத் தேடிக் கொண்டு பின் தோட்டத்திற்கு வந்திருந்தனர்.

அங்கே சேரன் அமர்ந்திருந்த நிலையைக் கண்டு, அனைவரும் பதறியவர்களாய் அவனருகில் வந்திருந்தனர்.

ஜீவா அவனை நெருங்கி, மண்டியிட்டவாறு, "சார்... சேரன்... ஆர் யூ ஆல் ரைட்...." அவன் தோள்களைக் குலுக்கியதெல்லாம் சேரனை எந்த வகையிலும் பாதிக்கவில்லை.



தன் தொடுகைக்கு அவனிடம் எந்தப் பிரதிபலிப்பும் இல்லையென்றதால், ஜீவா அவனை நோக்க, சேரனின் பார்வை தனக்கு நேரே எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க.. ஜீவாவும் அவனைத் தொடர்ந்தான்.

அதற்குள், "என்ன பாப்பா, இப்படிப் பண்ணிட்ட... நீ ஏன் பாப்பா தம்பியை இப்படிப் படுத்தி எடுக்கிற... போற போது சொல்லிட்டுப் போயிருக்கக் கூடாதா...? உன்னைக் காணோம்னதும் தம்பி எப்படித் தவிச்சுப் போய்டுச்சு தெரியுமா...? ஏன் பாப்பா இப்படிச் செய்யுற...?" ஷெண்பா கடந்த ஒரு மணி நேரமாகச் சேரன் படும் தவிப்பைக் கண் கூடாகப் பார்த்ததால், வந்த ஆற்றாமையால் அகல்விழியைத் திட்டத் துவங்கினார்.

அகல்விழியின் முகத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த சேரனுக்கு, ஷெண்பா திட்டுவது ஏதும் அவன் காதுகளை எட்டவேயில்லை.

இங்கிருந்து தப்பித்து ஓடும்போது கிழிந்த அவளது துப்பட்டாவும், சுடிதாரும், அவளது வலது பக்கம் கிழிசலாகத் தொங்கிக் கொண்டிருக்க, மதிய வெயிலில் அலைந்து திரிந்ததால் அவள் முகம் பொலிவிழந்திருக்க, அதையும் மீறி அந்த முகத்தில் இருந்த சோகம் சேரனைத் தாக்கத்தான் செய்தது.

ஷெண்பாவின் பேச்சால் அகலின் மூக்கு விடைத்து, கண்கள் கண்ணீரைப் பொழியத் துவங்க, அதில் உணர்வு பெற்றவனாய் நிகழ் உலகத்திற்குத் திரும்பிய சேரன், இன்னமும் ஓயாமல் திட்டிக் கொண்டிருந்த ஷெண்பாவிடம்,

"ஷெண்பா... போதும்... நிறுத்துங்க..." ஓங்கிய குரலில் அவரிடம் மொழிந்தவன், தான் அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தான்.

டிரைவர் வேலுவிடம் திரும்பி, "உள்ள போய் இந்த கேட் சாவியை எடுத்துட்டு வா..." அவன் கட்டளையிட, அடுத்த நொடி வேலு அவ்விடத்தை விட்டு நகர்ந்திருந் தான்.

சில நிமிடங்களில் வேலு கையில் சாவியுடன் வர, அதை வாங்கிய சேரன் அந்தச் சின்ன கேட்டைத் திறக்கும் முயற்சியில் இறங்கினான்.

அந்த கேட் பூட்டப்பட்டுப் பல காலம் ஆகியதால், பூட்டு சற்றுத் துருப் பிடித்திருந்தது.

சேரன் சாவியை உள்ளே நுழைப்பதே சற்றுச் சிரம மாகத்தான் இருந்தது. எவ்வளவு கவனமாக இருந்தும், உள்ளங்கையில் சிறு சிறு சிராய்ப்புகளுடன் தான் கேட்டைத் திறந்தான்.

அவன் கேட்டைத் திறந்தும் கூட, தலையைக் குனிந்து நின்று கொண்டிருந்த அகல்விழி, இருந்த இடத்தை விட்டுச் சற்றும் அசையவில்லை.

"ம்ம்... உள்ளே வா..." அந்தக் குரலில் இருந்தது கோபமா, கட்டளையா, இத்தனை நேரம் அவளைக் காணாததால் வந்த பரிதவிப்பா...?

எதையும் ஆராயும் நிலையில் அகல்விழி அப்போது இருக்கவில்லை.



கண்ணை மறைத்த கண்ணீருடன் சேரனைக் கடந்து சென்றவள், அங்கிருந்து விடுவிடுவென வீட்டினுள் சென்று விட்டாள்.

அங்கே நின்றிருந்த வேலைக்காரர்களைப் பார்வையாலே அப்புறப் படுத்தியவன் ஷெண்பாவிடம், "அவளுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுங்க!" என்றவனுக்கு ஒரு சரியை உதிர்த்து விட்டு ஷெண்பா அங்கிருந்து நகர்ந்து செல்ல எத்தனிக்க,

"ஒரு நிமிஷம் ஷெண்பா... நீங்க என் மேல அக்கறையோட இருக்கீங்கன்னு நல்லாவே தெரியும் ஷெண்பா... ஆனா நீங்க அவளை வார்த்தையால காயப் படுத்துறதை நான் விரும்பல... புரிஞ்சுப்பீங்கன்னு நினைக்கிறேன்..." அவன் அப்படிச் சொன்னதும் அவ ருக்குள்,

'ச்சே... இந்தப் பையன் ஏன்தான் இந்தப் பிள்ளை மேல் இவ்வளவு அன்பா இருக்கானோ...! அந்தப் பொண்ணு தம்பியைக் கொஞ்சமாவது புரிஞ்சுக்குதா...?' என்ற சலிப்பு எழுந்ததை முகத்தில் காட்டாமல் அங்கிருந்து நகர்ந்தார்.

அனைவரும் சென்றவுடன் அந்த இடத்தில் ஜீவா வும், சேரனும் மட்டுமே தனித்திருக்க, நீண்ட நெடிய பெருமூச்சை வெளியிட்ட சேரனின் உணர்வுகளை, ஜீவா வால் ஓரளவிற்குப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஜீவா ஆதரவாகச் சேரனின் அருகில் வந்து, அவன் தோள்களைப் பற்றிக் கொள்ளத் தன் முகத்தை அழுத்தித்

துடைத்தவன், அவனை நோக்கி ஒரு புன்னகையை வீசி, "ஐயாம் ஆல் ரைட் ஜீவா... போகலாம்..." என அங்கிருந்து நகர...

"சார்... மணி மூணாச்சு... ஏதாவது சாப்பிட்டு வாங்க... நான் வெயிட் பண்றேன்..." ஜீவா சொல்ல, தலையை மறுப்பாக அசைத்தவன்,

"பசிக்கலை ஜீவா... நீ சாப்பிட்டியா...?"

"ஆச்சு சார்... நான் லஞ்ச் முடிச்சுட்டு வரும்போது தான் நீங்க அவசரமா கிளம்புறதைப் பார்த்தேன்... உங்க பின்னாடியே ஓடி வந்துட்டேன்..."

"ஹ்ம்... சரி. வா, போகலாம்... ஃபேக்டரில வேலையிருக்கு..." என்றவன், வீட்டினுள் செல்லாமல், போர்டிகோவில் இருந்த காரை எடுத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

அறைக்குள் முடங்கியிருந்த அகல்விழிக்கு உணவு எடுத்துக் கொண்டு சென்ற ஷெண்பாவிற்கு அழுது கொண்டிருந்தவளைப் பார்த்தபோது ஒரு பக்கம் கோபம் இருந்தாலும், இன்னொரு பக்கம் அவளின் குழந்தைத் தனத்தை ஓர் அளவிற்குத் தெரிந்திருந்தவர்,

"இந்தப் பொண்ணு ஏன் அதையும் கஷ்டப்படுத்தி, தம்பியையும் கஷ்டப்படுத்துதுன்னு தெரியலை!" என்று சலித்துக் கொண்டவர், கட்டிலில் ஒருக்களித்து அமர்ந்திருந் தவளிடம் உணவுத் தட்டை நீட்டினார்...

கண்களில் கண்ணீருடன் அவரை ஏறிட்டுப் பார்த் தவள் அவளுக்கு வேண்டாமென்று தலையசைக்க...



அவளிடமிருந்து இதுதான் பதில் கிடைக்கும் என அறிந் தவர் ஒன்றும் பேசாமல் தட்டில் இருந்த சாதத்தில், சாம்பாரைக் குழைத்து அவளின் வாயருகே இட்டுச் சென்றார்...

அவள் பிடிவாதமாக வாயைத் திறக்காமல் அமர்ந் திருக்க, அவரும் அதே பிடிவாதத்துடன் கையைத் தளர்த்தாமல் நின்றிருந்தார்.

கடைசியில் அகல்விழி தான் அவரிடம் தோல் வியைத் தழுவ வேண்டியதாக இருந்தது...

இத்தனை நேரம் வெயிலில் அலைந்ததற்கும், மனம் சுமக்க முடியாத பாரத்தைச் சுமந்ததற்கும்... ஷெண்பா கொடுத்த உணவு, உடம்புக்குச் சற்றுத் தெம்பளிக்க முதல் இரண்டு வாய் உணவிற்கு முரண்டு பிடித்தவள் அடுத் தடுத்த வாயை அமைதியாக விழுங்கிக் கொண்டாள்.

அவள் உண்டு முடித்ததும், "போய்க் குளிச்சிட்டு... ட்ரெஸ் மாத்து பாப்பா... சாயந்திரம் வரும்போது தம்பி உன்னை இப்படிப் பார்த்தா என்னைத்தான் திட்டும்...!" என்றவாறு அங்கிருந்து கிளம்பினார்.

அவர் சென்ற பின்னும், வெகு நேரம் சுவரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அகல்விழியின் காது களில் அவள் அம்மா சொன்ன வார்த்தைகள் நெஞ்சை நொறுக்கியது...

"இன்னமும் எங்களை என்னவெல்லாம் பண்ண லாம்னு நினைச்சுட்டு இருக்க... போதும் இதுவரைக்கும்

நீ செஞ்சது... உன்னால நாங்க பட்ட அவமானம், கஷ்டம் எல்லாம் போதும்டிம்மா... இனி எங்களுக்கு ஒரு பொண்ணுதான்... அவளை என் உயிரைக் கொடுத் தாவது நல்லபடியா வளர்த்துக்குவேன்.

"தயவு செஞ்சு நீ இங்கிருந்து போயடு... இன்னமும் இங்க நின்னு என் ஆம்படையானுக்கு இருக்கற மிச்சச் சொச்ச உயிரையும் எடுத்துடாதே..."

அவள் அன்னை அவள் முகத்திற்கு நேராகப் பேசிய வார்த்தைகளை அவளால் எப்படி மறக்க முடியும்?

கூடவே அவள் தங்கை ஸ்ரீவள்ளி சொன்ன வார்த்தைகளும் அவள் காதில் நிற்காமல் ஒலித்தன.

"அக்கா... அப்பாவை நீதான்க்கா காப்பாத்தணும். ப்ளீஸ்க்கா... ப்ளீஸ்..." என்ற சொற்கள் அவள் மூளை யைச் சுழற்றின.

அதே நினைவில் அமர்ந்திருந்தவள் எத்தனை நேரம் அதே நிலையில் இருந்தாளோ ஒரு முடிவாக எழுந்து சென்று குளித்து வந்தவள் கபோர்டில் சேரன் வாங்கித் தந்திருந்த உடைகளை ஆராய்ந்தாள்.

அதில் ஒரு புடவையை எடுத்துக் கட்டிக் கொண்டு, நீர் சொட்டிய கூந்தலைத் தளரப் பின்னி, நெற்றியில் பொட்டிட்டுக் கீழே சென்றாள்.

ஷெண்பா கன்னத்தில் கை வைத்து உணவு மேஜையில் அமர்ந்திருக்க, அவரின் அருகில் சென்றாள்.



"அவர் எப்போ வருவார்...?"

அவள் யாரைப் பற்றிக் கேட்கிறாள் என ஷெண்பா அறிந்திருந்தாலும், அவருக்கு இது கனவோ என்ற சந்தேகம் இருக்கத்தான் செய்தது. கூடவே அவளின் உடையிலும், முகத்திலும் தெரிந்த வேறுபாடு அவருக்குப் புதிதாக இருந்தது.

அவளையே அவர் திகைத்த பார்வை பார்த்திருக்க, அது புரிந்தவள் போல் "இளா எப்போ வருவார்...?" மீண்டும் அவள் அழுத்தமாகக் கேட்க,

சேரனுக்கான அவளின் அழைப்பில் அகமகிழ்ந்த ஷெண்பா, "தம்பி இன்னிக்கு வர லேட்டாகும்னு சொல்லச் சொல்லுச்சு பாப்பா... உன்னைச் சாப்பிட வைக்கச் சொல்லுச்சு... நீ சாப்பிடுறியா... எடுத்து வைக்கவா...?" ஷெண்பா பரபரப்பானார்.

அவருக்கு அகல்விழியின் இம்மாற்றம் மகிழ்ச் சியைக் கொடுத்தது. அந்த மகிழ்ச்சி அவர் பேச்சிலும் வெளிப்பட்டது...

"இல்லை... வேண்டாம். நான் அவர் வந்ததும் சாப்பிட்டுக்கிறேன்... நீங்க போயப் படுங்கோ..." அவள் சொல்லவே,

"அதெல்லாம் வேண்டாம் பாப்பா... நீ இப்போவே சாப்பிடு... நான் உனக்கு எடுத்து வெச்சிட்டு அப்புறம் போறேன்..." ஷெண்பா மறுக்க...

"ப்ளீஸ்... நீங்க போங்கோ... நான் பார்த்துக் கிறேன்..." அவள் குரலில் இருந்த கெஞ்சல் ஷெண்பாவை உருக்க...

"சரி பாப்பா... மறக்காம சாப்பிடணும். சரியா..." அவளிடம் உறுதியாகச் சொன்னவர், "ஒரு நிமிஷம் பாப்பா..." என்றவர் சமையலறைக்குள் நுழைந்து ஃபிரிட்ஜில் ஒரு பிளாஸ்டிக் கவரில் வைத்திருந்த ஜாதி மல்லிப் பூச்சரத்தை எடுத்து வந்து அவள் கையில் கொடுத்தார்.

அவள் யோசனையாக அதைப் பெற்றுக் கொண்டவள், "எதுக்கு...?" கேள்வியாகக் கேட்க...

"இதை வெச்சுக்கோ பாப்பா... நம்ம தோட்டத்துல பூத்ததுதான்..." அவர் சொல்ல...

மீண்டும் ஒரு புருவ முடிச்சுடன் அவரை ஏறிட்டவள், "இன்னிக்கு இந்தப் புடவைல அழகா இருக்க பாப்பா... இதையும் வெச்சுக்கோ... இன்னும் அழகா இருப்பே...!" அவர் பேசியதில் இருந்த உள்ளர்த்தம் அகல்விழிக்குப் புரியாமலில்லை..

அவள் பேச்சில் குழந்தைத்தனம் கொண்டவள் தான்... ஆனால் அவள் குழந்தையில்லையே...!

அமைதியாக அதை வாங்கிக் கொண்டவள் தன் தலையில் சூடிக் கொள்ள, அவளின் அழகை முழுதாகக் கண்டவர் அவள் கன்னத்தில் கை வைத்து, "இனி மேலாவது ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கணும் பாப்பா..." என்றவர் மகிழ்ச்சியோடு அங்கிருந்து சென்றார்.



அப்போது தன்னைச் சரமாரியாகக் கேள்வியால் துளைத்தெடுத்தவர் இப்போது முகத்தில் பூத்த சந்தோஷத்துடன் செல்வதில் அவர் இளஞ்சேரனின் மேல் வைத்துள்ள அன்பு நன்கு புரிந்தது அகல்விழிக்கு.

மற்றவர்களின் உணர்வுகளை அவர் முகம் பார்த்துப் புரிந்து கொள்ளும் அகல்விழிக்குத் தான் இப்போது செய்யப் போகும் செயலினால் தன் மேல் உயிரையே வைத்திருக்கும் கணவனை உயிரோடு கொல்லப் போகிறோம் என்ற நினைப்பு சற்றும் இருக்க வில்லை.

ஷெண்பா சென்றவுடன் அதே உணவு மேஜையில் தலை கவிழ்ந்து படுத்துக் கொண்டவள் வெகு நேரமாகியும் சேரன் வராததால் தூக்கம் செருகியது.

இங்கிருந்தால் தூங்கி விழ வேண்டியதுதான்... என நினைத்தவளாய் மேலே சென்றாள்...

அவள் தங்கும் அறைக்குச் செல்லாமல், அருகில் இருந்த சேரனின் அறைக் கதவின் குமிழில் கை வைத்தாள்...

கால்களும், கைகளும் நடுங்க... உள்ளுக்குள் உதறல் எடுத்தது.

சற்று நேரம் கண் மூடி... மூச்சை உள்ளிழுத்து வெளியிட்டவள் ஒரு முடிவுடன் அறைக்குள் நுழைந்தாள்.

இதுவரை அவள் அந்த அறைக்கு ஒரு சில முறை தான் வந்திருக்கிறாள்.

முதல் முறை வந்தபோதும் இவ்வறையை அலங்கோலப் படுத்தி விட்டுச் சென்றாள். மறுமுறை வந்தபோது அந்த அறையை ரசிக்கும் மனநிலை சற்றும் இருக்கவில்லை...

இந்த முறையும் அதே நிலைதான் என்றாலும், இப்போது மனதின் படபடப்பைக் குறிக்க, அவ்வறையை ரசிப்பதில் கவனம் செலுத்த முயன்று கொண்டிருந்தாள்.

அவள் முன்னர் உடைத்தெறிந்த பொருட்கள் எல்லாம் அதே போல் மீண்டும் அங்கங்கே இடம் பெற்றிருந்தன. மற்றப்படி அந்த வீட்டில் மற்ற அறைகளில் உள்ள எல்லாவிதமான வசதிகளும் அவ்வறையில் இருந்தன, ஒரே ஒரு சின்ன மாற்றமாக...

முன்னர் அங்கே சுவரில் சேரனின் முழு நீளப் படத்திற்குப் பதிலாகச் சேரனும், இப்போது அகல்விழியும் அவனும் கல்யாணக் கோலத்திலிருந்த பெரிய படம் இருந்தது.

அன்று அவளிருந்த மனநிலைக்குச் சற்றும் மாறாக, அப்படம் அழகாக வந்திருந்தது.

சேரன் அவள் கழுத்தில் தாலி கட்டுவது போலவும், தலை குனிந்து அவள் தாலியை ஏற்பது போலவும் இருந்த அப்படத்தில் அவளின் கண்ணீர் மறைக்கப் பட்டிருந்தது.

அந்த நொடியை நினைத்தபோது, அவளின் விழிகள் இப்போதும் கண்ணீரைச் சுரக்க, மௌனமாக



அதைத் துடைத்துக் கொண்டவள் அங்கே அப்படத்தைப் பார்த்தவாறு நின்றிருந்த நொடி கதவை யாரோ திறக்கும் சத்தம் கேட்டது.

சத்தம் கேட்ட நொடியில் அவள் திரும்பிப் பார்ப்பதற்கும்... சேரன் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

அவளை அந்த நேரத்தில்... அவனின் அறையில் எதிர்பாராத சேரனுக்கு ஒரு வியப்பு மட்டுமே... அதைப் புருவத்தை உயர்த்தி வெளியிட்டவன் அவளிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

வியப்பு மறைந்த அடுத்த நொடியில் கையோடு கொண்டு வந்திருந்த பையை அறையின் டேபிளில் வைத்தவன், நேராக கபோர்டிற்குச் சென்று மாற்றுடையை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்து கொண்டான்.

அகல்விழிக்கு அவனின் மாற்றம் புரிந்தது... ஆனால் அந்த மாற்றத்தை உள்ளம் உணர்ந்து கொள்ள மறுத்தது.

மற்ற நேரமாக இருந்திருந்தால் இப்போதைய இந்நிலைக்கு அவனின் கேலி கிண்டல்களும் பதிலாகக் கிடைத்திருக்கும். ஆனால் அகல்விழிக்கோ, 'எப்படியோ அவன் காரியத்தை இன்னும் கொஞ்ச நேரத்தில் சாதிக்கப் போறான்...' என உள்ளம் எக்காளமிட்டது.

அதே நினைவுடன் கட்டிலில் சென்று அமர்ந்தவள் அவன் வருகைக்காகக் காத்திருந்தாள்...

சேரன் குளித்து உடை மாற்றி வந்தபிறகும் கூட அகல்விழி அந்த அறையில் இருப்பது அவனுக்கு மேலும் ஆச்சரியமே...!

ஆனால் எதையும் பேசாமல் தனது பேகிலிருந்த செல்போனை எடுத்து, அகல்விழி அமர்ந்திருந்த பக்க மிருந்த சார்ஜரைப் போடச் சென்றான்.

சார்ஜ் போட்டு விட்டு அங்கிருந்து நகர்ந்தவனின் கையைப் பிடித்துத் தடுத்தாள் அகல்விழி.

நிஜமாகவே சேரனுக்கு ஆச்சரியமான ஆச்சரியம்... இப்போது அவனுக்கு அப்பட்டமாகத் தெரிந்தது...

ஒரு அடி நகர்ந்திருந்தவன் அவள் பிடியை உணர்ந்து திரும்பிப் பார்க்க, அகல்விழி உதட்டில் பூத்த சிரிப்புடன், அவனை நோக்கினாள்.

சேரன் இன்னமும் ஆச்சரியம் விலகாமல் அவளைப் பார்த்து நிற்க, "சாரி இளா...!" என்று சொன்ன நொடி சேரனின் பிடியில் இருந்தாள் அகல்விழி.

அமர்ந்திருந்தவளை அள்ளி எடுத்தவன் அவளின் எலும்புகள் நொறுங்கும் அளவிற்கு இறுக்கி அணைத் தான்.

அவள் மீண்டும் ஒரு சாரி சொன்னதும்... சேரன் முற்றிலுமாக உடைந்திருந்தான்.

மேலும் மேலும் அவளை இறுக்கி அணைத்தவன், அவளைத் தன்னோடு புதைக்கும் முயற்சியில் ஈடுபட் டிருந்தான்...



அவன் மட்டுமே அணைத்திருந்தானே ஒழிய, அகல்விழியின் கரங்கள் அந்தரத்தில் தான் தொங்கிக் கொண்டிருந்தன. ஆனால் அவள் வந்த நோக்கம் உணரவே நடுங்கிய விரல்களை இறுக்கி, கைகளை உயர்த்திச் சேரனின் முதுகில் படரவிட்டாள்...

சேரன் இருந்த மனநிலையில் அவன் அவளின் அணைப்பை உணரவில்லை...

அவன் கடந்த எட்டு மணி நேரமாகத் தவித்த தவிப்பை மனைவியின் அணைப்பில் ஈடு செய்யும் முயற்சியில் இருந்தான்.

"என்னைக் கொன்னுட்டடி... உன்னைக் காணோம் னதும் என் உயிரே என்கிட்ட இல்ல தெரியுமா...? ஏன் இப்படிச் செஞ்ச...? நான் திரும்பவும் உன்னைத் தொலைச் சுட்டேன்னு நினைச்சு மனசு கிடந்து அடிச்சுக்கிச்சு தெரி யுமா...?"

"ப்ளீஸ் குட்டிம்மா... தயவு செஞ்சு இனிமேல் இப்படி செய்யாதே... என்னால உன்னைப் பிரிஞ்சு வாழற வாழ்க்கையை நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது... பிகாஸ் ஐ லவ் யூ தட் மச்... உன்னை என் உயிரை விட அதிகமா நேசிக்கிறேன்..." அவன் பிடி தளரவேயில்லை.

அவனின் வார்த்தையில் இருந்த உண்மையைப் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இல்லாத அகல்விழி அவனுக்குப் பதில் சொல்லும் பொருட்டு, "நானும்தான் இளா...!" என்றாள்.

ஆம். அவனுக்குப் பதிலாகத்தான் சொன்னாள். அவள் உள்ளத்திலிருந்து உணர்ந்து வரவில்லை அந்த வார்த்தைகள்.

ஆனால் சேரன் அந்த வார்த்தையில் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தான்.

இதற்காகத்தானே அவன் ஏங்கியது.

இந்த உணர்வை அவள் உணர வேண்டுமென்று தானே அவன் இத்தனை நாட்கள் காத்திருந்தது.

அவள் முகம் பார்த்து மீண்டும் அந்த வார்த்தையைக் கேட்க நினைத்த சேரன்... அவளைத் தன்னிடமிருந்து பிரிக்க எத்தனிக்க, அகல்விழியோ அவனின் பார்வையைத் தவிர்க்கும் பொருட்டு அவனை இறுக்கி அணைத்தாள்.

அவள் அணைப்பு சேரனுக்கு வேறு செய்தியைச் சொல்ல, "ஹே... மாமி..." என்றழைக்க...

வெறும் "ம்ம்..." மட்டுமே பதிலாக வந்தது.

"என்ன ம்ம்... இங்க என்னைப் பாரு..." அவன் கேட்டதற்கு வெறும் தலையாட்டலே பதிலாக வந்தது.

"என்னைப் பார்க்க மாட்டியா...?"

மீண்டுமொரு தலையாட்டல் அவளிடம்...

"அப்போ இப்படியே இருக்கப் போறியா...?"

அதே தலையாட்டல்... ஆனால் இப்போது மேலும் கீழும் ஆடியது.



குதூகலமானான் சேரன்.

"வாவ்... ஹே மாமி... அப்போ... அப்போ..." அவனின் இழுவைக்கு,

"ம்ம்..." என்ற பதிலை அகல்விழி கொடுத்த நொடி "ஹுர்ரே..." என உற்சாகமானவன், அவளை அள்ளியெடுத்துக் கட்டிலில் சரிந்தான்.

ஷெண்பா கொடுத்திருந்த ஜாதிமல்லிப் பூச்சரம் சேரனைக் கிறங்கடிக்க... அதில் முகம் புதைத்து நுகர்ந்தான்.

அவள் கழுத்தின் வளைவில் முகம் புதைத்தவன், "மாமி... டு யூ நோ ஹவ் ஹேப்பி ஐ அம்... ஐ லவ் யூ சோ மச்டா... ஐ லவ் யூ அ லாட்..." என்றவன் அப்போதும் அகல்விழியின் முகத்தைப் பார்க்கவில்லை...

அவள் அவனுக்கு நேர் எதிர்த் திசையில் முகத்தைத் திருப்பியிருந்ததால் அவளுக்கு வெட்கம் என நினைத்து அவன் பேசிக் கொண்டே இருந்தான்.

ஒரு கட்டத்தில் பேச்சு முடிந்து அவளுள் அவனைத் தேடும் முயற்சியில் இறங்கியவன் அவள் கழுத்து, கன்னம், நெற்றி என உலா வந்தவன் அவள் உதட்டிற்கு இடம் பெயர்ந்த போது அவள் கண்களைக் காண ஆசைப்பட்டு அறையின் மங்கிய வெளிச்சத்தில் அவள் கண்களைச் சந்தித்தவனுக்கு அதிர்ச்சியளித்தாள் அகல்விழி...

அடுத்த நொடி, நெருப்பில் வெந்தது போல் அவளை விட்டும் நகர்ந்திருந்தான்.

13

ஆசையோடு மனைவியை அணுகிய இளஞ்சேரனுக்கு அவள் கண்களில் வழிந்த கண்ணீரைப் பார்த்ததும் நெருப்பைத் தொட்டாற் போல் உடல் சுட, அடுத்த நொடி அவளை விட்டு எழுந்திருந்தான்.

அவளை விட்டு எழுந்த மறுநொடி கட்டிலை விட்டும் எழுந்தவன், கையில் அகப்பட்ட தலையணையை எடுத்து விசிறியடித்தான்.

அவன் தலையணையை விசிறிய வேகத்தில், எதிரிலிருந்த டீபாயின் மீது வைத்திருந்த பூ ஜாடி உடைந்து துண்டுகளானது...

உடைந்து சிதறிய கண்ணாடித் துண்டுகளைக் கண்ணாரப் பார்த்தபோதும் அவனுக்குக் கோபம் அடங்கவில்லை...

இன்னும் எதைப் போட்டு உடைத்தால் அவன் ஆத்திரம் அடங்குமென்றும் அவனுக்குப் புரியவில்லை.

அவனின் செயலில் திடுக்கிட்டுக் கண் திறந்த அகல்விழி அடுத்த நொடி அவனின் செய்கையில் திகைத்துப் பயந்தவள், கட்டிலின் மறு கோடிக்குச் சென்று காலைக் குறுக்கி அமர்ந்து கொண்டாள்.

அவளின் அந்தச் செய்கை இளஞ்சேரனை மேலும் மேலும் கோபப்படுத்த, வேக எட்டுக்கள் வைத்து அவளை நெருங்கியவன், அவளின் கருங்கூந்தலை இறுக்கிப் பற்றி, பயத்தில் மருண்ட அவள் விழிகளைச் சந்தித்து,



"என்னடி! என்ன... என்னைப் பார்த்தா உனக்கு எப்படித் தெரியுது... எனக்கு இந்தக் கருமம்தான் வேணும்னா பணத்தை விட்டெறிஞ்சா பல பேர் வருவாளுகடி... அவ்வளவு ஏன்... எனக்கு எதுவுமே வேண்டாம்... நீ மட்டும் போதும்னு என் காலடியில் வந்து விழுந்தவங்க எத்தனை பேர் தெரியுமா...!

"அவளுககிட்ட யெல்லாம் வராத அந்தக் கருமம் உன்கிட்ட மட்டும் தானே வந்து தொலைச்சுது... உன்னை மனசார விரும்பின பாவத்துக்கு எனக்கு நல்லா குடுத்தடி செருப்படி... நல்லாக் குடுத்த... சீ..." என்றவன் அவளைத் தள்ளிவிட, அந்த வேகத்தில் கட்டிலிலே பொத்தென விழுந்தாள்...

அவளின் செய்கையில் கொந்தளித்திருந்த இளஞ் சேரன் அவளைப் பார்க்கப் பிடிக்காமல் எதிர்ப்புறம் திரும்பி நின்றவன், அந்த அறையின் ஜன்னல் கம்பிகளை இறுக்கப் பற்றித் தன் கோபத்தைக் கட்டுப்படுத்த முயன்று கொண்டிருந்தான்.

நிச்சயம் அவன் இதை அகல்விழியிடம் எதிர்பார்க்க வில்லை...

எதற்காக அவள் இப்படி ஒரு காரியம் செய்யத் துணிந்தாள் என இளஞ்சேரனின் உள் மனம் கேட்ட கேள்வியை அவன் வாய் விட்டும் கேட்டு விட்டான்.

ஜன்னலை விட்டுத் திரும்பாமலே, "எதுக்காக இப்படி செஞ்ச...?" என்றான் கோபத்தை உள்ளடக்கிய குரலில்...

அவன் கேட்ட கேள்விக்குப் பதில் வராமல் விசும்பல் ஒலி அவளிடமிருந்து வெளிப்பட, கடுப்பானவன் திரும்பி நின்று, "அடி பிச்சிடுவேன்டி... சும்மா சும்மா இந்த நீலிக் கண்ணீர் விட்டு என்னைக் கொலைகாரனாக்காதே...! கேட்டதுக்குப் பதில் சொல்லு... இல்லை, உன்னைக் கொலை பண்ணக் கூடத் தயங்க மாட்டேன்..."

அவனுக்கு இன்னமும் அவளின் இச் செயலை மன்னிக்க முடியவில்லை...

என்ன தேவைக்காக அவள் இப்படி ஒரு செயலைச் செய்து, தன் காதலையும், அவளின் குணத்தையும் தாழ்த்திக் கொள்ள வேண்டுமென்ற கேள்வி அவன் நெஞ்சைக் குடைந்து கொண்டிருந்தது.

அவள் இன்னமும் அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமலிருக்க, "இப்போ வாயைத் திறந்து பேசப் போறியா.... இல்லை, வந்து நாலு கொடுக்கவா...?" சேரனின் குரல் கர்ஜனையாக ஒலித்தது.

அவன் குரலில் இருந்த தீனம், அகல்விழியை அச்சுறுத்த, அவள் உடல் பயத்தில் தூக்கிப் போட்டது.

அதையெல்லாம் கண்டு கொள்ளும் நிலையில் அவனில்லை.

"சொல்லுடி... எதுக்காக இப்படிச் செஞ்ச... என்னைப் பார்த்தா செக்ஸ்க்கு அலையறவன் மாதிரி இருக்கா...? உன்கிட்ட இருந்து எனக்கு அதுதான் வேணும்னா அதுக்கு எதுக்குடி உன் கழுத்துல தாலி கட்டி என் வீட்டுக்குக்



கூட்டிட்டு வரணும்... உன்னை அடைய ஒரு ராத்திரி போதாதா...?"

அவன் கேட்டதற்கு எதற்கும் பதிலில்லை.

"பேசுடி... வாயைத் திறந்து ஏதாவது பேசு..."

அவள் எதுவும் பேசாமல் அமைதியாக அமர்ந் திருக்க, அவள் கன்னங்களை இடது கையால் பற்றி, விரல்களில் அழுத்தம் கொடுத்து அவன் கேட்க, அகல் விழியின் கண்கள் வலியைப் பிரதிபலித்தன.

ஆனால் அதற்கெல்லாம் நான் மசிய மாட்டேன் என்ற ரீதியில் இன்னமும் தன் பிடியைத் தளர்த்தாமல் இருந்தான் இளஞ்சேரன்.

அவனின் பிடிவாதம் அறிந்தவள் அவன் கையைப் பிரித்தெடுக்க முயன்று, அவள் முயற்சி புரிந்து தன் இறுக்கத்தைத் தளர்த்திய சேரன், "பதில் சொல்லு...." என உறுமினான்.

அந்த உறுமலில் மிரண்டவள் வாய் தானாகப் பிரிந்தது...

"நேக்கு... நேக்கு... ப... பணம் வேணும்.... ஆஆஆ..." சொல்லி முடிக்கும் முன் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு மீண்டும் கட்டிலில் விழுந்து விட்டாள் அகல்விழி....

விழுந்தவள் கையைப் பற்றி மேல் உயர்த்தியவன், "என்ன சொன்ன... என்ன சொன்ன... பணம் வேணுமா?" குரலில் அத்தனை கோபமும், ஆத்திரமும் ஓங்கி நின்றது.

சேரனுக்கு அவள் பேசுவது புரிந்தாலும், எதற்காக இப்படி ஒரு வழியைத் தேட வேண்டுமென்ற கேள்வி பிறந்தது...

பணம் வேண்டுமெனத் தன்னிடம் கேட்டிருந்தால் கோடி கோடியாய் அவள் காலடியில் கொட்டி யிருப் பானே...!

அவன் பாட்டன் உருவாக்கி, அவன் தந்தை வளர்த்து, இப்போது அவன் உயர்த்திய சேரனின் சாம் ராஜ்யம் முழுவதும் அவளது அல்லவா...!

கேவலம் அந்தப் பணத்திற்காகவா கணவன், மனைவிக்குள் நடக்கும் புனிதமான தாம்பத்தியத்தைப் பணயம் வைக்க வேண்டும்...?

சேரனுக்குப் புரியவில்லை...

அவள் செய்த செயலின் வீரியம் அறிந்துதான் அவள் இப்படிச் செய்தாளா என்பது அவனுக்கு விளங்க வில்லை...

அதைப் புரிய வைக்கும் நோக்குடன் செயல் பட்டான்...

கையிலிருந்தவளை மீண்டும் தள்ளி விட்டவன், விறுவிறுவென அறையை விட்டு வெளியேறிச் சென்ற வேகத்திலேயே திரும்பி வந்தவன் கையில் ஒரு பை இருக்கவே, அதைத் திறந்து அவள் முன்னால் கவிழ்த் தான்...



தன் முன்னால் விழுந்த பணக்கட்டுகளை ஒரு மிரட்சியுடன் பார்த்திருந்தவள் உடல் சற்றே நடுங்கத் துவங்கியது.

சேரன் அவளின் நடுக்கத்தையெல்லாம் சற்றும் பொருட்படுத்தாமல் பேசத் துவங்கினான்...

“இதுல எத்தனை லட்சம் இருக்குன்னு எனக்குத் தெரியாது... ஆனா நீ கேட்ட பணம் இங்க இருக்கு... இதுக்காகத் தானே என்னோட இருக்க ஆசைப்பட்ட... இப்போ நீ எதிர்பார்த்ததை விடவே இங்க நிறையா இருக்கும்... இந்தப் பணத்துக்குப் பொருளா நான் உன்னை எடுத்துக்கிறேன்...” என்றவன் அவளின் அருகில் சென்று இறுக்கி அணைத்து இதழ்களைச் சிறை செய் தான்...

அவனின் இச்செயலில் தடுமாறிய அகல்விழி, பின் தன் அதிர்ச்சியிலிருந்து விலகியவள் போல், அவனைத் தன் பலம் கொண்ட மட்டும் தடுக்க நினைத்தாள்...

தினமும் உடற்பயிற்சி செய்து தன் உடம்பை இரும்பு போல் வைத்திருந்த சேரனுக்கு, அகல்விழியின் புடலங் காய் போன்ற கையின் வலிமை சோதிக்கவேயில்லை.

அவனின் பிடி மேலும் மேலும் இறுகி, அவளைத் தன் ஆளுமையில் கொண்டு வந்தான்.

அவளின் இதழ்களை விடுத்து... அவன் கரங்களும், இதழ்களும், அவள் மேனியில் வலம் வரவே, அதில் கூசியவளாய், “ஹய்யோ... விடுங்கோ... என்னை விடுங்கோ... ப்ளீஸ் என்னை விடுங்கோளேன்...”

அவள் கெஞ்சல்கள் எதுவும் இளஞ்சேரனை அசைக்கவில்லை...

“விடுங்க இளா... ப்ளீஸ்.... எனக்கு இது பிடிக்கலை இளா... என்னை விட்ருங்கோ...!” அகல்விழி கதறலைத் தொடர்ந்தாள்...

தன் கதறல்கள் அவனிடம் பலிக்கவில்லை என்றதும் தன் கரங்களால் அவனைத் தாக்கத் துவங்கினாள்...

அதுவும் அவனைப் பாதிக்கவில்லை...

இதற்கு மேல் அவனிடம் தன் கதறல்கள் செல்லுபடியாகாது என உணர்ந்தவள், தன் கதறலைக் கண்ணீராக உகுத்துக் கண்களை மூடிச் சோர்வாகச் சரிந்தாள்.

சற்று நேரத்தில் தன் மீதிருந்த பாரம் விலகுவது போல் உணர்ந்த அகல்விழி, தன் விழிகளைப் பிரித்தெடுக்க, அவள் எதிரில் சேரன் கேலிப் புன்னகையுடன் நின்றிருந்தான்.

அவனின் புன்னகையில் வழிந்த நக்கல் அகல்விழியைக் கூனிக் குறுகச் செய்யத்... தன் உடையைச் சரி செய்து கொண்டு எழுந்து அமர்ந்தாள்.

“என்ன... நான் உன்னைத் தொட்டா அருவருப்பா இருக்கா...?” சேரனின் கேள்விக்கு அவளிடமிருந்து தலைக்குனிவுதான் பதிலாகக் கிடைத்தது...

“இருக்கும்டி இருக்கும்... நான் தொட்டா உனக்கு அருவருப்பாத்தானிருக்கும்... ஆனா எனக்கு அப்படியில்ல... உன்னை எப்பவும் தொட்டுக்கிட்டே இருக்கணும். உன்னோட வாசனை என்னோட இருந்துட்டே இருக்கணும்... நானும் நீயும் சேர்ந்து ஒரு உயிரை உருவாக்கணும்... வாழ்க்கை முழுசும் காதலோட வாழணும்னு பல கனவு கண்டு வச்சிருந்தேன்... அதெல்லாம்...”



கையை உயர்த்தி முடிந்தது எனச் செய்கை செய்தவன், கட்டிலின் மறு ஓரத்தில் அமர்ந்து கொண்டான்.

“நான் தொட்டாலே அசிங்கம் பட்டவ மாதிரி இப்படி மூஞ்சியைச் சுழிக்கிறவ பணத்துக்காக இந்த மாதிரிப் பண்ணத் துணிஞ்சிட்டியே... அப்போ... அப்போ பணத்துக்காக எந்த எக்ஸ்ட்ரீம் வரைக்கும் போவியா நீ...?”

அவன் கேட்ட பின்பு தான், தான் செய்த செய்கையின் வீரியம் புரிந்தது அகல்விழிக்கு...

“இல்ல... இல்ல... நா... நான் அந்த மாதிரி இல்லை...” செய்த தவறு புரிந்தது அவளுக்கு...

சேரன்தான் சம்மட்டியால் அடித்தது போல் தலையில் ஓங்கி அடித்துப் புரிய வைத்திருந்தானே...!

அவளின் மறுப்பு சேரனின் காதுகளை எட்டவேயில்லை... அவன் இன்னமும் தன்னவளின் செயலைச் சகித்துக் கொள்ள முடியா நிலையில் இருந்தான்.

“ம்ஹூம்... இல்ல... இல்ல... நீ நான் நேசிச்ச அகல் இல்ல... உனக்குப் பைத்தியம் பிடிச்சுடுச்சிடி... உனக்குப் பேய் பிடிச்சிடுச்சு... நான் நேசிச்ச அகல்விழிக்கு இந்த நடிப்பெல்லாம் வராது... நீ வேற...”

அவன் குரலில் அத்தனை வலி.

"ஒத்துக்கிறேன்... நான் உன்னைக் கட்டாயக் கல்யாணம் பண்ணியிருக்கக் கூடாதுதான்... ஆனா அப்போ நான் இருந்த நிலைமையில எனக்கு அதைத் தவிர வேற வழியில்லை..."

"அன்னிக்கு நான் இருந்த நிலையில் எதைச் செஞ்சாவது உன்னை என்னவளாக்கிக்கணும்னு தோணுச்சு.... அதுக்கு நான் தேர்ந்தெடுத்த வழி தப்பா இருக்கலாம்... ஆனா என் நேசம் உண்மைடி...

"ஆனா... இன்னிக்கி அந்த நேசத்துக்குப் பெருசா வச்சிட்டடி ஆப்பு... உன்னை உண்மையா காதலிச்ச எனக்கு நல்லாச் செருப்படி கொடுத்துட்ட..." என்றவன் முகத்தை அழுந்தத் தேய்த்து, கலங்கிய குரலைச் சரி செய்து கொண்டு பேசத் துவங்கினான்...

"அன்னிக்கி நான் அப்படி நடந்துக்கிட்டதுக்கு வருத்தப்படாத நாளில்லை தெரியுமா...! ஒவ்வொரு நாளும் எப்படி என் தப்பைச் சரி செஞ்சுட்டு உன்னோட நல்லா வாழணும்னு யோசிக்காத நாளில்லை... ஆனா இனிமேல் அதெல்லாம் சரியாகும்னு எனக்கு நம்பிக்கை யில்லை...

"இதுக்கு மேல இந்த உறவு தொடரணும்னு கூட நான் விரும்பலை... உன்னோட முடிவு என்னவா இருந் தாலும் நான் ஏத்துக்கிறேன்... நாளைக்கே லாயரை வரச் சொல்றேன்... உன் கழுத்துல தாலி கட்டின பாவத்துக்கு... ஆமா! பாவம்தான் செஞ்சுட்டேன்... அந்தப் பாவத்துக்குப்



பரிகாரமா உனக்குச் சேர வேண்டியது வந்து சேரும்...!" என்றவன் அவ்வறையை விட்டு வெளியேறினான்.

அவன் குரலில் தெரிந்த விரக்தி அகல்விழியை என்னவோ செய்ய,

போனவனிடம் தன்னையும், தன் செயலையும் புரிய வைக்கும் பொருட்டு "இளா... இளா... ப்ளீஸ்... நான் சொல்றதைக் கேளுங்கோ... ப்ளீஸ்... கொஞ்சம் நில்லுங்கோ... இளா..." அவளின் அழைப்பு எதையும் கேட்காத சேரன் அறையை விட்டு மட்டுமல்ல, வீட்டை விட்டே வெளியேறியிருந்தான்.

அவன் சென்றதும் அகல்விழிக்கு அவள் செய்கை யின் தீவிரம் புரிந்தது...

இன்று காலை அவள் தங்கைதான் அழைத் திருந்தாள்...

நேற்று அவள் ப்ளஸ் டூ வகுப்பின் பரிட்சை ரிசல்ட் வந்திருந்தது. அதைப் பார்க்கத்தான் சேரனின் அலுவலக அறைக்கு அனுமதி கேட்டுச் சென்றிருந்தாள்.

அகல்விழி எதிர்பார்த்தது போலவே, ஸ்ரீவள்ளி அதிக மதிப்பெண் பெற்று அவள் பள்ளியிலேயே முதல் மாணவியாக வந்திருந்தாள்.

ஆனால் அந்தச் சந்தோஷச் செய்தியைப் பகிர்ந்து கொள்ள அவள் தாய் தந்தையின் அருகாமையைத் தேடியும், தன் செல்லத் தங்கையை வாழ்த்தும் கொடுப் பினை தனக்குக் கிடைக்கவில்லை என்ற வருத்தத்துடன்

நேற்று இரவும் இன்று காலையும் அவள் கவலை கொண்டிருந்த வேளையில்தான், ஷெண்பா வந்து தனக்குப் போனில் ஏதோ அழைப்பு வந்திருப்பதாகக் கூறவே,

எடுத்துப் பேசியவளுக்குத் தங்கையின் குரலில், "அச்சுக்கா..." என்ற அழைப்பைக் கேட்கவே சுகமாக இருந்தது...

தன்னைச் சேர்ந்தவர்களைத் தான் இனிமேல் பார்க்கவே போவதில்லை என கவலை கொண்டிருந்த வளுக்குப் பசித்தவனுக்குக் கிடைக்கும் பாயசம் போல அமைந்தது தங்கையின் அழைப்பு...

அந்த நொடியைப் பல நிமிடங்கள் உணர்ந்து அனுபவித்தவள், "அக்கா... அக்கா... நான் ஸ்ரீ.. ஸ்ரீவள்ளி..." அவள் சொன்ன நொடி அகல்விழியின் உடலில் பரபரப்புத் தொற்றிக் கொள்ள...

"ஸ்ரீ குட்டி... ஸ்ரீம்மா... ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ...." என்ற வார்த் தைகளையே கண்ணீரோடே பலமுறை உச்சரித்த பின்னரும் கூட அகல்விழிக்கு அந்த இன்பத்திலிருந்து எளிதில் வெளிவர முடியவில்லை...

"அக்கா... நான் ஸ்ரீ தான்க்கா... என்னக்கா... எங்களை எல்லாம் அப்படியே மறந்துட்டியா—நீ...!" ஆற்றாமையுடன் கேட்க...

"ஆமாம்டி... ஆமா... நான்தான் உங்களை மறந்துட்டேன் பாரு... கடன்காரி... என்னை இப்படி



அம்போன்னு விட்டுட்டு நீங்க போயிட்டேளே... இது வரைக்கும் நான் இருக்கேனா செத்தேனான்னு கூட யோசிக்கணும்னு உங்களுக்குத் தோணலையோ...!"

அகல்விழியின் இத்தனை நாள் ஆற்றாமை வெளிப்பட்டது...

அக்காவின் ஆற்றாமை புரிந்தவள் அவர்கள் பக்க நியாயத்தை விளக்க எண்ணி, "அக்கா... நோக்கு கல்யாணம் நடந்த பிறகு என்னாச்சுன்னு தெரியாதா...! அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்து ஹாஸ்பிடலில் சேர்த்தினோம். உன் ஆத்துக்காரர்... அவர்தான் சேர்த் தார்..."

"அடி பிச்சிடுவேன்... யாருடி ஆத்துக்காரர்...? விஷயத்தை மட்டும் சொல்லு...."

சேரனைத் தங்கை தன் கணவன் என்றதும் அகல்விழிக்குக் கோபம் வந்துவிட்டது...

என்னதான் அது உண்மை என்றாலும் அவள் விருப்பப்பட்டு இவ் வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்க வில்லையே! அதனால் இப்போதும் சேரன் அவளுக்கு மூன்றாம் மனிதனே...

ஆனால் அவள் தங்கை உண்மை நிலையை உணர்த்தினாள்.

"நீ இல்லைன்னு சொன்னாலும் அதுதான் உண்மைக்கா...!"

"நீ பெரிய உண்மை விளம்பின்னு நேக்கு நன்னாவே தெரியும். எதுக்கு இப்போ தேவையில்லாததை எல்லாம் பேசி என்னைக் கோபப்படுத்துற... நீயும், அப்பா, அம்மா எல்லோரும் எங்க இருக்கேள்? நேக்கு உங்களை எல்லாம் பார்க்கணும் போல இருக்குடி... என்னை இப்படி நட்டாத்துல விட்டுட்டுப் போயிட்டேளே...

"அப்பாக்கு என்னடி ஆச்சு... அப்பா இப்போ நன்னா இருக்காரா...? ஏன் முடியாத அவரை அழைச்சுண்டு நம்ம வீட்டை விட்டுப் போனேள்... உங்களுக்கு நான் அந்தளவு வேண்டாதவளாகிட்டேனா...? ஏன்டி எல்லாரும் சேர்ந்து என்னை இப்படி வதைக்கிறேள்...!" அகல்விழி கண்ணீருடன் தங்கையிடம் இத்தனை நாள் துன்பத்தை வெளியேற்றிக் கொண்டிருந்தாள்...

அகல் அழத் துவங்கியதும், சின்னவளுக்கும் அழுகை வரவே... தான் அழைத்த விஷயத்தை அழுகையினூடே வெளியேற்றினாள்...

"அக்கா... அக்கா... அப்பாக்கு... அப்பாக்கு இப்போ...." தேம்பலுக்கு இடையே விஷயத்தைச் சொல்லத் துடித்த ஸ்ரீயின் தொண்டைக் குழி துக்கத்தில் அடைத்துக் கொண்டது...

"என்னடி... அப்பாக்கு என்னாச்சு... அவர் நன்னா தானே இருக்கார்...?" பதட்டமாக வெளி வந்தது அகலின் குரல்...

"இல்லக்கா... அப்பா நல்லாயில்லை... நேத்து நேக்கு ரிசல்ட் வந்ததேனோ... அப்பா அதைப் பார்த்துண்டு சந்தோஷப் படுறதுக்குப் பதிலா நெஞ்சைப் பிடிச்சுண்டு உக்காந்துட்டார்..."



"என்னடி உளர்ற... நீ எடுத்த மார்க்குக்கு அப்பா உன்னைத் தாங்கிருப்பாரேடி!"

"நானும் அப்படித்தான்க்கா நெனச்சேன்... ஆனா நோக்கே தெரியுமோனோ... நேக்கு டாக்டருக்குப் படிக்கணும்னு தானே கனவு... அப்பாக்கு என் மார்க்கைப் பார்த்ததும் என்னை எப்படிப் படிக்க வைக்கப் போறேன்னு கவலை வந்துடுத்து...

"இத்தனை நாள் நான் ஓடிச் சம்பாதிச்சு என்ன பிரயோஜனம்... என் தங்கச்சி, அவங்க குடும்பம்தான் முக்கியம்னு இருந்து இன்னிக்கி என் பிள்ளையைப் படிக்க வைக்கக் கூட முடியா நிலையில என்னை வெச்சுண்டியே ஆண்டவான்னு புலம்பிண்டே விழுந்துட்டார்க்கா... நான் சொன்னேன்... அப்பா நேக்கு டாக்டரெல்லாம் படிக்க வேண்டாம்... இதுவே போதுமப்பா... நான் ஏதோ நல்ல வேலைக்குப் போறேன்னு சொன்னேன்க்கா... அப்பா அதைக் கேட்டுண்டு மேலும் கண்ணீர் வடிச்சார்க்கா...."

ஸ்ரீ சொல்லச் சொல்ல, அகலின் கண்கள் கண்ணீரை மாரியாய்ப் பொழிந்தன...

ஸ்ரீயும் கேவல்களுடனே தொடர்ந்தாள்.

"நானும், அம்மாவும் அப்பாவை உடனே ஹாஸ்பிடல் அழைச்சுண்டு போனோம்... செக் பண்ணின டாக்டர் அப்பாவுக்கு சிவியர் ஹார்ட் அட்டாக்னு சொல்லிட்டார்...

உடனே ஆபரேஷன் பண்ணலைன்னா அப்பாவை இனி நாம பார்க்கவே முடியாதுக்கா...!"

சொல்லிவிட்டு ஸ்ரீ வெடித்து அழவே, அகல்விழியாலும் அவள் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"ஹய்யோ... நேக்கு இப்போ அப்பாவைப் பார்த்தாகணும்... நீங்க இப்போ எங்க இருக்கேள்...? சொல்லு முதல்ல..." என்றவளிடம், ஸ்ரீ சென்னையை விட்டுச் சற்றுத் தள்ளியிருந்த புறநகரின் பெயரைக் குறிப்பிட, அதைக் கேட்டு மனதில் குறித்துக் கொண்டவள்,

"நான் உடனே வரேன்... நீ அழாதே ஸ்ரீ...!" எனத் தங்கையைத் தேற்றியவள் போனை வைத்த மறுநொடி, அவ்வீட்டை விட்டு வெளியேற நினைத்தாள்.

அவள் நினைத்தது அவ்வளவு எளிதில் பலித்து விடுமா என்ன...?

அவளைப் பாதுகாக்கவே வெளியில் இரண்டு தடியன்களை முழுநேரப் பணியில் வைத்திருக்கிறானே சேரன்...

மனதில் மூண்ட எரிச்சலுடன் தன்னறைக்குச் சென்று குறுக்கும் நெடுக்கும் நடந்தவள் ஜன்னல் கம்பிகளைப் பற்றி யோசனையில் ஆழ்ந்தபோதுதான் வீட்டின் பின்கட்டில் பூட்டியிருந்த அந்தக் கேட் கண்ணில் பட்டது.

அதைக் கண்ட நொடி, எங்கிருந்துதான் அகல்விழிக்கு அப்படியொரு தைரியம் வந்ததோ...?



எதைப் பற்றியும் யோசிக்காமல், கீழே வந்த அகல், ஷெண்பாவும், மற்ற வெளியாட்களும், அந்த தடியன்களும் வேறு வேலையில் இருப்பதை உறுதி செய்து கொண்டு பின்கட்டுக்கு விரைந்தாள்...

அந்த கேட் இருந்த பகுதியில் பழைய பொருட்கள் போடும் இடமாக உபயோகித்துக் கொண்டிருந்தனர்.

அதையெல்லாம் ஒதுக்கித் தள்ளி, சத்தம் வராமல் தாண்டிச் சென்றவள், கேட் இருந்த இடத்தை நெருங்கினாள்.

கேட் பூட்டப்பட்டிருந்தது...

எப்படிப் போக முடியும்...? உள்நெஞ்சு கேட்ட கேள்வியை, அப்பாவைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் வெல்லவே... எதைப் பற்றியும் யோசிக்காமல் துருப் பிடித்த அந்தக் கேட்டின் கம்பியைப் பிடித்து எகிறிக் குதித்தாள்.

அப்படிக் குதித்தபோது தான் அவள் ஆடை கேட்டின் கம்பியில் பட்டுக் கிழிந்து தொங்கியது.

வெகு சிரமப்பட்டு அவள் பெற்றோரைக் காண, ஸ்ரீ சொல்லியிருந்த இடத்திற்கு ஆவலாகச் சென்றாள்...

போகும்போது கையில் அவசரத்திற்கு ஒரு நூறு ரூபாயை மட்டும் வைத்துக் கொண்டு சென்றவள் எண்ணம் முழுவதும் இனி என்ன நடந்தாலும் தன் பெற்றோரை விட்டு வருவது என்பது நடக்காத காரியம்

என்ற உறுதியை அங்கே சென்றதும் அவள் அன்னை தூள் தூளாக நொறுக்கினார்.

தன் தந்தை இறந்தால் கூட அகல்விழி அவரைப் பார்க்கக் கூடாதென்றும்... அவள் அவர்கள் மானத்தை வாங்கி விட்டாள் என்றும்... அவளின் முகத்தைக் காட்டிக் கொஞ்சம் உயிருடன் இருக்கும் அவர் கணவரின் உயிரை முழுதாக எடுக்க வந்திருக்கிறாள் என்றும்... சரமாரியாக வாய்க்கு வந்ததைத் திட்டித் தீர்த்து விட்டார் நளினி.

என்னதான் தன் மகள் மீது தப்பில்லை எனிலும், நளினியைச் சுற்றியிருந்த சுயநலப் பேய்கள், அவரையும் அவர்களின் போக்கிற்கே சிந்திக்க வைத்து விட்டனர்.

கடைசியாக நளினி சொன்ன வார்த்தைகள் தான் அகல்விழியை மிகவும் காயப்படுத்திவிட்டன... "நான் உன்னைப் பெத்ததே பாவம்டி... நீ பிறந்து தொலைத்த தால் தானே எங்களுக்கு இத்தனை கஷ்டமும், வேதனை யும்.... என் கண் முன்னே நிக்காதே... இங்கிருந்து போயிடு!" அன்போடு தன்னைக் கொஞ்சிய அதே உதடுகள்தான் இன்று வெறுப்பை உமிழ்ந்தன.

எப்படி அவள் அன்னையால் இப்படிப் பேச முடிந்தது எனத் தெரியவில்லை அவளுக்கு.

நான் என்ன தப்பு செய்தேன்... ஏன் எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை... தான் பாசம் காட்டி வளர்த்த அன்னையே இப்படிச் சொன்ன பிறகு, தான் இனி உயிர் வாழ்வதில் கூட எந்தப் பலனுமில்லை என நினைத்த வளை ஸ்ரீதான் தடுத்தாள்.



"அக்கா... அம்மா ஏதோ கோபத்துல பேசுறாங்க அக்கா... அம்மாவுக்கு அந்த ஆள் மேல இருக்கற கோபத்தை யார் மேல காட்டணும்னு தெரியலை... நீ அதையெல்லாம் மனசுல வச்சுக்காதேக்கா... ஆனா இப்போ அப்பா உயிரோட இருக்கப் போறது உன் கையில்தான் அக்கா இருக்கு... அப்பாக்கு சர்ஜரி பண்ணியே ஆகணும்... அதுக்குப் பல லட்சம் செலவு செய்யணும்... இப்போ நம்ம இருக்கற நிலைமையில் இதெல்லாம் நடக்குமாக்கா...!

"எனக்கு அப்பா வேணும்க்கா... ப்ளீஸ்க்கா... ஏதாவது செஞ்சு நீதான் அப்பாவைக் காப்பாத்தணும்... ப்ளீஸ்க்கா... ப்ளீஸ்..." ஸ்ரீயின் கெஞ்சல் ஏற்படுத்திய விளைவே, அகல்விழி இந்தக் காரியத்தைச் செய்யத் துணிந்தது...

தன் தந்தையின் இதயத்தைக் காக்க, தன் கணவனின் இதயத்தை வேரோடு பிடுங்கியது இப்போது தான் அவளுக்கு உறைத்தது.

தான் எப்படிப் பணத்திற்காகத் தன் மானத்தைப் பணயம் வைக்கத் துணிந்தோம் என்ற குடைச்சலுடன், சேரனின் அந்த வேதனை சுமந்த முகம் அவள் உள் நெஞ்சைக் குத்தீட்டியால் கிளறியது.

இனி என்ன நடக்கும் என்ற கேள்வி அவள் கண்ணை மறைத்துக் கொண்டு நின்ற வேளை, அந்த நொடி அவளை அறியாமலேயே அவள் கண்கள் ஒரு சொட்டுக் கண்ணீரை உகுத்தன, சேரனுக்காக...!

## 14

கோபத்தில் வெளியேறிய சேரனின் மனது ஆற்றாமையில் கொதித்துக் கொண் டிருந்தது.

தன் காதல் மனைவி தன்னைப் பற்றிக் கொண்ட உயர்ந்த எண்ணத்தில் அவன் மனம் சொல்ல முடியா வேதனையைச் சுமந்திருந்தது.

அதே சுமையுடன் வீட்டை விட்டு வெளியேறியவன் காரைக் கூட எடுக்கவில்லை...

கோபத்தில் எதைப் பற்றியும் சிந்திக்காமல் நடந்தே வீட்டின் வாயிலை அடைந்தவனை, கேட் வாட்ச்மேன் வியப்பாகப் பார்த்தான்...

சேரனின் முகத்தில் தெரிந்த ஏதோ ஒன்று, வாட்ச் மேனை அவனிடம் நெருங்க விடவில்லை...

ஆனாலும், அந்தக் காவலாளிக்கு முதலாளியின் முகத்தில் தெரிந்த வித்தியாசம் மனதின் ஓரத்தில் சற்றுப் படபடப்பை ஏற்படுத்த, அவன் ஓடிச் சென்று ஷெண்பாவை அழைத்தான்...

இன்று அகல்விழி முகத்தில் தெரிந்த தேஜஸில் கணவனும், மனைவியும் புரிதலுடன் கூடிய வாழ்க்கையை ஆரம்பித்திருப்பார்கள் என்று எண்ணி உறக்கத்திலிருந்த ஷெண்பாவுக்குக் காவலரின் கவலையான அழைப்பில், இருந்த நிம்மதி பறந்து போனது...

வாட்ச்மேன் சொன்ன செய்தியில், ஷெண்பா விஷயத்தைச் சற்றுக் கிரகித்திருந்தார்.



'ச்சே... இன்னிக்கித்தான் இந்தத் தம்பிக்கு நல்ல வாழ்க்கை தொடங்கியிருக்கும்னு நினைச்சேன்... அந்த நினைப்பை நினைச்ச நிமிஷத்திலேயே கறுக்கிட்டியே ஆண்டவா...!' மனதிற்குள் புலம்பியவர்,

உடனே வேகமாகச் செயல்பட்டவர், ஓடிச் சென்று முதலில் சதீஷ்க்கு அழைத்து விபரத்தைச் சொன்னவர், ஜீவாவிடமும் பகிர்ந்து கொண்டார்... அவருக்குத் தெரிந்த அந்த இருவரும்தானே அவனின் நட்பும் உறவும்...

எங்கே போகிறோம் என்ற முடிவேயில்லாமல் நடந்து கொண்டிருந்த சேரனுக்கு... அவன் வீட்டை விட்டுச் சற்றுத் தொலைவில் அமைந்திருந்த கடல் அன்னை தன் கரத்தை நீட்டி அணைத்துக் கொண்டார்.

கொதித்துக் கொண்டிருந்த மனம், ரம்மியமாக வீசிய தென்றல் காற்றின் சுகத்தை அனுபவிக்க முடியாமல் தவித்தது...

இத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த கோபம், ஆற்றாமை, வருத்தம் எல்லாம் வெடித்தெழ, "ஆஆஆ...." எனத் தலையைப் பிடித்துக் கொண்டு கதறிய சேரன், அப்படியே அந்த மண் தரையில் மண்டியிட்டு அமர்ந் தான்...

அவன் கண்களில் ஏதோ ஈரம்... ஆம், கண்ணீர்...

தான் நேசித்த காதல், தன்னை நேசிக்கவில்லையே என்ற வருத்தம்...!

தான் உயிராக நினைத்தவள், தன் காதலை உதாசீனப்படுத்தி விட்டாளே என்ற கோபம்....!

அவளுக்காக எதை வேண்டுமானாலும், செய்யக் காத்திருக்கும் தன் அன்பை வெறும் பணத்திற்கு ஈடு செய்து விட்டாளே என்ற ஆற்றாமை... என எல்லாம் சேர்ந்து இத்தனை நாள் அடக்கி வைத்திருந்த அனைத்து உணர்வுகளும் போட்டி போட்டு அவன் நெஞ்சில் ஈட்டி யாகக் குத்திக் கிளறின.

“போதும்டா சாமி... நான் அவளைக் காதலிச்சதும் போதும்... அவள் என்னை அசிங்கப் படுத்தினதும் போதும்... என் காதலைக் கேவலப்படுத்தி நான் அவ ளுடன் வாழ வேண்டாம்... அவளை அவள் போக்கிலே விட்டு விடலாம்...” என மனம் அவளுக்கு விடுதலை கொடுக்க நினைத்ததுதான்.

ஆனால் அவளுக்காக அத்தனை சிரமம் எடுத்து, அத்தனை பேரை எதிர்த்துக் கரம் பிடித்த காதல் மனம், ‘அவளை விட்டு உன்னால் இருந்து விட முடியுமா...?’ என்ற கேள்வியை வீச, அதற்கு விடை தெரியாமல் தவித்தான்...

உண்மைதான்... அவளை விட்டு என்னால் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாதுதான்...!

‘ஆனால் என் மேல் காதல் இல்லை எனத் தள்ளி நிறுத்தி வைப்பவளை நான் கட்டாயப்படுத்துவதில் எந்த விதப் பலனும் இருக்கவில்லையே... அவளும் என்னை மனதின் ஓரத்தில் காதலிக்கிறாள் என்ற என் மனப் பிரமையே அவளை அத்தனை வேலை செய்து கரம் பிடிக்கத் தூண்டியது... ஆனால் அதுவும், இன்றைய



ஒரு நிகழ்வில், பொய்யென முகத்தில் அறைந்தவாறு உரைத்து விட்டாளே...

“அதனால அவ போகட்டும்... அவளுக்கு என் மேல எப்போ அன்பு வருதோ அப்போ திரும்பி வந்தாப் போதும். அதுவரைக்கும் நான் அவளைத் தொந்தரவு செய்யப் போறதில்லை...’

மனதுடன் நீண்ட விவாதத்தில் ஈடுபட்டுத் தன் வாழ்க்கையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தவன், சற்று நேரம் அக்கடல் மண்ணிலே அமர்ந்து நிலவொளியில் மின்னிய கடல் அலையை வெறித்துப் பார்த்துக் கொண் டிருந்தான்...

கூடவே அவன் எண்ணங்களும் அவளை மீண்டும் சந்தித்த தருணத்தை அசை போட்டன.

அந்தக் கும்மிருட்டிலும் அவன் காதலின் வலியை நிலவு கண்டு கொண்டது...

அன்று சேரனால் எந்த வேலையும் செய்ய முடிய வில்லை...

அவன் எந்த ஃபைலை எடுத்தாலும் அதில் குல்ஃபியைக் கையில் வைத்திருந்த அந்தப் பெண்ணின் முகமே வந்து இம்சித்தது.

அதுவும் முந்தின தினம், அவளின் தோழி தனது அலுவலகத்திற்கு வேறு வந்தது... அவனை மேலும் மேலும் அவளைப் பார்க்கும் ஆர்வத்தைத் தூண்டியது...

ஜீவாவும், சேரனின் செயலை விநோதமாகத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்...

எப்போதும் எடுத்த வேலையில் எடுத்த நொடியில் மூழ்கி விடும் சேரனுக்கு, இன்று அவன் தலையைக் குலுக்குவதும், பின் ஃபைபலைப் பார்த்துப் பெருமூச்சு விடுவதும், பின் ஃபைபலை மூடி வைப்பதும், மூடிய ஃபைபலை மீண்டும் எடுத்துப் பார்ப்பதுமாக இருந்த சேரனை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

யாரோ தன்னை உற்று நோக்குவதை உணர்ந்த சேரன் நிமிர்ந்து பார்க்க, எதிரில் வினோதப் பார்வையுடன் தன்னை ஏறிட்டுக் கொண்டிருந்த ஜீவாவைக் கண்டு அசடு வழிந்தாலும், அதை வெளியில் காட்டாமல்,

"என்ன ஜீவா... எனிதிங் இம்பார்ட்டன்ட்...?" கெத்தாகக் கேட்பதாக நினைத்து அவனே வாயைக் கொடுத்து மாட்டிக் கொண்டான்.

ஜீவாவோ, கண்களில் தோன்றிய சிரிப்புடன், "நீங்க தான் சார் கூப்பிட்டீங்க...!" என்க...

தலையைக் குனிந்து கொண்டு நாக்கைக் கடித்துத் தன் தவறை உணர்ந்தவன், "யா யா... நான்தான் கூப்பிட்டேன்... வேலை பிஸியில மறந்துட்டேன்..."

பொய் சொல்கிறான் என்பது அவன் முகத்தில் நன்கு தெரிந்தது...

ஜீவா அதைக் கண்டு கொள்ளாமல், "சொல்லுங்க சார்...." என வேலைக்கு வர...



குல்ஃபி பெண்ணின் நினைவில் இருந்தவன், "செல்லம்மாள் விமன்ஸ் காலேஜ் போகணும்..." என உளறி வைக்க,

"சார்...." என ஜீவாவின் அதிர்ச்சியான குரலில் மீண்டவன்... தான் உளறியது உணர்ந்தான்...

"ஹான்... மைலாப்பூரில் அந்த ப்ளாட் கொட்டேஷன் ரெடியா ஜீவா...?" தான் கேட்டதை அப்படியே மாற்றிக் கேட்டும் மாட்டிக் கொண்டான்.

"சார்... இப்போ உங்க கையில இருக்கிறது மைலாப்பூர் டாக்குமெண்ட்தான்..." ஜீவா பொறுமையாக அவனுக்கு விளக்க...

"ஓஹோ ஷிட்...!" தலையில் தடவிக் கொண்டு ஃபைபலை மூடி வைத்தான்...

ஜீவாவிற்கு அவனது நிலை ஓர் அளவிற்குப் புரிந்தது...

அதுவும் முந்தைய நாளில் அந்தப் பெண்ணின் வருகைக்குச் சேரனின் பதட்டம் அவன் இதுவரை கண்டதில்லை...

"சார்... நான் ஒன்னு கேட்டா தப்பா நினைப்பீங்களா...?"

ஜீவாவின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவன் கேட்பதற்காகக் காத்திருந்தான்.

ஜீவா புரிந்தவனாக, "சார், ஆர் யூ இன் லவ்...?"

கேட்ட நொடி... சேரன் விலுக்கென இருந்த இடத்தை விட்டு எழுந்தான்.

"நோ... நோ..." எனச் சொல்ல முயன்றான். ஜீவா வின் முகத்தில் தெரிந்த கேலிப் புன்னகை அவனை அசடு வழியச் செய்தது.

"கோ ஜீவா... போய் வேலையைப் பாரு..." என முதலாளியாக மாறி, அவனை வேலை கொடுத்து அனுப்பவே, ஜீவா நண்பனாக மாறிக் கையைக் கட்டிக் கொண்டு அவன் எதிரில் நின்றான்.

"ப்ளீஸ் ஜீவா...' - கெஞ்சல் குரலில் சற்று வெட்கத்துடன் சொன்ன சேரனை ஜீவா ஆச்சரியமாகப் பார்த்தான்.

இதுவரை ஜீவா பார்த்த சேரன் கம்பீரமானவன். மனதில் நினைத்ததைப் பட்டெனப் பேசிப் பழகியவன். அவன் செய்த, செய்யப் போகும் காரியங்களில் அத்தனை அர்த்தமிருக்கும். அவனுக்கு இந்தக் குழைவு, நெளிவு என்பது ஜீவா கண்டறியாத ஒன்று.

அவனே இப்படி மாறியிருக்கிறான் என்றால் அது காதலின்றி வேறு எதனால் இருக்கக் கூடும்...?

"சார்... நீங்களா! என்னால நம்பவே முடியலை. யாரு சார்... அந்த லக்கி கேர்ள்?"

ஜீவா உற்சாகக் குரலில் கேட்கவும், சேரன் சிரிப்புடன் மீண்டும் தன் இருக்கையில் அமர்ந்து கொண்டு ஃபைலில் முகம் புதைத்தான்.



ஆனால் ஜீவாவிற்குத் தெரிந்தே ஆக வேண்டு மென்ற உந்துதல் எழவே, மனதில் மூண்ட சிறு பயத் துடனே கேட்டான்.

"சார், நேத்து நாம பார்த்தோமே... ஆபீஸுக்குக் கூட வந்திருந்தாங்களே... அந்தப் பொண்ணா?" - மனதிற்குள் சேரனின் காதலில் அந்தப் பெண்ணாக இருக்கக் கூடாதென்ற வேண்டுதலை அனைத்துக் கடவுளிடமும் வைத்தான்.

ஜீவா கேட்ட பெண்ணை நினைவு வர, "ஐயோ... அவ இல்ல ஜீவா... அவ ஃப்ரெண்ட். செல்லம்மாள் காலேஜ்ல தேர்ட் பி.காம். சி.எஸ். படிக்கிறா. பேரு அகல்விழி. வீடு கிண்டி பக்கம்... வேளச்சேரின்னு நினைக் கிறேன்..." சேரன் ஒப்பித்த வேகத்தில் அவனின் மனது புரிந்தது.

கூடவே ஜீவாவிற்குள், "அப்பாடி... நம்ம ரூட் கிளியர்..." என்ற நிம்மதியும் பரவியது.

"வெரி ஹேப்பி ஃபார் யூ சார்...!" ஜீவா உண்மையான சந்தோஷத்தில் சொல்ல...

சேரன் அசடு வழிந்தவாறே, "அவ்ளோ விசிபிளா தெரியுதா ஜீவா?" தன் முகத்தை வைத்தே ஜீவா கண்டு கொண்டதில் சேரனுக்கு வருத்தமே!

இதுவரை தன் மனதில் இருப்பதை எவராலும் அவ்வளவு எளிதில் கண்டு கொண்டதில்லை... ஜீவாவும், சதீஷும் தவிர.

அவர்களே சில நேரத்தில் தன்னைக் கண்டு கொள்ளச் சிரமப்படுவார்கள். அப்படியிருக்கையில் ஒரே நாளில் ஜீவா அவ்வளவு எளிதில் கண்டுகொண்டது அவனுக்கு ஆச்சரியமே.

ஜீவா, "லைட்டா சார்..." - அவனைக் கிண்டல் செய்ய...

சீட்டை விட்டு எழுந்து வந்து அவன் தோளில் கை போட்டு விளையாட்டாக இறுக்கி, "இதை யார்கிட்டயாவது சொன்ன... உன்னைக் கொன்னே போட்டுருவேன்..." - மிரட்டல் விடுக்க...

"ஹா...ஹா... நான் சத்தியமா சொல்ல மாட்டேன் சார்... நீங்க கொஞ்சம் அசடு வழியாம இருந்தா சரி..." - அவனை மேலும் கிண்டல் செய்ய...

"உன்னை..." எனப் பல்லைக் கடித்தவன், அவன் வயிற்றில் குத்து விட்டு, "வா ஜீவா... செல்லம்மாள் காலேஜ் போகலாம். இப்போ அவங்களுக்கு செம் லீவ் முடிஞ்சிருக்குமில்ல..." எனக் கேட்க,

"ஹான்... எஸ் சார். என்னைக் கேட்டா எனக்கென்ன தெரியும்... நீங்கதானே லவ் பண்றீங்க..." என ஜீவாவின் குரலில் கிண்டல் தொனிக்க...

"டேய்... என்ன கிண்டலா? வா போகலாம். எனக்கு இப்போ அவளைப் பார்க்கணும் போலிருக்கு. அதனால தான் என்னால ஒரு வேலையிலேயும் கான்சன்ட்ரேட் பண்ண முடியல..." என்றவன், மீண்டும் ஒரு குத்து விட...



அதைச் சிரிப்புடனே தாங்கிய ஜீவா, சேரனுடன் அகல்விழி படிக்கும் கல்லூரி வாசலில் காத்திருந்தான். அவனுக்கும் அவனின் காதலியைச் சந்திக்க வேண்டுமல்லவா!

இருவரும் தைரியமாகக் கல்லூரி வந்து விட்டார் களே ஒழிய, இனி என்ன செய்ய வேண்டும் என்பது சுத்தமாகத் தெரியவில்லை. சேரனுக்கு இதுதான் முதல் அட்டெம்ப்ட் அல்லவா! அதனால் டீனேஜ் பையனைப் போன்று சற்றுப் படபடப்பாக உணர்ந்தான்.

அப்போதுதான் கல்லூரி முடிந்திருந்தது போலும். அனைத்து மாணவியரும் அவரவர் தோழிகளுடன் அரட்டை அடித்தவாறு கல்லூரி வளாகத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.

அவர்களில் தன் மனதைச் சிறை செய்தவள் வருகிறாளா என்ற எதிர்பார்ப்புடன் பார்த்துக் கொண்டிருந்த சேரனுக்குக் காட்சியளித்தாள் அவனின் குல்ஃபி பெண்.

அவளையே வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்த சேரனின் பார்வை சென்ற திசையில் ஜீவாவும் அவளைக் கண்டு கொண்டான்.

இரு பெண்களும் ஏதோ கதைத்துக் கொண்டும், சிரித்துக் கொண்டும் வாயிலைக் கடந்து பேருந்து நிலையத்திற்கு நடக்கத் துவங்க... சேரனின் கால்களும் அவர்கள் பின்னால் செல்லத் துடித்தன.

சேரனுக்கே இது போன்ற எண்ணங்களும், நடவடிக்கையும் சற்று வியப்பை அளித்ததுதான். ஆனால்

அதைப் புறம் தள்ளி விட்டு அவள் பின்னால் செல்லத் துடித்தான்.

காதல் என்ன வேண்டுமானாலும் செய்யத் தூண்டும் வல்லமை கொண்டதல்லவா! அவள் பின்னால் செல்லத் துடித்த கால்களுக்கு உணர்வு கொடுத்து, காரை விட்டு இறங்கினான்.

அப்போதுதான் ஜீவாவிற்கும் சற்று உணர்வு வந்தது.

"சார்... எங்கே போறீங்க?" எனத் தடுத்த ஜீவாவை,

"ஐ நீட் டு டாக் டு ஹெர் ஜீவா... எனக்கென்னவோ அவளைப் பார்த்ததுல இருந்தே அவளை என்னோட வெச்சுக்கணும்னு தோணுது. நான் இப்போவே அவகிட்ட என்னோட விருப்பத்தைச் சொல்லணும். ஐ நீட் ஹெர்..." என்றவன் அவள் பின்னே செல்லத் துடிக்க...

"சார்... நான் இதைச் சொல்லக் கூடாது. பட் ஸ்டில் அஸ் அ வெல்விஷரா சொல்றேன். இது ரொம்ப அவசரமா தோணலையா சார்... இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமே... நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் தெரிஞ்சுகிட்டு, அப்புறம் புரிஞ்சுகிட்டு... பொறுமையா... யோசிச்சு..." என இழுத்த ஜீவாவைக் கோபமாகப் பார்த்த சேரன்...

"இதுல பொறுமையா யோசிக்க என்ன இருக்கு, ஜீவா? ஐ ஃபெல் இன் லவ் வித் ஹெர் அட் மை ஃபர்ஸ்ட் சைட்... அப்போ இருந்தே நான் அவளோட



இருக்கணும்னு என் மனசு ஏங்குது... இனி வரப் போற நாள்ல நான் அவளைச் சந்தோஷமா வைச்சிக்கணும்னு மனசு சொல்லுது... இதுக்கு எல்லாம் என்ன அர்த்தம்? காதல்தானே! எனக்கு வந்த காதலை நான் அவளோட ஷேர் பண்ணிக்கணும்னு நினைக்கிறேன். தட்ஸ் இட்..." என,

"சார், நான் இப்போ உங்க ஃபிரெண்டா பேசலாமா?" அனுமதி கேட்ட ஜீவாவை,

"ஹே, கமான் ஜீவா... நான் உன்கிட்ட எப்பவுமே அப்படித்தான் இருக்கச் சொல்றேன். நீதான் ஃபிரெண்ட்ஷிப் வேற... பிசினஸ் வேறன்னு ஃபிலாஸபி பேசிக்கிட்டு... சார், சார்னு கூப்பிட்டுட்டு இருக்க...!"

அவனைப் பேச ஊக்கப்படுத்திய சேரன், போகும் அவளிடம் ஒரு கண்ணைப் பதித்தவாறே ஜீவாவிடம் அனுமதியளித்தான்.

"இப்போவும் அதைத்தான் சேரா சொல்ல வரேன். ஃபிரெண்ட்ஷிப் வேற... பிசினஸ் வேற... இப்போ நம்ம பேசப் போறது பிசினஸ் விஷயமில்ல. இட்ஸ் அபௌட் லைஃப். நீ அந்தப் பொண்ணை, ரெண்டு இல்ல மூணு தடவைதான் பார்த்திருக்க...

"அஃப்கோர்ஸ் நீ பார்த்ததும் உனக்கு அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்கு. அதுக்காக அவங்களுக்கும் உன்னைப் பார்த்த வுடனே பிடிக்கணும்னு இல்லையே... அவங்க யாரு, அவங்க ஃபேமிலி பேக்ரௌண்ட் என்ன... அவங்களுக்கு முதல்ல இந்தக் காதல், கல்யாணத்துல

ஈடுபாடு இருக்கானு எதுவுமே தெரியாம அவங்களை அப்ரோச் பண்ணினா... அது உனக்கே ஆபத்தா முடிய லாம்...

"யெஸ். யூ ஆர் கிங் இன் பிசினஸ். பட் நாட் சோ இன் லவ்..."

ஜீவா சொன்னதும், அவனை முடிந்த மட்டும் நேரடியாக முறைத்தான்.

"ஹா...ஹா... நீ முறைச்சாலும் அது உண்மை தானே சேரா..." ஜீவா கிண்டலைத் தொடர,

"ஆமா, ஆமா... நீ பல பேரைக் காதலிச்சுக் காதல் மன்னன் பட்டம் வாங்கினவன் பாரு...!"

அவனுக்குப் பதில் கொடுத்து விட்டுத் திரும்பிய நொடி, குல்ஃபி பெண், அவள் தோழி சுந்தரியுடன் பேருந்தில் ஏறியிருந்தாள்.

"அவ போயிட்டா ஜீவா...!" – சேரன் அப்பாவியாகச் சொல்ல...

வாய் விட்டுச் சிரித்த ஜீவா, "லெட் ஹெர் கோ சேரன்... நான் அவங்களைப் பத்தின டீடெய்ல்ஸ் நாளை ஈவினிங்குக்குள்ள சொல்றேன். இனிமேல் இந்த மாதிரிச் சின்னப் பையன் போல காலேஜ் வாசல்ல நிக்க வேண டாம். நீ பெரிய பிசினஸ்மேன் சேரா...!

"உன்னோட அப்பாயிண்ட்மெண்ட்க்காகப் பல பேர் காத்திருக்காங்க... அதை முதல்ல மனசுல வைங்க சார்...



நவ் லெட்ஸ் கோ..." – என நண்பனாக ஆரம்பித்த ஜீவா, தொழிலாளியாக முடித்தான்.

இவர்கள் அவர்களுக்குள் பேசி, நடு ரோட்டில் ஒரு பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்ததைத் தோழிகள் இருவரும் பேருந்தில் ஏறும் நொடி கண்டு கொண்டனர்.

அவர்களைப் பார்த்ததும் முதலில் அகல்விழிதான் ஆரம்பித்தாள்.

"அச்சச்சோ... சுண்டு... என்னடி இவா நம்மைத் தேடிண்டு மறுபடியும் காலேஜ் வரை வந்துட்டா...! அச்சோ... அவன் ஏதாவது பிரச்சனை பண்ணிடு வானோ... நேக்கு ஒரே பயமா இருக்குடி...!" என்றவள், அவள் பயந்தது மட்டுமல்லாமல்... உடன் இருந்த சுந்தரிக்கும் பயத்தை ஏற்படுத்தினாள்.

## 15

அகல்விழியும், சுந்தரியும் தூரத்தில் நின்று பேசிக் கொண்டிருந்த சேரனையும், ஜீவாவையும் கண்டு கொண்டனர்.

இருவருக்குமே இந்த நேரத்தில், அதுவும் தங்கள் கல்லூரி வளாகத்தின் முன்னால் அவர்களைச் சந்தித்ததில் பெரிய அதிர்ச்சியே. சுந்தரிக்கு உடம்பு உதறிக் கொண்டு வந்தது.

முந்தைய நாள் சேரன் அவன் அலுவலகத்தில் பேசியது அனைத்தையும்தான் ஒன்று விடாமல் கேட் டாளே... அந்த உதறலுடன் இந்த அகல்விழி வேறு அவள்

பயத்தைச் சுந்தரியிடம் சொல்லி, அவளை மேலும் உதறச் செய்து கொண்டிருந்தாள்.

"ஹே சுண்டு... இங்க பாரேன்டி. அந்த ரவுடி இங்கேயும் வந்துட்டான். அச்சோ.. இப்போ என்னடி செய்றது? நேக்கு உடம்பு பதறது சுந்தரி... நம்ம இனிமேல் காலேஜுக்கு வர வேண்டாம்டி. லீவ் போட்டுண்டு வீட்டுலயே இருந்துடலாம். என்ன சரியா?"

அகல்விழி பயத்துடன் கேட்டு, அதற்கு அவளாகவே ஒரு தீர்வையும் கண்டு சொல்ல...

கோபம் கொண்ட சுந்தரி, "ஹே, நிறுத்துடி. இவ வேற. அவனுக்குப் பயந்துட்டு நம்ம காலேஜ் வராமல் இருந்தா... இந்த வருஷப் படிப்பை எப்படி முடிச்சு... பெரிய வேலைக்குப் போவியாம்? பிரச்சனை எனக்குத்தானே அகல்... நினக்கு எந்தப் பிரசனமுமில்லா அகல்... ஞான் லீவ் எடுக்காம்... நீ காலேஜ் போ..."

"போடி. நீயில்லாம எனக்கு மட்டும் என்ன காலேஜ்? நீ வரலன்னா நானும் போக மாட்டேன்..."

அகல்விழி கபடமாகச் சொல்ல... தன் தோழியின் அன்பை நினைத்து நெகிழ்ந்த சுந்தரி, அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டாள்.

பின் யோசித்தவளாக, "இவட நோக்கு அகல்... ரெண்டு பேரும் காலேஜ் போகாம இருக்க வேண்டாம். நான் இன்னிக்கே எண்ட அச்சனிட்ட பேசுறேன். எவ்ளோ சீக்கிரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரம் இந்தப்



பிரச்சினையை முடிக்கச் சொல்லி, அப்பாகிட்ட கேட்டுப் பார்க்கிறேன்... சரியா... நீ எதுக்கும் பயப்படாதே."

சுந்தரி, அகல்விழிக்கு ஆறுதல் சொல்வதாக நினைத்துத் தன்னைத் தானே தேற்றிக் கொண்டவள் கண்களில் சில துளி நீர் வழிந்தது.

அதை அகல்விழியின் முன்னர் மறைப்பதாக நினைக்க... அவளோ அதைக் கண்டு கொண்டாள்.

எப்போதுமே அந்தப் பேருந்துப் பயணம் இருவருக்கும் கலகலப்பாகவே இருக்கும். அகல்விழியின் கள்ளமற்ற பேச்சைக் கிண்டலடித்து, அவளிடம் இரண்டு செல்ல அடிகளை வாங்கவில்லை எனில் சுந்தரிக்கு அன்று உண்ட இடியாப்பம் செரிக்காது. ஆனால், இன்றோ பேருந்துப் பயணம் இருவருக்குமே சற்றுப் பயத்துடனும், அடுத்தது என்ன என்ற யோசனையுடனும் கழிந்தது.

எப்போதுமே வரும் பேருந்து என்பதால்... அதில் வரும் மூன்று கண்டக்டர்களுடன் இருவரும் நல்ல நண்பர்களாகி விட்டனர். ஒரு ஸ்டாப்பிற்கு முன்னதாகவே சீட்டை விட்டு எழுந்திருக்கும் பிள்ளைகள்... இன்னமும் சீட்டில் அமர்ந்திருந்தது அந்தப் பேருந்தின் மூத்த கண்டக்டருக்கு வித்தியாசமாகப் படவே, "என்னடா கண்ணுகளா..." என்றழைத்த, அந்த மூத்தவர் இன்னும் ஒரு சில நாட்களில் ரிடையராகப் போகிறார்.

அவர் ஓய்வு பெறப் போவதற்குச் சுந்தரியும், அகல்விழியும் அந்தப் பேருந்திலே சின்னதாகக் கேக் வெட்டி அவர் மனதைக் குளிர வைத்தார்கள்.

இவர் மட்டுமல்ல, அந்தப் பேருந்தில் தினசரி பயணிக்கும் அனைத்து மக்களும், சுந்தரி, அகல் விழிக்கு நன்கு பழகியவர்கள். இருவரின் நல்ல குணமும், கள்ளமில்லாப் பேச்சும் அனைவரையும் ஒரு நொடியில் ஈர்த்துவிடும் என்கையில்... சேரனும் ஜீவாவும் மட்டும் விதிவிலக்கா என்ன?

எப்போதும் கலகலத்து வரும் பிள்ளைகள்... இன்று அமைதியாக இருப்பது, அந்த முதியவரின் அழைப்பைக் கூடக் காதில் வாங்காமல் யோசித்து வந்த பெண்களின் மனதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டியது.

"பிள்ளைகளா..." இந்த முறை சற்று அழுத்தமாகவே அழைத்தார்.

"ஹா... என்ன... என்ன அங்கிள்?" - முதலில் சுதாரித்தது சுந்தரிதான்.

"என்னம்மா... என்னாச்சு? ஏன் ரெண்டு பேரும் ஒரு மாதிரி இருக்கீங்க? ஏதாவது பிரச்சனையா?"

"ச்சே... ச்சே! அப்படியெல்லாம் இல்ல அங்கிள். இன்னும் கொஞ்ச நாள்ல எக்ஸாம் வருதுல்ல... அதான் கொஞ்சம் கவலையா இருக்கு..."

"ஹும்... நீங்களா பரிட்சைக்குப் பயப்படுற பிள்ளைக... நான் நம்பிட்டேன்..." என்ற பெரியவர், அனுபவஸ்தராக, "இதைப் பாரு கண்ணு... எந்தப் பிரச்சனைக்கும் தீர்வு இல்லாம இருக்காது. இன்னிக்கு நமக்குப் பெருசாத் தெரியுற விஷயம் கொஞ்ச நாள்ல உப்புப் பெறாத விஷயமா இருக்கும்.



"பிரச்சனைன்னு வந்தா... அதையே நினைச்சுக் கவலைப்படாம அடுத்தது என்னன்னுதான் யோசிக்கணும். என்ன சரியா?" என்ற பெரியவர், இன்னமும் ஜன்னல் கம்பியில் சாய்ந்திருந்த அகல்விழியை நோக்கி, "குவா... குவா..." இப்படித்தான் அவர் எப்போதும் அவளை அழைப்பார்.

பெரியவரின் அழைப்பில் தன் தீவிர யோசனை யிலிருந்து மீண்ட அகல்விழி, "ஹான்... ஏன் அங்கிள் என்னைக் குவா குவான்னு கூப்பிடறேள்... நேக்கு எத்தனை வயசுன்னு உங்களுக்கு நன்னாவே தெரியு மோனோ.."

அவளுக்கு இப்படி அழைத்தால் கோபம் வருமென்று தான் அவர் அப்படி அழைத்தார்.

அவளின் கோபத்தைக் கண்டு கொள்ளாமல், "இதுக்கு மட்டும் சண்டைக்கு நில்லு. உங்க ஸ்டாப் வந்துடுச்சு... வீட்டுக்குப் போகலையா? நான் வண்டியை ரெண்டு நிமிஷம் மேல நிறுத்த மாட்டேன்...!" - அவர் மிரட்டல் விடுக்க...

"ம்க்கும்... நீங்க என்ன நிறுத்துறது... டிரைவர் அண்ணாவாண்ட சொன்னா... என்னை என் வீட்டு வாசல்லயே இறக்கி விடுவார்..." அவள் கெத்தாகச் சொல்ல,

"ஆமா... ஆமா... உங்க டிரைவர் அண்ணா... உன்கிட்ட சம்பளம் வாங்குறான் பாரு... நீ இப்படியே பேசிட்டு இரு. நான் வண்டியை இன்னொரு ட்ரிப்

போயிட்டு வந்துதான் உன்னை இறக்கி விடுவேன்...!" - அவர் மிரட்டல் விடுக்க...

"அச்சச்சோ...! போங்கோ அங்கிள். அப்பா என்னைத் தேடுவார்... ஹே, சுந்தரி... சீக்கிரம் வாடி." அவள் கையைப் பிடித்துக் கொண்டு முன்னேற...

சுந்தரி திரும்பி, "தேங்க்ஸ் அங்கிள்..." உளமார நன்றி சொல்லி விடை பெற்றாள்.

பேருந்து நிறுத்தத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து வந்தவர்கள்... அந்த நடுத்தரக் குடியிருப்பிற்குள் இருவரின் மௌனமான நடை தொடர்ந்தது. பின் சுந்தரியும், அகல்விழியும் அடுத்தடுத் திருந்த அவர்களின் வீட்டிற்குள்ளே செல்ல எத்தனிக்க... சுந்தரியிடம் விடைபெற எண்ணி அவள் முகத்தைப் பார்த்த அகலுக்கு... அவளின் யோசனை மேலும் உறுதி யானது.

தோழியின்... தோளைப் பற்றி, "சுந்தரி, வருத்தப்படாதேடி. எப்படியாவது சமாளிச்சுடலாம்.." - சமாதானம் சொல்ல,

"எப்படி அகல்... வருத்தப்படாம இருக்க முடியும். அச்சாக்கு தான் எத்தனை அடி. இப்போதான் உடம் புக்கு முடியாம ஹாஸ்பிடலிலிருந்து வந்தார். அவரோட ஹாஸ்பிடல் செலவுக்கே உன் அப்பாதான் பாதிப் பணம் கொடுத்தார். இப்போ வேற இந்தப் பிரச்சனை... அச்சாகிட்ட நான் இன்னிக்கு நடந்த விஷயத்தைச்



சொன்னா... இன்னமும் அவர் உடம்பு மோசமாகிடு மோன்னு பயமா இருக்கு..."

"ச்சே... ச்சே... அச்சாக்கு ஒண்ணுமாகாது சுண்டு... நம்மளே இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க முடியு மான்னு பார்ப்போம். நீ அச்சா முன்னாடி எதையும் காட்டிக்காதே..."

குழந்தையாக இருந்த அகல்... குமரியாக மாறித் தோழிக்கு ஆறுதல் சொல்லித் தேற்றி உள்ளே அனுப்பி வைத்தாள்.

அவளைத் தொடர்ந்து அகல்விழியும் தனது வீட்டிற்குள் நுழைந்தாள்.

வீட்டுக் கூடத்தில், திருப்பாவை ஒரு புறம் ஒலிக்க... இன்னொரு புறம் மணமணக்கும் ஃபில்டர் காபியை நுகர்ந்தவாறு, மாலை மலரைப் படித்துக் கொண்டிருந்த தன் தந்தையை நெருங்கியவள், கையில் வைத்திருந்த புத்தகப் பையை அங்கிருந்த மூங்கில் சேரில் வீசி விட்டு, கீழே அமர்ந்து அவரின் மடியில் தலை சாய்த்துப் படுத்துக் கொண்டாள்.

கணவருக்குச் சுடச் சுட ஃபில்டர் காபி போட்டுக் கொண்டு வந்த நளினிக்கும் மகளின் இந்தச் செயல் சற்று வித்தியாசமாகத்தான் பட்டது.

நளினி, "அச்சு... என்ன இது! காலேஜ் போயிட்டு வந்ததும் கை கால் அலம்பாம இதென்ன புதுப் பழக்கம்?" - அன்னையாக அதட்டல் போட்டார்.

"ச்சு... செத்த சும்மாயிரு, நளினி..." - மனைவியை அதட்டியவர், மகளின் தலையை ஆதரவாகத் தடவி, "அச்சும்மா... என்னடா... என்னாச்சு?" - அன்புக் குரலில் விசாரித்தார்.

தந்தை கேட்ட நொடி அனைத்தையும் ஒப்பிக்க ஆரம்பித்து விட்டாள்.

"அப்பா... பாவம்ப்பா சுந்தரி... இன்னிக்கு அந்த ஆளில்லப்பா... அவன் எங்க காலேஜுக்கே வந்துட்டான்... எனக்கும் சுந்தரிக்கும் பயம் வந்துடுத்து..."

"யாருடா?"

"அதான்ப்பா... சுந்தரியோட அப்பா ஒருத்தராண்ட பணம் வாங்கியிருந்தாரே... லக்ஷ்மிக்கா கல்யாணத்துக்கு... அந்த ஆள்... அந்த ஆள் ரொம்ப மோசமானவனாம் அப்பா. பெரிய பெரிய அடியாள் எல்லாம் வைச்சுண்டு இருக்கானாம். நேத்து சுந்தரி அவன் ஆபீஸுக்கு வட்டிப் பணம் கட்ட முடியலைன்னு தவணை சொல்லப் போயிருக்கா.

"அதுக்கு அந்த ஆள் இவளை ரொம்ப மிரட்டிட்டான் போல... வரும்போது ரொம்ப அழுதுண்டே வந்தாப்பா. அவ கையெல்லாம் ஒரே நடுக்கம். இன்னிக்கும் அவனை எங்க காலேஜ் வாசல்ல பார்த்ததும் ரொம்பவே பயந்துட் டாப்பா. நேக்கும்தான் ஒரே பயம் பயமா வந்துடுத்து..."

அகல்விழி நடந்ததுடன் தன் அனுமானத்தையும் கூட்டிச் சொல்ல...



"ஹ்ம்ம்... பாவம். உன்னியும் என்ன பண்ணுவார் பாவம்... பொண்ணு காதலிச்சுட்டா. பையனும் குணத்துல நல்லவன்னு அவனுக்கே கல்யாணம் பண்ணிக் கொடுக்க நினைச்சார். ஆனா பையன் மட்டும் நல்லவனா இருந்து என்ன பிரயோஜனம்? குடும்பம் மொத்தத்துக்கும் பணப் பேயில்ல பிடிச்சுண்டு இருந்திருக்கு.

"இதைத் தா, அதைத் தான்னு கடைசி நேரத்துல அவர் கழுத்தைப் பிடிச்சு இறுக்கிப் பணத்தைப் பிடுங்கிட்டாங்க. அவரோட தகுதியை மீறிக் கடன் வாங்கி, வட்டி கட்ட முடியாம இப்போ வருத்தப்படறார். என்ன செய்ய?" - நளினி ஆற்றாமையுடன் சொல்ல...

"அதாம்மா... நேக்கு ஒரு யோசனை..."

"என்ன யோசனை?"

"இல்லம்மா... சுந்தரி ரொம்பப் பாவம்மா...."

"ஆமாடி. பாவம்! இந்தச் சின்ன வயசுல எவ்வளவு கஷ்டம் அந்தக் குழந்தைக்கு..."

"அவ ரொம்ப அழுதுட்டு இருந்தா..."

"அதனால..."

"அதனால... நீங்க... நேக்குக் கல்யாணத்துக்கு நகை சேர்த்து வைச்சிருக்கேளே... அதை..."

"அதை..." நளினியின் குரல் சற்றே உயர்ந்தது.

"இல்லம்மா... அதை வித்து..."

“அடி பிச்சுடுவேன்...” - நளினி சொன்னதுடன் அடிக்கவே வந்து விட்டார்.

நாராயணன் தான்... இருந்த இடத்தை விட்டெழுந்து அவர் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினார்.

“இங்க பாருங்கோ... இந்தப் பிள்ளை என்ன பேச்சுப் பேசுறானு!”

“விடு நளினி... அவ ஏதோ சுந்தரிக்காக யோசிச் சிருக்கா...”

“என்ன யோசனை வேண்டியிருக்கு... ஏற்கெனவே தங்கைகள் தங்கைகள்னு சொல்லி நீங்க சம்பாதிச்ச மொத்தப் பணத்தையும் உங்க தங்கைகளுக்குத்தான் கொடுத்தேள். நான் ஏதோ நீங்க வீட்டுக்குக் கொடுத்த பணத்துல, வாயைக் கட்டி, வயித்தைக் கட்டி இவளுக்கும், இவ தங்கைக்கும் ஏதோ நகை சேர்த்தி வைச்சிருக்கேன். அதையும் ஊராருக்குக் கொடுக்கணும்னு சொல்றாளே... இவளை என்ன செய்ய?” - நளினிக்கு ஆற்றாமையாக வந்தது.

“விடு நளினி... அவ சின்னப் பொண்ணு.”

“என்னங்க சின்னப் பொண்ணு... இன்னும் ஒரு வருஷத்தில இவளைக் கட்டிக் கொடுக்கணும். அதுக்கு என்ன செய்யுறதுன்னு நான் தினம் நித்திரை இல்லாம யோசிச்சிண்டு இருக்கேன். இவளுக்கு அடுத்து இன்னொருத்தி வயசு வந்து நிக்கிறா. அவளுக்கு என்ன வழின்னு தெரியலை. இவளானா ஒரே நிமிஷத்தில சேர்த்த



பணத்தை அடுத்தவாளுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப் போறாளாம்...” - கணவரிடம் சொன்னவர், மகளின் புறம் திரும்பி,

“இத பாரு அகல்... இனிமேல் நீ சுந்தரியோட காலேஜ் போக வேண்டாம். அவளுக்கு வந்த பிரச்சினை அவளோட இருக்கற உனக்கும் வராதுன்னு என்ன நிச்சயம்? அவன் வேற ஏதோ ரவுடின்னு சொல்ற. தினம் தினம் நீயும், உன் தங்கையும் வெளியில போயிட்டு வர்றதுக்குள்ள நேக்கு இங்க மனசு பதறுது. கால காலத்துல உங்களைக் கட்டிக் கொடுக்கிறவரை நேக்கு நிம்மதியே இருக்காது. இனிமேல் இந்த மாதிரி இல்லாம காலேஜுக்குப் போனோமா... வந்தமான்னு இருக்கணும். என்ன புரியுதோ?”

மிரட்டலாகக் கேட்டு, மகளிடம் ஒரு தலை உருட்டலை வாங்கிய பின்னர்தான் நளினி அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

மனைவி சென்றதும், மிரண்ட பார்வையுடன் அமர்ந்திருந்த மகளின் தலையை வருடி, “அச்சும்மா...!” என்று அழைத்த நாராயணனின் மடியில் மீண்டும் தஞ்சம் புகுந்தாள்.

“அச்சும்மா... அப்பா சொல்றதைக் கேட்பியாடா?” தளர்ந்த தன் கைகளைக் கொண்டு மகளின் கூந்தலை வருடிக் கேட்டார் நாராயணன்.

“கண்டிப்பாப்பா... நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்பேன்ப்பா...” - அவள் உறுதியளிக்க...

"அம்மா சொன்னது எல்லாமே நியாயமான வார்த்தைடா குட்டி... அப்பா ரொம்ப முட்டாள்தனமா பொழைச்சுட்டேன். என்னோட இளமைக் காலம் எல் லாமே அப்பா இல்லாத என்னோட குடும்பத்தை நிலை நிறுத்தவே சரியா இருந்துச்சுடா.

"அதுக்கப்புறம் உன்னோட அம்மாவைக் கல்யாணம் பண்ணிண்டு, ஒரு நாள் கூட நான் அவளைச் சந்தோஷமா வைச்சுக்கிட்டதில்ல. தங்கை, அவங்க கல்யாணம், அவங்க பிள்ளைகளுக்குச் சீர் செய்யன்னு நான் சம்பாதிச்ச பணம் எல்லாமே அதுக்கே போயிடுச்சு...

"உங்க அம்மா... உனக்கும் உன் தங்கை ஸ்ரீவள்ளிக்கும் நல்ல வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்கணும்னு மனசுல கோட்டை கட்டி வைச்சிருக் காடா குழந்தை... இத்தனை வருஷத்துல உன் அம்மா வுக்கு என்னால கொடுக்க முடிஞ்ச ஒரே சந்தோஷம் உங்க ரெண்டு பேர் கல்யாணம்தான்டா அச்சும்மா... அதனால தான் நீ அப்படிச் சொன்னதும் அம்மா கோவிச்சுனுட்டா. அம்மா பேசினதை நீ மனசுல வெச்சுக்காதே. என்ன சரியா?"

"ச்சே... ச்சே... அம்மா பேசினதுல நேக்கு வருத்தமில்லப்பா. ஆனா சுந்தரிப்பா... நேக்கு அவளைப் பார்த்தாலே கஷ்டமா வருதுப்பா... அதான் என்னால முடிஞ்ச ஏதாவது உதவி செய்யலாம்னு யோசிச்சேன்."

"ஹ்ம்ம்... நம்மெல்லாம் ஏழைகள்டா குழந்தை... அந்த ஆண்டவன் ஏழைகளுக்குச் செய்யணும்னு



எண்ணத்தை மட்டும்தான் கொடுப்பான். செய்யறதுக்கு உண்டான சக்தியைக் கொடுக்க மாட்டான். பணக்காரர் களுக்குப் பணத்தைக் கொடுப்பான். ஆனா, உதவி செய்யுற எண்ணத்தைக் கொடுக்க மாட்டான். அதான்டா இந்த உலக நியதி..."

நாராயணன் நடைமுறையை மகளுக்கு உணர்த்த முயன்று அதில் வெற்றியும் கண்டார்.

"நீங்க சொல்றது உண்மைதான்ப்பா... அந்தப் பெருமாள் சுந்தரிக்கு ஒரு நல்ல வழியைக் காட்டணும்னு வேண்டிக்கிறேன்..." என்ற அகல்விழி, அந்த நொடி உண்மையாக ஆண்டவனிடம் அப் பிரார்த்தனையை வைத்தாள்.

"சீக்கிரம் போய்க் கை, கால் அலம்பிட்டு வா. உன் அம்மா மீண்டும் காளி அவதாரம் எடுத்துடப் போறா...!" - நாராயணன் செல்லச் சிரிப்புடன் சொல்ல...

"அப்பா... அம்மாவைக் காளினா சொல்றேள்... இருங்கோ. அம்மாவாண்ட போட்டுத் தர்றேன்...!" - செல்லமாகத் தந்தையை மிரட்ட...

"ஹய்யோ... அப்படி ஏதும் செஞ்சுடாதே அச்சு... அப்புறம் இன்னிக்கு ராத்திரி உன் அம்மா என்னைப் பட்டினி போட்டுடுவா..." - பயந்தவாறு சொல்ல...

"ஹா... ஹா... ரொம்பாஆஆஆ பயப்படற மாதிரி நடிக்காதேள்ப்பா... ஆமா, எங்கே அந்தச் செல்ல வாண்டு... இன்னுமா டியூஷன் விட்டு வரலை.." தன் தங்கை ஸ்ரீவள்ளியைக் கேட்க...

"வர்ற நேரம்தான்டா. நீ போய் முகம் அலம்பிண்டு வா. அம்மா பட்சணம் செஞ்சு வைச்சிருக்கா... வந்து ஒரு பிடி பிடி..." மகளை அனுப்பி வைத்த நாராயண னுக்கும் மகளின் எண்ணம்தான் இருந்தது.

ஆகையால் தன்னால் முடிந்த ஏதாவது உதவி யைச் சுந்தரியின் தந்தை உன்னிக்குச் செய்ய நினைத்தார். ஆனால், அதன் விளைவை அவர் ஒரு நாளும் எண்ணியிருக்க மாட்டார்.

இது நடந்த இரண்டாவது நாள்... சேரனின் ஃபிஷிங் ஃபாக்டரி அலுவலகத்தில், சேரன் அவன் வேலையில் மூழ்கியிருக்க... ஜீவா அவன் முன்னர் ஒரு ஃபைலை நீட்டினான்.

ஃபைலையும் ஜீவாவையும் மாறி மாறிப் பார்த்த சேரன், கண்களாலேயே அவனிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான்.

"இதை வாங்கிப் பாருங்க..." - ஜீவா சொல்ல...

"என்னது இது?" என்றவாறே அதை வாங்கிப் பிரித்தவன் கண்கள் ஃபைலை நோட்டமிட, காதுகள் ஜீவா சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தன.

"பேரு அகல்விழி. அப்பா பேரு நாராயணன். ரெண்டு வருஷம் முன்னாடி வரை கவர்மெண்ட் வேலையில் இருந்து ரிடையராகி விட்டார். இப்போ ரொம்ப ரொம்பக் கம்மி சம்பளத்துக்கு ஒரு பிரைவேட் கன்சர்ன்ல கேஷியரா இருக்கார்.



"அம்மா நளினி, ஹவுஸ் வைஃப்... அகல்விழிக்கு ஒரு தங்கச்சி... பேரு ஸ்ரீவள்ளி. இப்போ பிளஸ் டூ படிச்சுட்டு இருக்காங்க. இவங்க கூட இருந்தாங்களே அவங்க பேரு சுந்தரி. அகல்விழியோட க்ளோஸ் ஃப்ரெண்ட். அவங்களும் இவங்க பக்கத்து வீடுதான்..."

சேரனுக்குத் தேவையில்லாத, தனக்குத் தேவை யான விவரத்தையும் சேர்த்தியே சொன்னான்.

"அப்புறம் சார்... நீங்க சொன்ன காலேஜ் விவரம் எல்லாம் சரி. ஆனா அவங்க வீடு வேளச்சேரி இல்ல. மைலாப்பூர் பக்கம்... எக்ஸாக்டா நம்மளோட புது ப்ராஜெக்ட்டுக்கு அடுத்த வீதி. வீடு சொந்த வீடுதான். ஆனா, அந்த நாலு கிரௌண்ட் நிலத்துக்கு மூணு பேர் வாரிசுங்க. அவங்க அப்பா சம்பாதிச்சதெல்லாம் அவங்க தங்கச்சிகளுக்கே கொடுத்துட்டார்.

"சோ, அவங்க ஃபேமிலி மாசச் சம்பளத்தை எதிர்பார்க்கிற சாதாரண மிடில் கிளாஸ் ஃபேமிலி. அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம். அவங்க பிராமின். ரொம்ப ரொம்ப ஆர்தோடாக்ஸ் ஃபேமிலி." - எல்லா விவரத்தையும் ஒன்று விடாமல் அவன் முன்னே அடுக்கி னான் ஜீவா.

அவன் சொன்னதை எல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்ட சேரன், அவன் முடித்ததும், "இந்தா ஜீவா..." என ஃபைலை அவனின் பக்கம் நீட்டி விட்டு, ஃபேக்டரிக்குள் ரவுண்ட்ஸ் போகக் கிளம்பியே விட்டான்.

அவனின் இந்தச் செய்கை ஜீவாவைச் சற்று அல்ல... ரொம்பவே குழப்பத்தான் செய்தது.

## 16

**போ**ன அவனையே ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்த ஜீவா திகைத்து நின்றது ஒரு சில நொடியே. பின்னர் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவனின் பின்னரே ஓடினான்.

நடக்கும் வேலைகளை மேற்பார்வையிட்டுக் கொண் டிருந்தவனை, "சார்... என்ன எதுவுமே சொல்லாம எழுந்து வந்துட்டீங்க..." - இடைமறித்துக் கேட்க,

"என்ன சொல்ல ஜீவா... ஃபர்ஸ்ட் நீ அவங்க ஃபேமிலி பத்தி இவ்வளவு டீப்பா விசாரிச்சதே தப்பு. உனக்கு யாரு இதுக்கு ரைட்ஸ் கொடுத்தது?" - சற்றுக் காட்டமாகவே கேட்டான்.

"ஹ்ம்ம்... சேரன், இப்போ நான் உன்னோட ஃபிரெண்ட்ங்கிற பொசிஷனை எடுத்துக்கிட்டுப் பேசலாமா?" என்ற கேள்விக்கு, "அஃப்கோர்ஸ்..." என்ற பதிலைப் பெற்ற பின்,

"என்னோட ஃபிரெண்ட் என்ற நிலையிலும், எனக்கு மாசா மாசம் சம்பளம் தர முதலாளியோட வாழ்க்கை நல்லபடியா அமையணும்னு என்னோட விருப்பம், பிளஸ் உங்க மேல எனக்கு இருக்கற கேர்... இந்த ரெண்டும்தான் என்னை வேலை செய்ய வைச்சது..." என்று சொல்லவும்...



"என் மேல நீ வைச்சிருக்க அக்கறைக்கும், அன்புக்கும் நன்றி ஜீவா... ஆனா, அதுக்காக நீ என்னோட வருங்கால வைஃபோட ஃபேமிலியைப் பத்தி இவ்வளவு விசாரிச்சிருக்கத் தேவையில்லை. எனக்கு அது தேவையுமில்லை. ஏன்னா, நீ சொன்ன எந்தத் தகவலுமே எனக்கு உபயோகமா இல்லை."

சேரன் சொன்னதும், ஜீவாவின் முகத்தில் இன்னமும் குழப்ப ரேகை மறையவில்லை.

அதைப் புரிந்து கொண்டு மேலும் பேச ஆரம்பித்தான்.

"நான் அகல்விழியைப் பார்த்ததும் காதலிக்க ஆரம்பிச்சுட்டேன். நான் அவளைப் பார்த்த முதல் நிமிஷம் எனக்கு அவளோட குழந்தைத்தனம் பிடிச் சிருந்தது. அவளோட கள்ளமில்லாப் பேச்சு பிடித்திருந்தது. அவளோட கண்ணுல தெரிஞ்ச விளையாட்டுத்தனம் ரொம்ப ரொம்பப் பிடிச்சிருந்தது. இதுல எங்கேயும், எந்த விதத்திலேயும் அவளோட ஸ்டேட்டஸ் பத்தி நான் யோசிச்சுக் கூடப் பார்த்ததில்லை. எனக்கு அது தேவை யுமில்லை.

"என்கிட்ட பணம் கொட்டிக் கொட்டி கிடக்குது ஜீவா... இருக்கிறதை அனுபவிக்கவே இங்க ஆளில்லை. இதுல எதுக்கு இன்னும் இன்னும்... ஐ மெஸர் மை லவ் இன் த ஸ்கேல் ஆஃப் லவ் அண்ட் அஃபெக்ஷன் ஜீவா, நாட் இன் த ஸ்கேல் ஆஃப் ஸ்டேட்டஸ் அண்ட் மனி...

"நீ ரெண்டு நாளா ரொம்பச் சிரமப்பட்டு எனக்காக, அகல்விழியோட ஃபேமிலி பத்தி விசாரிச்சதுக்கு வெரி தேங்க்ஸ்... பட் எனக்கு அகல்விழி மட்டும் போதும். அவளோட காதல் மட்டும் போதும். வேறேதும் தேவையில்லை."

நீண்ட விளக்கத்தை ஜீவாவிற்குச் சொன்னானா... இல்லை, தன் மனதைத் தானே ஒரு முறை ஆராய்ச்சி செய்து கொண்டானா என்பதை அவன் அறியான்.

ஆனால் பேசி முடித்தபின், அவன் ஏற்கெனவே எடுத்திருந்த முடிவு, அவன் மனதில் நிலையான இடத்தைப் பெற்றிருந்தது.

சேரனின் தீர்க்கமான முடிவைத் தெரிந்த பின் ஜீவாவிற்கும்... அதற்கு மேல் பேச ஒன்றும் இருக்கவில்லை.

சேரனுக்கு, அகல்விழியின் மேல் ஏதேனும் ஈர்ப்பு மட்டுமிருந்து... நாளை அவளது பொருளாதார நிலையை ஒரு காரணியாகக் கொண்டு பிற்காலத்தில் ஏதேனும் கசப்பான சம்பவம் நடந்தேறினால்... அதனால் பாதிக்கப்படுவது இருவருமே என்ற நோக்கத்தில்தான் ஜீவா... அகல்விழியின் பொருளாதாரப் பின்புலத்தை அறிந்து கொண்டு, சேரனின் முன்னர் கொட்டியது.

ஆனால் இப்போது அது ஒரு பெரிய பொருட்டாக இல்லையென்ற பின் ஜீவாவிற்கு மட்டும் என்ன கவலை இருக்கப் போகிறது?



தனது நண்பன் முதலாளியின் நல்வாழ்க்கைக்காகக் கடவுளிடம் உண்மையான வேண்டுதலை வைத்து விட்டுத் தன் வேலையைப் பார்க்கச் சென்று விட்டான்.

அதன் பின்னர் வந்த நாட்களில் சேரனுக்குச் சில வெளியூர் பயணங்களை மேற்கொள்ள வேண்டியதாகி இருந்தது. அதனால் அகல்விழியைக் காணும் சந்தர்ப்பம் தற்காலிகமாகத் தள்ளிப் போனாலும் அவளின் நினைவுகளை மனதில் சுமந்து கொண்டுதான் நாட்களைக் கடத்தினான்.

ஆனால் அந்தச் சில நாள் பயணத்தின் முடிவில் அகல்விழி அவனை நேரடியாகச் சந்திக்க வந்ததை ஜீவாவின் வாய்மொழியாக அறிந்து கொண்டான்.

அன்று மும்பை சென்று திரும்பி வந்த சேரனை வரவேற்க ஜீவா தான் விமான நிலையத்திற்கு வந்திருந்தான்.

வந்ததும் ஜீவாவின் முகத்தில் தெரிந்த ஒளி வட்டம், சேரனை என்னவென்று கேட்கத் தூண்ட... அவன் சொன்ன வார்த்தைகள் சேரன் கேட்கக் காத்திருந்த செய்தி தான்.

"வாட்... என்ன ஜீவா... உண்மையாவா சொல்ற?"

"மம்மி ப்ராமிஸ் சார்..." - ஜீவா விளையாட்டாகச் சொல்ல...

"என்னால நிஜமா நம்பவே முடியல. பொய் சொல்லாம சொல்லு ஜீவா..."

"அட சத்தியமா சார்... அதுவும் ஒரு தடவையில்லை. ரெண்டு தடவை. என் மேல நம்பிக்கையில்லைன்னா... நம்ம ஆபீஸ் சிசிடிவி ஃபூடேஜ் பாருங்க..."

"ச்சே... மிஸ் பண்ணிட்டேனே ஜீவா.. நீ ஏன் முன்னாடியே சொல்லலை?"

"நீங்க இங்க வந்ததும் சொல்லலாம்னு இருந்தேன் சார். அதுவும் நீங்க போனது ரொம்ப முக்கியமான மீட்டிங். இதைச் சொல்லியிருந்தா நீங்க உடனேயே கிளம்பி வந்திருப்பீங்கன்னு எனக்கு நல்லாவே தெரியும். லேட்டா சொன்னதும் ஐ அம் வெரி சாரி..."

ஜீவா மன்னிப்பைக் கேட்ட பின் அவனால் என்ன செய்ய முடியும்!

கழுத்து டையைத் தளர்த்தி விட்டவாறு கார் பார்க்கிங் விரைந்து வந்தவன்... ஜீவாவிடம் சாவியைப் பிடுங்காத குறையாகப் பிடுங்கித் தானே டிரைவர் இருக்கையில் அமர்ந்து கொண்டு காரை இயக்கினான்.

அவன் சென்ற வேகத்தில்... அவன் அகல்விழியைக் காணத்தான் செல்கிறான் என்பது பாதி வழியில் தெரிந்து விட்டது. அவன் போகும் வழி அகலின் கல்லூரியாக இருக்க... ஜீவா, "சார், எங்கே போறீங்க?" என்றான்.

"ஹா... வேறெங்கே? என்னோட குல்ஃபி பெண்ணைப் பார்க்கத்தான் அவ காலேஜ் போறேன். என்னமோ அவளைப் பார்க்கணும்னு மனசு கெஞ்சுது!" பார்வையைப் பாதையில் வைத்தவாறு பதிலளிக்க...



ஜீவா, "சார்... நான் சொன்னா கிண்டல் பண்றேன்னு சொல்வீங்க. ஆனாலும் உங்க ஆர்வக் கோளாறுக்கு ஒரு அளவே யில்லாம போய்க்கிட்டு இருக்கு...!" - சிரிப்புடன் சொல்ல,

ஒரு நிமிடம் பாதையில் பதித்த பார்வையை, ஜீவாவின் புறம் திரும்பி மோசமான ஒரு முறைப்பை முறைத்து விட்டு, மீண்டும் சாலையில் கவனமானான்.

"ஹா... ஹா... சாரி சார். இன்னிக்கு சண்டே சார்..." - சிரிப்புடனே சொல்ல... பிரேக் போட்டு நிறுத்திய சேரனின் முகத்தில் டன் டன்னாக வழிசல்.

ஜீவாவின் கிண்டலில் சற்று வெட்கமாகக் கூட உணர்ந்தான்.

காரை வேகமாகத் திருப்பியவன் நேராக மைலாப்பூர் செல்லும் பாதையில் ஓட்டிச் செல்ல... ஜீவாவின் மனதில், 'இன்னிக்கு ஒரு முடிவோடதான் இருக்காரு போல...!' என்று நினைத்தாலும் அவனின் செயலைத் தடுக்க எண்ணவில்லை.

சில மணி நேரப் பயணத் தூரத்தைக் கடந்து சேரன் வண்டியை மைலாப்பூரில் அகல்விழி வசிக்கும் தெருவில், அவள் வீட்டிற்குச் சற்றுத் தள்ளி நிறுத்தினான்.

ஜீவா அவனைக் கேள்வியாகப் பார்க்க...

"அவள் எதுக்காவது வெளியே வருவால்ல... அப்போ அவளைப் பார்த்துட்டுப் போயிடலாம்..." என்க...

"ஹ்ம்ம்... நல்லதுதான் சார். எங்கே அவங்களை உடனே பார்த்தாகணும்னு அவங்க வீட்டுக்குள்ள போய் ரகளை பண்ணிடுவீங்களோன்னு நினைச்சுட்டேன்...!" என்றாலும் அவன் அந்த மாதிரி அநாகரிகமான செயலை எல்லாம் செய்ய மாட்டான் எனத் தெரிந்த ஜீவா, அகல் வருவதற்காகவும் அவளின் தோழியின் தரிசனத்தைக் காணவும் காத்திருக்கத் துவங்கினான்.

அவர்களை அதிக நேரம் காத்திருக்க வைக்காமல், "ஹே ஸ்ரீ... கொஞ்சம் சீக்கிரமே வந்தாதான் என்னவாம்? இன்னிக்கு ஞாயித்துக் கிழமைடி. ப்ரௌசிங் சென்டர் எல்லாம் இருக்குமோ என்னவோ... இதுல நீ வேற ஆடி அசைஞ்சு கிளம்பிட்டு இருக்க... சீக்கிரமாத்தான் வந்து தொலையேன்..." வீட்டு வாசலில் செருப்பை மாட்டிக் கொண்டு புலம்பிக் கொண்டிருந்தாள் அகல்விழி.

ஆனால் அவளின் புலம்பலுக்குச் செவி சாய்க்க மனமில்லாமல்... ஸ்ரீ இன்னமும் கண்ணாடி முன்னர் நின்று தன்னை அழகுபடுத்திக் கொண்டிருக்க... வீட்டு வாசல்வரை வந்த நளினிதான்... "அடியே அகல்... உன் தங்கை இன்னமும் அலங்காரத்தை முடிக்கல. அப்பாவும் அவர் ஃபிரெண்டை பார்க்கப் போனவர் இன்னமும் வரல. பேசாம நீ மட்டும் தனியாப் போயிண்டு வாயேன். எதுக்கு இப்படி எல்லாத்துக்கும் யாரையோ துணைக்கு அழைக்கிற!"

"ச்சு... போம்மா. அது எப்படித் தனியாப் போறது?" மகள் சங்கடமாக இழுக்கவும்...



"சரி இரு. நானே வர்றேன்..." என்ற நளினி காலில் செருப்பை மாட்ட வர...

"ச்சே... ச்சே... வேண்டாம்மா. நோக்குதான் மூட்டு வலின்னு சொன்னியே... நீ படுத்திரும்மா..."

அவளுக்கு அன்னையைச் சிரமப்படுத்த விருப்ப மில்லை. ஆனால், அதே சமயம் தெரு முனைதான் என்றாலும்... அங்குவரை தனியே செல்லச் சற்றுப் பயமாகத்தான் இருந்தது. அதனால் மீண்டும் தன் தங்கை யைக் கூவிக் கூவி அழைக்க ஆரம்பித்தாள்.

"இந்த ஸ்ரீ... ஹே ஸ்ரீ ஸ்ரீ... சித்த சீக்கிரம் வாயேன்டி..."

மீண்டும் ஸ்ரீயை அவள் ஏலம் போடத் துவங்க...

இதை எல்லாம் காரில் அமர்ந்து கொண்டு சேரன் உதட்டில் பூத்திருந்த சின்னச் சிரிப்புடன் ரசித்துக் கொண் டிருந்தான்.

மனதில், 'நம்ம ஆளு சின்னப் பாப்பா போல் இருக்கு...' என்ற எண்ணமும் கூடவே எழுந்தது.

அதற்குள் அங்கே ஸ்ரீ, "ஷ்ஷ்ஷ்... ஏன்க்கா, என்னோட பேரை இப்படி ஏலம் போட்டுண்டு இருக்கே! இவளுண்டு பவுடர் பூசிக் கண்ணுக்கு ஒரு வரி மை போட்டுண்டு வர்றதுக்குள்ள என்னோட பேரை ஆயிரம் தடவை கூவிக் கூவி வித்தாச்சு...!" - சலித்துக் கொண்டே ஸ்ரீ வெளி வர...

"ஆமாடி ஆமா... இந்தத் தெரு முனைக்குப் போற துக்கு நோக்கு இத்தனை அலங்காரம் தேவையோ? உன்னையெல்லாம்..." - அகல் அவளை அடிக்க வரவே...

"அடியே... பொண்ணுகளா! ரெண்டு பேரும் சண்டை போடாம சீக்கிரம் போயிட்டு வாங்கோ. தெருவுல இப்படியே சண்டை போட்டுட்டு போனேள்னா உங்களைப் புத்தி சுவாதீன மில்லாதவானு மத்தவா நினைச்சுப்பா. கிளம்புங்கோ. நான் போய்ச் செத்த உடலைச் சாய்க் கிறேன்..." என்ற நளினி உள்ளே சென்று விட, அக்காவும் தங்கையும் ஏதோ மலை ஏறப் போவது போல் நடக்க ஆரம்பித்தனர்.

இருவரும் சேரனின் காரைக் கடந்து சென்றபோது, அந்தக் காரைக் கண்டதும் அகல்விழிக்குப் புருவங்கள் முடிச்சிட... ஸ்ரீக்கோ பெருத்த ஆச்சரியம்...

அவர்கள் தெருவில் இத்தனை பெரிய விலை யுயர்ந்த காரா என்ற ஆச்சரியம் அவள் அடுத்துப் பேசிய வார்த்தையில் தெரிந்தது.

"அக்கா... இங்க பாத்தியா... இது என்ன கார் தெரியுதா நோக்கு? இம்போர்ட்டட் கார்க்கா. இதோட ஆரம்ப விலையே கோடியிலதான் ஆரம்பிக்கும். இது எப்படிக்கா நம்ம தெருவுல!

"நம்ம தெருவுல அல்டோவும், ஸ்விஃப்ட்டும் இருக் கிறதே பெருசு..." உண்மையான ஆச்சரியத்தில் சொல்ல...



"ஷ்... அது எத்தனை விலையோட இருந்தா நோக்கென்னடி... ரோடுன்னு இருந்தா எல்லா விதமான காரும் இருக்கத்தான் செய்யும். நீ செத்த நாழி வாயை மூடிண்டு வர்றியா!"

பொரிந்தவள் பேச்சைச் சேரன் கேட்டுக் கொண்டு தான் இருந்தான்.

அவர்கள் அவனைக் கடந்து சென்று அந்தத் தெரு முனையில் ஒரு கடைக்குள் நுழையும்வரை, சேரனின் கண்கள் அகலைத் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன.

அவர்கள் செல்லும்வரை பொறுத்திருந்தவன் பின், "சார்... கிளம்பலாமா? அவங்களைத்தான் பார்த்துட்டீங் களே..."

ஜீவாவிற்குத் தாங்கள் அங்கே வெகு நேரம் இருப் பதை யாரேனும் தவறாக நினைத்து விட்டால்... சில சங்கடமான சூழ்நிலையைத் தவிர்க்க எண்ணிக் கிளம்ப லாம் என நினைத்தான்.

ஆனால் சேரனோ, "இரு ஜீவா. போனவங்க திரும்பி வந்ததும் நம்ம போகலாம்..." என்றவன், காரில் ஒலித்த மெல்லிய பாடலுக்கு ஸ்டீயரிங்கில் தாளம் போட்டுக் கொண்டு காத்திருந்தான்.

பத்து நிமிடங்களில் தங்கையும், தமக்கையும் அக் கடையை விட்டு வெளி வந்து தெருவில் நடக்க ஆரம் பித்தனர்.

அத்தனை நேரம் காரில் இருந்தவன்... அவர்கள் அருகில் வரவும், அதற்கு மேல் கட்டுப்படுத்த முடியாமல்... தன் அகலிடம் பேச எண்ணிக் காரை விட்டு இறங்கினான்.

“சார்... சார்... என்ன பண்றீங்க?” ஜீவா பதற...

“நோ ஜீவா... இன்னிக்கு நான் அவகிட்ட பேசியே ஆகணும். என்னைத் தடுக்க முயற்சிக்காதே.”

அவன் குரலில் இருந்த பிடிவாதம், ஜீவாவை அதற்கு மேல் அவனைத் தடுக்க முற்படவில்லை.

ஏதும் தவறாக நடந்து விடக் கூடாது என்ற வேண்டுதலுடன் ஜீவா காரின் வெளியே நின்று அமைதி காத்தான்.

தான் எடுத்து வந்திருந்த பிரிண்ட் அவுட்டைச் சரி பார்த்துக் கொண்டு வந்திருந்த அகல்விழி சற்றும் எதிரில் இருந்த சேரனைக் கவனிக்கவில்லை.

ஆனால் ஸ்ரீயோ, “அக்கா... அங்கே பாரேன். அப்போவே நம்ம பார்த்த அந்தக் காரிலிருந்து ஒரு ஹாண்ட்ஸம் ஹீரோ இறங்குறார்...”

அவள் குரலைக் கேட்டு நிமிர்ந்த அகல்விழிக்கு எதிரில் இருந்தவனைப் பார்த்ததும்... முதலில் தோன்றியது ஆச்சரியம்தான். ஆனால் அடுத்து வந்த பயமும், திகைப்பும் அவள் முகத்தை மாற்றியது.

கூடவே குரலும், “ஹையோ... இவனா?” என்ற வார்த்தைகளை உரக்க வெளியிட...



“அக்கா, நோக்கு இவரை முன்னரே தெரியுமா?” ஸ்ரீ கேட்டதற்குப் பதில் சொல்லும் நிலையில் அவள் இல்லை.

இன்னும் பயம் அவள் கைகளை நடுங்கச் செய்ய... கையில் வைத்திருந்த பேப்பர்களைத் தவறிக் கீழே விட்டாள்.

அதைப் பார்த்ததும், “ஹே ஹே...” என்று பதறிய சேரனும் அவர்கள் அருகில் வந்து கீழே விழுந்திருந்த பேப்பரை எடுக்கக் குனிய... அகலுக்கு அவன் அருகில் வந்ததும் மேலும் பயம் கூடியதே தவிரக் குறையவில்லை.

ஸ்ரீ இருவரையும் மாறி மாறிப் பார்த்தவள்... சிலையென நின்றிருந்த தமக்கையை, “அக்கா... அக்கா...” என உலுக்கி எடுக்க... அகல் என்ற சிலைக்கு உணர்வு வந்து அங்கிருந்து நடக்கத் துவங்கினாள்.

கீழே விழுந்த பேப்பரை எடுத்துக் கொண்டு, “ஹே அகல்... இந்தா... இது வேண்டாமா?” சேரன் அவள் பெயரைச் சொல்லி அழைக்க...

ஸ்ரீயோ, “அக்கா... என்னதிது? அவர் உன் பெயரைச் சொல்றார். அப்போ ரெண்டு பேருக்கும் ஏற்கெனவே நல்ல பழக்கமா? என்னக்கா... என்ன விஷயம்?” நிலைமை புரியாமல் ஸ்ரீ தமக்கையைச் சேரனின் முன்னரே கிண்டல் செய்யவும், அகலால் அவளைத் தடுக்கவும் முடியவில்லை.

ஸ்ரீயின் பேச்சை அசட்டை செய்து மேலும் நடக்க முயல...

"அகல்... அகல்... இந்தா... இதுக்குத்தானே அப்போ இருந்து உன் தங்கையோட சண்டை போட்டுட்டு இருந்த... அதுவே இப்போ உனக்கு வேண்டாமா?" என்றதும், அக்காவும் தங்கையும் பிரேக் அடித்து நின்றனர்.

அப்போ இவன் வெகு நேரமாகத் தங்களை வேவு பார்த்துக் கொண்டிருக்கிறானா... "ஹய்யோ..." அகலுக்கு உள்ளம் பதறியது.

கூடவே இரண்டு நாள் முன்னர் சுந்தரியின் வீட்டில் நடந்த சம்பவமும், அவள் கண் முன்னே ஒரு நொடி வந்து போனது.

'ஒருவேளை... அவன் அதற்குத்தான் வந்திருப் பானோ... அச்சோ சுந்தரி! ஏற்கெனவே அவள் அப்பாவுக்கு உடம்பு முடியலை. இரண்டு நாள் முன்னே இவன் கம்பெனி மேனேஜர் அந்தக் கிரி வந்து சுந்தரி அப்பாவை இந்தத் தெருவே வேடிக்கை பார்க்க அசிங்கப் படுத்திட்டுப் போயிட்டான்.

இப்போ... இவன் வேறா... இவன் ஏதாவது செய்தால் நிச்சயம் சுந்தரியோட குடும்பத்தால தாங்க முடியாதே... இதுக்கு நம்மளால முடிஞ்ச எதையாவது செய்யணுமே...' என்ற எண்ணம் ஒரு நொடியில் அகலின் மனதை வெளிப்படுத்தியது.

இரண்டு நாள் முன்னர் நடந்த நிகழ்வுக்கு இவனிடம் தீர்வு காணத்தான்... இதுவரை எங்குமே தனியே சென்றிராத அகல்விழி, இரண்டு தடவை சேரனைச் சந்திக்க அவனது அலுவலகத்திற்கே சென்றாள். ஆனால்



அவள் சென்ற இருமுறையும் சேரன் அலுவலகத்தில் இருக்கவில்லை.

இன்று அவனைப் பார்த்ததும்... உள்ளுக்குள் உதறிய பயத்தையும் மீறித் தோழிக்காக அவனிடம் பேச எண்ணினாள்.

அவனைத் தாண்டி நடந்திருந்தவள்... சேரன் பேப்பரைக் கொடுக்கவென நிறுத்தியதைப் பயன்படுத்தித் திரும்பி வந்து பேப்பரை வாங்கிக் கொண்டவள்... மெல்லிய குரலில், "நான் உங்களாண்ட செத்த நாழி பேசணும்..." எனத் தரையைப் பார்த்துக் கொண்டு சொல்ல... உற்சாகமானான் சேரன்.

"ஓஹோ... வெரி ஷுயர். இப்போவே பேசலாமா! உங்க வீட்டுக்குப் போலாமா? இல்லை, நீங்க வெளியே வர்றீங்களா? கமான் கெட் இன்..." எனக் கார் கதவைத் திறந்து விட...

"அச்சோ... ச்சே... ச்சே! நீங்க எங்க வீட்டுக் கெல்லாம் வந்துடாதேள். நானும் எங்கேயும் வரலை. நாளைக்கு நானே உங்களைப் பார்க்க உங்க ஆபீஸுக்கு வரேன். இப்போ இங்கிருந்து கிளம்பிடுங்கோ. உங்களை மட்டும் உன்னி அங்கிள் பார்த்தாப் பெரிய பிரச்சினை யாகிடும். ப்ளீஸ்... கிளம்புங்கோ..." - கண்களில் கண்ணீர் சுரக்கக் கெஞ்சினாள் அகல்விழி.

சேரனுக்கு அவள் சொல்லும் உன்னியைத் தெரியவில்லை. அவள் வீட்டுக்குத்தான் பயப்படுகிறாள் என்று நினைத்தவன்...

"ஓ.கே. ஓ.கே. நான் இப்போ கிளம்புறேன். என்னை ஏமாத்தாம கண்டிப்பா வந்துடணும்... நான் உனக்காகக் காத்துக்கிட்டு இருப்பேன். நீ மட்டும் வரலை... அப்புறம் நான் இங்கே வந்துடுவேன்."

அவன் விளையாட்டாகத்தான் சொன்னான். ஆனால் அகல்விழிக்குத்தான் பயத்தில் உடல் நடுங்கியது.

அதே நடுக்கத்துடன், "இல்லை இல்லை... நான் கண்டிப்பா வந்துடுவேன். நீங்க இப்போ கிளம்புங்க..." அவள் குரல் கெஞ்சிற்று.

அந்தக் குரலுக்குக் கட்டுப்பட்டு சேரன் ஒரு கள்ளச் சிரிப்புடனும், சின்னத் தலையசைப்புடனும் கடலளவு காதலுடனும் அங்கிருந்து கிளம்பினான்.

நாளைக் காதலியின் வருகையை எண்ணி இன்றே அவன் நெஞ்சம் உற்சாகத்தில் துள்ளியது.

## 17

அடுத்த நாள் காலையிலிருந்தே சேரன் பரபரப்பானான்.

எப்போதும் உடுத்துவது... அந்த வெள்ளைச் சட்டையும், ப்ளூ ஜீன்ஸும் தான் என்றாலும் இன்று அதிலே தன்னை நூறு முறை கண்ணாடியில் பார்த்துச் சரி செய்து கொண்டான்.

கோதிய தலையைத் திரும்பத் திரும்பக் கோதிக் கொண்டான். ஒரு கட்டத்தில் அவனுக்கே தன் சிறு பிள்ளைத்தனம் புரிந்தது.



"ச்சே... என்னது... காலேஜ் பையன் மாதிரி..." தன் பின்னந்தலையில் தன்னையே தட்டிக் கொண்டு கார் சாவியைச் சுழற்றியவாறு அவன் இறங்கிய விதத்தில் அன்று செண்பாவிற்கும் அவனின் உற்சாகம் தொற்றிக் கொண்டது.

காலையில் இட்லியுடன் மட்டன் குழம்பை நன்கு மொக்கி விட்டுத் தன் காதலியைச் சந்திக்க விரைவாகவே கிளம்பி விட்டான்.

அவன் போன நேரத்தில், அவனது ஆபீஸ் பியூன் கூட வந்திருக்கவில்லை.

எப்போதடா மணி பத்தாகும்... அகல்விழியைத் தன் விழியால் பருகலாம் எனக் காத்திருந்து காத்திருந்து சலித்துக் கடைசியில் வெட்டியாக இருப்பதற்குப் பதில் ஏதேனும் உருப்படியாகச் செய் என மனது மூளையை அதட்ட... அதன் சொல் கேட்டுக் கையில் ஒரு ஃபைலை எடுத்துக் கொண்டு மூழ்கியவன்... வேலையில் லயித்துப் போனான்.

சற்று நேரத்தில் யாரோ ஒருவனின் அலறல் கேட்டுத் தன் வேலையிலிருந்து நிமிர்ந்தவன் எதிரில் ஜீவா, ஒருவனின் சட்டைக் காலரைப் பற்றி இழுத்து வருவது தெரிந்தது.

தன் இருக்கையிலிருந்து எழுந்து ஜீவாவின் அருகில் வர,

"இந்த ஃபிராட் தான் சார் நமக்கே தெரியாம நம்ம ரியல் எஸ்டேட் கஸ்டமர்ஸ்கிட்ட பத்து பெர்சென்ட் கமிஷன்

வாங்கியிருக்கான். நேத்து நைட்தான் இவன்னு தெரிஞ்சுது. இன்னிக்குக் காலையில இவன் வீட்டை விட்டுக் கிளம்புற முன்னாடியே பிடிச்சுட்டு வந்துட்டேன்...” – ஜீவா விபரம் சொல்ல...

சேரன் அவன் அருகில் வந்து... அவன் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட, அவன் மூக்கு உடைந்து இரத்தம் சொட்டியது.

“சார்... சார்... என்ன விட்டுருங்க சார்... கமிஷனுக்கு ஆசைப்பட்டுத் தெரியாம செஞ்சுட்டேன் சார். என்னை மன்னிச்சு விட்டுருங்க சார்... ப்ளீஸ் சார்...”

அவன் கெஞ்சியதெல்லாம் சேரனின் காதுகளை எட்டவேயில்லை.

ஜீவாவின் பிடியில் இருந்தவனைத் தன் இடது கையால் பற்றியவன்... அவன் கன்னத்தில் மீண்டும் ஓங்கி ஒரு அடி வைத்தவன்... “ஏன்டா நாயே... நாங்க உன்கிட்ட வந்து என் வீட்டுக்குப் புரோக்கர் வேலை பார்க்கச் சொன்னோமா...? உனக்கு எதுக்குடா இந்த நாய்ப் பொழப்பு...!

“பணம் ஏதாவது வேணும்னு என்கிட்ட கேட் டிருந்தா... பொறுக்கிக்கிட்டு போடா நாயேன்னு விட்டு எறிஞ்சிருப்பேன்ல... எதுக்கு ஒண்ணுமில்லாதவனை ஏமாத்திப் பொழைக்கிற...” என்றவன் மீண்டும் அவன் முகத்தைப் பஞ்சராக்கினான்.

சேரனுக்கு இந்த விஷயத்தில் பயங்கரக் கோபம். பல நடுத்தர மக்களுக்குத் தனக்கென்ற சொந்த வீடு



கனவாக இருப்பது நிதர்சனமான உண்மை. அதைச் சேரன் உணர்ந்துதான் இருந்தான்.

அதனால்தான் சென்னை நகருக்கு வெளியே பல ஏக்கரில் நிலம் வாங்கிப் போட்டு, அதை பிளாட் பிரித்து இல்லாத மக்களுக்கு, மார்க்கெட் விலையை விடச் சற்றுக் குறைந்த விலையிலேயே விற்றுக் கொண்டிருந்தான்.

அதைக் கூடச் செயற்கை விளம்பரம் செய்யாமல், ஒரு குழு அமைத்து உண்மையாகவே வீட்டின் தேவை இருப்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கெனவே அந்த இடத்தை ஒதுக்கியிருந்தான்.

வருபவர்களுக்கு அவர்கள் குடும்ப வருமானத்திற்கு ஏற்றாற் போல் பேங்க் லோன் அமைத்துக் கொடுத்து, மற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தான்.

இதை அவன் அன்னையின் பேரில் நடத்தி வரும் டிரஸ்டின் மூலம் அவன் இலவசமாகவே செய்யலாம். ஆனால் வீடு வாங்குவோருக்கு அது இலவசம் என்ற எண்ணம் இருந்து கொண்டே இருக்கும் என்பதை உணர்ந்தவன் இதற்கு லாபமே வைக்காமல், ஒரு சேவை யாக நடத்தி வருகிறான்.

இதில் இந்த மடையன் அந்த ஏழை மக்களிடமே பத்து பர்செண்ட் கமிஷன் அடித்துக் கொண்டு தன்னை ஏமாற்றி வருகிறான் எனத் தெரிந்ததும் கொதித்துப் போனான்.

அவனைக் கை வலிக்க அடித்து ஓய்ந்தவன்... அவனின் சட்டைக் காலரை விடுத்து, “இங்கிருந்து ஓடிப்

போயிரு. இன்னொரு தடவை இந்த மாதிரி ஊரை ஏமாத்திட்டு சுத்திட்டு இருந்த... கமிஷன் வாங்கக் கை இருக்காது. போடா...!" அவன் பின்னால் உதைத்துத் துரத்தி விட....

அடி வாங்கியவன் விட்டால் போதுமென ஒரு பெரிய கும்பிடு போட்டு அந்த அறையை விட்டு வெளியேறக் கதவைத் திறக்க... எதிரில் மருண்ட விழிகளில் திகைத்த பார்வையைத் தேக்கி, கைகள் நடுங்க... தான் கொண்டு வந்திருந்த பேகை இறுக்கப் பற்றியவாறு நின்றிருந்தாள் அகல்விழி.

அவளை ஏற்கெனவே எதிர்பார்த்திருந்தவன், இடையில் நடந்த கலவரத்தில் அவளின் வரவைச் சற்றே மறந்திருந்தவனுக்கு... இப்போது அவளைப் பார்ப்பது சற்று ஆச்சரியம் கலந்த சந்தோஷம் முகத்தில் தாண்டவ மாட... "ஹே... குல்ஃபி... வா வா...!" அவளை அறையின் வாயில்வரை சென்று வரவேற்றான்.

அகல்விழியோ இப்போது சட்டை கிழிந்து, ரத்தம் ஒழுக அவளைக் கடந்து சென்றவனின் நிலையை எண்ணிப் பயத்தில் நின்றிருந்தவள்... சேரனின் அழைப்பையோ, அவனின் வரவேற்பையோ கருத்தில் கொள்ளவேயில்லை.

இதுவரை அவள் வாழ்க்கையில் ரோட்டில் நடக்கும் விபத்தைக் கூடக் கண்ணால் கண்டதில்லை.

ஆனால் இன்றோ ஒருவன் இரத்தம் வழிய அவளைக் கடந்து செல்கிறான்.



அவனை அடித்தவன் இப்போது அவள் உதவி கேட்டு வந்திருப்பவன்...

இத்தனை பெரிய கொடூரன் எப்படித் தன் தோழிக்கு நியாயம் செய்வான்... அவள் இதை எண்ணிக் கொண் டிருந்த வேளை... சேரன் அவளின் முன்னர் கையை ஆட்டி, அவளின் சுயநினைவை இங்கே மீட்டெடுக்க முயற்சித்துக் கொண்டிருந்தான்.

அப்போதும் அவள் அசையவில்லை என்றதும், "ஹலோ மேடம்..." என அவள் தோளைப் பற்ற... அந்த ஸ்பரிசத்தில் உயிர் பெற்றவள்... சட்டென அவன் கையைத் தட்டி விட்டு ஒரு அடி நகர்ந்து நின்றாள்.

அவளின் செயலுக்குக் காரணம் அறிந்தவன், "ஓஹோ... சாரி சாரி. நீ அப்படியே பேயறைஞ்ச மாதிரி நின்னுட்டு இருந்தியா... அதான். ஓ.கே. ஓ.கே. உள்ளே வா. வந்து உட்காரு..." என்றழைக்க,

"நோ... நோ. நான்... நான் கிளம்புறேன்..." என்றவள், திரும்பி நடக்க எத்தனிக்க...

"என்னது? அதுக்குள்ள கிளம்புறியா? ஏதோ என்னோட பேசணும்னு சொன்னே...!" - அவன் அவளைத் தடுக்க...

"இல்ல... நான் பேச வந்தது மறந்து போச்சு..." உளறி வைத்தவள்... தன்னையே மானசீகமாகத் தலையில் குட்டிக் கொண்டாள்.

"ஹா... ஹா... மறந்து போச்சா!" என்ற சேரனின் குரலில் கேலி ஒலித்தது.

அவனின் கேலி அவளை என்னவோ செய்ய... "இல்லை. நான் போறேன். லேட்டாச்சு..." வாய்க்கு வந்ததை உளறிக் கொட்டிக் கொண்டிருந்தாள்.

"இதென்னம்மா வம்பாப் போச்சு... நீதான் நேத்து என்னோட பேசணும்னு சொன்ன... நீதான் என்னோட ஆபீஸுக்கு வரேன்னும் சொன்ன... இப்போ இவ்ளோ தூரம் வந்துட்டு என்ன ஒண்ணுமே சொல்லாம திரும்பப் போறேன்னு சொல்ற..."

அவன் சொல்லச் சொல்ல... அகல்விழியின் முகத்தில், 'ஏன்தான் இங்கே வந்தோமோ...' என்ற உணர்வு தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

சேரன் அவளிடம் பேசத் தெரியாமல் வழக்கடித்துக் கொண்டிருப்பதை ஒரு வித சுவாரசியத்துடன் பார்க்க ஆரம்பித்த ஜீவா, அவன் அவளை மேலும் மேலும் வெறுப்பூட்டும் விதமாகப் பேச ஆரம்பிக்கவும்... இதற்கு மேல் விட்டால் அகல்விழி அங்கிருந்து கிளம்பி விடுவாள் என்பதை உணர்ந்து,

"ஹலோ மேடம்... நான் ஜீவா. இவரோட பெர்சனல் அசிஸ்டென்ட்..." என அறிமுகம் செய்து கொண்டவன், "நீங்க இப்படி உட்காருங்க. ப்ளீஸ்.." என இருக்கையைக் காட்ட... ஏதோ எண்ணத்தில் இருந்தவள்... ஜீவா காட்டிய இருக்கையில் அமர்ந்து கொண்டு, மனதிற்குள் அவள் தோழியைப் பற்றிய விஷயத்தை இவனிடம் பேசலாமா வேண்டாமா என்ற பட்டி மன்றத்தை நடத்திக் கொண்டிருந்தாள்.



அவள் ஏதோ யோசனையில் இருப்பதை உறுதி செய்து கொண்ட ஜீவா...

சேரனின் கையைப் பிடித்து அந்த அறையின் ஓரத்திற்குத் தள்ளிக் கொண்டு சென்றவன், "என்ன சேரன் இப்படிச் சொதப்புற? அவங்களே உன்கிட்ட ஏதோ சொல்ல வந்து அதைச் சொல்ல முடியாம தவிச்சுக்கிட்டு இருக்கற மாதிரித் தெரியுது. நீ என்னடான்னா அவங்களை இப்படி வெறுப்பேத்திக்கிட்டு இருக்க..."

"இல்ல ஜீவா... அவதானே என்னைப் பார்க்கணும்னு சொன்னா... அதான்..." எனச் சொல்ல வந்தவனை நண்பனாக அதட்டிய ஜீவா,

"ஹய்யோ... ஹய்யோ... நீ எல்லாம் எப்படித்தான் எனக்கு முதலாளியா இருக்கியோ?" எனச் சலித்துக் கொண்டவனை முறைக்க...

"ஆமா. இந்த முறைப்புக்கு ஒண்ணும் கொறைச்சல் இல்ல. என்னை முறைக்கறது, அடிக்கிறதை எல்லாம் அப்புறமாப் பண்ணிக்கோ. இப்போதைக்கு அந்தப் பொண்ணுகிட்ட எப்படிப் பொறுமையாப் பேசணும்னு கத்துக்கோ. ஆல்சோ, அவங்க ஏதோ சொல்ல வந்து தயங்குற மாதிரி இருக்கு. அதனால இப்போ கிடைச்சிருக்கற இந்த வாய்ப்பைத் தவற விட்டுடாதே. உன் மனசுல இருக்கிறதை அப்படியே இலைமறை காய் மறையா சொல்லி வை."

"என்னது இலையும் காயுமா... அப்படின்னா?" சேரனுக்கு அந்தச் சமயத்திலும் சந்தேகம் வந்தது.

பிசினஸ் மூளையல்லவா... அனைத்தையும் தெளிவு படுத்திக் கொள்ள நினைத்தான்.

"உப்ப்ஸ்..." ஒரு நீண்ட பெரிய மூச்சை வெளியிட்ட ஜீவா, "ஒரு ஹின்ட் கொடுக்கச் சொன்னேன் பாஸ்..." என்றவன், அந்த பாஸில் அழுத்தம் கொடுத்தான்.

"ஓ.கே. ஓ.கே. ஐ காட் இட்..." எனக் கட்டை விரலை உயர்த்தி உறுதி கொடுத்தவன்... "இனி நான் பார்த்துக்கிறேன். நீ போய் உன் வேலையைப் பாரு..." கெத்தாகச் சொன்னவனை ஒரு சின்ன முறைப்புடனும், உதட்டில் பூத்த சிரிப்புடனும் வாழ்த்துச் சொல்லி விடை பெற்றான் ஜீவா.

ஜீவா அனுப்பி வைத்த கையோடு அவளிடம் பேச வேண்டியதை ஒரு முறை தனக்குள் ஓட்டிக் கொண்டவன்... முகத்தில் மீண்டும் கம்பீரம் குடிகொண்டது. ஆனால் இப்போது அந்தக் கம்பீரத்தில் அழகான காதலும் கலந்திருந்தது.

இவர்கள் இருவரும் தங்களுக்குள் நடத்திக் கொண் டிருந்த சொற்பொழிவில்... அகல்விழி சேரனிடம் தன் தோழியின் குடும்பத்தாரின் நிலையை எப்படிப் புரிய வைப்பதென்பதை மனதிற்குள் யோசித்துக் கொண்டி ருந்தாள்.

சில நிமிடங்கள் முன்னர் நடந்த விஷயத்தின் சாராம்சம் அவளுக்குத் தெரியாதெனிலும் ஒருவன் இரத்தம் சொட்ட அவளைக் கடந்து சென்றது அவளை மிரட்சியடையச் செய்தது.



இப்படி அவள் யோசித்துக் கொண்டிருந்த வேளை யில்... சேரன் அவள் அருகில் வந்து அமர்ந்திருந்தான்.

"ம்க்கும்..." குரலைக் கனைத்துத் தன் இருப்பை அவளுக்கு உணர்த்த...

அவனின் கனைப்பில் தன்னை மீட்டெடுத்தவள்... அவனை அதே மிரட்சியுடன் சந்தித்தாள்.

"ஏதாவது சாப்பிடுறியா? காபி, டீ, ஜுஸ்..." இதிலிருந்து ஆரம்பித்தான்.

"இ... இல்லை. அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்."

"ஹ்ம்ம்... அப்புறம் வேற என்ன வேணும்?"

"இல்லை... நேக்கு ஒண்ணும் வேண்டாம்."

"நேக்கா...? அப்படின்னா...?" இப்போது அவ னுக்குச் சந்தேகம் எழுந்தது.

இவளும் வந்த விஷயத்தை அப்போதைக்கு மறந்து அவனுக்குச் சந்தேகத்தைத் தீர்க்கும் அதிமுக்கிய வேலை யைச் செய்தாள்.

"நேக்குன்னா தெரியாதா உங்களுக்கு... அப்படின்னா எனக்குன்னு அர்த்தம். ஐயங்கார் பாஷை..." தெளிவாக விளக்க...

"ஓஹோ..." என்றவன் அவள் தெளிவுபடுத்திய விதத்தில் முற்றிலும் மயங்கிப் போனான்.

"ஹய்யோ... சோ க்யூட்..." அவன் மனம் அவளை உள்ளுக்குள் கொஞ்சிய வேளை அவனது மூளை

அவளிடம் உடனே காதலைச் சொல்லக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தது.

"ம்க்கும்..." - மீண்டும் ஒரு தொண்டைக் கனைப் புடன் ஆரம்பித்தவன்... "நீ..." என...

அவள் இங்கே எதற்காய் வந்தாய் என்ற கேள்வி யைக் கேட்க வந்து, பின்னர் ஜீவா சொன்னதை நினைவு கூர்ந்து... கேட்க வந்ததைக் கை விட்டான்.

"உன்னை எப்படிக் கூப்பிடன்னு தெரியலை. அகல்... விழி... எப்படிப் பார்த்தாலும் உன்னோட பேரைச் சுருக்க முடியலை... உனக்கு யாரு இப்படிப் பேர் வைச் சது?" அவளைத் தன்னுடன் சகஜமாக்க நினைத்துப் பேச்சை வளர்த்தான்.

"அதுவா... என் தோப்பனார்தான். எனக்குச் சின்ன வயசுல கண்ணு ரொம்பக் குட்டியா இருக்குமாம். அப்புறம் அடிக்கடி கண்ணைக் கண்ணை மூடிக்குவேனாம். அதனால அப்பா நேக்கு அகல்விழின்னு பேர் வைச் சுனுட்டாருன்னு அம்மா சொல்லுவா..."

அவள் சின்ன வயதுக் கதையை ஏதோ தன் பக்கத்து வீட்டுக்காரனுடன் பேசுவது போல் பேச ஆரம் பித்தாள்.

இந்தக் கதையைக் கேட்டதும், அவன் மனதில்... 'இந்தப் பேருக்குப் பின்னால் இப்படி ஒரு மொக்கைக் கதை இருக்கும்னு நான் யோசிச்சுக் கூடப் பார்க்கல...!' என யோசித்த நொடியில் அவனுக்குச் சிரிப்பும் வந்து விட்டது.



"யூ ஆர் இன்கிரெடிபிள்..." என்றவன் உதட்டில் புன்னகை மேலும் தவழ்ந்தது.

அவளின் தயக்கம் இப்போது விலகியதை உணர்ந்து சேரன் தன் உள்ளத்தின் ஆசையை அவளிடம் மொழியும் எண்ணத்தைக் கையிலெடுத்தான்.

அகல்விழியும் அவன் தன்னுடன் சற்றுச் சகஜ மாகப் பேச ஆரம்பித்ததும், அதில் சற்றுத் தைரியம் வர... தோழியின் நிலையை அவனுக்கு எடுத்துரைக்க வார்த்தைகளைத் தேடி... அதை வாக்கியமாகக் கொண்டு வந்த வேளையில் சேரன் பேச ஆரம்பித்தான்.

அவள் யோசித்த நேரங்களைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டவன்... இத்தனை நாள் தன் உள்ளத்தை வருடிக் கொண்டிருந்த வார்த்தைகளை அவளிடம், "ஐ லவ் யூ அகல்விழி..." என்ற வரிகளில் சொல்லியே விட்டான்.

அவன் சொன்னதைக் கேட்டுத் திகைத்தவள்... ஒரு வேளை தனக்குத் தான் காது சரியாகக் கேட்க வில்லையோ என்ற எண்ணத்தில், "வாட்?" என்று கேட்டு வைக்க...

தான் அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து வந்தவன்... அவள் அமர்ந்திருந்த இருக்கையில் அவளுக்கு அருகில் மேசையின் மேல் சாய்ந்து நின்று அவள் இருக்கையை ஒரு கையால் பற்றி அவளின் முகத்தின் அருகில் வந்தவன்... திகைப்பில் விரிந்திருந்த

கண்களை உற்று நோக்கி, "நான் உன்னை விரும்பு றேன்..." என்று ஒவ்வொரு வார்த்தைக்கும் சற்று இடை வெளி விட்டு, அவள் காதில் நன்கு கேட்கும்படி அழுத்திச் சொல்ல...

திகைப்பில் ஏற்கெனவே விரிந்திருந்த கண்கள் தெறித்து விடும் அளவிற்கு மீண்டும் விரித்தாள்.

அந்தக் கண்களில் தான் சிறை கொள்ள மாட் டோமா எனத் தவித்துச் சேரனின் மனம் அவளுக்காகத் தான் ஏங்கிய அத்தருணத்தை ரசனையுடன் அவளுக்கு விவரிக்க ஆரம்பித்தான்.

"உன்னை முதல் முறை அந்த மழையில் பார்த்த அந்த நொடியே உன்னைக் காதலிக்கத் தொடங்கிட்டேன். அந்த நிமிஷம் உன்னோட அழகு அந்தஸ்து படிப்புன்னு எதுவுமே என் கண்ணுக்குத் தெரியலை. அந்த நொடியில் என் மனசு சொல்லுச்சு... இனி இவளோடதான் உன் னோட வாழ்க்கைன்னு...

"இத்தனை நாள் யாருமில்லாம தனியாத் தவிச்ச தவிப்புக்கு உன்னைப் பார்த்த அந்த நிமிஷம்தான் அர்த்தம் புரிஞ்சுது. அன்னிக்கு அப்புறம் உன்னை எப்படியாவது சந்திச்சு என் காதலைச் சொல்ல டிரை பண்ணினேன்.

"ஆனா ஏதேதோ காரணத்தால முடியல. இன்னிக்கு உன்கிட்ட என் மனசைச் சொல்ல ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. அதைத் தவறவிட நான் விரும்பல.



"சோ ஐ ஜஸ்ட் வான்ட் டு டெல் யூ தட் ஐ லவ் யூ... அண்ட் ஐ வான்ட் டு லிவ் த ரெஸ்ட் ஆஃப் மை லைஃப் வித் யூ..."

அவளைச் சந்தித்த நொடியிலிருந்து இப்போதைய நிமிடம் வரை அனைத்தையும் விளக்கியவன்... கண்களில் காதலோடும், குரலில் மென்மையோடும் கேட்டான்.

"அகல்விழி... வில் யூ மேர்ரி மீ?"

இத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த அகல்விழிக்கு இப்போது சந்தேகம்... 'தான் ஏதோ கனவு கண்டு கொண்டு இருக்கிறோமோ... இவன் என்ன இப்படி உளறிக் கொண் டிருக்கிறான். பார்த்தானாம்... பார்த்த நொடி காதலாம். ஒரு வேளை நேத்து இவர் ஏதாவது காதல் படம் பார்த் துண்டு நம்மளாண்ட தத்துப்பித்துன்னு உளறிக் கொட்டு றாரோ!'

அவளின் எண்ணம் எங்கெங்கோ சென்று வந்ததில் சேரனை ஏதோ விசித்திரமாகப் பார்த்து வைத்தவள் தான் அங்கு வந்திருந்த காரியத்தை முற்றிலும் மறந்திருந்தாள்.

அதுவும் அவனின் மூச்சுக் காற்று அவளின் கன்னத்தை உரசிச் செல்லும் அந்தச் சிறிய இடை வெளியை உணர்ந்த வேளை... அவளின் உள் மனம் விழித்துக் கொள்ள... 'அவன் நெஞ்சில் கை வைத்து விலக்கியவள்... சட்டென இருக்கையை விட்டு எழுந்து நின்றாள்.

அவனின் அருகாமையும்... அவன் பேசிய விஷயமும் ஏதோ விபரீதத்தை அகல்விழிக்கு உணர்த்த,

"ச்சே... ச்சே... இதென்ன உளறல்... இதைப் பாருங்கோ... நான் அந்த மாதிரிப் பொண்ணெல்லாம் இல்ல. நேக்கு இதெல்லாம் பிடிக்காது. என்னாண்ட இப்படியெல்லாம் பேசாதேள்..." என்றவள் குரல் அழுகையைத் தத் தெடுக்க...

"நான் வரேன்... ஹான்... இல்லை இல்லை.... போறேன். இனிமேல் என் ஆத்துப் பக்கம் வந்துடாதேள்... இதைச் சொல்லத்தான் வந்தேன்..." என்றவள் அழுகை யுடனே அவ்வறையை விட்டு வெளியேற...

அழுத முகத்துடன் சென்ற அகல்விழியைக் கண்ட ஜீவா ஏதோ விபரீதம் என்றுணர்ந்து சேரனைச் சந்திக்கச் சென்றான்.

"சார்... இஸ் எவ்ரி திங் ஆல்ரைட்?" பதட்டமாக வினவ...

"எஸ்... இட் இஸ்... ஏன் ஜீவா?"

"இல்ல.... அவங்க அழுதுட்டுப் போறாங்க... என் னாச்சு?"

"ஹான்... கல்யாணம் பண்ணிட்டு ஓடிப் போலாமா... இல்லை ஓடிப் போய்க் கல்யாணம் பண்ணலாமான்னு கேட்டேன். அழுதுகிட்டே போறா..."

சேரன் சிரிப்புடன் சொல்லவும், அதில் ஜீவா சிரித்தாலும்...

"ச்சே... என்ன சார் இது விளையாட்டு... பாவம். ரொம்பப் பயந்துட்டாங்க போல. நான் உங்களை ஹின்ட் தானே கொடுக்கச் சொன்னேன். பட்டுன்னு விஷயத்தைச் சொல்லிட்டீங்களா?"



"ம்ச்... இதுல என்ன மறைக்க வேண்டியது இருக்கு, ஜீவா! எப்பவா இருந்தாலும் அவகிட்டதானே இதைச் சொல்லணும். அதான் இன்னிக்கே சொல்லிட்டேன். அவகிட்ட நான் திடீர்னு இப்படிச் சொன்னதும் கொஞ்சம் ஷாக்காகிட்டா. நான் சீக்கிரமே அவளுக்கு என்னைப் புரிய வைக்கிறேன்..." என்றவனுக்கும் அவளின் அழுகை மனதைக் காயப்படுத்தியது.

'இப்போ நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படி அழுதுகிட்டுப் போறா...' – மனதிற்குள்ளே கேள்வி கேட்டவன்... அவளிடம் மீண்டும் பேச வேண்டுமென நினைத்துக் கொண்டான்.

அவனிடம் பேசி விட்டு வந்த அகல்விழிக்கோ... இன்னும் இதயம் எகிறிக் கொண்டிருந்தது.

'ச்சே... என்ன மனுஷன் இவன்... கடன்காரன்... கடன்காரன்... இப்படியா பார்த்துக் கொஞ்ச நாள்ல ஒரு பொண்ணுகிட்ட அநாகரிகமா நடந்துப்பார்... பார்த்தாலே தெரியுறதே... இவரெல்லாம் மனுஷன் லிஸ்ட்லேயே இல்லை. ஒருத்தனைப் போட்டு இரத்தம் வர்றளவு அடிச்சிருக்கார்.

இருக்கிற சொத்து போறாதுன்னு ஊரை ஏமாத்திக் கந்து வட்டி விட்டுச் சம்பாதிக்கிறார். இது பத்தாதுன்னு அவரைச் சுத்தி எப்பவும் அடியாளுங்க... இவனெல்லாம் ஒரு மனுஷன்... இதுல என்னைப் பார்த்ததும் காதலாமே...

ச்சே... ச்சே... இவனாண்ட நியாயம் கேட்க வந்தோமே... நம்மைச் சொல்லணும்.

அப்பா அப்பவே சொன்னார்... இவாளெல்லாம் பொல்லாதவானு... நான்தான் கேட்காம இவனைப் பார்த்துச் சுந்தரிக்காகப் பேசலாம்னு நினைச்சேன். ச்சே... என்னைச் சொல்லணும். பெருமாளே... எப்படியாவது சுந்தரிக்கு ஏதாவது நல்ல வழி செய்யேன்...'

மனதாரத் தன் தோழிக்காக வேண்டியவள்... தனக்காகவும் கொஞ்சம் வேண்டியிருக்க வேண்டுமோ?

## 18

சேரன் அவன் காதலைச் சொல்லி விட்டுச் சற்று இதமான மனநிலையில் இருந்த சமயம். அவனது ஃபேக்டரி விஷயமாக மும்பையிலிருந்து உடனடியாகக் கிளம்பி வரும்படி அழைப்பு வந்திருந்தது.

ஜீவாவிடம் இங்கிருந்து அனைத்தையும் பார்த்துக் கொள்ளுமாறு பணித்து விட்டு, உடனே கிளம்பியவன்... மனதில் அகல்விழியைக் காண வேண்டுமென எழுந்த ஆவலை அப்போதைக்கு ஓரம் கட்டி விட்டு மும்பைக்குப் பறந்து சென்றான்.

அவன் சென்ற இரண்டு நாள் இடைவெளியில்தான் அந்தப் பயங்கரச் சம்பவம் நடந்தது.

அன்று காலையிலே சுந்தரி தனக்கு உடம்பு சரியில்லை என்றதால்... அகல்விழி அவள் தந்தையுடன் ஸ்கூட்டரில் கல்லூரிக்குக் கிளம்பிச் சென்று விட்டாள்.



இந்த இரண்டு நாள் இடைவெளியில் சேரன் அவளிடம் உளறியது... ஆம்... அவளைப் பொறுத்தவரை சேரனின் காதல் உரை, உளறல் மட்டுமே... அந்த உளறலில் உழன்று கொண்டிருந்தாள்.

இதைப் பற்றித் தன் தந்தையிடம் கூறலாமா, வேண்டாமா... என்ற பட்டிமன்றத்தின் முடிவில் வேண்டாம் என்ற முடிவை நிலைநாட்டி அதைக் கைவிட்டாள்.

சுந்தரியிடம் இதைப் பகிர்ந்து கொள்ள நினைத் தவள்... கடந்த சில நாட்களில் அவள் வீட்டில் நடந்த சில கசப்பான சம்பவத்தை நினைத்து அவள் படும் துன்பத்தை எண்ணி அவளிடமும் இதைச் சொல்லவில்லை.

மேலும், தான் சேரனைக் காண... அவன் அலுவலகத்திற்குச் சென்றுள்ளேன் என்பதைச் சுந்தரி அறிந்தாளோ... அவள் கன்னம் புழுக்கும் நிலைக்கு அவளே காரணமாவாள் என்பதை உணர்ந்து... அன்று நடந்த சம்பவத்தை அவள் யாரிடமும் பகிரவில்லை.

இதே யோசனையுடன் இருந்தவள்... தந்தையுடன் கல்லூரி வளாகத்தில் இறங்கினாள்.

மகளின் முகமறிந்த தந்தையாக... "என்னடா குழந்த... ஏதாவது பிரச்சினையா?"

தலையை வருடி அவர் அன்பொழுகக் கேட்டதில், தன் குழப்பத்தை ஒதுக்கித் தள்ள முயன்று, "அதெல்லாம் ஒண்ணுமில்லையேப்பா... ஏன் கேட்குறேள்?" என்ற வார்த் தையை உதிர்த்தாள்.

"ரெண்டு நாளா... உன் முகமே சரியில்லையேடா அச்சு...!"

"ஒண்ணுமில்லப்பா... நான் நல்லாத்தான் இருக்கேன்." - சமாளித்துப் பதில் சொல்ல...

"சரி... பார்த்துப் போ. ஈவினிங் அப்பாவுக்குப் போன் பண்ணு. நான் வந்து அழைச்சுண்டு போறேன்..." என்றவருக்கு மகளின் கவலைக்குக் காரணம் அவளின் தோழியின் நிலை என்பதை அவரளவுக்கு யூகித்திருந்தார்.

மகளை விட்டு விட்டு வந்த நாராயணன், நேராகச் சுந்தரியின் வீட்டுக்குத்தான் சென்றார்.

வீட்டுக் கூடத்திலிருந்த இரும்புக் கட்டிலில் உன்னிகிருஷ்ணன் தளர்ந்து படுத்திருந்தார்.

"என்னப்பா உன்னி... இன்னும் உடம்பு படுத்துதா?" கேட்டுக் கொண்டே உள்ளே சென்றவரின் குரல் கேட்டு எழ முயன்ற உன்னியால் சட்டென எழுந்திருக்க முடிய வில்லை.

நாராயணனின் குரல் கேட்டு உள்ளறையிலிருந்து வந்த சுந்தரியின் முகமும் வாடியிருந்தது. அது உடல் வலியினால் அல்ல... மன வலியினால் என்பதை நாரா யணன் அறிவார்.

"வாங்க அங்கிள்... அகலைக் காலேஜ்ல விட்டுட் டீங்களா...?" கேட்டவாறு தந்தையிடம் சென்ற சுந்தரி அவரை எழுப்பி அமர வைத்தாள்.

"விட்டுட்டேன்டா ராஜாத்தி... உனக்கு உடம்புக்கு என்னம்மா?" - நாராயணன் விசாரித்தார்.



"காய்ச்சல்தான் அங்கிள்."

"மருந்து ஏதாவது எடுத்துக்கிட்டியா குழந்தே?"

"அம்மா வாங்கப் போயிருக்காங்க அங்கிள்... இதோ வந்துட்டாங்க..." என்றாள் வீட்டிற்குள் நுழைந்த அன்னையைக் காட்டி.

"வரு சேட்டா... இப்போதான் வந்தீங்களா?" - சுந்தரியின் அன்னை பிரேமா விசாரிக்க...

"ஆமாம்மா..." என்றவர், "நீ ஏன்ம்மா கடைக்குப் போய்க் கஷ்டப்பட்டுண்டு... என்னாண்ட சொல்லி விட்டிருக் கப்படாதா?" - அன்பாகக் கடிந்து கொண்டார்.

"பரவாயில்ல சேட்டா... நீங்கதான் எங்களுக்கு எவ்ளோ செஞ்சிருக்கீங்க... அதுக்கே நாங்க எப்படி கைம்மாறு செய்றதுன்னு தெரியல...!" என்றவர் கண்களில் கண்ணீர் இப்போ வரவா, வேண்டாமா எனத் துடித்துக் கொண்டிருந்தது.

"ச்சு... பிரேமா எந்தாது...?" உன்னி கடிந்து கொண்டார்.

"விடுப்பா உன்னி... அவாளும் தான் என்ன செய்வா. நம்மாத்துப் பொம்மனாட்டிகள் தான் எவ்வளவு சிரமத்தைத் தாங்குறா..." என்ற நாராயணன் தன் மனைவி, மகள்களையும் தான் கருத்தில் கொண்டு சொன்னார்.

"உண்மைதான் நாராயணன். என்னாலதான் எல்லாருக்கும் இவ்ளோ கஷ்டமும், அவமானமும்...

தகுதியை மீறி நான் கை நீட்டியிருக்கக் கூடாது. எல்லாம் என் விதி..." என்று அலுத்துக் கொண்ட உன்னி... பிரேமாவிடம் நாராயணனுக்குக் குடிக்கத் தயாரிக்கச் சொல்லவே...

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் உன்னி. நான் உன்னாண்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லத்தான் வந்தேன்."

"என்னப்பா சொல்லு...!"

"அதுப்பா... எனக்கொரு யோசனை இருக்கு. இந்த விஷயத்தைப் பத்தி நான் என் மனைவி, மகள்கள்கிட்ட கூடப் பேசலை... முதல்ல உன் முடிவு தெரிஞ்சுக் கிட்டுத்தான் நான் மத்தது பத்தி யோசிக்கணும்..." என்று இழுத்த நாராயணனுக்கு உன்னி பல வருட கால நண்பர்.

இருவரும் ஒன்றாகத்தான் இந்தக் குடியிருப்புக்கு வந்தனர். உன்னி பி.எஸ்.என்.எல்.லில் லைன் மேனாகத் துவங்கி, சீனியர் லைன் மேனாகப் பணி உயர்வு பெற்று ரிடையரானவர். இருவரும் அவர்கள் குடும்பத்தில் நடக்கும் எல்லாச் சுக துக்கங்களையும் பகிர்ந்து கொள்வர். அதனாலே தன் நட்பின் மீது நம்பிக்கை வைத்து இந்த முடிவை எடுத்தார்.

"என்ன நாராயணா... நீ என்ன சொல்ல வரேனு எனக்குப் புரியல?" - குழப்பமாகக் கேட்டார் உன்னி.

"அது வந்துப்பா... நீ இப்போ கஷ்டத்துல இருக்கேனு எனக்கு நல்லாத் தெரியுது. நோக்கு இப்போ பணத் தேவைன்னு எனக்குத் தெரியும். நீ வட்டி கட்ட முடியாமக் கஷ்டப்படுறது புரியறது... அதனால... நீ வேணா என்னோட வீட்டுப் பத்திரத்தை அடமானம் வைச்சு... அந்தச் சேரன் கடனை அடைச்சிடு. அப்புறம் மெதுவா உன்னால முடியுறப்போ எனக்குத் திருப்பிக் கொடுத்தாப் போதும்..."

நாராயணன் தான் சொல்ல வந்த விஷயத்தை என்னவோ சொல்லி விட்டார். ஆனால் இதைக் கேட்ட உன்னியின் குடும்பத்தினர் தான் அதிர்ச்சியிலும், ஆச்சரியத்திலும் வாயடைத்துப் போயிருந்தனர்.

தன் அதிர்ச்சியிலிருந்து மீண்ட உன்னி, "என்ன நாராயணா உளறிகிட்டு இருக்க? உனக்கு ஆபீஸுக்கு நேரமாகலையா?" அந்தப் பேச்சை விடுத்து நாராயணனை அங்கிருந்து கிளப்ப எண்ணினார்.

"என்னைப் பார்த்தா நோக்கு உளர்ற மாதிரியா தெரியறது... இவ்ளோ பெரிய முடிவை எடுத்திருக்கேன்னா நான் யோசிக்காமலா எடுத்திருப்பேன். எனக்கு உன் மேல நம்பிக்கை இருக்கு. நேக்கு இப்போ உன் சம்மதம்தான் முக்கியம்..."

நாராயணன் தன் நம்பிக்கையை நிலைநாட்டிச் சொல்ல...

"திரும்பத் திரும்ப நீ உளறிட்டுதான் இருக்கே நாராயணா...! நீ என் மேல் நம்பிக்கை வைக்க, நான் என்ன சின்ன வயசுப் பையனா? ஓடியாடி வேலை செஞ்சு கடனை அடைச்சு உனக்கு வீட்டை மீட்டுக்

கொடுக்க...! இன்னும் ஒன்னரை வருஷத்துல எனககு அறுபது வயசாகிடும்.

“இதுல இப்போவே இல்லாத நோயெல்லாம் வந்தாச்சு. வாங்கின கடனை எனக்கு எப்படித் திருப்பிக் கொடுக்கன்னு தெரியலை. இதுல மேலே மேலே என்னால பாரத்தைச் சுமக்க முடியாது. உனக்கும் வயசுக்கு வந்த ரெண்டு பொண்ணுங்க இருக்காங்கன்னு மனசுல ஏதாவது இருக்கா?

“உன் உதவியை நான் அவமதிக்கலை நாராயணா. ஆனா பிராக்டிகலா இதெல்லாம் நடக்காது. அதை நான் ஏத்துக்கவும் மாட்டேன். காசு பணத்துல ரத்த சொந்தமே என்னைத் தூக்கி எறிஞ்சுடுத்து. என் பொண்ணு லக்ஷமி... அவளுக்காகத்தான் நான் இவ்வளவு சுமையை ஏத்துக்கிட்டேன்னு மறந்துட்டு, புருஷனோட அமெரிக்கா போயிட்டா...

“வேண்டாம் நாராயணா... நம்ம நட்பு எந்த வகையிலேயும் கறை பட வேண்டாம். இந்த விஷயத்தை நான் எப்படியாவது சமாளிச்சுக்குவேன்.” உன்னி உணர்வு பூர்வமாகப் பேசிக் கொண்டிருந்தார், நண்பனின் உதவி மனப்பான்மையில் நெகிழ்ந்து.

இந்தக் காலத்தில் யாருக்கு இப்படி ஒரு சிந்தனை தோன்றும்...? நாராயணனின் இந்த நல்ல குணம்தானே அவரின் பெண்ணுக்கும் இருக்கிறது.

எந்தக் கஷ்டத்திலும் நெறி தவறாது, அடுத்தவருக்கு உதவி செய்யும் இந்த எண்ணம், இன்றைய இயந்திர வாழ்க்கையில் எத்தனை பேரிடம் இருக்கிறது?



“இல்லை உன்னி... நான் சொல்றதை...” நாராயணன் எடுத்துச் சொல்ல எத்தனிக்க, அவரை இடைமறித்துச் சுந்தரி பேசினாள்.

“அங்கிள்... பெரியவங்க பேசும்போது நான் பேசுறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. எனக்கு உங்க மனசு புரியுது. ஆனா அப்பா சொன்னதைப் போல, இது ப்ராக்டிகல்லி இம்பாசிபிள். பிரிச்சுப் பேசுறேன்னு நினைக்க வேண்டாம்... நட்புன்னா சுகத்திலேயும், துக்கத்திலேயும் பங்கெடுத்துக்கணும். அது நூறு சதவீதம் உண்மை. ஆனா அந்த சுகத்தையும், துக்கத்தையும், நம்ம பணத்தாலே அளக்க வேண்டாமே அங்கிள்...!

“அப்பாவால இப்போ முடியலைதான். ஆனா அவருக்குப் பினனால நான் இருக்கேனே! நீங்க எதுக்கும் கவலைப்பட வேண்டாம்... எங்க குடும்பத்துக்கு எப்பவும் நீங்க துணையா இருந்திருக்கீங்க... எங்களுக்கு எப்பவும் அந்தத் துணை மட்டும் போதும் அங்கிள். கண்டிப்பா இந்தப் பிரச்சினையை நான் சமாளிச்சுக்கிறேன்...” சுந்தரி மனதில் தோன்றிய ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில் பேசினாள்.

நமக்கென யாருமில்லை என்றாலே, இந்த உலகத்தில் எதிர் நீச்சலடித்து வாழ நினைக்கும் மனிதர்கள் நாம். சுந்தரிக்குத்தான் அவளைச் சுற்றி நல்ல உள்ளம் படைத்தவர்கள் ஒரு சிலர் இருக்கிறார்களே...! அந்த நம்பிக்கையில் பேசினாள். ஆனால், அந்த நம்பிக்கை அடுத்த நொடியே ஆட்டம் கண்டது.

வீட்டின் கதவை யாரோ சிலர் தடதடவெனத் தட்டும் சத்தத்தைத் தொடர்ந்து, பெரிய பெரிய மீசை வைத்த நாலைந்து கடா மாடுகள் சுந்தரியின் வீட்டுக்குள் அதிரடியாக நுழைந்தனர்.

“ஹே... ஹே... யாருடா நீங்க?” உன்னி இருந்த இடத்தில் இருந்து எழ முற்பட,

“ஹே... யாருப்பா நீங்க...? எதுக்கு இப்படிக் கதவை உடைச்சிட்டு வரேள்...?” கோபமும் குழப்பமுமாகக் கேட்க,

“யோவ் அய்யரே... நீ என்ன இந்த வீட்டாளா? உனக்கும் இந்த வீட்டுக்கும் என்னய்யா சம்பந்தம்? தள்ளு அந்தாண்ட...” என்று ஒரு எருமை மாடு, நாராயணனைப் பிடித்துத் தள்ளி விட்டது.

“ஹய்யோ... என்ட செய்யினு...” என்ற சுந்தரி பாய்ந்து வந்து நாராயணனைத் தாங்க முற்பட... ஓடி வந்தவளை இடைமறித்து, அவள் தலை முடியைக் கொத்தாகப் பிடித்த இன்னொரு எருமை, அவளை இழுத்துக் கொண்டு தெருவுக்கு வந்தான்.

தலையைப் பிடித்திருந்த அந்த ரௌடியின் கையை உதற முற்பட்ட சுந்தரியின் முயற்சிகள் ஏதும் பலிக்கவில்லை.

“ஹே... ஹே... விடு, விடு. ஹய்யோ, என்ட பொண்ணு...” என்று பிரேமா அவனின் பின்னே ஓடி வர, உன்னியும் பதைபதைப்புடன் பின்னால் செல்ல... தரையில் விழுந்த நாராயணனும் எழுந்து ஓடினார்.



அதற்குள் இங்கு நடந்த கலவரத்தில் தெருவில் கூட்டம் கூடியது. சத்தம் கேட்டு நளினியும் தெருவிற்கு வர, பள்ளியில் வைக்கும் கணக்குத் தேர்வுக்குப் பயந்து, இன்று பள்ளிக்கு மட்டம் போட்டிருந்த ஸ்ரீவள்ளியும் அவரின் பின்னாலே தொடர்ந்தாள்.

வெளியே இழுத்து வந்த சுந்தரியின் பின்னால் ஓடி வந்த மூவரும், “ஹே... ஹே... யாருடா நீங்கெல்லாம்...? எதுக்கு எங்க பொண்ணை இப்படி இழுத்துட்டுப் போறீங்க... விடுங்கடா... விடுங்க...” பிரேமா அலற...

“ஹே... இப்ப இன்னாத்துக்கு இப்படிக் கத்திக்கினு கெடக்குற...? வாங்கின பணத்தைக் கொடுக்க வக்கில்ல... உங்களுக்கெல்லாம் எதுக்குப் புள்ளைங்க...? வாங்கின பணத்தைக் கொடுத்திட்டு உன் புள்ளையைக் கூட்டிக்கினு போ...” ஒருவன், அவன் வந்த காரணத்தைச் சொல்ல...

“ஹய்யோ... நீங்க அந்தச் சேரன் கம்பெனி ஆளுங்களா?” உன்னி கோபமாகக் கேட்க,

“யோவ்... வாங்கின பணத்தைக் குடுய்யா... நாங்க யார் ஆளா இருந்தா உனக்கென்ன?” ஒரு எருமை மாடு எகிற...

“ஏங்க... நான்தான் பணத்தைக் கொடுக்க ஒரு வாரம் டைம் கேட்டிருந்தேனே...!”

“உனக்கு எத்தனை ஒரு வாரம் டைம் தருவாங்க? இப்படிச் சொல்லிச் சொல்லியே ஆறு மாசம் ஓடிப் போச்சு. ஒழுங்கா வாங்கின பணத்தை வட்டியோட எடுத்து வெச்சிட்டு, உன் பொண்ணைக் கூட்டிட்டுப் போ...”

"ஹையோ சார்... நாங்கதான் வாங்கின பணத்தை விட அதிகமா வட்டி கட்டிட்டோமே...! இன்னும் எத்தனை தான் தர்றது...?" உன்னி ஆதங்கமாகக் கேட்க,

"ஹே... என்னய்யா நியாயம் பேசிக்கினு திரியிற...? கை நீட்டிக் காசு வாங்கும்போது எங்க போச்சு இந்தப் பேச்சு? வாங்கும்போது ஈ...ன்னு பல்லை இளிச்சிக்கினு வாங்க வேண்டியது... காசைக் கேட்டா இந்த நொர் னாட்டியம் பேச வேண்டியது. இதோ பாரு.. ஒழுங்கா பணத்தை வை... இல்லை... பணத்துக்குப் பதிலா உன் பொண்ணை அடமானம் வை."

அந்த ரௌடி, சுந்தரியை வைத்து விலை பேசிக் கொண்டிருந்தான்.

"சார்... வயசுக்கு வந்த பொண்ணை ஏன் சார் இப்படிப் பணறீங்க...? பணத்துக்குப் பதிலா என்னை வேணா கொன்னு போட்ருங்க... என் பொண்ணை விட்டுடுங்க..." உன்னி, அவன் காலில் விழாத குறையாகக் கெஞ்சினார்.

"உன்னைக் கொன்னா எங்க பணத்தை யார் தர்றது? இந்த வெட்டிக் கதை யெல்லாம் பேசாம, இன்னிக்குச் சாயந்திரத்துக்குள்ள பணத்தை ரெடி பண்ணிட்டு உன் பொண்ணைக் கூட்டிட்டுப் போ...!" என்றவன், சுந்தரியை அந்த ஸ்கார்பியோவில் தள்ளி னான்.

"டேய்... எங்க பொண்ணை விடுடா..." என்ற நாராயணன், அந்த ரௌடியின் சட்டையைப் பிடிக்க,



அந்தத் தடிமாடு, நாராயணனை ஓங்கி ஒரு அறை விட்டுக் கீழே தள்ளினான்.

நாராயணன் விழுந்ததில் பதறிய நளினியும், ஸ்ரீயும் பாய்ந்து நாராயணன் அருகில் வர,

"என்ன ஐயரே... திமிரா? இந்தக் காசிமேடு கந்தன் மேல கை வைக்கிற அளவுக்கு உனக்குத் தைரியம் வந்துடுச்சா? வைச்ச கையை ஒடைச்சிடுவேன்...!" என்று மிரட்ட,

"ஹய்யோ அப்பா..." எனப் பதறி வந்த ஸ்ரீயை அசிங்கமாகப் பார்த்து, "என்னய்யா... உன் பொண்ணா? பக்கத்து வீட்டுக்காரனுக்கு சப்போர்ட் பண்றேன்னு வந்தே... அப்புறம் உன் பொண்ணையும் தள்ளிக்கினு போயிடுவேன்..." அந்தத் தடிமாடு அசிங்கமாகப் பேச, அதைக் காது கொடுத்துக் கேட்க முடியாமல் அனைவரும் காதடைத்துக் கொண்டனர்.

அவர்கள் நடத்திக் கொண்டிருக்கும் அந்த அராஜகத்தை அந்தத் தெருவே வேடிக்கை பார்த் தாலும், ஒருவரும் வந்து ஏனென்று கேட்கவில்லை.

அதற்கு அவர்களுக்குத் தைரியமும் இருக்க வில்லை.

உன்னி கடன் வாங்கியிருப்பது சென்னையின் முக்கியப் புள்ளியிடம்... அதை வசூலிக்க வருவது, சென்னையின் நம்பர் ஒன் ரௌடி. இவர்கள் இருவரிடமும் யார்தான் தலையைக் கொடுக்க முன் வருவார்கள்?

எத்தனை கெஞ்சியும், எத்தனை மன்றாடியும், சுந்தரியை அந்தத் தடிமாடு இழுத்துச் செல்வதை அந்த வயதானவர்களால் தடுக்க முடியவில்லை.

விரைந்து யோசித்த நாராயணன், “உன்னி... உடனே கிளம்பு. நாம இப்பவே போலீஸ் கிட்டே போகலாம். கிளம்புப்பா... கிளம்பு!”

நாராயணன் அவசரப் படுத்தியது உன்னியை அசைக்கவில்லை.

மகள் சென்ற திசையை ஒரு கையாலாகாத பார்வை பார்த்தவர், மனைவி துடித்து அழுவதைக் கண் கொண்டு பார்க்க முடியாதவர், தன்னைச் சுற்றிப் பல பரிதாபப் பார்வைகளையும், கேலிப் பார்வைகளையும் தாங்க முடியாதவர், எழுந்து வீட்டினுள் சென்றார்.

அவர் போலீஸ் ஸ்டேஷன்தான் வரப் போகிறார் என வீட்டு வாசலில் காத்திருந்தவர்கள், அவர் சென்று பத்து நிமிடமாகியும் வெளியே வராமலிருக்க, அவரைத் தேடிச் சென்ற நாராயணன் அதிர்ச்சியில் உறைந்து போனார்.

“ஹையோ உன்னீஈஈஈ...!” என்று கதறிய நாராயணனின் குரலில், மொத்தக் கூட்டமும் உன்னியின் வீட்டிற்குள் நுழைந்தனர்.

அனைவரையும் தள்ளிக் கொண்டு முன்னே சென்ற பிரேமா, தன் கணவரை அந்தரத்தில் தொங்கப் பார்த்ததும், நெஞ்சில் கை வைத்துச் சாய்ந்தவர்தான்... அவரும் கணவனைப் பின் தொடர்ந்து சென்று விட்டார்.



## 19

**வா**ங்கிய கடனைத் திருப்பி அடைக்க முடியாமல், பெற்ற மகளைக் கடன்காரர்கள் தூக்கிச் செல்வதைத் தடுக்க முடியாச் சூழ்நிலையும், கட்டிய மனைவியின் கதறலும் போக்கும் துணிவின்றிச் சுற்றி இருப்போரின் கேலிப் பார்வையும் கண்டு அஞ்சி, ஏற்கெனவே மனம் நொந்து, பலகீனமாக இருந்த உன்னி கிருஷ்ணனை மேலும் மனதளவில் நொறுக்கிப் போட்டது.

தன் உடல் இருக்கும் தகுதியில், இன்று ஒரு பகலுக்குள் வாங்கிய கடனைத் திருப்பி அடைக்கத் தெம்பில்லை என்பது அவருக்குத் தெளிவாகப் புரிய, தன் மகள் மற்றவன் கையில் பட்டுச் சின்னாபின்னமாவதைத் தன் கண்ணால் காணும் சக்தி தனக்கில்லை என்பதை உணர்ந்து, எந்தச் சிந்தனையுமின்றிக் கோழைத்தனமாக அவரது முடிவை அவரே எழுதிக் கொண்டார்... தனக்குப் பின் தன் சுமை, தன் மனைவியையும் மகளையும் தொடரும் என்ற எந்தச் சிந்தனையுமின்றி.

அவர் மட்டுமா?

தான் முப்பது வருடம் வாழ்ந்த கணவர், இன்று கண்கள் பிதுங்கி, நாக்கு வெளியேறிய நிலையில், விட்டத்தில் தொங்குவதைக் காண எந்த மனைவிக்குத் தான் பொறுக்கும்?

அப்படியொரு நிலையில் கட்டிய கணவனைப் பார்த்த நொடி, வாயடைத்துப் போன பிரேமா, அடுத்த நிமிடம் தன் நெஞ்சமும் அடைத்து உயிரை நீத்தார்.

இருவரும் தங்கள் மகளின் நிலையை எண்ணிப் பாராமல்...!

ஒரு முறை... ஒரு முறையேனும் தங்கள் மகளுக் காக இருவரும் யோசித்திருந்தார்களானால், அவளின் வாழ்வு மீண்டிருக்கும்.

கணவனும் மனைவியும் சாவில் ஒற்றுமையுடன் இருந்தவர்கள், வாழ்வதில் ஒற்றுமை காட்டியிருந்தால், அனைவரின் வாழ்வும் மீண்டிருக்கும்.

ஒரு வேளை, இதுதான் விதியின் சதியோ...?

தன் உற்ற நண்பனும், 'சேட்டா, சேட்டா...' என அன்பாய் அழைக்கும் தங்கையும் ஒரே நேரத்தில் உயிரை நீத்தது நாராயணனுக்குப் பெரிய அடியே!

அவரும் அவர்களின் மரணத்தை எந்தப் பொழுதிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

கூடத்தில் கிடந்த உன்னி கிருஷ்ணனின் உடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த நாராயணனுக்கு, நண்பனின் இந்தக் கோழைத்தனமான முடிவு, பெரிய ஏமாற்றத்தைத்தான் அளித்தது.

நாராயணன், மனதில் உன்னியின் ஆத்மாவோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்.

என்ன சண்டையிட்டு, என்ன பயன்?

போன உயிர் மீண்டும் வருமா? இழந்த வாழ்க்கை தான் திரும்ப வருமா?



முடிந்தது... அனைத்தும் ஒரு நொடியில முடிந்தது.

இழந்த உயிரின் நினைவிலிருந்த நாராயணன், அங்கே தன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சுந்தரி யின் நினைவை அந்தப் பொழுதில் மறந்தார்.

அடுத்து என்ன என்று அவருக்கும் புரியவில்லை.

நளினிதான் அந்தச் சூழ்நிலையைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, உன்னியின் பெரிய மகள் லக்ஷ்மிக்கு விபரம் சொல்ல, அமெரிக்காவிலிருந்தவளோ, தான் உடனே கிளம்பி வரத் தாமதமாகும் என்றும், அதனால் அவளின் புகுந்த வீட்டுச் சொந்தங்களுக்கு உடனே விபரம் தெரிவிப்பதாகவும், அவர்களை வைத்துக் கடைசிக் காரியத்தைச் செய்யச் சொல்லி விட்டுத் தான் அடுத்த ஃப்ளைட்டில் கிளம்பி வருவதாகவும் சொல்லிப் போனை வைத்தாள்.

இதற்குள் கல்லூரிக்குச் சென்ற மகளைத் திரும்ப யார் அழைத்து வருவது என்ற கேள்வி நளினியின் மனதில் உதிக்க, கணவர் ஓய்ந்து அமர்ந்திருக்கும் நிலையில், அவரை அனுப்புவது சாத்தியமன்று என்பதை உணர்ந்து, மகளுக்கு அழைத்து, நடந்த விஷயத்தைச் சொல்லாமல் அவளை உடனே கிளம்பி வருமாறு மட்டும் பணித்தார்.

கல்லூரியில் இருந்தவளோ, "என்னாச்சும்மா...? ஏன் உடனே கிளம்பி வரச் சொல்றேள்? நேக்கு இன்னும் க்ளாஸ் முடியலையே! அப்பா எங்கே...? அப்பாவை வந்து என்னை அழைச்சுண்டு போகச் சொல்லுங்கோ. என்னால்

தனியாக வர முடியாது...” என ஆயிரம் கேள்விகள் கேட்டுக் குடைந்த மகளை ஒரே வார்த்தையில் அடக்கி, உடனே கிளம்பி வரச் சொல்லிக் கட்டளையிட்டார்.

அகல்விழியும், விஷயம் ஏதோ பெரிது என்பதை ஓரளவிற்கு யூகித்துக் கல்லூரியில் சொல்லிக் கொண்டு, சற்றுக் குழப்பமான மன நிலையிலே வீட்டை வந்தடைந்தாள்.

தெரு முனையிலிருந்து பார்க்கும் போதே சுந்தரியின் வீட்டருகில் இருந்த கூட்டம், அகல்விழியை வேக நடையிடச் செய்தது.

கையில் வைத்திருந்த புத்தகத்தை இறுக்கி, நெஞ்சோடு பிடித்துக் கொண்டு, தன் நடையின் வேகத்தைக் கூட்டினாள்.

மூச்சடைத்ததுதான். ஆனாலும் யாருக்கு என்னவோ என்ற பதற்றம் அவள் நடையைத் தளரச் செய்யவில்லை.

நடையின் வேகத்தை மேலும் கூட்டி வந்தவள், வீட்டை அடைத்து நின்று கொண்டிருந்த அனைவரையும் தள்ளிக் கொண்டு முனனேறி, வீட்டுக் கூடத்திற்கு வந்தடைந்தாள்.

வந்தவள், வந்த நொடி உறைந்து நின்றாள்.

கையில் வைத்திருந்த புத்தகம் அவளை அறியாமலே தவறி அவள் காலடியில் விழுந்தது.



தன் கண்கள் காணும் காட்சி மூளையை மழுங்கடிக்க, உடம்பில் பலமிழந்து, கால்கள் செயலிழந்ததைப் போலத் துவள, நின்ற இடத்திலே பொத்தெனக் கீழே விழுந்தாள்.

அவள் விழுந்த சத்தம் கேட்டுத்தான் நளினி மகள் வந்ததை உணர்ந்தார்.

மகளின் மனவோட்டத்தைப் புரிந்து கொண்ட தாயாய், மகளின் அருகில் வந்தவள், அவள் தோள் தொட்டு எழுப்ப முயற்சிக்க, அகல்விழி என்ற சிலைக்கு அப்போதுதான் உயிர் வந்தது.

“அம்மா...!” என்ற வார்த்தையில் ஒலி வராமல், வெறும் காத்து மட்டுமே வெளியேறியது.

கண்கள் இன்னமும்... உன்னி, பிரேமாவை விட்டு ஒரு நொடி அகலவில்லை.

இருவரும் சடலமாகக் கண் முன்னே இருந்த காட்சியைக் காணப் பொறுக்கவில்லை அவளுக்கு.

பல நாட்கள், காப்பிக்காக நளினியுடன் சண்டையிட்டு அது கிடைக்காமல் போனால், பிரேமாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சிய தருணம் நினைவில் வந்தது.

கல்லூரி விட்டுத் தோழிகள் இருவரும் களைத்து வரும்போதெல்லாம் கையில் உன்னியப்பத்துடன் காத்திருந்த பிரேமாவின் அன்பு, இனி திரும்பக் கிடைக்கப் போவதில்லை என்பது புரிந்த நொடி, கண்கள் கரித்தன.

சின்ன வயதில் தனக்கும் சுந்தரிக்கும் வரும் செல்லச் சண்டையில் சமாதானத் தூதுவரான உன்னியின் பாசம் இனி கிடைக்கப் போவதில்லை என்பது விளங்கியது.

குழந்தையில் பல நாட்கள் இதே கூடத்தில் போகோ சேனல் பார்த்து விட்டுத் தன்னை மறந்து உறங்கிய நேரத்தில், தன்னைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு, தன் வீட்டு மெத்தையில் கிடத்திய உன்னி அச்சன் இனி தன் தலையை வருட வரப் போவதில்லை என்பதைக் கண்கள் கண்ட காட்சி மூளைக்கு உணர்த்தியது.

அகல்விழி, அவளின் வீட்டில் இருந்ததைக் காட்டிலும், சுந்தரியின் வீட்டில், உன்னி, பிரேமாவுடன் இருந்த தருணங்களே அதிகம்.

இனி, அத்தருணங்களை மீட்டுக் கொண்டு வர முடியாது என்பதும் புரிந்தது.

இவையெல்லாம் புரிந்த நொடி, இத்தருணத்தைத் தனக்களித்த தன் தோழியை மனம் தேட, தன்னைத் தோளில் சாய்த்துத் தேற்றிக் கொண்டிருந்த அன்னையிடம் பரபரப்பானாள்.

"அம்மா... அம்மா... சுந்தரி... சுந்தரி எங்கே? அம்மா, சுண்டும்மா... அவ எங்கே...?" அன்னையிடம் கேட்டவள் கண்களோ, தன் ஆருயிர்த் தோழியைத்தான் தேடின.

ஆனால், அவள் கண்ணுக்குத்தான் அவள் புலப்படவில்லையே!



தான் தேடியவள் கிடைக்கவில்லை என்றதும், அன்னையை உலுக்கி எடுத்து விட்டாள்.

"அம்மா... எங்கம்மா...? சுந்தரி எங்கே?" அவள் குரலில் இருந்த ஆவேசத்தை இதுவரை நளினியே உணர்ந்ததில்லை.

மகள் உலுக்கிய உலுக்கலில் நளினிக்கு உணர்வு வர, "அச்சு... சுந்தரி இங்கில்லடா... அவளை அந்தப் பாவிப் பசங்க இழுத்துண்டு போயிட்டாங்க...!" உரக்க மொழிந்தார்.

"யாரும்மா... யாரு...? சுந்தரியை யாரு இழுத்துண்டு போனா...? ஹய்யோ... இங்கே பாரும்மா. உன்னி அங்கிள் எப்படி இருக்காருன்னு பாரும்மா... சுந்தரியை விட்டுட்டு அங்கிள் போயிட்டாரேம்மா... சுந்தரி பாவம்மா... அவளால கண்டிப்பா இதைத் தாங்க முடியாதும்மா...!" தோழியின் நிலையை எண்ணக் கதறினாள்.

"ஹய்யோ அச்சு... அந்தச் சேரனோட ஆளுங்க தான்டி நம்ம சுந்தரியை இழுத்துண்டு போயிட்டா... வாங்கின கடனுக்கு வயசுப் பொண்ணைப் பணயம் வெச்சுட்டாங்களே..." நளினி மகளுக்குப் பதிலுரைத்து விட்டுத் தன் புடவை முந்தானையில் வாயடைத்து அமர்ந்து விட்டார்.

கொதித்து விட்டாள் அகல்விழி. 'கேவலம், பணத்திற்காக ஒரு பெண்ணை அடகு எடுப்பதா? என்ன ஒரு அராஜகம்...'

தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து வீறு கொண்டு எழுந்தவள், அந்த அறையின் மூலையில் கண்களில் சோகம் அப்பியிருந்த தந்தையை நெருங்கினாள்.

"அப்பா... எழுந்திருங்கோ..." அவளிட்ட கட்டளையில், நாராயணன் மறு வார்த்தையின்றி எழுந்து நின்றார்.

"வாங்கோப்பா என்னோட..." என்றவள், அவரின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள்.

வேகமாகப் போகுமிருவரையும் நளினி கண்டு பதற, "அடி அகல்... அப்பாவை அழைச்சுண்டு இவ்வளவு வேகமா எங்கேடி போற...?" அகல்விழியின் இந்தத் தோற்றத்தில் பெற்ற தாய்க்குப் பதறிக் கொண்டு வந்தது.

"அம்மா... நானும் அப்பாவும் போலீஸ் ஸ்டேஷன் போறோம்..." என்றவள், தந்தையுடன் முன்னேற,

நளினி, "ஹே... நமக்கு எதுக்குடி பெரிய இடத்துப் பொல்லாப்பு? வேண்டாம் அச்சு... அம்மா சொல்றதைச் செத்தக் கேளுடி கொழந்தே...!" நளினி தடுக்க, இப்போது அவருக்குப் பதில் கொடுப்பது நாராயணனின் முறையானது.

"என்ன நளினி பேசிண்டிருக்க...? நம்ம கண்ணு முன்னாடி ரெண்டு உயிர் போயிருக்கு... வயசுப் பொண்ணைத் தரதரன்னு இழுத்துண்டு போயிருக்கா... நோக்கு இது புரியலையா? இந்த நிலைமை நம்ம பொண்ணுக்கு வந்திருந்தா நீ சும்மா இருப்பியா? உனக்கொரு நியாயம்... ஊருக்கொரு நியாயமா?



"கேவலம்... பணத்துக்காக இங்கே ஒரு குடும்பமே அழிஞ்சு போயிருக்கு... இதை நாம சும்மா விடலாமா? முடியாது நளினி... எங்களைத் தடுக்காதே! நீ இங்கிருந்து எல்லாக் காரியத்தையும் கவனிச்சுக்கோ... அந்தச் சேரனுக்கொரு முடிவு கட்டாம விட மாட்டேன்...!" என்று சூளுரைத்தவர், மகளிடம் திரும்பி,

"அச்சு... இந்த நேரத்துல நீ என்னோட போலீஸ் ஸ்டேஷன் வர வேண்டாம். நீ இங்கேயே இரு. நான் போய்க் கம்ப்ளெயின்ட் கொடுத்துட்டு வரேன்..." என்றவர், தானும் வரேன் என்று நின்ற மகளை, ஒரு பார்வையில் அடக்கி விட்டுக் காவல் நிலையம் சென்றார்.

போலீஸ் ஸ்டேஷன் சென்ற நாராயணன், அங்கிருந்த ரைட்டரிடம் விஷயத்தைச் சொல்ல, வழக்கு சென்னையின் முக்கியப் புள்ளியான சேரனின் மீதென்பது புரிந்ததும், ரைட்டர் அவரை இன்ஸ்பெக்டரிடம் அனுப்பி வைத்தார்.

அந்த இன்ஸ்பெக்டர், நாராயணனை மேலும் கீழும் பார்த்தவன், "கம்ப்ளெயின்ட் எழுதிக் கொடுத்திட்டுப் போங்க... ஆக்ஷன் எடுக்கிறேன்..." என ஒரு பேப்பரை நீட்ட, அதை வாங்கி மடமடவென எழுதி முடித்தவர், அதை அவன் முன்னே நீட்டி,

"சார்... உடனே ஆக்ஷன் எடுங்கோ சார்... இந்தப் படுபாவியினாலே அங்கே ரெண்டு உயிர் போயிடுச்சு. இன்னொரு உயிர் போராடிக்கிட்டு இருக்கு... ப்ளீஸ் சார்... எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அந்தச்

சேரனைப் பிடிச்சுக் கோர்ட்ல நிறுத்துங்கோ... அவனுக்குப் பெரிய தண்டனையா வாங்கிக் கொடுங்கோ...!" எனக் கை கூப்பி வேண்டினார் நாராயணன்.

அவர் கொடுத்த கம்ப்ளெயின்ட் லெட்டரை வாங்கிப் படித்த இன்ஸ்பெக்டர், "அதான் கம்ப்ளெயின்ட் கொடுத்திட்டீங்களே சார்... நீங்க போங்க... நடவடிக்கை எடுக்கிறோம்..." என அனுப்பி வைக்க, அந்த வார்த்தையில் சிறிதும் நம்பிக்கையின்றி, நாராயணன் மனமே இல்லாமல் அங்கிருந்து விடை பெற்றார்.

நாராயணன் வெளியேறிய நொடி, அவர் கொடுத்த கம்ப்ளெயின்ட்டும் குப்பைத் தொட்டிக்குச் சென்றது.

அதைக் கசக்கித் தூக்கி எறிந்த அந்த இன்ஸ்பெக்டர், தன் போனை உயிர்ப்பித்து, எண்களைத் தட்டி, அந்தப் பக்கம் எடுக்கப்படுவதற்காகக் காத்திருந்தான்.

நாலு மணி சென்று பேசிய இன்ஸ்பெக்டர், "என்ன சார் இது...? இப்படியா எல்லாத்தையும் பப்ளிக்கா பண்ணுவீங்க...? இப்போதான் ஒரு ஐயர் வந்து கம்ப்ளெயின்ட் கொடுத்துட்டுப் போறான்... உடனே ஆக்ஷன் எடுக்கணுமாம்... என்ன சார்... ஆக்ஷன் எடுத்துடவா...?" இன்ஸ்பெக்டர் நக்கலாகக் கேட்க,

சில நொடி அமைதிக்குப் பின், "அதான் சார்... அதேதான். நீங்க கற்பூரம் சார்... கரெக்டா நான் கேட்க வர்றதைப் புரிஞ்சுக்கிட்டீங்க..." - பெரிதாகச் சிரித்தான்.

மீண்டும் ஒரு அமைதி.



"என்ன சார் பெருசாக் கேட்டுடப் போறேன். ஒரு அஞ்சு எல் என் பெண்டாட்டி அக்கௌண்ட்டுக்கு டிரான்ஸ்ஃபர் பண்ணிடுங்க. இந்த முறை கொஞ்சம் அதிகம்தான். என்ன செய்ய...? ரெண்டு உயிர் வேற போயிருக்கே... அதனாலதான் தொகையும் அதிகம்...!" என்க,

அந்தப் பக்கம் என்ன சொன்னதோ... ஒரு கொடூரமான சிரிப்புடன் போனை அணைத்தான். கூடவே, நியாயமும் சேர்ந்து அதனோடு அணைந்தது.

உன்னி, பிரேமாவின் இறுதிக் காரியத்தை லக்ஷ்மியின் புகுந்த வீட்டார்கள் செய்து முடிக்க... அடுத்த நாள் இரவுதான் லக்ஷ்மியால் அங்கு வர முடிந்தது.

வந்தவள் பெற்றோருக்காகக் கண்ணீர் விட்டவள்... தன் தங்கையின் நிலையறிந்து வருந்தினாள்.

அவளைத் தேடச் சொல்லிக் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பதை நாராயணன் சொன்னதும் கேட்டுக் கொண்டு, சுந்தரியைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைத்தால் தனக்கு உடனே தெரிவிக்குமாறும்... இங்கிருந்தால் தனக்குப் பெற்றோரின் ஞாபகம் அதிகம் வருவதாகவும், தன்னால் இங்கே ஒரு நொடி கூட இருக்க முடியவில்லை என்றும் கண்ணீர் வடித்து அன்று இரவே சென்னையிலிருந்து புறப்பட்டாள்.

அவள் கணவன் அமெரிக்கா செல்ல வேண்டியும், அவளின் காதல் திருமணத்திற்காகவும்தான் அவள் பெற்றோர் தீராத கடன்பட்டார்கள் என்பதையும், இன்று

அவளுக்காகத்தான் அவள் மொத்தக் குடும்பம் சிதைந்தது என்பதையும் மறந்து அங்கிருந்து சென்றே விட்டாள்... அவளின் சுயநலத்தைத் தேடி.

ஆயிற்று... உன்னி, பிரேமாவின் மரணம் நிகழ்ந்து பத்து நாள் பறந்தோடிப் போனது.

இதுவரை சுந்தரியைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

நாராயணன் திரும்பவும் இருமுறை காவல் நிலையம் சென்றபோதும், "தேடிக்கிட்டு இருக்கோம் சார்... தகவல் கிடைச்சா சொல்லி அனுப்புறோம்..." என்ற பதிலே கிடைத்தது.

ஆனால் இந்தப் பத்து நாட்களில் அகல்விழிதான் துவண்டு போனாள்.

தன் உற்ற தோழியையும், அவள் குடும்பத் தாரையும் இழந்தது அவளுக்குத் தன் உயிரில் ஒரு பாதியை இழந்தது போல் அவள் உலகம் இயங்க மறுத்தது.

உண்ணும் உணவில், உடுத்தும் உடையில், அமரும் இடத்தில் என அனைத்திலும் சுந்தரியின் ஞாபகம் வந்தது.

மூன்று வருடம் கல்லூரிப் படிப்பு முடிந்து பிரியும் நண்பர்களுக்கே அவர்கள் பிரிவு, மரண வலியைக் கொடுக்குமெனில்... பிறந்தது முதல் தோழிகளாகச் சுற்றித்



திரிந்த இந்த இளம் கன்றின் பிரிவை நம்மால் உணர்ந்து சொல்ல முடியுமா?

தங்கள் நட்பு, தங்கள் குடும்பம் என ஒற்றுமையுடன் வாழ்ந்தவர்கள் ஒரே நாளில் தங்களைப் பிரிந்து சென்ற சோகம், நாராயணனின் குடும்பத்தை அந்தப் பத்து நாட்களும் வாட்டத்தான் செய்தது. ஆனால், இப்படியே இருந்து விட முடியுமா? அவர்களுக்கும் வாழ்க்கை இருக்கிறதே... மீதியிருக்கும் வாழ்வை வாழ்ந்துதானே தீர வேண்டும்.

நாராயணன் தன்னைத் தேற்றிக் கொண்டு அன்று தன் அலுவலைத் துவக்கினார்.

மனைவியின் கண் ஜாடையைப் புரிந்து கொண்டு, அறையிலே முடங்கிக் கிடக்கும் தன் செல்வ மகளின் நிலையை உணர்ந்து அவளையும் இயல்பு நிலைக்கு மீட்டு வரச் சென்றார்.

கட்டிலில் ஒருக்களித்துப் படுத்திருந்தவளின் தலையை வருடியவர், "என்னடா குழந்தை... இப்படியே விட்டத்தை வெறிச்சுப் பார்த்துட்டு இருந்தா எப்படி? வேண்டாம்மா... நடந்ததை நினைச்சு உன்னை வருத்திக் காதே. நடந்தது நடந்து போச்சு. பழையதை நினைச்சு இப்படியே இருக்காம காலேஜுக்குக் கிளம்பிப் போடா கண்ணம்மா...!"

மகளின் கூந்தலை அன்பாய் வருடிய தந்தையின் மடியில் தஞ்சம் புகுந்த மகள் கண்களில் கண்ணீர்...

வடிந்த கண்ணீரைத் தன் வேட்டியில் துடைத்து விட்ட நாராயணன், "கஷ்டம்தான்டா. மறக்குறது கஷ்டம் தான். அதுக்காக இப்படியே இருந்துட முடியாதே... எழுந் துக்கோம்மா. எழுந்து ஆகவேண்டிய வேலையைப் பாரு... அப்பா உன்னைக் காலேஜ்ல விட்டுட்டு ஆபீஸ் போறேன்."

சமாதானப் படுத்திய தந்தையின் வார்த்தைக்கு மரியாதை செலுத்தி மௌனச் சிலையாகக் கல்லூரிக்குத் தயாராகி வந்தாள்.

தந்தையுடன் கல்லூரிக்குச் செல்லும் போதே, அகல்விழியின் மனதில் பல எண்ணங்கள் ஓடிக் கொண் டிருந்தன.

வீட்டில் இருந்த தருணங்களையே அவளால் மறக்க முடியவில்லையெனில்... கல்லூரியில் சுந்தரியின் நினைவை அவ்வளவு எளிதில் மறந்து விட முடியுமா?

வீட்டை விட இங்கேதானே அவர்களின் ஆட்டம் அதிகமாக இருந்தது.

சுந்தரியின் திட்டை வாங்கிக் கொண்டு கையை நனைத்துக் குல்ஃபி சாப்பிடும் நேரம், இருவரும் கிசுகிசு பேசிப் பேருந்து நிலையத்திற்கு நடை போடும் தருணம், பேருந்துப் பயணத்தில் கண்டக்டரைக் கேலி சிண்டல் செய்த தருணம்... ஹப்பப்பா...! அனைத்திலும் அவளின் தோழி இருந்தாளே...!

இதே நினைவுடன் வந்தவள், நாராயணன் இரண்டு முறை தன்னை அழைத்து, மூன்றாம் முறை அழைத்த போதுதான் உணர்வு பெற்றாள்.



"ஹான்... அப்பா..." சுதாரித்துப் பதிலளித்த மகளின் தலையை வருடி,

"வேண்டாம்டா குழந்த... பழசை நினைச்சுண்டு மனசை ரணமாக்கிக்காதே. போடா போ...!" எனக் கல்லூரிக்குள் அனுப்பி வைத்து விட்டு அவர் வேலைக்குச் சென்று விட்டார்.

ஆனால் கல்லூரியின் உள்ளே நுழைந்த அகல் விழிக்குத்தான் முன்னேறிச் செல்ல மனமெழவில்லை.

தோழியின் நினைவே மனதை வாட்ட... நின்ற கால்களைத் திருப்பிச் சேரனின் அலுவலகத்திற்கு நடை போட்டாள்.

ஒரு குடும்பத்தை அழித்து விட்டு, அவன் மட்டும் சொகுசாக வாழ்ந்து விடுவானா?

அதை எப்படி அவளால் அனுமதிக்க முடியும்?

நடந்தவைக்கு அவன் நிச்சயம் பதில் சொல்லித் தான் ஆக வேண்டும்.

சுந்தரிக்கு நடந்த கொடுமைக்கு அவன் ஈடுகட்டியே தீர வேண்டுமென்ற தீர்மானத்துடன்தான் சென்றாள்.

ஆனால் சேரனின் கெட்ட நேரமோ என்னவோ... மும்பைக்கு வேலைக்குச் சென்ற சேரன், சென்ற வேலை இழுத்தடிக்கவே, இரண்டு நாள் பயணம், பதினைந்து நாட்கள் கழிந்தும் முடிந்தபாடில்லை.

அவன் அலுவலகத்தில் இல்லை என்றதும், அகல்விழியின் மனம் கொந்தளித்தது.

ஆனால் கொந்தளித்த மனதைக் குளிரச் செய்ய வேண்டுமெனில்... அவனை நல்லதாக நாலு வார்த்தை கேட்டாலொழிய, அவளுக்கு மனமாறாது.

அதனால் அவன் வரும் நாளுக்காகக் காத்திருந் தாள்.

சுந்தரிக்கு நேர்ந்த இழப்பிற்கு அவனிடம் பதில் கேட்கும் தருணத்திற்காகக் காத்திருந்தாள். ஆனால் அவள் காத்திருந்த தருணத்திற்கு மாறாக நிகழ்ந்தது, அந்நாளின் நிகழ்வு!

## 20

**செ**ன்னை ஏர்போர்ட்டிலிருந்து வெளி வந்த சேரன் அவசரமாக ஒரு டாக்ஸி பிடித்து நேராக மைலாப்பூர்தான் சென்றான்.

கடந்த இருபது நாட்கள் அவனது வேலை, அவனது பாதி நேரத்தைக் களவு கொண்டதென்றால் மீதி நேரத்தில் அகல்விழியின் பேச்சும், சிரிப்பும் கனவில் வந்து அவனைக் கொள்ளை கொண்டது.

அதுவும் கடந்த ஐந்து தினங்களுக்கு முன் அவள் மீண்டும் அவனைப் பார்க்க அலுவலகம் வந்ததை ஜீவா சொன்னதை அடுத்து அகல்விழிக்கான அவனது தவிப்பு, மேலும் மேலும் அதிகரித்ததே ஒழியச் சற்றும் குறைந்தபாடாக இல்லை.



அவன் காதலுக்குச் சாதகமான பதிலைச் சொல்லத்தான் அவள் தன்னைத் தேடி வந்திருக்கிறாள் என அவனே ஒரு பிம்பத்தை மனதில் ஏற்படுத்திக் கொண்டு அவளுக்காக ஏங்க ஆரம்பித்தான்.

இரவில் அவள் நினைவில்... அவன் துவண்ட நேரத்தில் இருளும் நிலவும்தான் அவனது தனிமையைச் சற்றுக் குளிரச் செய்தது.

எப்போதும் எந்த வேலைக்குச் சென்றாலும், அதை அடி முதல் வேர் வரை அலசி ஆராய்ந்து கையுடன் முடித்த பிறகுதான் அந்த இடத்தை விட்டு நகர்வான் சேரன். ஆனால் இம்முறை மும்பைப் பயணம் அவனை வெகுவாக அலைப்புறுத்தியது.

எங்கும் அவன் அகல்விழி, எதிலும் அவனின் அகல்விழியாகக் காட்சியளித்தாள்.

இதற்கு மேல் அவன் மனம் தாங்காது என்ற நிலை வந்ததும், மும்பையிலிருந்து அவனது கம்பெனி மேலாள ரிடம் மீதி வேலையைப் பார்த்துக் கொள்ளுமாறு பணித்து விட்டு, அடுத்துக் கிடைத்த விமானத்தில் சென்னை கிளம்பி விட்டான்.

அவன் வரும் விஷயத்தை யாரிடமும் தெரிவிக்க வில்லை... ஜீவா உள்பட!

ஏர்போர்ட்டிலிருந்து கிளம்பிய டாக்ஸி, நேராக மைலாப்பூரில் இருந்த அகல்விழியின் வீட்டின் முன்தான் நின்றது.

காரில் வரும்போது சேரனின் மனம் முழுதும் படபடப்பாக இருந்தது.

அகல்விழியிடம் காதலைச் சொன்னபோது கூடச் சேரனுக்கு இத்தனை படபடப்பு இருக்கவில்லை. இன்று என்ன ஆனாலும், அகல்விழியின் வீட்டில் பேசிச் சம்மதம் வாங்கி உடனே திருமணத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடனே சேரன் அங்கே சென்றது...

இதே எண்ணத்துடன் அவர்கள் வீட்டை அடைந்தவன்... காரிலிருந்து இறங்கி, முன் கேட்டைத் திறந்து உள்ளே சென்று விட்டான்.

வாசலில் கேட் திறக்கும் சத்தம் கேட்டு வெளியே எட்டிப் பார்த்த ஸ்ரீவள்ளி, அங்கே அன்று பார்த்த ஹேண்ட்சம் ஹீரோவை எதிர்பார்க்கவில்லை.

அவளின் அக்காவைப் போலவே, கண்களை விரித்து ஆச்சரியம் காட்டியவள்... அடுத்தது என்ன என்று யோசித்துக் குடுகுடுவென அக்காவின் அறைக்கு ஓடினாள்.

கையில் புத்தகத்துடன், ஜன்னல் வழியே தெரிந்த மரக்கிளையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அகல்விழி, அக்கா... அக்காவெனப் பதட்டமாக ஓடி வந்த தங்கையை விசித்திர ஜந்துவைப் பார்ப்பது போல் பார்த்து வைக்க... மற்ற நேரமானால் அக்காவைக் காய்ச்சி எடுத்திருப்பாள் ஸ்ரீ.



இப்போது ஸ்ரீவள்ளி ஹேண்ட்சம் ஹீரோவைப் பார்த்த படபடப்பில் இருந்தாள் அல்லவா! அதனால் அகலின் ரியாக்ஷனை டீலில் விட்டு விட்டுப் பரபரப் பானாள்.

"அக்கா... அக்கா..." என மீண்டும் ஏலம் போடத் துவங்கிய தங்கையை முறைத்தவள்...

"ஏன்டி, இப்படி அக்காவை ஏலம் போட்டுண்டு இருக்கே... விஷயத்தைச் சொல்லு!" என்றதும்தான் சொல்ல வந்ததைச் சொன்னாள்.

"அக்கா... அன்னிக்கு நம்ம பார்த்தோமே... அந்த ஹேண்ட்சம் ஹீரோ... அவர் நம்ம வீட்டுக்குள்ள வந்துண் டிருக்கார்..." அத்தனை பரபரப்பு அவளின் வார்த்தை களில்...

முதலில் யாரென அகல்விழிக்குப் பிடிபடவில்லை.

சில நொடிகளில் தங்கை சொல்லும் நபரை அனுமானித்ததும்... சட்டென அமர்ந்திருந்த சேரை விட்டு எழுந்து விட்டாள்.

அகல்விழிக்கு மட்டுமே சேரன் இவன்தான் எனத் தெரியும். மற்றப்படி அவள் வீட்டில் உள்ளவர்களுக்கு இவன்தான் சேரன் என்பது தெரியாத விஷயம்.

ஸ்ரீவள்ளி, அவன் வந்திருக்கிறான்... அதுவும் தன் வீட்டுக்கு வந்திருக்கிறான் என்றதும் அவளுக்குத் தோன்றிய ஆயிரம் கேள்விகளில் முதலில் மூளையில்

உதித்தது... 'அவன் எதற்கு இங்கே வர வேண்டும்?' என்பதுதான்.

மனதில் அடுத்தடுத்துப் படையெடுத்த கேள்விகள் ஒன்றன் பின் ஒன்று அணிவகுத்து நிற்க... அதற்குப் பதில் சொல்லும் காலமும், நேரமும் இல்லாமல் அவள் விரைந்து கூடத்திற்குச் செல்வதற்குள் சேரன், நாராயண னுடன் அறிமுகமாகி இருந்தான்.

அவள் அறையை விட்டு வெளியே வருவதற்கும், சேரன் நாராயணனிடம், "ஹலோ சார். நான் இளஞ்சேரன். சேரன் குரூப்ஸ் எம்.டி..." என அவர் முன்னே கை நீட்டி அறிமுகமாவதற்கும் சரியாக இருந்தது.

'சேரன்' என்ற பெயரில் நாராயணன் அதிர்ந்தே போனார். அவரின் பின்னால் நின்று கொண்டிருந்த நளினிக்குமே அதே நிலைதான்.

'இவனா அவன்...?' - இந்த உணர்வுதான் இருவருக்கும்.

நீட்டிய கைக்கு எந்தப் பிரதிபலிப்பும் இல்லாமல் இருக்க... சேரனுக்குக் கூட மனதில், 'எதற்கு இவ்வளவு அதிர்ச்சி?' என எண்ண வைத்தது.

'ஒரு வேளை நான் அவகிட்ட சொன்ன காதலை அவ அப்பாகிட்ட சொல்லியிருப்பாளோ... இருக்கும் இருக்கும். அவதான் குழந்தையாச்சே... 'அப்பா... அப்பா... இந்தப் பையன் என்கிட்ட லவ் சொல்லிட்டான் அப்பா...'ன்னு கம்ப்ளெய்ன்ட் செஞ்சிருப்பா...'



சேரன் அவன் மனதிற்குள்ளேயே யோசித்து, நாராயணனின் அதிர்ச்சியை அவனுக்குத் தெரிந்த விதத்தில் எண்ணிக் கொண்டான்.

இங்கு நடப்பது எதையும் தடுக்க முடியா நிலையில், ஏதாவது அசம்பாவிதம் நடந்து விடுமோ எனக் கையைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தாள் அகல்விழி.

யோசனையில் வலது புறம் திரும்பிய சேரனுக்குக் கடந்த இருபது நாட்களாக அவன் ஏங்கித் தவித்த விருந்தைக் காணக் கிடைத்ததில் அக மகிழ்ந்து, அகல் விழியின் முகத்தில் தெரிந்த தவிப்பைத் தனக்கான தவிப்போ எனச் சந்தேகம் கொண்டு, வந்த சந்தேகத்தை அவனே ஊர்ஜிதப்படுத்தி, நாராயணனிடம் பேச மேலும் உத்வேகம் கொண்டான்.

அவன் இருந்த உற்சாகத்திலும், காதலிலும் காணும் அனைத்தையும் அவனுக்குச் சாதகமாக நினைத்துக் கொண்டான்.

ஒருத்தியிடம் காதலைச் சொன்னோமே... கடந்து சென்ற இருபது நாட்களில் அவள் யோசித்து ஏதேனும் நல்ல முடிவு செய்திருப்பாளா... அவள் பெற்றோரிடம் இந்த விஷயத்தைச் சொல்லி அவர்களின் முடிவு என்ன வாக இருக்கும் என்ற எந்தச் சிந்தனையும் செய்யும் நிலையில் அவன் இருக்கவில்லை.

சேரனுக்கு இந்தக் காதல் உணர்வு புதிதல்லவா! அதனால் எது சரி, எது தவறு எனப் பிரித்தறியும் பொறுமையும் நேரமும் இருக்கவில்லை.

அதுவும் சிறு வயது முதல் நினைத்ததை நினைத்த பொழுதில் வாங்கிப் பழகிய சேரனுக்கு, அகல்விழியைச் சந்தித்துப் பல மாதங்கள் கடந்த நிலையில், இன்னமும் அவள் தன் கைக்குக் கிடைக்காமல் இருப்பது மிகுந்த வருத்தமே.

அவனுக்கு அவள் தன்னைக் காதலிக்காமல் இருக்க எந்தக் காரணமுமில்லை என மனம் அடித்துச் சொல்லியது.

அது அவனின் தலைக்கனத்தால் அல்ல... அவன் உண்மையான காதலின் மீது கொண்ட நம்பிக்கையினால் என்பதால்தான் விளைவுகளைச் சிந்திக்காமல் இன்று இங்கே வந்து விட்டான்.

அவன் அகல்விழியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்க... சினம் கொண்ட நாராயணன், “ஹலோ சார்...” எனக் குரலை உயர்த்தி அழைக்க, அந்தக் குரலின் வித்தியாசத்தைக் குடும்பத்தார் மட்டுமே அறிவர்.

புதியவனான சேரனுக்கு இந்த அழைப்பு புதுமையாகத்தான் பட்டது. அவரின் கோபத்தை அவன் உணரவில்லை.

அந்த உணர்வில், “ஹய்யோ! சார் எல்லாம் வேண்டாம். சா... மாமா... சேரன்னே கூப்பிடுங்க...” என்றதும், நாராயணனுக்கு மற்றொரு அதிர்ச்சி...

“என்னது மாமாவா...!”



“ஆமா மாமா... அகல் உங்ககிட்ட எதுவும் சொல்லலையா... சொல்லியிருப்பானு நினைச்சேன்... ஓ.கே. நோ ப்ராப்ளம்... நானே சொல்றேன்... என்னோட பேக்ரவுண்ட் பத்தி உங்களுக்குத் தெரிஞ்சிருக்கலாம்... அதனால இப்போ அது தேவையில்லாத விஷயம்... நான் உங்க பொண்ணைக் காதலிக்கிறேன்...

“அவள் என்னைச் சந்திக்க வந்தபோது, இதைச் சொன்னேன்... அவளுக்கும் இதுல சம்மதம்தான்னு நினைக்கிறேன்... எனக்கு அவளைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்... அதுக்கு உங்களோட சம்மதம் வேணும்... ஏற்கெனவே இரண்டரை மாசம் காத்துக்கிட்டு இருந்தேன்... இதுக்கு மேலயும் என்னால வெயிட் பண்ண முடியாதுன்னு தோணுது... சோ எவ்ளோ சீக்கிரம் முடியுமோ, அவ்ளோ சீக்கிரம் எனக்கு உங்க பொண்ணைக் கொடுத்திடுங்க...”

சேரன் நாராயணனின் தலையில் இடி இறக்கிக் கொண்டிருந்தான்.

இறங்கிய இடியிலிருந்து தெளியவே நாராயணனுக்குச் சில நிமிடங்கள் பிடித்தன.

புரிந்ததும் அவர் தன் மகளைத்தான் பார்த்தார்... அவர் பார்வையில், ‘இதெல்லாம் உண்மையா அகல்?’ என்ற கேள்வி தொக்கி நிற்க, அகல்விழி அவர் பார்வையைத் தவிர்த்துத் தலை குனிந்து கொண்டாள்.

மகளின் தலை குனிவு நாராயணனை அதிரச் செய்தது.

'எத்தனை பெரிய விஷயத்தை மறைத்திருக்கிறாள்... இவனின் கொடூர முகம் தெரிந்த பின்னரும் மகள் எப்படித் தன்னிடம் இந்த விஷயத்தைச் சொல்லாமல் மறைத் திருக்கலாம்...' நாராயணனுக்கு மகளின் மீதுதான் கோபம் பெருகியது.

"இதெல்லாம் உண்மையா அகல்...?" நாராய ணனின் குரல் கோபமாக ஒலித்தது.

"அ...ப்பா..." முதல் முறை மகளின் அழைப்பில் இருந்த தடுமாற்றம் நாராயணனுக்கு விஷயத்தை உறுதிப் படுத்தியது.

நடப்பது அனைத்தையும் ஒரு இறுக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த நளினிக்குக் கோபம் பொங்க, கடைசியாக அவளின் தயக்கம் கொந்தளிக்கச் செய்தது.

வேகமாக வந்தவர் மகளின் கன்னத்தில் பளார் என ஒரு அறை வைக்க,

இன்னொரு அடி வைக்குமுன் சேரன் அவரைத் தடுத்திருந்தான்.

அடிக்க வந்த நளினியின் கையை இறுக்கிப் பிடித்தவன், "அத்தை... அகல் உங்க பொண்ணா இருக்க லாம்... அதுக்காக என் முன்னாடி நீங்க அவளை அடிக் கிறதை என்னால பார்த்துட்டு இருக்க முடியாது. இதுவே முதலும், கடைசி முறையா இருக்கட்டும்...!" என்பதைக் கட்டளையாக இல்லாமல், அதே சமயம் மென்மை யுமல்லாத குரலில் சொல்ல, நளினி பொங்கி விட்டார்...



அவன் பிடித்த கையை உருவியவர், "ச்சே... விடு... அத்தையாம் அத்தை... யார் உனக்கு அத்தை... என் பொண்ணை நான் அடிப்பேன்... உதைப்பேன்... அதைக் கேட்க நீ யார்... முதல்ல இங்கிருந்து வெளிய போ...!" நளினி கோபத்தின் உச்சியில் இருந்தார்.

நளினியின் இந்தத் தேவையில்லாத கோபம் சேரனை எரிச்சல் படுத்தியது...

ஆம்... அவனைப் பொறுத்தவரை இது தேவை யில்லாத கோபம்தானே...

மேலும் அவனை இதுவரை யாரும் இப்படி எடுத் தெறிந்து பேசியதில்லை... முதல் முறை தன் காதலியின் அன்னை தன்னை அவமதித்ததைக் காதலிக்காக மன்னித்துவிட்டு அங்கிருந்து வெளியேற விரும்பினான்.

ஆனால் போகும் முன், அவர்கள் பெண் தனக்குத் தான் என உறுதியாக மொழிந்து விட்டு அங்கிருந்து வெளியேற நினைத்தான்.

"அத்தை... இப்போ எதுக்கு இவ்ளோ டென்ஷன்... எனக்குப் புரியலை... எனக்கு உங்க சம்மதத்தோடதான் அகலைக் கல்யாணம் செய்துக்கணும்... என் வாழ்க்கை யில் இதுவரைக்கும் எனக்குச் சொந்தம்னு சொல்லிக்க யாருமில்லை.

"இனி அகல்விழி, நீங்க, மாமா எல்லாரும்தான் என் சொந்தம்... எவ்ளோ நாள் வேணும்னாலும் யோசிச்சுக் கோங்க. ஆனா, நல்ல முடிவா வரணும்னு எதிர்பாக்கு றேன்... இதுதான் என்னோட கான்டாக்ட் நம்பர்... அகல்

விழிக்கு என்னோட ஆபீஸ் தெரியும்... நேர்ல மீட் பண்ணலாம்னா கூட ஐ அம் ரெடி... எனக்கு உங்ககிட்ட இருந்து சாதகமான பதில் வரும்னு நம்பிக்கையோடே இப்போ போறேன்..." என்றவன் போகும் முன் திரும்பி,

"என்னை மீறி அகலுக்கு நீங்க வேற ஏதாவது செய்யணும்னு யோசிச்சீங்கன்னா அப்புறம் நடக்கப் போறதுக்கு நான் பொறுப்பில்லை...!" என்றுவிட்டு மொத்தக் குடும்பத்திற்கும் அதிர்ச்சியை அளித்து விட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டான்..

அவன் சென்ற நொடி எல்லாம் நளினியின் பார்வை அகல்விழியை உக்கிரமாக எரித்தது.

'இவளுக்கு அவன் ஆபீஸ் தெரியுமாமே... அப்போ இதுவரை எத்தனை முறை அவனைப் பார்க்கச் சென்றிருக்கிறாளோ...?'

எத்தனை பெரிய சம்பவம் நடந்திருக்கிறது... ஒரு குடும்பமே அழிந்து போயிருக்கிறது... அதையெல்லாம் கொஞ்சம் கூட நினைவில் கொள்ளாமல்... இங்கே வந்து அவன் சம்பந்தம் பேசிவிட்டுச் செல்கிறான்... ஆனால் இந்தப் பெண் நடந்த எதையும் தங்களிடம் தெரிவிக்காமல், இப்போதும் எதையும் வாயைத் திறந்து பேசாமல் தலை குனிந்திருப்பது நளினிக்கு மேலும் மேலும் கடுப்பைத்தான் கிளப்பியது...

அவளை மீண்டும் அடிக்கச் சென்ற நளினியை,

"நளினி..." என ஓங்கி ஒரு அதட்டல் போட்டுத் தடுத்தார் நாராயணன்.



கணவரின் வார்த்தைக்கு மரியாதையளித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட நளினியால் அவளை முறைப்பதை நிறுத்த முடியவில்லை...

கூடவே ஒரு தாயாய் மகளின் எதிர்காலம் இனி என்ன ஆகுமோ என மனம் அடித்துக் கொள்ள, "என்னண்ணா! இப்போ இப்படியொரு பிரச்சனை முளைச் சிருக்கு... எனக்கு மனசு பதறிண்டு வருதுண்ணா... இதுக்கு நம்ம உடனே ஏதாவது செய்யணும்... அந்தப் பணக்காரனோட மோத நமக்குத் தெம்பில்லை... சீக்கிரம் ஏதாவது செய்யுங்கோண்ணா...!" பதறினார்.

நாராயணனும் அதைத்தான் யோசித்துக் கொண் டிருந்தார்.

பார்வையை நிலத்தில் பதித்த நிலையில் மகளிடம், "அவனோட ஆபீஸ்க்கு நீ போனியா அகல்...?" கேட்ட தொனி அகலைக் கலவரப்படுத்தியது...

தந்தை எங்கே தன்னைத் தவறாக நினைத்து விடுவாரோ எனப் பயந்தவள், ஓடிச் சென்று தந்தையின் காலைக் கட்டிக் கொண்டாள்...

"அப்பா... என்னை நம்புங்கோப்பா... சத்தியமா எனக்கும் அவனுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை... எனக்கு அவன் மேல காதலுமில்லை... ஒரு மண்ணு மில்லை... அவன் ஏதோ உளறிண்டு போறான்ப்பா...!" தன்னை விளக்க முயன்றாள்.

"நீ அவன் ஆபீஸுக்குப் போனியா, இல்லையா...?" நாராயணன் அதிலேயே நின்றார்.

அவரின் கேள்விக்கு அகல்விழி மௌனம் சாதிக்க, அருகில் வந்த நளினி அவள் முகத்தைப் பற்றி, “அப்பா கேட்டதுக்குப் பதில் சொல்லுடி...” அதட்டல் ஓங்கி ஒலிக்க..

“போ... போனேன்...மா...” தயங்கித் தயங்கி வெளி வந்தன அகலின் வார்த்தைகள்...

நளினி கோபத்தில் மீண்டும் அகலை முதுகில் அடித்தார்.

“ஏன்டி... ஏன் இப்படிச் செஞ்ச... ஏன்...?” என மீண்டும் மீண்டும் அடித்த நளினியை, அதுவரை மௌன மாக அமர்ந்திருந்த நாராயணன் பிடித்து நிறுத்தினார்.

“நளினி... நான்தான் கேட்டுண்டு இருக்கே னோல்லியோ... எதுக்கு வயசு வந்த பொண்ணைக் கை நீட்டுற... சித்த அமைதியா இரு...!” மனைவியை அடக்கியவர், மகளைப் பார்க்க...

கண்கள் சிவக்கக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த மகளை, “ஏன்டா இப்படிச் செஞ்ச...?” என அவர் கேளாமல் கேட்க...

“ஹய்யோ அப்பா...! என்னை மன்னிச்சுடுங்கோ. நான் வேணும்னு போகலை... சுந்தரிக்காகத்தான் போனேன்... அவளுக்கு என்னால முடிஞ்ச ஏதாவது உதவி செய்யலாம்னுதான்ப்பா போனேன்... இப்படி ஒரு பிரச்சனை உருவாகும்னு நான் நிச்சயம் எதிர்பார்க் கலப்பா...” அகல் உண்மையை விளக்கிச் சொல்ல..

நளினிக்குச் சமாதானமாகவில்லை...



“ஏன்டி... துஷ்டனைக் கண்டால் தூர விலகுன்னு பழஞ்சொல்லே இருக்கேடி... நீயா ஏன் போய் அவனாண்ட விழுந்த....? நான் அன்னிக்கே படிச்சுப் படிச்சுச் சொன் னேனே கேட்டியா... அப்பவே இதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்னு சொன்னேனே... ஒரு குடும்பம் நம்ம கண் முன்னாடி அழிஞ்சது பத்தாதா நோக்கு...! வேலியில போற ஓணானை வேட்டியில் விட்ட கதையா, மூணாம் மனுஷிக்கு உதவி செய்றேன்னு போய் இப்போ நீ அவன் கண்ணுல மாட்டிண்டியே...!

“இதெல்லாம் நோக்கு தேவையாடி கிராதகி...! உண்மையைச் சொல்லுடி... நீ அவனை ஏதாவது காதல் கீதல் பண்ணித் தொலைச்சியா...? மறைக்காம உண்மையைச் சொல்லுடி... எங்களைத் திரும்பத் திரும்ப ஏமாத்தாதே...!” மகள் சொல்வதில் அவருக்கு நம்பிக்கை இருக்கவில்லை.

“அம்மா... என்னை நம்புங்கோம்மா... நேக்கு அந்த மாதிரி எந்த எண்ணமும் இல்லை... எனக்கு எப்பவும் அந்த மாதிரி எண்ணமெல்லாம் வராதும்மா... நான் உங்க பொண்ணும்மா... நான் உங்களை மீறி எந்தத் தவறும் செய்ய மாட்டேன்... தயவு செஞ்சு என்னை நம்புங்கோ...!” அகல் அவள் மனநிலையைச் சொல்ல..

மகள் சொல்லும் சொல்லில் இருந்த உறுதி பெற்றோரை நம்பச் செய்ததுதான்...

ஆனால் அவளைக் குறி வைத்திருக்கும் கண், கழுகுக் கண்ணல்லவா... இப்போதே தங்கள் முன்னர் எப்படிப் பேசிவிட்டுச் சென்றான் அந்தச் சேரன்...!

இனியும் அவனிடமிருந்து தன் மகளைக் காப்பது அவ்வளவு எளிதென நாராயணன் தம்பதிக்குத் தோன்ற வில்லை...

நளினி, "இப்போ என்னண்ணா செய்றது...?" கண்களில் கண்ணீர் வழியக் கேட்க...

அதே எண்ணத்திலிருந்த நாராயணனுக்கும் அடுத்து என்ன என்று தெரியவில்லை...

யோசனையுடனே சாய்வு நாற்காலியில் அமர்ந்தவர் வெகு நேரம்வரை யோசனையைக் கலைக்காமல்தான் இருந்தார்...

நளினியும் அவரின் காலடியில் அமர்ந்து கொள்ள, அகல்விழியும், ஸ்ரீவள்ளியும் ஆளுக்கொரு மூலையில் அமர்ந்து கொண்டனர்...

வெகு நேரச் சிந்தனைக்குப் பின் நாராயணன் நளினியிடம், "நளின்... நான் ஏற்கெனவே உன்னாண்ட சொல்லியிருந்தேனே... நான் முன்னே வேலை செஞ்சுண்டு இருந்த ஆபீஸ்ல என்னோட ஃபிரெண்ட் ஸ்வாமிநாதன் பையன் அனந்துக்கு நம்ம அகலைக் கேட்டாங்கன்னு..."

"ஆமாங்க. நீங்க கூடப் பொண்ணு இப்போ படிச்சுட்டு இருக்கானு சொல்லி வேண்டாம்னு சொன்னீங் களே..."

"அதான் நளின்... நம்ம வேணா அனந்துக்கு அகலைப் பேசி முடிச்சுடலாமா...?"



"கண்டிப்பாங்க... நீங்க சொல்றது நல்ல யோசனை. இனி ஒரு ஒரு நிமிஷம் அகல் இங்க இருக்க இருக்க, அவளுக்கு எந்தப் பாதுகாப்புமில்லை... எவ்ளோ சீக்கிரம் முடியுதோ அவ்வளவு சீக்கிரம் அவளுக்குக் கல்யா ணத்தை முடிச்சாத்தான் நமக்கும் நிம்மதி. நம்ம பொண் ணுக்கும் ஒரு நல்ல எதிர்காலம் கிடைக்கும்... நீங்க இனி யோசிக்க வேண்டாங்க... உடனே உங்க ஃபிரெண்ட்கிட்ட பேசிடுங்க..."

நளினிக்குப் பெண்ணின் வாழ்க்கைதான் பிரதான மாகப் பட்டது...

இவர்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த அகல்விழிக்கு அதிர்ச்சி...

தான் இன்னமும் படிப்பைக் கூட முடிக்க வில்லையே... அதற்குள் எப்படித் திருமணம்...?

இந்த யோசனையில் உடனே மறுத்தாள் அகல்விழி.

"அம்மா... நான் இன்னும் படிச்சு முடிக்கலையே...! அதுக்குள்ள எனக்கு எதுக்கும்மா கல்யாணம்...? நான் படிச்சு முடிச்சு, ஒரு நல்ல வேலைக்குப் போறேன்ம்மா... நேக்கு உங்களையும், அப்பாவையும் உக்காத்தி வெச்சுக் கவனிக்கணும்... அதுக்குள்ள இந்தக் கல்யாணமெல்லாம் வேண்டாம்மா...!" மறுத்துப் பேசிய அகல்விழியின் பேச்சை நளினியின் சுளீர் சொற்கள் தடுத்தன...

"ச்சு! வாயை மூடு...! உனக்கு அடுத்த நிமிஷம் அந்தப் பாவியாலே என்ன நடக்குமோன்னு மனசு

துடிச்சுண்டு கிடக்கு... இவ படிக்கிறாளாம்... அதெல்லாம் கல்யாணத்தைச் செஞ்சுண்டு தாராளமா படி... என்னங்க! நீங்க உடனே அவருக்குப் போன் போட்டு விஷயத்தைச் சொல்லுங்க... முடிஞ்சவரை இந்த மாசத்துக்குள்ள கல்யாணம் வெச்சுக்கலாம்னு பேசுங்க..."

நளினி கணவரைத் துரிதப்படுத்தினார்...

அன்னையிடம் பேசினால் காரியமாகாது எனத் தெரிந்த அகல் அடுத்த முயற்சியாகத் தந்தையிடம் திரும்பினாள்..

"அப்பா... ப்ளீஸ்ப்பா... நீங்களாவது புரிஞ்சுக் கோங்கோ... நான் படிக்கணும்ப்பா...!" கெஞ்சிய மகளை,

"என்னடி படிக்கணும் படிக்கணும்னு... எங்கே அவனோட ஓடிப் போகலாம்னு ஐடியா பண்ணிண்டு இருக்கியா...?" மகள் மறுப்பதால் நளினி விபரீதமாக நினைத்து வார்த்தையை விட்டு விட்டார்...

அன்னை இப்படிச் சொன்னதும், அகல்விழியின் கண்கள் கண்ணீரைப் பொழிய, சில நொடிகள் சென்று,

"அப்பா... எனக்கு இதுவரை நீங்கதான் எல்லாமே செஞ்சிருக்கேள்... இனிமேலும் என்னோட வாழ்க்கை உங்களோட முடிவுதான்... உங்களுக்கு எது சரின்னு படுதோ அதையே செய்ங்கோ... நான் எதா இருந்தாலும் சம்மதிக்கிறேன்..." என்றவள் அங்கிருந்து எழுந்து தன் அறைக்குள் சென்று முடங்கிக் கொண்டாள்...

மகளின் வார்த்தையிலும், நளினி பேசியதிலும் நாராயணனுக்குக் கோபம் வந்துவிட்டது... "ம்ச்... என்ன நளினி இது..." என அவரின் அதிருப்தியை வெளியிட்டார்...



"என்னை மன்னிச்சுடுங்கோண்ணா... நம்ம பொண்ணு வாழ்க்கை நன்னா இருக்கணும்னு தான் வார்த்தையை விட்டுட்டேன்...!" நாராயணனுக்கு நளினியின் மனநிலை புரிந்தது...

அதன்பின் நாராயணன் ஒரு நொடி கூடத் தாமதிக்கவில்லை...

உடனே அவரது நண்பன் ஸ்வாமிநாதனுக்கு அழைத்து, முழு விபரத்தைச் சொல்லாமல், பெண்ணின் ஜாதகத்தைக் காரணித்து, உடனே திருமணம் முடிக்க வேண்டுமெனச் சொல்ல, ஸ்வாமிநாதன் அதற்குத் தலையசைத்தார்.

அந்த நாள் மாலையே ஸ்வாமிநாதன் தன் குடும்பத்தாருடன் வர, இரு குடும்பமும் பேசி அடுத்த ஒரு வாரத்தில் நல்ல நாள் வருவதாகவும், அப்போதே திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்றும் பேசி முடிவெடுத்துச் சென்றனர்...

நடப்பது அனைத்தும் தனக்காகத்தான் என்றாலும், அதில் எதிலும் லயிக்காமல் அகல்விழி அவள் அறையில் முடங்கிக் கிடந்தாள்...

அந்த நொடியிலிருந்து அந்த வீடு திருமணத்திற்குத் தயாரானது...

தங்களின் மிக நெருங்கிய சொந்தத்தை மட்டும் திருமணத்திற்கு அழைப்பதென முடிவாகிவிட, முடிந்தவரை

இந்த விஷயம் வெளியே கசிந்து விடாமலிருக்க நாராயணன் தம்பதியினர் மிக எச்சரிக்கையுடன் செயல் பட்டனர்...

ஆனால் என்ன செய்து என்ன பயன்...? தெரிய வேண்டியவனுக்குத் தெரிந்து விட்டதும், அதன் பின் நடந்தவை அனைத்தும் அவர்கள் கையை மீறி நடந்தேறியது.

அகல்விழியே தன் உலகமென்று இருப்பவனுக்கு, அவர்கள் வீட்டில் எதிர்ப்பைக் காட்டியது தெரிந்ததும், அவர்கள் இது போலத்தான் ஏதாவது சிந்திப்பார்கள் என்பது அகல்விழியின் திருமணத்தின் முந்தைய நாள் இரவுதான் தெரிந்தது...

விஷயம் தெரிந்ததும், உடனே அவர்கள் வீட்டிற்குச் சென்று, அவளைத் தூக்கிச் செல்ல எத்தனித்த மனதை அடக்கி, ரணமாக வலித்த இதயத்தைக் கட்டுப்படுத்தி அடுத்த நாள் பகலுக்காகக் காத்திருந்தான்...

எப்படியும் அகல்விழியின் பெற்றோர் சம்மதம் இனி கிடைக்கப் போவதில்லை என்பது தெரிந்தாலும், கடைசியாக அவர்கள் முன்னிலையிலாவது திருமணம் நடக்கட்டும் என்றுதான் அந்த அதிரடிக் காரியத்தில் இறங்கினான். ஏனெனில் அவனுக்கு அவனின் காதல் அதீத நம்பிக்கையைக் கொடுத்தது...

ஆனால் அன்று அகல்விழி காட்டிய எதிர்ப்பும், ஒதுக்கமும், அவனது நம்பிக்கையைச் சுக்குநூறாக்கியது.



அதற்காக... தான் மனைவி என நினைத்து மனதில் குடும்பம் நடத்தி வந்தவளை இன்னொருவனுக்குத் தாரை வார்த்துக் கொடுக்க அவனென்ன தியாகியா....!

அப்போது அவனிருந்த மன நிலையில் எப்படியாவது அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஒரே சிந்தனை மட்டுமே இருந்தது...

சதீஷ், மற்றும் ஜீவாவின் உதவியோடு அனைத்தையும் செய்து முடித்துவிட்டான்...

ஆனால் இதில் துரதிர்ஷ்டவசமான விஷயமென்னவென்றால், சுந்தரி குடும்பத்திற்கு நடந்த கொடுமைகள் எதுவும் அவனுக்குத் தெரியவில்லை... சேரனுக்கும் அவனது காதலி மட்டுமே முக்கியமாகப் பட்டதால், சுந்தரியின் குடும்பத்தின் நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் அவனுக்கிருக்கவில்லை...

அதைத் தெரியப்படுத்தக் கடமை கொண்டவர்கள் அவனுக்கு இதுவரை தெரிவிக்கவில்லை...

அதனால் வந்த விளைவுகள் எவரும் சிந்திக்காத ஒன்று... ஒரு வேளை அவனுக்கு அது தெரிந்திருந்தால், இதோ இப்போது இந்தக் கடல் மண்ணில் அமர்ந்து நிலவை வெறித்துப் பார்த்துப் படுத்திருக்க மாட்டான்... அகல்விழியின் வெறுப்பையும் அவன் சம்பாதித்திருக்க மாட்டான்...

இரவு சென்று, பகலும் விடிந்தது... அவனது வாழ்க்கை விடியல் எப்போதெனத் தெரியாமல்...!

21

"சதீஷ் சார்... கொஞ்சம் காரை நிறுத்துங்க..."

இரவு வீட்டை விட்டு வெளியேறிய சேரனை சதீஷும், ஜீவாவும் தேடாத இடம் இல்லை...

இருவரும் காரை எடுத்துக் கொண்டு அந்தப் பகுதி முழுவதும் தேடிவிட்டனர்.

சேரன் எங்கே, என்ன செய்கிறான் என எதுவும் தெரியாமல் உலவிக் கொண்டிருந்தவர்கள் மீண்டும் வீடு திரும்பும் வழியில் தான் ஜீவா கடலோரம் யாரோ அமர்ந்திருப்பதைப் பார்த்து கார் ஓட்டிக் கொண்டிருந்த சதீஷை நிறுத்தச் சொன்னான்...

ஜீவாவின் சொல் கேட்டுக் காரை நிறுத்திய சதீஷ்... அவன் காட்டிய திசையில் பார்த்தான்...

தூரத்திலிருந்து பார்க்கும்போது அது சேரனாகத் தான் தெரிந்தது...

இருவரும் காரிலிருந்து இறங்கி வேக எட்டுக்கள் வைத்து அவனை அடைந்தனர்.

தன் பக்கம் இருவர் வந்து நின்றது கூடத் தெரியா நிலையில் அமர்ந்திருந்தான் சேரன்...

"டேய் சேரா...!" சதீஷ் அவன் தோளில் கை வைத்ததும்தான் நிகழ் உலகம் புரிந்தது அவனுக்கு...

தன் தோள் தொட்டு உலுக்கிய நண்பனை வெறித்துப் பார்த்தவன் கண்களில் ஜீவனில்லை.



"டேய்... என்னடா இது..." மண்டியிட்டு நண்பனைத் தோளில் சாய்த்துக் கொண்டான் சதீஷ்.

ஜீவாவும் அவன் அருகில் அமர்ந்து அவன் தோளில் கை வைத்து ஆறுதல் படுத்தினான்...

ஆனால் அவர்கள் ஆறுதல் எல்லாம் அவனுக்குப் போதாதே...!

யாரை உலகம் என நினைத்தானோ, அவள் இவனை எந்த வகையில் கேவலப்படுத்தி விட்டாள்...!

அந்த வேதனைக்கும் வலிக்கும் மருந்து வலியை ஏற்படுத்தியவளே... என்பதைச் சேரன் அறிய வாய்ப்பில்லை.

மௌனமாக நண்பனின் தோள் சாய்ந்து அமர்ந்திருந்தவனை நிமிர்த்தி, "முட்டாள்...! எதுக்குடா நடு ராத்திரில இப்படி வீட்டை விட்டு வந்த...? கொஞ்சமாவது அறிவிருக்கா...? நீ எங்க போன... என்ன ஆனேனு தெரியாம, நாங்க இந்த இடத்தையே சுத்தி சுத்தி வந்துட்டோம்... நீ என்னடான்னா இங்க உக்காந்து ஜாலியா காத்து வாங்கிட்டு இருக்கியா...?"

சதீஷ் அவனிடம் பொரிந்து தள்ளிவிட்டான்..

ஜீவா தான் அவனை அடக்கி, "சதீஷ் சார்... முதல்ல இங்கிருந்து போலாம்... அங்க மேடம் இவரைக் காணாம தவிச்சுப் போயிருப்பாங்க. சேரன்... எந்திரிங்க, போகலாம்..."

சேரனையும் எழுப்பி விட...

ஜீவா சொன்ன செய்தி சேரனுக்கு விரக்திப் புன்னகையை வரவழைத்தது.

பின்னே... சிரிக்காமல் என்ன செய்வான்...?

'அவளாவது இவனைத் தேடித் தவிப்பதாவது...!' சேரனின் அந்த வித்தியாசப் புன்னகை நண்பர்களுக்குப் புரிந்தது...

"டேய்... நிஜமாவே அகல்விழி நீ போனதுல இருந்து அழுதுக்கிட்டுத்தான்டா இருக்கு... நம்புடா...!" சதீஷ் ஒரு ஏ.சி. என்பதையே மறந்து நண்பனுக்கு மண் தரையில் அமர்ந்து விளக்கிக் கொண்டிருந்தான்...

"சார்... பரவாயில்ல... நீங்க அவங்களுக்காக வர வேண்டாம்... எனக்காக வாங்க... இன்னிக்கி ஃபிஷிங் ஃபார்ம்ல எம்ப்ளாயீ மீட்டிங்.... அதுக்கு நீங்க கண்டிப்பா வந்தே ஆகணும்... கிளம்புங்க சார்... வீட்டுக்குப் போய் ரிஃப்ரெஷ் பண்ணிட்டுப் போலாம்..."

மனைவியைக் காரணம் காட்டியும், எழுந்து கொள் ளாமலிருந்தவனை வேலையைக் காரணம் காட்டி எழுப்ப முயன்றான்.

அவன் முயற்சி பலிக்கத்தான் செய்தது.

இப்படியே நடந்ததை நினைத்து இருந்து விட முடி யுமா? இனி ஆக வேண்டியதைப் பார்க்க வேணுமே...!

அவன் மனைவிக்குத் தர வேண்டிய பங்கைக் கொடுக்கவாவது அவனுக்கு வீட்டுக்குச் செல்ல வேண டுமே...!



மூன்று நண்பர்களுமாக நடந்து, மௌனமாகக் காரை அடைந்தனர்.

வரும் வழியிலும் யாரும் சேரனிடம் பேச்சுக் கொடுக்கவில்லை...

வீட்டுப் போர்டிகோவில் சேரனை இறக்கிவிட்ட சதீஷ், "சேரா... உன் வைஃப் கிட்ட ஏதாவது திரும்பச் சண்டை போட்டு வைக்காதே... பாவம்... நீ காணோம்னு ரொம்பவே பயந்து போய் இருக்காங்க... கோபப்படாம கொஞ்சம் பொறுமையா பேசு... எனக்கு டியூட்டிக்கு நேரமாச்சு... கிளம்புறேன்... வரேன் ஜீவா...!" என இருவரிடமும் விடை பெற்று சதீஷ் கிளம்பிவிட்டான்.

ஆனால் சதீஷ் சொல்லி விட்டுச் சென்றதுதான் சேரனின் விரக்தியை மேலும் அதிகப்படுத்தியது...

அவன் என்னவோ அகல்விழியிடம் வலிய வலியச் சண்டையிட்ட மாதிரியல்லவா சதீஷ் சொல்லிச் செல் கிறான்.

நடந்த விஷயம் தெரியாமல் பேசிவிட்டுச் சென்ற நண்பனை அவனால் வெறுமையாகத்தான் பார்க்க முடிந்தது...

சேரன் - அகல்விழியின் உறவை ஒரு அளவிற்கு அருகிருந்து பார்த்த ஜீவாவிற்குத் தற்போது நடந்த சம்பவம் என்னவென்று தெரியவில்லை எனினும், இந்த விஷயத்தில் சேரனின் மீது குறை சொல்ல அவன் விரும்பவில்லை.

இருந்தாலும் தன்னுடைய இடத்தை உணர்ந்து, “சார்... எதா இருந்தாலும் சீக்கிரம் சரியாகிடும்... கவலைப் படாதீங்க... நான் வீட்டுக்குப் போய்க் கிளம்பி ஆபீஸ்க்கு வந்துடுறேன்...” என விடைபெற்றுச் செல்ல...

“ஜீவா! ஒரு நிமிஷம்...!” எனத் தடுத்து நிறுத்திய சேரன் அவன் அருகில் வந்தான்.

“ஜீவா... இன்னிக்கு எம்ப்ளாயீ மீட்டிங் முடிஞ்ச பிறகு... நம்ம கம்பெனி ஆடிட்டரையும், லாயரையும் வீட்டுக்கு வரச் சொல்லு...” என்றதும் ஜீவா அதிர்ந்தே விட்டான்.

‘கம்பெனி ஆடிட்டர் சரி... லாயர் எதற்கு வீட்டுக்கு...? ஒரு வேளை விவாகரத்து...?’ என விபரீதமாக அவன் மனது சிந்திக்கத் துவங்க...

அவன் அதிர்ச்சியைப் பார்த்து அவன் மன உணர்வைப் படித்தவன், “நம்ம விரும்பினவங்களுக்கு என்ன விருப்பமோ, அதைக் கொடுப்பதுதானே ஜீவா நம்ம கடமை...!” என அவன் தோளில் தட்டி வழியனுப்பி வைத்தான்...

ஜீவாவிற்கு எதுவோ சரியில்லை என்பது மட்டும் புரிந்தது... ஆனால் அவன் யூகித்தது மட்டும் நடக்கக் கூடாதென வேண்டிக் கொண்டான்...

சேரனுக்கு அவனின் வீட்டிற்குள் செல்லவே விருப்பமில்லை... அந்த அளவிற்கு முந்தைய இரவின் அனுபவம் வெறுப்பை அளித்தது.



வீட்டு ஹாலிலிருந்த ஷோபாவில் ஷெண்பா அமர்ந்திருக்க, அவரது மடியில் அகல்விழி, விழி மூடிப் படுத்திருந்தாள்...

சில மணி நேரம்வரை அவள் பட்ட தவிப்பை ஷெண்பா மட்டுமே அறிவார்.

அவன் சென்று விட்டானே எனத் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தவளை ஷெண்பா தான் அணைத்து ஆறுதல்படுத்தித் தன் மடியில் கிடத்தி அமைதிப்படுத்தினார்.

எப்போது அவளின் தவிப்புத் தெரிய வேண்டியவனுக்குத் தெரியவில்லையோ... அப்போதிலிருந்து தவிப்புக்குரியவள் கேள்விக் குறியாக்கப் படுகிறாள்...!

அதுதான் இனி சேரன், அகல்விழியின் வாழ்வில் நடக்கவிருக்கிறது...

இதுவரை சேரன் தான் அகல்விழியிடம் காதலை யாசித்துக் கொண்டிருந்தான்...

இனி அது அகல்விழியின் முறையாக்கப் படுகிறது...

எப்போது சேரனின் கண்களில் அதீத வலியை அகல் கண்டு கொண்டாளோ, அந்த நொடியே சேரனிடம் அவன் மனம் கொண்ட வெறுப்பும், ஒதுக்கமும் பல அடி தூரம் விலகிப் போனது.

மனதின் ஓரத்தில் சுந்தரி குடும்பத்திற்கேற்பட்ட அநியாயம் அவளைக் குடைந்து கொண்டிருக்கிறது தான். ஆனால் அதற்குச் சேரன்தான் காரணகர்த்தா என

உருவகம் செய்திருந்த மனது இந்த ஒரு இரவில் சற்றுத் தளர்ந்திருந்தது.

நடந்தது என்ன என்பதைச் சேரனோ, அல்லது அதற்குச் சம்பந்தப்பட்டவர்களோ தெரிவிக்கும்வரை எந்தக் கேள்விக்கும் விடை கிட்டாது என்பது அகல்விழியின் உள் மனதின் யோசனை தெளிவு படுத்தியது.

படுத்திருந்த அகல்விழியை முதலில் பார்த்த சேரன், "இங்க மனுஷனை உயிரோட கொன்னுட்டு எப்படி கும்பகர்ணி மாதிரித் தூங்கிட்டு இருக்கா...!" என மனதிலே மனைவியை வசை பாடியவன் வேகமாக அவளைக் கடந்து செல்ல...

அவன் காலடியோசை அகல்விழியைக் கண் விழிக்கச் செய்தது..

வேகமாக ஷெண்பாவை விட்டு எழுந்தவள், சேரனின் பின்னே ஓடினாள்.

ஆனால் தனக்குப் பின்னால் ஒருத்தி வருவதைச் சட்டை செய்யாமல் மேலே சென்றவன், தன் அறைக்குள் சென்று, அகல்விழியின் முகத்திற்கு நேராகக் கதவை இழுத்து மூடினான்...

அறைக்குள் நேற்றைய இரவின் மிச்சங்கள் அவனது கோபத்தை மேலும் அதிகப்படுத்தியதே ஒழிய, சற்றும் தணிக்கவில்லை.

"ச்சே..." என்ற வெறுப்புடன் மெத்தை விரிப்பை இழுத்து வீச, பொருட்களைக் கீழே போட்டு உடைத்தான்...



அறையில் பொருட்கள் உருளும் சத்தம் அகல் விழியை அச்சுறுத்தியது..

உள்ளிருந்து வந்த சத்தம் அவளைக் கலவரப் படுத்த, அமைதியாகப் பக்கத்தறைக்குச் சென்று முடங்கிக் கொண்டாள்...

ஏற்கெனவே அன்று இரவு முழுவதும் தான் நடந்து கொண்ட முறைக்கு வெட்கி வேதனைப்பட்டுக் கொண் டிருந்தவள், சேரனின் கோபம் சற்றும் தளராமல் இருந்தது அவளுக்கு மேலும் மேலும் தன் நடவடிக்கையின் மீதுதான் கோபம் வந்தது...

என்ன செய்தேனும் சேரன் தன் மீது கொண்ட கோபத்தைக் குறைக்க வேண்டுமென மனதில் பெரிய வேகம் எழுந்தது...

ஆனால் அகல்விழி யோசிக்க மறுத்தது... இதுவரை அவள் உலகில் வெறுக்கும் மனிதர்களில் முதலிடத் திலிருந்த சேரன், அவள் மீது கொண்ட கோபத்தைக் குறைக்கத் தான் ஏன் போராட வேண்டுமென அவள் சற்றும் சிந்திக்க விழையவில்லை...

ஒருவேளை சிந்தித்திருந்தால் அவனின் மீது கொண்ட காதலை அவள் உணர்ந்திருப்பாள். ஆனால் காலம் இன்னமும் அவள் காதலை உணரும் வாய்ப்பு களை அள்ளித் தரும்... அந்த வாய்ப்பினை அவள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறாள் என்பதில்தான் அகல்விழியின் சாமார்த்தியம் அடங்கி யிருக்கிறது.

அறைக்குள் சென்ற வேகத்தில் தயாராகி வந்த சேரன், படபடவெனப் படியிலிறங்கிக் கீழே செல்ல...

அவனுக்கு உணவு தயாரிக்கும் வேலையிலிருந்த ஷெண்பா அவன் இந்த வேகத்தில் கிளம்பி வருவான் எனச் சற்றும் எதிர்பார்க்கவில்லை...

"தம்பி... டிபன் சாப்பிட்டுப் போங்க... ரெண்டு நிமிஷத்திலே தயாராகிடும்..." எனப் பின்னாலே வந்த ஷெண்பாவையும் அவன் கண்டுகொள்ளவில்லை...

அவன் அறையை விட்டு வெளியே வரும் சத்தம் கேட்டு வெளியே வந்த அகல்விழி, அவன் அவசரமாகச் செல்வதை ஒரு மிரட்சியுடனே பார்த்திருந்தாள்...

அவளின் உள்மனம், "இப்போ நான் என்ன செஞ்சுட்டேன்னு இந்த மனுஷன் இப்படி கோவிச்சுக் கிறார்..." எனக் குழந்தையாக யோசித்து, அவனின் கோபத்துக்கு இவள் கோபம் கொண்டாள்.

கோபத்துடன் போன சேரன், அவனது மீன் வளர்ப்பு ஃபேக்டரியில் நடக்கவிருந்த எம்ப்ளாயீ மீட்டிங்கில் தன் சொந்த வாழ்க்கையின் விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்தாமல், பணியாளர்களின் தேவையைப் புரிந்து நல்லதைச் செய்வதாகப் பேசி, நல்லபடியாக முடித்துக் கொண்டு, ஜீவாவுடன் வீட்டுக்குப் புறப்பட்டான்.

அவன் வீட்டுக்குள் சென்று ஹால் சோபாவில் அமர, அவன் பின்னாலே வந்த ஜீவா அவன் எதிரில் நின்று கொண்டான்...



"ப்ளீஸ் உக்காரு, ஜீவா..." என்றவன் குரலில் அத்தனை வெறுமை...

அந்தக் குரலில் இருந்த வெறுமை ஜீவாவை மறுப்புச் சொல்லாமல்... அவன் எதிரில் அமர வைக்க, இருவரும் அமைதியாக ஒரு வார்த்தையின்றிப் பொழுதைக் கழித்தனர்.

பின் தோட்டத்தில் வேலையிலிருந்த ஷெண்பாவிற்கு வேலு வந்து தகவல் சொன்னதும்தான் அவர் உள்ளே வந்தார்.

வந்தவர், உடல் சோர்ந்து, தலையைப் பின்னால் சாய்த்து அமர்ந்தவாறு படுத்திருந்த சேரனைக் கண்டதும் மனம் வேதனையுற்றது.

"ம்ச்... ரெண்டு நாளா சரியாக் கூடச் சாப்பிடலையே... இப்படி சோர்ந்து கிடக்குது..." என மனதிற்குள் நினைத்தவர், உடனே உள்ளே சென்று ஐந்து நிமிடத்தில் இருவருக்கும் பழச்சாறை எடுத்து வந்து முன்னால் வைத்தார்.

டம்ளர் வைக்கும் சத்தத்தில் கண் விழித்துப் பார்த்த சேரன் வேண்டாமென மறுப்புச் சொல்லும் முன்னர், "உங்களுக்காகக் குடிக்க வேண்டாம் தம்பி... எனக்காகக் கொஞ்சம் குடிப்பா...!" குரலில் கெஞ்சலுடன் கேட்க, அதிலிருந்து அவனால் தப்பிக்க முடியவில்லை.

மனதிலிருந்த வலி, பழச்சாறைக் குடிக்கவிடவில்லை தான். ஆனால் அடுத்து நடக்க வேண்டிய காரியத்தை அரங்கேற்ற மனதிற்குத் தெம்பு வேண்டுமே...!

அமைதியாக ஜூஸைக் குடித்து முடிக்க, அவனைத் தொடர்ந்து ஜீவாவும் குடித்து முடிக்கும் வேளை, அவனது ஆடிட்டரும், வக்கீலும் ஒன்றாக வீட்டினுள் நுழைந்தனர்...

"வாங்க சார்... உட்காருங்க..." என வரவேற்று அமர வைத்து, ஷெண்பாவைப் பார்த்து, "ரெண்டு பேருக்கும் ஜூஸ் கொடுத்து விடச் சொல்லுங்க, ஷெண்பா... அப்படியே மேல இருந்து அவளை வரச் சொல்லுங்க..." என்றதும், ஷெண்பா இரண்டாவதாகச் சொன்ன வேலையை முதலில் செய்து முடித்தார்...

சேரன் தன்னை அழைத்து விட்டிருக்கிறான் என்பதை ஷெண்பாவின் வாய்மொழியாகக் கேட்ட அகல்விழிக்கு உடனடியாக உதட்டில் ஒரு கீற்றுப் புன்னகை உதயமானாலும், அடுத்த நொடி அது மறைந்து முகத்தில் ஒரு கலவரம் குடிகொண்டது...

மனதில், "எதற்காகத் தன்னை அழைத்திருப் பான்....?" என்ற கேள்வி குழப்பத்தை விளைவிக்க, யோசனையுடனே, ஷெண்பாவின் பின்னால் வால் பிடித்துக் கொண்டு படியிறங்கினாள்...

அவள் வருவதற்காகவே காத்திருந்தவன் போல் பேச்சை ஆரம்பித்தான்...

"ஆடிட்டர் சார்... என்னோட சொத்துக்கள் எல்லாத் தையும் பத்தின டீடெய்ல்ஸ் உங்களுக்குத் தெரியு மில்லையா...?" அவன் ஆடிட்டரை நோக்கிக் கேட்ட கேள்வியில், அகல்விழிக்கு வயிற்றுக்குள் ஏதோ பிரளயம் உருவாவது போல் பயம் உருண்டது.



"எஸ் மிஸ்டர் சேரன்... உங்க அப்பா காலத் திலிருந்து, இப்போ நீங்க சம்பாதிச்ச சொத்து பத்தின எல்லா டீடெய்ல்சும் என்கிட்ட இருக்கு..." என்பதை வெளியே சொன்னார். 'இப்போ எதுக்கு இது தேவை யில்லாத கேள்வி...' என மனதில் நினைத்துக் கொண் டார்...

அவர் சொன்னதற்கு மண்டையை உருட்டி ஆமோதித்தவன் போல், "வக்கீல் சார்.... என்னோட சொத் துக்கள்... அதாவது இந்த வீடு, என் பேரில் இருக்கிற நிலம், ரியல் எஸ்டேட், ஷாப்பிங் மால், ஃபினான்சியல் கம்பெனி, அப்புறம் கடைசியா என்னோட ஸீ ஃபுட் ஃபேக்டரி... இது எல்லாத்துலயும் என்னோட மனைவி யான அகல்விழி இளஞ்சேரன் பேருக்குச் சரி சமமா எழுதிடுங்க...

"அதுக்கு பக்காவா டாக்குமெண்ட்ஸ் ரெடி பண்ணிடுங்க... ஆடிட்டர் சார்! அவருக்கு ஹெல்ப் பண் ணுங்க...!" என்றதும், அகல்விழியைத் தவிர அனை வருமே மகிழ்ச்சியில் புன்னகை புரிந்தனர்...

ஜீவா கூட மனதில், 'அடச்சே... இதுக்கா நம்ம மனசைப் போட்டுக் குழப்பிக்கிட்டு இருந்தோம்...' என மானசீகமாகப் பின்னந்தலையில் அடித்துக் கொண்டான்...

ஷெண்பா கூட எதற்கு வக்கீலும், ஆடிட்டரும் எனக் குழம்பிக் கொண்டிருந்தவர், சேரன் சொன்ன செய்தியில் அக மகிழ்ந்து போனார்.

அவர் ஏற்கெனவே அகல்விழியை அந்த வீட்டின் மகாராணியாகப் பாவித்திருக்க, இப்போது அதுவே எழுத்து வடிவில் உறுதி பெற்று, இனி அந்த வீட்டிற்கும், அவளுக்கும் உள்ள பந்தம் பிரிக்க முடியாதவை என மனதில் புரிந்து போனார்...

வந்திருந்த ஆடிட்டருக்கும், வக்கீலுக்கும் கூட அந்த வீட்டின் புது முதலாளியின் மீது சட்டென ஒரு மரியாதை பூத்தது.

அனைவரும் அந்த மகிழ்ச்சியிலிருக்க, அகல்விழி மட்டும் சேரனின் இந்த முடிவில் விக்கித்து நின்று கொண்டிருந்தாள்... தனக்கு இதுவா வேண்டும்? கேவலம் இந்தச் சொத்திற்கும், பணத்திற்கும் ஆசைப்பட்டவளா அவள்...!

கணவனின் இந்தச் செய்கை, மேலும் மேலும் அவள் செய்த காரியத்தின் வீரியத்தை அவளுக்கு உணர்த்தியது.

தன்னைப் பணத்திற்கு அலைபவள் என நினைத்துவிட்ட கணவனின் கூற்றை மாற்றியே ஆக வேண்டுமென உள்ளுக்குள் ஆவேசமே எழுந்தது. ஆனால் சுற்றியிருப்போரின் உணர்வுகளை எந்த வகையிலும் கண்டுகொள்ளாமல் சேரன் அலுங்காமல் குலுங்காமல் இன்னொரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டான்.

“அப்புறம் வக்கீல் சார்... கூடவே இன்னொரு பத்திரம் ரெடி பண்ணிடுங்க... சேரனாகிய நான்... என் மனைவியாகிய அகல்விழிக்கு, எந்த வற்புறுத்தலுமின்றி என் முழு மனதோடு விவாகரத்து தருகிறேன்னு இன்னொரு டாக்குமெண்ட் ரெடி பண்ணிடுங்க...” எனவும்... அங்கிருந்தவர்களில், அகல்விழியைத் தவிர அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தனர்...



## 22

சேரனின் இந்த விவாகரத்துச் செய்தியில் மற்றவர்களுக்குத்தான் அதிர்ச்சியே தவிர, அகல்விழிக்குப் பெரிதும் அதிர்ச்சி வெளிப்படவில்லை... சொல்லப் போனால் அவள் முதலில் இதைத்தான் எதிர்பார்த்திருந்தாள்...

எதிர்பார்த்தது தான் என்றாலும், சேரனின் முடிவை ஏனோ அவள் உள்மனதால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... கைகள் இரண்டையும், மாடிப்படியில் வைத்திருந்தவள், வேதனையில் கைகளை இறுக்கினாள்.

அவளின் இறுக்கத்திற்குக் கையில் மாம்பழம் இருந்திருந்தால் இன்ஸ்டன்ட் ஜூஸ் போட்டுக் குடித்திருக்கக் கூடும்...

அந்த அளவிற்குக் கோபமும், ஆத்திரமும் சேரனின் மீது வைத்திருந்தாள்.

உண்மையைச் சொல்ல வேண்டுமெனில் இருவருக்கும் கல்யாணமான நாளிலிருந்து அவனை விட்டுப் பிரிவதில், பிடிவாதமாக இருந்தவள், நேற்று அவள் அன்னையின் பேச்சும், அதைத் தொடர்ந்து இரவில்

சேரனின் வேதனையான முகமும் அவளை அவன்பால் ஈர்த்திருந்தது.

அந்த ஈர்ப்பை அவள் உணரும் முன்னரே அவளுக்கு வேதனைக்கு மேல் வேதனையை அள்ளித் தந்து கொண்டிருக்கும் அவனை மண்டையில் நறுக்கென ஒரு கொட்டு வைக்க அவள் கைகள் பரபரத்தன.

ஒன்றும் பேசாமல் அவனை முறைத்துக் கொண்டு நின்றாள்...

ஆனால் இந்த விஷயத்தில் பெரிதும் பாதித்தது ஷெண்பாவும், ஜீவாவும்தான்....

அவர்கள் இருவருமே சேரனின் நலம் விரும்பிகள்.

அவனுக்கு ஒன்றெனில் பதறும் இருவராலும் இதனைச் சகித்துக் கொள்ள முடியவில்லை...

அதே சமயம் தங்களின் வரம்பு மீறிச் சேரனிடம் அவனது சொந்த வாழ்க்கையில் தலையிடுவதில் அவர்கள் இருவருக்குமே விருப்பமில்லை...

ஆனால் இதைச் சகித்துக் கொண்டு, கட்டியவள் இருந்து விடுவாளா...?

சந்தர்ப்பம் கிடைக்க வேண்டி, மௌனம் காத்திருந்தவள் நின்ற நிலையிலே அமைதியைக் கடைப்பிடித்தாள்....

வக்கீலும், ஆடிட்டரும் சற்றுத் திகைத்த பார்வையில் நிலைத்திருந்தவர்கள், சேரன் மீண்டும் பேசத் துவங்கவும்... பின் சுதாரித்து அவன் பேச்சைக் கவனித்தனர்.



"வக்கீல் சார்... நீங்க உடனே நான் சொன்ன வேலையை ஆரம்பிங்க... எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் எனக்கு இந்த வேலை முடியணும்...!" என மனதின் வேதனையைக் கம்பீரம் என்ற பொய் முகமூடி பூசிக் கொண்டு, மறைக்கப் பார்த்தான்.

ஆனால் அவன் மறைக்க நினைத்த வேதனையை யாவரும் அறிய மாட்டார்களா என்ன...!

தெரிய வேண்டியவர்கள் அனைவருக்கும் அவனது வேதனை புரிந்துதானிருந்தது.

வக்கீல், "நீங்க முன்ன சொன்ன வேலையை உடனே முடிச்சுட்றேன், சேரன்...! ஆனால் ரெண்டாவதா சொன்ன விஷயத்தைச் செய்யும் முன்னாடி கொஞ்சம் யோசிங்க... உங்களுக்கு நான் சொல்லணும்னு அவசியமில்ல... இருந்தாலும் மனசில பட்டதைச் சொல்றேன்...

"வாழ்க்கையைப் பொறுத்தவரை எதையும் எடுத்தோம் கவிழ்த்தோம்னு செய்ய முடியாது.... அப்படிச் செஞ்சா வாழ்க்கை வாழ்க்கையா இருக்காது... சரி. எனக்குக் கோர்ட்ல கொஞ்சம் வேலையிருக்கு... நான் கிளம்புறேன்..." என எழுந்து கொள்ள, அவரின் பின்னாடியே ஆடிட்டரும் விடைபெற்றுக் கிளம்பினார்.

அவர்கள் சென்றதும் ஜீவாவும் ஒரு மௌனத் தலையசைப்புடன் கிளம்பிப் போக...

ஷெண்பா மனதில் ஆண்டவனிடம் இருவரின் நல்வாழ்விற்காக வேண்டிக் கொண்டு தன் புகலிடமான கிச்சனுக்குள் சென்று முடங்கினார்.

அனைவரும் சென்ற பின்னர் அந்த ஹாலே வெறிச்சோடிக் கிடந்தது...

அந்த இடத்தின் வெறுமை, சேரனின் மனதை விட அதிகமில்லை என்றுணர்ந்து அவன் சோபாவில் கண் மூடித் தலை சாய்த்துக் கொள்ள, அகல்விழியின் கோபம் பீறிக் கொண்டு வெளியேறியது....

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்...

இவனுக்கு வேண்டுமெனில், தன்னைக் கட்டாயத் திருமணம் செய்து கொள்வதும், அவனது தேவை தீர்ந்ததும் தன்னை அத்துவிட நினைப்பதும்... அவனுக்கு அவள் என்ன பொம்மையா...!

அவனுக்கு இவளிடமிருந்து தேவைப்பட்டது காதல் என்பது... அந்த மரமண்டைக்குப் புரியவில்லை.....

வரிந்து கட்டிக் கொண்டு சேரனிடம் சண்டைக்குத் தயாரானாள்.

"நீங்க உங்க மனசுல என்ன நினைச்சுண்டு இருக்கீங்க...?" - கோபமாக வெளிவந்தது அவளின் குரல்.

அவள் பேச்சில் கண் விழித்தவன்... எதிரில் கண்களை விரித்துக் கொண்டு, மூக்கு விடைக்க, கன்னம்



சிவக்க, உதடுகள் துடிக்கக் கோபமாக நின்று கொண் டிருந்த அகல்விழி அந்த நிலையிலும் அவனை ஈர்க்கத் தான் செய்தாள்.

அதுவும் அவள் நின்றிருந்த தோரணை அவனுக்குச் சிரிப்பை வரவழைக்க... பிரியத் துடித்த உதடுகளைப் பிடிவாதமாக இறுக்கிப் பிடித்து, அவனும் அவளைச் சளைக்காமல் முறைக்க முயன்று அதில் வெற்றியும் கண்டான்.

அவன் பதில் சொல்லாமல் முறைத்துக் கொண் டிருப்பதைக் கண்டு அந்தச் சண்டிராணிக்கு மேலும் கோபம் சிலிர்த்தெழ, "என்ன முறைக்கிறேள்... நீங்க முறைச்சா, அப்படியே பயந்துண்டு தூணுக்குப் பின்னாடி ஒதுங்கிப் போயிடுவேனாக்கும்... அப்படியெல்லாம் போக மாட்டேன்!" என்க, அவன் முறைப்பதை நிறுத்தவில்லை.

"என்ன வாயைத் திறந்து பேச மாட்டேளா... செய்யுறதையும் செஞ்சுனுட்டு இப்போ வந்து குத்துதே குடையுதேனா...!"

அகல் அவனைக் கடுப்பேற்றினாள்.

"உனக்கென்னடி இப்போ வேணும்...?"

"நேக்கு என்ன வேணுமா....! கேட்பீங்க கேட்பீங்க... செய்றதையெல்லாம் செஞ்சுட்டு நீங்க பேசுவேள்... ஐயா எதுவுமே செய்யலை பாருங்கோ... பால் குடிக்கிற பச்சபிள்ளை இவரு...!" பொங்கிக் கொண்டிருந்தாள் அகல்விழி.

சேரன் முன்னைப் போலிருந்தால் அகல்விழியின் இந்தப் பேச்சை ரசித்துக் கொண்டிருப்பான். ஆனால் இன்று ஏனோ அந்த நிமிடம் எரிச்சலைத்தான் வர வழைத்தது...

இன்னமும் ஹாலில் அமர்ந்து அவளிடம் வழக் கடித்துக் கொண்டிருப்பதில் விருப்பமில்லாமல் ஒரு சலிப்புடன் மேலே அவன் அறைக்குச் செல்ல விழைந்தான்.

அவன் பின்னாலே வால் பிடித்துக் கொண்டு சென்ற அகல்விழி, "இதென்னா.... பாதிப் பேச்சுல எழுந்து போறது... இதுதான் உங்க மேனர்ஸாக்கும்...."

அந்த நேரத்தில் அவனுக்கு மரியாதை செய்வதில் பாடம் நடத்திக் கொண்டிருந்தாள்.

அவளின் பேச்சு எதையும் காதில் விழாதவன் போலச் சென்றவன், அவன் அறைக்குள் சென்று கதவையடைக்க விழைய, அகல்விழி அவனை முந்திக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள்...

அவளுக்கு இன்று இரண்டில் ஒன்று தெரிந்தாக வேண்டும்....

அதனால் எந்தக் கவலையுமின்றி, தயக்கமுமின்றி அறைக்குள் சென்றாள்...

சேரனுக்குத்தான் எரிச்சலாக வந்தது...

கதவை அடைத்துக் கொண்டு அவள் புறம் திரும்பியவன், "ஹே... இப்போ உனக்கு என்னதான்டி



வேணும்...? எதுக்கு என் உயிரை வாங்குற...! இது வரைக்கும் என் உயிரை எடுத்தது பத்தாதா...?" கோப மாக இரைந்தான்....

"நானா உங்க உயிரை எடுக்குறேன்.... சும்மா நான் உண்டு என் படிப்புண்டுன்னு இருந்தேன்.. காதல் கத்தரிக்கான்னு பினாத்திண்டு என் படிப்பை நிறுத்தி, கட்டாயக் கல்யாணம் செஞ்சுண்டது போதாதுன்னு, இப்போ ஒரே மாசத்துல நேக்கு விவாகரத்து கொடுத்து. என் வாழ்க்கையைக் கெடுக்கலாம்னு பாக்குறேளே....

"உங்களுக்கெல்லாம் மனச்சாட்சினு ஒண்ணு இருக்கா! இல்லை, அதையும் பணத்துக்காக யாருக்கானும் விலை பேசி வித்துட்டேளா...?"

"என்னடி ஓவராப் பேசுறே... ஆமா, அன்னிக்கி எனக்குப் பிடிச்சுது. உன்னைக் கல்யாணம் செஞ்சுக் கிட்டேன்... இப்போ உன்னைக் கண்டாலே எனக்கு வெறுப்புதான் வருது... நேத்து ஒரு ராத்திரி நீ செஞ்சதே எனக்கு ஆயுளுக்கும் பெரிய தண்டனை... உன்னை உயிரா நினைச்சுக் காதலிச்சதுக்கு எத்தனை பெரிய நல்ல பேர் எனக்குக் கொடுத்துட்ட...!

"அந்த வேதனை ஒண்ணு போதும்டி.. ஒண்ணு போதும்... இனியும் அந்த வேதனையை அனுபவிக்க நான் தயாரில்ல.. அதுதான் நீ ரொம்ப நாளா கேட்டுக் கிட்டு இருக்கிறதைக் கொடுக்கப் போறேன்..." எனச் சேரன் வாதிட....

அகல்விழிக்குக் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

கண்ணீருடன் பேசினாள்...

"சும்மா நான் நேத்து நடந்துக்கிட்டதையே பேசுறேளே... நான் எதுக்காக அப்படி செஞ்சன்னு கொஞ்சமாச்சும் யோசிச்சுப் பார்த்தேளா...?" அவளது வாதத்தை முன்னே வைத்தாள்...

"என்னடி பெரிய காரணம்.. அது உயிர் போற காரியமாவே இருந்துட்டுப் போகுது... அதுக்குன்னு... நீ இவ்வளவு கேவலமான விஷயத்தைச் செய்வியா....?"

"நேக்கு உயிர் போனா பரவாயில்ல... ஆனா என் தோப்பனாருக்கு உயிர் போனா, என்னால நிச்சயம் தாங்க முடியாது...!" என்ற கேவலுடன் கட்டிலில் அமர்ந்து கண்ணீர் வடித்தாள்.

அவள் சொன்னதின் சாராம்சம் சேரனின் புருவங்களை முடிச்சிட, "என்ன சொல்ற... நீ எப்போ அவங்களைப் பார்த்த...?" என்க...

"பாத்தேன். நேத்துதான் அவாளைப் பார்த்தேன். அவங்களை விட்டு நான் ஒரு நாள் கூட இருந்ததில்ல... ஆனா முழுசா ஒரு மாசம் அவங்க இல்லாம நான் இருந்தேன்.. நேத்துக் காலையில தான் ஸ்ரீ நேக்குப் போன் பண்ணினா... அவள் சொல்லித்தான் நேக்கு அப்பாவோட நிலைமை தெரியும்.

"அப்பாக்கு இன்னொரு மேஜர் அட்டாக்காம்.... அங்கே அவர் உயிருக்குப் போராடிண்டு இருக்கார்... உடனே ஆபரேஷன் செய்யலைனா அவர் உயிர்



பிழைக்கறது கஷ்டம்னா... அதான் அவாளைப் பார்க்க இங்கிருந்து ஓடிப் போனேன்." - நேற்றைய சம்பவத்தைச் சொல்ல...

"என்னது....? நீ அப்படிப் போகணும்னு என்ன அவசியம்... என்கிட்ட சொல்லியிருந்தா நான் கூப்பிட்டுப் போயிருப்பேனேடி..." அப்போதும் கோபம்தான் வந்தது அவனுக்கு....

"ஆமா.... கிழிப்பேள்...." என்றதும்,

சேரன் மனதில், 'இருடி இரு.... இந்தப் பேச்சுக்கு ஒரு நாள் உன் வாயைக் கிழிக்கிறேன்...' நினைத்துக் கொண்டு மேலும் அவள் பேசக் காத்திருந்தான்....

"நான் கேட்டிருந்தா கூட்டிட்டுப் போய்த்தான் மறு வேலை பார்த்திருப்பேள்...!" எனச் சலித்துக் கொண் டிருந்தவளை, அவனால் முறைக்க மட்டும்தான் முடிந்தது.

அவளே மேலும் தொடர்ந்தாள்.

"அங்க போனா... அம்மா என்னவோ நான்தான் உங்களை வலிய வலியத் தேடி வந்து உங்களை மயக்கிக் கல்யாணம் செஞ்சுண்ட மாதிரிப் பேசுனா... நோக்கு அப்படியே அந்த இடத்தில் செத்துடலாம் போல இருந்தது, தெரியுமா...? அங்க அப்பாவைப் பார்க்கவே அம்மா விடல....

"ஸ்ரீ என் கையைப் பிடிச்சுண்டு எப்படியாவது அப்பாவைக் காப்பாத்துக்கானு அழறா...! இதையெல்லாம்

பார்த்துண்டு என்னால் எப்படிச் சும்மா இருக்க முடியும்...?" அவனிடமே நியாயம் கேட்டாள்....

"அதுக்காக.... அதுக்காக மனசுல ஒண்ணுமே இல்லாம என்னோட.... அதுக்குப் பேர் என்னனு தெரியுமா...?" எவ்வளவோ முயன்றும் அவனைக் கட்டுப் படுத்த முடியாமல் சேரன் வார்த்தையை விட்டு விட்டான்....

"ஹய்யோ...! பெருமாளே...!" எனக் காதையடைத்துக் கொண்ட அகல்விழி கண்களில் கண்ணீர் நிற்காமல் பொழிந்தது...

அவள் கண்ணீர் வேகத்தில் தான் பேசியது தவ றென்று புரிந்தாலும், இது அவள் செய்ததுதானே... அவளுக்கே அந்தத் தப்பின் வீரியம் புரியட்டும் என்று பேசாமலிருந்தான்.

அவளைச் சமாதானப்படுத்த விழையவில்லை.

கண்ணீரைக் கட்டுப்படுத்தி அவனிடம் தன் தரப்பு உணர்வுகளைச் சொல்ல எண்ணி, "ஏன்... என் மனசை இப்படி நோகடிக்கிறேள்.... நேக்கு வேற வழி தெரியல.... எப்படியாவது அப்பாவைக் காப்பாத்தணும்னு என் மனசு துடிச்சது... அது மட்டுமில்லாம.... உங்களுக்கு... என்கிட்ட... அதுதான் வேணும்னு நினைச்சுத்தான், என் அப்போவோட உயிருக்கு என்னை.... விலை... கொடுக்க லாம்..."

அவள் முடிக்கக் கூட இல்லை.... 'பளார்...' என்ற சத்ததுடன் அகல்விழி அக்கட்டிலில் சுருண்டாள்.



விழுந்தவளை நோக்கி, "இன்னொரு அடி விழுற துக்குள்ள இங்கிருந்து போய்டு... இல்ல, உன்னைக் கொலை செஞ்சாலும் செஞ்சுடுவேன்..." சேரனின் குரலில் அத்தனை ஒரு ஆத்திரம்....

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் இவள் மனதில்.... நேற்று நாம் நினைத்தது போலல்லவா நடந்து போனது.... அவளுக்குத் தன் மேல் காதலில்லை என்பதைப் புரிந்திருந்தவன், இன்று அதை அவள் வாய் மொழியாகவே கேட்டதும், அது மட்டுமில்லாமல் தன் மேல் அவள் கொண்ட உயர்ந்த எண்ணத்தில் அவன் பூரித்துத்தான் போனான்....

"அடச்சே.... இவ்வளவு கேவலமானவன்னா என்னை நினைச்சா...!" என அருகிலிருந்த மேசையைக் கோபத்தில் குத்தி, அவளின் மீதான கோபத்தை அதில் தீர்க்க முயன்றான்....

கன்னத்தைப் பிடித்துக் கொண்டு அவனை மலங்க மலங்கப் பார்த்துக் கொண்டிருந்தவளின் கையைப் பிடித்து இழுத்துச் சென்று அறையின் வெளியே தள்ளி விட்டுக் கதவை ஓங்கி அடித்துச் சாற்றினான்.

அறைக்கு வெளியே ஒரு கையைக் கன்னத்தில் வைத்துக் கொண்டு திகைத்த நிலையிலேயே மூடிய கதவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள், அகல்விழி..

அதன் பின் முழுதாய் இரண்டு நாள் முடிந்து போனது.

சேரன் அகல்விழியிடம் பேச முயற்சிக்கவில்லை....

அவளிடம் பேசுவதென்ன, அவளிருக்கும் திசையில் கூடத் திரும்பச் சேரன் நினைக்கவில்லை...

அன்று அவளை அடித்தது கூட, அவள் த்ன் மீது கொண்ட கீழ்த்தரமான எண்ணத்தைச் சகிக்க முடியாமல் தான்....

கூடவே தன்மீது கொண்ட வெறுப்பைக் காட்ட வழி தெரியாமல் அவளைக் காயப்படுத்தி விட்டான்.... அந்தக் காயத்திற்கு அவனே மருந்தென்பது தெரியாமல்...!

ஒரு பெண்ணின் மனதைத் தெரிந்து கொள்ள்ாமல் அவளின் வாழ்க்கையை அழித்தத் தன் மீதிருந்த கோபத்தை வெளிப்படுத்தத் தெரியாமல், யாருடனும் பேசாமல் அமைதி காத்தான்.

தன் அவசர புத்தியால் அகல்விழிக்கும் அவள் குடும்பத்திற்கும் ஏற்பட்ட மன வேதனையை எதைக் கொடுத்து ஈடுகட்ட என்பது புரியாமல் தவித்தான்...

எப்படியேனும் தன் தவறைச் சரி செய்து, அவளின் வாழ்வு சிறக்க வழி செய்ய எண்ணினான்.... ஆனால் மீண்டும் அவளிடம் காதலை யாசிக்க விரும்பவில்லை..

இப்போதும் அவள் மீதிருந்த காதல் இம்மியளவும் குறையவில்லைதான்....

ஆனால், தன் இணையிடமிருந்தும் அது வெளிப் பட்டால்தான் அந்தக் காதலிற்கு ஒரு அர்த்தமுண்டு...



மீண்டும் மீண்டும் தன்னை நேசிக்காதவளிடம் தன் நேசத்தைக் காட்டி, அதன் உயர்வை இழக்க அவன் விரும்பவில்லை...

சேரன் வீட்டிலிருந்த அந்த இரண்டு தடியன் களையும் அனுப்பி வைத்தான்...

அகல்விழிக்கு அந்த வீட்டை விட்டு எப்போது வேண்டுமானாலும் வெளியேற முழு உரிமை கொடுத் திருந்தான்...

இங்கே அகல்விழியோ சேரனின் கோபம் புரிந்து, தனது அறையே கதி என அதை விட்டு வெளியே வரவேயில்லை....

மனதில் தன் தலையெழுத்தை நினைத்து ஆண்டவனிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள்...

எப்படியாவது தன் தந்தையின் உயிர் காக்குமாறு மன்றாடினாள்.

கூடவே, சேரன் தன்னை மன்னிக்க வேண்டுமென்ற வேண்டுதலையும் முழு மனதோடு கடவுள் முன் வைத்தாள்...

இருவரும் ஒருவர் அறியாமல் இன்னொருவரின் நல்லதிற்காக வேண்டினர்.

மறுநாள் மாலை அகல்விழியின் அறையில் புதிய தாய் முளைத்திருந்த லேண்ட் லைன் ஃபோன் ஒலிக்க அதை எடுத்துப் பேசினாள்.

ஸ்ரீதான் அழைத்திருந்தாள்.

"அக்கா... நான் ஸ்ரீக்கா...." உற்சாகமாகப் பேசிய தங்கையின் குரலில் தன் சோகத்தை அப்போதைக்கு அப்புறப்படுத்தினாள்.

"ஸ்ரீ... ஸ்ரீ குட்டி... அப்பா... அப்பா எப்படிடி இருக்கார்... அவருக்கு இப்போ பரவாயில்லையோனோ.. அவர் நன்னாயிட்டாரா....?" ஸ்ரீயின் குரலில் தெரிந்த உற்சாகத்தில் தந்தையின் நலத்தைத் தேடினாள்...

"அக்கா... நீ கற்பூரம்க்கா... ஆமா... நான் அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்... அப்பாக்கு ஆபரேஷன் செய்யப் பணம் கிடைச்சிடுத்துக்கா... இன்னிக்குப் பணம் கட்டியாச்சு... ராத்திரி ஏழு மணிக்கு ஆபரேஷன் பண்ண நேரம் குறிச்சிருக்கா..." ஸ்ரீ சந்தோஷத்துடன் சொல்ல...

"ஹய்யோ பெருமாளே! நோக்கு கோடி நன்றி...!" என வேண்டிக் கொண்ட அகல், ஸ்ரீயிடம், "ஸ்ரீ... எப்படி அவ்வளவு பணம் ரெடி பண்ணினேள்.... எங்காவது கடன் கிடன்..." எனக் கேட்கும் போதே, அகல்விழியின் குரல் நடுங்கியது.

ஒரு குடும்பம் கடன் வாங்கிப் பட்ட துன்பம் பத்தாதா...!

"ச்சே ச்சே! அதெல்லாம் ஒண்ணுமில்லக்கா...! அப்பாவோட பி.எஃப் பணம் கிடைக்க ரொம்ப நாளா அலைஞ்சுண்டு இருந்தாரோ இல்லையோ... அந்தப் பணம் நேத்துதான் சாங்ஷன் ஆகிருக்கு... அதிலிருந்து தான் அப்பாவுக்கு இப்போ ஆபரேஷன் பண்ணப் போறோம்...." ஸ்ரீ முழு விவரத்தைச் சொல்ல....



அகல்விழியின் மனதில் நிம்மதிப் பெருமூச்சு பிறந்தது...

ஆனால் கூடவே மனதில் சந்தேகமும் எழுந்தது...

"அப்பா கிட்டத்தட்ட ரெண்டு வருஷமா அந்தப் பணத்துக்கு அலைஞ்சுண்டு இருக்கார்... அப்போ எல்லாம் கிடைக்காத பணம் இப்போ எப்படி..." அவள் மனதில் எண்ணிக் கொண்டிருந்த வேளை இந்தப் புறம் ஸ்ரீ அக்காவை ஏலம் போட்டுக் கொண்டிருந்தாள்...

"அக்காஆஆஆ...!" அவள் போட்ட சத்தத்தில் நினைவுலகிலிருந்து மீண்டு வந்தவள்,

"ஸ்ரீ... அப்பாவைப் பத்திரமாப் பாத்துக்கோடி... அப்பா கூடவே நீ இரு...! அம்மாவுக்கும் தைரியம் சொல்லு. என்ன..." எனத் தங்கைக்குப் புத்திமதி சொல்ல...

"என்னக்கா நீ... இதெல்லாம் என்னாண்ட சொல்லிண்டு இருக்காய்...! அப்போ நீ இன்னிக்கு ஹாஸ்பிடல் வர மாட்டியா...?" ஸ்ரீ கேட்க...

முட்டிக் கொண்டு வந்த கண்ணீரை அடக்கி, "இல்லை ஸ்ரீ.... என்னால வர முடியாது. நீ அப்பாவைக் கிட்ட இருந்து கவனிச்சுக்கோ... அடிக்கடி எனக்குப் போன் பண்ணி அங்க இருக்கற நிலைமையைச் சொல்லு!" என்றதுடன் போன் இணைப்பைத் துண்டித்துக் கட்டிலில் சரிந்தாள்...

அவளுக்கு இப்போதே தன் தந்தையைக் காண வேண்டுமென ஆர்வம் எழுந்தாலும், சேரனின் சொல்லை

மீறி ஒருமுறை பட்ட துன்பம் போதும் என நினைத்த வளுக்குக் கூடவே அவள் அன்னையின் வசை காதில் ஒலித்தது.

ஏற்கெனவே தன்னைப் பழி சொல்லிக் கொண் டிருக்கும் நளினி, சேரன் ;ன்னை ஒதுக்கி வைத்தது தெரிந்தால் அதற்கும் தான்தான் காரணமென்பார் என நினைத்து, அங்கே செல்லப் பயந்து கொண்டு ஒதுங்கினாள்.

ஆனால் ஆண்டவனிடம் தன் தந்தை நல்லபடி யாகப் பிழைத்து வர வேண்டுமென வேண்டுதலை வைக்க, அந்த வீட்டில் புதிதாய் முளைத்திருந்த பூஜை யறைக்கு ஓடினாள்...

இது சேரனின் ஏற்பாடுதான்... மனைவியின் விருப்பமறிந்து அவன் முன்னர் ஒரு நாள் ஏற்பாடு செய்தது...

எப்போதும் பூட்டியிருக்கும் அந்தப் பூஜையறையில் பெரியதாய் ஒரு கிருஷ்ணர் சிலையை வைத்திருந்தான்.

தந்தையின் நிலையை ஆண்டவனிடம் முறையிட அங்கே விரைந்தவள், பல மணி நேரம் அங்கேயே தஞ்சமிருந்தாள்.

மாலை தன் அலுவலை முடித்துக் கொண்டு வந்த சேரன் இரவு உணவை முடித்துக் கொண்டு மாடியேறும் வேளை, ஷெண்பா தான் நிறுத்தினார்.

“சொல்லுங்க ஷெண்பா...”



“தம்பி... பாப்பா...!” என இழுக்க...

“அவளுக்கு என்ன...?” கடுப்பாக வந்தது வார்த்தை...

“இல்லை தம்பி... பாப்பா காலையிலிருந்து ஒண் ணும் சாப்பிடல.... பூஜையறையே கதின்னு கிடக்குது... நான் கூப்பிடலாம்னு போனேன்... கண்ணுல தண்ணி வச்சுட்டு, கைகூப்பி ஏதோ ஸ்லோகத்தைச் சொல்லிட்டு அங்கேயே இருக்கு தம்பி... நீங்க வந்து ஒரு வார்த்தை சொல்லி ஏதாவது சாப்பிடச் சொல்லுப்பா...!” ஷெண்பா வருத்தமாகச் சொல்ல....

முதலில் அவனுக்கு, ‘அவள் எப்படிப் போனால் நமக்கென்ன...’ எனத் தோன்றத்தான் செய்தது.

ஆனால் அடுத்த நிமிடமே காதலித்த மனது அவளது நலனை விரும்பியது.

மாடியேறியவன் அப்படியே திரும்பிப் பூஜை யறைக்குச் செல்ல, அங்கே ஷெண்பா சொன்ன அதே நிலையிலே அமர்ந்திருந்தவளைக் கண்டு கோபம் தான் வந்தது...

‘இப்போ எதை வேணும்னு இங்க வந்து சாப் பிடாம கடவுள்கிட்ட முறையிட்டுட்டு இருக்கா... அதான் அவளுக்குத் தேவையானதைத் தரேன்னு சொல்லிட் டேனே...’ அவனுக்கு எரிச்சல் மூண்டது...

“ஹே....” என்றழைக்க... அவளிடம் பதிலில்லை.

"ஹேய்ய்ய்..." அழுத்திச் சற்றுக் குரலுயர்த்தி அழைக்க, கண்ணைத் திறந்து கொண்டு திரும்பினாள்...

அங்கே உர்ரென முகத்தை வைத்துக் கொண்டு நின்றிருந்த சேரனைக் கண்டதும் அவசரமாகக் கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைக்க, அவனுக்கு எரிச்சல் எல்லையில்லாமல் விரிந்தது...

அகல்விழிக்கோ மனதில் எப்போதும் அவன் அழைக்கும், மாமியும், குல்ஃபியும் மறைந்து, தான் 'ஹே' என்றானதில் மிகுந்த வருத்தம்...

ஆனால் அவள் ஏன் அவன் தன்னை அவ்வாறு அழைக்க வேண்டுமென மனம் நாடுகிறது என்பதை எண்ணிப் பார்க்க முற்றிலும் மறந்தே போனாள்.

அவள் தன்னையே மலங்க மலங்க விழிப்பதில் கோபம் கொண்டு,

"என்ன... அப்படிப் பார்த்துட்டு இருக்க... வா. வந்து சாப்பிடு...!" என்றழைக்க,

"இல்லை. நேக்கு வேண்டாம்...!" என்று சொல்லி முடிக்கும்போது, சேரனின் முறைப்பு பீதியைக் கிளப்ப, மௌனமாக எழுந்து சாப்பிட அமர்ந்தாள்.

அவளுக்கு உணவை எடுத்து வைத்து விட்டு ஒதுங்கிய ஷெண்பாவைத் தொடர்ந்து சேரனும் அங்கிருந்து நகர்ந்து செல்ல எத்தனிக்க...

அகல்விழியின் "தேங்க்ஸ்!" தடுத்தது.



## 23

அகல்விழியின் தேங்க்ஸ் ஒரு நிமிடம் சேரனை நிறுத்தினாலும், மறுநிமிடம் தனக்கு அது தேவையில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லி அங்கிருந்து நகர முற்பட, அவன் கை மட்டும் அவனோடு வர மறுத்தது.

அகல்விழிதான் அவன் கையைப் பிடித்து நிறுத்தியிருந்தாள்.

முன்பொருமுறை அகல்விழி இதுபோல் அவனை நிறுத்தியது ஞாபகம் வந்தது மட்டுமில்லாமல், தொடர்ச்சியாக அதன் பின் நடந்த சம்பவங்களும், அவன் நினைவில் வந்து இம்சிக்க, வேகமாக அவளிடமிருந்து கையைப் பிரிக்க எத்தனித்தான்.

அகலின் கண்கள் கண்ணீரை முத்துமணியாகக் கோத்தன.

அந்தக் கண்ணீரில் என்ன கண்டானோ அமைதியாகக் கையை உருவாமல் நின்றான்.

அவன் அமைதி அகலை உள்ளுக்குள் என்னவோ செய்தது.

திருமணமான நாள் தொட்டு, இதையும் அதையும் சொல்லிக் கொண்டு தன் பின்னால் சுற்றிச் சின்னச் சின்னத் தொடுகையில் அவளைக் கோபப்படுத்தி, உதட்டை அழகாகப் பிரித்துச் சிரிக்கும் அந்த இளஞ்சேரனுக்காக மனம் ஏங்கியது.

அந்த நாளில் எல்லாம் மனதில் வெறுப்பையும், அவன் மீதான வன்மத்தையும் வளர்த்துக் கொண்டிருந் தவள்... கடந்த மூன்று நாட்களாகக் கணவனின் பாரா முகம் அவளை வெகுவாகப் பலமிழக்கச் செய்தது....

ஒரு பொருள் கையில் இருக்கும்போது தெரியாத அதன் அருமை, நம் கையை விட்டுப் போகும் போதுதான் புரியும் என்பது அகல்விழியின் விஷயத்தில் நூறுக்கு இருநூறு சதவீதம் உண்மையாகிப் போனது...

அகல் சேரனின் பாராமுகத்திற்காக வருந்தினாள் தான்...

ஆனால் அந்த வருத்தத்திற்குக் காரணப் பெயர் காதலென்று அந்தச் சின்னப் பெண்ணிற்குப் புரிய வில்லை...

அதைப் புரிய வைக்க இனி சேரன்தான் முயற்சிக்க வேண்டுமென்பது அந்த அன்புக் காதலனுக்கும் புரிய வில்லை... இருவருக்குள்ளும் காதல் கடலளவு விரிந்து நின்றாலும் அவர்கள் நடுவிலிருந்த ஒரு மெல்லிய திரை அவர்கள் வாழ்வின் இன்பத்தை நாளுக்கு நாள் தள்ளிப் போட்டது...

சேரனின் கையை வெகு நேரம் பற்றியிருந்த அகல்விழி, சேரனின் கண்ணையே சந்தித்துக் கொண் டிருந்தாள். சேரனுக்கும் அவள் கண்களில் தெரிந்த ஏதோவொன்று அவனை அசைய விடவில்லை.

சில நொடி மௌனத்திற்குப் பின் அகல்விழிதான் ஆரம்பித்தாள்.



“நேக்கு... அப்பாவைப் பார்க்கணும். என்னை அங்க அழைச்சுண்டு போறேளா...?”

சேரனுக்கு அவளின் கோரிக்கை புரிந்தது...

ஆனால் இதற்கு முன்னர் நடந்த சம்பவம் அவனை எளிதில் சம்மதிக்க விடவில்லை... உள்ளுக்குள் அவள் முந்தைய செய்கை ஏற்படுத்திய கோபத்தை இப்போது தீர்த்துக் கொள்ள முயன்றான்.

“ஏன்... வீட்டுப் பின் கேட்டை எகிறிக் குதிச்சுப் போகத் தெரிஞ்ச உனக்கு, இப்போ முன் கேட் வழியாப் போகத் தெரியாதா...?” குத்தலாகக் கேட்க...

அகல்விழியின் கண்கள் குளம் கட்டின.

அங்கே அகல்விழிக்கு உணவு பரிமாறவென நின்றிருந்த ஷெண்பாவிற்கு முதல் முறை சேரனின் மேல் கோபம் வந்தது.

இப்போதான் அகல்விழியின் மனது, மெல்ல மெல்ல அவனின்பால் சாய்கிறது. இப்போது போய் பழை யதைக் கிண்டி அவளைக் குதற வேண்டுமா என்ற ஆற்றாமையில், “என்ன தம்பி இது..?” என ஏதோ சொல்ல வர, சேரன் ஒரு கை காட்டி அவரை நிறுத்தி னான்.

அவருக்கென்ன தெரியப் போகிறது, அகல்விழி செய்த தவறு...!

வெளியே சொல்லக் கூடிய விஷயமா அது...

அவள் ஏற்படுத்திய வலி இன்னமும் ரணம் ஆறாமல் அவன் நெஞ்சை வதைப்பது அவருக்கு எங்கிருந்து தெரியப் போகிறது... ஷெண்பா ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு விட்டு அங்கிருந்து நகர்ந்தார்...

உணவில் கை வைத்திருந்த அகல்விழி, இரண்டு கரங்களாலும், சேரனின் வலது கையைப் பற்றி "ப்ளீஸ்... என்னை அழைச்சுண்டு போங்கோ..." எனக் கண்ணீர்க் கறையோடு கேட்க, அதற்கு மேல் சேரனால் மறுத் திருக்க முடியுமா என்ன...?

இடது கையில் கட்டியிருந்த கைக் கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தான்...

நேரம் பதினொன்றை நெருங்க, இந்த நேரத்தில் எப்படி... என அவன் யோசித்த வேளையில் வெளியே பெரிய இடியுடன் மின்னல் வந்து போனது...

அகல்விழியின் கைகள் இறுக்கமாகச் சேரனைப் பற்றிக் கொண்டு, வாய் வேகமாக அர்ஜுனன் ஸ்லோ கத்தைச் சொல்ல ஆரம்பித்தது....

சேரன் ஆபீசை விட்டு வரும்போதே மழைக்கான அறிகுறிகள் தென்பட்டன.

இப்போது மழை துளியாகத் தொடங்கிப் பெரிதாக ஆரம்பிக்க, மீண்டும் ஒரு பெரிய இடி...

அமர்ந்திருந்த இருக்கையிலிருந்து எழுந்த அகல், சேரனை நெருங்கி நின்று கொள்ள, அவன் அவளை ஆச்சரியமாகப் பார்த்தான்.



"என்ன...?" என்பது போல் அவனைப் பார்க்க,

"வெளிய..... இடி... நேக்கு.... பயமா....." துண்டு துண்டாக வெளிப்பட்டது அவளது வார்த்தை....

சேரன் மனதில், "இது வேறயா... அசல் தயிர் சாதம்...." என நினைத்துக் கொண்டவன், அவள் ஏற்கெனவே அமர்ந்திருந்த இருக்கையின் வெகு அருகில் இன்னொரு சேரை இழுத்துப் போட்டு அமர்ந்து, அவளையும் அருகில் கையைப் பிடித் திழுத்து அமர்த்தி,

"இப்போ பேசாம சாப்பிடு. காலையில் கூட்டிட்டுப் போறேன். இப்போ போனாலும் அவரைப் பார்க்க முடி யாது.... ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சு இப்போ ஐ.சி.யூ.ல இருப்பார்.... காலையில் பத்து மணிக்கு மேல தான் ரூம்க்கு மாத்துவாங்க...." என நிலைமையை எடுத்துச் சொல்ல...

அந்தக் கணத்திலும் சேரனை அவளால் வியக் காமல் இருக்க முடியவில்லை....

தன்னை விட, தன் தந்தையின் நிலையைத் துல்லியமாக அறிந்து வைத்திருக்கிறானே என மனம் கணவனுக்காகச் சபாஷ் போட்டது...

கூடவே அவள் மனதின் மூலையில், "இப்படி அடுத்தவரின் நலனுக்காக யோசிக்கும் சேரன், சுந்தரியின் குடும்பத்தாரை இப்படி நிர்கதியில் விட்டிருக்க வேண்டாம்...!" என்ற எண்ணத்தையும் வெளியிட்டது.

ஏனோ இந்த ஒரு விஷயத்தில் மட்டும் சேரனின் நிலையைத் தெரிந்து கொள்ள முடியாமல் அகல்விழி திணறித்தான் போனாள்...

அவள் சிந்தனையின் பிடியில் இருந்தபோது, மீண்டும் இன்னொரு இடி தாக்க, சேரனின் கைகளை மீண்டும் பற்றிக் கொண்டாள்....

"ஷ்.... ஒண்ணுமில்ல... பேசாம சாப்பிடு..." ஆறுதலையே அதட்டலாகச் சொன்னான்...

அந்த அதட்டலுக்குப் பயந்தோ, இல்லை இடிக்குப் பயந்தோ உணவை வேக வேகமாக அள்ளி வாயில் போட்டுக் கொண்டாள்...

அவள் சாப்பிட்டு முடிக்கும்வரை அவளையே பார்த்து அமர்ந்து கொண்டிருந்தான் சேரன்... அவள் சாப்பிட்டு முடித்துக் கை கழுவ எழுந்திரிக்கும் போது, சேரன் அங்கிருந்து அகன்று தன் அறைக்குச் சென்று விட்டான்.

திரும்ப வந்த அகலுக்கு அவன் சென்றது மனதில் சிறு ஏமாற்றத்தை விதைத்தது... அந்த ஏமாற்றம் என்பது அவள் அறியாத ஒன்று...

சோகம் அப்பிய முகத்துடன் தன் அறைக்குள் முடங்கியவளை விரட்டியது, இன்னொரு பெரிய இடி...

வாய் என்னதான் அர்ஜுனன் ஸ்லோகத்தை உச்சரித்தாலும், அவளுக்குத் தனியே இருக்க வெகுவாகப் பயம் வந்தது.



அவள் வீட்டில் இருந்தபோது, மழை வரும் சமயங்களில் அவளுக்குத் துணை நிற்பது, அவள் அன்னையும், ஸ்ரீயும்தான்... அவள் பெரும்பாலும், தனியே உறங்குவது அரிதிலும் அரிது...

இங்கு வந்து சேரனுக்குப் பயந்து தனியே இருக்கக் கத்துக் கொண்டாலும், திருமணம் முடிந்து பல நாட்களில் பெரும்பாலும் சேரன் அதே அறையில் இருந்தது... அவள் தனிமையின் பயத்தை விரட்டியிருந்தது....

இன்று இந்தப் பேய் மழையும், வெடிச் சத்தம் போல் ஒலித்த இடியும் அவளை அதற்கு மேல் அந்த அறையில் தனியே இருக்க விடவில்லை...

மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, சேரனின் அறையைத் தட்டினாள்...

சேரன் இன்னமும் உறங்காமல்தான் இருந்தான்...

அவன் உறக்கம் தொலைந்து பல நாட்களானதே...!

ஏதேதோ சிந்தனையில் இருந்தவனைக் கலைத்தது, கதவைத் தட்டும் சத்தம்...

யார் இந்த நேரத்தில் என நினைத்தவாறு கதவைத் திறந்த சேரன்... அப்போது அகல்விழியை அங்கே எதிர்பார்க்கவில்லை....

அதுவும் அவள் கையை முன்னே கட்டிக் கொண்டு, தலையைக் குனிந்து உடம்பில் பயத்தைத் தேக்கி நின்றிருப்பது சேரனின் காதலனை மீட்டு வந்தது.

"என்னாச்சு மா...?" என மாமி என அழைக்க வந்த வாயை அடக்கி, அவள் தலையைக் கோத எழுந்த கையை இறுக்கிப் பிடித்து, "என்னாச்சு... என்ன இந்த நேரத்துல...?" குரலில் கடுமையும் வரவழைத்திருந்தான்.

அவளோ சேரன் சொல்லாமல் நிறுத்திய அந்த 'மா..'வை அவன் முழுமையாக்கவில்லையே என்ற ஏக்கத்தில் அவன் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சேரன் மீண்டும், "என்னாச்சுன்னு கேட்குறேனில்ல...." என்றதும்,

"நோக்கு இந்த இடியும் மழையும் ரொம்பப் பயமா இருக்கு.... நா.... நான் உங்க... உங்களோட படுத்துக்கிறேன்...." என்றதும், சேரனுக்கு அவளின் கோரிக்கை இனிக்கவில்லை....

இதுவே முந்தைய சேரனாக இருந்திருந்தால், "வாடி என் ராசாத்தி...." என அவளை அள்ளிக் கொண்டு போய்க் கட்டிலில் கிடத்தியிருப்பான்.

ஆனால் இப்போதுதான் அவன் காதல் மனதை உள்ளுக்குள் புதைத்திருந்தானே...

அவள் கோரிக்கையை மனதில் கொண்டு, "நீ உன் ரூமுக்குப் போ... நான் ஷெண்பாவை உன்னோட வந்து படுக்கச் சொல்றேன்..." என்றதும் அகல்விழிக்கு வந்ததே கோபம்.

ஏனென்றே தெரியாமல் வந்த கோபம், சேரன் மறைத்து நின்றதைக் கூடப் பொருட்படுத்தாமல் அவனைத் தள்ளிக் கொண்டு அறைக்குள் சென்றவள், "நான் இங்கதான் படுப்பேன்... வேணும்னா ஷெண்பாம்மாவை இங்க வந்து ரெண்டு பேருக்கும் நடுவுல படுத்துக்கச் சொல்லுங்கோ..." என்று விட்டு அவனது பெரிய கட்டிலில் ஒரு புறம் படுத்துக் கொண்டு... இருந்த ஒரே போர்வையைத் தலை வரை இழுத்து மூடிக் கொண்டு படுத்தவள், அடுத்த சில நிமிடங்களில் உறங்கியும் விட்டாள்.



சேரனுக்கு அவள் சொன்னது சிரிப்பை வரவழைத்தாலும், "கொழுப்புடி உனக்கு... வாடி வாடின்னு கெஞ்சின போதெல்லாம் என் மனசைச் சாகடிச்சிட்டு... இப்போ வீம்புக்குன்னே செய்றியா..." புலம்பியவாறே அறையின் பெரிய விளக்கை அணைத்து விட்டு அதே கட்டிலின் மறுபுறம் படுத்துக் கொண்டான்...

படுத்ததும் அவனது மூளைக்குள் பல்ப் எரிய, "உப்ஸ்.... இது ரொம்ப டேஞ்சர்..." எனத் தலையைக் குலுக்கிக் கொண்டு, அவனது வார்ட்ரோப்பில் கடைசி அடுக்கில் வைத்திருந்த பெரிய தலையணையில் இரண்டைக் கொண்டு வந்து கட்டிலில் இருவருக்கும் நடுவில் வைத்து விட்டுப் படுத்துக் கொண்டான்.

ஏனோ சேரனுக்கு இன்று படுத்த வுடனே உறக்கம் கண்களைத் தழுவியது.....

கடந்த சில நாட்களாக மனதில் இருந்த அலைப்புறுதல் அனைத்தையும், அகல்விழியின் அருகாமை இந்த நொடி போக்கியது போல் இருந்தது, அவனது நிம்மதியான உறக்கம்...

இருவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது மீண்டும் ஒரு பெரிய இடியில், அகல்விழி அடித்துப் பிடித்து எழுந்தாள்...

மனதில் பயம் கவ்வ, அருகில் சேரன் இருக்கிறானா எனப் பார்த்தாள்...

அவன் இருந்தான்தான். ஆனால் இருவருக்கும் நடுவில் பாம்பன் பாலம் போல் இருந்த தலையணை யைக் கண்டு அவளுக்குள் கோபம் எழுந்தது.

ஏனென்றே தெரியாமல், அந்தத் தலையணையிடம் கோபம் கொண்டவள், அதை எடுத்து அந்த அறையின் மூலைக்கு வீசியடித்தாள்...

திரும்பவும் கட்டிலில் படுத்தவள், சேரன் அவள் புறம் ஒருக்களித்துப் படுத்து வலது கையைப் படுக்கை யில் வைத்திருக்க, அவனை நெருங்கிப் படுத்தவள் அவனது வலக்கையைப் பற்றிக் கொண்டு மீண்டும் நிம்மதியான உறக்கத்தில் ஆழ்ந்தாள்...

அவளுக்கே தெரியவில்லை... எதற்காக நாம் சேரனின் அருகாமையைத் தேடுகிறோமென்று.... ஒரு வேளை அவளுக்குப் பல்பு மெதுவாகத்தான் எரியும் போல...!

அதிகாலையில் கண் விழித்த சேரன்... தன் மூக்கின் அருகே ஏதோ குறுகுறுவென இருப்பதைப் போல் உணர்ந்து கீழே பார்க்க முற்பட, அவனால் முடியவில்லை...



கண்ணை மட்டுமே கீழே பார்க்க, அகல்விழியின் தலை முடிதான் அவன் கண்ணில் பட்டது...

"அடிப் பாவி... கையைத் தொட்டாலே பத்ரகாளி போல ஆடுவா.... இதென்ன இது... இவ தெரிஞ்சுதான் படுத்திருக்காளா... இல்லை, தூக்கக் கலக்கத்துல வந்து படுத்துட்டாளா...." தலையைச் சற்றுப் பின்னால் நகர்த்தி அவள் முகத்தைப் பார்த்தான்....

சீரான மூச்சுக் காற்று அவளின் நிம்மதியான தூக்கத்தைச் சொல்ல, சேரனுக்குத் தான் அவஸ்தையாகிப் போனது. வெளியில் நேற்றுப் பெய்த மழையின் தாக்கம் இன்னமும் இருக்க, அறையில் இருந்த ஏ.சி.யின் குளிர் அவன் உடலைக் குளிர்விக்க மறுத்துச் சூடாக்கியது...

இதற்குப் பயந்துதானே நேற்று அவன் இருவருக்கும் மத்தியில் தலையணையை வைத்தது...

அது எங்கே என எட்டிப் பார்த்தவன், அது கட்டிலுக்குக் கீழே கேட்பாரின்றிக் கிடந்தது...

சேரன் இது போன்ற தருணத்திற்கு எத்தனை எத்தனை நாள் ஏங்கியிருக்கிறான்...! அப்போதெல்லாம் அவனுக்கு இது கிட்டவில்லையே...!

அன்று முழுக்க முழுக்க மனதில் காதலை மட்டுமே நிரப்பி அவளை அணுகிய அந்த நாள் ஞாபக இடுக் கிலிருந்து வெளிப்பட்டது...

அந்த நாளின் முடிவு, சேரனின் இப்போதைய இன்ப நிலையைக் குலைக்க, அவனுள் ஊற்றெடுத்த

மனைவிக்கான வேட்கை மறைந்து ஆற்றாமையும், வெறுமையும் சூழ்ந்து கொள்ளத் தன்னை நெருங்கிப் படுத்திருந்த அகல்விழியை அவள் உறக்கம் கலையாத வாறு நகர்த்திப் படுக்கையை விட்டு எழுந்தான்.

தன் காதல், தான் காதலிக்கப்பட்டவளால் நிராகரிக்கப் பட்டதையும், தன் காதலுக்கு ஏற்பட்ட களங்கமும், சேரனை அவன் மனைவியிடமிருந்து பல அடி தூரம் நகர்த்தி நிறுத்தியது...

அவன் எழுந்து, ஷட்டில் விளையாடி முடித்து வரும் வரை கூட அகல்விழி எழுந்திருக்கவில்லை.

எப்போதும் வந்ததும் ஹாலில் அமர்ந்து பேப்பர் படிக்கும் பழக்கமுள்ள சேரன், அன்று ஷெண்பா கொடுத்த டீ கப்பை வாங்கிக் கொண்டு, கையில் பேப்பருடன் தன் அறைக்குச் சென்றான்...

அவன் அவளிடமிருந்து விலகி இருக்க நினைத் தான்தான். அவள் மேல் மலை போல் கோபம் ஓங்கி நிற்கிறதுதான்....

ஆனால் அதையும் விடத் தான் அவள் மீது வானளவு நேசத்தை வளர்த்திருக்கிறான் அல்லவா...!

அந்த நேசம் செய்த சூழ்ச்சியால், அவன் உள் மனது அவன் சொல் பேச்சுக் கேட்கவில்லை. அவனை அறியாமலே இது போன்ற தருணத்தை ஏற்படுத்தினான்.

அவன் மேலே சென்று சில நிமிடங்களில் கண் விழித்த அகல்விழி, தன் சோர்வைப் போக்கக் கையை



உயர்த்தி எழுந்தபோது, சேரன் அவள் எதிரிலிருந்த சோபாவில் டீ அருந்தியவாறு பேப்பர் படிக்கும் சாக்கில் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அகல்விழி சேரனைப் பார்க்கும் போது பார்வை யைத் தாழ்த்திக் கொண்டவன் கண்களில் திருட்டுத் தனம் தாண்டவமாடியது...

"குட் மார்னிங்...!" என இருக்கும் பல்லை எல்லாம் காட்டிச் சிரித்த அகல்விழிக்குச் சேரனின் திருட்டுத்தனம் புரியவில்லை...

அவளுக்கு இந்தக் காலை மிக மிகப் பிடித் திருந்தது....

காலை உடற்பயிற்சி முடித்து வந்த சேரன், ட்ராக்ஸ், டி-சர்ட் வியர்வையில் நனைந்திருக்க, களைப்பை மீறிய சேரனின் கம்பீரத் தோற்றம் அகல்விழியை வெட்க மில்லாமல் சைட் அடிக்க வைத்தது.

இதற்கு முன்னர் இருந்த அகல்விழியாக இருந் திருந்தால்... சேரனை இப்படிப் பார்ப்பது மகாபாவம் எனக் கன்னத்தில் போட்டிருப்பாள். ஆனால் இன்று அவளை அறியாமலே அவளுள் இருந்த காதல்... கணவனை ரசிக்க வைத்தது.

இதற்கு முன்னர் கூட இது போன்ற தருணங்கள் நிகழ்ந்திருக்கிறதுதான்.... ஆனால் அப்போது சேரனின் மீது காதலில்லை.... கோபம் கோபம் கோபம் மட்டுமே...

இன்று அப்படியா என்ன....!

இருவரும் ஒருவர் அறியாமல் மற்றவரைக் கண் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்க, சேரன் தான் முதலில் சுதாரித்தான்...

"காபி குடிச்சிட்டு சீக்கிரம் கிளம்பு...! ஹாஸ்பிடல் போகலாம்...!" என்று விட்டுக் குளியலறைக்குள் சென்று மறைந்தான்.

அகல்விழிக்கு நேற்றுத் தான் சொன்னதைக் கேட்டுக் கணவன் தன்னை அழைத்துச் செல்லப் போகிறான் என்பதே பெரிய சந்தோஷமாக இருந்தது.

சீக்கிரமாகப் பக்கத்து அறைக்குச் சென்று தயாரானவள், அழகான பிங்க் நிறத்தில் அளவான பார்டர் வைத்த ஜார்ஜெட் புடவையைக் கட்டிக் கொண்டாள்.

ஹாஸ்பிடலில் இருக்கும் தந்தையைத்தான் அவள் பார்க்கப் போகிறாள் என்றாலும், கணவனுடன் ஜோடியாகப் பெற்றோரைப் பார்க்க முதல் முறையாகச் செல்கிறாள் அல்லவா...!

கூடவே புதிதாய் முளைத்த நேசம், அவள் இதழில் நீங்காப் புன்னகையை நிரந்தரமாகக் கூட்டி வைத்திருக்க, கவனமாகத் தன்னைத் தயார் செய்து கொண்டாள்.

அவள் வெளியே வந்தபோது, சேரன் அவன் அறையில் இல்லை...

கீழே இருப்பான் என நினைத்துத் துள்ளிக் குதித்துக் கீழே வந்தவள், சேரன்... வீட்டு முன் வாசல் தோட்டத்தில் யாருடனோ அதி முக்கியமாகப் போன் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.



அவன் வருவதற்குள் தன் கிருஷ்ணனிடம் இந்த நாளுக்காக நன்றி சொல்ல எண்ணிப் பூஜையறைக்குள் நுழைந்தாள்....

ஏற்கெனவே அங்கே ஷெண்பா கடவுளுக்குப் பூ வைத்துப் பூஜை செய்திருக்க, அகல்விழி ஆண்டவன் எதிரில் அமர்ந்து கைகூப்பி வேண்டினாள்.

"அதரம் மதுரம் வதனம் மதுரம்
நயனம் மதுரம், ஹசிதம் மதுரம்,
ஹ்ருதயம் மதுரம், கமனம் மதுரம்,
மதுராதிபதேர் அகிலம், மதுரம்,
வச்னம் மதுரம், ச்ரிதம் மதுரம்,
வசனம் மதுரம், வலிதம் மதுரம்,
ச்லிதம் மதுரம், ப்ரிமிதம் மதுரம்,
மதுராதிபதேர் அகிலம், மதுரம்."

எம்.எஸ்.சுப்புலக்ஷ்மியின் குரலில் வந்த பாடலை, முழுக்க மனதில் தேக்கிய பக்தியுடனும், இப்போது அவளையறியாமல் புதியதாய்ப் பூத்த கணவனின் மீதான நேசத்துடனும், இன்றைய நாளைத் தனக்குத் தந்த கிருஷ்ணனின் அழகை வர்ணித்துத் தன் கணீர்க் குரலில் பாடிக் கொண்டிருந்த அகல்விழியைச் சேரன் கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

கடவுள் நம்பிக்கை சற்றும் இல்லாதவன், தன் மனைவியின் தேன் குரலில் மயங்கி நிற்க, அவனை மீறி அவனது கால்கள் பூஜையறைக்குள் சென்று மனைவி யின் அருகில் அமர்ந்து கொண்டான்...

சேரன் தன்னருகில் அமர்ந்திருப்பதைக் கூடக் கவனியாது, கிருஷ்ணனின் மீது பார்வை ஓட்டியிருந்த அகல்விழி முழுக்க அப்பாடலைப் பாடி முடித்து,

கடைசி வரிகளில் கண்ணைத் திறந்து எதிரில் இருந்த தீபாராதனையில், கடவுளுக்கு ஆலம் சுற்றிய பிறகுதான் சேரனை உணர்ந்தாள்.

கடவுள் பக்தி மாறாமல், சேரனின் முன்னர் ஆலத்தைக் காட்ட, அதுவரை அவளையே கண் எடுக்காமல் பார்த்திருந்த சேரன், தன்னை உணர்ந்து தீபாராதனையைக் கண்ணில் ஒற்றி, திருநீறை நெற்றி யிலிட, அகல்விழி இன்னமும் அவன் முன்னர் தட்டை நீட்டிக் கொண்டிருந்தாள்.

சேரனுக்கு முதலில் புரியவில்லை... பின்னர் சுதாரித்துத் தட்டிலிருந்த குங்குமத்தை எடுத்து அவள் நெற்றி வகிட்டில் ஒற்றி எடுக்க, அந்தத் தருணம்... கிருஷ்ணன் தன் தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூவை அவர்கள் அருகில் தள்ளிவிட்டான்... அர்ச்சதையாக...!

கோவிலில் நடந்த திருமணத்திற்கு இன்று சேரனின் பூஜையறையில் அங்கீகாரம் கிடைத்தது.



## 24

இருவரும் இருந்த அந்நிலையில், வெகு நேரம் தங்களை மறந்திருக்க, மீண்டும் சேரனின் மொபைல் ஒலித்துதான் நினைவு பெற்றனர்.

கண் சிமிட்டாமல் ஒருவரை ஒருவர் பார்த்து நின்றவர்கள், சுயம் பெற்று நகர்கையில் ஒருவர் அறி யாமல் மற்றொருவர் முகத்தில் மெல்லிய புன்னகையின் சாயல்...

சேரன் அமைதியாகச் சென்று, உணவு மேஜையில் அமர்ந்து கொள்ள, அகல்விழியும் பின் தொடர்ந்தாள்.

உணவைப் பரிமாறிக் கொண்டிருந்த ஷெண்பா விற்கு நடப்பதைப் பார்க்கப் பார்க்க, மனதில் ஒரு நம்பிக்கை எழுந்தது.

அகல்விழியும் இருந்த மனநிலையில் அவளது பழைய துள்ளல் மீண்டிருந்தது.

ஷெண்பாவை நோக்கி, "ஷெண்பாம்மா... நேக்கு இந்த சாரீ நன்னா இருக்கா...?" ரசனையான குரலில் கேட்க...

அவர் சேரனைப் பார்த்தார்...

அவன் தட்டிலிருந்த உணவிலே வெகு கவனமாக இருக்க,

ஷெண்பா வேண்டுமென்றே அவனைத் திசை திருப்ப எண்ணி, "உனக்கென்ன கண்ணு... இந்தச் சேலையும் அழகு. அதைக் கட்டியிருக்கிற நீயும் அழகு!

எல்லாமே ஓகேதான்.... ஆனா ஒண்ணு மட்டும் தான் கொறச்சலா இருக்கு... இரு பாப்பா. இதோ வரேன்...” என்றவர், சமையலறையில் இருந்து ஈரத் துணியால் சுற்றி வைத்த மல்லிகைச் சரத்தை எடுத்து வந்தார்.

வந்தவர் தன் தலையில் இருந்த பின்னை எடுத்து, அகல்விழியின் விரிந்த கூந்தலில் சூட்டிய பின், அவள் கன்னம் வழித்துத் திருஷ்டி கழிக்க, சேரன் கண்ணெடுக்காமல் மனைவியைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்....

காலையில் பூத்த ரோஜா மலர் போல், முகம் பளிச்சென இருக்க, அதே ரோஜா இதழ்களுடன் போட்டி போட்டது அவள் கட்டியிருந்த சேலை...

தலைக்குக் குளித்திருந்தவள், இரண்டு பக்கமிருந்து கத்தையாக முடியெடுத்து நடுவில் கிளிப் செய்திருக்க, செயற்கை முகப்பூச்சு எதுவுமின்றி மென்மையாக இருந்த முகத்தின் நடுவே சிவப்பு நிறப் பொட்டிட்டு, அவள் வகிட்டில் சேரன் இப்போதிட்ட குங்குமம் அவளின் செயற்கைப் பொட்டுடன் போட்டி போட்டுக் கொண்டிருக்க, இப்போது ஷெண்பா சூடிய பூ, அவளை மேலும் அழகாகக் காட்டியது....

மனைவியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தவனுக்குச் சில நாள் முன்னர் நடந்த இருவரின் கருத்து வேறுபாடு மறந்தே போனது....

ஷெண்பா வந்து, “ம்க்கும்....” என்ற கனைப்புடன் மேஜையில் உணவுப் பாத்திரத்தை ஸ்வத்து அவனை உலகிற்குக் கொண்டு வந்தார்...



அதன்பின் சேரன் மறந்தும் கூட அகல்விழியைப் பார்க்கவில்லை...

பார்க்கச் சொல்லித் தூண்டிய கண்களை, வெகு சிரமப்பட்டுக் கட்டுப்படுத்தினான்...

வேண்டுமென்றே அன்றைய சம்பவத்தைப் பிடிவாதமாக மனதில் தேக்கி, அவள் பால் சாய்ந்த மனதைத் தனதாக்கினான்... ஆனாலும் மனம் அவனை, “உனக்கு இவ்ளோ கொழுப்பு வேண்டாம்டா சேரா...!” எனக் குட்ட, அவனோ மனதிற்குப் பதில் சொல்லும் நிலையில் இல்லை...

அவன் மனதிற்குத்தான் தெரியுமே... அவன் எதை வேண்டுகிறான் என்று...!

அவன் வேண்டும் காதல் அகல்விழியிடமிருந்து கிடைத்தால், இவன் ஏன் இப்படிப் பிடிவாதத்துடன் இருக்க வேண்டும். அவளைத் தன் அன்பால் குளிப்பாட்டுவானே...!

மனதில் எழுந்த ஏக்கத்துடன் ஒரு பெருமூச்சை வெளியிட்டு உணவில் கவனம் செலுத்தினான்...

இருவரும் உணவை முடித்துக் கொண்டு மருத்துவமனைக்குச் செல்லக் காரில் ஏறினர்.

ஷெண்பாவிற்கு அவர்கள் எங்கே செல்கிறார்கள் என்ற விபரம் தெரியவில்லை எனிலும், கடந்த சில நாட்களாக அகல்விழியின் கண்களில் தெரியும் கனிவினால் ஓர் அளவிற்கு அவளின் உள்மனம் புரிய, இருவரையும் மனதால் வாழ்த்தி வழியனுப்ப வெளியே வந்தார்.

இருவரும் காரில் ஏறியதும் ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்த சேரன், சீட் பெல்டைப் போட்டுக் கொள்ள, அகல்விழி ஷெண்பாவிடம் கண்களால் விடைபெற்றுக் கொண்டிருந்தாள்.

சேரன், "ஹே....' என்றழைக்க, அகல்விழி காதில் விழுந்தும் கேட்காதது போல் அமர்ந்திருந்தாள்... அன்று அவன் செய்ததைப் போலவே...!

அவன் மீண்டும் ஒரு ஹே போட, ஷெண்பா உதட்டை அசைத்து "பாப்பா... தம்பி உன்னைக் கூப்பிடுது பாரு..." என மெல்லிதாகச் சொல்ல...

அவளோ, "நேக்குத் தெரியும்..." எனக் கண் அசைத்துப் பதில் சொன்னாள்...

அவன் மீண்டும் பலத்தச் சத்தத்துடன், "ஹே லூசு...." என்க...

கோபம் கொண்டு திரும்பிய அகல்விழி, "இப்போ யாரை லூசுன்னு சொன்னேள்...?" என்க,

"வேற யாரை... உன்னைத்தான்...!"

"என்னைப் பார்த்தா உங்களுக்கு லூசு மாதிரித் தெரியறதா?"

"அதுல வேற உனக்குச் சந்தேகமா...?" என முணுமுணுத்த சேரன், "ம்ச்.... ஒழுங்கா சீட் பெல்ட் போடு... சும்மா நை நை-ன்னு பேசாத...!" என்றவன் அவளின் புறம் திரும்பி....



"அம்மா தாயே... வண்டிய நிறுத்துன்னு சொன்னாலே நான் நிறுத்திடுவேன்.. நீ வந்து ஸ்டீயரிங்க திருப்பி வைக்காதே... ஏற்கெனவே நீ உடைச்ச கார்க்கு என்னால செலவு பண்ண முடியல..." என அலுத்தவாறு வண்டியை எடுக்க...

"ம்க்கும்... செலவு பண்ணா என்னவாம்... அப்படியே வறுமையில வாடுற மாதிரியில்ல பேசுறாரு... வீட்ல இத்தனை கார் இருக்கு... நான் ஒண்ணு... ஒண்ணுதானே ஒடச்சேன்..." தாடையைத் தோளில் இடித்துக் கொண்டு ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டாள்.

அவள் சொன்னதைக் கேட்டுச் சேரனுக்குச் சிரிப்பு தான் வந்தது... 'உனக்கில்லாததா மாமி...!' என மனதில்தான் சொல்லிக் கொண்டான்...

அதன் பிறகு, இருவருக்குள்ளும் எந்த விவாதமும் நடக்கவில்லை... ஆனால் இருவரின் கண்ணாமூச்சி ஆட்டம் மட்டும் நிற்காமல் நடந்து கொண்டிருந்தது...

சேரன் சாலையில் கவனம் வைத்திருக்கும் சமயம் அவன் வண்டி ஓட்டும் அழகை ரசிக்கும் அகல்விழிக்கு அப்போதும் விளங்கவில்லை... சேரன் மெல்ல மெல்ல அவள் மனதைக் கவர்கிறான் என்று...!

சிக்னலில் நிற்கும்போது, வேடிக்கை பார்ப்பது போல் திரும்பும் சேரன், அகல்விழி அப்போது ஜன்னல் புறம் திரும்பிக் கொள்ள, மனதில் 'ராட்சஸி! ராட்சஸி...! கொஞ்சம் கூட மனுஷனோட உணர்வுகளைப் புரிஞ்சுக்

குறாளா பாரு..." எனப் புலம்ப, இருவருக்குள்ளும் இந்த விளையாட்டு தங்குதடையின்றி நடந்தேறியது....

ஒருவழியாக இருவரும் மருத்துவமனை வந்தபோது, அகல்விழிக்கு ஏனோ முதல் முறை இங்கே வந்தபோது இருந்த பதட்டமும், பயமும், கவலையும் இருக்கவில்லை.

அன்று அவள் வந்தபோது, மனதில் சேரனைப் பற்றிய பயம், வீட்டை விட்டு வெளியேறித் தனியாக வெகு தூரம் பயணித்ததில் வந்த பதட்டம், தந்தையின் உடல் நிலை எப்படி இருக்குமோ என்ற கவலை ஏதும் இப்போது இருக்கவில்லை...

அவள் உள்மனதிற்குத் தெரிந்தது.... இம்மூன்று வித உணர்வுகளைப் போக்கியது கணவன்தான் என்று...

ஆனால் ஏனோ, மனது உணர்ந்த விஷயத்தை மூளைக்குச் செல்ல ஏதோ தடை அவள் உடலில்..

வெகு விரைவில் தடைகள் உடைந்து இருவரும் ஒன்றுசேரக் காத்திருக்கத்தான் வேண்டும்.

காரை விட்டிறங்கிய சேரன், மறுபுறம் வந்து நின்றான்.

அகல்விழி கார் கதவைத் திறந்து இறங்க, அப்போது அவள் சேலை முனை சீட்டில் சிக்கியதைக் கவனித்து, "ஒரு நிமிஷம் நில்லு...!" என் அவளை நிறுத்தி அதை எடுத்து விட்டான்....

இந்தச் சின்னச் சின்னக் கரிசனையும், அவளைப் பற்றிய கவலையும்தான் மெல்ல மெல்ல அகல்விழியை



வீழ்த்துகிறது என்பதை அறியாமல் அவளுடன் மருத்துவ மனை உள்ளே சென்றான்....

அவன் சென்றதும், ரிசப்ஷனில் ஏதும் விசாரிக் காமல் நேராக நடக்க, அந்தச் செய்கையே அவன் தன் குடும்பத்தாரைப் பற்றி எந்தளவில் தெரிந்து வைத்திருக் கிறான் என்று அகல்விழிக்குப் புரிய வைத்தது.

அப்போதிருந்தே அகல்விழிக்குப் பல கேள்விகள் வண்டாய் மனதைக் குடைய ஆரம்பித்தன. அதே குழப் பத்துடன் வந்தவள் நேராக எதன் மீதோ மோதி நின்றாள்.

"ஸ்ஸ்ஸ்..." எனத் தலையைத் தேய்த்து விட்டு நிமிர, எதிரில் அவள் கணவன்தான் தூண் போல் நின்று கொண்டிருந்தான்.

அப்போதும் அகல்விழி மனதில், "ச்சே... இவரு மனுஷனா, இல்லை தஞ்சாவூர் தூணா....?" என்ற கேள்வி எழத்தான் செய்தது...

"கண்ணை எங்க வெச்சுட்டு நடந்து வர.... லூசு லூசு.... பாத்து வர மாட்டியா...?" சலித்துக் கொண்டு சொன்ன சேரனை முடிந்த மட்டும் நேராகவே முறைத் தாள்.

அவள் முறைப்பைக் கிடப்பில் போட்டு விட்டு, "உன் அப்பா, அந்த ரைட் சைடு மூணாவது ரூம்ல இருக் காங்க.... போய்ப் பாரு..." என்க,

அவள் குழப்பத்துடன், "ஏன்... நீங்க வர மாட் டேளா....?"

"ம்ச்... நீ உங்க அப்பாவைப் பார்க்கணும்னு சொன்ன... கூட்டிட்டு வந்துட்டேன்... சும்மா நச்சுப் பண்ணாம போய்ப் பார்த்துட்டு வா... எனக்குச் சில ஃபோன் கால்ஸ் பண்ணணும்...." என்றதுடன் நிற்காமல் அங்கிருந்து நகர்ந்தும் விட்டான்.

அவன் செய்கையை எப்போதும் போல் இப்போதும் வியந்தவாறே, தன் தந்தையைக் காண விரைந்தாள்.

அறையை நெருங்கும்போதே, நளினி பேசுவது காதில் விழுந்தது.

"ஏன்டி வள்ளி... உன் அக்கா அப்பாவைப் பார்க்க வருவாளாடி... உன் தோப்பனார் வேற, கண்ணை முழிச்சதும் அவர் செல்ல மகளைத்தானே விசாரிக் கிறார்... நேக்கு ஏதோ படபடப்பா இருக்கு...!" நளினி யின் குரலில் பதட்டம் தெரிந்தது.

"ஆமாம்மா... இப்போ கவலைப்படு... அன்னிக்கு அக்காவை எப்படியெல்லாம் பேசினாய்... அக்கா மேல என்ன தப்பிருக்குன்னு அன்னக்கி அப்படிப் பேசினாய்... பாவம்மா அக்கா...! எப்படி அழுதுண்டு போனா தெரி யுமா...!" ஸ்ரீவள்ளி பதில் சொல்ல...

"என் மனசுக்குப் புரியறது வள்ளி... உன் அக்கா மேல எந்தத் தப்புமில்லைன்னு... ஆனா என் மூளை தான் ஏத்துக்க மறுக்குது... அவ சலனப்படுத்தாம எப்படி அவர் இவளைக் காதலிக்க முடியும்னு ஏதோ முட்டாள் தனமா யோசிச்சுட்டேன்... அதுவும் உன் அத்தைமார்



என்னென்னவோ பேசி என்னைக் குழப்பிண்டு போயிட் டாளானோ...

"அந்தக் கோவத்துல அன்னிக்கி மன்னிப்புக் கேட்க வந்த சேரனையும் மனசு நோகப் பேசினுட்டேன்... எனக்கு ஏன்தான் இப்படி முன் கோபம் வருதோ.... ச்சே...!" எனப் புலம்பிக் கொண்டிருக்க, அந்த அறையின் வாசலில் நின்று கொண்டிருந்த அகல்விழிக்கு அனைத்தும் கேட்டது.

மேலும் இருவரும் பேசுவதைக் கேட்டாள்...

"அட போம்மா... உன் பேச்சைக் கேட்டுண்டு நானும் அக்காவை ரொம்பக் கஷ்டப் படுத்திட்டேன்... அப்பா சொன்னதைப் போல, நீ சொல்லி எழுதின லெட்டரை அக்காவுக்குப் போஸ்ட் பண்ணிட்டேன்... அதை எழுதும்போது நேக்கே எப்படி வலிச்சதுன்னு தெரியுமா நோக்கு...!" வள்ளி தொடர...

"என்னை என்னடி பண்ணச் சொல்ற... கல்யாணம் கட்டாயமா நடந்துடுத்துதான்... ஆனா, அதுக்கு அப்புற மாவது அவளோட வாழ்க்கை நன்னா இருக்கணுமேனு ஆதங்கத்துல அப்படி எழுதச் சொன்னேன்... நேக்கு நான் பெத்த பிள்ளையைப் பத்தித் தெரியாதா... அவ நம்மை நெனைச்சுண்டு அங்கே அவளை வருத்திண்டு இருப்பாளேன்னுதான் அப்படி எழுதச் சொன்னேன்...

"ஆனா அவ அப்பவும் நம்மை மறக்காம இங்க வந்து நிப்பானு நேக்கு எப்படித் தெரியும்...? அதான் அன்னிக்கி கண்டபடி பேசி அவளை நோகடிச்சுட்டேன்... இதெல்லாம் உன் அப்பாக்குத் தெரிஞ்சா என்னைக் கொன்னே போட்டுருவார்... எல்லாம் என் பொண்ணோட

நல்வாழ்க்கைக்குத் தானே...!" என்றவர் தொண்டை அடைக்க... நளினி அழ ஆரம்பித்து விட்டார்.

ஒரு அன்னையின் மனம் இருதலைக் கொள்ளி எறும்பு என்பதை நளினியின் உணர்வுகள் புரியவைத்தன.

அன்னை படும் கஷ்டத்தைப் பொறுக்க முடியாமல், "அம்மா..." என்ற கதறலுடன் அறைக்குள் நுழைந்து விட்டாள் அகல்விழி.

மகளை அந்த நேரத்தில் பார்த்ததும் ஏற்கெனவே இருந்த குற்ற வுணர்ச்சி பெருக, நளினி மேலும் கண்ணீர் வடிக்க, அன்னையை அணைத்துக் கொண்ட அகல்விழி,

"அம்மா... ப்ளீஸ்மா.... நீ அழாதேம்மா..." என மகள் அன்னையைத் தேற்ற, நளினி மகளின் தோளில் ஆறுதல் தேடினார்...

இருவருக்குள்ளும் நடந்த பாசப் போராட்டத்தை அப்போதுதான் கண் விழித்த நாராயணனும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்.

அவருக்கும் பல நாள் கழித்து, அதுவும் தான் உயிர் பிழைத்து வந்த இந்தச் சமயத்தில் மகளைப் பார்த்தது பெரும் சந்தோஷமே...!

வெகு நாள் கழித்து, அகல்விழியின் குடும்பம் அந்த மருத்துவமனையில் சங்கமித்தது.

"அம்மா... அழாதேம்மா...!" என அகல்விழி தேற்றி நளினியை அங்கிருந்த இருக்கையில் அமர வைக்க...



"என்னை மன்னிச்சுடுடி, குழந்த...! மனசுல பலதைப் போட்டுக் குழப்பிண்டு அம்மா உன்னை ரொம்பவே நோகடிச்சுட்டேன்டிம்மா..." அகல்விழியின் கன்னம் பற்றிப் பேச....

"ஹய்யோ... இதென்னம்மா என்னாண்டா போய் மன்னிப்பெல்லாம் கேட்டுண்டு... நான் உன் பொண்ணும்மா... ப்ளீஸ்ம்மா.. என்கிட்ட இப்படியெல்லாம் பேசி என்னை நம்ம குடும்பத்துல இருந்து பிரிச்சுடாதே...!" அகல்விழி வேண்டிக் கேட்க,

நளினி அவளைத் தழுவிக் கொள்ள, ஸ்ரீவள்ளியும் சந்தோஷத்துடன் அக்காவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

அவர்களுடன் இணைத்துக் கொள்ளவில்லை எனிலும், நாராயணனும் அவர்களை அன்பு தேங்கிய கண்களால் தழுவிக் கொண்டிருந்தார்.

வெகு நேரம் மூவரும் அதே நிலையில் இருக்க, அறைக்குள் ஒரு நர்ஸ் நாராயணனைப் பரிசோதிக்க உள்ளே வர, அப்போதுதான் அகல்விழி தன் தந்தையின் நிலையை நினைவில் கொண்டாள்.

"அப்பா...!" என்ற கூவலுடன் தந்தையை நெருங்கியவளை...

நர்ஸ்தான்... "கவலைப்படாதீங்க மேடம்... உங்க அப்பாக்கு இப்போ ஒண்ணும் பிரச்சனையில்லை... நல்லா இருக்கார். இன்னும் ஒரு வாரத்துல வீட்டுக்குக்

கூட்டிட்டுப் போய்டலாம்... பதட்டப்படாம பேசுங்க...!" என ஆறுதல் சொல்ல...

அகல்விழி மண்டையை உருட்டித் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள்....

நாராயணனின் கையைப் பிடித்து அதில் தலை வைத்துச் சற்று நேரம் அமர்ந்திருந்தவளை நாராயணன் மற்றொரு கையால் மகளின் தலையை வருடினார்.....

அந்த வருடலில் நிமிர்ந்த அகல்விழி, "அப்பா... எப்படி இருக்கேள்...?" கவலையுடன் கேட்க...

அவரோ, "இப்போது என் செல்லப் பொண்ணைப் பார்த்துட்டேனே... இனி எனக்கு ஏதாவது நோய் வந்துடுமா என்ன...!" காய்ந்த உதடுகளில் சிரிப்பைத் தேக்கிச் சொல்ல...

"அதானே...!" என மகளும், தந்தைக்கு வாய் பாடினாள்.

அந்த அறையில் குடும்பச் சொந்தங்கள் தாங்கள் சில நாள் இழந்த சந்தோஷத்தை மீட்டெடுத்துக் கொண்டிருக்க, வெளியே நின்றிருந்த சேரனுக்கு மனது வலித்தது.

'இத்தனை அன்பான குடும்பத்தை என் சுய நலத்தால் இத்தனை நாள் பிரித்து வைத்திருந்தேனே...!'

என்ற குற்ற வுணர்வு எழ, அவன் கண்களும் கூட அவனை அறியாமல் ஈரமாயின.



எத்தனை கம்பீர ஆண்மகனுக்கும் குடும்பமும், சொந்தமும் பலவீனம்தானே....

சேரனுக்கும், அகல்விழியின் மீதிருந்த அதீதக் காதலே அவனின் பலவீனமாகிப் போனது....

குதிரைக்குக் கடிவாளம் கட்டியது போல், அகல்விழியை மட்டுமே மனதில் தேக்கி வைத்திருந்தவன்,

அவளைச் சந்தித்தபின் தன்னைச் சுற்றி நடப்பதைக் கணக்கில் கண்டு கொள்ளவில்லை.

ஆனால் அதுவே அவனது குடும்ப வாழ்க்கைக்கு எதிராகிப் போனதென்பதை அறியாமல்....

அப்போது பார்த்து அவனது செல்போன் மீண்டும் ஒலிக்க, எடுத்துப் பார்த்தான்.

ஜீவாதான் அழைத்திருந்தான்....

அடைத்த தொண்டையைச் சரி செய்து கொண்டு, போனை ஆன் செய்து பேசினான்...

"சொல்லு ஜீவா...." என்ற குரலில் இருந்த வருத்தம் ஜீவாவிற்குப் புரியாமலிருக்குமா...!

"சார்..." என எதையோ சொல்ல வந்தவன், பின் ஏதோ நினைத்து, "சார்.... உங்களைப் பார்க்கணுமே... சில முக்கியமான விஷயம் பேசணும்.... என்னோட வீட்டுக்கு வர முடியுமா...?" என்க....

"என்ன விஷயம் ஜீவா... நானும், அகல்விழியும் அவள் அப்பாவைப் பார்க்க ஹாஸ்பிடல் வந்திருக்கோம்..."

"ஓஹோ.... அப்படியா சார் ...!" என இழுக்க,

அவனது இழுவை சேரனுக்குப் புரிந்தது...

அடிக்கடி ஜீவா அவனை வீட்டுக்கு அழைத்த தில்லை... ஓரிரு முறை ஜீவாவின் அன்னையைப் பார்க்க இவனே வலியச் சென்றிருக்கிறானே தவிர, ஜீவா எப்போதும் சேரனை முதலாளி என்ற இடத்தில் வைத்திருந்தான்.

இப்போது அவனே அழைக்கிறான் என்றால் காரண மில்லாமல் இருக்காது என்பதை உணர்ந்தவன், "சரி ஜீவா... நான் அகலை இங்க விட்டுட்டு நான் மட்டும் வரேன்...." என்க....

"இல்லை சார்... அவங்களும் வந்தா நல்லா இருக்கும்..." என்ற ஜீவா... சொல்ல வருவது சேரனுக்குப் புரியவில்லை....

அகல்விழியும் எதற்கு... என்ற கேள்வியைச் சரி அங்கே போனால் தெரியப் போகிறது என்ற நினைவுடன் தாங்கள் வருவதாகச் சொல்லிப் போனை அணைத்தான்.

அதற்குள் அறைக்குள் மூவரும் பேசிச் சிரிப்பது காதில் விழுந்தது....

இப்போது உள்ளே சென்று அவர்கள் மகிழ்ச்சியைக் கெடுக்க வேண்டுமா எனச் சேரன் வெளியே தயங்கி நிற்க,

உள்ளே நாராயணன்... "என்ன அச்சு.... நீ மட்டும் தனியா வந்தியா....?" என்று ஆச்சர்யமாகக் கேட்க...



'ச்சே ச்சே... நான் மட்டுமா... ஒரு தடவை வந்ததே போதாது...' என்றவள், "இல்லப்பா... அவரும் வந்திருக் கார்... ஏதோ போன் பேசணும்னு வெளிய இருக்கார்..." சாதாரணமாகத்தான் சொன்னாள்.

அவள் குரலில் தயக்கமோ, பிடித்தமின்மையோ இல்லாமல், 'என் கணவன்' என்ற உரிமையில், பல நாள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்தது போல் சொல்ல, பெரியவர்களுக்கு மனதில் சின்ன நிம்மதி....

அதை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள எண்ணி, நளினி மகளை நெருங்கி அவள் தலையை வருடி, "என்னடா.... நீ சந்தோஷமா இருக்கியா...?" என்க....

சேரன் அந்தக் கேள்வியில் துணுக்குற்றான்....

மனைவி இந்தக் கேள்விக்கு அவள் பெற்றோரிடம் என்ன சொல்லப் போகிறாளோ என்ற படபடப்புடன் நின்று காதைத் தீட்டிக் காத்திருந்தான்.....

அகல்விழியோ, அன்னை கேட்கும் கேள்வி விளங் காமல் அவரைப் பார்த்து, "எனக்கென்னம்மா.... இப்போ தான் உங்களை எல்லாம் பார்த்துட்டேனே...!" என்க...

உள்ளே இருந்தவர்களுக்கும் சரி, வெளியே நின்றிருந்தவனுக்கும் சரி, அவள் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைக்கலாம் போல் இருந்தது...

சேரன் வழக்கம் போல், "லூசு லூசு.... டியூப் லைட்..." என நிறுத்தாமல் வசை பாட,

உள்ளே ஸ்ரீவள்ளி, "நீ சரியான லூசுக்கா...." எனச் சேரன் நினைத்ததைச் சொல்லி,

"அம்மா.... நீ மாமாவோட சந்தோஷமா இருக்கியான்னு கேட்குறா...!" என எடுத்துக் கொடுக்க....

நளினியும் அதுதான் என்று ஆமோதித்தார்...

ஏனென்றால் நளினிக்கு முதல் முறை தன் மகள் இங்கே வந்த போது, இருந்த நிலைக்கும், இப்போது அவளிருக்கும் நிலைக்கும் இருந்த ஆறென்ன, ஆயிரம் வித்தியாசங்கள் புரிந்தன.

அந்த வித்தியாசத்திற்குக் காரணம் என்னவென்று தெரிந்து கொள்ள, ஒரு அன்னையாகப் பரிதவிப்புடன் காத்திருந்தார்.....

அவரின் தவிப்பைப் போக்கும் வண்ணம்,

"ஓஹோ... அதைக் கேட்டேளா...." என்றவள் தலையை குனிந்து கொண்டு யோசித்தாள்.

அப்போதுதான் கடந்த சில நாட்களாக மனதில் தோன்றிய மாற்றங்களை வரிசைப்படுத்த ஆரம்பித்தாள்..

வெளியே நின்றிருந்த சேரனுக்குத் தவிப்போ தவிப்பு... அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்ற தவிப்பு அவனை நிலை கொள்ளாமல் செய்தது. ஆனால் அகல்விழியோ சுய அலசலில் ஈடுபட்டிருந்தாள்.

அன்றைய சம்பவத்திற்குப் பின் தன்னுள் ஏற்பட்ட மாற்றத்தை இப்போது மெல்ல மெல்ல உணர்ந்தாள்....



சேரன் அருகில் வந்தபோது இருந்த வெறுப்பு, அவன் விலகிச் செல்கையில் இல்லாது போனது புரிந்தது....

அந்த ஒரு இரவு அவன் தன்னை வெறுத்து வெளியேறிய போது, அவனைக் காணாமல் அவள் பட்ட தவிப்புப் புரிந்தது....

இனி அவன் இல்லாமல் என் வாழ்க்கை இல்லை என்பதை அவள் உணர்ந்து கொண்ட நாள் அல்லவா...?

தான் விரும்பிக் கேட்ட விடுதலையைச் சேரன் தருவதாகச் சொன்ன போது, அவளுள் எழுந்த வெறுமையைப் போக்க, அவனிடம் வரிந்து கொண்டு வம்புக்குச் சென்றது விளங்கியது....

தன் குடும்பத்திற்கு அவன் மறைமுகமாகச் செய்த உதவி, அவனின் இளகிய மனதைப் புரிய வைத்தது....

தன்னை வெறுக்கிறேன் என்று அவன் வாய் சொன்னாலும் எப்போதும் என் நலம் நாடும் அவனது கனிவும் விளங்கியது.

இன்று காலையும் கூடக் கண்களால் காதலை யாசித்த அவனது தவிப்பும் அவளுக்கு இப்போது புரிந்தது. நாம் ஒருவரை நேசிப்பதைக் காட்டிலும், நாம் ஒருவரால் உயிருக்கு உயிராய் நேசிக்கப்படுகிறோம் என்பது எத்தகைய உன்னதமான உணர்வு...!

சேரன் அதை அவளுக்கு அவனை அறியாமலே உணர்த்தி யிருந்தான்.

இப்போதும் அவளுக்குச் சுந்தரியின் குடும்பத்தைப் பற்றிய கேள்வி இருந்ததுதான்....

அதை இன்று எப்படியும் அவனிடம் கேட்டுவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

இதையெல்லாம் அவள் உணர்ந்து கொள்ள அவளுக்கு ஒரு தூண்டுகோல் தேவைப்பட்டது....

அது இப்போது அவள் குடும்பத்தாரால் நடைபெற்றது....

நிமிர்வுடன் அவள் அன்னையை எதிர்கொண்டாள்.

தன் மனதில் சேரனின் மீது கொண்ட காதல் அவள் அன்னையை எதிர்கொள்ள வைத்தது...

ஆனால் இங்கே சேரனுக்கோ அவளின் இத்தனை நேர அமைதி அவனின் நம்பிக்கையை முழுதாகத் தகர்த்தது.

அவள் தன்னைப் புரிந்து கொள்ள எடுத்துக் கொண்ட நேரத்தைத் தன் அவசர புத்தியால் தவறாக நினைத்துக் கொண்டான்.

அவள் அன்னை கேட்ட பிறகும், அவள் மௌனம் சாதிக்க, இனி அவளுக்காகக் காத்திருப்பதில் என்ன புண்ணியம் என்று எண்ணியவன்...

அகல்விழி உள்ளே பேச ஆரம்பிக்கும் போது, கதவைத் தட்டிக் கொண்டு உள்ளே நுழைந்தான்.



அந்த நேரத்தில் யாரும் சேரனை அங்கே எதிர் பார்க்கவில்லை என்பது அவர்கள் முகத்தில் தெரிந்தது.

ஆனால் அவனோ எதையும் கண்டு கொள்ளாமல் நேராக நாராயணனிடம் சென்றவன் கைகூப்பி,

"சார்.... என்னை மன்னிச்சுடுங்க... நான் ஏதேதோ தப்பா நினைச்சுட்டு உங்க மகளைக் கட்டாயமா கல்யாணம் செஞ்சுக்கிட்டேன்... ஆனால் கல்யாணமான பிறகுதான் எனக்கு அவளுடைய மனசு புரிஞ்சுது.... அதனால நான் அவளுக்கு...." எனச் சேரன் மேலே பேசுமுன் பாய்ந்து அவனருகில் வந்தவள் அவன் வாயைத் தன் கைகளால் மூடினாள்.

சேரன் அவள் செய்கையை விசித்திரமாகப் பார்க்க, மற்றவர்களோ அவளின் செயலைச் சிரிப்புடன் பார்த்தனர்....

அகல்விழி அதையெல்லாம் கண்டுகொள்ளாமல், "என்ன... பெரிய புத்திசாலின்னு நினைப்பாக்கும். வீட்டுக்கு வாங்க. வெச்சுக்கிறேன்..." என மிரட்ட...

அந்த ஒரு சின்னச் செய்கையில் அகல்விழியின் பெற்றோருக்கு மகள் மனம் புரிந்தது....

இருபது வருடமாக அவளைப் பார்த்தவர்களாயிற்றே...!

அவள் யாரிடம் அதிகம் உரிமை காட்டுகிறாளோ அவர்களிடமே இத்தகைய செயல் வெளிப்படும் என்பதை

அறிந்தவர்கள்... இனி மகள் வாழ்க்கை நன்றாக அமை யும் என்று மகிழ்ந்தனர்....

சேரனின் வாயை மூடிய அதே நிலையில் பெற்றோர் புறம் திரும்பி, "அப்பா.... அம்மா... நான் நாளைக்குத் திரும்ப வரேன்... அப்பா! உங்க உடம்பைப் பார்த்துக்கோங்கோ.... ஸ்ரீ.... பார்த்துக்கோடி... ஏதாச்சும் தேவைன்னா, உன் மாமாவுக்குக் கூப்பிடு...!" என்ற அகல்விழி அப்போதே அவர்களின் உறவைக் குடும்பத் தார் முன்னிலையில் அங்கீகரித்தாள்.

ஆனால் சில விஷயங்கள் சேரனிடம் பேசி விட வேண்டுமென்று அவனைத் தள்ளிக் கொண்டு மருத்துவ மனையை விட்டு வெளியேறினாள்.

சேரன் இன்னமும் அவளின் செயலை விசித்திர மாகத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்....

அகல்விழி, "என்ன இப்படி பேந்தப் பேந்த முழிக்கிறேள்.... காரை எடுங்கோ.... போகலாம்...." என அதட்டல் போட....

உள்ளே அவள் பேசிய கடைசி வரிகள் அவளின் மனதைச் சேரனுக்கு உணர்த்தியது.

அவள் தெரிந்து சொன்னாளா, இல்லை தெரியாமல் சொன்னாளா எனக் குழப்பத்துடன் காரில் அமர்ந்து ஸ்டார்ட் செய்ய,

மீண்டும் ஜீவா போனில் அழைத்தான்.



அப்போதுதான் அவன் அழைத்தது நினைவு வர, போனை எடுத்தவன்... "இங்கிருந்து கிளம்பிட்டோம் ஜீவா... ஒரு அரைமணி நேரத்துல அங்கே வந்துடு வோம்...!" என்று பேசிவிட்டு அகல்விழியிடம் திரும்பி,

"ஜீவா நம்ம ரெண்டு பேர்கிட்ட ஏதோ முக்கியமா பேச ணும்னு சொன்னான்... அவங்க வீட்டுக்குப் போயிட்டுப் போலாம்...." என்க...

"ம்ம்ம்...." என்று அவனுக்கு அனுமதி அளிக்க, அவள் "ம்ம்..." என்று சொன்ன உதட்டைக் கடித்தால் என்ன... என்று அவனுள் ஆசை பிறந்தது...

எழுந்த ஆசையை மனதில் அடக்கி, "இன்னும் அவ மனசு முழுசாப் புரியல சேரா... அதுவரை பொறு மையா இரு..." என்றவன் காரை ஜீவாவின் வீடு நோக்கி விட்டான்.

## 25

மருத்துவ மனையிலிருந்து நேராக ஜீவாவின் வீட்டுக்குச் சென்றவர்கள் இருவ ருக்கும் மனதில் இத்தனை நாளிருந்த குழப் பங்களும் தவிப்புகளும் மறைந்திருந்தன.

அதனாலே இருவரின் முகத்தில் தவழ்ந்த புன்னகை அவர்களை வரவேற்ற ஜீவாவின் முகத்திலும் தொற்றிக் கொண்டது.

ஜீவாவைத் தொடர்ந்து, அவன் பின்னாலே வந்த ஜீவாவின் அன்னை சுபா,

"வாப்பா சேரன்... நல்லா இருக்கியா....?" என அன்பொழுக வரவேற்க,

"நான் ரொம்ப நல்லா இருக்கேன்ம்மா... உங்க ளுக்கு உடம்பு இப்போ பரவாயில்லையா...?" எனப் பதிலுக்குப் புன்னகையுடனே விசாரித்தான்.

"நான் நல்லா இருக்கேன்ப்பா.... யாரு இந்த மஹாலக்ஷ்மி...!" ஜீவாவின் அன்னை சுபா வேண்டு மென்றே சேரனைக் கேட்க...

சேரனை விட்டு இரண்டடி தள்ளி நின்று அவன் என்ன சொல்வானோ என அவன் முகத்தையே ஆவலாகப் பார்த்திருந்த அகல்விழியைத் தோள் பற்றித் தன்னுடன் சேர்த்து இறுக்கி, "இவ... என்னோட வைஃப்.... அகல்விழி இளஞ்சேரன்..."

அவள் கண்களைப் பார்த்துக் கொண்டே சுபாவிற்குப் பதில் சொன்ன சேரனின் குரலில் பழைய தெளிவு திரும்பியிருந்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் மறந்து நின்றிருந்த நிலையை ஜீவாதான் வேண்டுமென்றே தொண்டையைக் கனைத்துக் கலைத்தான்...

நினைவு மீண்ட இருவரில் முதலில் சுதாரித்த அகல்விழி, "ஆன்ட்டி... எங்களை ஆசிர்வாதம் பண் ணுங்கோ..." என்று அவர் காலில் விழ,

அகல்விழியைத் தொடர்ந்து சேரனும் அவர் காலில் விழுந்து பணிந்தான்.



இந்தத் தருணத்தை நிச்சயமாக ஜீவாவும் சரி, சுபாவும் சரி, சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

இருவரும் அவர் நல்லாசிக்காகக் காத்திருப்பது புரிந்து, "ரெண்டு பேரும் நூறு வருஷம், சீரோடும் சிறப்போடும் வாழணும்...!" என வாழ்த்த,

சேரன் வேண்டுமென்றே, "என்னம்மா இப்படி ஆசிர்வாதம் பண்ணிட்டீங்க... பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழுங்கன்னு சொல்வீங்கன்னு நெனச்சேன்...!" என்றான். வெட்கம் கொண்டு தலை குனிந்த அகல் விழியைக் கண்களால் அளந்தவாறு...

"அடடே... போதும் போதும்... உங்க ரொமான்ஸ் தாங்கலை...!" என ஜீவா அலுத்துக் கொள்ள,

சுபா அவன் முதுகில் செல்லமாக அடித்து, "உனக்கு ஏன்டா தம்பி பொறாமை...!" என்க...

வெகு நாள் கழித்து அங்கிருந்தவர்கள் முகத்தில் சந்தோஷப் புன்னகை தவழ்ந்தது.

சேரனும் அவருடன் இணைந்து, "அதானே... உனக்கு வேணும்னா நீயும் ஒரு பொண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டு ரொமான்ஸ் பண்ண வேண டியதுதானே...!"

சேரன் அவன் தோளில் கை போட்டுச் சொல்ல...

"சீக்கிரம் பண்ணிக்கலாம்... அதுக்கு முன்ன உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்... உக்காருங்க சார்..." என்ற ஜீவாவை அவன் வயிற்றில் குத்தி,

"இனிமேல் இந்த சார் மோர்னு சொன்ன, உன்னை வேலையை விட்டுத் தூக்கிடுவேன்... கால் மீ சேரன்... ஜீவா...!" அதட்டல் கலந்த நட்புடன் சொல்ல...

ஜீவாவும் அதற்கு மேல் வாதம் செய்யாமல், வாதம் செய்யும் நேரம் இதுவல்ல எனப் புரிந்து, "ஓ.கே ஓ.கே.... உக்காரு சேரா.... மேடம்! நீங்களும் உக்காருங்க..." என அகல்விழியைப் பார்க்க...

"ஹய்யோ என்ன இது மேடம் கீடம்னு... என்னை யும் பேர் சொல்லியே கூப்பிடுங்கோண்ணா... நான் உங்களுக்குத் தங்கை மாதிரி..."

உடனே புது உறவை ஏற்படுத்திக் கொண்ட அகல்விழியை எப்போதும் போல் சேரனால் இன்றும் கண்களால் பருகத்தான் முடிந்தது.

"சரி.. சரி... எல்லாருமே உக்காருங்க... நான் குடிக்க ஏதாவது எடுத்துட்டு வரேன்..." என்று சுபா உள்ளே செல்லத் திரும்ப,

"இருங்கோ ஆன்ட்டி... நானும் வரேன்..." என அவர் பின்னாலே அகல்விழியும் சென்று விட்டாள்.

இருவரும் உள்ளே செல்லும்வரை பார்த்திருந்த சேரனைக் குறுகுறுவெனப் பார்த்திருந்த ஜீவாவை அசடு வழிய ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு,

"சொல்லு ஜீவா... ஏதோ பேசணும்னு சொன்ன..." என்று விஷயத்திற்கு வந்தான்.



"அது சரி..." என்ற ஜீவா, "ஒரு நிமிஷம் சேரா...!" என உள்ளே சென்று சில ஃபைல்களை எடுத்து வந்து அவன் முன் வைத்தான்.

"சதீஷ் சாரையும் வரச் சொல்லியிருந்தேன்... ஏதோ முக்கியமான வேலையிருக்கு. கொஞ்சம் நேரமாகும்னு சொன்னார்..." என்றபடி அகல்விழியும் வருவதற்காகக் காத்திருந்தான் ஜீவா...

ஆனால் அவளோ உள்ளே சுபாவுடன் சேர்ந்து டீ தயாரிப்பதில் மும்முரமாக இருந்தாள்.

பார்த்த சில நொடிகளிலேயே சுபாவுடன் ஒட்டிக் கொண்ட அகல்விழி, அவருடன் கதையடித்தவாறு அவ ருக்கு உதவி செய்ய, சற்று நேரத்தில் சமையல் அறையின் எதிரிலிருந்த படுக்கையறையில் ஏதோ சத்தம் கேட்க, சுபா...

"ஒரு நிமிஷம் இதைப் பார்த்துக்கோம்மா... இதோ வரேன்...." என்றவர் எதிரிலிருந்த அந்த அறைக்குள் நுழைந்தவர், அந்த அறையின் கதவைச் சரியாக மூட வில்லை...

தயாரித்த டீயைச் சேரன், ஜீவா மற்றும் சுபாவிற்குக் கப்பில் ஊற்றி ஒரு தட்டில் வைத்து அகல்விழி திரும்பிய போது, அந்த மூடப்படாத கதவிடுக்கின் வழியே, படுக்கையில் படுத்திருந்த உருவம் கண்ணில் பட்டு மனதை உறுத்த... தட்டைச் சமையல் திட்டில் வைத்து விட்டு அந்தக் கதவை நெருங்கினாள்.

கதவின் அருகில் சென்றவள் கதவை அகலத் திறக்க, படுக்கையில் இருந்த உருவத்தைக் கண்டு கதறிய படி அருகில் ஓடினாள்.

“சுந்தரிஈஈஈஈ...!” என்றவள் அலறலுடன் அவளை நெருங்கி அவள் முகத்தைப் பற்றி... “சுந்தரி! சுந்தரி...!” என அழைக்க, அதே அறையின் குளியலறையிலிருந்து வெளிவந்த சுபா அதிர்ந்து போனார்.

அதற்குள் இவளின் அலறல் குரல் கேட்டு ஹாலில் இருந்த சேரனும், ஜீவாவும் அந்த அறைக்குள் நுழைந்து விட்டனர்....

அகல் படுக்கையில் கண் மூடிப் படுத்திருந்த சுந்தரியின் கன்னத்தில் தட்டி, “ஹே சுண்டு... நோக்கு என்னாச்சுடி... ஏன் இப்படிப் படுத்துண்டு இருக்காய்... எழுந்துக்கோடி! எழுந்துக்கோ...!”

அவள் கன்னத்தில் மாறி மாறி அடிக்க, சுந்தரி படுத்திருந்த நிலையிலிருந்து எந்த மாற்றமும் இல்லாமல் இருந்தாள்...

ஜீவா நொடியில் சுதாரித்து, “சேரா... அகலைப் பிடி...” எனக் கட்டளையிட, சேரனோ நடப்பதை விநோத மாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நொடியில் அவன் மனதில் ஆயிரம் ஆயிரம் கேள்விகள்....

அகல்விழியின் தோழி சுந்தரி எப்படி இங்கே ஜீவாவின் வீட்டில்... அதுவும் படுத்த படுக்கையாக... ஏன்



இவளைக் கண்டதும் அகல் இத்தனை ஆவேசப்பட வேண்டும்.

எதுவும் விளங்காமல் சிலையாக நின்றிருந்த சேரனை, “சேரா...!” என உலுக்கி அவனை மீட்டெடுத்த ஜீவா,

“கொஞ்சம் அகலைப் பிடி... சுந்தரிக்கு ட்ரிப்ஸ் இறங்கிட்டு இருக்கு... எங்காவது பிடிச்சு இழுத்து விட்டுடப் போறாங்க...” கட்டளையிட,

சேரன் அவளை நெருங்கி, “அகல்... அகல்... அவளை விடு....” என அவளிடமிருந்து அகலைப் பிரிக்க முற்பட,

சுபாவும் அவள் தோள் பற்றி எழுப்ப முயன்று கொண்டிருந்தார்.

அகல்விழி தன்னைப் பிடித்தவர்களை அலட்சியம் செய்து, சுந்தரியின் கையைப் பிடித்து உலுக்கிக் கொண்டி ருந்தாள்...

வெகு நாட்கள் என்ன... வெகு மாதங்கள் கழித்துத் தனது தோழியை, அதுவும் இந்த நிலையில் கண்டதால் அகலின் உணர்வுகள் கிளர்ந்தெழுந்தன.

அவள் சுந்தரியை விடாமல் பற்றியிருந்த தோரணை யில் சேரனுக்குக் கூடப் பயம் வந்துவிட்டது.

வலுக்கட்டாயமாக அவளைப் பின்னால் இழுத்து வந்தவன், சுந்தரி... சுந்தரி... என அரற்றிக் கொண்டி ருந்தவளின் தோளை உலுக்கி,

"ஹே... எதுக்குடி இப்போ இத்தனை ஆவேசப் படற.... உன் கண்ணுக்குத் தெரியலையா.... ஷீ இஸ் நாட் இன் கான்ஷியஸ்... அவ மயக்கத்துல இருக்கா..." என்க....

அத்தனை நேரம் சுந்தரியைக் கண்டதில் சந்தோஷத்தை அனுபவிக்க முடியாமல் அவளின் இந்த நிலையைக் கண்ட துக்கம், ஒரே நாளில் சுந்தரியின் குடும்பம் சிதைந்து, அவளின் பெற்றோரைத் தன் கண் முன்னே பிணமாகக் கண்ட காட்சி அனைத்தும் அகல்விழி யின் முன்னே வந்து நர்த்தனமாட,

அடிமனதில் தனது தோழியின் இந்நிலைக்குக் காரணம் சேரன்தான் என ஏற்கெனவே அவள் மனதில் தோன்றியிருந்த 'மாயை' அவளை ஆவேசப்படுத்தியது.

தன் தோளைக் குலுக்கியவனின் கைகளைத் தட்டி விட்டவள் அவன் சட்டைக் காலரைப் பற்றி,

"நீதான்... நீதான் சுந்தரியோட இந்த நிலைக்குக் காரணி. நீதான் என் ஃபிரெண்டோட மொத்தக் குடும் பத்தையே அழிச்ச பாவி.... உன்னாலதான் இப்போ சுந்தரி இந்த நிலையில இருக்கா. கொலைகாரா... ஏன் இப்படிச் செஞ்ச...? ஏன் இப்படி செஞ்ச... சொல்லு...!

"எனக்கு என் சுந்தரி பழைய சுந்தரியா வேணும். அவளைத் திரும்பக் கொடு... திரும்பக் கொடுடா...!"

அவன் நெஞ்சில் மாறி மாறி அடிக்க... அவள் அடியையும் தாங்கிக் கொண்டு அவள் சொல்லும் பழிகளை ஜீரணிக்க முடியாமல் நின்றிருந்தான் சேரன்...



அவனை அடித்து அடித்து ஓய்ந்தவள்... "ஏன் இப்படிச் செஞ்சேள்...? ஏன் இப்படிப் பணத்துக்காக ஒரு குடும்பத்தையே பலி கொடுத்தேள்...? நீங்க ஏன் இதைச் செய்யணும்...? நான் உணர்ந்தவரைக்கும் என்னால உங்களை ஒரு கொலைகாரனா நினைக்கவே முடிய லையே... ஆனா எப்படி இது... என்னால தாங்க முடிய லையே...!"

அவனின் நெஞ்சிலே சரிந்து அழ ஆரம்பித்தாள்...

அவளின் காதல் கொண்ட மனதிற்குத் தெரிகிறது. சேரனின் மீது எந்தத் தவறுமில்லை என.

ஆனால் பல்வேறு சூழ்நிலைகள் சேரனுக்கு எதிராக இருக்க, அகல்விழியின் மனது உண்மைக்கு ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தது.

சேரனுக்கு இப்போது நடப்பது, இதற்கு முன்னர் நடந்தது... இனிமேல் நடக்கப் போவது என எதுவும் புரியவில்லை....

இது நிஜமா இல்லை ஏதேனும் கெட்ட கனவா என்ற நிலையிலே நின்றிருந்தான்.

ஜீவா, சுந்தரியைச் சரியாகப் படுக்க வைத்து விட்டுத் திரும்புவதற்குள் அகல்விழி அவளின் உள்ளக் குமுறல் களைக் கொட்டிக் கொண்டிருந்தாள்....

சுபா இங்கே நடப்பதைத் தடுக்க முடியா நிலைமையில் வெறும் பார்வையாளராக நின்றிருக்க,

ஜீவா அன்னையிடம் திரும்பி, "அம்மா... சுந்தரியைப் பார்த்துக்கோங்க..." என்றதுடன் சிலையாக நின்றிருந்த சேரனை உலுக்கி,

"சேரா... அகலைக் கொஞ்சம் ஹாலுக்குக் கூட்டிட்டு வா... இது எல்லாத்துக்கும் விளக்கம் சொல்றேன்..." என்க...

மனைவியைத் தாங்கியிருந்த சேரனின் கால்கள் ஜீவாவின் சொல்படி நடந்தன.

மூவரும் ஹால் சோபாவில் அமர, இன்னமும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த அகலின் புறம் தண்ணீர் பாட்டிலை நீட்ட, அவள் அதை வாங்கிப் பருகும் நிலையில் இல்லை....

ஜீவா, "அகல்.... நீ என்னை உண்மையாவே அண்ணான்னு நெனச்சா கொஞ்சம் பொறுமையா நான் சொல்றதைக் கேளு... அட்லீஸ்ட் உன் ஃபிரெண்டக்கு என்னாச்சுன்னு தெரிஞ்சுக்கவாவது உனக்குத் தெம்பு வேணுமில்லையா.... சோ, ப்ளீஸ்! இதைக் குடி...

"சேரா.... நீயும் கொஞ்சம் தண்ணி குடி...." என இருவரையும் அமைதிப்படுத்த முயன்று... அதில் வெற்றியும் பெற்று, அவர்களைத் தான் சொல்லப் போகும் விஷயத்திற்குத் தயார்ப்படுத்தினான்.

தண்ணீரைக் குடித்து முடித்த சேரன், "ஜீவா... இங்க என்ன நடக்குது...? என்ன இவ என்னென்னவோ உளர்றா...! எனக்குத் தலையே வெடிச்சிடும் போலிருக்கு.



ப்ளீஸ்... என்ன நடந்ததுன்னு சொல்லு..." தலையைத் தாங்கிக் கொண்டு அவன் கேட்க...

"சொல்றேன் சேரன்... நான் சொல்றதை முழுசாப் பொறுமையாக் கேளு, ப்ளீஸ்....." என்றவன்... "சேரா.... நம்ம ஆபீஸ்ல நமக்கே தெரியாம நிறையத் தப்புகள் நடந்திருக்கு..." என்ற முன்னுரையுடன் துவங்க....

"வாட்...?" என இடையிட்ட சேரனை நிறுத்தி,

"நான் அதைப் பத்தி முழு விவரம் சொல்றதுக்கு முன்னாடி... அகல்...! உனக்கு நான் ஒரு விஷயம் புரிய வைக்கணும்... சுந்தரியோட இந்த நிலைமைக்கு ஒரு சதவீதம்கூடச் சேரன் காரணமில்லை... என்னால அதை அடிச்சுச் சொல்ல முடியும்... இதை நீ நம்பணும்... ப்ளீஸ்..." என்க....

"ஹய்யோ..... அண்ணா...! நானும் அதைத்தான் அந்தப் பெருமாளாண்ட வேண்டிண்டு இருக்கேன்...!" என்றவள் கண்ணீர் சிந்த,

மனைவியின் கண்ணீரும், அங்கே படுத்திருந்த சுந்தரியின் நிலையும் சேரனுக்கு விஷயம் பெரியது என்பதை விளக்கியது.

அவனை மீறி ஏதோ மிகப் பெரிய தவறு நடந்திருப்பது புரிந்தது.

ஜீவா, "ஓ.கே.... முதல்ல நான் சுந்தரியை எங்க பார்த்தேன்... அவளுக்கு இப்போ என்ன நிலைன்னு சொல்லிடுறேன்..." என்றவன்,

அன்று சுந்தரி கடத்தப்பட்ட நாளை நினைவு கூர்ந்தான்.

அன்று அவளைக் கடத்திச் சென்றவர்களிடமிருந்து சுந்தரி தப்பிக்க வெகுவாகப் போராடினாள்.

ஒரு சிக்னலில் அந்தக் கார் நிற்க, அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தன் முழு பலத்தையும் திரட்டி, தன்னைக் கடத்தி வந்தவர்களை உதறி விட்டுக் காரிலிருந்து தாவிக் கீழே குதித்தாள்....

அவள் குதித்த நொடி பச்சை விளக்கு ஒளி பெற்று வாகனங்கள் செல்லத் துவங்கின.

சுந்தரி ரோட்டில் விழுந்த மறு நொடி அந்தக் காருக்குச் சில அடி தூரம் பின்னால் பைக்கில் நின்றிருந்த ஜீவா, யாரோ எனப் பதறிக் கொண்டு அப்பெண்ணைத் தூக்கித் தன் மடியில் கிடத்த, தலையில் இரத்தம் வழியத் தன் காதலியைப் பார்த்தும் ஜீவா கலங்கியே விட்டான்.

கடத்திச் சென்றவர்கள் காரிலிருந்து இறங்கி வருவதற்குள் சுந்தரியையும், ஜீவாவையும் மக்கள் சூழ்ந்து கொண்டனர்.

அவன் மடியில் சுந்தரிக்குப் பதிலாக வேறேதும் பெண்ணிருந்திருந்தால் ஒரு வேளை ஜீவா அடுத்தது என்ன என யோசித்து, அந்தக் காரின் அடையாளத்தையோ, இல்லை அந்தக் காரில் இருந்தவர்களின் அடையாளத்தையோ கண்டிருப்பான்.



மடியில் தன் உயிரையல்லவா தாங்கிக் கொண்டிருந்தான்...

அதனால் அடுத்து என்ன என்பதையே கூட்டத்தில் இருந்தவர்கள் சொன்னதைக் கேட்டுத்தான் செயல் படுத்தினான்.

அவளை மருத்துவமனையில் சேர்த்து, அடுத்த இருபத்து நான்கு மணி நேரத்திற்குப் பிறகு அவளின் உயிருக்கு எந்த ஆபத்துமில்லை என்றதும்தான் அவனுக்கு அடுத்தது என்ன என்பதை யோசிக்கத் தோன்றியது.

ஆனால் அவன் யோசிக்கும் முன்பே சுந்தரியின் குடும்பத்தாரின் அத்தியாயம் முடிந்திருந்தது... ஜீவாவிற்கு அப்போதுதான் விஷயம் பெரிது என்பது விளங்கியது.

தலையில் அடிபட்டதால் சுந்தரி கோமா நிலைக்குச் சென்றிருக்க, அவளைத் தன் அன்னையின் கவனிப்பில் விட்டு விட்டு ஜீவா சுந்தரியின் குடும்பத்திற்கு நேர்ந்த துயரத்திற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிய முற்பட்டான்...

அந்தத் தெருவில் விசாரித்தவரை சுந்தரியின் குடும்பம் கடன் தொல்லை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டது புரிந்தது...

ஆனால் அதற்குக் காரணம் யார் என்பது அங்கிருந்தவர்களுக்குச் சரியாகத் தெரியவில்லை.

அப்போதுதான் நாராயணன் சேரனின் மீது கொடுத்த கம்ப்ளெய்ன்ட், அதே காவல் நிலையத்தில் இருந்த வேறொரு அதிகாரி மூலம் ஜீவாவின் காதுகளை எட்டியது.

அதைத் தொடர்ந்து அகல்விழி சேரனைக் காண இரண்டு முறை அலுவலகத்திற்கு வந்ததும் கேள்வியை எழுப்பியது....

அவன் பார்த்த இரு முறையும் அகல்விழியின் கண்களில் தெரிந்த கோபமும், சோகமும், ஜீவாவிற்குச் சந்தேகத்தை எழுப்ப, விஷயம் என்ன என்பதைக் கண்டறிய முழு மூச்சாக இறங்கினான்...

அந்த நேரத்தில் சேரன் மும்பையில் இருந்த தனால்... ஜீவா அவனிடம் எதையும் பகிரவில்லை...

உண்மை என்ன என்பதை முழுதாகத் தெரிந்து கொள்ளாமல்... தேவையில்லாமல் சேரனைக் குழப்ப வேண்டாம் என்று அவன் நினைத்து ஒதுக்கிய விஷயம் பின்னர் பல குழப்பங்களை விளைவித்ததை ஜீவா அறிந்திருக்கவில்லை.

சேரனின் மீது நாராயணன் கொடுத்த கம்ப்ளெய்ன்ட் பற்றி ஜீவா அறிந்து கொண்டது... அகலைச் சேரன் திருமணம் செய்து கொண்ட பின்புதான்...

ஒரு வேளை அவனுக்கு முன்னரே தெரிந்திருந்தால் நிச்சயமாக அந்தக் கட்டாயத் திருமணத்திற்கு ஜீவா ஒத்துழைத்திருக்க மாட்டான்...



நண்பனுக்காக எனப் பார்த்தது, நண்பனையே பாதிக்கும் என்பதும் அவன் அன்று அறிந்திருக்க வாய்ப் பில்லை.

நடந்ததை முழுதாகச் சொன்ன ஜீவா, சேரனின் புறம் திரும்பி, "உன் மேல அகல்விழியோட அப்பா எதுக்கு கம்ப்ளெய்ன்ட் கொடுத்தாங்க தெரியுமா, சேரா...? சட்டத்தை மீறி அதிக வட்டிக்குக் கடன் கொடுத்ததாகவும், கடனைத் திருப்பித் தரச் சொல்லி வற்புறுத்தியதாகவும், ஒரு குடும்பத்தையே தற்கொலை செய்யத் தூண்டிய காரணத் துக்காகவும்..." என்றதும்...

சேரன் உச்சபட்ச அதிர்ச்சியில் உறைந்திருந்தான்...

அவன் இது உண்மையா என்பது போல் அகல்விழியைப் பார்க்க,

அவள் ஆம் எனத் தலையை உருட்ட... சேரன் முற்றிலும் உடைந்து போனான்....

"என்ன ஜீவா இது...?" என்றவன் தலையைக் கைகளால் தாங்கி அமர்ந்திருக்க,

ஜீவா அவன் தோளைப் பற்றி அமைதிப்படுத்தி, "அவங்க மேல எந்தத் தப்புமில்லை சேரா! சூழ்நிலைகள் எல்லாமே உனக்கு எதிரா இருந்திருக்கு... உன்னோட புறத் தோற்றமும், நம் தொழிலுக்காகச் செய்த சில விஷயங்களும் நம்மை வெளி மனுஷங்க மத்தியில கெட்டவங்களா சித்திரிச்சிருக்கு...!" என்றவன் அகலிடம் திரும்பினான்.

"அகலுக்கு நீ செய்ற ஃபினான்ஸ் கம்பெனி, அப்புறம் உன்னோட டிரஸ்ட் பத்தி ஏதாவது தெரியுமா...?" என்க...

அவன் இல்லை எனத் தலையாட்டினான்...

"அதுதான் சேரா... நீ செய்த முதல் தப்பு... நீ தொழிலில் காட்டிய அவசரத்தையும், ஆவேசத்தையும் உன்னோட காதல்லயும் காட்டிட்ட... முதலிலிருந்தே அவசரப்படாதே... அவசரப்படாதேன்னு படிச்சுப் படிச்சுச் சொன்னேனே, கேட்டியா...

"எப்படி எப்படியோ முடிய வேண்டிய உன்னோட காதல் கல்யாணம் கடைசியில கட்டாயமா நடந்து முடிஞ்சு, அதுக்குப் பின் நடந்த சம்பவங்கள் உன்னால ஜீரணிக்க முடியாத விஷயங்கள்...

"இப்போதாவது அகல்விழிக்கு நீ செய்கிற தொழில், நம்மளோட டிரஸ்ட் எல்லாத்தையும் பத்தி சொல்லு... அப்போதான் இதற்குப் பிறகு நடந்த குழப்பங்களை நான் அவங்களுக்குப் புரிய வைக்க முடியும்.... நான் சுந்தரியைப் பார்த்துட்டு வரேன்... ஒரு ரெண்டு நிமிஷம்..." என்ற ஜீவா அங்கிருந்து நகர...

அவன் சென்றதும் அகலிடம் திரும்பிய சேரன், "அகல்... சத்தியமா எனக்கு இப்போ என்ன நடக்குதுன்னு புரியல.. ஆனா எனக்கே தெரியாம ஏதோ ஒரு பெரிய தப்பு நடந்திருப்பது புரியுது... ஜீவா சொன்னது போல நான் உன் விஷயத்துல முதலில் இருந்தே ரொம்ப



அவசரப்பட்டுட்டேன்... அதுக்கு என்னை மன்னிச்சுடு...!" என மன்னிப்புக் கேட்க...

அவன் கைகளைப் பற்றித் தடுத்தவள் கண்களாலே வேண்டாமென்க,

"ஜீவா சொன்னதைப் போல நான் என்னோட தொழிலைப் பற்றி முதல்ல சொல்லிடுறேன்..."

"நம்ம குடும்பம், அதாவது பாரம்பரியமாகவே, என் அப்பாவோட தாத்தா காலத்துல இருந்து ஃபினான்ஸ் பண்றோம்... தாத்தா காலத்துல சின்னச் சின்னதா விவசாயிகளுக்குப் பணம் உதவிட்டு இருந்தாங்க...

"அப்புறம் அப்பா அதைச் சட்டபூர்வமா மாத்திச் சின்னச் சின்னக் கம்பெனிகளுக்கு பிசினெஸ் லோனா கொடுக்க ஆரம்பிச்சார்... நம்ம ஃபினான்ஸ் கம்பெனியில எல்லாமே பேப்பர்ல எழுதிச் சட்டபூர்வமாத்தான் நடக்கும்..."

இதைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஜீவா வந்திருந்தான்.

"ஆமா, அகல்... ஆபீஸ்ல இருந்து ஒரு பைசா வெளியே போகணும்னாலும் அதுக்கு என்னோட பெர்மிஷனோ இல்லை சேரனோட பெர்மிஷனோ கண்டிப்பா வேணும்..." ஜீவா அவர்களுடன் இணைந்தான்....

சேரன் மீண்டும் தொடர்ந்தான்....

"எஸ் அகல்.... அது மட்டுமில்லாம, மத்த கம்பெனியை விட நம்மதான் குறைஞ்ச வட்டியில

ஃபினான்ஸ் பண்றோம். நம்ம ஊர்ல பேங்க் கொடுக்குற நிறையச் சலுகைகளும், கடன்களும் சரியான விதத்துல மக்களுக்குப் போய்ச் சேர்வதில்லை...

"ஒரு கட்டடக் கூலித் தொழிலாளி ஒரு நாளைக்கு எழுநூறு ரூபா சம்பளம் வாங்குறான்... மாசத்துக்கு இருபதாயிரம்... இன்னைய தேதிக்கு ஒரு கார்பரேட் கம்பெனில வேலை செய்றவன் வாங்குற சம்பளத்தை விட இவன் வாங்குற சம்பளம் அதிகம்...

"ஒரு கூலித் தொழிலாளி தனக்குன்னு ஒரு வீடு கட்டணும்னு யோசிச்சு பேங்க் போய் லோன் கேட்டா, பேங்க் ஆபீசர் அவனோட கூலிக்கு இன்கம் சர்டிஃபிகேட் கேட்குறான்... தினக்கூலி செய்றவன் அந்தச் சர்டிபிகேட்டை எங்க போய் வாங்குவான்...? அதனாலதான் அவன் வெளியில கந்துவட்டிக்குப் பணம் வாங்கிப் பல சிக்கல்ல மாட்டிக்கிறான்...

"இந்தக் கஷ்டத்தை உடைக்கணும்னுதான் நம்ம கம்பெனி ஈசி லோன் திட்டத்தை அறிமுகப்படுத்துச்சு. அந்த நாளை என்னால மறக்கவே முடியாது. அன்னிக்குத்தான் உன்னை நான் முதல் முறை பார்தேன்....

"அதுக்கு அப்புறம் நம்மோட டிரஸ்ட்.. அம்மா பேர்ல அப்பா தொடங்கின டிரஸ்ட்... அப்பாக்கு அப்புறம் நான்தான் நடத்திட்டு இருக்கேன்... படிக்க முடியாத நிறையக் குழந்தைகளுக்கும், பெண்களுக்குமான மறுவாழ்வு மையமாகவும் அது செயல்படுது. அப்புறம் அப்பா பேர்ல இருக்கற சில ஷாப்பிங் மால்... இது



போக ரியல் எஸ்டேட். அதுவும் சில நல்ல நோக்கத் தோடதான் ஆரம்பிச்சேன்..." என்று அதன் ஆரம்பத்தைச் சொன்னவன் கடைசியாக....

"அப்புறம் என்னோட கனவு ஃபாக்டரி... ஃபிஷிங் எக்ஸ்போர்ட்ஸ்..." என்றதும், அகல்விழியின் கண்கள் விரிந்தன...

"ஃபிஷிங்னா என்ன சொல்றேள்... கடலுக்குப் போய் மீன் பிடிப்பேளா...?" அவள் வியப்பாகக் கேட்க...

அந்தச் சூழ்நிலையிலும் ஜீவாவும், சேரனும் சிரித்து விட்டனர். உள்ளே இருந்த சுபாவிற்குக் கூடச் சிரிப்பு தான்...

ஜீவா, "கிட்டத்திட்ட அப்படித்தான்... கடலில் இருந்து மீன் பிடிச்சுட்டு வந்து நம்மகிட்ட விப்பாங்க... அதைச் சுத்தபடுத்திப் பதப்படுத்தி, பேக் பண்ணி வெளிநாட்டுக்கு எக்ஸ்போர்ட்... ஹே ஹே... அகல், என்னாச்சு..." என்ற ஜீவா,

வாயைப் பிடித்துக் கொண்டு சுந்தரி இருந்த அறைக்குள் ஓடிய அகல்விழியை விநோதமாகப் பார்த் தான்.

சேரன், "ஹய்யோ ஜீவா... அவ மாமி..." என்க..

"ஹய்யோ ஐ அம் சாரி சேரா..." என்க....

தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு வெளியே வந்த அகல்விழி சேரனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

இதை வேறு விதமாகத்தான் சமாளிக்க வேண்டுமென்று நினைத்த சேரன் அவளைத் திசை திருப்பும் பொருட்டு,

“ஜீவா... நீ இன்னமும் நடந்த விஷயத்தை முழுசாச் சொல்லலையே... இப்போ நடந்த இத்தனைக்கும் யார் காரணம்...?” என்க...

அதில் அகல்விழியும் இணைந்தாள்.

“இந்தக் கேள்விக்கு என்னால இப்போ பதில் சொல்ல முடியாது, சேரா.. எனக்கு இன்னும் ரெண்டு நாள் டைம் வேணும். எவனோ ஒரு கேடிப் பய உன்னோட பேரை உபயோகப்படுத்திச் சுந்தரி மாதிரி நெறையக் குடும்பத்தை ஏமாற்றி மீட்டர் வட்டிக்குக் கடன் வசூலிச்சிருக்கான்...

“ஒரு குடும்பத்தோட ஏழ்மையைப் பயன்படுத்தி அவங்களோட சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கினது மட்டுமில்ல... ரொம்பத் தைரியமா உன்னோட பேரைப் பயன்படுத்தியிருக்கான்னா அவன் சாதாரண ஆளாத் தெரியல சேரா...

“அன்னிக்கி நீ வீட்டை விட்டுப் போன நாள் நான் கண்டுபிடிச்சவரை சதீஷ் சார்கிட்ட சொல்லிட்டேன்... கேட்டதும் கொதிச்சே போயிட்டார்... ஆனா அன்னிக்கி நீ இருந்த நிலைமையில் எங்களால இந்த விஷயத்தைப் பத்தி உன்னோட பேச முடியல...

“அது மட்டுமில்லாம இத்தனைக்கும் காரணம் யாருன்னு தெரிஞ்சுக்கிட்டு அவனை உன் முன்னாடி



நிறுத்தி அப்புறம் உண்மையெல்லாம் சொல்லலாம்னு தான் முதல்ல நினைச்சேன்... ஆனா இந்த விஷயத்தாலதான் உனக்கும், அகல்விழிக்கும் ஒரு இடைவெளி உண்டாகியிருக்குன்னு எனக்கொரு யூகம். அதனாலதான் இன்னிக்கு எல்லா விஷயத்தையும் சொல்ல நினைச்சேன்...”

ஜீவா சொல்வதைக் கேட்கக் கேட்கச் சேரனின் இரத்த நாளங்கள் கொதித்தன.

யாருக்கும் தீங்கழைக்கா வண்ணம் ஏழைகளுக்கு உதவி செய்ய நினைத்த தன் பெயரைப் பயன்படுத்தி ஒரு குடும்பத்தையே அழித்திருக்கும் அந்த நாயைக் கண்ட நொடி கொன்று குவிக்கச் சேரனின் வெறி அதிகரித்தது...

இத்தனை நாட்கள் தனக்குத் தெரியாமல் தன்னைப் பயன்படுத்திய அந்தக் கொடியவனை இப்போது கண்டால் அவனின் நிலை அவனே அறியாத ஒன்று.

இத்தனை நாள் தன்னைச் சுற்றி நடந்த எதையும் கவனிக்காமல் முட்டாள்தனமாக இருந்த தன்னையே வெறுத்தான் சேரன்...

சேரனின் கோபமும் ஆத்திரமும் அவன் சோபாவைப் பற்றியிருந்த இறுக்கத்தில் தெரியவே...

ஜீவா அவனைச் சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்தான்.

“உனக்கு இருக்கற அதே கோபமும் வெறியும் எனக்கும் ஒரு சதவீதம் கூடக் குறையலை சேரா...

சொல்லப் போனா, நான் உயிருக்கு உயிராக் காதலிச் சவளை இப்படியொரு நிலையில் கிடத்திய அவனை நான் சும்மா இருக்க மாட்டேன், சேரா...! என்னிக்கா இருந்தாலும் அந்த நாயோட உயிர் என் கையாலதான் போகும்..." என ஆத்திரமாக மொழிய,

கேட்டுக் கொண்டிருந்த அகல்விழிக்கு இரண்டு விதத்தில் நிம்மதி...!

ஒன்று, தான் நினைத்தது போல அவள் உயிர்த் தோழியின் இந்நிலைக்குக் காரணம் தன் மனதை ஆக்கிர மித்த சேரனில்லை என்பதில் வந்த நிம்மதி...

ஜீவா அவன் வாய்மொழியாகச் சுந்தரியை ஏற்றுக் கொண்டதில் மனதில் இத்தனை நேரம் மையம் கொண் டிருந்த பாரம் விலகிச் சென்றது...

இனிமேல் சுந்தரியின் வாழ்வு சிறக்கும் என்பதில் அவளுக்கு எந்த ஐயமும் இருக்கவில்லை...

அதே நிம்மதியுடன் ஜீவாவை நெருங்கி நெகிழ்வான குரலில்,

"உங்களுக்கு நான் எப்படி நன்றி சொல்ற துனே நேக்குத் தெரியல அண்ணா... இத்தனை நாள் என் மனசை அழுத்திய பெரிய பாரத்தை இறக்கி வெச் சுட்டேள்... இவ்வளவு நாளா சுந்தரிக்கு என்னவோன்னு பயந்துண்டு இருந்தேன். இப்போ அவ உங்களோட பாதுக்காப்பில் பத்திரமா இருக்கானு நினைக்கும்போது நேக்கு ரொம்ப நிம்மதியா இருக்குண்ணா...! ஆனா...



சுந்தரி ஏன் எழுந்துக்கலை? அவளுக்கு இன்னமும் என்ன...?"

"நீ எனக்கு நன்றின்னு சொல்லணும்னு எந்த அவசியமுமில்லை அகல்.... சுந்தரி என்னோட உயிர். அவளுக்கு ஏதாவது ஒண்ணுன்னா நான் நிச்சயம் பொறுமையா இருக்க மாட்டேன் அகல்...!" என்ற ஜீவா...

"அவள் இன்னமும் கோமா நிலையிலதான் இருக்காம்மா... இப்போ கொஞ்ச நாள் முன்னாடி சில நிமிஷம் மட்டும் நினைவு திரும்பி மீண்டும் கோமாக்குப் போயிட்டா... அதுக்குப் பிறகு விட்டு விட்டு நினைவு திரும்புது... கால் கை அசைக்கிறா... டாக்டர் இதுவே நல்ல முன்னேற்றம்னு சொல்லியிருக்கிறார்...

"இன்னும் கொஞ்ச நாள்ல அவ பூரணமா குணமாகிடுவானு நம்பிக்கையா சொல்லியிருக்கிறார்...." என்ற ஜீவா இன்னமும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அமர்ந்திருந்த சேரனைப் பார்த்தான்.

"சேரா... என்ன நீ எதுவுமே பேசாம இருக்க..?" என்றதற்கும் அவனிடம் பதில்லை.

அவன் பார்வை எதையோ உக்கிரமாக வெறித்துக் கொண்டிருக்க,

ஜீவா அவன் தோள் தொட்டதும் வேகமாகச் சோபாவிலிருந்து எழுந்தவன் ,"நான் கிளம்புறேன் ஜீவா!" என்றவன் ஒரு நொடி தாமதிக்காமல் அங்கிருந்து வெளி யேறிச் செல்ல...

அகல்விழிதான் புரியாத மொழித் திரைப்படம் பார்ப்பது போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்...

சேரன் வெளியே சென்று காரை ஸ்டார்ட் செய்த சத்தம் கேட்டதும் அவள் கால்கள் வேகமெடுத்து ஓடின.

அவள் வெளியே செல்வதற்கும், அவன் வண்டியை ரிவர்ஸ் எடுத்துத் திருப்புவதற்கும் சரியாக இருக்க, அகல்விழி வேகமாகக் காருக்குள் ஏறிக் கொள்ள, அடுத்த நொடி கார் வேகமெடுத்தது.

## 26

**கா**ரில் இருவருக்கும் இடையில் எந்தப் பேச்சு வார்த்தையும் இருக்கவில்லை.

சேரனின் கவனம் முழுவதும் ரோட்டில் பதிந்திருக்க, இறுகிய தாடையிலும் அவன் காட்டிய அழுத்தம் ஸ்டீயரிங்கிலும் தெரியவே,

அகல்விழி தப்பித் தவறிக் கூடச் சேரனிடம் எதையும் கேட்டு வைக்கவில்லை...

அவன் எதையோ நினைத்துக் கோபமாக இருப்பது மட்டும் அவளுக்கு நன்கு புரிந்தது.

ஆனால் அவன் எதற்காகக் கோபத்தில் இருக்கிறான் என்று மட்டும் அவளுக்குப் புரியவில்லை...

ஜீவா சொன்ன விஷயத்தில் அவனின் மீதுதான் எந்தத் தவறும் இல்லை என்றாகி விட்டதே... பின்னர் எதற்கு இந்தக் கோபம் என்று அவள் குழம்பிப் போனாள்.



இருவரும் வெவ்வேறு யோசனையில் இருந்தமையால் மௌனமாகவே கழிந்த அந்தப் பயணம் சேரனின் வீட்டு கேட் முன்பு முடிந்தது.

வெகு நேரம் கழித்து வாயைத் திறந்த சேரன் அகலிடம், "நீ வீட்டுக்குப் போ...! எனக்கு ஒரு வேலையிருக்கு..." என்றதும்,

அவனின் குரலில் இருந்த மறைமுகக் கட்டளை அவளை வேறேதும் கேள்வி கேட்க விடாமல் காரை விட்டு இறங்க வைத்தது....

சேரன் எங்கே செல்கிறான் எனத் தெரியவில்லை எனினும், இத்தனை நாள் அகலின் மனதில் இருந்த மனக் குழப்பம் நீங்கித் தெளிவாக இருந்தாள்.

அவள் முகத்திலிருந்த தெளிவு ஷெண்பாவை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது...

நடையில் ஒரு துள்ளலுடன் உள்ளே வந்தவளை ஆசையாக வரவேற்றவர்...

அவள் கன்னம் வழித்து, "உன் முகத்தில் இருக்கிற சந்தோஷம் என்னிக்கும் நிலைச்சிருக்கணும் பாப்பா!" என்றவர் பின்னர் அவர்கள் வயிற்றின் நலன் தேடி,

"ரெண்டு பேரும் மதியம் சாப்பிட்டீங்களா...? எங்க பாப்பா தம்பியைக் காணோம்...! நீ மட்டும் வந்திருக்க...!" என விசாரிக்க...

அவரின் மகிழ்ச்சிக்குப் பதிலாய், "அவர் சீக்கிரம் என்கிட்ட வந்துடுவார்..." என்றும் மட்டும் சொல்லி மேலே சென்றாள்.

அவளுக்குத் தன் காதலை உணர்ந்த தருணத்தை ரசிக்க இன்னும் சில மணித்துளிகள் தேவைப்பட்டன.

கணவனின் மீது கொண்ட பழி நீங்கியதில் அவளும் மனம் கொண்ட நிம்மதியை இன்னும் சற்று நேரம் அனுபவிக்க ஆசைப்பட்டாள்.

தன் தோழி மற்றும் குடும்பத்தாரின் நலன் அறிந்து கொண்டதில் மனம் அமைதி அடைந்தது....

பல நாள் கழித்து நெஞ்சில் சுமந்து கொண்டிருந்த பாரம் விலகித் தெளிவு பெற்ற நீரோடையாய், நெஞ்சில் காதலை மட்டுமே சுமந்த இதயத்தோடு சேரனின் வருகைக்குக் காத்திருந்தாள்.

ஆனால் அவளின் காத்திருப்பு நொடிக்கு நொடி அதிகரித்ததே ஒழியக் குறைந்தபாடில்லை...

மதியம் அவளை விட்டுச் சென்ற சேரன் வருவான் வருவான்... என அவள் காத்திருந்து காத்திருந்து நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது.

சில மணி நேரம் முன்னர் அவள் காதலால் பெற்ற நிம்மதி மெல்ல மெல்ல அடிவாங்கிச் சரிய ஆரம்பித்தது...

எங்கே சேரன் என மனம் நிலை கொள்ளாமல் துன்புறுத்தக் கையைப் பிசைந்து கொண்டு வாசலிற்கும் வீட்டிற்கும் நடை பயின்று கொண்டிருந்தாள்.



மனதில் பல எதிர்மறை எண்ணங்கள் அவளைக் கொள்ளை கொள்ள... கடவுளிடம் தன் பிரார்த்தனையை வைத்து வாசலின் வழி நோக்கிக் கொண்டிருந்தாள்.

அவள் படும் பாட்டைப் பொறுக்க முடியாமல் ஷெண்பா, "ஏன் பாப்பா... தம்பி நம்பருக்கு ஒரு போன் போட்டுத்தான் பாரேன்..." என யோசனை கொடுத்தார்.

சின்ன யோசனைதான். ஆனால் அதைக் கூட யோசிக்க முடியாமல் சேரனின் நினைவு அவள் மூளையை மழுங்கடிக்கச் செய்ததால்,

ஷெண்பா சொன்ன யோசனையை ஐன்ஸ்டீன் கண்டறிந்த ஈர்ப்பு விசையைப் போலப் பாவித்து யுரேகா என்றவாறு போனில் சேரனின் நம்பரை அழுத்தி உற்சாக மாக அழைத்தாள்.

ஆனால் விடைதான் பூஜ்யமாக இருந்தது....

பல முறை அழைத்தும் பலனில்லாமல் போக, ஷெண்பாவைப் பரிதாபமாகப் பார்த்து விழித்தாள்.

அவள் பார்வையில் ஏமாற்றத்தை உணர்ந்து கொண்டவர், "விடு பாப்பா... தம்பி சீக்கிரம் வந்துடு வாங்க... நீ ஏதாவது சாப்பிடு பாப்பா... காலையில சாப்பிட்டது..." என்றழைக்க...

"இல்ல. அவரும் வந்துடட்டும்...!" என மறுக்க,

ஒரு கட்டத்துக்கு மேல் அவளை வற்புறுத்த முடியாமல் ஷெண்பா அவர் வேலையைப் பார்க்கச் சென்று விட்டார்.

அவர் சென்ற பின்னரும் கூட வாசலையே நோக்கிக் கையைப் பிசைந்து கொண்டிருந்தவளை மேலும் தவிக்க விடாமல் நள்ளிரவு ஒன்றரை மணியளவில் சேரன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

களைத்த முகத்துடன் சோர்ந்து வந்தவனைப் பாய்ந்து அணைத்துக் கொண்ட அகல்விழி, சேரனை மூச்சு முட்டும் அளவில் இறுக்கி அணைத்துத் தனது தவிப்பை உணர்த்தினாள்.

அந்த ஒரு அணைப்பு அவள் வாய்மொழியாக எதையும் சொல்லி அவனுக்கு உணர்த்தத் தேவையாக இருக்கவில்லை..

பல நிமிடங்கள் தொடர்ந்த அந்த அணைப்பு சேரனுக்கும் தேவைப்பட்டது.

எத்தனை நாள் அவன் ஏங்கியிருக்கிறான் இப்படி ஒரு வரவேற்பிற்காக...

இருவரும் மௌனமாக அத்தருணத்தை அனுபவித்துக் கொண்டிருக்க, சேரன் தான் முதலில் உணர்வு பெற்றான்...

அணைத்திருந்தவளின் காதோரம் மெல்லிய குரலில், “இன்னும் மேடம் எத்தனை நேரம் இப்படியே இருக்கப் போறீங்க...?” என்று கிசுகிசுத்தவனின் நெஞ்சில் இருந்து நிமிர்ந்து,

அவனை உறுத்து விழித்தவள் அடுத்த நொடி அவனைச் சரமாரியாக அடிக்க ஆரம்பித்தாள்.



வாய் தானாக, “ஏன் இப்படிச் செய்றேள்...? எங்க போனீங்கோ... இத்தனை நேரம் உங்களைக் காணாம நான் தவிச்ச தவிப்பு உங்களுக்குத் தெரியுமா...? என்னிக்குத்தான் நீங்க என் மனசைப் புரிஞ்சிப்பேள்...?

“அப்பவும் சரி. இப்பவும் சரி... எப்பவுமே என் மனசுல என்ன இருக்கு... நான் என்ன விரும்புறேன்னு கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்திருக்கேளா...?”

அவள் கைகள் ஓய்வில்லாமல் சேரனைத் தாக்க, வாயோ அவனைக் காணாமல் இத்தனை நேரம் அவள் பட்ட துன்பத்தை விளக்கிக் கொண்டிருந்தது....

அதுவரை அவளின் அடியைப் பொறுமையாக வாங்கிக் கொண்டிருந்த சேரன், அவள் கடைசியாகச் சொன்ன வரிகளில் அவன் அறிந்து கொள்ள வேண்டிய சில விஷயங்கள் இருந்தமையால்... தன் நெஞ்சில் கை வைத்துத் தள்ளியவளின் மெல்லிய கரங்களைப் பற்றி,

“இப்ப கேட்குறேன்... சொல்லு...!” என்றான் பொறுமையாக.

கண்கள் கண்ணீரில் நனைந்திருக்க, அவனை விசித்திரமாகப் பார்த்து விழித்தவள், “என்ன சொல்ல...?” என்க...

“நீதானே இப்போ சொன்ன...” என்றான்.

“என்ன சொன்னேன்...?” என்றாள் – அவள் இன்னமும் விஷயம் புரியாமல்.

"இப்போ தானே மாமி சொன்ன.... உன்னோட விருப்பம் எதுவுமே தெரியாம நான் நடந்துக்கிட்டேன்னு... அதைத்தான் இப்போ கேட்குறேன்... சொல்லு... இப்போ உன்னோட விருப்பம் என்ன...?"

புருவத்தை உயர்த்தி அவன் கேட்ட அழகில் அகல்விழி அந்த நொடியில் மயங்கித்தான் போனாள்.

மயங்கி நின்றவளின் இடையில் கை கொடுத்துத் தன்னுடன் இறுக்கிச் சேர்த்து மாடிப் படிகளில் ஏறினான் சேரன்....

அவனின் செயலைத் தடுக்க முனையாமல், மந்திரத் திற்குக் கட்டுப்பட்டவள் போல் அவன் பார்வையின் வீரியத்தில் தன்னை அடக்கி அவனுடனே அவர்களின் அறைக்குள் நுழைந்தனர்.

இருவருக்கும் இன்று நாள் முழுவதும் தான் எத்தனை எத்தனை உணர்ச்சிகளின் போராட்டம்...

ஏற்கெனவே சேரனின் பால் சாய்ந்திருந்த அகல் விழியின் மனது இன்று அவன்மீது எந்தத் தவறுமில்லை என்பதைக் கண்ணெதிரே சாட்சியுடன் கண்டதில் அடைந்த சந்தோஷம் அணைப்பாய் மாறி அவனைத் தழுவச் செய்தது...

சேரனுக்கு அகல்யாவின் அணைப்புப் பிடித்திருந் தாலும் ஒரு முறை பட்ட அடி இன்னமும் அவன் மனதில் ஆறா வடுவாக இருக்க, தன்னுடன் பசை போல் ஒட்டி நின்றவளைப் பிரித்தெடுத்தான்.



அவள் பார்வையில் ஏதேனும் வித்தியாசமோ, பிடித்தமின்மையோ இருந்துவிடக் கூடாதென்று வேண்டு தல் அவன் நெஞ்சை முழுவதும் ஆக்கிரமித்தது...

அவன் தன்னையே குறுகுறுவென்று வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தது அகல்விழிக்கு வெட்கம் வந்து கன்னத்தில் குடி கொள்ள...

அதை மறைக்க அவன் மார்பில் அடைக்கலம் கொள்ள நினைத்தாள்.

ஆனால் சேரனுக்கோ மீண்டும் மீண்டும் அடிபட விருப்பமில்லாமல் அவளின் சம்மதத்தை அவள் வாய்மொழியாகப் பெற நினைத்தான்.

தலை குனிந்தவளின் தாடையைப் பற்றி மேலே தூக்கி அவள் கண்களைச் சந்திக்க முயற்சித்தான்.

ஒரு கட்டத்திற்கு மேல் பொறுக்க முடியாமல், அகல் விழியின் வாய்ப்பூட்டு அவிழ்ந்து,

"ஹய்யோ... என்னை ஏன் இப்படிப் படுத்துறேள்... நேக்கு ஒரே வெட்க வெட்கமா வருதுண்ணா...!" என்க,

சேரனின் முகம் அஷ்ட கோணலாகியது.

"என்னது அண்ணாவா...? நான் உனக்கு அண்ணாவாடி...?" சேரன் கோபத்தின் உச்சாணியில் இருந்தான்.

சேரனின் சிறு மூளை 'அண்ணா' என்பதைச் 'சகோதரன்' என்ற ஸ்தானத்தில் எடுத்துக் கொண்டது.

அவனின் திகைத்த பார்வையின் அர்த்தம் முதலில் புரியாமல் விழித்தாலும் அடுத்த நொடி அகல்விழி அவனின் மேலே விழுந்து விழுந்து சிரித்தாள்.

அவளின் சிரிப்பில் கடுப்பானவன், "என்னடி மாமி! உனக்கு இப்படி ஒரு சிரிப்பு...?"

மிதமிஞ்சிய கோபத்தில் வெளிவந்தது வார்த்தை...

"பின்னே... சிரிக்காம என்ன செய்வாளாக்கும்... ஐயர் பொண்ணைக் கடத்திண்டு வந்து கட்டிக்க மட்டும் தெரியறது... ஐயர் பாஷை மட்டும் புரியலையாக்கும்... எங்காத்துல 'அண்ணா'னா பிரதர் இல்லை... ஆத்துக் காராளதான் அண்ணானு சொல்லுவோம்...

"ஓஹோ! உங்களுக்கு ஆத்துக்காரானாலும் என்னன்னு தெரியாதோனோ... இட் மீன்ஸ் ஆம்படையான். அதாவது என்னோட புருஷன்னு அர்த்தம்..." அகல்விழி பாவனையாக, அவனைப் பார்த்துக் கேலியாகச் சொன்ன விதத்தில் சேரனின் உள்ளம் இரு மடங்காகச் சந்தோஷத்தில் திளைத்தது.

அகல்விழியின் வாய் மொழியாகச் சேரனை அவள் கணவனாக ஏற்றுக் கொண்டதைக் கேட்டபின் ஏதேனும் யோசனை வேண்டுமா என்ன...?

சேரனின் உள்ளே இத்தனை நாள் தூங்கிக் கொண்டிருந்த காதலன் என்ற காளைக்குக் கொம்பு சீவி விட, அகல்விழியைத் தன்னோடு மேலும் இறுக்கிக் கொண்டு கட்டிலில் சரிந்தான்.



"என்ன சொன்ன...? என்ன சொன்ன...?" மீண்டும் அவள் வாயால் தன்னைக் கணவனாக ஏற்றுக் கொண்டதைக் கேட்க... சேரனின் மனம் ஏங்க அவளிடம் கேட்டான்.

அவளோ, "என்ன சொன்ன..?" என்றாள் ஒன்றும் அறியாக் குழந்தை போல...

"இப்போ சொன்னியே ... ஒரு எக்ஸ்ப்ளனேஷன்... அதைத் திரும்பச் சொல்லு..." என்றான் விடாப்பிடியாக.

"முடியாது..." என்றாள், சேரனின் மனைவி என்றதன் அடையாளமாக.

"முடியாதா... முடியாதா... முடியாதா...?" என்றவாறு முடிவில்லா அவர்கள் வாழ்க்கைக்கு முதல் அச்சாரத்தை அவள் இதழில் எழுதி...

பல நாள் அவனை வசீகரித்த அவளின் இதழைச் சுவைத்தவன் நிமிர்ந்து அவள் முகம் நோக்கினான்...

மேலும் முன்னேற அவளின் அனுமதி வேண்டி!

"மாமி... ஐ... லவ் யூ. நீ அதைப் புரிஞ்சுக்கிட்டியா? என்னால நீ இல்லாம இனி ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. ப்ளீஸ், அன்னிக்கி மாதிரி என் மனசை நோகடிச்சுடாதே... ஒரு முறை வாங்கிய அடியவே என்னால தாங்க முடியல... உனக்கு என்னைப் பிடிக் கலைனா இப்போவே சொல்லிடு...!" என்றான் - அன்று பட்ட அடியின் வலியுணர்ந்து...

அவளின் கழுத்தோரம் படுத்திருந்தவனின் காதில், “உங்களை எந்த நிமிஷம் காதலிக்க ஆரம்பிச்சேன்னு கேட்டா நேக்குச் சத்தியமாத் தெரியாது...

“ஆனா... இந்த நிமிஷம் இனி ஒரு நொடி கூட உங்களை விட்டு என்னால இருக்க முடியாதுன்னு நேக்கு நன்னாப் புரிஞ்சுடுத்து... நான் உங்களை ரொம்ப நோகடிச்சிருக்கேன். அதுக்கு என்னை மன்னிப்பேளா...?” என்றாள் - அவள் உள்ளத்தை வெளிக் காட்டி...

இதற்கு மேல் சேரனுக்கு வேறு பதில் வேண்டுமா என்ன...

தன் மொத்தக் காதலையும் ஒன்றுதிரட்டி அவளின் நெஞ்சாங்கூட்டில் வைத்தான். அவர்கள் வாழ்வை முழுக் காதலுடனே துவங்கினர்....

இருவருக்குள் பேசித் தீர்க்க வேண்டியவை சில விஷயங்கள் இருந்தாலும் இருவரும் காதலைப் பரிமாறிக் கொண்ட இந்தத் தருணத்தை வேறு ஏதேனும் பேசி இவ்வழகிய தொடக்கத்தில் முற்றும் போட இருவருக்கும் விருப்பமில்லை....

இருவருக்குள்ளும் பரஸ்பர நம்பிக்கை வந்தபின் வாழ்வைத் துவங்குவதில் என்ன தடை இருக்கப் போகிறது.

ஒரு வேளை சுந்தரியின் குடும்பத்திற்கு நேர்ந்த அநியாயம் மட்டும் நடக்கவில்லை எனில், அகல்விழி சேரனை எப்போதோ காதலித்திருக்கக் கூடும்.



அவர்கள் அறியாமலே அவர்களைச் சுற்றிப் பின்னப்பட்ட வலையில் தங்கள் வாழ்வினைத் தொலைத்து இன்று அதை மீட்டெடுத்திருக்கிறார்கள்.

இனி அவர்கள் வாழ்வில் சுபமான துவக்கமே இருக்கும்.

**கா**லை ஐந்தரை மணியளவில் தன் நெஞ்சுக் குழியை யாரோ சுரண்டுவது போலிருக்க...

சேரன் தூக்கக் கலக்கத்தில் கையைத் தட்டி விட்டான்.

அவன் தட்டி விட்டதும் சுரண்டல் அடியாக மாறியது....

சேரன் அடித்துப் பிடித்து எழுந்து விட்டான்....

அவனை எழுந்திருக்க விடாமல் அகல்விழி அவன் மேல் படுத்திருக்க... தலையை மட்டும் குனிந்து, “ஏன்டி இப்படி அடிச்ச.... வலிக்குது...” என்றான், அவள் அடித்த இடத்தைத் தடவியவாறு.....

“ஹான்.... நேக்குக் கூடத்தான் வலிக்குறது....” என்றாள் வெட்கம் கலந்த குரலில்...

“அச்சோ... சாரி டா மாமி...!” என்றான் - அவள் கன்னத்தில் இதழ் பொருத்தி....

“ச்சு... அதை விடுங்கோ.... நேக்கு ரொம்பப் பசிக்கறது... வாங்கோ, சாப்பிடப் போலாம்...” என்றாள், அந்த நேரத்தில்....

அவனுக்கும் அவள் பசி புரிந்ததுதான்... ஆனால் அந்த நேரத்தில் உணவிற்கு அவன் எங்கே போவான்?

வேலையாட்கள் கூட ஐந்தரை மணிக்கு மேல்தான் வேலைக்கு வருவார்கள்....

ஆனால் இன்னும் அரை மணி நேரம் தன் மனைவியைப் பசியில் தவிக்க விட விருப்பமில்லாக் கணவனாய், "கொஞ்சம் இரு... இப்போ வரேன்!" என அவளை விலக்கி விட்டு எழுந்து சென்றான்....

அவன் சென்ற பின், "இனி இதற்கு மேல் தூங்கி என்ன பயன்...?" என எண்ணியவளாய் அவளும் மாற்றுடை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்....

அவள் குளித்து முடித்து வெளியே வந்த நொடி மணமணக்கும் ஃபில்டர் காபி அவள் மூக்கைத் துளைக்க...

அதை நுகர்ந்தவாறே அறையை நோட்டம் விட்டாள்.

சேரன்தான் அவளுக்கான காப்பியை ஒரு பித்தளை டபரா செட்டிலும், அவனுக்கான கிரீன் டீயை ஒரு கப்பிலும் வைத்துக் காத்திருந்தான்.

"ஹை... ஃபில்ட்டர் காபியா.... சூப்பர்! சூப்பர்...!" என்றாள் உற்சாகத் துள்ளலுடன்...

"ம்ம்.... வா..." என்று அழைத்தவன், அவனை விட்டுத் தள்ளி அமரச் சென்றவளின் கையைப் பிடித்துத் தன்னருகில் அமரச் செய்தான்.



அவளும் மறுப்பேதும் தெரிவிக்காமல் அவனை நெருங்கி அமர்ந்து கொண்டு காபியை மூக்கின் அருகில் வைத்து நுகர, "ஹப்பா... அப்படியே அம்மா கை மணம்...! யாருண்ணா காபி போட்டது... ஷெண்பாம்மா வுக்குக் கூட இந்தப் பக்குவம் வராதே...!"

வியந்தவாறு காபியை ஒரு வாய் அருந்த, அந்தச் சுவையில் சப்புக் கொட்டி மிடறு மிடறாக அருந்தி முடித்தாள்.

அவள் அருந்தி முடித்து டம்ளரைக் கீழே வைக்கும் வரை அவளை ரசித்தவனை நோக்கி...

"காபி ஏ1... நான் போய் ஷெண்பாம்மா கைக்கு ஒரு முத்தம் கொடுத்துண்டு வரேன்...." என்று எழுந்தவளை மீண்டும் இழுத்துத் தன்னுடன் அமர்த்தி,

"உனக்காகக் கஷ்டப்பட்டுக் கையைச் சுட்டுக்கிட்டு காபி போட்டுக் கொண்டு வந்தா... முத்தத்தை ஷெண்பாக்குத் தருவியா நீ...!" என்றான், முகத்தில் வரவழைத்த கோபத்தைக் காட்டி...

"என்னது... நீங்க காபி போட்டேளா... நெஜமா.... உண்மையாச் சொல்லுங்கோ... நீங்களா போட்டேள்...?" திகைப்பு விலகாமலே கேட்டாள்.

"நீ நம்பறதுக்காக நான் திரும்பவும் என் கையைச் சுட்டுக்க முடியாது மாமி...!" என்றான் சிரிப்போடு.

"அச்சோ... கையைச் சுட்டுக்கிட்டேளா...! எங்க... காட்டுங்கோ...!" என்றாள் கவலையாக...

"ஆமா.... சுட்டுக்கிட்டேன் தான்.... ஆனா கையை இல்ல..." கேலி தாண்டவமாடியது அவன் குரலில்....

"கையில் இல்லையா... வேற எங்கே...?" பரபரத்தது அகல்விழியின் கண்கள்.

"இங்கே...." என்றான் - அவன் உதட்டைக் காட்டி...

"சீ.... போங்கோ..."

வெட்கத்தில் மொழிந்து அவனை விட்டு நகர முற்பட்டவளைக் கையைப் பிடித்திழுத்துத் தன் மேல் சாய்த்தவன் அதிகாலையில் குளித்து முடித்த பன்னீர் ரோஜாவைத் தன் மேல் சூடிக் கொண்டான்.

"ச்சே ச்சே.... இப்போதான் குளிச்சுண்டு வந்தேன்.... விடுங்கோ.... உங்களை வந்து வச்சிக்கிறேன்...." என்று மிரட்டி விட்டு மீண்டுமொரு குட்டிக் குளியலைப் போட்டு வந்தவள் மறுமுறை வெளியே வந்த போது, சேரனின் கையில் அகப்படாமல் அறையின் வெளியே வர...

சேரனின் சிரிப்பு அவளைத் தொடர்ந்தது.

இன்பமான இல்லறம் துவங்கியதில் உதட்டில் நிரந்தரமாகக் குடிகொண்ட புன்னகை ஷெண்பாவை நிம்மதியடையச் செய்ய, இங்கு வந்தது முதல் முன்னாள் வரை பார்க்காத அகல்விழியை அன்று தான் ஷெண்பா உணர்ந்தார்....

சமையலறையில் நின்றிருந்த அந்த ஒரு மணி நேரம் துருதுருவெனப் பேசிக் கொண்டு வேலையை முடித்தவள் காண்பது ஷெண்பாவிற்குப் புதிது.



இந்தத் துள்ளலுக்குத்தான் சேரன் மயங்கிப் போனான் என்பதை ஷெண்பா அப்போது உணர்ந்து கொண்டார்....

வெகு விரைவில் தனக்குத் தெரிந்த உணவைச் சேரனுக்காக அனுபவித்துச் சமைத்து மேசையில் அடுக்கியவள், அவனை அழைக்க மேலே சென்றாள்....

அவள் அறையில் நுழையவும், சேரனுக்குப் போன் வரவும் சரியாக இருந்தது.

நிலைக்கண்ணாடியில் அவனின் ஈரக் கேசத்தைக் கோதியவாறு அவன் நின்றிருந்த அழகை ரசித்தவாறு அவன் பேசி முடிக்கக் காத்திருந்தாள்.

கண்ணாடி வழியாகத் தெரிந்த மனைவியை நோக்கி உதட்டைக் குவித்து அவளை வெட்கச் செய்து, அலறிக் கொண்டிருந்த அலைபேசிக்கு உயிர் கொடுத்தான்....

"குட் மார்னிங் ஜீவா.... சொல்லு..."

"இன்னிக்குப் பேப்பர் பார்த்தியா சேரா...?" ஜீவாவின் குரலில் பதட்டம்...

"ஓ! பார்த்தேனே.... ஒபாமா இந்தியா வந்துட்டாரே...!" என்றான் சேரன் தலைப்புச் செய்தியை முன்னிறுத்தி....

அகல்விழி, சேரன் பேசி முடிக்கும்வரை பேப்பர் படிப்போம் என மேசையின் மீதிருந்த பேப்பரைக் கையில் எடுத்துக் கொண்டு புரட்டினாள்.

"ச்சே.... அதில்லை சேரா.... நம்ம ஆபீஸ் ஜி.எம். கிரி கார் ஆக்சிடெண்ட்ல இறந்துட்டார்... அதைப் பார்த்தியா...?"

ஜீவா போனில் சொல்வதற்கும், அகல்விழி புரட்டிய பக்கத்தில் பெரிய பெரிய எழுத்துக்களில் 'பிரபல நிதி நிறுவனத்தின் பொது மேலாளர் நேற்று நள்ளிரவு கார் விபத்தில் உயிர் பிரிந்தார்...' என்ற செய்தியும் பார்க்க நேர்ந்தது....

சேரன், "ஓஹோ! அப்படியா ஜீவா.... நான் பார்க்கலையே.... ஓ.கே. ஃபைன்.... நம்ம கம்பெனி நார்ம்ஸ் படி, கிரியோட ஃபாமிலிக்கு செட்டில் பண்ணிடு...." என்றவன், "ஓ! மறந்துட்டேன்... அந்தக் கிரிக்குத்தான் ஃபாமிலின்னு யாரும் இல்லையே... அவனோட பேரைச் சொல்லி யாராவது வர்றாங்களான்னு ஒரு வாரம் பாரு.

"அப்படி யாரும் வரலைன்னா அவனுக்குச் சேர வேண்டிய பணத்தை ஹோப் ஃபௌண்டேஷனுக்கு டொனேட் பண்ணிடு, ஜீவா...." என்று உத்தரவிட்டுப் போனை அணைக்க, கேட்டுக் கொண்டிருந்த அகல் விழிக்குச் சந்தேகம் வலுத்தது....

சற்று நிமிடம்வரை வெட்கத்தில் சிவந்திருந்தவளின் முகம் இப்போது கடுமையைப் பூசிக் கொண்டு சேரனை எதிர்கொண்டது....

அவனும் அவள் பார்வைக்குச் சளைக்காமல் பதில் சொல்லத் தயாராக இருந்தான்.



## 27

"என்னது இது?" என்றாள் கையில் வைத்திருந்த நாளிதழைக் காட்டி...

"நியூஸ் பேப்பர்...!" என்றான் தோளைக் குலுக்கியவாறு.

"நேக்கு அது தெரியாதாக்கும்...!" அவள் நக்கலாக.

"அப்புறம் எதுக்குக் கேக்குற...?" அவளை விட மேலோங்கிய நக்கலுடன்...

"ச்சு... என்ன இது... இவர் உங்க ஆபீஸ்ல வேலை பார்க்கறவர் தானே.... ஒரு மனுஷா இறந்து போயிருக்கா... நீங்க என்னடான்னா இப்படி கூலா பேசுறேள்...." என்றாள், கோபமும் குழப்பமும் நிறைந்த குரலில்...

அவன் அவள் கேள்விக்குப் பதில் சொல்லும் முன்னரே கீழே ஷெண்பாவின் குரல் கேட்டது.

இருவரும் அறையை விட்டு வெளியேறி மாடியிலிருந்து கீழே பார்க்க, ஷெண்பா, "தம்பி! உங்களைப் பார்க்க சதீஷ் தம்பி வந்திருக்கு...." என்க....

"உட்காரச் சொல்லுங்க ஷெண்பா... ஒரு டூ மினிட்ஸ்ல வந்துடறேன்..." என்றவன், மீண்டும் அறையின் உள்ளே செல்ல எத்தனிக்க,

"தம்பி.... கூட இன்னும் ரெண்டு மூணு போலீஸ் காரங்க வந்திருக்காங்க...!" என்றார்.

"எல்லாரையுமே உட்காரச் சொல்லுங்க, ஷெண்பா! இப்போ வந்துடறேன்..." என்றவன் உள்ளே சென்று கையில் கிடைத்த டி-ஷர்ட்டை மாட்டிக் கொண்டிருக்க....

அவன் பின்னாலே வந்த அகல்விழியின் மனதில் ஏதோ புரியாத பாரமும், தவிப்பும் மீண்டும் கூடிக் கொண்டது.

ஏதோ தவறு நடந்திருப்பது அவள் உள் மனதிற்குப் புரிய, திரும்பி நின்றிருந்த சேரனைப் பின்னோடு அணைத்தாள்....

அவளின் இறுகிய அணைப்பு அவளின் தவிப்பை வெளிப்படுத்த, அவன் நெஞ்சைப் பிடித்திருந்த அகல் விழியின் கையைப் பற்றி அதில் இதழொற்றியவன், "ஹே மாமி.... என்னது இது.... கீழே எனக்காக ஒரு படையே காத்துட்டு இருக்கு... நான் இப்போ போகணும்.... இப்படிக் கட்டிப் பிடிச்சுட்டு நின்னா என்னால எப்படி உன்னை விட்டுட்டுப் போக முடியும்...?" என்றான் காதலுடன்.

"நேக்கு ஏதோ தப்பாத் தெரியறதுண்ணா... நீங்க எங்கேயும் போகாதீங்கோளேன்... ப்ளீஸ்..." என்றவள் குரல் இப்பவோ, அப்பவோ உடைந்து விடும் போல் இருந்தது.

அவள் வலது கையைப் பற்றி அவனுக்கு முன்னால் நிறுத்தியவன், சிவந்திருந்த கண்களில் தன் மென்னிதழைப் பதித்து, "எனக்கு எதுவுமாகாதுடா...! சீக்கிரமா வந்துடுவேன்... என் மேல் நம்பிக்கை மட்டும் வைச்சுக் காத்துகிட்டு இரு...!" என்றவன்,



"இதைப் பாரு... நான் போயிட்டு வர லேட்டாகும்...! அதுவரைக்கும் சாப்பிடாம இருந்த, திரும்பி வரும்போது ஒரு குச்சியோடதான் வருவேன்.... ஒழுங்கா சாப்பிட் டுட்டுக் கொஞ்ச நேரம் தூங்கணும். சரியா...? நேத்து நைட் ஷிஃப்ட் பார்த்தது உனக்கு ரொம்ப டயர்டா இருக்கும்.... நான் திரும்ப வரும்போது இன்னிக்கு நைட் ஷிஃப்ட் பார்க்க ரெடியா இருக்கணும்...!" என்றான் கிண்டல் நிறைந்த குரலில்.

"சீ... போங்கோ...!" என்றாள் அவன் நெஞ்சில் இதமாகக் குத்தி....

அவள், 'போங்கோ...' என்ற இதழில் தன் விடை பெறுதலை அழுத்தமாக எழுதி விடை பெற்றான்...

கீழே சதீஷ் மற்றும் அவனுடன் இன்னும் சில காவலாளிகள் சீருடையில் இருக்க, சேரனின் பின்னாலே வந்த அகல்விழிக்குப் பயப் பந்து தொண்டையில் உருண்டது....

சேரனின் கையை அழுத்தமாகப் பற்றி அவன் பின்னே வர, அவளை ஆறுதல்படுத்தும் வழி தெரியாமல் தன் அழுத்தத்தால் அவளைத் தேற்ற முயற்சித்துக் கொண்டிருந்தான்.

கீழே சதீஷ் இவன் வருவதை உணர்ந்து அவன் பக்கம் திரும்பி, "உங்க ஆபீஸ் ஸ்டாஃப் ஒருத்தர் நேத்து என்.ஹெச். ரோட்ல ஆக்ஸிடெண்ட்ல இறந்துட்டார்... அந்த ஆக்சிடெண்ட்ல எங்களுக்குக் கொஞ்சம் சந்தேகம்

இருக்கு.... அதைப் பத்தி உங்களை விசாரிக்கணும்.... வில் யூ கோஆபரேட் வித் அஸ்?" என்ற சதீஷ் இப்போது சேரனின் நண்பனில்லை.

அவன் வேலையைச் செய்ய வந்திருப்பவனிடம் சேரனும் தன் கம்பீரம் மாறாமல் பதில் சொன்னான். "ஷ்யூர் மிஸ்டர் சதீஷ்... உங்க விசாரணைக்கு நான் முழு ஒத்துழைப்புக் கொடுப்பேன்... போகலாம்...." என்றதும், சதீஷ் மற்றும் கூட வந்திருந்த போலீஸ்காரர்கள் திரும்பி நடக்க ஆரம்பிக்க,

"ஒரு நிமிஷம்...!" என்ற சேரனின் குரல் அவர்களைத் தடுத்தது.

ஆனால் அவனைத் தடுத்தது அவன் மனைவி.

அவனை அகல்விழி விட்டால்தானே அவன் செல்ல முடியும்.... தன் பலத்தையெல்லாம் அவள் கையில் தேக்கி, சேரனின் கையை இறுக்கப் பற்றியிருந்தவள் அவனை விடுவதாக இல்லை....

சேரன், "அகல்... விடுடா... போயிட்டு சீக்கிரம் வந்துடுவேன்...!" என மெல்லிய குரலில் கேட்க....

"ம்ஹூம்... இல்லை... நீங்க எங்கேயும் போகக் கூடாது.... நான் உங்களை எங்கயும் விடமாட்டேன்.... ம்ஹூம்... போகாதீங்கோ... போகாதீங்கோ...!"

குழந்தையைப் போல் தலையை இடமும் வலமுமாக அசைத்து அவனைத் தடுத்தவள் அவனை விடுவதாக இல்லை.



சேரன், "அகல்... புரிஞ்சுகோ. ஒண்ணுமே இல்ல... இட்ஸ் ஜஸ்ட் அன் என்கொய்ரி..." அவன் சொன்ன எந்தச் சமாதானமும் அவளை அசைக்கவில்லை.

"எங்கேயும் போகக் கூடாது... வேண்டாம்.... வேண்டாம்..."

இதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கண்ணீர் வடித்தவளைச் சதீஷால் கூடக் காண முடியவில்லை.

அன்றும் இதே போலத்தான் அழுதாள்....

ஆனால் அன்று சேரனை வேண்டாமெனக் கெஞ்சி அழுதாள்....

இன்றோ சேரன் வேண்டுமென்று கண்ணீர் வடிக்கிறாள்.... இதுதான் காதலின் வலிமையோ....!

ஆனால் அவனால் என்ன செய்ய முடியும்... அவனும் கடமைக்கும், நட்புக்கும் இடையில் சிக்கித் தவித்துக் கொண்டு தானிருக்கிறான்... ஆனால் அவன் கடமையைச் செய்யும் முன்னர் நண்பனாக மாறி,

"சேரா... நான் வெளியே இருக்கேன்..... பேசிட்டு வா..." என்று மட்டும் உரைத்து விட்டு, அவனுடன் வந்த மற்றப் போலீசுடன் வீட்டை விட்டு வெளியேறினான்.

மனதால் நண்பனுக்கு நன்றி சொன்னவன், தன்னைக் கட்டிக் கொண்டு அழுது கொண்டிருந்தவளை, "அகல்.... அகல்... இங்க பாரு.... இங்க பாருடா... ஜஸ்ட் லிஷன் டு மீ..." என்று அவளைத் தன் கண் பார்க்கச்

செய்தவன், "இதோ பாரு அகல்.... நீ என்னை நம்புறியா...?" என்றான்.

"ம்ம்.... ரொம்ப ரொம்ப...." என்றாள் விசும்பல் களுடன்.

அவள் குழந்தையாகச் சொன்ன விதத்தில் அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்தவன், "அப்போ அதே நம்பிக்கையோட நான் திரும்ப வர்றவரைக்கும் சமத்தா இருக்கணும்... உன்னோட இளா எந்தத் தப்பும் செஞ்சிருக்க மாட்டேன்னு நீ நம்பினா... இப்போ என்னோட அகல் இப்படி கண்ணைக் கசக்கிட்டு இருக்க மாட்டா.... அப்போ நீ என்னை நம்பலையா....?" என்றான் - அவளைக் கூர்மையாகப் பார்த்தவாறு....

உடனே சேரனை அணைத்திருந்த கைகள் விலகி அவளின் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைக்க, அவள் செயலில் புன்னகைத்து, "தட்ஸ் மை கேர்ள்.... சீக்கிரமே வந்துடுவேன்... வெயிட் ஃபார் மீ..." என்றவன்,

எதிரில் இவர்களின் உறவைக் கண்டு நெகிழ்ந்து நின்றிருந்த ஷெண்பாவிடம்,

"பார்த்துக்கோங்க ஷெண்பா...!" என்றதுடன் அங்கிருந்து கிளம்பி விட்டான்.

அவன் சென்ற பின்னர் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தவள் திரும்பி அவன் வரும்வரை காத்திருந்தாள்.

அவள் காத்திருப்புப் பொய்யாகவில்லை.



சேரன் திரும்ப வந்து விட்டான்.

போகும்போது எத்தனை வேதனையுடன் அவனை அனுப்பி வைத்தாளோ, அதை விட இரண்டு மடங்கு சந்தோஷத்துடன் அவனை வரவேற்றாள்.

வாசலில் சேரனின் உருவம் வருவதைக் கண்கள் பார்த்த நொடி அவனை ஓடிச் சென்று கட்டிக் கொண்டாள். அவளின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் அவ ளுடன் சேர்த்துச் சேரனும் கீழே தரையில் விழுந்தான்.

நல்ல வேளை.... கீழே ஃபர் கார்பெட் இருந்தது மட்டுமல்லாமல் சேரனும் சற்றுச் சுதாரித்துக் கீழே கை யூன்றியதால் இருவரின் மண்டையும் உடையாமல் தப்பித்தது.

"ஹே மாமி மங்கம்மா.... ஏன்டி இப்படி வந்து விழற... ஹப்பா... பார்க்கத்தான் ஜீரோ சைஸ் இருக்க.... வெயிட் அப்படியே அம்பது கிலோ அரிசி மூட்டை மாதிரி என்ன கனம்...!" என்றான் கிண்டலாக.

அத்தனை நேரம் அவனுக்காகத் தவித்தவள், சேரன் இவளைக் கிண்டலாகப் பேசவும், அவளும் அவனுடன் வழக்கடிக்க ஆரம்பித்து விட்டாள்.

"என்னது... நான் அரிசி மூட்டையா... நீதான் ரௌடி... பொறுக்கி... எல்லாம்...." அவனைச் சரமாரியாகத் தாக்க...

"ஹே... என்னை விடுடி... விடுடி ராட்சஷி... ஹப்பா! என்ன அடி... அடி ஒண்ணு ஒண்ணும் இடி மாதிரி...

கல்யாணமான நாளில் இருந்து உன்கிட்ட அடி வாங்கியே பல இடத்துல மார்க் போட்டுட்ட... ராட்சஷி..." என்றவனின் கன்னத்தில் தன் பற்களால் இன்னொரு தடம் பதித்தாள் அகல்விழி...

அவள் கடித்த கடிக்கு சேரன், "ஆஆஆ..." என உரக்கக் கத்தி ஊரைக் கூட்ட,

வேலையாட்கள் அனைவரும் வீட்டுக் கூடத்திற்கு விரைந்தனர்...

அவர்கள் அனைவரும், "என்னாச்சு... என்னாச்சு?" என ஓடி வந்து சேரனும், அகல்விழியும் இருந்த நிலையைப் பார்த்துத் தங்களுக்குள் பேசிச் சிரித்தவாறு செல்ல,

அகல்விழிக்கு மிகவும் வெட்கமாகிப் போனது.

ஷெண்பா கூட வெட்கத்தில் தலை குனிந்து, "தம்பி... மேல ரூமுக்குப் போங்க... ரெண்டு பேருக்கும் சாப்பாடு அனுப்பி வைக்கிறேன்..." என்று விடைபெற.....

அகல்விழி விட்டால் போதுமென அங்கிருந்து ஓடிச் சென்றாள்....

அடுத்து வந்த ஒரு மணி நேரத்தில் சேரனும், அகல்விழியும் இரவு உணவை முடித்துக் கொண்டு தங்கள் படுக்கையில் அமர்ந்து கெள்ள, அகல்விழி சேரனின் நெஞ்சில் சாய்ந்து அமைதியாகப் படுத்திருந்தாள்....

அவளின் அமைதி சேரனுக்குப் புரிந்திருந்தது.



அவள் கை விரல்களை அளந்தவாறு, "என்கிட்ட ஏதாவது கேட்கணும்னு தோணுச்சுன்னா கேளுடா...!" என்று ஊக்கப்படுத்த...

"இல்லை. எனக்குச் சில விஷயங்கள் தெரிஞ்சுக் கணும்... ஆனா எப்படி..." என்று தயங்க...

"இதுதான் கடைசி அகல்... இனிமேல் என்கிட்ட தயக்கம் கியக்கம்னு சொன்ன... நீ அப்பவே கடிச்ச மாதிரி உன்னை நான் கடிச்சிடுவேன்..." எனச் செல்லமாக மிரட்ட...

அகல்விழியும் ஒரு முடிவுடன் அவனை விட்டு எழுந்து நகர்ந்து செல்ல...

"ஹலோ மேடம்.... கேட்குறதை இப்படிச் சாஞ்சுகிட்டே கேட்கலாம்... ஒண்ணும் தப்பில்ல..." என மீண்டும் அவளைத் தன்னுடன் இழுக்க...

"ஹய்யோ... விடுங்கோ இளா... நீங்க என்னைப் பேசவே விடாம ஏதாவது நோண்டிண்டே இருப்பேள்..." எனத் தடுத்தவள் ஜாக்கிரதையாக அவனிடமிருந்து ஒரு அடி தள்ளியே அமர்ந்தாள்.

"சரி, பேசு....." என்றவனும் அவளுக்கு விளக்க வேண்டிய கடமை தனக்கிருப்பதை உணர்ந்து விளையாட்டைக் கைவிட்டான்...

"நேத்து அவ்வளவு கோவமா எங்கே போனேள்... ஏன் வர அத்தனை தாமதமாச்சு... காலையில பேப்பர்ல

உங்க மனேஜர் இறந்துட்டதா வந்திருக்கு.... அப்புறம் உங்களைத் தேடிண்டு போலீஸ் வர்றது... என்ன இளா நடந்தது...

"ப்ளீஸ்... என்னாண்ட எதையுமே மறைக்காம உண்மையைச் சொல்லுங்கோ...!" என்றாள் மிகத் தீவிர மாக.

"நிச்சயம் சொல்றேன்... ஆனா சுந்தரி விஷயத் துல நான் எந்தத் தப்பும் செய்யலைன்னு மட்டும் நீ நம்பணும்..."

அவன் சொல்லி முடிக்கும் முன்...

"சுந்தரி விஷயத்துல உங்க மேல எந்தத் தவறுமில்லைன்னு நேத்து நாம ஜீவா வீட்டுக்குப் போறதுக்கு முன்னரே நேக்கு புரிஞ்சுடுத்து இளா... நான் உங்களை நூறு சதம் நம்புறேன்..." என்றாள்.

"சுந்தரியோட குடும்பத்துக்கு நடந்த அநியாயத்திற்கு நான் காரணமில்லை தான் அகல்... பட் அவளுக்கு இப்படி ஒரு நிலை வந்ததற்கு நானும் ஒரு காரணம்..

"நான் மட்டும் இன்னும் கொஞ்சம் கவனமா இருந் திருந்தா சுந்தரியோட குடும்பத்தை மட்டுமில்ல... இன்னும் நிறையக் குடும்பத்தைக் காப்பாத்தியிருக்கலாம்..." என்றவன் ஒரு பெருமூச்சை வெளியேற்றி....

அகல் குழப்பத்துடன், "என்ன சொல்றேள்... நேக்கு இன்னும் கொஞ்சம் புரியுற மாதிரிச் சொல்லுங் கோளேன்!" என்க,



அவன் தலையாட்டி அவனுக்குத் தெரியாமல் அவனின் அலுவலகத்தில் நடந்த சில விஷயங்களைச் சொன்னான்.

"நம்மோட நிதி நிறுவனத்துல எனக்கு அடுத்து, ஜீவாவிற்கும், அந்தக் கிரிக்கு மட்டும்தான் லோன் அப்ரூவல் கொடுக்கப் பெர்மிஷன் இருக்கு... ஒண்ணு முதல் பத்து லட்சம்வரைக்கும் கிரிக்கும், பத்து முதல் அம்பது லட்சம்வரை ஜீவாவுக்கும் அதுக்கு மேலான அப்ரூவல்னா நான் தருவேன்....

"அந்தக் கிரிக்குக் கொடுத்த அந்தப் பொறுப்பை அவன் தப்பா யூஸ் பண்ணிக்கிட்டான்... நிறையா பணத்தை யார் யாரோ பெயருக்குப் போலி ஐ.டி. ரெடி பண்ணி அவன் பல லட்சம் கையாடல் பண்ணி வெளியே பத்து வட்டிக்கு விட்டுருக்கான்.... விட்டது மட்டுமில்லாம, அத்தனை பேர்கிட்டயும் நம்ம கம்பெனி பேர் யூஸ் பண்ணி, எல்லாரையும் நல்லா நம்ப வைச்சுக் கழுத்தறுத் துட்டான்...

"நான் அடியாட்களை யூஸ் பண்ணுவேன்தான்... அது நீயும், மத்தவங்களும் நினைக்கிற மாதிரி லோக்கல் ரெளடிகள் கிடையாது... ஒரு முறை நான் மும்பை போன போது, என்னோட வளர்ச்சி பிடிக்காமல் என்னோட எதிரி ஒருவன் என்னைக் கொலை பண்ண முயற்சி செஞ்சான்...."

அவன் முடிப்பதற்குள், "ஹய்யோ...!" எனப் பதறிக் கொண்டு சேரனை அணைத்துக் கொள்ள...

"டேய்... அன்னிக்கி எனக்கு ஒண்ணுமாகல.... லைசென்ஸோட துப்பாக்கி இருந்தால தப்பிச்சுட்டேன்.... ஆனா அதுக்குப் பிறகு ஜீவாவும், சதீஷும் வற்புறுத்தி எனக்குப் பிரைவேட் பாடிகார்ட்ஸ் வச்சிட்டாங்க... எனக்கு முதல்ல சங்கடமாத்தானிருந்தது... ஆனா அந்தப் பசங்களால எனக்கு நிறையக் கடன் பாக்கி வசூலாச்சு..." என்றான் அப்போதும் கேலியுடன்.

"ஆனா, அதுல இன்னொரு கெட்ட விஷயமும் இருந்ததுன்னு எனக்கு இப்போதான் தெரிஞ்சுது... அந்தப் பசங்களை வெளிய ரௌடிகள்னு கதையைக் கட்டி விட்டு நிறையப் பேரை ஏமாத்தியிருக்கான் அந்தக் கிரி... இங்க சென்னையில இருக்கற ஒரு லோக்கல் ரௌடியை வைச்சு ஏமாத்தி, அதைப் போலீஸ் கேஸாக விடாம ஒரு இன்ஸ்பெக்டரை வைச்சு மூடி மறைச்சு... எல்லாத்தையும் பக்காவா பிளான் பண்ணிச் செஞ் சிருக்கான்...

"அந்தக் கிரி அப்பா காலத்துல இருந்தே எங்க கூட இருந்தவன்... அவனுக்குக் குடும்பம் குழந்தைங்கனு யாருமில்லை.. இருந்தாலும் அப்பா அவனுக்குனு தனி வீடு, கார்...னு கொடுத்துச் சகல வசதியோடதான் வைச் சிருந்தார்... நானும் அவனுக்கு ஒரு தனி மரியாதை கொடுத்திருந்தேன். ஆனா அந்த நாய்... உதவி செய்தவங்களையே இப்படிக் கழுத்தை அறுப்பான்னு நாங்க யாருமே எதிர்பார்க்கல...." என்றான் சேரன் வேதனையுடன்.



அகல்விழிக்கு இப்போது புரிந்தது... நடந்த விபரீதங்கள் அனைத்தும் அந்தக் கிரியினால் உண்டானது என்பது அவளுக்கு நன்கு புரிந்தது...

வேதனையடைந்த சேரனின் கைப்பற்றி ஆறுதல் படுத்த அவள் கையைப் பற்றிக் கொண்டு மேலும் விபரம் சொல்ல ஆரம்பித்தான்.

"ஏற்கெனவே ஜீவாவும், சதீஷும் நடந்ததை ஒரு அளவுக்குக் கண்டுபிடிச்சிருந்தாங்க. அதை முழுசாத் தெரிஞ்சுக்கத்தான் உன்னை வீட்ல விட்டுட்டு நேத்து போனேன். ஆனா நடந்தது எல்லாத்துக்கும் இவன்தான் காரணம்னு தெரிஞ்சதும் என்னோட இரத்தம் கொதிச்சுப் போச்சு....

"நேத்து சுந்தரியோட நிலைமையைப் பார்த்துட்டு நீ மட்டும் வேதனைப்படல... எனக்கும் வருத்தம்தான் அகல்... ஒரு முறை சுந்தரி என்னோட ஆபீஸ் வந்தப்போ என்னைப் பார்த்து எப்படிப் பயந்தா தெரியுமா...! அந்தப் பயத்துக்கு இந்த அயோக்கியன்தான் காரணம்னதும் என்னால தாங்கவே முடியல... அவனை எங்க பார்த் தாலும் கொன்னே போடணும்னு தான் கிளம்பி அவன் வீட்டுக்குப் போனேன்...

"ஆனா ஜீவாவும், சதீஷும் அவனைச் சந்தேகப் படுறதைத் தெரிஞ்சுகிட்டு அந்த நாய் ஆந்திராவுக்குத் தப்பிக்க முயற்சி செஞ்சிருக்கு... அவன் எங்க போனாலும் அவனை விடக் கூடாதுன்னு எனக்குள்ள ஒரே வெறி.... நானும் அவனைத் தேடிக்கிட்டுப் போனேன்.

"அப்போதான் சோழவரம்கிட்ட ஒரு ஆக்சிடெண்ட் நடந்திருந்துச்சு.... யார்னு கீழே இறங்கிப் பார்த்தேன்... இந்த நாய்தான் அடிபட்டுச் செத்துக் கிடந்தான்...

"ஒரு மனிதனோட இறப்புல சந்தோஷமடையறது தப்புதான்... ஆனா அந்தக் கிரியைப் பிணமாப் பார்த்தது எனக்குச் சந்தோஷமாத் தானிருந்தது... எத்தனை பேர் குடும்பத்தோட தலைவிதியைக் கேள்விக்குறியாக்கினான்... அவன் இறந்தது இந்த நாட்டுக்குப் பெரிய இழப்பில்ல...!"

சேரன் நடந்ததைச் சொல்லி முடித்தபோது அவன் முகத்தில் ஒருவித நிம்மதி.

"அப்போ ஏன் இன்னிக்குப் போலீஸ் உங்களை அழைச்சுண்டு போனா...?" - அகல்விழி கேட்க...

"நான் அவனைத் தேடிப் போனதை அந்தக் கிரியோட கையாள் போலீஸ்ல சொல்லி கம்ப்ளெய்ன்ட் கொடுத்திருக்கான்... அதை விசாரிக்கத்தான் போனேன்... விசாரணையில என் மேல எந்தத் தப்புமில்லைன்னு நிரூபணமாகிடுச்சு.... வந்துட்டேன். போலீஸ் என்னை விசாரிச்சது ஒரு வகையில் நல்லதுதானே... என் மேல எந்தத் தவறுமில்லைன்னு போலீஸே சர்டிபிகேட் கொடுத்துடுச்சு...!" என்றான் சந்தோஷத்துடன்.

மேலும், "ஹ்ம்ம்.... ஆனா இந்த மாதிரித் தவறு ஏதும் நடக்காம இருந்திருந்தா நிறைய விஷயங்களைத் தடுத்திருக்கலாம், அகல்.... எல்லாமே என்னோட கவனக் குறைவாலதான்.... என்னோடயே இருந்துட்டு என்னை



ஒரு வருஷமா ஒருத்தன் ஏமாத்திட்டு இருந்தது கூடத் தெரியாம முட்டாள்தனமா இருந்திருக்கேன்..."

சேரன் உண்மையான வேதனையுடன் சொல்ல....

"ச்சே... என்ன இளா இது... குழந்தை மாதிரி...."

வேதனை யடைந்த சேரனைத் தன் நெஞ்சில் தாங்கிக் கொள்ள.... அவனும் சிறு குழந்தையைப் போல் அவளுள் அடங்கினான்.

சற்று நேரத்தில் அகல், "ஏண்ணா..... நான் ஒண்ணு சொன்னா கேட்பேளா...?" என்றாள் அகல்விழி தயக்கத்துடன்.

"நீ என்ன சொன்னாலும் கேட்பேன்.... ஆனா, தயவு செஞ்சு என்னை அண்ணான்னு மட்டும் கூப்பிடாதே.... கேட்கச் சகிக்கல...." என்றான் முகத்தைச் சுருக்கி...

"ச்சு.... இது எங்க வழக்கம்.... இப்படித்தான் கூப்பிடுவேன்.... இதுக்கெல்லாம் சண்ட பிடிச்சேள்னா அப்புறம் நான் உங்களை வாடா போடான்னுதான் கூப்பிட வேண்டி வரும்...." என்றாள், ஒரு மிரட்டலுடன்...

"ஹய்யோ... மேடம் என்னை 'டா' சொல்லிக் கூப்பிட்டதேயில்ல பாருங்க.... எத்தனை அடி, எத்தனை இடி... அது மட்டுமில்லாமல் நீ கண்டபடி திட்டுறதை எல்லாமே கேட்டுட்டு உன் பின்னாடி தானேடி சுத்தினேன்..." என்றான் கிண்டலாக....

"அது அப்போ... உங்க மேல இருந்த கோபத்துல...." என்று அசடு வழிந்து...

"இப்போ நான் சொல்லப் போறத கேட்பேளா... மாட்டேளா...?" என்றாள் ஒரு விரல் நீட்டி.

"உத்தரவு போடுங்க மேடம். காத்திருக்கிறேன்... உங்கள் சேவைக்காக!" என்றான் பாவனையுடன்....

"இதுதான் சமத்துப் பையனுக்கு அழகு...!" என அவன் கன்னம் வழித்தவள், பின்னர் சற்று தீவிரத் துடன், "ஏங்க... நீங்க ஏன் இப்படிப் பணத்தை வட்டிக்கு விடணும். நமக்குத்தான் நிறையத் தொழில் இருக்கே... இனிமேல் இந்தத் தொழில் நமக்கு வேண்டாம்ணா... விட்டுடலாமே...!" என்றாள் அகல்விழி. இந்தத் தொழிலால்தானே இத்தனை பிரச்சனை என்ற ஒரே கண்ணோட்டத்தில் சிந்தித்து...!

சேரனுக்கு அவளின் நினைப்புப் புரிந்தது.... அவளுக்குப் புரிய வைக்கும் நோக்கத்தோடு, "அகல்... எனக்கு உன்னோட எண்ணம் புரியுது. நீ சொல்றதை நான் மறுக்கப் போறதில்லை.... ஆனா இதில இருக்கற ஒரு சில நன்மைகளை உனக்கு நான் விளக்கிச் சொல்லிடறேன். அப்புறம் நீ யோசிச்சு இதை விடலாமா வேண்டாமான்னு சொல்லு... சரியா..?" என அவளின் ஒப்புதல் பெற்றுப் பேச ஆரம்பித்தான்.

"நான் அன்னிக்குச் சொல்றதைத்தான் இப்பவும் சொல்றேன், அகல்... ஒரு சாதாரணக் கூலித் தொழிலாளி அவன் பிள்ளையோட படிப்புக்குப் பேங்க்ல லோன் கேட்டுப் போனான்னா அவன்கிட்ட சேலரி சர்டிஃபிகேட்



கொண்டு வா... அதைக் கொண்டு வா, இதைக் கொண்டு வானு பல மாசம் அலைக்கடிப்பாங்க.... அதனாலதான் நிறைய நடுத்தர மக்கள் கந்துவட்டியைத் தேடிப் போறாங்க....

"ஆனா நம்ம கம்பெனில இந்த மாதிரி எந்தத் தடையுமில்லை.... நம்ம கம்பெனி எல்லாமே கவர்மெண்ட் நார்ம்ஸ்படிதான் செயல்படுத்துது.... குறைந்த வட்டிக்கு ஈசி லோன் கிடைக்கிறதால நிறைய மக்கள் யூஸ் பண்ணிக்கிறாங்க...

"இது கிட்டத்தட்ட ஒரு சேவை மாதிரிதான்னாலும் என்னால என்கிட்ட இருக்கற பணத்தை எல்லாம் சும்மா கொடுக்க முடியாது... அப்படிக் கொடுத்தா என்னோட சந்ததிக்கு நான் துரோகம் பண்ற மாதிரி....

"உண்மையாப் பேசணும்னா எனக்குன்னு சில லாபத்தை வைச்சுத்தான் இந்தத் தொழிலைச் செய் றேன்.... ஆனா மத்த நிறுவனம் மாதிரி நான் பணத் துக்கு ஆசைப்பட்டு மக்களை ஏமாத்தல... எனக்குப் பணம் சம்பாதிக்க நிறையத் தொழில் இருக்கு... ஆனா இது என் தாத்தா காலத்துல இருந்தே வழி வழியா செய்த தொழில்... அதனால் இதை நான் கொஞ்சம் விரிவுபடுத்தி நடத்திட்டு வரேன்.

"என்னைப் பொறுத்தவரை இந்தக் கிரி மட்டு மில்லன்னா நம்மளோட இந்த நிறுவனத்தால பயன் அடைஞ்சவங்கதான் ஜாஸ்தி.... என்னால் அதை

நிரூபிக்கவும் முடியும்... இப்போ சொல்லு.... இந்த நிறுவனத்தை நம்ம நடத்தலாமா வேண்டாமா...? உனக்கு இப்பவும் விருப்பமில்லைன்னா தைரியமாச் சொல்லு.... உன்னோட விருப்பத்துக்கு நான் எந்தத் தடையும் சொல்ல மாட்டேன்..." என்றான் மனைவியின் இறுதி முடிவுக்காக அவள் முகம் பார்த்து.

அகல்விழியும் யோசித்தாள்.

கட்டிலில் சாய்ந்து யோசித்தாள்.... எழுந்தமர்ந்து யோசித்தாள்...

அறையில் இடமும் வலமுமாக நடந்து யோசித்து வெகு நேரம் கழித்து,

"ம்ம்... ஓ.கே இளா... நீங்க உங்க ஃபினான்ஸ் பிசினஸ் பண்ணுங்கோ... நேக்கு நோ ப்ராப்ளம்... ஆனா உங்களோட அந்த மீன் கடையை மட்டும் மூடிருங்கோ...." என்றாள் வெகு தீவிரமாக...

சேரனுக்கு அதிர்ச்சிதான்....

நூற்றுக்கணக்கான ஆட்களை வைத்துப் பெரிய தொழிற்சாலை நடத்தி வந்தால் அதை ஒரே வார்த்தையில் மீன் கடை என்று விட்டாளே என அவனுக்கு அதிர்ச்சியாக இருக்க....

அகல்விழியோ, "என்ன கடையைச் சாத்திடுறேளா?" என்றாள் மீண்டும் அவன் தோள் தொட்டு.

"ம்ம்.... சாத்துறேன்... சாத்துறேன். அதுக்கு முன்னாடி நம்ம ரூம் கதவைச் சாத்துறேன்!" என்றவன்



அதை உடனே செயல்படுத்தி, அவனிடம் கடையை மூடச் சொன்னவளின் வாயை மூடித் தன்னுள் அடக்கினான்.

மூன்று மாதம் கழித்து...

"ஏண்ணா... இன்னிக்கி ஈவினிங் சீக்கிரம் வந்துடுங்கோ.... ஆத்துல பூஜை இருக்கு. மறந்துடாதேள்... ஜீவாண்ணா.... நீங்களும் அம்மாவையும், சுண்டுவையும் கூட்டிண்டு வந்துடுங்கோ...." எனச் சமையலறையிலிருந்து அகல்விழியின் கட்டளையைக் கேட்டுச் சேரன் ஜீவாவின் பக்கம் திரும்பி,

"ஷ்ஷ்ஷ... இன்னிக்கும் பூஜையா.... இந்த மடிசார் மாமியைக் கட்டிக்கிட்டு நான் படற அவஸ்தையிருக்கே.... ஒரு சிக்கன் பீஸைக் கண்ணுல பாத்து ரெண்டு மாச மாகுது ஜீவா... டெய்லியும் இந்தப் பூஜை, அந்தப் பூஜைன்னு கொலையா கொல்றா...!"

சேரன் அலுத்துக் கொள்ள...

"விடுங்க பாஸ்... கழுதைக்கு வாக்கப்பட்டா கனைச்சுத்தானாகணும்...!" என்ற ஜீவாவை...

"ஹ்ம்ம்... உனக்கும் அனுபவம் பேசுது...!" என்றவன் தன் அலுவலறையிலிருந்து வெளியேற,

ஹாலில் நியூஸ் பேப்பர் படித்துக் கொண்டிருந்த நாராயணன், "சேரன்... அச்சு உங்களுக்கு இந்த ஜூஸ் எடுத்து வைச்சிருக்கா. இதைக் குடிச்சுண்டு போயிடுங்கோ. நேத்து மாதிரி மறந்துட்டுப் போனேள்னா

எங்களைப் படுத்தி எடுத்துடுவா....” என்ற நாராயணன் இப்போது உடல் தேறித் தெம்பாக இருந்தார்.

அது மருந்து மாத்திரைகளால் பத்து சதவீதம் என்றால், மகளும் மருமகனும் வாழும் வாழ்க்கையைக் கண்டு வந்த பூரிப்பில் தொண்ணூறு சதவீதம் சாத்திய மாயிற்று...

நாராயணன் கொடுத்த ஜூஸைப் பருகி முடிக்க,

நளினி, “மாப்பிள்ள... உங்களுக்கு மதியத்துக்கு வத்தக் குழம்பும், சேனைக் கிழங்கு வறுவலும் வைச் சிருக்கேன்.... மீட்டிங் அது இதுன்னு சாப்பிடாம மறந்துடாதேள்... நீங்க சாப்பிடலைனா இங்க உங்க பெண்டாட்டி பல்லுல பச்சத் தண்ணிக் கூட படாதாக்கும்...! இதைக் கார்ல வைக்கச் சொல்றேன்...

“ஏன்பா வேலு... இதை எடுத்துண்டு போய் மாப்பிள்ளை கார்ல வைச்சிடுப்பா...!” என்ற நளினியின் குரலைத் தொடர்ந்து...

“அத்திம்பேர்... என்னைக் கொண்டு போய்க் காலேஜ்ல விட்டுடுறேளா...? என்னோட ஸ்கூட்டியை சர்வீஸ்க்கு விட்டிருக்கேன்... ப்ளீஸ் ப்ளீஸ் ப்ளீஸ்...!” என்ற ஸ்ரீவள்ளியின் குரல் அவனைத் தொடர்ந்தது.

“போங்க சின்ன ராணி... உங்களை ஏற்றிச் செல்லத்தான் என் ரதம் காத்திருக்கிறது...” என ஸ்ரீ வள்ளியைக் காருக்கு அனுப்பி வைத்தவன்,



“ஜீவா! நீ முன்னாடி போ... நான் ஒரு ஃபைலை மறந்து வைச்சிட்டேன்... எடுத்துட்டு வரேன்...” என்று திரும்பிச் செல்ல எத்தனிக்க,

“அது எப்படித்தான் தினமும் கிளம்பும் போது ஒரு ஃபைலை மறக்குறேனு தெரியலை, சேரா...!” என்று நக்கலடிக்க...

“அது ஜீவா... நீ டெய்லி பைக் கீ எடுக்க மறக்குற யில்ல... அதே மாதிரிதான்...”

அவனின் காலை வாரி விட்டு, “காலையில இருந்து மாமி என் கண்ணுலயே படலை... பார்த்துட்டு வந்துடு றேன்... ஒரு ஃபைவ் மினிட்ஸ்....” என்றதுடன் சிட்டாகப் பறந்தான்....

மனைவியைத் தேடிச் சமையறைக்குள் போக, அங்கே ஷெண்பாவும், மற்ற வேலையாட்களும் மட்டும் தானிருந்தனர்.

கீழே ஹாலிலும் அவள் இல்லாமல் போக, மருமகன் மகளைத் தேடுவதை உணர்ந்து,

“அச்சு! இப்போதான் மேல போனா மாப்பிள்ளை...” நாராயணன் அவனுக்கு உதவி செய்ய,

எப்போதும் போல் இன்றும் அசடு வழிந்தவாறு மேலே அறைக்குச் சென்றான். உள்ளே சென்றால் அங்கேயும் அவளில்லை.

படுக்கையில் காலையில் அவள் பூஜைக்கெனக் கட்டியிருந்த சேலை கிடந்தது.

உள்ளே குளியலறையில் தண்ணீர் விழும் சத்தமும் கேட்டது.

"ஓஹோ... மேடம் குளிக்கிறாங்களா...! இந்த நேரத்துல என்ன குளியல்...?" என்ற யோசனையுடனே குளியலறைக் கதவைத் தட்ட...

"யாரு...?" குரல் உள்ளிருந்து கேட்டது...

"ம்ம்... உன்னைக் கட்டிக்கிட்ட அப்பாவி...."

"யாரு.... நீங்களா...! அப்பாவியா... அது அப்படியில்லண்ணா... அடப் பாவியாக்கும்...!" என்றாள் உள்ளிருந்து.

"என்னவோ ஒண்ணு... எனக்கு இப்போ உடனே குளிக்கணும்... வெளிய வா...!" என்றான் சேரன் குழந்தையாக...

என்னதான் வெளியே ஊரையே கட்டி மேய்த்தாலும், வீட்டில் சேரன் மட்டுமல்ல, நிறைய ஆண்கள் மனைவியிடம் குழந்தைகள் தானல்லவா...? இதில் சேரன் மட்டுமென்ன விதிவிலக்கா...!

"என்னது... இப்போ என்ன உங்களுக்குக் குளியல். கீழே ஜீவாண்ணா, ஸ்ரீ எல்லாம் காத்துண்டு இருக்காளோனோ... மீன் கடையில இன்னிக்கு ஆடிட்டிங். இதையெல்லாம் விட்டுண்டு என்ன குளியல். போங்கோ போங்கோ...."

உள்ளிருந்து சேரனுக்கு ஆணை பறந்தது.



"ச்சே... ராட்சஷி ராட்சஷி...!" உள்ளுக்குள் முனகியவன், "ஆச்சு... இன்னிக்குக் காலையில இருந்து உன் முகத்தைப் பார்க்கவேயில்லடி... ப்ளீஸ்... ஒரே ஒரு முறை கதவு வழியா எட்டிப் பாரேன்....

"ஒரே ஒரு ஹக், அப்பறம் ஒரே ஒரு கிஸ்... சமத்துச் சக்கரைக்கட்டியா இள்ா ஆபீஸ் போயிடுவான்.... ப்ளீஸ்... ப்ளீஸ்... ப்ளீஸ்...."

சேரன் என்ற ஆண் சிங்கம் மனைவியிடம் கெஞ்சிக் கொண்டிருந்தது.

"நோ வே... உங்க ஒரே ஒரு ஹக்கும், ஒரே ஒரு கிஸ்சும் எப்படின்னு நேக்கு நன்னாத் தெரியும். இப்போ நேரமாச்சு... கிளம்புங்கோ.... ம்... கோ... கோ...." விடாமல் விரட்டிக் கொண்டிருந்தாள் மனைவி....

"உன்னைச் சாயந்திரம் வந்து வச்சிக்கிறேன்..... ராட்சஷி! ராட்சஷி..." என்று காலை உதைத்துக் கொண்டு சென்ற சேரனின் முகம் எப்படியிருக்குமென உள்ளிருந்து கற்பனை செய்து பார்த்த அகல்விழிக்குச் சிரிப்புடன் சேர்ந்து காதலும் பெருகியது.

மாலை சேரன் வரும்போது, அவன் வீட்டின் தோற்றமே மாறியிருந்தது.

ஒரு பெண்ணிருந்தால் அந்த வீடு எப்படியிருக்கும் என்பதற்கு அடையாளமாகத் திகழ்ந்தது அவ்வீடு....

அவன் அன்னைக்குப் பின் இப்போதுதான் இந்த வீட்டின் அழகை அணு அணுவாக ரசிக்கிறான்... வீட்டின்

முன் வாசலில் மாக்கோலம் வரவேற்க, உள்ளிருந்து வந்த சந்தன வாசமும், மல்லிகை வாசமும் அவன் மனதைத் தூய்மைப்படுத்தியது....

அவன் உள்ளே வந்த நேரம் வீட்டுக் கூடத்திலிருந்த அனைத்துப் பொருட்களும் நீக்கப்பட்டுப் பெண்கள் வரிசையாக அமர்ந்திருந்தனர்.

அவன் உள்ளே வந்து ஒரு நொடி கூட முடிந் திருக்காது.

அதற்குள் ஸ்ரீ அவன் அருகில் வந்து, "அத்திம்பேர்... அக்கா உங்களாண்ட இந்த டிரெஸ் ஸைக் கொடுக்கச் சொன்னா... கீழே இருக்கற அந்த அறையில குளிச்சுண்டு இதை மாத்திக்கச் சொன்னா... சீக்கிரம் மாத்திண்டு பூஜைக்கு வாங்கோ.... உங்களுக் காகத்தான் வெயிட்டிங்...." என்றதும் அவளும் ஓடி விட்டாள்.

சேரனின் கண்கள் மனைவியைத் துழாவின. அவள்தான் இவன் கண்ணில் படுவேனா என்றிருந்தாள்.

ஆனால் அவனை வெகு நேரம் தேட விடாமல், "மாப்பிள்ளை.... சீக்கிரம் குளிச்சுண்டு இந்த டிரெஸ்ஸைப் போட்டுக்கோங்கோ..." என்ற நாராயணன் சேரனைக் கிளம்பிக் கொண்டு வந்து பூஜையில் நிறுத்தினார்.

அவனைத் தொடர்ந்து ஜீவாவும் அவன் அன்னை சுபா, மற்றும் சுந்தரியுடன் வந்து சேர்ந்தான்.

ஆம்.... சுந்தரி இப்போது மீண்டு வந்திருந்தாள்.



அன்றைய நாளுக்குப் பின் ஒரு மாதம் கழித்து அவள் நினைவு முற்றிலுமாகத் திரும்ப...

அதன் பின் ஒரு வாரத்திலேயே ஜீவா - சுந்தரியின் திருமணம் நடந்தேறியது.

அன்றிலிருந்து ஜீவா சுந்தரியை ஒருபோதும் வருத்தியதில்லை...

சுந்தரியின் அன்னை தந்தைக்கு நிகராகச் சுபா அவளைத் தாங்கினார்....

சுற்றியிருந்தோரின் அன்பும், பாசமும் சுந்தரியின் வாழ்வில் நடந்த அந்தக் கறுப்புப் பக்கத்தை எரித்துக் குப்பையில் போட்டது....

நல்ல கணவனும், மாமியாரும் மட்டும் கிடைக்க வில்லை.... நல்ல தோழியும், கிடைத்தமையால் வெகு விரைவிலேயே சுந்தரி அவள் கவலையிலிருந்து மீண்டு வந்தாள்...

குடும்ப சகிதமாக வந்த ஜீவாவைச் சேரனும், நாராயணனும் வரவேற்க... அனைவரும் சுமங்கலி பூஜைக்குத் தயாராகினர்....

அதுவரை சேரனின் கண்ணில் படாமல் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருந்த அகல்விழி, பட்டு மடிசார் சேலையில், கற்கள் பதித்த முத்து நகையில், மூக்கில் வைர மூக்குத்தி மின்ன, மல்லிகைச் சரத்தில் மறைந்த கூந்தலைக் காதோரம் இழுத்து விட்டவாறு

அழகோவியமாக வந்து ஜீவா, சுந்தரியை வரவேற்றுப் பேசிக் கொண்டிருந்தது சேரனின் கண்ணில் விழுந்தது.

இன்று காலை முதலே தேவியின் தரிசனமின்றித் தவித்தவன்... மனைவியை அழகுக் குவியலாய்ப் பார்த்ததும் முதல் நாள் போல இன்றும் அவன் மனம் இடறி அவள் மடிசார் சேலைக்குள் மறைந்தது.

ஆனால் அகல்விழியோ அவனை அலைக்கழிக்க விட்டாள்....

கட்டிய கணவன்தான். மற்றவர்களை விட அவனுக்குத்தான் அவளிடம் அதிக உரிமையிருக்கிறது. ஆனால் அவனோ, அவளின் ஒரு பார்வை தன் மேல் விழாதா எனக் காத்துக் கிடந்தான்.

சுமங்கலி பூஜை இனிதே துவங்கியது....

வந்திருந்த சுமங்கலிப் பெண்களுக்குத் தகுந்த மரியாதை அளித்து, அவர்களுக்குத் தாம்பூலமளித்து, ஒவ்வொரு சுமங்கலிப் பெண்ணிடமும் பஞ்சாங்க நமஸ்காரம் செய்து, வந்தவர்களுக்குப் புடவை, ரவிக்கை, மஞ்சள், கண்ணாடி, குங்குமச் சிமிழ், பூ, வெற்றிலை என அனைத்தும் கொடுத்து அவர்களுக்கு அறுசுவை உணவளித்து ஒவ்வொருவரையும் வணங்கி வழியனுப்பும் வரை சேரனின் பார்வை அகலை விட்டு அகலவில்லை.

அனைவரும் சென்றதும் ஜீவாவின் குடும்பத்தை விருந்துக்குத் தன் அன்னையுடன் அனுப்பி வைத்த அகல்விழி, இன்னமும் சேரன் அவளை விழுங்கிக்



கொண்டிருப்பதைக் கண்டு, “ஹப்பா... நமஸ்காரம்! பார்வையாலேயே துகிலுருச்சிடுவேளே.... பூஜையறைக்கு வாங்கோ.... நமஸ்காரம் செய்யணும்....” என்றவளின் கட்டளைக்குப் பணிந்து அவள் பின்னாலே சென்றான் சேரன்.

பராசக்தியை வேண்டிக் கொண்டு சேரனிடம் தாம்பூலத்தை நீட்ட... அவன் என்னவென்று கேட்க....

“ம்ம்.... அன்னிக்குச் செய்தேளே.... அதே மாதிரி செய்ங்கோ....” என்றாணையிட...

“எஸ் மேடம்....” அவள் நெற்றியிலும், மாங்கல்யத்திலும் மஞ்சள் குங்குமம் வைக்க, அகல் விழி அவன் காலில் விழுந்து பணியப் போக, “ஹே ஹே.... என்ன பண்ற....?” பதறிப் போனான்....

“மச்... இதென்ன கேள்வி.... என்னை ஆசிர்வாதம் பண்ணுங்கோ....” என்க....

“ஹான்... எதுக்கு....?”

“இதென்ன சின்னப் பிள்ளையாட்டம்... தீர்க்க சுமங்கலியா இருன்னு வாழ்த்துங்கோ...!” என்றவளை,

“அப்போ நீயும் என்னை வாழ்த்து...!” என ஏட்டிக்குப் போட்டி நின்றான் நம் சேரன்.

ஒரு வழியாக அகல்விழிக்கு அவன் காலில் விழுந்து வணங்குவதற்குள் அவள் பெண்டு கழண்டு விட்டது.

அதன்பின் வந்த உணவு வேளையிலும் அகல்விழி சேரனிடமிருந்து தப்பிக் கொண்டிருக்க...

எப்போதடா இரவு பத்தாகும், மனைவியை அள்ளி அணைக்கலாம் எனத் தவமிருந்தான்.

அவன் தவமிருந்த வேளையும் வந்தது.

எல்லா வேலைகளையும் முடித்து விட்டு அகல்விழி மேலே வந்தபோது சேரன் அயர்ந்து உறங்கியிருந்தான்.

நிச்சயம் இதை அகல்விழி எதிர்பார்க்கவில்லை...

பூனைக் குட்டி போல் பின்னால் சுற்றிக் கொண் டிருந்தவனைத் தேடி ஆசையாசையாக வந்தால்...

இவன் இப்படிக் கும்பகர்ணன் போல் உறங்கிக் கொண்டிருப்பது அவளுக்குக் கடுப்பைக் கிளப்பியது.

முகத்தை உர்ரென் வைத்துக் கொண்டு உடையை மாற்றிக் கொண்டிருந்தவள் கையை யாரோ இழுக்க,

அவள் பதறிக் கத்தும் முன்னர் சேரன் அவள் வாயை அடைத்திருந்தான்.

"ஷ்ஷ்ஷ்.... கத்தி ஊரைக் கூட்டாதேடி... நான் இங்க இருக்கும்போது உன்னை வேற எவனாவது தொட்டுட முடியுமா...?" என அவள் வாயிலிருந்து கையை எடுத்தவன்,

"மாமி... மடிசாரை விட, மடிசார் இல்லாம ரொம்பவே அழகா இருக்கேடி..." என்றான் கண் அடித்தவாறு.



"ச்சே ச்சே...! விடுங்கோ.... இப்படியா இழுத்து வைப்பேள்... செத்த நேரத்துல என் பிராணனே போயிருக்கும். எனக்கு எதா ஆச்சுனா கூடப் பரவா யில்ல... என் பையனுக்கு ஏதாவதாகி யிருந்தா...?" என்றாள் கோபமாக.

"உனக்கே ஒண்ணுமாக விடமாட்டேன்.... இதுல உன் பையனுக்கு... ஹே... அச்சு.... என்ன சொன்ன? என்ன சொன்ன...?" என்றான் சேரன் வியப்பின் உச்சி யில்.

"ஹான்... நோன்னே சொன்னேன்... விடுங்கோ என்னை... டிரெஸ்ஸைக் கூட மாத்த விடாம..." என நகர்ந்தவளை...

"அச்சும்மா... என்னடி... எப்போ இருந்து.... ஏன் என்கிட்ட முன்னாடியே சொல்லல.... அத்தை மாமா வுக்குத் தெரியுமா...? சொல்லிட்டியா...? நான் போய்ச் சொல்லவா.... அச்சோ.... என்னால நம்பவே முடியல... நிஜமா மாமி...!"

சேரன் அதீதச் சந்தோஷத்தில் இருந்தமையால் அவன் செய்வது சொல்வது எதுவும் புரியாமல் பரபரத் தான்.

அவனை அடக்கும் வழி தெரியாமல் துடித்துக் கொண்டிருந்த சேரனின் இதழைச் சிறை செய்து, "ஷ்ஷ்ஷ்... மூச்சு.... அமைதியா இருங்கோ..." என ஒரு விரலை அவள் உதட்டில் வைத்து அடக்கியவள்...

"நான் இன்னமும் யாராண்டயும் சொல்லல.... உங்களாண்ட முதல்ல சொல்லிட்டுத்தான் மாத்தவாள்ட்ட சொல்லணும்..." என்றாள் காதலுடன்.

சேரனுக்கு இதற்கு மேல் வேறேதும் வேண்டுமா என்ன...!

இதே அகல்விழி சில மாதங்களுக்கு முன்னர் அவனைச் சிறு துச்சமாகக் கூட மதிக்காமல் இருந்தாள். இன்றோ அவள் உயிரோடு கலந்து உறவாகி அவன் விழியாகிப் போனாள்.

இனி அவர்கள் வாழ்வில் என்றென்றும் ஆனந்தமே...!


வெண்ணிலா சந்திராவின்
நெஞ்சுக்குள்
நீந்திடும் தாரகை